பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்



ஐந்தாம் உலக மாநாட்டு

வெள்ளிவிழா மலர்

25

மதுரை - தமிழ்நாடு

இந்தியா

மே 2, 3, 4, 5 - 2002

பதிப்பு: மே 2002

விலை: உரூபா 200/-

மலர் ஆக்கம்: **வா.மு.சே. திருவள்ளுவர்**

மலர்க்குழு

முன்னவர்:

முனைவர் கவிக்கொண்டல் **மா. செங்குட்டுவன்**

தலைவர்:

முனைவர் **கோதண்டபாணி**

ஒருங்கிணைப்பாளர்கள்:

பேராசிரியர். சு.இறையன்
கவிக்கோ ஞானச்செல்வன்
முனைவர். **வளன் அரசு**
இலக்கியச் சுடர் **மூவேந்தர் முத்து**
உதையை **மூ. வீரையன்**

செயலாளர்கள்

பேராசிரியர். முனைவர் **நா. மதியழகன்**
முனைவர். **வா.மு.சே. ஆண்டவர்**
அழகர்சோலை **சௌந்தர்**
கடலூர் **அ. தேவநாதன்**
மறக்குணத்து **பிரபாகரன்**

அச்சம், அமைப்பும்:
சேதுமதி அச்சகம்
12, சாயிநகர் இணைப்பு, சென்னை - 600 092
தொலைபேசி: 4871375, 8552237; தொலைநகல்: 8552237
மின் அஞ்சல்- tamiluraavu@yahoo.co.in

கிடைக்குமிடம்:
தமிழ்மணி புத்தகப்பண்ணை
281, காயிதேமில்லத் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி: 4871375, 8552237; தொலைநகல்: 8552237
மின் அஞ்சல்- *tamiluraavu@yahoo.co.in*

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

பன்னாட்டுத் தமிழர்களின் பாதுகாப்பு மன்றம்
பயனான செயல்முடிக்கும் பலம்வாய்ந்த குன்றம்

(பன்னாட்டுத்)

எந்நாளும் தமிழர்களின் இதயமாக இருக்கும்
இரவுபகல் நாள்பொழுதை எண்ணாமலே உழைக்கும்

(பன்னாட்டுத்)

தேசமெல்லாம் உளதமிழர் செம்மையினைக்காக்கும்
சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகள் கேட்கும்
வாசமலர்த் தோட்டம்போல வண்டமிழை வளர்க்கும்,
மாறுபா டிலாவகையில் வளம்பெறவே உழைக்கும்

(பன்னாட்டுத்)

இவ்வுலகில் எங்கோ ஒருமூலையில் ஆனாலும்
எம்தமிழர்க் கின்னலெனில் இதயமே இடிக்கும்
அவ்வுலகில் வந்ததுன்பம் போக்கிடவே துடிக்கும்
அகம்நெகிழ்ந்து எரிமலைபோல் தீர்த்திடவே வெடிக்கும்

(பன்னாட்டுத்)

உலகிலுள்ள மக்கள் எல்லாம் உறவினராய் எண்ணும்
உரியதமிழ் இலக்கியங்கள் பிறமொழியில் பண்ணும்
தலமெல்லாம் அறிவியல் தனைஇணைத்துச் செல்லும்
தமிழாலே தமிழர்களைத் தான்இணைத்து வெல்லும்

(பன்னாட்டுத்)

சுயநலமே சிறிதுமிலா தூயபணி ஆற்றும்
தியாகமலர்ச் செம்மையினால் சிறப்பினை ஏற்றும்
நயமான கொள்கைவழி தமிழீழம் போற்றும்
நட்புக்கோர் பெட்டகமாய் நானிலத்தைக் கூட்டும்

(பன்னாட்டுத்)

தரணிவாழும் தமிழர்களே தனித்து நிற்க லாமா?
சரித்திரம் படைக்கவொரு தமிழணியில் சேர்வீர்
வரலாறு புதுமையாக பழமை மரபாக
வாழ்வாங்கு தமிழுலகை வாழவகை செய்யும்

(பன்னாட்டுத்)

பெருங்கவிக்கோ

18.6.83 ஆம் நாள் மருத்துவ மாமணி டாக்டர் பட்சாட்சரம் முயற்சியினால் நியூயார்க்கில் நடந்த தமிழர் விழாவில் இசைக்குயில் எம்.எல். வசந்தகுமாரி அவர்களால் இசைஅமைத்துப் பாடப்பெற்றது.

TRUST PRESIDENT

Justice P. Venugopal

FOUNDER & TRUST SECRETARY

Perungkavikko Dr. V.M. Sethuraman

RECEPTION COMMITTEE CHAIRMAN

Mr. N. Manimozhian

PATRONS:

Honourable Minister
Datoshri. Dr. S. Samyvelu, (Malaysia)
Honourable Minister
Arumugam Thondaman, (Srilanka)
Dr. N. Mahalingam (India)
Alhaj. B.S. Abdur Rahman (India)
Bishop. Ezra. Sargunam (India)
Dr. Winston. V.Panchatcharam (U.S.A)
Saint KunrakudiPoonambala Adikalar (Ind.)
Dr. S. Navaratnam (U.K)
Dr. K. Shun Sundar (U.S.A.)
Dr. Muvendhar Sethuraman (India)
Mr. Gem.R. Veeramani (India)
Dr. M.M. Iliyas (Thailand)
Yazhan R. Shanmugalingam (U.S.A.)
Mr. S. Chellaiya (Canada)
Dr. K.M. Sundaramoorthy (Canada)
Mr. M. Nagabushnam (Kuwait)
Dr. V.G. Santhosham (India)
Mr. Yogeswaran (Solicitor U.K.)
Saint H.H. Chakkara Hindu Buddha Dharma Thero (Mal.)
Mr. Villapillay (S. Africa)
Mr. Egai Pandiyan (India)
Mr. V.K.N. KANNAPPAN (India)

INTERNATIONAL COMMITTEE

DANSHRI K.R. SOMASUNDARAM (Malaysia)

Dr. M. Kandasamy (Malaysia)
Prof. Jamal (France)
Kavipperarasu **Vairamuthu** (India)
Dr. Avvai Natarajan (India)
Mr. K.Ganesalingam (Germany)
Dr. V.R.S. Sampath (India)
Mr. Sripathy (Germany)
Mr. K. Sethu (Kuwait)
Mr. Alan. Anandan (France)
Mr. Deva. Manoharan (France)
Mr. Cathan Chellen (Sivan) (Mauritius)
Dr. A. Kandiah (Australia)
Mr. Christopher Francis (Italy)
Mr. S. Kaviarasan (U.S.A)
Mr. Mickey Chetty (S. Africa)
Mr. V.J. Babu (U.S.A)
Mr. C. Ashogan (U.K.)
Mr. V.S. Gunaretnam (Germany)
Dr. S. Muthukumaran (India)
Mr. Mohammed Kamaludin (China)
Dr. J.N. Reddey (S. Africa)
Nada **Rajkumar** (Canada)
Dr. A. Ayoob (Thailand)
Mr. Prof. Srikandaraji (Denmark)
Dr. KalaiSelvanchanemougame (Reunion)
Mr. Achariar Neelamegam (Reunion)
Prof. Sangara Lingam M.P. (India)
Mr. N. Aandiappan (Singapore)
Mr. K.Maheswaran (U.K)
Mr. M. Manoharan (U.S.A)

SPECIAL COMMITTEE

Saint Thavathiru Shantha Linga Ramasamy Adikalar (Perur)
Chairman, Special Committee

Mr. Bala Subramaniyan (U.S.A)
Mr. A.S. Moorthy Sampanthan (U.K.)
Mr. Rajagopal (Singapore)
Dr. Maniam Krishnan (Malaysia)
Dr. Nalla Thambi (Australia)
Dr. Gopalsamy (U.S.A)
Prof. K.Balasubramaniam (Malaysia)
Dr. Rafiyudeen (Thailand)
Mr. Selvaraj (Germany)
Dr. Devacannthan (U.S.A)
Mr. P. Nallathambi (Australia)
Dr. K.C. Gaur (India)
Mr. B.Balasubramaniam (Germany)
Mr. Thukkaram (U.S.A)
Mr. Noel. Rajan (France)
Mr. Lohendralingam (Canada)
Mr. S. Thiagalingam (Norway)
Mr. C.A. Thevaraju (Germany)
Mr. Poet Barathi Balan (Denmark)
Mr. Aathi kumanan (Malaysia)
Dr. Sheik. Noorudeen (U.A.E)
Mr. S.Dharmalingam (Malaysia)
Mr. Poopala Somasundaram (Germany)
Mr. S.Rajaretnam (Canada)
Poet. Vallabai Isac (U.S.A)
Mr. V. Sivananda Gopal (Holland)
Dr. G. Raja Sekaran (U.S.A)
Dr. Ponnu. Sathianathan (Australia)
Mr. A. Ratnakanthan (Australia)
Mr. Er. K.R. Velu (India)
Mr. E.V.S Singan (Singapore)
Mr. Prof. Peter Schalk (Sweeden)
Mr. Yesudass, (Solicitor Canada)
Dr. Era. Janarthanam (India)
Mr. Kanags (Canada)
Mr. Dato. V. Saravanan (Malaysia)
Mr. Muruganandan (U.K.)
Mr. Somkiat Swamy (Thailand)

TRUST TREASURER & DIRECTOR:

Mr. V.M.S. Thiruvalluvar

ஒருங்கிணைப்புக்குழு

முன்னவர்கள்:

தமிழ்ப்பாவை **கருணைதாசன்**
முனைவர் சொல்விளங்கும் **பெருமாள்**
வேலா **மா. சக்திவேல்**
புரவலர் **அண்ணாமலைச் செட்டியார்**
ஆண்மைஅரசு **அம்மையப்பா**
முனைவர் **புரட்சி தாசன்**

தலைவர் :
முனைவர் **இரா. மோகன்**

துணைத் தலைவர்கள் :
நற்றமிழ் நாயகர் **துரை நமசிவாயம்**
புலவர் **பெருமாள் பிள்ளை**

பொதுச் செயலாளர்

மனிதத்தேனி **சொக்கலிங்கம்**

செயலாளர்கள்

புலவர் **ஆ. மாடசாமி**
முனைவர் **ந. வேலுச்சாமி**
தமிழ்ச்செம்மல் **அமுதன்**
கவிஞர் **மோ. அன்பழகன்**
நேதாசி **சுவாமிநாதன்**
திரு. அரங்க சடகோபன்

உறுப்பினர்கள்

திருமிகு ஏ.எல். சுப்பிரமணியன்
தவத்திரு **முத்துக்குமாரசாமித் தம்பிரான்**
பேராசிரியர் **சாம்பசிவம்**
புரவலர் **பொன்னையா**
அருளாளர் **கோபாலானந்தா**
முனைவர் **தமிழண்ணல்**
போசிரியர் **திருமாறன்**
பெரும் புலவர் **விருத்தாசலம்**
முனைவர் **கு. மோகனராசு**
எழுத்தாளர் **சமுத்திரம்**
புலவர் **மகாலிங்கம்**
புரவலர் **கோ. சுந்தரராசன்**
தமிழ் பெரியசாமி
பாவலர் தமிழ் நாகை **அன்பழகன்**
முனைவர் **செல்வ கணபதி**
முனைவர் **மறைமலை**
திரு. கெ. பக்தவத்சலம்
புலவர் **இரா. சமுத்திர பாண்டியன்**
புலவர் **செ.மு கமால்**
கவிஞர் **மோ. அன்பழகன்**
செய்தியாளர் **காசி**
புலவர் **பசும்பொற்கிழார்**
ஈரோடு **சுத்தானந்தன்**
கவிஞர் **ஆயை மு. காசாமைதீன்**
மொழிப்போர்க் காவலர் **நல்ல தம்பி**
திரு. **கோ.சம்பத்**
கப்பல் கவிஞர் **கிருட்டிணமூர்த்தி**
வழக்கறிஞர் **முரசுமாணிக்கம்**
முகவை **கருணாநிதி**
திரு. **எம்.பன்னீர்செல்வம்**
திரு. **இரா.பொன்முடி**
திருமதி **மணிமேகலை**
திரு. **துரை இ.சரவணன்**
திரு. **செந்தில் குமார்**
பொன். **மீனாட்சிசுந்தரம்**
முனைவர் **மாரிமுத்து**
திரு. மு. செயக்கொடி
முகவை **வ.த. சாரங்கபாணி**
திரு. சிதம்பரம்
முதுவை **மகாதேவன், உடையார்.**
ஆசிரியர் இராமையா
அருள்மிகு **ஏ. நடராசன்**
டாக்டர் **எம்.எ.எஸ். சுப்ரமணியன்**
இதழாளர் **சண்முகநாதன்**
அன்னை **சரசுவதி**
புலவர் லால்குடி **அரங்கசாமி**
திரு. **மீ. அ. வைத்தியலிங்கம்**
திரு. **எஸ்.பி. இராமகிருட்டிணன்**
டாக்டர் **நரேந்திரன்**
கொல்கத்தா முனைவர் **முத்தையா**
பேராசிரியர் **குருபரன்**
புலவர் **கு. பச்சைமால்**
பன்மொழிப் புலவர் **சகந்நாதராசா**
திருமதி **ஆனந்தி**
இராசயோகி பரமசிவம்
திரு. **கே.வி.எஸ். பாண்டியன்**
சேலம் தமிழ்ச் சங்கம் **சு. சகாதேவன்**
கவிஞர் **பொன்னுசாமி**
மும்பை **சுந்தரம்**
கவிஞர் பல்லடம் **மாணிக்கம்**
பாவலர் **இராமச்சந்திரன்**
திரு. வீரமதுரகவி
புலவர் **கதிர் முத்தையன்**
கவிஞர் **காமாட்சி**
திரு. **இராசுபோசு**
தவத்திரு **தெய்வநாயகி**
முகவை **எம்.ஏ. சுந்தரராசன்**
புலவர் **பண்ணன்**
பொறிஞர் **பட்டாபிராமன்**
புலவர் **செல்லத்துரை**
திருக்குறள் **இலலிதா**
கவிஞர் **கோட்டைச்சாமி**
கவிஞர் **அரிட்டோகிருட்டிணன்**
புலவர் **கூத்தரசன்**
பாவலர் **இராசேந்திரன்**
கடலூர் **து. தங்கராசு**
வழக்கறிஞர்**சேதுநாதன்**
திரு. தி. இராசகுமார்
திரு. கு. இரவிச் சந்திரன்
திரு. சி. முத்துசாமி
புலவர் **கலியமூர்த்தி**
கவிஞர் பித்தளை வணிகன் **தமிழ் மாறன்**

வழி நடத்தும் குழு

தலைவர்:
மூத்த வழக்கறிஞர் **இரா. காந்தி**

துணைத் தலைவர்கள்:
புரவலர் **கலசலிங்கனார்**
புரவலர் **உ. கருணாகரன்**
புரவலர் **சித்திராதங்கவேலு**

முன்னவர்கள்

சிலம்பொலி **செல்லப்பனார்**
புரவலர் **உபயதுல்லா**
அருட்சுடர் **க.சு. மணியம்**
டாக்டர் **அண்ணா பரிமளம்**
புரவலர் **சா. கணேசன்**
புரவலர் **நா. அருணாசலம்**

செயலாளர்கள்

அருளாளர் **வே. த. நவமணியன்**
திருக்குறள் **சண்முகம்**
கவிஞர் நெல்லை **இராமச்சந்திரன்**
பாவலர் **மார்சல் முருகன்**
டாக்டர். **ஜே.ஜி. கண்ணப்பர்**
புரவலர் **சேதுகுமணன்**

உறுப்பினர்கள்

இலக்கியச் செல்வர் **குமரி அனந்தன்**
டாக்டர் **இலலிதா காமேசுவரன்**
முனைவர் **ஆறு.அழகப்பன்**
திரு. குருமூர்த்தி
கி.ஆ.பெ. மணிமேகலை கண்ணன்
திரு. லேனா தமிழ்வாணன்
முனைவர் **ஈரோடு தமிழன்பன்**
தென்னிலை **இராம கோவிந்தன்**
மும்பை **திரு. குமணராசா**
முனைவர் **அரு.கோபாலன்**
கழகம் **முத்துக்குமாரசாமி**
தாய்மண் **அருமைநாதன்**
திருக்குறள் **பாட்கரன்**
திருமிகு. இதயதுல்லா
பேராசிரியர் **வி.கலைமணி**
முனைவர் **தமிழ்மணி**
மு.சுப. கருப்பையா
பொறிஞர் **கு.ம. சுப்பிரமணியன்**
கவிஅரசு **பழனி இளங்கம்பன்**
முனைவர் **ஆர்.ஐ.துரைமுருகர்**
பேராசிரியர் **சுந்தர்**
உதயை **மு.வீரையன்**
மும்பை **சேசுதாசன்**
புலவர் பட்டணம் **பழனிச்சாமி**
கவிஞர் **ந. இறைவன்**
புலவர் **முனியாண்டி**
மைசூர் முனைவர் **விரப்பன்**
ஞானபாரதி **வலம்புரிஜான்**
முனைவர் **எஸ். சாதிக்**
இந்து **இரா. நடராசன்**
கவிக்கோ **அப்துல் இரகுமான்**
கவிவேந்தர். **மு.மேத்தா**
டாக்டர். **குமரேசன்**
புரவலர் **சந்திரசேகர்**
முனைவர் **சூ.இன்னாசி**
மாணவர் மன்றம் புலவர் **பொன்னுசாமி**
திரு. எஸ். வெங்கட சுப்பிரமணியன்
தில்லி **எம்.எஸ்.மணியம்-இந்திராணி**
வழக்கறிஞர் **உ. சகாபுதீன்**
முனைவர் **என். சுந்தரம்**
திரு. கோ. சூரியமூர்த்தி
கவிஞர் **இரவி பாரதி**
பாவலர் **அருள் நம்பி**
திரு. பீட்டர் ராசன்
வானொலி இளசை **சுந்தரம்**
திரு. கதிர்வேல்
கவிஞர் **எபனேசர்**
மும்பை **த.மு. பொற்கோ**
மும்பை **வி. தேவதாசன்**
புலவர். **இளஞ்செழியன்**
முனைவர் **தெய்வநாயகம்**
புலவர் **இராமதாசு**
வரகூர் **கா. காமராசு**
திரு. இராதா கிருட்டிணன்

மத்திய அமைச்சர் **பொன் இராதாகிருட்டிணன்** அவர்களின்

வாழ்த்து

पोन. राधाकृष्णन
Pon. RADHAKIRISHNAN

सत्यमेव जयते

युवा मामले एवं खेल राज्य मंत्री
भारत सरकार
नई दिल्ली-110 001
MINISTER OF STATE FOR
YOUTH AFFAIRS & SPORTS
GOVERNMENT OF INDIA
NEW DELHI-110 001

08/04/2002

அன்புடையீர்!

தமிழின் பெருமையை தரணி போற்றச் செய்திடும் அரும்பணி செய்கின்ற பன்னாட்டுத் தமிழுறவு மன்ற வெள்ளிவிழா மற்றும் ஐந்தாம் உலக மாநாடு சிறப்பாக நடைபெறவும், மாநாட்டு சிறப்பு மலர் சிறக்கவும் மனமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்
தாய்நாட்டுப் பணியில்,

பொன்.இராதாகிருஷ்ணன்

பெருங்கவிக்கோ. டாக்டர் வா.மு.சேதுராமன் அவர்கள்
நிறுவனர், உலக அமைப்பாளர்,
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்,
சென்னை.

நாடாளுமன்ற உறுப்பினர் **சங்கரலிங்கனார்** அவர்களின்

வாழ்த்து

Prof. **M. Sankaralingam,** M.A.,
Member of Parliament

பெறுநர்

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள்
பன்னாட்டுத் தமிழுறவு மன்ற வெள்ளிவிழா
ஐந்தாம் உலக மாநாடு,
மதுரை

அன்புள்ள ஐயா:

வணக்கம், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் வெள்ளிவிழாவும், ஐந்தாம் உலக மாநாடும் மதுரையம்பதியில் மே 2002ல் நடைபெறும் என்னும் அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன்.

மாநாட்டுப் பணிகள் வெற்றிபெற என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் உன்னதக் குறிக்கோளை, நிறைவேற்ற இதுபோன்ற மாநாடுகள் வழியாக முயல்வது பாராட்டிற்குரியது.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், உலகளாவிய நிலையில் தமிழ், தமிழர் ஏற்றம் பெறவேண்டும் என்னும் உயரிய நோக்கத்தினை நிறைவேற்ற பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களால் நிறுவப்பெபற்று, அந்நோக்கம் நிறைவேற தமிழ்நாடட்டிலும்அ தமிழர் வாழும் பிற நாடுகளிலும் சீரிய பணியாற்றி வருவது பாராட்டத்தக்கது.

இம்மாநாட்டின் கருப்பொருளாக ''மாறிவரும் உலகை நோக்கித் தமிழ், தமிழர்'' என்னும் பொதுத் தலைப்பு தரப்பட்டுள்ளது. இந்தப் பொதுத் தலைப்பின்கீழ் 12 தனித் தலைப்புகள் உள்ளன. இந்தத் தலைப்புகள் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற குறிக்கோள்கள் நிறைவேற - தமிழர் உறவு நிலையாக அமையும்.

மீண்டும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்

தங்களன்புள்ள

எம். சங்கரலிங்கம்

தவத்திரு குன்றக்குடி **பொன்னம்பல அடிகளார்** அவர்களின்

வாழ்த்துரை

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக மாநாடு, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் நிகழவிருப்பதும், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக நம் அன்பிற்குரிய திருக்குறள் செம்மல் திரு. ந. மணிமொழியன் அவர்கள் பொறுப்பேற்று நடத்துவதும் மிக்க மகிழ்வளிக்கிறது.

இன்றைய நிலையில் தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ள அறை கூவல்கள் பல. அந்த அறை கூவல்களை எதிர்நோக்கி இந்த மாநாடு தீர்வு காணும் என்று நம்புகின்றோம்.

மாநாடு சிறக்கவும் மாநாட்டு மலர்சிறப்புற வெளிவரவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்

என்றும் வேண்டும் இன்ப அன்பு
பொன்னம்பல அடிகளார்
இன்றும் இனியும்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற மலேசியத் தலைவர்
மலேசிய கல்வி குழுச்சேவை உறுப்பினர்
பேராசிரியர் **கு. பாலசுப்பிரமணியம்** அவர்களின்
வாழ்த்துரை

உலகளாவிய நிலையில் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் தமிழர் பண்பாட்டு மொழி, பொருளாதாரம், சமுதாய மேம்பாடு என்ற சிந்தனைகளை மனதில் நிறுத்தி ஒருமைப் பாட்டோடு ஓங்கி வளர வேண்டும்.

இந்தச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றன. பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் நடத்துகின்ற 25-வது வெள்ளி விழாவும், ஐந்தாவது அனைத்துலக மாநாடும், சீர்தூக்கி வந்த அழைப்பிதழ் கண்டேன். இம்மாநாட்டின் வழி சிறந்த ஏற்புடைய திட்டங்களை வடித்து அதற்குச் செயல் வடிவம் கொடுத்து, நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும் என்பதே என் பேரவா.

தமிழர்களின் ஒற்றுமைக்கும் பண்பாட்டு நீட்சிக்கும் பல்துறை ஏற்றத்திற்கும் இந்த மாநாடு ஒரு சிறந்த தொடக்கம் என்று நான் கருதுகிறேன்.

இதற்கு வித்திட்ட பெருமை உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் தனிமுயற்சியாகவும் / இயக்கமாகவும் சுற்றுச் செலவு மேற்கொண்டு பன்னாட்டுத் தமிழர்களை ஒருங்கிணைத்து ஓர் இணக்கத்தை ஏற்படுத்திய பெரியவர் பெருங்கவிக்கோ டாக்டர். வா.மு.சேதுராமன் அவர்களையே சாரும்.

தமிழ் முனிவராக இருந்து தரணியெல்லாம் பவனி வரும் பெருங்கவிக்கோ அவர்களுக்கு தமிழகத்தில் அறிஞர் பெருமக்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் நிச்சயமாக நல்லாதரவை வழங்க வேண்டும் என இதன்வழி வலியுறுத்த விரும்புகிறேன். மலேசியாவாழ் தமிழர்கள் இவர்தம் தமிழுறவுச் செயற்பாட்டிற்கு என்றென்றும் பக்கபலமாக இருப்பார்கள் என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாநாடு வெற்றிபெற மலேசியப் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் சார்பிலே என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மலேசிய, ஆசிரிய மாமணி **மாணிக்கம்** அவர்களின் வாழ்த்து!!



தங்கள் பெருமுயற்சியாலும் நல்லன்பர்கள் தயவாலும் நடைபெறவிருக்கும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற ஐந்தாம் உலக மாநாட்டின் வெற்றிக்கு எனது இனிய நல்வாழ்த்துக்கள்.

உலகத்தமிழர்களை ஒன்றிணைக்கக் கடந்த 25 ஆண்டுகளாக அரும்பாடுபடும் உங்கள் விடாமுயற்சியைக் கண்டு பலமுறை வியந்திருக்கின்றேன்.

மலேசியத் தமிழர்களுக்கும் தமிழகத்தாருக்கும் இடையே மிகப்பெரிய உறவுப் பாலத்தை ஏற்படுத்துவதில் மிக அதிகமான சிரத்தை எடுத்துள்ளீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு எங்களின் ஒத்துழைப்பு என்றும் இருக்கும்.

தமிழ் வாழ்வதால் உலகத் தமிழர்கள் உயர்வடைவார்கள். ஆகவே எதிலும் தமிழ் என்னும் உங்கள் கொள்கை வெற்றிபெற வேண்டும்.

மாணவர் மன்றம்

(மயிலை சிவமுத்து நிலையம்)

41, இப்ராகிம் தெரு, சென்னை - 600 001.

பெறுநர்

பெருங்கவிக்கோ முனைவர் வா.மு.சேதுராமன் அவர்கள்
மாநாட்டு நெறியாளர்.
சென்னை - 92.

வாழ்த்து

தமிழ் நெஞ்சமும் தமிழ் உணர்வும் வாய்ந்த,

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களுக்கு அன்புகனிந்த வணக்கம். பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் வெள்ளிவிழா அறிக்கை கிடைக்கப் பெற்று மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம்.

தாங்கள் பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றத்தின் வழியாகத் தேமதுரத் தமிழோசையை – உலகமெல்லாம் பரப்புவதற்கு மெய்வருத்தம் பாராது - கண் துஞ்சாது கால் நூற்றாண்டு காலமாக ஆற்றிவரும் அரும்பெரும் தமிழ்த் தொண்டினைத் தமிழ் கூறும் நல்லுலகத்தவரும், உலகத் தமிழர்களும் நன்கறிவார்கள். உலக முதல்மொழி, தமிழே! இலக்கிய – இலக்கண வளம் நிறைந்த மொழி தமிழே! காலத்தாலும் சீலத்தாலும் மூத்த மொழி தமிழே! என்று இனிய தமிழ்ப் பேச்சாலும் எழுத்தாலும் நாளும் முழங்கிவரும் தங்களின் தன்னலமற்ற தூய, தமிழ்த் தொண்டினை நினைக்க நெஞ்சம் மகிழ்ச்சியால் நிறைகிறது.

மலேசிய மாமுனிவர் தமிழ்க்கடல் இராதாசந் பிறந்த நாளில் தொடங்கப் பெற்ற பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றம் உலகளாவிய நிலையில் தமிழ்த் தொண்டாற்றி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவேற்றி வெள்ளி விழாக் காண்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

சங்கம் வைத்து மொழி வளர்த்த மதுரை மாநகரில் பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றத்தின் வெள்ளி விழா – ஐந்தாம் மாநாடு மே திங்கள் 2, 3, 4, 5 நாட்களில் நடைபெற இருப்பது எங்கள் மகிழ்ச்சியை இரட்டிப் பாக்குகின்றது.

மாறி வரும் அறிவியல் உலகிற்கு - கணினி உலகிற்கு ஈடு கொடுக்கும் வகையில் நம் செந்தமிழ் மொழியை வளர்ப்பதற்கு இந்த மாநாடு பயன்பட வேண்டுமென்று விழைகின்றோம்.

தமிழ் வாழ்ந்தால் தமிழர்கள் வாழ்வார்கள். தமிழ் உயர்ந்தால் தமிழர்கள் உயர்வார்கள். தமிழ் தாழ்ந்தால் தமிழர்கள் தாழ்வார்கள் என்பதைத் தமிழகத்து மக்கள் அனைவரும் உணர வேண்டும்.

மாநாட்டில் ஒருநாள் வான்புகழ் வள்ளுவரின் தேனமிழ்த் திருக்குறள் பற்றிய வாழ்வியல் புது நெறிக் கருத்தரங்கு நடைபெறுவது பாராட்டற்குரியது.

''துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''

என்ற குறளை நெஞ்சில் பதித்துக் கொண்டு ஒல்லும் வகையெல்லாம் தமிழுக்குத் துறை தோறும் துறை தோறும் தொண்டாற்றி வரும் தங்களை வெள்ளி விழா நடைபெறும் நேரத்தில் உளங்குளிரப் பாராட்டுகின்றோம்.

''தடைக்கற்கள் உண்டென்றால் தகஞ்ந்தெழ தடந்தோள் உண்டு'' என்ற உள்ள உறுதியொடு தங்களின் தொண்டிற்குத் துணை நிற்கும் திரு. வா.மு.சே. திருவள்ளுவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

மாநாட்டு மலர் தமிழ்மனம் கமழும் மலராகத் தமிழ் வளர்ச்சிக்கு உதவும் கருத்துக் கருவூலங்கள் நிறைந்த மலராக - வரலாற்றுச் சிறப்புமிக்க மலராக அமைய வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

தமிழ்த் தொண்டில் இமயமாய் உயர்ந்து நிற்கிற தங்களுக்கும் மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் திருக்குறள் செம்மல் என் மணிமொழியன் அவர்களுக்கும், ஏனைய பொறுப்பாளர்களுக்கும் எங்களுடைய பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

இங்ஙனம்

மாணவர் மன்றத்தினர்

சென்னை - 1.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் - உலக அமைப்பாளர்

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் மதிப்பீடு!



தமிழ்க்கடல் சுவாமி இராமதாசரின் சந்திப்பு இந்தத் தமிழ்ப் பணித்தொண்டனுக்குக்கிடைத்த ஒரு மாபெரும் வாய்ப்பு! இந்த வாய்ப்பால் சுவாமி இராமதாசர் மணிவிழா விற்கு மலேசியா சென்றபோது, அங்குள்ள தமிழர்கள் - 'தமிழகத் தமிழர்கள் மலேசியா வந்தால் எவ்வளவோ செய்கிறோம் - நாங்கள் தமிழகம் சென்றால் பச்சைத் தண்ணீரும் தமிழகத் தமிழர்கள் தரமாட்டார்கள்' - என்று ஏகடியம் பேசும் நிலை இருந்தது. மலேசியா விலிருந்து தமிழகம் திரும்பியபோது உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் முதல் மாநாடு நடத்த வந்த அக்கழகத்தின் தலைவர் அமரர் இரா.ந. வீரப்பன் - மலேசியத் தமிழர்கள் பலரோடு மாநாடு நடத்த இயலாமல் திண்டாடிக்கொண்டிருந்தார். கவிச்செம்மல் அரு. கோபாலனோடு என்னைச் சந்தித்தார். இம் மாநாட்டைத் தக்க துணையோடு சிறப்பாக நடத்திக் கொடுத்தோம்.

மலேசியத் தமிழர்கள், தமிழகத் தமிழர்கள் பச்சைத் தண்ணீரும் தரமாட்டார்கள் என்பதற்கு விடையாக அமைந்தது யாம் தந்த மாநாடு நடத்துவதற்கான ஒத்துழைப்பு.அடுத்து 'உலகத் தமிழர் மாமன்றம்' மலேசியா திரு. டேவிட் அவர்களால் தொடங்கப்பட்டது. தமிழகத்திலும் கிளை அமைந்தது. இம்மன்றத்திற்கும் எமது பங்களிப்பு உண்டு ஆனால் இவ்விரு அமைப்பிலும் தக்க முறையில் எம் பணிக்கு உரிய தகுதி கிடைக்காத நிலையில், 'பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் என்ற தனி அமைப்பை, கவிச்செம்மல் அரு.கோ, கவிக்கொண்டல் செங்குட்டுவன், கவிக்குயில் பொன் ஐயனாரப்பன் போன்றோர்களின் ஒத்துழைப்போடு தொடங்கினோம்.

1981-ஆம்ஆண்டு, அமெரிக்க டாக்டர் பஞ்சாட்சரம் தொடர்பு கிடைத்தது. அவர் வழியாகப் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் தமிழீழ மாநாடுகள் பல நடத்தி புதிய எழுச்சிகண்டது. 1981-ஆம் ஆண்டு டாக்டர் கிருட்டினா சீனிவாசன் வழி உலகக் கவிஞர் மாநாட்டிற்குச் செல்லும் வாய்ப்பு வந்தபோது, உலகளாவிய சுற்றுலா தொடர் நிலை ஆன சூழலால், பன்னாடுகளிலும் வாழும் தமிழர்களை இணைக்கும் குறிக்கோளையும் இணைத்துச் செயலாக்கம் கண்டோம்.

இந்த நிலைச் செயற்பாட்டால் இன்று பன்னாட்டுத் தமிழர்களுக்கும் ஒருங்கிணைப்புப் பாலமாக மன்றம் உருவாக்கியுள்ளது. தமிழர்கள் எத்தேசத்தில் வாழும் நிலை ஏற்பட்டாலும் உணர்வால் ஒத்துரிமையோடு வாழும் எண்ணம் வேரூன்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து தகுதி வாய்ந்த தமிழர்கள் வந்தால் அவர்களுக்கு வரவேற்பு, பாராட்டுக் கூட்டம் - பட்டமளிப்பு - விருந்து என்று இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் மலேசியா உள்ளிட்ட எண்ணற்ற நாட்டுத் தமிழர்களுக்கும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் விழா நடத்தித் தமிழர் உறவை விழா நிலையில் உருவாக்கம் செய்துள்ளது.

அயலகத் தமிழர்கள் வருகையை பொதுமைப்படுத்தி அனைவரும் கலந்துறவாடி, அவரவர் பணி - தகுதிக் கேற்ப உறவுகளை வளர்க்கும் நிலைக்கு அடித்தளம் அமைத்ததும் இன்று உலகத் தமிழ்ச் சமுதாயம் ஒன்று கலந்த நிலைக்கு உருவாக்கம் கண்டதும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றமே ஆகும்.

பத்துக் குறிக்கோள்களைப் பத்துக் கட்டளைகளாக்கி, பயனுறும் வகையில் நான்கு

மாநாடுகள் நடத்தி நான்கு மாநாடுகளிலும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தமிழர்களின் எதிர்காலத்திற்கு ஓங்கிய ஒளி விளக்காக அமைந்துள்ளன; தமிழ் வாழ்வுயர்வுக்குத் தடம் அமைத்தன.

ஈழத்தில் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை உலககெங்கும் எடுத்துச் சொன்ன இயக்கம் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் போல் வேறு எந்த இயக்கமுமில்லை.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் யாருடைய கைப்பாவையாகாமலும் யாரிடத்திலும் கைக் கூலி பெறாமலும் - நடுநிலைச் சிந்தனையோடு செயலாக்கம் கண்டுள்ளது.

தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை வேண்டித் தமிழ்நாடு முழுவதும் 50 நாட்கள் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் முழக்கமிட்டு நற்றமிழோங்கு நடைப்பயணம் கண்டது நம்மன்றமே!

இந்த இருப்பதைந்து ஆண்டுகளில் தமிழர் தமிழர் நலம் நாடும் அனைத்துச் செயற் பாடுகளுக்கும் முன்னோடியாக, முதல் களப்பணிகள் செய்தது இம்மன்றமே ஆகும்.

உலகளாவிய அனைத்து நாடுகளிலும் செயலளவில் தளம் அமைந்துள்ள நிலைப் பாடுகள் கண்ட தலையாய இயக்கமும் நம்மன்றமே!

இயற்கையும் நம்முயற்சியும் கைகோத் தும் இன நலம்சார்ந்த சில மனிதர்கள் ஒத்துழைப்புகள் கிடைத்தாலும் தமிழுக்கு உழைத்துவரும் இயக்க வாதிகள் - களம் அமைத்துப் போராடும் பல தமிழ் அமைப்புகள் - வெள்ளி விழாக் கண்டு - வினைப்பாடுகள் பல வியனுலகோங்கச் செய்த மன்றத்தோடு கைகொடுக்கமறுத்து - கிழறுப்பு வேலைகளில் முனைந்து மறுதலிப்பதால் மன்றத்தின் இதமான பணி வேகம் காண இயலாத தாகத்தில் உள்ள தெனினும் இன்றைய சோதனை எதிர்காலச் சாதனையாகும் என்ற நம்பிக்கையில் நடைபோடுகிறது.

மன்றத்தின் உன்னதக் குறிக்கோளான உலகத்தமிழர் நிறுவனம்' சென்னையில் அமைத்து இத்தமிழர் நிறுவனத்தில் அனைத்து நாட்டுத் தமிழப் பேரறிவாளர்களையும் பங்கேற்கவைத்து அனைத்துத் தமிழர்க்கும் உரிய ஒட்டுமொத்த நெருக்கடிகளுக்கும் விடைகாண்பதும் உலகரங்கில் தமிழ் தமிழர்க்குரிய ஒப்பற்ற இடத்தைப் பெற்றுத் தருவதும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் தலையாய குறிக்கோளாகும். இவ்வெள்ளி விழா வெற்றிக்காகத் தமிழ் மக்களைச் சந்தித்தபோது இக்குறிக்கோளில் மிகுந்த நம்பிக்கை ஏற் படுகிறது. பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் தோற்ற கால முதல் - வெள்ளி விழாக்காலம் வரை எண்ணிப் பார்த்து மதிப்பீடு செய்தால் - பல சோதனையான காலங்களில் முன்னின்று தமிழ் தமிழர் மேம்பாட்டிற்குரிய செயற் பாடுகள் 'கண்ணகிச் சுடர்' வரை இம் மன்றம் செய்துள்ளது.

பெர்லினில் மூன்றாவது மாநாடு நடத்திய போது பல வகையான சோதனை- பாங்காக்கில் நான்காம் மாநாடு நடத்திய போது வேறு வகையான வேதனை - வேதனை - சோதனை களைக் கண்டு மிரண்டோடாமல், தாக்குப் பிடித்துத் தகுதி படைத்து மதிப்பை உயர்த்திய மதிப்பீடு பெற்ற பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் ஓங்கும் உயரும்.

சுடச்சுடரும்.......'' என்ற வள்ளுவர் வாக்கின்படி நம்மன்றம் சுடர்விடுகிறது.

உலகத் தமிழர்களும் தமிழகத் தமிழர் களும் தங்கள் உண்மையான நட்புறவு- பன்னாட் டுத் தமிழுறவு மன்றத்துடன் வேண்டுமென் பதை உறுதியாக நம்பினால் இம் மன்றம் இன்னும் ஏற்றம் பெறும்; உலகை வெல்லும்.

★



வரவேற்புக்குழுத் தலைவர் திருக்குறள் செம்மல் மணிமொழியன் அவர்களின் வரவேற்புரை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மாநகர் மதுரையில் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் சார்பில் மே-மாதம் 02,03,04 மற்றும் 05 ஆம் தேதிகளில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு சீரும் சிறப்புடன் பெருமையுடன் நடக்கவிருக்கின்றது.

தமிழகம் மட்டுமின்றி உலகில் வாழும் பன்னாட்டுத் தமிழர்கள் ஒன்றுபடவும், நல் உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், ஒற்றுமை ஒருமைப்பாடு கொள்ளவும், புதியன சிந்தித்து புத்துணர்வு பெறவும் தமிழர்கள் தமிழ் உணர்வும் தமிழறிவும் மிக்கவர்களாய் எழுச்சியும் மலர்ச்சியும் பெற்று இன்புற இம்மாநாடு வழிகாட்டும்.

வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணவும் மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்யவும் திருக்குறள் சிந்தனைகளை வையகமெல்லாம் பரப்பிடவும், திருக்குறளைத் தேசிய நூல் ஆக்கிடவும் ஒருநாள் நிகழ்ச்சி (04.05.2002) முழுவதும் திருக்குறளுக்காக அர்ப்பணிக்கப்படு.

மாறிவரும் 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்பத் தமிழர்கள் தங்களை எவ்வாறு புதுப்பித்துக் கொள்ள வேண்டும், கணிணி உலகத்தில் எத்தகைய அறிவாற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற அறிவியல், ஆக்கமிக்க சிந்தனைகள் இடம்பெறும். தமிழ் ஆட்சிபெற நடைமுறைத்திட்டங்கள் ஆராயப்படும். தமிழ் மொழியினைப் போற்றி மேலும் உயரச் செய்ய செம்மை செய்ய ஆய்வு மேற்கொள்ளப்படும். இம்மாநாட்டில், உலகெங்கும் இருந்து பேராளர்கள் வருகைதந்து, சிறப்பு சேர்ப்பார்கள்.

நுண்மாண் நுழைபுலமிக்க தமிழ் அறிஞர்கள் சான்றோர்கள், கவிஞர்கள், முனைவர்கள், எழுத்தாளர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், கலைஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் அன்பர்கள் கலந்து கொண்டு பெருமைசேர்க்கிறார்கள்.

பன்னாட்டு தமிழுறவு மாநாடு அரசியல் மதங்கள், சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு மிகவும் பொதுமை உணர்வுடையதாய், நடுநிலைமைப்பண்பு கொண்டதாய் மிக்க தகுதியுடைய பயன் மிகுந்த மாநாடாக நடைபெறும். இம்மாநாடு தமிழ் ஆர்வலர்களால் அறிஞர்களால், அன்பர்களால் பொதுமை உணர்வுடன் எளிய முறையில் இறைவன் திருவருளால் நடக்க இருப்பது.

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் - தெய்வம்

மடிதற்றுத் தான் முந்துறும்

தன் குடியை, மொழியை மேலும் மேலும் உயர்த்துவேன் என்று முயலும் ஒருவனுக்கு, தெய்வம் தன் ஆடையை வரிந்து, இறுக்கிக் கட்டிக்கொண்டு மேன்மேலும் உதவிசெய்ய முன்வந்து காத்து நிற்கும்.

இப்போது நடைபெறும் 5 ஆம் மாநாடு பன்னாட்டுத் தமிழுறவுமன்றம் வெள்ளிவிழா நினைவாக, அதன் நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களால் பல அன்பர்களின் உதவியுடன் பொதுமையானதாக நடுநிலைமை உயடையதாக நடக்கவிருப்பது.

ஒல்லும் வகையான் அறிவினை ஒவாதே

செல்லும் வாயெலாம் செயல்

என்ற குறள் நெறிக்கு ஏற்ப, தமிழ்வளர்க்க தமிழை மேலும் மேன்மையடைய ஒன்று கூடுவோம்.

''தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத்தமிழ்
எங்கள் உயிர்க்கு நேர்''
என்ற

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாராட்டி போற்றிய தமிழ் மொழி வளர்ப்போம்.

''உலகம் தழுவிய ஒட்பத்துடன்
யாதும் ஊரே யாவரும் கேளிர்''

என்ற அன்புச் செய்தியை வன்முறை, தீவிரவாதம் மிகுந்த இக்காலத்தில் தமிழ்நெறி பரப்பி அமைதியும் ஏற்படுத்துவோம்.

திருக்குறளின் வாழ்வியல் நெறிகளையும் - பிறர்நலம் பேணும் மனிதநேயத்தையும் முயற்சியையும் உழைப்பையும், ஊக்கத்தையம் நேர்மையையும் ஒழுக்கத்தையும் போற்றி வாழ்ந்து. நம்பெருமையை உலகறியச் செய்வோம்.

சங்க இலக்கியங்கள் திருக்குறள் மற்றும் சிலப்பதிகாரம் முதலான ஐம்பெரும் காப்பியங்கள் கம்பராமாயணம் போன்ற காப்பியங்கள் நமது இளைஞர்கள் ஆர்வமுடன் படித்துப் பயன்பெறச் செய்வோம்.

ஆக்கமிக்க அறிவியல் தமிழை வளர்த்து, கணினி உலகத்தில் வெற்றி வாகைசூடுவோம். இம்மாநாட்டில் அறிஞர்களின் ஆய்வுச் சொற்பொழிவுகளும் திருக்குறள் வாழ்வியல் சிந்தனைகளும், பெண்ணியத்தின் பெருமையும் பேசப்படுகின்றன. புத்தகக்கண்காட்சியும், ஊர்வலமும் கலைநிகழ்ச்சிகளும் மக்களுக்கு மகிழ்ச்சியும் நல்குவன.

இம்மாநாட்டில், தமிழர்களின் இலக்கியம், கலை, பண்பாடு, கலாச்சாரம் இன்றைய ஆக்கம் மிகுந்த அறிவியல் சிந்தனைகள், கணிப் பொறிக்கலைகள் அனைத்தும் இடம்பெறும்; நம் பெருமையை உலகமக்கள் அறிந்திட வழி வகுக்கும். புதிய சிந்தனைகள், புதுப்படைப்பு கள் தமிழுக்கு ஆக்கமும் வளமும் பெருமையும் சேர்க்கும். நம்மைப் புதுப்பித்துக் கொண்டு ''நொடி தோறும் புதுமை'' சேர்ப்போம்.

இம்மாநாடு

''தேமதுரத் தமிழோசை உலகெலாம்
பரவும் வகை செய்யும்''
'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று
சங்கே முழங்கு''

எனத் தமிழ்ச்சங்க முழங்கி நம் மாநாடு வரலாற்றில் இடம் பெறச் செய்யும்.

''எளிய நடையில் தமிழ்நூல்கள் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனைகள் புதிதுபுதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்கலெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைத் செழுந்தமிழாய் செய்வதுவும் வேண்டும்''

என்ற புரட்சி கவிஞர் கனவுகளை இம் மாநாடு நனவு ஆக்கும்.

★

அசோகன் பாதை!

வே. நாகராசா, பாங்காக்

கொண்டல் மழைபோலும் பெருங்கவிக்கோ தன்வேகம்
கண்டோர் விறைத்துநிற்க கன்னத்துமீசைகளும்
பண்டோர் தமிழ்மொழியின் பண்பாட்டின் இலக்கணமாய்
விண்டோர் வியக்கவீறுநடை போடுகிறார்.

கள்ளமில்லா உள்ளத்துக்த் திருவள்ளுவனைப் பெற்றெடுத்து
மெல்லவே தமிழ்ப்பணிக்கு விதையாக விட்டுவிட்டார்
உள்ளப் பசுமையுடன் உறவுக்குப் பாலமாய்
வெள்ளம் போல் புகழ்ஓங்கு பணிசெய்து வருகின்றார்

அன்று அசோகன்தன் மகனை அயல்நாடு அனுப்பிவைத்தான்
சென்று புகட்டிவா புத்தர் போதனையை
இன்றுதன்மகனை தரணிஎங்கும் தான் அனுப்பி
நன்று தமிழ்ப்பணியை நால்திசையும் பரப்பு என்றார்

சுடரும் தமிழுக்குத் தொடரும் பயணங்கள்

பெருங்கவிக்கோ

தடைகள் எத்தனை எத்தனை வரினும்
தவிடு பொடிகள் ஆக்குவோம்
நடைகள் புதுமை நாட்டும் செயல்கள்
நானிலம் ஏற்க ஊக்குவோம்!
விடைகள் தெளிவின் வியர்வை சிந்தும்
வினைகள் உள்ளம் நோக்குவோம்!
படைகள் தமிழர் பயன் சேர் எண்ணம்
பழுக்கக் காய்ச்சித் தாக்குவோம்!

சாதிப் பிளவுச் சாவுகள் புதைப்போம்
சங்கமம் தமிழால் இணைப்போம்
வாதிட்டேமத வம்புகள் செய்யா
மார்க்கம் கண்டே தெளிவோம்
நீதியும் ஒன்றே ஆதியுமொன்றே
நீண்ட காலப் பயணங்கள்
சோதிச் சுடரின் ஒளியின் பாதை
தொடர்ந்து முனைந்து வெல்லுவோம்

பன்னாட்டுறவுப் பாதை வழிகள்
பயணம் தொடர்ந்து செல்லுவோம்!
நன்னாட் டம்கொள் நனிதேர்கொள்கை
நாளும் பொழுதும் ஏந்துவோம்!
தென்றல் வரினும் தீயாய்ச் சுடினும்
தேவை உழைப்பைச் செய்குவோம்!
நன்றோ தீதோ நம்தம் குறிக்கோள்
நாட்டும் திட்டம் இயற்றுவோம்!

அடிமைத் தளைகள் அறுத்தே எறிவோம்
அஞ்சா மைகள் மலர்த்துவோம்!
மடிமைத் தீமை மாற்றி ஏற்றம்
மாட்சி காணப் பண்ணுவோம்!
கொடியர் கூட்டம் நெடிய ஆட்டம்
கொலைகள் செய்தே மீட்டிடுவோம்!
நடிக்கும் வஞ்சம் வெடிக்கும் மனத்தால்
நடுநடுங்க விரட்டுவோம்!

உலக அரங்கில் உயர்ந்த நிலையில்
தமிழி னத்தை உயர்த்துவோம்!
கலகம் செய்தே கயமை விதைப்பார்
கானல் நீரை எள்ளுவோம்!
நலம்செய் ஆற்றல் நன்றார் ஏற்றம்
நஞ்செய்ப் பயிர்போல் பேணுவோம்!
தலமை எங்கும்நம் தமிழின் பெருமை
ஏற்றம் காண முயலுவோம்!

பன்னாட் டுறவுமன்றக் குறிக்கோள்
பயன்நாட் டும்வகை சிந்திப்போம்!
இன்னல் கோடி கோடி வரினும்
எதையும் தாங்கி முந்துவோம்!
இன்னும் இன்னும் இன்னும் உறக்கம்
இல்லாத் துணிவைக் காட்டுவோம்!
அன்னை மொழிக்கோர் அருமை சமைக்கும்
அயரா உழைப்பைக் காட்டுவோம்!

கட்சி பேதக் கயமை செய்யாக்
கனிவை உள்ளி விரைகுவோம்!
உட்ப கைகள் உதறி ஒருமை
உன்ன தங்கள் கருது வோம்
நட்பால் உரிமை வெட்டிப் புதைக்கும்
நயவஞ் சகங்கள் சிதைப்போம்
எட்டுத் திக்கும் கொட்டி முழங்கும்
எழுச்சி உணர்ச்சி கொள்ளுவோம்!

புத்துணர்ச்சி புதுக்கும் வழிசெய்
புடம்போடும்செயல் ஆளுவோம்!
ஒத்த உரிமை வித்த கங்கள்
பத்து நூறு கோடியாய்
முத்து முத்தாய் மொத்த விளைவு
மோக தாகம் மூட்டுவோம்!
பத்தியங்கள் காத்தே முப்பால்
பைந்த மிழ்க்கே வாழுவோம்!

வியந்தும்வியந்தும் வியக்க லாகா
வியப்பு நந்தம் தமிழ்மொழி!
நயங்கள் குவியும் நளினம் கொழிக்கும்
நாடும் அற்பு தங்களே!
இயல்கள் துறைகள் இயற்கை வழிகள்
எண்ணி லாத எழில்களாம்!
செயல்கள் ஊக்கு முயற்சி தேக்கும்
செந்த மிழ்த்தாய் வெல்கவே!

இனமும் மொழியும் இருளும் விழிகள்
ஏக்கம் நீக்கித் தொடர்வோம்!
கனவும் நனவும் கடமை ஒன்றே
கருதும் நிலைகள் நாட்டுவோம்!
தணலும் புனலும் காற்றும் வானும்
தவத்தின் தாயின் மண்ணினை
மனத்தின் நாத மதிசேர் விதியால்
மாட்சி ஆட்சி மீட்கவே!

மலர்க்குழு முன்னவர், கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் அவர்களின்

கருத்துரை

மதுரையில் பூத்த மலர்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற வெள்ளி விழாவோடு இணைந்த ஐந்தாம் உலக மாநாடு சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மாமதுரை மூதூரில் நடைபெறுகிறது.

புலவர்களெல்லாம் உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிந்த ஊரானதால் மதுரைகூடல் மாநகர் என்ற பெயரைப் பெற்றது. நான்கு புறமும் மாட மாளிகைகளைக் கொண்ட அழகிய வீதிகள் அணிசெய்ததால் 'நான் மாடக் கூடல்' ஆயிற்று.

பண்டு தொட்டுப் பாண்டியர் தலைநகராக விளங்கிப் பைந்தமிழின் தொட்டிலாகத் திகழ்ந்து வரும் மதுரையில் இம்முறை பன்னாட்டுத் தமிழுறவுமன்ற மாநாடு நடப்பது தனிச் சிறப்புக்குரியதாகும். சித்திரைத் திருவிழாவுக்கு அடுத்து நடைபெறும் இன்னொரு சித்திரைத் திருவிழாவாகும் இது.

பன்னாட்டுத் தமிழர்களும் தொடர்பு கொள்ளும் பாலமாக விளங்கிவரும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் 1977 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது.

மலேசியத் தமிழ் மாமுனிவர் சுவாமி இராமதாசர் பிறந்தநாளில் தொடங்கப்பட்ட இம்மன்றம், தமிழும், தமிழரும் உலகளாவிய நிலையில் ஏற்றம் பெற வேண்டும் என்ற உயரிய குறிக்கோளைக் கொண்டு இயங்கி, இன்று வளர்ந்தோங்கி நிற்கிறது.

உலகைச் சுற்றிச் சுற்றி வந்து, பறந்து பறந்து தமிழ்ப்பணியாற்றும் 'தமிழ்ப்பறவை' யாகத் திகழும், பெருங்கவிக்கோ வா.மு.சே. என்றன் உடன் பிறவாச் சகோதரர். அவர் ஆற்றி வருகின்ற பணிகளுக்குகெல்லாம் நான் துணை நின்று வருபவன். அவரோடு இணைந்து பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தைத் தொடங்கியவருள் அடியேனும் ஒருவன் என்ற பெருமை எனக்கு உண்டு.

உலகளாவிய நான்கு மாநாடுகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாக நடத்தி, இப்போது ஐந்தாவது மாநாட்டை மதுரையிலே நடத்துகிறோம். உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்ச் சான்றோர்களும், தமிழ் அறிஞர் பெருமக்களும், தமிழுக்குத் தொண்டாற்றும் நன்மக்களும் கூடல் மாநகரில் வந்து கூட இருக்கின்றார்கள். மாநாடு நடைபெறும் நான்கு நாட்களும், நான் மாடக் கூடலில் நற்றமிழ் முழங்கவிருக்கிறது. 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய இம்மாநாடு பெரும் பங்காற்றவிருக்கிறது.

இம்மாநாட்டினையொட்டி இம் 'மலர்' மலர்ந்து உங்கள் கைகளில் தவழ்ந்து, தமிழ் மணம் பரப்புகின்றது. இம் மலரை உருவாக்கும் குழுவின் தலைவராக முனைவர் கோதண்டபாணி அவர்களும், முன்னவராக நானும் பொறுப்பேற்றுக்கொண்டோம். இக்குழுவில் எங்களுடன் இணைந்து பணியாற்றிய கவிக்கோ ஞானச் செல்வன், உதயை மு. வீரையன், கடலூர் அ. தேவநாதன், புலவர் பிரபாகரன், செளந்தரராசன் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

மிகக் குறுகிய காலமே இருந்ததால், மலர்க் குழு உறுப்பினர் அனைவரையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

மாநாட்டுப் பணிகளையெல்லாம் முழுப் பொறுப்பேற்று இரவு பகலாகப் பணியாற்றி வரும், தம்பிகள் வா.மு.சே. திருவள்ளுவர், வா.மு.சே. ஆண்டவர் ஆகிய இருவரின் பணி மகத்தானது. அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மலருக்கு வாழ்த்துகள், கட்டுரைகள் கவிதைகள், ஆராய்ச்சி உரைகள் வழங்கி மலரை மணக்கச் செய்த அறிஞர், கவிஞர், பெருமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மலர் மணம் நுகர்ந்து மகிழ்க!

மாத்தமிழ் வளரத் துணை செய்க

மலர்க்குழுத் தலைவர்
முனைவர் **இரா. கோதண்டபாணி** அவர்களின்

நயத்தக்க நன்றிகள்

உலகளாவிய நிலையில் தமிழ், தமிழர் ஏற்றம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் வழி, கடந்த 25 ஆண்டுகளாக முனைப்புடன் செயலாக்கங்களைச் செய்து வருகின்றது பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றம். உலகந் தழுவி வாழும் தமிழர்களின் மொழி, இன உணர்வுகளை ஒன்றுகூட்டி, தமிழ்ப் பண்பாட்டு நிலைகளை நினைவூட்டும் வகையிலும் இந்த மன்றம் தொண்டாற்றி வருகின்றது. உயரிய நோக்கங்களை உச்சிமேற்கொண்டு பணியாற்றும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் அனைத்து நாடுகளிலும் வாழும் தமிழர்களை ஒன்று கூட்டுவிக்கும் தமிழ் மாநாடுகளையும் நடத்தி வருகின்றது. மன்றத்தில் முதல், இரண்டாம் மாநாடுகள் வெளிநாடுகளிலும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இந்த வகையில் மன்றத்தின் வெள்ளிவிழாவும் ஐந்தாம் உலக மாநாடும், ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கும் பாங்குடைய தமிழ் மொழிக்குச் சங்கம் வைத்துச் சிறப்பித்த மதுரை மாநகரில் நடைபெறுகின்றது. மாநாட்டின் சிறப்பினை கூட்டத் தமிழ் அறிஞர்களின் சிந்தனை மலர்களை ஒன்றுகூட்டி இந்தச் சிறப்பு மலர் வெளிவருகின்றது. மாறிவரும் உலகை நோக்கித் தமிழ், தமிழர் பற்றிய கருத்துகளைத் தாங்கி வரும் இம்மலரில் தமிழ் அறிஞர்கள் தங்கள் கருத்துகளை விதைத்துள்ளனர். படைப்புகளை அளித்து உதவிய அறிஞர் பெருமக்களுக்கும், விளம்பரங்களை நல்கிய நல்லோர்களுக்கும் மலர்க்குழுவில் இடம்பெற்று உறுதுணையாகப் பணியாற்றிய நண்பர்களுக்கும் இதயங் கனிந்த நன்றிகளைப் படைப்பதில் பெருமை அடைகிறேன்.



பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் நடத்தும் மாநாட்டின் குறிக்கோள்கள்

நீதியரசர் பெ. வேணுகோபால்

மாறிவரும் உலகை நோக்கித் தமிழ், தமிழர் என்பது மாநாட்டின் கருப்பொருளாக அமைந்துள்ளது. இக்கருப்பொருளின் பல்வேறு கோணங்களை அறிந்து கொள்ள, தமிழகத்தை எதிர் நோக்கி இருக்கும் பிரச்சனைகளை அறிந்து அதற்குத் தீர்வுகாண தமிழகத்தின் இன்றைய நிலைமையையும், தமிழர்களின் இன்றைய நிலையையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

தமிழனின் தனிச்சிறப்புகள்

உலகம் ஒரு மாயை, எல்லாம் தலை விதியின் படிதான் நடக்கும் என்பது போன்ற தத்துவங்கள் பிரச்சாரம் செய்யப்பட்ட போதிலும் தமிழ் இனத்தின் சிந்தனையும் அறிவுக் கூர்மையும் குறையாமல் இருந்து வருகிறது. உலகின் தலை சிறந்த சிந்தனையாளர்களில் தமிழர்கள் இடம் பெற்று உள்ளனர். தமிழனின் பெரும் சொத்தாகக் கருதப்படுவது அவனது உழைப்பும் நேர்மையும். தமிழனின் அறிவுத் திறனும் நேர்மையும் இன்று உலக அளவில் பாராட்டப்பட்டு வருகிறது. இன்று பிரசித்திப் பெற்ற அணு விஞ்ஞானிகள், அப்துல் கலாம், சிதம்பரம் போன்ற ஜாம்பவான்கள் தமிழர்கள்.

தமிழ் இனத்தின் தனிச்சிறப்புகள்

தமிழ் இனம் என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட, ஆக்கபூர்வமான, அறிவுப் பூர்வமான இனம். பதவிப்பித்துக் கொண்டு பெரிய பதவிகளை எந்த வகையிலாவது பெற வேண்டும் என்று பேராசை பிடித்து அலைபவர்கள் அல்ல. இருப்பதைக் கொண்டு மனநிறைவும் மகிழ்ச்சியும் அடையும் இனம். தமிழ் இனம் அறிவு சார்ந்த இனமாகவும் அறிவுப்பசி ஆர்வத்தோடு அறிவுத் தேடலில் சளைக்காமல் இருந்து வரும் இனம். வட இந்தியர்கள் போல் ஆபத்துக்களை எடுத்து அடாவடித்தனமாக செயல்படுவர்கள் அல்ல. பாதுகாப்பு உணர்வுடன் போட்ட முதலுக்கு குந்தகம் ஏற்படாதவகையில் நிதானமாகவும் கவனமாகவும் செயல்படுபவர்கள்

தமிழகத்தின் பொருளாதாரம்

சாஃப்ட்வேர், ஹார்டுவேர் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி அதிகரித்துள்ளது, சாஃப்ட்வேர் தயாரிப்பில் 2008 ஆண்டுக்குள் முக்கிய மையமாக இந்தியா இருக்கும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. அதில் தமிழ்நாட்டின் பங்கு பெரும் அளவாக இருக்கும். டைடல் பார்க், டான்டெக், போன்ற கம்ப்யூட்டர் அமைப்புகள் சாதனைகள் நடத்தப்படுவது தமிழகத்தில் தான். மின்னணுவியில் துறை, தகவல் தொழில் நுட்பம் போன்ற அகில இந்திய அளவில் தேர்ச்சி பெற்றோர் பட்டியலில் ஐம்பத்தோரு சதவிகிதம் பேர் தமிழர்கள். தொலைக்காட்சி ஒளிபரப்பும் சாட்டிலைட் சேனல்கள் தமிழகத்தில் மட்டும் இன்று பத்து சேனல்கள் செயல்பட்டு வருகிறன.

தமிழகத்தின் கல்வி நிலை

தமிழ்நாட்டில் மேல் நிலைப்பள்ளி அளவில் கம்ப்யூட்டர் கல்வி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அரசு நடத்தும் பள்ளிகளில் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கம்ப்யூட்டர் கல்வி பெற்று வருவதாக அரசின்

புள்ளிவிபரம் கூறுகிறது. இன்று அறிவு பூர்வமான, ஆக்கபூர்வமான உயர்தரக் கல்வி தமிழகத்திலேயே கற்கும் அளவிற்கு வசதி பெருகியுள்ளது. உயரிய படிப்பு, தரமான கல்வி சுற்றுப் புற வளர்ச்சி இவைகளுக்கு ஏற்ற இடமாக தமிழகம் இன்று உள்ளது.

அயல் நாடுகளில் தமிழர்கள்

இன்று தமிழர்கள் கம்ப்யூட்டர் தொடர்பான பல பணிகளில் பல்வேறு நாடுகளில் பெருமைக்குறிய பொறுப்புகள் ஏற்றுத் திறம்பட செயல்படுகின்றனர் துபாய் அரசைச் சார்ந்த மின் உற்பத்தி நிலையத்தில் மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை தமிழர்கள்தான் செயல்பட்டு வருகிறார்கள். அமெரிக்காவில் அன்புடனும் அக்கரையுடனும் நோயாளிகளைத் குணப்படுத் துவதில் சிறப்புமிக்கவர்கள் என்ற பெயரைப் பெற்று இருப்பவர்கள் தமிழகத்திலிருந்து சென்ற டாக்டர்கள்.

வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த தமிழகம்

இந்திய தேசிய கடலாய்வுக் கழகமும், இங்கிலாந்தில் உள்ள விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகமும் இணைந்து மகாபலிபுரம கடல் பகுதியில் சமீபத்தில் ஆய்வு செய்தது. அங்கு ஒரு பெரிய நகரம் மூழ்கிக் கிடப்பதைக் கண்டனர். அந்த நகரம் பல சதுரமைல் பரப்பளவில் உள்ளது. மனிதன் கட்டிய பல கட்டிடங்கள் அதில் உள்ளன. மூன்று நாட்களில் முப்பது முறை மூழ்கித் தேடியதில் அப்பெரும் நகரத்தின் ஒரு பகுதியைத் தான் அவர்களால் காண முடிந்தது. அந்த நகரின் ஒரு பகுதியில் வழிபாட்டு தலம் காணப்படுகிறது. கடலில் மூழ்கிய ஆறு கோவில் சிற்பங்களும் அங்கு இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அந்தப் பகுதியில் முழு அளவில் கடல் ஆராய்ச்சி நடத்தினால் அந்த நகரம் பற்றிய பல முக்கிய தகவல்கள் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்தக் கண்டுபிடிப்பு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஐந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த நகரம் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். உலகின் எந்தப்பகுதியிலும் நாகரிக வளர்ச்சியும் முதிர்ச்சியும் ஏற்படாத ஒரு காலக்கட்டத்தில் தமிழன் மிகப்பெரிய நகரத்தை உருவாக்கும் அளவிலா அறிவும் ஆற்றலும் மிக்க இனமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது.

பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் சிறப்பும் – மாநாட்டின் குறிக்கோள்களும்

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” தமிழ்க் குலம் உருவாக்கிய பழமொழி. திரவியம் தேடச் சென்ற தமிழன் இன்று நாற்பத்திரெண்டு நாடுகளில் நாலரை கோடி மக்களாக சிதறி வாழ்கிறான். உழைத்து வாழ்கின்றவன் தமிழன் சுரண்டி வாழும் இனம் அல்ல. பரந்து வாழும் தமிழர்கள் ஒருவொருக்கொருவர் தொடர்பின்றி பிரிந்து வாழும் தமிழர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பின்றி பிரிந்து வாழும் தமிழர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள, உறவு கொள்ள நன்றி செலுத்த பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் ஐந்தாவது மாநாடு உலகத் தமிழர்களின் உறவுப் பாலமாக அமைந்துள்ளது. உலகத்தின் பல நாடுகளிலிருந்து தமிழறிஞர்கள், கவிஞர்கள், பல்வேறு துறையைச் சார்ந்த அறிஞர் பெருமக்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உலகில் வாழும் ஒன்பது கோடி தமிழ் மக்களின் உள்ளத் துடிப்பினையும் எண்ணங்களையும் பிரதி பலிக்கும் வகையில் மாநாடு நடத்தப்படுகிறது. “ உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்” பொது உடைமை வாதிகள் அன்று எழுப்பிய குரல் உலகத்தமிழர்களே

ஞானஒளி டாக்டர் சந்தோசம் அவர்களின் வாழ்த்து



ஐம்பெரும் காப்பியம் உள்ளத்தில் வைத்து
ஐங்கரனை முத்தமிழில் முதல் தொழுது
மூப்பில்லா தமிழருள் பெருக வாழ்க ! வாழ்க !

என்று எழில்பொங்கும் அருள்மிகுந்த
அன்னைத் தமிழ் ஆட்சி செய்ய
அன்றும் இன்றும் எங்கெங்கும் அலைந்து
ஒருமைப் பாட்டுடன் உலகை சுற்றிவரும்
உன்னத மாமனிதர் உண்மைக் கவிராயர்
கவிக்கோ அவற்றும் பெருங்கவிக்கோ
பிறைமுடியானையும் பிறை மதியும் வாகைசூடி
வையகத்துள் செந்தமிழ் வாழ
வற்றாத சிவநதிபோல் என்றும் செழித்தோட
சிரம் கவிழாமல் நிமிர்ந்து நின்று
நித்தம் நீதிமொழி தமிழை அனைவருக்கும்
போதிக்கும் அருள்சித்தர் நம்பேராசான்
என் உள்ளம் கவர்ந்த உயர்ந்தோன் வா.மு.சே
அறுபத்தேழைக் கடந்தும் உரம்குன்றாத இளைஞன்
தொங்குமீசை முகத்திலிருந்தாலும்
தொழுகின்ற மாமனிதரை மறையருள் பெற்ற
என்னருமை சதோரரே சுந்தர உளத்தோரே
திருவள்ளுவரை தலைமகனாய் பெற்று
கவிபரசன், ஆண்டவர் தமிழ்மணியையும் பெற்று
முழுமதியாக பெண்ணின் பெருமை நல்மனையாட்சி
நடத்தும் மங்கயர்கரசி சேதுமதியும்
சேர்ந்த இக்குடும்பம் செந்தமிழ்போல்
சிறந்தோங்க சேயோனின் அருள்பெற்று
மாயோன் மருகனின் திருவருளால்
என்றும் வாழ்ந்து தேன்தமிழை
திக்கெட்டும் பரப்ப தேவர்களோடு
வாழ்க வாழ்கவென சந்தனம் மனம்கமழ
பன்னிர் மணம்பரவ ஞானதிரவிய நல்லாசியுடன்
சந்தோசக் கவிச்சகரவர்த்தி சாற்றினேன்
ஞானிஒளி அருளோடு என்றும்
வாழ்க ! வாழ்க ! வாழிய நீடு !

ஒன்றுபடுங்கள்" என்பது இன்றைய தமிழன் எழுப்பும் குரல். இதுகாலத்தின் கட்டாயம், உலகத் தமிழர்கள் ஒன்று பட்டால் தமிழ் இனம் உலகின் வலிமை மிக்க இனமாக மாறிவிடும். அவ் இனம் எழுப்பும் கோரிக்கைகள் உலக அரங்கில் எதிரொலிக்கும் இதை உணர்த்தவே பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் ஐந்தாவது மாநாடு.

அரசியல் கட்சிகள் தமிழர்கள் ஒன்றுமைப் படுத்தியதாக சரித்திரம் இல்லை. அரசியலுக்கு அப்பாற்பட்ட அரசியல் சாயம் பூசப்பட்டாத பன்னாட்டு தமிழுறவு மன்றம் போன்ற அமைப்புகளே தமிழ் மொழியின் பெயராலும் தமிழ்க் கலாச்சாரத்தின் பெயராலும் உலகத் தமிழர்களை ஒற்றுமைப்படுத்த முடியும். அரசியல் கட்சிகள் செய்ய இயலாத, முயலாத "உலகத் தமிழர்களின் ஒற்றுமை" என்ற மாபெரும் குறிக்கோளுடன் இம்மாநாடு தொடங்குகிறது.

"தமிழன் என்று சொல்லடா, என்றும் தலை நிமிர்ந்து நில்லடா"

இதுவே இம்மாநாட்டின் குறிக்கோள் இம்முயற்சி வெற்றி அடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

★

எண்ணங்களின் இயக்கும் திறம்

'யாழன் இரா. சண்முகலிங்கம், அமெரிக்கா.

பன்னாட்டுத் தமிழறவு மன்ற வெள்ளிவிழா,
ஐந்தாம் உலக மாநாடு
இந்நாள் இருந்து பன்னாள் நடக்கும் காட்சி
காண இயலாதபாடு
பெரும்பாடு! தேகவேதனையோடு மனவேதனை
கூடும் உடன்(ல்) பாடு
தமிழ்படும் பாடு தாங்கும் நெஞ்சக் கூப்பாடு
ஒரு தனிப்பாடு
முத்தமிழ்ச் சுவை படைக்கும் மூதறிஞர்
முன்னிலைப்பாடு
வேதனை தேய்க்கும் மருந்து போற்
சாப்பாட்டு ஏற்பாடு
எப்பாடு பட்டும் சுவைக்க வேண்டும்
என்ற ஏக்கப்பாடு
தீரும் என்று பாடு, விழா வெற்றி தமிழுக்கும்
வெற்றி என்று பாடு!

இவ்வுலகை நீத்தும் இன்னும் வாழும் பெரியோர் தமது மக்கள் சேவையால் அழியா வரம் பெற்றவர்களாவர். எல்லா மனிதராலும் மேதாவிகள் போல் உலகிற்கு, மனித குலத்துக்கு, தம் குலத்துக்குத் தொண்டு செய்வது நடைமுறைப்படாது. ஆனால், மேதாவிகள் செய்த தொண்டு பற்றிச் சிந்தித்து, அந்த மனித சேவையை நிறைவேற்ற அந்த மேதாவி செய்த தியாகங்கள், பட்ட இன்னல்கள், ஏன் சில வேளைகளில் தமது உயிருக்கே உலைவைக்கும் நிலைகளைத் தாண்டி அல்லும் பகலும் உழைத்து ஒரு வாழ்நாளிலே வெற்றி கண்டதை நாம் போற்றுவதும் தொண்டர்க்குச் செய்யும் எமது தொண்டாகும் அல்லவா?

புதுப்புதுக் கண்டுபிடிப்புகளும், புதுவழிகள் அமைப்பதும் ஒவ்வொரு மேதாவியின் எண்ணச் சுடரிலிருந்து எழும்பிய இயக்கும் திறமைதான். இந்த எண்ணச் சுடர்கள் எழும்புவதற்கு தூண்டுகோலாய் இருப்பவை நாம் வாழும் ஒவ்வொரு மணித்துளியிலும் ஏற்படும் வாழ்வின் அறைகூவல்களும், புரியாத புதிர்களுமே. ஆனால நம்மில் எத்தனை பேர் எம்மை நோக்கும் அறைகூவலுக்கு அல்லது புரியாப் புதிர்களை எதிர்த்தோ, ஏற்றோ ஒரு தீர்வுகாண முயலுவோம்? அப்படியிருக்க எப்படி நாம் எமது வாழ்நாளை, ஏன் நமது உயிரையே பணயம் வைத்து மனித சேவையை முன் வைப்போம்! அதனாற்றான் வள்ளுவர் காட்டும் வழி:

''சாதலின் இன்னாத(து) இல்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை''

மெய்யான எண்ணங்கள்தாம் மெய்யான இயக்கும் திறனைச் சுட்டிக்காட்டும். இருந்தும் எம்மில் பலர் எண்ணத்தின் இயக்கும் திறனை அறியார். இன்று மேல்நாட்டு மோகம் அதிலும் அமெரிக்க மோகம் தலைதூக்கி ஆடுகின்றது, ஆட்டுவிக்கின்றது. திடீர் இன்பம் தருவன படிப் படியாகத் துன்பம் தருவனவே. அமெரிக்கச் சமுதாயம் பரிணாம வளர்ச்சியில் தனக்கென ஒரு நாகரிகத்தை இன்னமும் அமைக்கவில்லை.

ஒத்திகை ஒப்பாய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்ற போதிலும் செல்லும் திசை இசைவானதாகத் தெரியவில்லை. அறிவியல் சமூககலை முறைகளைச் செய்திமுறைகள் திரை போட்டு மூடுகின்றன அல்லது திசை மாற்றுகின்றன. அதிலும் பொதுமக்களின் பொழுது போக்கு முறைகள் முன்னுக்கு நிற்பதன் விளைவு, மனிதனுக்கே இயல்பாக உள்ள புலனுணர்வு இயக்கும் திறம் (Cognitive Power) நாளடைவில் அழிந்துகொண்டு போவதை நாம் காண்கின்றோம். 970, 80 ம் ஆண்டுகளில் பார்த்த, கேட்ட செய்திகள் போன்று இன்று நாம் அனுபவிப்பதில்லை.

ஓரிரு செய்திகள் தோன்றினாலும் மக்களிடத்தில் பதிவதில்லை. பொழுதுபோக்கு முறை அநேகமாகக் கனவுப் புனைவு இயலாக (Fantascy Literature) அமைந்துள்ளது.

மனிதனின் இயல்பான புலனுணர்வு இயக்கும் திறம் 'தோற்றநிலை மெய்மைக்காக' (Virtual Reality) பலியிடப்படுகின்றது. அதனால், புலனுணர்வு இயக்கும் திறம் அழிக்கப்

பட்டு மெய்யெண்ணங்களை அறியும் தன்மை அழிக்கப்படுகின்றது. அன்றைய உரோம விளையாட்டு அரங்கு போல் இன்றைய பொழுதுபோக்கு அரங்கும் அமைந்துள்ள தென்று ஒரு அறிஞர் கவலைப் பட்டுள்ளார். குருதிக் களங்களும், குண்டுக் களங்களும் குவியும் திரைப்படங்களும் தொலைக்காட்சி களும் மலிந்து மனித இனம் நலியும் வழிகளை, ஆனை தன்தலையில் தானே போட்டுக் கொள்ளும் குப்பையைப் போல், ஆறறிவு படைத்த பேராசை மனிதன் மனித இனத்தைக் கொல்லாமல் கொல்லுவது அறியார் போலும்!

''எல்லோரும் பிறக்கும் பொழுது நல்லவரே'' மனித இனம் இருபது இலட்சத் திற்கும் மேலான ஆண்டுகள் ஆறறிவு படைத் தது வாழ்ந்து வருகிறது என்று புதைபொருள் ஆய்வில் கிடைக்கும் கலைப் பொருள்கள் கொண்டு அறிகிறோம். கடந்த 19,000 - 12,000, ஆண்டுகளுக்குள் பனிக்கட்டி உருகிய காலம் எனக் கூறப்படும் - Ice Age Melt - காலத்துக்குப் பின் மனித வாழ்க்கை நல்லதற்கும் கெட்டதற் கும் இடையில் ஊசலாடி வந்துள்ளதென்றும் ஆனால் மனிதன் தனது எண்ணச் சிறகை இயக்கி நல்லவை வெல்லும் வழிவகைகளைச் செய்து வந்ததின் பயனே இன்றும் நல்லவை ஈற்றில் வெற்றி யடைந்துள்ளன.

ஆனால், இன்றைக்கும் நேற்றைக்குமுள்ள வேற்றுமை என்னவென்றால், நல்லது கெட்டது இரண்டுக்குமிடையில் போட்டியில்லை, கெட்டவற்றுள் எது சுயநலத்துக்கு ஏதுவான கெடுதியென்பதே யாகும்.

பெருங்கவிக்கோ அவர்களுக்குக் கிடைத்த ஓர் இலட்சம் உருபாப் பரிசு ஒன்று நூறாகி, ''உலகு தழுவிய வகையில் தமிழ் - தமிழர்க்காக உழைத்துவரும் அறிஞர்கள் நூற்றுவருக்குப் பாராட்டும், பட்டயமும் வழங்கிப் பெருமைப் படுத்தப்படும்'' என்று அறிவித்து இந்த விழாவை ஒரு கொடைக் காட்சியாக்கியதில் பெருமை, மகிழ்ச்சி.

தனிநாடில்லாத் தமிழினம், தனி அரசில்லாதம் தமிழினம் தத்தளிப்பது தமிழின் விசதியல்ல; தமிழரின் தன்னலமொன்றே தாம் தப்பும் வழி என்ற தப்பபிப்பிராயமாகும். குதிரைப் பபந்தயத்தில் ஒரு பொழுதும் வெற்றி பெறாத குதிரைகள் ஏதோ தாமும் பந்தயத்தில் பங்கு கொண்டோம் ''கூட்டோடு கோவிந்தா'' என்னும் திருப்திக்காகவும் வெல்லும் குதிரை களின் சொந்தக்காரரின் சுயநலத் தூண்டுதலா லும் கிள்ளிப்போடும் துண்டுகளுக்காகப் பங்கு கொள்பவர்போல் ஆணையுரிமையில்லாத தமிழ் அரசியல்வாதிகள் பெருமைப்படுவது கலியுக முறையா? கலியின் கேலியா? ஆணையுரிமையில்லாத பொறுப்பு இருந்தாலும் துணிவு இல்லாத சுயநலவாதத் தமிழ்த் தலைவர்கள் தமிழுக்கு எதுசெய்ய வேண்டினும் தயங்கும் போக்கிரிகள்.

எவர் எது சொன்ன போதிலும் தமிழ், தமிழர் நிலை தகுதிவாய்ந்ததன்று, தமிழுக்குரிய அரசபீடம்பிறர் அமைக்கமாட்டார். தமிழர்தான் தமிழை முன்கொண்டு வரவேண்டும். அதற்குப் பலவழிகள் உண்டு. இதனாலன்றோ உலகத் தமிழ் இயக்கத் தலைவர்கள் கூட்டணி அவசியம். அந்தந்தக் குழுக்கள் தாம் எடுத்துக் கொண்ட வேலைகளை அங்கத்தவர் கவனிக்கத் தலைவர்கள் ஒன்று கூடித் தமிழ் நிலையான இடத்தை அமைக்கும் முறைகளை ஆராய்ந்து நடைமுறைக்கு ஒவ்வும் முறையை அவரவர் அங்கத்தவர் மூலம் நிறைவேற்றும் முயற்சி இன்றியமையாததாகும். இன்றைய அரசியல் வாதிகளுக்கு வேலையில்லை. ஏனென்றால் : .

அரசியல் வாதி
செய்வது பாதி
உடுப்பது காதி
பேசுவது சாதி
சுருட்டுவது பொதி
அணைப்பது சதி
ஒதுக்குவது மதி
ஒடுக்குவது ஆதி
ஒளிப்பதற்கு விதி
புரியாதது நீதி
புகழ்வதில் தாதி

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற ஐந்தாம் மாநாட்டிற்கு

மலேசிய கூட்டுறவுக் காவலர் **டான்ஸ்ரீ டத்தோ கே.ஆர் சோமசுந்தரம்** அவர்களின்

வாழ்த்துச் செய்தி

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் உலகளாவிய ஐந்தாம் மாநாடு இந்தியவில் தமிழ்நாட்டில் மதுரை மாநகரில் நடைபெறவிருப்பதறிய மகிழ்ச்சியடைகிறேன்.

உலகின் பல நாடுகளில் குடியேறிய தமிழர்கள் அவரவர்கள் வாழ்ந்து வரும் நாடுகளில் தமிழ் மொழியைப் பிற இனத்தவரிடையே அறிமுகப்படுத்தி பெருமை சேர்த்துள்ளனர். சில நாடுகளில் தமிழ் மொழியைத் தொடர்பு மொழியாகவும் பயன்படுத்துகின்றனர். ஒரு சில நாடுகளில் அரச அங்கீகாரம் பெற்ற மொழியாகவும் தமிழ் மொழி இருக்கின்றது. இது தமிழர்களுக்குப் பெருமையும், தமிழ் மொழிக்கு வளர்ச்சியும் ஆகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களிடையே அறிமுகமும், உறவும் ஏற்படுவதன் வழியும், ஆய்வுகள் செய்வதன் வழியும் மொழியை வளர்க்கவும், செம்மைப்படுத்தவும் இயலும். பல்துறை தகவல் யுகத்தை நோக்கி அறிவியலும், தொழில் நுட்பத்துறையும் வளரச்சி கண்டு வருகிறது. தொழில் நுட்பத்தோடு இணைந்து வளர தமிழர்கள் ஒன்றுபடுவதும், உறவை வளர்த்துக் கொள்ள வேண்டியதும் மிக முக்கியமாகும். இந்தப் பணியை மேற் கொண்டு உலக நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொண்டு வரும்இம்மன்றத்தின் அமைப்பாளரும் செயலாளருமான பெருங்கவிக்கோ டாக்டர். வா.மு. சேதுராமன் அவர்களின் பணியும், நோக்கமும் வெற்றி பெற நல்வாழ்த்துக்கள்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் அறிஞர் பெருமக்களின் ஆய்வுகளும், விவாதங்களும் உலகளாவிய அளவில் வாழும் தமிழ்ப் பெருமக்களுக்கும், தமிழ் மொழிக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மாநாடு வெற்றி பெற நல்வாழ்த்துக்கள்

அன்புடன்,

டான்ஸ்ரீ டத்தோ கே.ஆர்.சோமசுந்தரம்

நிர்வாகத் தலைவர்

உண்டு சித்தி
தமிழர் உத்தி
கூட்டொருமை உசத்தி
வேண்டும் அமைதி
என்று போதி
வெற்றி உறுதி!

ஆகவே ''உலகத் தமிழர் நிறுவனம்'' 'உலகத் தமிழ் இயக்கத் தலைவர் கூட்டணியாக' அமைத்து அரசொன்றில்லாத போதும் அந்தரத்திலே அரசொன்றமைத்துத் தமிழ் வாழத் தமிழ் வளர, தமிழர் தலை நிமிர, உலகம் செழிக்க மதசார்பற்ற, எந்நாளும் எவராலும் ஏற்கக் கூடிய திருக்குறளை உலகேற்க உறுதியாக உழைத்துப் பிறவிப் பயனை அடைய ஒளிந்தது போதும் ஒழியாதிருக்க ஒன்று திரளுங்கள்: செயல்வீரரை ஊக்குவியுங்கள் தமிழின மறுமலர்ச்சிக்கு வித்திட்டோம் என்று, வரும் சந்ததி நம்மை வாழ்த்தட்டும். நாம் தமிழைப் போற்ற நாடெல்லாம் நம்மைப் போற்றும்.

வாழ்க தமிழ்! ஓங்குக தமிழர் கூட்டொருமை! வளர்க தமிழ் மொழி! என்னகம் இனிது வாழ்ந்தால் வையகம் இனிது வாழும்! என்று கொட்டுவோம் முரசு, அமைப்போம் தமிழரசு, கூட்டொருமைப் பலத்தால், தமிழனின் தன்மான உணர்ச்சியால்!

★

தமிழ் வளர்போம் தமிழினம் காப்போம்.

சி.செல்லையா - கனடா (தலைவர் வ.சூ.ப. இயக்கம்)

உலகெங்கம் பரந்து வாழும் 7 கோடிக்கும் 8 கோடிக்கும் இடைப்பட்ட தமிழர்கள் திரு நாடுகளைத் தங்கள் தாய் நாடுகளாகக் கொண்ட வர்கள். ஒன்று இந்தியா, மற்றது இலங்கை குறிப்பாக இந்தியாவில் தமிழ்நாடு, இலங்கை யில் தமிழீழம் என்று இன்றும் கருதப்படும் வட கிழ் மாகாணங்கள்.

இந்தியாவைத் தாய் நாடாகக் கொண்ட பல்லாயிரம் தமிழ் மக்கள் இன்றைக்கு 140 வருடங்களுக்கு முன்னிருந்து பல நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அன்று இந்தியாவை ஆண்ட மேற்கத்திய வல்லரசுகள், குறிப்பாக ஆங்கிலேயரால் தங்கள் பொருளாதார நலன் கருதிக் குடியேற்றப்பட்டவர்கள். தென்னா பிரிக்கா, மலேசியா மொறிசியஸ், நெயூனியன், கயானா, பிஜி, இலங்கை (மத்திய மகாணம்) போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் இவ்வடிப்படையில் குடியேற்றப்பட்டவர்கள். இலங்கையைப் பொறுத்தவரையில் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் பூர்வீகக் குடி மக்க ளான வட கீழ் மாகாணங்களில் வாழ்ந்து கொண் டிருக்கும் தமிழர்களில் பெரும் எண்ணிக்கை யினர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் நடந்து கொண்டிருக்கும் இனப் போரினால் இந்தியா, மேற்கத்திய நாடுகள், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந் துள்ளனர். சிலர் நிபுணர்களாகப் பல நாடுகளில் வேலை பார்க்கின்றனர்.

மேற் கூறிய இருவகையினரைத் தவிர இரண்டாவது உலக யுத்தத்தின் பின் இந்தியாவி லிருந்து குறிப்பிடத்தக்க படித்த தமிழர்கள் அமெரிக்காவிலும் கனடாவிலும் வேலை பார்ப்பதற்காகக் குடியேறினர். அமெரிக்காவில் பத்து இலட்சம் இந்தியர் மட்டில் இந்தப் பிரிவில் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் தமிழர் அடங்குவரர். இலங்கையிலிருந்து மேற்படிப்புக்காகத் தமிழர்கள் இங்கிலாந்து சென்று படிப்பை முடித்து அங்கே வேலை செய்து நிரந்தர பதிவுரிமை பெற்றவர்களும், அந்நாட்டில் பிரசைகரராகவும் கணிசமானவர் கள் உள்ளனர்.

அடுத்த பிரிவினர் ஒப்பந்த அடிப்படை யில் வேலை பார்க்க மேற்காசிய நாடுகளில் 1992ல் கணக்கெடுப்பின்படி 1,150,000 இந்தியர் சென்றுள்ளனர், இவர்களில் கணிசமானவர்கள், தமிழர்களாவர். உலகில் 700 இலட்சத்துக்கும் 800 இலட்சத்துக்கும் இடைப்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். இத்தொகையில் 600 இலட்சம் இந்தியாவில் வாழ்கின்றனர். இத்தொகையின ரில் 550 இலட்சம் மட்டில் தமிழ்நாட்டில் வாழ்கின்றார்கள்.

இவ்வளவு பெரும் தொகை கொண்ட தமிழ்ச் சமுதாயம். உலகில் ஒரு பலம் வாய்ந்த சமுதாயமாக தங்கள் மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பேணி வளர்த்து, சுதந்திரமாக வாழ முடியாத நிலை பல நாடுகளில் வாழும் தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பது கண் கூடு. இதற்குக் காரணம், எமது முற்றுமையின்மை எமது அடிமைச்சிந் தனை, எமது பொருளாதார வலிமையின்மை.

உலகிலே பேச்சுவழக்கில் இருக்கின்ற மொழிகளில் 2000 ஆண்டு வரை தமிழ் பதினேழாம் இடத்தில் இருந்தது ஆனால் 2001 ல் பதினெட்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக் கின்றது. (Ethmologue report of 2001) இதற்கான காரணங்களை ஆராயுமிடத்து எமது தமிழ் மக்கள் தங்கள் வீட்டுமொழி தமிழ் என்று கூறுவதற்குப் பதிலாக அநேகர் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு என்று கூறுவது தான். (முக்கியமாக ஆங்கிலம்) இவ்வுண்மையை நான் தென்னாபிரிக்கா மாநாட்டின் பொழுது அறிந்தேன். தென்னாப் பிரிக்காவில் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களின் வீட்டு மொழி ஆங்கிலம் அதே போல் றெயூனியனில்

இருபத்தைந்து இலட்சம் தமிழர்கள் இருக்கின்றனர் அவர்களின் வீடு மொழி பிரெஞ்சு. அதே போன்று மொரேசியஸ், பிஜி, குயானா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களின் வீட்டு மொழி தமிழில் இல்லை நாடுகளிலிருந்தே 15 இலட்சம் தமிழ் மொழிக்கான வாக்குகளை எதீனயோகீ (Ethnologue) அறிக்கையில் இழந்து விட்டோம்.இந்த நிலை அண்மையில் இடம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழரிடமும் காணக் கூடியதாக இருக்கின்றது. கனடா, ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் இப்பிழையை விட்டனர். ஆனால் தற்பொழுது அந்நிலை அனேகமாக மலருகின்றது. எமது இயக்கமும் மற்றும் சில முயக்கங்களும் எடுத்துவரும் முயற்சிகளே இம்மாற்றலுக்குக் காரணம்.

நாம் உலகில் ஒரு பலம் வாய்ந்த சமூகமாக வாழபுவதற்க்கு எமது பொருளாதாரம் வல்வுடைய வேண்டும். இலங்கை, மலேசியா, தென்னாபிரிக்கா, நெறினியன், மொரேயேஸ், பிஜி போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இந்தியாவில் தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களின் நிலைப்பாடு பிரத்தியேகமாக ஆராயப்பட வேண்டும். ஏனென்றால் தமிழருக்கென்று ஒரு அரசாங்கம் இருக்கின்றது. தமிழ் மக்களின் தமிழ் மொழி வவளர்ச்சி அவர்களின் தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம், பொருளாதார மேம்பாடு போன்றவைகளைக் கவனிக்க வேண்டியது தமிழ் நாட்டு அரசின் முக்கிய பொறுப்பு, அத்துடன் நூற்று நாற்பது வருடங்களுக்கு முன் குடியேற்றப்பட்ட தமிழர்களின், மொழி பண்பாடு, கலை, கலாச்சாரம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றிற்க்கும் உதவ வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு, கலை கலாச்சாரம் ஆகியவையை அரசியலுக்கு அப்பாற்பட்டவையாக சகல கட்சிகளும் ஏற்று நடைமுறைப் படுத்த வேண்டும்.

அண்மையில் தமிழோசை சஞ்சிகையில் பெரியார் வே. ஆனைமுத்துவின் கட்டுரையை வாசித்தேன். அவரின் கருத்துப்படி மேல்வர்க்கத்தினர், நடுத்தரவர்க்கத்தினர், கீழ்வர்க்கத்தினர் அனைவரும் ஆங்கில மோகத்தில் அடிமையாகி விட்டனர் என்ற கருத்தை முன் வைத்து இதைத் திருத்துவதென்றால் பல கோடி ரூபாய்க்கள் செலவு செய்து பத்து ஆண்டுகள் நாடாளவிய ரீதியில் பிரச்சாரம் மேற் கொண்டால் மட்டுமே தமிழுக்குள்ள அந்தஸ்த்தை தமிழ் நாட்டில் நிலை நிறுத்த முடியுமென்று கூறியுள்ளன.

தமிழ் நாட்டில் தமிழன் தமிழனாக வாழ வேண்டுமென்றால் தமிழ் நாட்டுத் தமிழ் அரசியல் வாதிகள், தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் பிரமுகர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றினைந்து செயற்பட்டு தமிழுக்குரிய அந்தஸ்த்தை நிலை நிறுத்த வேண்டும். கட்சி அரசியலில் ஈடுபாடில்லாத தமிழ் அறிஞர்கள் கூடி ஒரு மாநாட்டைக் கூட்டி அதற்குச் சகல அரசியல் கட்சித் தலைவர்கள் படத்தயாரிப் பாளர்கள், தமிழ் மாநிலங்களிலுள்ள பிரமுகர்கள் அனைவரையும் கூட்டி கட்சிபேதமின்றி ஆராய்ந்து நடவடிக்கை யெடுத்தால் நிச்சயம் வெற்றி காணலாம் என்று நான் கருதுகிறேன். சான்றோர் பேரவை இப்பணியை மேற் கொள்ளலாம்.

உலகளாவிய ரீதியில் தமிழ் கல்விச் சபையை நாம் உருவாக்கியுள்ளோம். அதன் ஆலோசனைக் குழுவின் தலைவராக டாக்டர் பொன். கோதண்டராமன், சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் இருக்கிறார். பல பல்கலைக்கழங்களின் துணை வேந்தர்கள், பேராசிரியர்கள் அக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஆகவே தமிழ் மொழி நிலைத்து நிற்கவும், தமிழன் உலகில் ஒரு மேம்பட்ட சமுதாயமாக வாழ வேண்டுமென்று நினைப்பவர்கள் யாவரும் கட்சிபேதமினறி செயற்பட்டு வெற்றி காண வேண்டுமென்று அனைத்துத் தமிழ் உள்ளங்களையும் வேண்டுகிறேன்.

★

தமிழ் கூறு நல்லுலகு

- கவிப்பேரரசு வைரமுத்து-

'தமிழ் கூறு நல்லுலகு' என்று இந்தத் தலைப்பு தமிழின் விதைப்பருவத்திலிருந்து, விழுதுப் பருவம்வரை பார்க்கச் சொல்லி என் கண்களைக் கட்டாயப்படுத்துகிறது.

பல நூற்றாண்டுகளின் பரப்பரப்பை என் சின்னப் பேனாவின் சில துளி மையால் ஈரப் படுத்தி விடமுடியும் என்பது சாத்தியமில்லை.

எனினும் இறந்த காலங்களின் மேல் பறந்து ஒரு பறவையின் உச்சிப் பார்வையில் ஒரு ராஜாளியின் உயரத்திற்குப் பறக்கவில்லை யெனினும் ஓர் ஈசல் உயரத்திற்குப் பறந்தேனும் இந்தத் தலைப்பைப் பார்த்துவிட ஆசை.

ஒரு மொழி எத்தனை எழுத்துக்களை உடை யது என்பதோ, அல்லது அந்த மொழிக்கான வார்த்தையின் வயது என்ன என்பதோ உலக சபையில் அதற்குச் சிம்மாசனம் வாங்கித் தராது.

ஒரு நிலக்கரி எத்தனை ஆண்டு பூமியில் புதைந்து கிடந்தது என்பதல்ல கேள்வி.

அது வைரமாக அடர்த்தி அடைந்தி ருக்கிறதா என்பதே கேள்வி.

ஒரு மொழி மனிதனின் கருத்துலகத்திற்குச் செலுத்திய காணிக்கை என்ன? மனிதகுல மேம்பாட்டிற்கு அது சேமித்துத் தந்திருக்கும் சேதி என்ன?

இவைதாம் ஒரு மொழியை எடைப் போட்டுப் பார்ப்பதற்கு ஏற்ற துலாக்கோல்கள்.

நம் தமிழையும் இந்தத் துலாக்கோலில் நிறுத்துப் பார்ப்பதே நீதியும் நேர்மையும் ஆகும்.

சப்தங்களின் எடையைக்கூட நிறுத்துச் சொன்ன தொல்காப்பியம் - மனித மனத்தின் போக்குவரத்திற்குக் கோடு கிழித்துக் கொடுத்த குறள் - மனிதனின் உணர்ச்சிகளைச் சின்ன சின்னச் சிப்பிகளில் சிக்க வைத்துக் காட்டிய சங்க இலக்கியம் - மனக் கசடுகளை வடிகட்டிக் கொடுத்த நீதி நூல்கள் என்னும் சல்லடை இலக்கியங்கள் - கவிதைச் சத்து மிகுந்த காப்பியங்கள் ஆழ்வார்கள் நாயன்மார்களின் ஆனந்த அழுகைகள் - சித்தர்களின் நெருப்புச் சித்தாந்தங்கள் - ஆடம்பரமான பிரபந்தங்கள் - சிருங்காரத்தில் நனைந்தத் தனிப்பாடல்கள் - பழைய இலக்கியங்களைத் திருகித் திசைத் திருப்பிய பாரதியின் எழுத்துகள் - பாரதி தாசனின் வாள் வார்த்தைகள் - புதிதாய்ப் பிறப்பெடுத்த உரைநடை இலக்கியம் - கண்ண தாசன், சுரதா என்னும் தனித் தனிப்பள்ளிகள் - பிரபஞ்சப் பசியோடு பேனாப் பிடித்திருக்கும் புதுக்கவிதைக்காரர்கள் - தமிழ் கூறு நல்லுலகின் பரப்பு இது.

தமிழ்ச்சமுத்திரத்தில் திரும்பத்திரும்ப முக் குளித்த பிறகுதான் முத்துக் குளிக்க முடிகிறது.

தமிழ் இலக்கியத்தின் அடிநாதம் என்னவெனில் தனி மனிதனில் ஆரம்பித்துச் சமூகத்தில் சென்று முடிவதுதான்.

தமிழிலக்கியம் தனிமனிதனைச் சுத்தி கரிக்கும் ஆக்கப் பணியைத் தன் தோள்மேல் போட்டுத் தொண்டாற்றி வந்திருக்கிறது.

திருவள்ளுவன் கூட ஒரு பெரிய ஜன சமூகத்தை முன்னிலைப் படுத்தித் தன் குறளை ஒப்பிக்கவில்லை.

"மனத்துக்கண்மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீல பிற"

"ஒருமைக்கண் தாம் கற்றகல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

"சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் – மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

- இப்படி குறளின் ஒவ்வொரு குரலும் தனி ஒருவனை அல்லது தனி ஒருத்தியை முன் னிலைப் படுத்திதான் ஒரு ஞானியின் அனுபவக் குரலில் பேசுகிறது.

தன்னல மறுப்பும் - பொது நலப் பொறுப்பும் தமிழ் கூறு நல்லுலகம் வலியுறுத்தி வந்த நெறிகள்.

தன்னலம் மட்டுமே செங்கோல் செலுத்தி வந்திருக்குமாயின் இந்த உலக உருண்டை என்றோ உடைந்திருக்கும்.

''புகழெனில் உயிரும் கொடுக்குவர் - பழியெனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி யனைராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே
உண்டா லம்ம இவ்வுலகம்''

வாழ்க்கை என்பது வாழ்வது மட்டும் அன்று; வாழ்விப்பதும் கூட.

சுயநலம் அறுந்துபட்ட மனத்தில் சூது விளையாது.

நட்பு அறமுடையதாய், காதல் அற முடையதாய், இல்லறம் நெறியுடையதாய், சமூகம் ஆரோக்கியமானதாய்த் திகழ வேண்டு மெனில் தனிமனிதன் தன்னலச் சகதியிலிருந்து வெளியேற வேண்டும்.

ஒரு தேசம் படைகளால் ஆளப்படுதல் ஆகாது.

அறத்தினால்தான் ஒரு தேசம் ஆளப் படுதல் வேண்டும்.

படைகள் என்பவை ஒரு நாட்டின் அறம் காக்கும் அரண்கள்! அவ்வளவே.

தமிழன் உலகிற்கு வழங்கிய உன்னதக் கருத்து இது.

''கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகழ் மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்.''

- என்று அரசு நெறிக்குக் கோடு கிழித்துக் கொடுத்திருக்கிறான் தமிழன்.

''வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் தரும்''

பெண் அகக் கடமைகளை ஏற்றுக் கொண்டாலும் சுவர்களுக்குள்ளே அவள் சுருண்டு விடவில்லை.

புறத்திற்கு அகத்திலிருந்து அவள் தன் பங்கை அளித்தாள்.

கொக்குச் சிறகைப் போல் நரைத்த தலையுடைய முதியவள் ஒருத்தி தன் மகன் களத்தில், ''களிறு பொருது மாண்டான்'' எனக் கேட்டுக் கண்ணீர் உகுக்கிறாள்.

அவள் உகுத்த கண்ணீர் சுய சோகத்திற்கோ சொட்டியதெனில் - அன்று;

''ஈன்ற பொழுதினும் பெரிது உவந்து சிந்திய
கண்ணீர்'' அது.

எனவே அது களிப்புக் கண்ணீர்.

சொந்த மகனை இழந்த துக்கம் அவளைத் தொடக் கூட இல்லை.

அழுத கண்ணீர் ஆனந்தக் கண்ணீர் என்பதே அவளது சமூகப் பொறுப்புக்குச் சான்று சொல்கிறது. அதனால்தான் இன்னொரு தமிழச்சி,

''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே''

- என்று பாடினாள்.

பதினெண்கீழ்க் கணக்கிலுள்ள நீதி நூல்களெல்லாம் வெறும் உபதேசங்கள் அல்ல.

வாழ்க்கையில் வழங்கி வந்த வாய் மொழிச் சட்டங்கள்.

இறந்தவனையும், இருப்பவனையும், பிறப்பவனையும் ஒட்டுமொத்தமாகச் சிந்தித்த சிறப்பு தமிழின் கருத்துலகிற்குக் கனம் சேர்ந்திருக்கிறது.

இலக்கியம் படைப்பவன் அல்லது ஒரு சமூகப் பொதுச் சிந்தனையாளன் எல்லோரு டைய சிரிப்பையும் தன் உதடுகளில் சிரித்து விடுகிறான்.

எல்லோருடைய கண்ணீரையும் தன் கண்களால் அழுது விடுகிறான்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் அழுத கதையை நான் அப்படித்தான் புரிந்து கொண்டி ருக்கிறேன்.

அவர்களின் அழுகை பொது அழுகை.

சமூக மேம்பாட்டிற்கு அவர்கள் ஒரு வெளிச்சத்தை நம்பினார்கள்.

தனிமனிதனின் ஆணவமும், அகந்தையும் வேரோடு கிள்ளி எறியப்பட்டுவிட்டால் சமூக மேன்மை சாத்தியமாகும்; அதற்குப் பக்தி மார்க்கமே பாலமாகும் என்றோர் நம்பிக்கை இருந்தது அவர்களுக்கு. காலம் கட்டிக் கொடுத்த பாலம் அது.

அவர்களின் பாதை பிழையாகக் கூட இருக்கலாம்.

ஆனால் அவர்களின் பாட்டு நிஜம்.

அன்பில் அகந்தையைக் கரைத்துவிடு என்ற மெய்யான, மேன்மையான செய்தியின் வெளிப்பாடுதான் பக்திப்பனுவல்கள்.

''வான் கெட்டு
மாருதம் மாய்ந்து
அழல், நீர், மண் கெடினும்
தான் கெட்டலின்றிச்
சலிப் பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உணர்வு கெட்டு என்
உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டேமோ''

- தேனில் நனைந்த திருவாசகம் இது.

தன்னில் தானைக் கரைத்து விடுதல் என்ற தத்துவம் தமிழ் கூறு நல்லுலகம் புவிக்குக் கொடுத்த புதையல்.

தங்கத் தமிழ், போரை ஓர் அறம் எனவும், அது தவிர்க்க இயலாத தர்மம் எனவும் பேசுகிறது.

குழுவினங்களாய்ப் பிரித்து வாழ்ந்த சமூக அமைப்பில்

''ஒருவரை ஒருவர் அடுத்தலும் தொலைதலும்
புதுவதன்று இவ்வுலகத் தியற்கை''

- என்று பாடுவது பாவப் பட்டியலில் சேராதுதான்.

ஆனால், ஒரு பன்னிரண்டு நூற்றாண்டுப் பரிணாமத்தில் போரே இல்லாத ஒரு புது உலகத்தைக் கம்பனின் கற்பனை கனாக் கண்டிருக்கிறது.

போர் புகழை வளர்க்கும் என்று தினவு கொண்டவன் கனவு காண்கிறான். போர் இன்மையே - அமைதியே புகழை வளர்க்கும் என்ற கருத்து கம்பனிடம் கருக் கொள்கிறது.

''யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போரொடுங்கும் புகழொடுங்காது''

- இந்த வரிகள் இந்த அணுகுண்டு யுகத்தில் ஒவ்வொரு தேசமும் தன் நெற்றியில் ஒட்டிக் கொள்ள வேண்டிய நிஜவரிகள்.

உயிர்களை நேசிக்க உணர்ந்து கொள் மனிதனே என்று எம் இலக்கியம் உரத்த குரலில் உலகத்திற்கு ஓதுகிறது.

இந்த அணு ஆயுத வளர்ச்சியில் சில நொடிகளில் பூமி உருண்டையைப் பொசுக்கி விட முடியும்.

சில நிமிட அணுகுண்டு மழையில் மனித குலம் அழுகிவிடக்கூடும்.

சில லட்சம் ஆண்டுகளாகச் சேமிக்கப் பட்ட நாகரிகம் ஒரு தீக்குச்சி உரசப்படும் நேரத்தில் காணாமல் போய்விடும்.

பிரமிடுகளும் தாஜ்மஹாலும் அகழ் வாராய்ச்சிப் புத்தகங்களின் அத்தியாயங்களாகி விடும்.

இந்த யுகத்தில் தான் மனித நேயம் மலர வேண்டும்.

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்!''

- என்றவனும்,

''காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்!''

- என்று பாடியவனும்

''புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''

என்று குரல் கொடுத்தவனும் உலக சமாதானத்தின் தூதுவர்கள் அல்லவா?

தமிழ்கூறு நல்லுலகம் நினைக்கப்பட வேண்டிய நேரம் இதுதான்.

உலக வல்லரசுகளே! உங்கள் ஆயுதக் கிடங்குகளில், சோதனைச் சாலைகளில், பீரங்கிகளின் பீடங்களில், உங்கள் யுத்தக் கப்பல்களின் முதுகுகளில் எங்கள் திருவள்ளுவனின், கம்பனின், எங்கள் பாரதியின் - பாரதிதாசனின் எழுத்துகளை மொழி பெயர்த்து எழுதி வையுங்கள்.

இதயத்தைத் தவிர விஞ்ஞானம் எல்லாவற்றையும் வளர்த்துக் கொண்டிருக்கிறது - அந்த விஞ்ஞானத்திற்கு எங்களின் ஈரக் கொள்கைகள் இதயம்வழங்கட்டும். விஞ்ஞானத்தின் மேல் மனிதன் சவாரி செய்ய வேண்டும். எங்கள் தமிழ் கூறு நல்லுலகு உலகைப் பார்த்து இதையே ஓதிக் கொண்டிருக்கிறது. ★

நடப்பில் இருப்பவை நந்தமிழர் ஆண்டுகளா?

பெரியார்ப் பேருரையாளர் **அ. இறையன்**

சில நாள்களுக்கு முன்பாக விஷு என்னும் தமிழ் வருஷம் முடிவடைந்து சித்ரபானு எனும் தமிழ்வருஷம் பிறந்ததாகக் கூறப்பட்டது.

ஆண்டுப்பிறப்பை யொட்டி, தலைவர்கள் தமிழாண்டுப் பிறந்தநாள் வாழ்த்துகள் வழங்கிப் பெருமிப்பட்டனர் ; தமிழ்க் குடிமக்கள் யாவரும் வாழ்த்து மாற்றங்கள் பண்ணிக் கொண்டு களித்தனர் ; தாய்மார்கள் எத்தனையோ பேர் தத்தம் விருப்பப்படி விருந்து நிகழ்ச்சிக் கொண்டாடினர் ; தொலைக்காட்சி நிறுவனங்கள் - அடடா! - புதுமைகளை அள்ளியள்ளிக் கொட்டின ; தமிழ்த் தாளிகைகள் கவர்ச்சிச் சிறப்பிதழ்கள் படைத்துக் களிக்கின்றனர். ஒவ்வோராண்டும் இசை வாடிக்கையும் நடந்தேறுகின்றன!

இத்தனை ஆர்ப்பாட்டங்கட்கும் அடிப்படையில் அமைந்த இவ்வாண்டுப் பிறப்பு என்பது மெய்யாகவே தமிழினத்துக்கு உரியதா என்பதைப் பொறுப்புணர்ச்சியுடன் கருதி, கலந்தாய்வு நடத்தி, தெளிவான முடிவைத் தமிழுலகத்திற்கு அறிவித்து வழிகாட்டும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் தமிழினவுணர்வாளர்களுக்கு உண்டு.

எடுப்பில் – 'பிரபல என்பதாகத் தொடங்கி அட்சய என்று முடியும் அறுபது ஆண்டுப் பெயர்களும் தமிழ்ப் பெயர்களா?' என்னும் வினாவிற்கு உடனடியாகக் கிடைக்கும் 'இல்லை' எனும் உறுதியான விடையொன்றே தமிழர்க்குக் குற்ற பேரவலத்தைப் பெரிய அளவிற்கு ஒளிவட்டமிட்டுத் தெளிவுறுத்த வல்லது.

தமிழரின் தொன்மை வாய்ந்த பண்பாட்டு வரலாற்றில் மிகமிகப் பிற்காலத்தில்தான் இவ்வாண்டுப் பெயர்கள் திணிக்கப்பட்டிருக்க வேண்டும். பிரபல, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோற்பத்தி, ஆங்கீரசு ஸ்ரீ முக, பவ, யுவ, தவது, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்ரம, விஷு, சித்ரபானு, சுயாது, தாரய, யார்த்திப, விய, சர்வஜித்து, சர்வதாரி, விரோத், விசிர்தி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருழ, சோபிகிருது, குரோழி, விஸ்வா வசு, யரோபவ, பிலவங்க, கீலக, சங்பிய, சாதாரண, விரோதிகிருது, யரிதலபி, பிரமாதிச், ஆனந்த, ராட்சஸ, நள, பிங்கன, காளயுக்தி, சித்தார்த்தி, ரவ்த்ரி, துன்மதி, துந்துபி, உருந்ரோத்காரி, ரத்தங்ச், குரோழன், அட்சய என்பவற்றுள் எந்தவொரு பெயரும் நம்மவர்க்குக் கிட்டிய பழந்தமிழ் இலக்கிய நூல் எதிலேனும் இடம் பெற்றிருக்கிதா என்று தேடினால், கிடையாது என்பதுதான் உறுதியான நிலை.

தமிழ்ப் பண்பாட்டில் சுக்கிலம் (விந்து எனப்படும் நீர்மம்), ராட்சாப (இராக்கதின்), பிலவங்க (குரங்கு), விரோதி (எதிரி), குரோதி (பகைவன்), கீலக (ஏய்ப்பன்), பிங்கள (வஞ்சகன்), விகிர்தி (நோய்), பரிதாபி (துயருறுவோன்), விகாரி (வேறுபட்டவன்) என்றெல்லாம் பெயர் வைத்துக் கொள்ளும். அதுவும் ஆண்டுகட்குப் பெயர் சூட்டிக் கொள்ளும் கிறுக்குப் போக்கிற்கோ கோமாளிப் புன்னகைக்கோ வாய்ப்பு இருந்திருக்கவே முடியாது.

இனி – இவ்வாண்டுப் பெயர்களின் வரலாறு என்ன என்பதைக் கல்லிப்பார்க் கையில் மானமும் நாணமும் தமிழர்தம் உள்ளங்களைக் கவ்விக் கொள்ளுகின்றன.

ஆயிரமாயிரம் இலக்கிய - புராணிக - பண்பாட்டுச் செய்திகளை அள்ளியள்ளி வழங்கும் அரிய படைப்பு 'அபிமான சிந்தாமணி' எனப்படும் கலைக்களஞ்சியம். 1910 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் பதிப்பித்த இத்தொகுப்புநூலின் ஆசிரியர் கற்றுத் துறை ஒழுகிய பேரறிஞர் மயிலை ஆ.சிங்காரவேலு முதலியார் ஆவார். சென்னை உயர்முறை மன்றத் தலைமைத் திறப்பாளர் திரு.சுப்பிரமணிய (அய்யர்), செ.உ.மு. மன்றத் துர்ப்பாளர்கள் திரு. வி. கிருஷ்ணசாமி (அய்யர்), திரு.டி.வி. சேழகிரி (அய்யர்), சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் 'பேர்-புகழ்' வாய்க்கப் பெற்ற திரு. சி.பி. ராமசாமி (அய்யர்), திரு. பி.ஆர். சிச்சாமி (அய்யர்), திரு. கோயில் சாமி (அய்யங்கார்) திரு.டி.ஆர். ராமச்சந்திர (அய்யர்), திரு. வி. திருமலை (பிள்ளை), பி.எம்.சிவஞான (முதலியார்), எஸ். பவானந்தம் (பிள்ளை), திரு. எஸ். ஏ. சண்முகம் (பிள்ளை) போன்ற பல்லோர் இந்நூலைப் பாராட்டியுள்ளனர் என்பதுடன் இந்நூலின் முதற்பதிப்பின் அறிமுகவுரையை எழுதியவர், **"The Tamil's Eighteen Hundred years Ago"** எனும் நூலைப் படைத்தளித்த ஆய்வறிஞர் திரு. வி.கனகசபை (பிள்ளை) எனும் செய்தி குறிக்கத்தகுந்தது.

இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த பட்டாங்கில் உள்ளபடி, 'வருஷம்' என்னும் பொருள்பற்றிய விளக்கவுரையினைக் கூச்சவுணர்வைத் தாண்டி இனக் கவலையுணர்வுடன் ஈங்கு தருகிறேன்.

"வருஷம் - ஒருமுறை நாரத முனிவர் கிருஷ்ண மூர்த்தியை நீர் அறுபதினாயிரம் கோபிகைகளுடன் கூடி இருக்கிறீரே எனக்கு ஒரு கன்னிகை தரலாகாதா என்ன, அதற்குக் கண்ணன் நான் இல்லாப் பெண்ணை பழிக்க என, உடன்பட்டுத்தான் அறுபதினாயிரம் வீடுகளிலும் பார்த்து, இவர் இல்லா வீடு கிடைக்காததத்தினால் கண்ணனிடம் வந்து அவர் திருமேனியில் மயல்கொண்டு அவரை நோக்கி நான் தேவரீரிடம் பெண்ணாய் இருந்து ரமிக்க எண்ணங்கொண்டேன் என்றனர். கண்ணன் யமுனையில் நாதரை ஸ்நானம் செய்ய ஏவ, முனிவர் அவ்வடகை செய்து ஓர் அழகுள்ள பெண்ணாயினர். இவனுடன் கண்ணன் அறுபது வருஷம் கிரீடித்து அறுபது குமாரனைப் பெற்றனர். அவர்கள் பெயர் பிரபப முதல் அட்சய இறுதியானவர்களாம். இவர்கள் வருஷமாம் பழம் பெற்றனர்."

இவ்விளக்கவுரையில் அடங்கியுள்ள செய்திகள் பத்து. இவற்றுள் எந்தச் செய்தியையும் நலம் ஆய்வு பண்ணப் புகாமல், இச்செய்திகள் தமிழ்ப் பண்பாட்டின்பாற் பட்டவையா என்று கேட்டுக் கொண்டாலே போதும். இவற்றுக்கும் தமிழர்க்கும் உறவுப் பொறுத்தம் எதுவும் இருக்க முடியாது ; இருக்கவே முடியாது. அபிமான சிந்தாமணியே "இவர்கள் வருஷமாம் பழம் பெற்றனர்" என்று மட்டுமே கூறுகின்றனரே தவிர, "தமிழ் ஆண்டாகும் நன்னிலை பெற்றனர்" என அறையவில்லை.

எனவே இவை ஆரியப் பண்பாட்டில் தோன்றிய வடமொழிப் பெயர்கள் என்பது தெளிவாகப் புலப்படும் பேருண்மை!.

மொழியின் அடிப்படையில் பார்த்தால் இவ்வாண்டுப் பெயர்கள் தமிழ் மொழிப் பெயர்கள் அன்று என்பதை எவராலும் மறுக்க செய்யுண்ணாது!.

பண்பாட்டின் அடிப்படையில் நோக்கும் போது தமிழினப் பண்பாட்டிற்கு நேர்முரணான ஆரியப் பண்பாட்டில் விளைந்த இவ் வருவருப்புக் கற்பனைகள் நமக்கு ஒவ்வா!

அறிவியல் நோட்ட அடிப்படையில்

பிரான்சு தமிழ்ச்சங்கத் தலைவர் பாரிசு ஜமால் அவர்களின் வாழ்த்து

பேரன்பும், பெருமதிப்பும் மிக்க தமிழ் அறிஞர் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர், உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ முனைவர் வா.மு. சேதுராமன் அவர்களுக்கு, வணக்கம்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற வெள்ளி விழா, ஐந்தாம் உலகத் தமிழ்மாநடு சிறந்தோங்கி செழிப்புடன் நடக்க எங்கள் இதயம் கனிந்த இனிய வாழ்த்துகள்

இம்மாநாட்டின் கருப்பொருளாக "மாறிவரும் உலகை நோக்கித் தமிழ் - தமிழர்" என்ற தலைப்பை தேர்வு செய்துள்ளீர்கள் வளர்ந்து வரும் நவீன உலகில் தமிழும் - தமிழரும் எப்படி வளர வேண்டும் என்ற விழிப்புணர்வை இம்மாநாடு நிச்சயம் ஏற்படுத்தும் நோக்கோடு வெற்றி பெற எம் வாழ்த்துகள் தமிழன்புடன்,

பாரிஸ் ஜமால்
PARIS JAMAL (JAMALUDIN)
Founder President
France Tamil Sangam
18, Rue Clairaut
75017 Paris, France

ஆய்கையில், தொன் வடமொழியாளர் அறுபது ஆண்டுகள் முயன்று முயன்று அறுபது மக்களை மட்டுமே - அதுவும் ஆண் மக்களை மட்டுமே - ஈன்றெடுக்க வல்லவர்களாய் இருந்தனர் என்பதால், அறுபது ஆண்டுகட்கு மேற்பட்ட கண்க்கீடுகள் பண்ணப்படும் வேளைகளில், எந்த அறுபதாண்டுக் காலக் கட்டம் என்பதை உறுதிப்படுத்த வேண்டிய அலகுச் சிக்கல் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாய் நிற்கும்!

மனுவாந்தே யுகங்களையும் கல்பங்களையும் குறித்து நாம் எழுப்பும் அய்யங்கட்கு விடையளிக்க வியலாமல் வடமொழியாளர்கள் திணறித் திண்டாடுவது கண்கூடு.

இவ்வாறு மொழி, பண்பாடு, ஆய்வறிவு என்பதெதற்கும் ஒவ்வாத இவ்வாண்டுப் பெயர்கள் (மொழினத்திற்குரிய ஆண்டுகளாக இனியும் தொடர்ந்து நீடிக்கத்தான் வேண்டுமா?

தைத்திங்கள் முதலாம் நாள்தான் தமிழர்தம் ஆண்டுப் பிறப்பாகும் எனும் நன்னிலை தோன்றவே தோன்றாதா?

தன்மானம், இனமானம், மொழிமானம் என்பவை தமிழரின் வாயுதிர்க்கும் வெற்றுச் சொற்களாகவே இருக்க வேண்டியதுமானா?

"நடப்பில் இருப்பவை நந்தமிழர் ஆண்டுகள் அல்லவே அல்ல" என்பதைத் தீர்மானித்து, அவ்வாறே அனைத்துலகிற்கும் பறைசாற்றி, நம் தமிழ் மானத்தை நிலையூன்றுவோமாக!

★



பன்னாட்டுத் தமிழுறவு மன்ற ஐரோப்பியப் பன்னாட்டுக் குழு உறுப்பினர் தமிழ்ப்பணிச் செம்மல் துரை கணேசலிங்கம் அவர்களின்

வாழ்த்து

உலகத் தமிழ் மாநாடுகளே உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம், தமிழ்ப் பணிச்செம்மல் துரை. கணேசலிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

உலகில் வாழுகின்ற தமிழர்களின் செந் தமிழும் நறுந்தமிழும் வீறுகொண்டு பெறும் நோக்குடன் பன்னாட்டு தமிழ் உறவு மன்றத்தின் வெள்ளி விழா மாநாடு உலகில் முதன் முதலாய் தமிழ் மொழி ஆராய்ச்சிக்குச் சங்கம் அமைந்த மதுரையில் நடைபெறுவதை முன்னிட்டு பூரிப்படைகின்றேன்.

தாய்த் தமிழகமும், சேய்த் தமிழ் ஈழமும் இழந்த மண்ணை மீட்கவேண்டும். இவை தமிழ் நாடுகளாக ஆக்கப்பட வேண்டும். அனைத்துலகத் தமிழர்களுக்கு இடையில் ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் வெள்ளி விழா மாநாட்டில் உருவாக்கப்பட தமிழர்கள் வரலாற்றை எடுத்தியம்பும் உலகத்தமிழர் கொடி இவ்வெள்ளிவிழா மாநாட்டில் மதுரையில் ஏற்றப்பட வுள்ளது தமிழர்களின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் செயலாகும்.

அத்துடன் தமிழ் நிலங்களுக்கு வெளியே வாழும் தமிழர்கள். தாய் தமிழ் உணர்வுக்குள் கொண்டு வர பல திட்டங்களை வழி வகுக்க இம்மாநாடு வழி செய்வதுடன் மலரப்போகும் தமிழ் ஈழத்தில் முச்சங்கத்தின் மறுபிறப்பு நிச்சயம் நிகழும் என்று தமிழ் உலகிற்குப் பறை சாற்றும் அரங்கமாக இம்மாநாடு திகழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

வா முத்தே சேர் தமிழை என்றா
வா மு சே என்றான் உந்தை
வா முன்னே என்றணைந்தாள் தமிழுக்கு
வா தாவுன்னை என்றா? சேதுமதி

தந்தாளத் தமிழன்னை உனையெமக்கு
வந்தாய்நீ! தமிழகத்தில் தமிழ்க்கவியாய்
கண்டாய் தமிழ்வாழத் தமிழர் வாழ
பன்னாட்டுத் தமிழுறவு மன்றந்தன்னை
சென்றாய் அகிலமெங்கும் செந்தமிழைச்
சொன்னாய் செகத்தாரோ வியந்தேத்த

பூங்குன்றன் சொன்ன தமிழ்சொல்லி
பூங்காவாய் உலகிற்கு மனிதநேயம்
புகன்றதமிழ் நாட்டினத்தின் புகழாவொன்றும்
பொன்றாத பெருவீரம் பொலியச் சொல்லி
பொற்புடைய சான்றாண்மை வீரஞ்சொல்லி
முதுமொழியின் பொருள்சொல்லிப்
பெருமைசொல்லி
முதல்மனிதக் குமரிசொல்லி முதுமைசொல்லி

நந்தாத மொழியுண்டோ தமிழையென்று
தக்கபடி உலகவலம் வந்துசொல்லி
பாரெல்லாம் தமிழ்மணக்க ஏறாய்நின்று
பன்னாட்டுத் தமிழுறவுப் படையினோடு
பாவாண்ட தமிழா! நீ! வா மு சேயே!
வெள்ளிவிழா உன்னுறவு மன்றங்காண
வெள்ளந்தி பொழுதாகி தமிழ்வானில்
வெல்கதமிழ்ப் பாவாலே! வேளே! வாளே!

உன்படையில் நானொருத்தன்
பெருமையோடு
இருக்கின்றேன் தமிழ்ப்போரில்
தோள்கொடுக்க
நல்லதமிழ் வாள் தா! நீ! வலிவெனக்கு
இல்லையோ நீயிருக்கும் வரையுலகில்.

தமிழன்
துரை. கணேசலிங்கம்

தமிழரின் கல்விச் சிந்தனைகள்

முத்தமிழ் வித்தகர் அ.பொ.செல்லையா - இலங்கை

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வம். அதற்கு ஈடான சிறந்த செல்வம் வேறெதுவும் இல்லை. கல்வி ஒரு குமுகாயத்தின் உயிர் அது ஒரு சந்ததியிலிருந்து அடுத்ததற்குக் கடத்தப் படுவதாகும்.

பகைவர்களால் அழிக்க முடியாத உள் கோட்டை அறிவு; பகையால் அழிவு வராமல் பாதுகாக்கும் அரண் அது.

உண்மையான பல்கலைக்கழகம் என்பது இன்றைய நாளில் புத்தகங்களின் ஒரு சேகரிப்பாகும்.

ஒரு போரின் வெற்றி என்பது, அதன் போர் வீரர்கள் அவர்களின் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பெற்ற பயிற்சியாகும். அது போலவே, ஒரு நிறுவனத்தின் உயர்ச்சி நிர்வாக பொறுப்பாளரின் அறிவாற்றலின் தங்கியுள்ளது.

இவற்றை நன்கு அறிந்திருந்தனர் தமிழர்கள். தனி மனித வாழ்வை மட்டுமல்ல, நாட்டின் வாழ்வையும் உயர்த்துவது கல்வி என்பதைத் தெரிந்திரந்தனர். கல்வியின் இன்றியமையாமையைத் தமிழர்கள் நன்குணர்ந்திருந்தனர் தமிழர்களின் கல்விச் சிந்தனைகள் வியக்கத் தக்கனவாகும்.

சங்க காலத்தில் ஐந்நூறுக்கும் அதிகமான புலவர்கள் வாழ்ந்துள்ளனர். அதில் அரசர், பெண்டிர் உட்படப் பல் குடிப் பிறப்பாளர் பலரும் இருந்துள்ளனர். முப்பதிற்கும் அதிகமான பெண் புலவர்கள் சிறந்துள்ளனர், கவி பாடும் திறம் இல்லாவிடினும் கல்வியில் வல்ல நன் மக்கள் மிகதியாக இருந்துள்ளனர்.

அரசு பள்ளிகள் நடத்தியதாக அறிய முடியவில்லை. மரத்தடியும், ஆசிரியர் வீடும், ஊர் அம்பலமும் பேபான்று தனியார் திண்ணைப் பள்ளிகளாகவே காணப்படுகின்றன பாலாசிரியர், ஆசிரியர் எனப் புலவர்கள் அழைக்கப் பட்டனர். கணக்காயனார், பேராசிரியர் உயர் கல்வியாசிரியர் எனக் கருதப்பட்டனர்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கருதிக் கற்பிக்கப் பட்டன. எண்ணென்பது கணக்கையும் எழுத்தென்பது ஏனையவற்றையும் குறித்தது, வாயினால் வகுத்த பக்கம் ஏட்டுக் கல்வியும், கையினால் வகத்த பக்கம் தொழிற் கல்வியுமெனத் தொல்காப்பியர் கல்வியைப் பிரித்துக் காட்டுவர். எண் என்பது எண்ணுவதை - சிந்திப்பதைக் குறித்தலுமாகும் என்றுங் கூறுவர்.

பனையோலை அன்று ஏடாகப் பயன்பட்டது. எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதினர். இன்றைய தாள். (பேப்பர்) கடைபோல அன்று ஓலைக்கடை இருந்தது.

'இளமையில் கல்' எனினும் 'கல்விக்கு வயதில்லை' என்றே கொண்டனர் 'கல்விக்குக் கரையில்' என்பதுபோல, 'கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு' எனக் கருதினர், மக்களைக் கல்லா வளரவிடல் தீது' எனவும் கூறினர்.

கல்வி - எற்றத் தாழ்வை, சாதி, சமய மொழி வேறு பாட்டைக்களையும் கருவி எனக் கருதினர். கற்றவனைத் தாய் பிறரினும் விரும்புவாள், அறிவுடையோன் வழியில் அரசு செல்லும், மூத்தான் வருக என்னாது, கற்றோன் வருக என்ற நிலைகளால் கல்வியின் பெரு நிலையை அறியலாம்.

திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை எனப் பல அதிகாரங்களால் கல்வியின் பெருமையை வலியுறுத்தியுள்ளார். கற்றகூன்கது 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பர் பூங்குன்றனார். நாலடியார் கூட, 'கல்வி அழகே அழகு' என்றும் 'கற்றவரைத் தலை நிலத்து வைப்பர்' எனவும் கூறுகிறது.

'கற்றபின் வாய்த்த பபிறபப்பில்லை; 'கல்லாமை குலனையும் குடியையும் கொல்லும்,' 'கல்லா ஒருவனுக்கு அவன் சொல்லே கூற்றாக அமையும்' என்கிறது நான்மணிக் கடிகை.

இனியவை நாற்பது, 'பிச்சை புக்காயினும் கற்றல் மிகவினிதே' எனத் திரிகடுகமோ 'கரைக் காயர் இல்லாத ஊரால் நன்மை இல்லை,' 'சீலம் இனிதுடைய ஆசான் உலகம் எனப்படுவான்' எனக் கூறுகிறது.

'ஆசிரியன் என்பான் ஐங்குரரவரில் ஒருவனாவான் இது சிறுபஞ்சமூலம்.

இன்னும் எத்தனை? அத்தனையும் உண்டு கல்விபற்றி. காட்டப்பட்ட சான்றுகள் தமிழர்

கல்வியின் பெருமை, கற்பவரின் இயல்பு, கற்றார் ஒழுக வேண்டிய முறை ஆகியவற்றைத் தெரிந்து வைத்திருந்தனர் என்பதைத் தெரிவிக்கின்றன.

'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' என்பதால் கல்வியைத் தருதல் தந்தையின் தலையாய கடமை என்றாகிறது.

இன்று கல்வி என்பது உத்தியோகம் பெற்று, வயிறு கழுவுவதற்கு உரியதாகிறது. ஆனால், பண்டைத் தமிழர் அறியாத ஒன்று இது. அவர்கள் கல்வியை, பண்பாட்டை வளர்த்து, அறிவுடன் வாழ வழிவகுக்கும மருந்தாகவே கருதினர்.

எழுத்துக்களுக்கென எட்டுத்தொகை, பத்துப் பாட்டு பதினெண் கீழ்க்கணக்கு என நூல்கள் பல இருந்தன. மூவாயிரம் ஆண்டுகட்குமுன் எழுதப் பட்டதாகத் தொல்காப்பியம் எனம் இலக்கண நூல் இருக்கிறது. இலக்கண நூலுக்குமுன் பல இலக் கிய நூல்கள் ஈரந்திருக்க வேண்டும். அகத் தியம் என ஓர் இலக்கண நூல் தொல்காப்பியத் திற்குமுன் இருந்ததாகச் சொல்வர். மேலும், பல நூல்கள் முதலாம் இரண்டாம் சங்ககால கடல்கேகாளில் அழிந்துள்ளன. சமயப் போரில் பல நூல்கள் நீரிலும் நெருப்பிலும் இட்டு அழிக் கப்பட்டுள்ளன உள் நாட்டு வெளிநாட்டுப் போர் களினால் பலஅரிய நூல்கள் அழித்தொழிக்கப் பட்டன.

கடைச் சங்ககால நூலாயினும் திருக்குறள் ஒரு உலகப் பொதுமறையாக விளங்குகிறது. திருவள்ளுவர் தோன்றி இன்று 2033 ஆண்டுகள் ஆகின்றது. நூற்றுக்கு மேலான உலக மொழி களில் மொழி பெயர்க்கப்படுகிறது.

எழுத்துக்களுக்கு உள்ளது போலவே எண் களுக்கு நூல்கள் இருந்துள்ளன. ஒன்று, முதல் கோடியீரு எண்ண அறிந்துருந்தனர். பேரெண் களை, பின்னங்கள் குறிக்கச் சொற்கள் இருந் துள்ளன.

அளவுகளும் நாழி, தூணி என அறியப் பட் டிருந்தன. எண்ணும் எழுத்தும் தவிர வானியல், மருத்துவ இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம், வத்து முதலிய நுண்கலைக் கல்வியும் கற்றுள்ளனர்.

கொபனிக்கங் போன்ற மேலைநாட்டு வான வியலாளர் அண்மைக் காலத்தில் வானத்தைப் பார்க்குமுன் சூரியன், சந்திரன், பூமி மற்றும் கிரகங்களின் நிலைகளை வைத்து ஆண்டு நாட்காட்டியை உலகுக்கித் தந்தவன் தமிழன்.

சித்த மருத்துவமா அலோபதியா என எதிரும் புதிருமாக பேசும் அளவுக்கு மருத்துவம் கண்டவன்.

இசையுலகில் இசையோடு வாழ்பவன், வீணைக் கொடியை இலச்சினையாகக் கொண்ட வன், யாழ்ப்பாணர்க்கு யாழ்ப்பாணத்தைப் பரி சாகக் கொடுத்தவன், இணையில்லா நாதசுவரத் தைக் கொண்டவன், துள்ளலிசைக்குப் பறை மேளத்தைக் வைத்திருப்பவன் கொட்டும் முரசத்தில் செய்தி கேட்பவன். இன்னோரன்ன இணையில்லா இசைச் செல்வத்தைப் பெற்ற வன் பண்டைய தமிழன்.

சித்தனவாசல் ஓவியம், கோயிற் சிற்பங் கள், கோயிற் கட்டடங்கள் உலகிற் சிறந்தன வாகும். தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இடான கட்டிடமே உலகில் இல்லை. ரோமர்களின் நாடக அரங்குகளைவிட சிறப்பான நாடக, நடன, அரங்குகள் இருந்ததை சிலப்பதிகாரம், மணி மேகலை காட்டுகின்றன.

சங்க காலத்திற்குப் பிந்தியவை என்றா லும் தேவார, திருவாசக, பிரபந்த நூல்கள் பக்தி நூல்களாகும். பன்னிரு திருமுறைகள் யாவும் இனிய சுந்தரத் தமிழால் ஆனவை. திருவாச கத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உரு காதார் என்றனர்.

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத உலகத் தமிழ் அறிஞர்கள் தமிழ் நூல்களை ஆங்கி அறிஞர் சேக்ஸ்பியரின் நால்களோடு ஆய்வு நடத்தியுள்ளனர்.

தமிழ் மொழியின் பால் மிகுந்த காதல் உள்ளவர்களாக வேற்று மொழியாளர்கள் இருக் கின்றனர். ஆங்கிலேயர், ஜப்பானியர் தமிழை விரும்பிக் கற்கின்றனர் ருருசியரர், பிரான்சிய், ஜெர்மனியர் போன்றோர் தமிழாராய்ச்சி மாநாடு களில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

காரணம், நம் தமிழ்ச் சங்ககாலல நூல்களி லுள்ள கலக்வித் தத்துவம் ஈடும் எடுப்பும் இல் லாத ஒன்றாக இருந்தது என்பது தெளிவாகிறது.

★

மாணடி

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

திருக்குறள் ''தமிழ்மறை'' என்று போற்றக் கூடிய சிறப்பிற்குரியது. ''மேல்வழி உணர்த்தி கீழ்மை விலக்கும் நல்வேதம்'' என்று கூறினார் முருகதாச அடிகள். அத்தகைய திருக்குறள் நம் வாழ்வோடு இயைந்தது. உயிர் நலம் பெறவும், உடல் நலம் பெறவும், உளம் நலம் பெறவும் அமைகின்ற பலல கருத்துக்களை வழங்குகின்ற பெருமையுடையது. வாழ்வியல் முறைகளை யும் மனிதன் மனிதனாக, மாமனிதனாக வாழ்ந்து தெய்வத்தோடு ஒப்ப விளங்குகின்ற திறமையையும், ''வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' வாய்மையையும் நமக்கு தருவதற்கு உரிய நூலாக விளங்குகின்றது.

குறள்நெறியில் வாழ்க்கைக்குத் தேவை யான அனைத்தும் அடங்கி இருப்பதைக் காண முடியும். காலம் கடந்து நிற்கின்ற பெருமைக் கரியது நம் பொதுமறை. இத்தகைய சிறப்பிற் குரிய குறள்நெறியை மக்கள் ஆய்ந்து அறிந்து அதன் வழி நிற்பது மிகவும் இன்றியமையாதது. பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவைப் பெற் றவன் மனிதன். தான் அறிந்து கொள்ள வேண்டிய வற்றைப் புலன்களாலும், பொறிகளாலும் அறிந்து அதனை நுகர்வுடையதாக மாற்றுகின்ற பெருமைக்குரியவன்.

திருக்குறள், உலகியல் நெறியையும், அருளியல் நெறியையும் எடுத்துக் கூறுகின்ற வகையில் அமைந்துள்ளது. தம் நூலில் கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் முதலில், ''அகர முதல எழுத்தெல்லாம்'' என்கின்றார். 'அ' என்கின்ற எழுத்து வாய் அங்காத்தலின் போது வெளியே வருகின்ற சிறப்பை உடையது. அதுபோலவே உலகத் தோற்றம் இறைவனை முதன்மையாகக் கொண்டது. எழுத்தை அறிவதன் மூலம் அறிவைப் பெறுகின்றோம். எழுத்து அறிந்து வாழ்கின்ற வாழ்க்கை தாழ்வினை நீக்கி உயர்வினைப் பெற வழிவகுக்கும்.

அறிவு பற்றிக் கூறும்போது, அறிவின் சிறப்பினைக் கூற வந்த வள்ளுவனார், ''மனத் துக்கண் மாசிலன் ஆதல்'' என்று தூய அறிவின் திறத்தை அழகாகக் காட்டுகின்றார். மேலும் அறிவு உருவாவதற்கு, அறிவை வளமாக்கு வதற்கு, அறிவை திறம்படுத்துவதற்கு தேவை யானதாக இருப்பது கல்வி.

கல்வியின் சிறப்பைக் கூறும்போது அறிவு என்பதனையும் பற்றிக் கூறிவிட்டு, பின் அந்த அறிவு ஒருவனுக்கு புல்லறவாகவோ, காரறி வாகவோ மாறாமல் பேரறிவாக, மெய்யறிவாக திகழ்கின்ற வகையில் விளங்குகின்ற ஒரு கல்வியைப் பெறுவதற்கு துணையாக இருப்பது கடவுள் சிந்தனை என்று கூறுகின்றார்.

பொதுமறையின் இரண்டாம் குறளில் கூறும் போது, ''கற்றதனால் ஆய பயன் என்கோல்''? என்று ஒரு கேள்வியைக் கேட்டு, கற்கின்றீர்கள், கற்கின்றதனால் பயன் என்ன என்று கேட்டால் வாலறிவன் நற்றாளை தொழ வேண்டும். எனவே அறிவின் உருவாய் விளங் கும் இறைவனின் நற்றாளகளைத் தொழ வேண் டும், என்கின்றார். திருமுறைகள் வணங்கும் முறை பற்றிக் கூறும் போது ''தூமலர் தூவித் தொழுது'' என்று சிறப்பாகச் சொல்லும் அப் படிப்பட்ட தொழுதலைச் செய்கின்ற வாழ்க்கை உயர்வான வாழ்க்கை. எனவே கல்வியினுடைய பயன் இறைவனுடைய திருவடிகளைத் தொழு வதுதான். இவ்வாறு வணங்குவதால் உளம் செம்மையுறும் செம்மையுடைய உள்ளத்தில் இறைவன் எழுந்தருளுவான்.

இறைவனைப் புறத்தே காண்கின்ற காட்சி யாக வைத்துக் கொள்ளுதல் மட்டுமல்லாது, அகத்தே நிலைபெறச் செய்கின்ற காட்சியாக அமைத்துக் கொள்ளுதல் தேவை. நெஞ்சம் ஒரு சிறந்த மென்மை கொண்ட மலராக மலர வேண்டும். மலர்ச்சிக்கு உரியதாக அறிவு துணை புரிய வேண்டும். நெஞ்சமாகிய மலரிடத்தே இறைவன் எழுந்தருளுவான். இறைவனின் திரு வடியை அடைந்த அடியார்களின் உள்ளங்களில் இமைப்பெழுதும் நீங்காமல் இருக்கிறான் என் பதை பொய்யாமொழியார் அழகாகச் சித்தரித் துக் காட்டுகின்றார். எனவே இதைத்தான் நமது திருமுறைகள் 2நெஞ்சம் உனக்கே இடமாக வைத்தேன்' என்று குறிப்பிடுகின்றன.

நெஞ்சில் நிறுத்த:

-பேராசிரியர் டாக்டர் ந.வேலுசாமி



இனிமை - மூன்றெழுத்து;
தமிழ் - மூன்றெழுத்து;
உறவு - மூன்றெழுத்து;

இனிய தமிழ் உறவை, உலக நாடுகளில் வாழும் தமிழர்களிடையே பரிமாற்றம் செய்துகொண்டு ஒருவருக்கொருவர் ஒத்திசைவாக வாழ சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பெற்ற சர்வதேசத் தமிழ் அமைப்புத்தான் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்.

தமிழின்பேரால் உலகளாவிய அமைப்புக்கள் பல தோன்றியிருந்தாலும், இந்த அமைப்பு மட்டும் தொடர்ந்து வாழக் காரணம், உயிர்நாடியான மிதமிஞ்சிய தமிழுணர்வே ஆகும்.

தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழர் தொடர்பான விழாக்கள், வாழ்முறை, உணவுமுறை போன்ற இன்னோரன்ன தமிழ்க் கூறுகள், உலகநாடுகளிடையே வாழும் தமிழ்மக்களிடையே மங்காமல் மறையாமல் காப்பதற்கும், தமிழர்களின் தலை நிமிர்ந்த வாழ்வுக்குப் பாதுகாப்பும், உத்தரவாதமும் அளிக்கப் பிறந்தது இந்த அமைப்பு.

உலகத் தமிழர் பல்கலைக்கழகம், உலகத் தமிழர் வங்கி போன்ற குறிக்கோள்களை வென்றெடுக்க இந்த வெள்ளிவிழா மாநாடு ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை நிரல் படுத்தி விவாதிக்கும், விவாதிக்க வேண்டும்.

அப்போதுதான் மிகவும் இன்னல்பட்டு ஒருங்கிணைந்து நடக்கும் இந்த மாநாடு வெற்றிபெற்றதாக அமையும். அப்போதுதான் ப்னானட்டுத் தமிழுறவு மன்றம் மேலும் பலப்படும். அதைப் பலப்படுத்துதவது உலகத் தமிழர்களின் கடமை என்பதை நெஞ்சில் நிறுத்துவோம்.

★

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்''

இந்த வைர அடிகளில் ''மலர்மிசை ஏகினான்'' என்பது இங்கு நெஞ்சத்தைக் குறிப்பதாகப் பொருள்படும்.

இங்கு ''மாணடி'' என்று குறிப்பிடுவதன் காரணம் இறைவனுடைய திருவடிகளை வணங்க நினைப்பவர்கள் உயர்நலத்தை பெறுகின்றார்கள். மதிநலம் உடையவராக வாழ்கின்ற வாழ்க்கையைப் பெறுவார்கள். ஆதலினால் அப்படி மதிநலம் நிறைந்த வாழ்க்கையைப் பெறுவதற்கு உயரிய திருவடியை வணங்க வேண்டும் என்பதனை உணர்த்த ''மாணடி'' என்று குறிப்பிட்டார். எனவே நெஞ்சமாகிய இறைவன், தாமரையிலே வீற்றிருந்தால் நாம் நற்செயல்களையும், நற்குணங்களையும் உடையவராக வாழ்வதற்கு அந்த திருவடிகள் துணைபுரியும் என்பதினால் ''மாணடி'' என்று கூறுகிறார் என்று கொள்ளலாம்.

''விருப்பு, வெறுப்பற்ற வாழ்க்கை உயர்ந்தது'' என்பதற்கு சமய நூல்கள் பலவாக சிறப்புக்களை எடுத்துச் சொல்லும், சாந்தலிங்கரும் கூறும் போது, ''சந்தனம் பூசினாலும் அல்லது அழுக்குகளை பூசினாலும் இரண்டிற்கும் ஒரே தன்மையுடையதாக வாழ்வது என்பார். அத்தகைய வாழ்க்கை சமநிலை என்று பேசப்படும். ''செத்தினும் போழினும் செஞ்சாந்து எறியிலும் வைத்து ஓடாத மனநிலை'', என்றும் சான்றோர் குறிப்பிடுவார். சான்றோர் அப்படி வாழ்கின்ற வாழ்க்கையைப் பெறுவது இறைவனது திருவடியை வணங்குவதன் மூலமாக எய்தும், என்று வாழ்ந்து காட்டி நமக்கு சான்றாக்கிச் சென்றுள்ளனர்.

மனிதன் அறிவுடையவனாய், நெஞ்சத்தால் நெகிழ்வுடையவனாய் வாழ்கின்ற தன்மையைப் பெறுவதற்கு இறைவனுடைய ''மாணடி சேர்தல்'' என்று கூறினார். இறைவனின் திருவடியோடு நம் வாழ்வையும் இணைத்துக் கொள்வது என்பது இதன் பொருள். ★

வினைத்தூய்மை

தவத்திரு மருதாசல அடிகளார்

வினையென்பது எங்கோ யாரோ அல்லது இறைவனோ நம்மீது புகுத்துவதாக எண்ணு கிறோம். ஒவ்வொரு மனிதனுடைய பண்பு, குணநலனும் ஆளுமைப்பண்பும் அவனுடைய செயல்சார்ந்தே அமையும் இச்செயல்கள் எழுவதற்கு காரணமாக அமைவது மொழியும் எண்ணங்களுமாகும். மொழிகளில் இனியவை கூறல், இன்னாக்கூறாமை, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாமை போன்றவற்றை மேற் கொண்டு செயல்கள் ஆற்றினால் அச்செயல்கள் நன்மை தரக்கூடியதாக அமையும். இவ்வற்றிக்கு காரணம் எதுவென ஆய்ந்தால் நம்முடைய எண்ணமே அடிப்படையாக அமையும்.

ஒரு சிற்றூறில் ஒரு மனிதன் மரம் நட்டுக்கொண்டிருந்தான். ஒரு வழிபோக்கன் அருகில் சென்று என்ன மரம் நட்டுகிறாய் என்று கேட்டான். அதற்கு அவன் எனக்கு நிறைய மாம்பழங்கள் தேவையாக உள்ளன ஆகவே இம்மரத்தை நட்டுகின்றேன் என்றான். ஆனால் அவன் நட்டுவதற்காக வைத்திருந்தது எட்டி மரத்தினுடைய நாற்று. அதற்கு வழிபோக்கன் எட்டி மரத்தை நட்டு மாங்கனிகளை பறிக்க முடியுமா? என்று கேட்டு அவனடைய அறிவற்ற செயலை சுட்டிக்காட்டினான். இன்று நம்மில் பலருடைய செயல் மேற்சொன்ன மரம் நடு பவனுடைய செயல்போலத்தான். எவ்வாறெ னில் எட்டி மரத்தை போன்ற கசப்புடைய தீவினை களைச் செய்கிறோம். ஆனால் மாங்கனிகளைப் போன்ற நல்வினைப் பயன்களை எதிர்பார்க் கிறோம். இது அறிவு சார்ந்த செயல் அல்ல. எதைச் செய்கிறோமே அதற்கு தகுந்த பலனே கிடைக்கும்.

ஒரு நல்ல எண்ணம் உண்மை என்ற தன்மையை உருவாக்கும். அந்த உண்மை நல்ல சொற்களைச் சொல்லும் வாய்மையை உரு வாக்கும். அவ்வாய்மை நமது உடலால் செய் கின்ற மெய்மையை உருவாக்கும். இம்மெய்மை வினைத்தூய்மை தனிமனிதனை சார்ந்தது. உலக மென்பது சமுதாய கூட்டு சமுதாயமென்பது தனிமனித திரட்சி. தனிமனிதன் தனது எண்ணம், சொல், செயல்களால் உயரும் போது ஒரு சமுதாயம் உயருகிறது. அப்படி பல சமுதாயங்கள் உயரும்போது உலகு உயர்கிறது. ஆகவே தனிமனிதன் என்ற நிலையில் நம் ஒவ் வொருவருடைய வினையையும் தூய்மை யாக்கிக்கொள்ள வேண்டும்.

வினைத்தூய்மையை எவ்வாறு அறிய முடியும் எனில் நம்முடைய முகத்தின் அழுகை கண்ணாடியில் கண்டுகொள்கிமே். முகம் இருளடைந்தால் கண்ணாடியிலும் இருள் தன்மை படிகிறது. அதுபோல நம்முடைய வினை தூய்மையை பொருத்து நம்முடைய உள்ளம் அமைகிறது.

அவ்வகையில் ஒவ்வொருவரும் அவரவ ருடைய உள்ளத்தை அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அறிந்து கொண்டவர்கள் தத்துவஞானிகள். இதை திருமூலர் தன்னை உணர்ந்த தத்துவஞானி என்கிறார். தன்னை உணர்ந்து கொண்டால் என்ன பயன் எனில் முன்வினையில் செய்த தீயவினைகளை களையலாம் இதை திருமூலர் முன்னைவினை யின் முடிச்சை அவிழ்ப்பான் என்கிறார். முன்வினையில் வினைத்தூய்மை பெற்றவர்.

கடந்தகால அனுபவம், தற்கால சூழ் நிலை, எதிர்கால் விளைவு ஆகிய மூன்றையும் ஆராய்ந்து செயல்படுபவர் இனி வருகின்ற வினையை அழிப்பார். இதை திருமந்திரம் பின்னை வினையை பிடித்துப்பிசைவான் என்கிறது.

இதற்கெல்லாம் துணையாக அமைவது இறைவனுடைய திருவடிகள். இதை அப்பரடி கள் தலைமேலான், வாக்கிலுள்ளான் என்கிறார். இறைவனுடைய திருவடியில் நமது தலை சேரவேண்டும். அபப்படி இறைவனுடைய திருவடியில் நமது தலை வணங்கி விழும் போது நம்முடைய வினையாவும் அழியும் இதை சேக்கிழார் ''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர் தம் சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான்'' என்று அருளினான். தத்துவத்தில் தாடலை என்று ஒரு

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற இயக்குநர்

வா.மு.சே. திருவள்ளுவரின் நோக்க உரை



'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பூங்குன்றனார் பாடிய பாடலுக் கேற்ப உலக அரங்கில் தமிழர்கள் செம்மாந்து வாழ் கின்றனர்!

தமிழர்களின் ஒருங்கிணைவு தமிழுக் கும், உலகளாவிய தமிழர்களின் மேம்பாட்டுக் கும் ஒப்பற்ற மாபெரும் சக்தி என்றால் அது மிகையாகது.

தந்தையார் பெருங்கவிக்கோ அவர்களின் 1977 ஆம் ஆண்டு முதல் தொடங்கிய அயலகப் பயணங்கள் இன்று வரை தமிழ் - தமிழர் உறவுப் பயணங்களாகவே அமைந்து மன்றத் திற்கு பொன்றாத் துணையான பெருமக்களை அரணாகப் பெற்றுள்ளது.

யாங்கள் இதுவரை சாதித்தது அனைத் துமே உலகளாவிய தமிழ்ப் பெருங்குடி மக்க ளின் ஈகமும், அவர்கள் எம் மன்றத்தின்பால் காட்டும் நம்பிக்கையும் ஆகும்.

எண்ணற்ற உலகளாவிய பெருமக்களின் உன்னதமான உறவுக்கு இம்மன்றத்தின் மாநாடுகள் ஊற்றுக் கண்ணாக உள்ளன.

இலக்கியம், தொழில், பயணம், இப்படி இன்னோரன்ன செயல்பாடுகளுக்கு இம் மன்றம் வழிகாட்டுவதில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு மாநாட்டிலும் மாநாட்டு மலர் வெளியிடுவது மரபாகக் கொண்டு எந்நிலையிலும் தொடர்ந்து வெளியிட்டு வருகி றோம். அவ்வகையில் ஐந்தாம் மாநாட்டு மலர் வெளிவருகிறது. பல்வேறு நெருக்கடிகளுக் கிடையில் வெள்ளிவிழா மலர் வரலாற்றுச் சான்றாக இருக்கும் வண்ணம் தொகுத்துள் ளோம். மாநாட்டு மலருக்கு ஒத்துழைப்பு நல் கிய பெருமக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாண்டு, மன்றத்தின் வெள்ளிவிழா ஆண்டு. அடுத்த மாநாட்டிற்குள் மன்றத்தின் 'உலகத் தமிழர் நிறுவனம்' சென்னையில் ஒரு கட்டிடம் அமைக்க உலகளாவிய பெருமக்க ளின் ஆதரவை நாடுகிறோம்.

எம்மின் இனத்தை ஒன்று சேர்க்காமல் இறுதி எமக்கு வராது
எம்மொழி உலகாள வைக்காமல் எங்கள் உயிரோ போகாது

என்ற உலக அமைப்பாளர் நிறுவனர் பெருங்கவிக்கோவின் இலட்சியம் வெற்றி பெற்று வருவதன் அடையாளமே இம் மாநாடாகும்.

தமிழர்கள், உலகளாவிய இனங்களுள் செம்மாந்த பேறுபெற்றவர்கள் என்பதை பறைசாற்றுவோம்

அன்பன்

வா.மு.சே. திருவள்ளுவர்

சொல்லுண்டு அதை தாள் + தலை என்று பிரித்துக் கூறுவோம். தாள் என்பது இறைவ னுடைய திருவடிகள். தலை என்பது மனிதர் களுடையது. அவ்வாறு தாள் என்ற சொல்லோடு தலை என்ற சொல் சென்று சேரும் போது தாடலை என்ற ஒரே சொல் உருவாகிவிடுகிறது. இதையே திருமூலர் திருமந்திரம்.

"தன்னை உணர்ந்த தத்துவ ஞானி
முன்னை வினையின் முடிச்சை அவிழ்பான்
பின்னை வினையை பிடித்துப் பிசைவான்
சென்னியில் வைத்த சிவருளாலே"

என்று அருளுகின்றார். அவ்வகையில் இனிது அமையும் இம்மாநாட்டில் நம்முடைய வினைகள் தூய்மையாகட்டும் எல்லாம் வல்ல இறைதிருவடிகள் நம் சென்னிமீது அருளட்டும்.

கயிலைப்புனிதர், பேரூராதீனம், இளைய பட்டம் தவத்திரு மருதாசல அடிகளார்

★

உலகப்பந்தில் உயர்ந்து நிற்போம்

தமிழ்ச்செம்மல் ச. அமுதன்



தமிழ் நிலத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விளைந்த கருத்து உலகளாவியதாகும். 'உலகம் பெரியதே ; பேணுவர் பலரே' என்றும் சங்கக்காலச் சான்றோனின் கூற்றே சான்றாகும்.

எந்நிலத்தில் வாழ்ந்திடினும் தமிழின், தமிழறத்தின், தமிழ்ப்பண்பாட்டின் வழிவழி மரபுகளையும் பெருமையினையும் பேணி, வாழ்வு முறைகாணுகிற இயற்கை நியதிகளைத் தமிழர்கள் மறவாது காக்குகின்ற உணர்வுகளை வளர்த்தெடுத்து வருகின்ற கடமை தமிழ்ச் சிந்தனையாளர்களுக்கு வேண்டும்.

புவிப்பந்தின் பல முனைகளிலும் வாழ்கிற, வாழ்விடங்களை அமைத்துக் கொண்ட தமிழர்கள் தம் குடும்பத்தினருடன், இளைய தலைமுறையுடன், உருவாகிற சந்ததிகளுடன் தாய்த்தமிழ் மண்ணாம் தமிழகத்தின் தொடர்புகளை கிஞ்சித்தும் விட்டுவிடா வண்ணம் உறவுகள் மலரவேண்டும் ; வலுபெற வேண்டும்.

இதற்கான முயற்சிகள் கடுமையான கேள்விகள் ஆகும். இதனைச் செய்பவர் யாவர்?

பன்னாட்டுத் தமிழுறவில் பெரிதும் அக்கறை கொண்டு, தன்னலம்துறந்த தமிழறிஞர்களே ஆவர்.

தமிழகத்தின் அரசியல்கள் - தட்பவெட்ப மாறுபாடுகளில் ஒய்ந்தும் தீய்ந்தும் போகிற மனிதர்களால் இஃது இயலுமா? எனவே தான்,

'உலகம் பெரிதே ; பேணுவர் பலரே!' என்கிற சங்ககாலச் சிந்தனையும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற உலகப் பொதுமைக் கூற்றும் நெஞ்சங்களில் ஊறியுள்ள தமிழ்ச் சான்றோர்களே இப்பணியினை நிறைவேற்றிட இயலும்.

உலகத்தமிழ்களின் ஒருங்கமைப்பும் உறவின் வலிமையும் அவசியம் தேவை.

உலகிலுள்ள இசுலாமியர்கள் ஒருநிழலில் அமர்கின்றனர். உலகிலுள்ள கிருத்துவர்கள் ஒரு குடையின் கீழ் சேர்கின்றனர்.

ஏன், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள சீக்கியர்கள் தம் மரபின் பெருமைகளை ஒரு கொடியின் கீழ் அணிசேர்க்கின்றனர்.

தமிழர், தமிழினம் தன் பண்டையப் பெருமையினை உலக அரங்கில் சிறப்பாகப் பெற்றிருப்பினும் நாம் மட்டும் ஏன் அவிழ்ந்து சிதறிக்கிடக்கும் நெல்லிக்காய் மூட்டையானோம்?

இஃது கணினியுகம் : வானவூர்தி - வாரத்திற்குள் உலகைச் சுற்றிவரச் செய்து விடுகிறது.

விஞ்ஞானயுகம் பாதை அமைத்துத் தந்துள்ளது.

உலகத்தமிழர்களின் உறவு மேம்பட தெளிவான ஒளி பிறந்துள்ளது.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் இப்பணியில் வெற்றிப் பயணத்தைத் தொடங்கி பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் ஐந்தாவது மாநாட்டினை மதுரையில் கூட்டியுள்ளது.

தாய்த்தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் கால்நடையாக கடும் பயணத்தைப் பன்முறை மேற்கொண்ட மன்றத்தின் அமைப்பாளர், நெறியாளர், இயக்குநர், உலகம் சுற்றிய தமிழர் பெருங்கவிக்கோவின் அயராத உழைப்பில் பன்னாட்டு அறிஞர் பெருமக்களை, தமிழார்வலர்களை, தமிழ்ச் செம்மல்களை மதுரையில் ஐந்து நாட்களில் சந்திக்க அரிய பெரிய வாய்ப்பு இந்த மாநாட்டின் மூலம் கிடைத்துள்ளது.

இது அழகர் பவனி வரும் சித்திரைத் திருவிழா அல்ல. ஆண்டுதோறும் கூடுவதற்கு! பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூவினைப் போல

இப்போது மதுரையில் தமிழாய்ந்த பெருமக்களின் சங்கமம்!

கைகொடுப்போம் பெருங்கவிக்கோவுக்கு!
காலத்தை வெல்வோம் தமிழர்கள் கூடி!
உலகப்பந்தில் உயர்ந்து நிற்போம்!

★



தொண்டு

எம்.என்.எஸ். மணியன்
மேனாள் பொதுச்செயலாளர், தில்லித் தமிழ்ச்சங்கம்

தொண்டு :

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே என்று கூறுகிறது. தமிழர்தம் அறிவியல் நூலாகிய, இலக்கண நூலாகிய, ஈராயிரம் ஆண்டுகாலப் பழைமை உடைத்தாகிய தமிழின் முதல் நூலாகிய தொல்காப்பியம். ஓரறிவு உயிராகிய மரம் செடி கொடி முதல், ஐந்தறிவு உயிராகிய விலங்கு பறவை வரை உயிர் உள்ளனவும் மற்றும் உயிர் இல்லாத உலகத்துப் பொருட்கள் அனைத்தையும் அல்திணை - அல்லாதிணை - அஃறிணை என்று வகைமைப்படுத்திய தொல்காப்பியம் மக்களை மட்டும் "உயர்திணை" என்று வகைமைப் படுத்தியது ஏன்? தமிழ்மொழியே அறிவியல் மொழி, பற்பல உண்மைகளை எடுத்துக்கூறும் மொழி, இயற்கை நெறி அறிந்த மொழி, வாழ்வியலை நன்கு அறிந்த மொழி, வாழ்வை நெறிப்படுத்தும் மொழி. அம்மொழியின் இலக்கணம் தான் தொல்காப்பியம். இதுதான் உண்மை. மற்ற உயிர்களுக்கு இல்லாத சிறப்புத் தன்மையாகிய பகுத்து அறியும் அறிவு மனித இனத்துக்கு மட்டுமே உண்டு. இது மனிதனுக்கு இயற்கை தந்துள்ள உயர்வு. சிங்கத்திற்கு, புலிக்கு, தான் மற்ற உயிர்களை அடித்துக் கொன்று உண்பது தவறான செயல் என்று தெரியாது. அதுதான் இயற்கை. அது அவ்வாறு செய்யவில்லை என்றால் உயிர்வாழ முடியாது. ஆனால் மனிதனுக்கு அது தவறான செயல் என்று தெரியும். ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் தவறு என்று அவனுக்குத் தெரியும். பிறருக்கோ, பிற உயிர்களுக்கோ துன்பம் விளைத்தல் தவறான செயல் என்று தெரியும். பிற உயிர்களுக்குத் தீமை செய்யாமையும், பிற உயிர்களின் துன்பத்தைப் போக்குதலும் நன்மை என்றும் அவனுக்குத் தெரியும்.

இவ்வாறு நல்லது எது, கெட்டது எது என்று பகுத்து அறியும் அறிவைப் பெற்றதால் தான் **மனிதன்** உயர்திணை என்று கூறப்பட்டிருக்கிறான். ஆனால், பகுத்தறியும் அறிவைப் பெற்றதால் மனிதர் என்னும் அடைப்புக்குள் இருப்பவர் எல்லாம் மனிதராகி விடமாட்டார். உருவத்தால் அவர்கள் மனிதராக இருப்பார்கள்.

''மக்களே போல்வர் கயவர்''

என்றார் வள்ளுவர். கயமைத் தன்மை உடையவர் எல்லாம் கயவரே. மற்ற விலங்குகளை அடித்துக் கொல்லும் புலிக்கும், கடித்தாலே இறக்கச்செய்யும் நஞ்சினை உடைய பாம்புக்கும், அடித்து விரட்டினாலும் வளர்த்தவனையே சுற்றிச் சுற்றி வரும் நாய்க்கும் தான் பிறவி எடுத்ததே மனிதர்க்கு உழைக்கத்தான் என்று உழைக்கும் மாட்டுக்கும் உருவத்தில் வேறுபாடு உண்டு. அவற்றைக் காணும் பொழுதே அவற்றின் தன்மையை அறிந்து கொள்ளலாம். ஆனால், உள்ளத்திற்கு ஏற்ற உருவத்தை இயற்கை மனிதர்க்கு அளிக்கவில்லை. கயவரும், நல்லோரும் மனித வடிவில் தான் இருக்கிறார்கள். இவ்வுருவ ஒற்றுமைக்கு அப்பாற்பட்டு அவர்கள் உள்ளத்தை அறியத்தான் 'பகுத்தறிவு' தரப்பட்டுள்ளது.

"இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'' இது ஔவையார் காணும் மனித வேறுபாடுகள். அதே ஔவையார் "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார். புல்லாகிப் பூண்டாகி என்னும் வள்ளலார் வாக்கின்படியும் குரங்கிலிருந்து பிறந்தவன் என்னும் டார்வின் கருத்தின் படியும் பரிணாம வளர்ச்சியின் உச்ச கட்டத்தில் நிற்பவன் மனிதன்.

ஆனால் மனிதராகப் பிறந்து விட்டால் மட்டும் போதாது. தான் பெற்ற பேற்றினை, பெறற்கரிய பேற்றினை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அவன்தான் மனிதன்.

''நந்த வனத்தில் ஓர் ஆண்டி அவன்

நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒருதோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத்தாண்டி''

என்பது தமிழ் மக்கள் அனைவரும் அறிந்தபாடல். அறிந்து என்ன? பெறற்கரிய அப்பேற்றினைப் பெற்றும் பாடலில் கூறப்படுவது போல், உண்டு, உடுத்து கூத்தாடி வாழ்ந்து பிறகு இல்லையாகிப் போவதே பெரும்பாலோர் வாழ்வாக இருக்கிறது

தேடிச் சோறு நிதம் தின்று – பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி – மனம்
வாடித்துன்பம் மிக உழன்று – பிறர்
வாடப் பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி – கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போல – நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ

என்று கேட்டான் பாரதி. அவன் மனிதன். முப்பத்தொன்பது ஆண்டுக்குள்ளேயே நூறாண்டுக்காலம் வாழ்பவர் செய்ய முடியாத செயல்களைச் செய்தான் ; நூற்றுக் கணக்கான ஆண்டுகள் வாழும் மக்கள் தன்னை நினைவு கூரத்தக்க வகையில் வாழ்ந்தான். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழும் சில மனிதரால்தான் உலகம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

உண்டாலம்ம இவ்வுலகம் ....

....

தமக்கு என முயலா தோன்தான்
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ்ப்புலவன் கூறினான். அன்று அவன் கூறியது இன்றும் பொருந்தும் உண்மையாகும்.

'தான், தன் மனைவி, மக்கள்' என்று வாழ்வது கடமை வாழ்வுதான். ஆனால் அத்துடன் தன் வட்டத்தை முடித்துக் கொள்பவர் 'கடுகு' உள்ளம் படைத்தவர் ஆவர். அந்த வட்டத்திற்கு வெளியே வந்து சமுதாயம், நாடு, உலகம் என இயங்குவோரே உண்மை மனிதர் ஆவர்.

"பொருளீட்டுதல் என்பது தம் குடும்பத்திற்காக மட்டுமன்று நட்டோர்க்கு உதவவும், இல்லை என்று வருவோர்க்கு இல்லை என்னாது ஈயவும்" என்னும் கோட்பாட்டினைக் கொண்டிருந்தது சங்கச் சமுதாயம். யாரோ அளித்த பொருளைப் பெற்றுவரும் தமிழ்ப் புலவனும் "நீ விரும்பியோர்க்கும் கொடு, உன்னை விரும்பியோர்க்கும் கொடு. இந்த பொருளை வைத்துக் கொண்டு வளமாக வாழலாம் என்று நினைக்காதே" என்று தன் மனைவிக்குக் கூறினான். "ஈத்துவக்கும் இன்பமே பெரிதென்று" நினைத்தது அக்காலத் தமிழ்ச் சமுதாயம். ஆனால் இன்றோ "சேர்த்து வைக்கும் இன்பமே பெரிதென்று, தனக்கு மட்டுமல்ல, தன் சந்ததியர்க்கும் ஏழேழு பிறவிக்கும் பொருளைச் சேர்த்து வைத்துவிட வேண்டும்" என்று நினைக்கிறது.

தனக்கு உரித்தல்லாத பொருளைப் பெறுபவன், பிச்சைக்காரன், திருடன், பொருளால் எதையும் சாதித்துவிடலாம் என்பது இன்றைய கோட்பாடாக உள்ளது. ஆனால், செல்வம் என்பதே செல்வோம் என்னும் நிலையாமையைக் குறிக்கும் சொல்லாகும். "குஞ்சரம் ஊர்ந்து குடைபிடித்துச் செல்வோரும் ஒரு நாள் அனைத்தையும் இழந்து கையேந்திச் செல்லும் நிலை ஏற்படும்" என்று நாலடியார் கூறுகின்றது. அந்நிலையில், பிறர்க்கு உதவும் செல்வமே நாம் சேர்த்து வைக்கும் செல்வம் என்பது ஆன்மீகக் கருத்தாக உள்ளது. அதனால், தன் செல்வம், உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறர்க்கு ஆக்குபவரே அறவழியில் செல்வோர் ஆவர். "இறைவன் எங்கு வாழ்கிறான் என்பதற்கும், கோயிலில் அல்ல குளத்தில் அல்ல, தூய உள்ளத்தில், பிறர் நலம் காணும் நல்ல உள்ளத்தில்" என்று கூறுவர். அதனால்தான் இறைவன் தொண்டர் உள்ளத்தில் வாழ்கிறான் என அடியவர் பெருமை சொல்லவும் கூடுமோ என்பதன் விரிவாக்கமாக அமைந்துள்ளது பெரிய புராணம்.

தொண்டு செய்வதில் பலவகை உண்டு. இறைவனுக்குத் தொண்டு செய்வது தான் தொண்டு என்பதில்லை. மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகும். கி.வா.ஜகந்நாதன்

ஒருமுறை ஒரு கூட்டத்தில் "தலைமை அஞ்சல் நிலையத்தில் கொண்டு போடும் கடி தங்கள் தெருவில் வைத்திருக்கும் அஞ்சல் பெட்டிகளுக்கு வராது. ஆனால் தெருவில் வைத்திருக்கும் அஞ்சல் பெட்டிகளில் போடப்படும் அனைத்துக் கடிதங்களும் அஞ்சல் நிலையத்திற்குச் சென்று சேர்க்கப்பட்டு விடும். அதுபோல் நீங்கள் மக்களுக்குச் செய்யும் அனைத்துச் சேவையும் இறைவனைச் சென்று அடைந்துவிடும்" என்றார்.

அதுபோல், ஆன்மீக வழி நின்று செய்தாலும், சமூக சேவை என்று செய்தாலும் ஒவ்வொருவரும் தம்மைச் சுற்றியுள்ள மனிதருக்கு தம்மால் இயன்ற நன்மைகளைச் செய்வதே மனிதப்பிறவி எடுத்தன் பயனாகும். ஒவ்வொருவரும் அவ்வப்பொழுது தன் வாழ்வைச் சற்றே பின்நோக்கி "இதுவரை நாம் என்ன செய்துள்ளோம்" என்று அகத்தாய்வு செய்ய வேண்டும்.

எடுத்துக்காட்டிற்காக என்னையே நான் அகத்தாய்வு செய்து உங்கள் முன் வைக்கின்றேன். பொருளாதாரப் பின்னணி கொண்டதல்ல என் குடும்பம். "உப்புக்கும் கூழுக்குமே நான் பாடிக் கொண்டிருந்தால், மக்களைப் பற்றி, உன்னைப் பற்றி நான் பாடுவது எப்போது?" என இறைவியைப் பார்த்து பாரதியார் கேட்டது போல் மனிதனின் அத்தியாவசியத் தேவையான உணவுக்கும், உடைக்கும், இருப்பிடத்திற்குமே போராடிக் கொண்டிருந்த வாழ்க்கைதான். பெற்ற பெண்ணைத் திருமணம் ஆனவுடனே உதறித் தள்ளிவிடும் இக்காலம் போலன்றி சிறுவயதிலேயே தந்தை இழந்த எங்களைத் தாய்மாமன் ஆதரித்தார். அதனால் எல்லோரையும் போல் எங்களுக்கும் அன்பும் ஆதரவுமான குடும்ப வாழ்க்கை இருந்தது. எனினும் சிறுவயதிலேயே பொருள் தேடும் பொருளாதாரச் சூழலும் இருந்தது.

வறுமை என்பதெல்லாம் வாழ்வுக்கே அன்றி மனத்துக்கு அல்ல. துணிவுடன் வாழ்க்கையை எதிர்கொண்டதால் பொதுவாழ்வின் தொடக்கத்திலேயே காலஞ்சென்ற டாக்டர்.சுப்பராயன், பி. ராமமூர்த்தி, கே.டி.கே. தங்கமணி, மோகன் குமார மங்கலம், ஜி.ஏ.வடிவேலு ஆகியோருடன் தொடர்பு கொள்ளும் பேறு கிட்டியது. அவர்கள் தொடர்பும், துணையும் இருந்ததால் தொழிலாளர்களுடைய நலனில் எனக்கு மிகுந்த அக்கறை ஏற்பட்டது. அதன் விளைவாக இளமைக் காலத்திலேயே சேலத்தில் (என் வாழ்விடம் அப்பொழுது சேலமாக இருந்தது) "வறுகடலை தொழிலாளர் சங்கம்", "ஓட்டல் தொழிலாளர் சங்கம்", "சலவைத் தொழிலாளர் சங்கம்", "பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்" எனப் பல தொழிற்சங்கங்களை உருவாக்குவதிலும் விரிவாக்குவதிலும் என் ஈடுபாடு இருந்தது.

1952ல் பழம்பெரும் காங்கிரஸ் தீவிரவாதி டாக்டர். சுப்பராயன் வேட்பாளராகப் போட்டியிட்டார். அவரை எதிர்த்து வேட்பாளராக நிறுத்தப்பட்டவர் பேபி கந்தசாமி அவருக்காக இரவு பகல் உழைத்தேன். அவர் வெற்றியும் பெற்றார்.

இந்தி மொழித்திணிப்பை எதிர்த்த போராட்டங்களில் கலந்து கொண்டேன். திருத்தணியைத் தமிழ் நாட்டுடன் இணைக்க வீரர் ம.பொ.சி. அவர்கள் நடத்திய போராட்டத்திலும் கலந்து கொண்டேன். எங்களை "வேனில்" ஏற்றிக் கொண்டு பலமைல்கள் தூரம் சென்று இறக்கிவிட்டு வந்துவிட்டது அரசு. பசியிலும், வெயிலிலும் வாடி நடந்து வந்தாலும் உள்ளம் துள்ளிக் குதித்து வெற்றிநடை போட்டது.

"குற்றவாளிக் கூண்டிலே நேரு" என்னும் புரட்சிகரமான நூலை எழுதிய, தமிழகத்தின் ஜனதா தளத் தலைவராக உள்ள ஜி.ஏ.வடிவேலு அவர்களுடன் இணைந்து தொழிற்சங்கப் பணியாற்றினேன். அதனால் காவல் துறையினரால் சில துன்பங்கள் ஏற்பட்டன. தடைக்கற்களே தூண்டுகோல்களாக அமைந்தன.

1957ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் மீண்டும் போட்டியிட்டார் டாக்டர் சுப்பராயன். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிரணி வேட்பாளரின் வெற்றிக்காக உழைத்த அவரது மகன் மோகன் குமாரமங்கலத்துடன் சேர்ந்து முனைப்புடன் பணியாற்றியதால் பலவித இன்னல்களுக்கு ஆளாக நேர்ந்தது. எல்லாம் நன்மைக்கே என்பது

போல் இப்போராட்டங்களிலிருந்து சற்றே விடுபட தில்லி பயணித்தேன்.

தில்லி வருவதற்குக் காரணமாக இருந்ததே "தில்லித் தமிழ்ச் சங்கத்தின் மேல் நான் காணாமலே கொண்ட காதல்" ஆகும். 1957ல் தில்லி வந்த பிறகு அன்று முதல் இன்றுவரை இவ்வீடுபாடு தணியவில்லை. அன்று தொடங்கிய என் தமிழ்ச்சங்கப் பணி ஏதேதோ வகையில் தொடர்ந்து 2001 வரை நீடித்தது. நான் சென்னை வந்துவிட்ட போதும் "எங்கிருந்தாலும் வாழ்க" எனத் தமிழ்ச்சங்கத்தை என் உள்ளம் என்றும் வாழ்த்திக் கொண்டுதான் இருக்கும்.

1962 - 67ல் சங்கச் செயற்குழு உறுப்பினராகப் பணியேற்று, சங்கத்திற்கென ஒரு கட்டடம் வேண்டும் என்னும் தீர்மானத்துடன் செயலாற்றினேன். நிலம் வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது முதல் (1072ல் முதற்பகுதி கட்டிடம் அன்றைய முதல்வர் கலைஞரால் திறந்து வைக்கப்படும வரை கட்டடக் குழுவில் அமைப்பாளராகப் பணிபுரிந்தேன். 1982ல் அமைக்கப்பட்ட இரண்டாவது பகுதி கட்டடக் குழுவிலும் இடம் பெற்றுப் பணிபுரிந்தேன்.

இவ்விரு கட்டடக் குழுக்களிலும் பணியாற்றிய அனுபவ முயற்சியாலும், சங்கத்திடம் இருந்த ஈடுபாட்டாலும் 1995-ல் செயலர் பொறுப்பேற்றவுடன் 13 ஆண்டுக் காலமாக முழுமை பெறாமல் இருந்து வந்த கலையரங்கை அரும்பாடு பட்டு அல்லும் பகலும் கண்காணித்து வீட்டு வேலைகள், தொழில் எல்லாம் புறக்கணித்து ஒன்பதே மாதங்களில் கட்டிமுடிக்கும் பேறு பெற்றேன். இதில் பலருடைய ஒத்துழைப்பு எனக்கு முழுமையாகக் கிடைத்தது. நிதிப் பற்றாக்குறையால் சங்கக் கட்டிடத்தின் மேல்தளமும், கலையரங்கமும் விரையில் கட்டி முடிக்க சிண்டிகேட் வங்கித் தலைவரிடம் நிலைமையைத் தக்கவாறு எடுத்துக்கூறி கடனுதவி பெற முடிந்தது. டாக்டர் கலைஞர் அவர்களே கலையரங்கத்தைத் திறந்துவைத்தார். பத்துலட்சம் ரூபாய் நன்கொடையாகவும் அளித்தார். தில்லித் தலைநகரிலேயே தமிழுக்கென ஒரு கலையரங்கம் சீரும் சிறப்புடனும் பிரும்மாண்டமான அளவில் திருவள்ளுவர் பெயரைத் தாங்கி தலைதூக்கி நின்று தமிழரின் பெருமையைப் பறை சாற்றி வருகிறது.

ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பாரதியார் விழாவில் என்னை ஈடுபடுத்திக் கொள்ளாத ஆண்டே இல்லை எனலாம். வையாபுரிப் பிள்ளை, பெ.ந. குப்புசுவாமி அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடினோம். அமரர் கல்கி நூற்றாண்டு விழா மூன்று நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் பொன்விழா வெளியீடாகிய 'வளர் தமிழ்' புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விழாவினை ஒட்டி 'பாவேந்தரின் பன்முகங்கள்' ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன. ஆண்டுதோறும் வெளியிடப்பட்ட "சுடர்" தமிழ் மொழியின் ஒளி விளக்காகத் திகழ்கிறது எனலாம்.

தமிழ்ச் சங்கம் தான் என் உயிர் மூச்சு எனினும் தமிழ் மக்களும் என் வாழக்கையின் அங்கங்கள் தாம்.

1962லிருந்து நண்பர் கிருஷ்ணமூர்த்தியுடன் அவ்வப்பொழுது 'ஷாதரா' என்னும் இடம் சென்று அங்குள்ள தொழுநோயாளிகளுக்கு உணவு, உடை அளித்து வந்தேன். சனிக்கிழமை தோறும் வெல்லிங்டன், சப்தர்ஜங் மருத்துவ மனைகளுக்குச் சென்று ஆதரவற்ற நோயாளிகளைக் கண்டு அவர்களுடன் பேசி விட்டு வருவதில் எனக்கொரு தனி மகிழ்ச்சி. சில ஆண்டுகள் தாம் அவ்வாறு செய்ய முடிந்தது.

தில்லி சென்ற பிறகும் என் தொழிற் சங்கப் பணியை விடவில்லை. 1962 முதல் 1974 வரை, நசுக்கப்பட்டு வரும் தொழிலாளர் நலனை மனத்தில் கொண்டு அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸில் (AITUC) சேர்ந்துப் பணிபுரிந்தேன். அப்பொழுதுதான் தோழர்கள் இந்திரஜித் குப்தா, பூபேஷ்குப்தா, எஸ்.ஏ.டாங்கே சத்தீஸ் லூம்பா, உச்சநீதிமன்ற வழக்குரைஞர் ஏ.எஸ்.ஆர். சாரி, அருணா ஆசப்அலி அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

ஏற்றிடு சூளுரை!

- சாப்டூர் சதுரகிரியான்



இனிக்கின்ற கரும்புமொழி
இருக்கையிலே, எதற்கோடா
ஈனமொழிச் சொற்கலவை?
இனிக்கின்ற கனிகளுடன்
இனிக்காத காய்களையும்
எவரிங்கு கலந்துண்பார்?

தனித்தமிழில் எழுதுதற்கும்
தனித்தமிழில் பேசுவதற்கும்
தயங்குவதேன் தமிழ்மகனே?

தனித்தமிழென் கொடுமொழியா?
தனித்தமிழ்ச்சொற் தட்டு(ப்)பாடா?
தயங்குவதேன் தமிழ்மகனே!

வேற்றுச் சொல் கலப்பாலே
விலாவொடிந்த நிலைபோலே
வினையற்றுப் போனதடா!
காற்றுவாக்கில் வந்தவரின்
கயமைமொழிச் சொற்களெல்லாம்
கலந்தமொழி தமிழாமோ?

நாற்றூடே களையாக
நச்சுமொழி கலப்பதற்கு
நந்தமிழன் துணிவானோ?
ஏற்றிடுக உறுதிமொழி!
எரித்திடுக வேற்றுச்சொல்!
எழுதிடுக தனித்தமிழால்!

அனைத்திந்தியத் தொழிற் சங்கங்களின் அமைப்பில் அமைப்பாளராகவும் செயலாளராகவும் ஏறத்தாழப் பத்தாண்டுகள் பணிபுரிந்தேன்.


மேலை நாட்டில் AEI யும் GEC யும் EEC யும் இணைந்த பொழுது இந்தியத் தொழிலாளர் நலன் கருதி மிகப்பெரிய கருத்தரங்கைக்கூட்டி, பெரிய தலைவர்களை அதில் பேசச் செய்து (இந்திரா காந்தி உட்பட) இந்தியாவிலேயே முதன் முதலாக தொழிலாளர்கள் உரிமைகளைப் பெற வழக்குத் தொடர்ந்து, சட்டப்பூர்வமாக வெற்றி பெற முடிந்தது. நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே பின்னர் அரசு தொழிலாளர்களுக்குரிய சட்டங்கள் வகுப்பட்டன.

இந்திராகாந்தி அம்மையார் அறிவித்த அவசரச் சட்டம் வந்தபொழுது எனக்கு சில தொல்லைகள் ஏற்பட்டன. அதுமட்டுமன்று, AEI யில் நான் தொழிற் சங்கத் தலைவராக இருந்து பல போராட்டங்களை நடத்தியதால் என் வேலை பாதிக்கப்பட்டது. பிற இடங்களில் வேலை கிடைக்கவும் தடை ஏற்பட்டது. ஆயினும் நற்செயல், நல்விளைவு பெற எதனையும் விட்டுக் கொடுக்கும் மனத்துணிவு என்னிடம் திடமாக இருந்தது. அதனால் எதற்கும், எப்பொழுதும் நான் கலங்கியதில்லை. அத்துடன் நிறைவான வாழ்வு வாழ்ந்தோம் என்னும் மனநிறைவும் உண்டு.

'பாம்பின கால் பாம்பறியும்' என்பது போல் பொதுவாழ்வில் ஈடுபட்டோருடைய தொண்டு வாழ்வு எப்படி இருக்கும் என்பதை நான் நன்கு அறிவேன். அதனால், தனி மனிதராக இருந்து உலகத் தமிழரை ஒருங்கிணைக்கும் பணியில் இடையறாது ஈடுபட்டு எத்தகைய தொல்லைகள் ஏற்படினும் எடுத்த வேலையை முடிக்காமல் விடேன் என்று உழைத்து வரும் 'மீசைக்காரர்' என நான் அன்புடன் கூறும் வா.மு.சேதுராமன் அவர்களை நான் மனதார வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

ராமனுக்கு மணல் கொண்டு சென்று சேதுவை மேடுறுத்துவதில் பணி செய்த அணில் போன்று எங்கள் தொண்டு தமிழ்ப் பெருங்கடலில் சிறு துளியாயினும் சிறு துளி பெரு வெள்ளம் அல்லவா? தமிழர் தொண்டுப்படை பெருகப் பெருகத் தமிழர் நல்வாழ்வு பெருகும் என்பதில் ஐயமே இல்லை.

★



திருக்குறள் : தேசிய நூல்

வே. தில்லைநாயகம்
முதல் பொது நூலக இயக்குநர்

1. என்ன ஏன் எப்படி?

நாம் நமக்கென்று ஒரு தேசிய அரசமைப்பு எழுதிக் கொண்டோம் ; ஒரு தேசியக்கொடி, ஒரு தேசியச் சின்னம், ஒரு தேசியப்பாடல், ஒரு தேசிய வாழ்த்து, ஒரு தேசியப் பஞ்சாங்கம் ஒரு தேசியத் தாவரம், ஒரு தேசியப் பறவை மற்றும் விலங்கு தேர்ந்து, ஏற்று, அறிவித்து உள்ளோம். இதுவரை ஒரு தேசிய நூல் அறிவிக்கப்படவில்லையே ஏன்?

2. இலக்கணம்

தேசிய நூல் என்றால் என்ன? அதன் இலக்கணம் என்ன? சுருங்கச் சொன்னால் அரசமைப்பில் வரும் முகப்புரை, நெறிமுறை நேர்வு, உரிமைகளின் உறைப்பு கடமைகளின் கட்டுப்பாடு, சட்டமை, செயன்மை மற்றும் நீதிமை நடைமுறை முதலியவைகளை எடுத்துக்காட்டுவதாக வலியுறுத்துவதாக, விளக்குவதாக அமையவேண்டும் அப்படி என்றால் முன் சொன்னவை மொழிவது என்ன?

3. முகப்புரை

நமது அரசமைப்பு முகப்புரை 9 முனைப்புக்கூறுகள் 1 அரசாண்மை, 2. சம நலமை, 3. சமயச் சார்பின்மை, 4. மக்கள் அரசு, 5. நீதிமை, 6 தன்னுரிமை, 7. சமன்மை, 8.ஒற்றுமை- ஒருமைப்பாடு மற்றும் 9 உடன்பிறப்புணர்வு முதலிய கூறுகளை கூறுகிறது இந்த 9 முனைப்புக் கூறுகளையும் ஏற்பதாக இயக்குவதாக இருக்க வேண்டும் தேசியநூல்.

4. நெறிமுறை

நெறிமுறைக் கோட்பாடுகள் - சட்டக் கூறுகள் 36-51 காந்திய அடிப்படையில் 6 நெறிகளையும், பொருளாதார நெறியில் 7 நெறிகளையும், உலக உறவுப் போக்கில் 4 நெறிகளையும், பிறமுறையில் 3 நெறிகளையும் திருத்திச் சேர்த்த வகையில் 4 நெறிகளையும் கொண்ட 24 கோட்பாடுகள் கொடிகட்டிப் பறக்க விடுகின்றன நமது அரசமைப்பில், இவைகளை ஏற்று இயக்குவதாக இருக்க வேண்டும் தேசிய நூல்.

5. அடிப்படை உரிமை

1. சமன்மை உரிமை (சட்டக்கூறுகள் 14-18) 2. சுதந்திர உரிமை (19-22), 3. சுரண்டல் தடுப்பு உரிமை (23-24) 4 சமய உரிமை (25-28), 5 கல்வி-பண்பாடு உரிமை (29-31), 6 அரசமைப்புத் தீர்வழி உரிமை (32-35) மற்றும் 7 சொத்து உரிமை (37) முதலிய 7 வகை உரிமைகளைக் கூறுகிறது அரசமைப்பு. இவைகளை ஏற்று இயக்குவதாக இருக்க வேண்டும் தேசியநூல்.

6. அடிப்படைக் கடமை

1. தேசிய அடையாளம், 2. சுதந்திரப் போராட்டம், 3. அரசாண்மை, 4. தேசப் பாதுகாப்பு, 5. உடன்பிறப்பு உணர்வு, 6. மரபு, 7. சுற்றுச்சூழல், 8. சொத்து, 9. அறிவியல் மறறும் 10 மாட்சிமை முதலியவைகளை அடிப்படைக் கடமைகளாக அரசமைப்பு அறிவிக்கிறது சட்டக்கூறு 51அ மூலம். இந்த 10 கடமைகளையும் ஏற்று, போற்றி, புரப்பதாக இருக்க வேண்டும் தேசியநூல்.

7. நிர்வாக நியமம்

அரசு மற்றும் ஆட்சித்தலைவரின் இலக்கணம் (சட்டக்கூறுகள் 52-73), அமைச்சர்களின் இலக்கணம் (74-75), நயன்மையர் நயப்பு இலக்கணம் (124-147) நிதி, சொத்து, வணிகம் முதலியன (268-307), அரசாங்க அலுவலர் (308-323) முதலியன

பற்றி விதந்து ஓதுகிறது அரசமைப்பு. அனைத்தையும் ஏற்று போற்றிப் புரக்க வேண்டும் தேசிய நூல்.

8. இருக்கும் நூல்கள்

முன்கண்ட தேவைகளை எடுத்துரைக்கும் நூல்கள் தம்மிடம் உள்ளனவா இல்லையா? ஏராளமாக இருக்கின்றன ; சுருதி சுமிருதி, இதிகாசம், புராணம், ஆகமம், தரிசனம் என்ற தலைப்புகளில் ஏராளமாக இருக்கின்றன. எனினும் சமயச்சார்பு இல்லாமல், பழமை பரந்து, நிகழ்மை நேர்ந்து எதிர்மை ஏற்கும் நூல் ஏதாவது இருக்கிறதா? இருக்கிறது என்று சொன்னால் ஆச்சரியமாய் இருக்கும். அதுவும் அனைவரும் அறிந்தது என்று சொன்னால் அதைவிட வியப்பாய் இருக்கும்? அது எது?

9. திருக்குறள்

அதுதான் திருக்குறள். திருக்குறள் பாக்களை முகப்புரை முனைப்புகளுடன் பொருத்திப் படித்தால், நெறிமுறைகளுடன் நெருக்கி நோக்கினால், அடிப்பட்ட உரிமைகள் அருகில் அமைத்து ஆய்ந்தால், கடமைகளுடன் கருதினால், நிர்வாக நியமங்களுடன் நேராக வைத்து அலசினால் தேசிய நூலாக அமைய, ஏற்க, இயங்க ஏற்புடையது என எல்லோரும் ஒப்புவர். இதன் தொடர்பாகச் சில எடுத்துக் காட்டுகள் காணலாம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (523)

என்னும் குறள் சிந்தனை உரிமையை உரைக்கிறது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

என்னும் குறள் கல்வி உரிமை-பெருமை பேசுகிறது (392)

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (972)

என்னும் குறள் சமன்மை சாற்றுகிறது.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648)

என்னும் குறள் பேச்சுரிமை-பெருமை பேணுகிறது.

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (616)

என்னும் குறள் உழைப்புரிமை - மேன்மை மொழிகிறது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (1062)

என்னும் குறள் வறுமை ஒழிப்பை வற்புறுத்துகிறது.

படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும் உடையான்
அரசருள் ஏறு. (381)

என்னும் குறள் அரசின்-ஆட்சித் தலைவரின் தன்மை தருகிறது.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு (631)

என்னும் குறள் அமைச்சல் இலக்கணம் அலசுகிறது.

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை (541)

என்னும் குறள் நீதிமை நெறி உரைக்கிறது.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு (734)

என்னும் குறள் நாட்டு இலக்கணம் இயம்புகிறது.

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப வாறு சமயத்தார் - நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி (திருவள்ளுவமாலை 9)

என்னும் கல்லாடனாரின் கருத்துரை திருக்குறளின் சமயங்கடந்ததைச் சாற்றுகிறது.

இதன் காரணமாகத்தான் திருக்குறள் இந்திய மொழிகளில் மலையாளம் (1875), தெலுங்கு (1906), சமஸ்கிருதம் (1923), இந்தி (1924), பெங்காலி (1939), கன்னடம் (1940), மராத்தி (1948), உருது (1965), குசராத்தி

தமிழ் - தமிழர் என்ற நிலையில் ஒன்றுபட்டு சிந்திப்பது அவசர அவசியத்தேவை.



ஆர். சொக்கலிங்கம்

- தமிழகம் வந்தவரையெல்லாம் வாழ வைக்கும் பூமியாக உள்ளது. இது நமக்குப் பெருமைதான். ஆனால் நமது தமிழர் நலன் நாளும் பின் நோக்கிச் செல்வதை உணர வேண்டும்.
- அன்னைத் தமிழில் படிப்பதும் பேசுவதும் ஏதோ மிகப்பெரிய தவறு என்பதுபோல் ஒரு பிரச்சாரம் நடக்கின்றது. இதை மக்கள் முன் விழிப்புணர்வு மூலம் எடுத்துச்சொல்லி நமது மொழியின் சிறப்பை, வரலாற்றை பண்பாட்டு அடிப்படையில் கூறுவது அவசர அவசியம்.
- தமிழ் மண்ணில் படித்துவிட்டு அயல்நாடு சென்ற பல தமிழர் பெறும் வெற்றி பெற்று நமக்கு பெருமை சேர்த்து வருவதும், நமது தேசத்தில் பல மாநிலங்களில் தொழிலில், வேலை வாய்ப்பில் முன் நிற்பதை நாம் மகிழ்வோடு பார்க்கின்றோம்.
- ஆனால் நாம் பிறந்த தமிழ்நாட்டில் நமது மொழியின் உணர்வு நாளுக்கு நாள் குறைந்து வருவது வேலை தருகிறது. இந்தநிலையில் மீண்டும் தாய்மொழிக் கல்வி, அனைத்துப் பள்ளிகளில் தமிழ்வழி செயல்பாடு என்ற நிலை உருவாக வேண்டும்
- இதற்கு நமது ஆட்சியாளர்கள் தமிழ்ப்படித்தால் மட்டும் முன்னிரிமை என்ற நிலையை எடுக்க வேண்டும். அந்த நிலை உருவாக தமிழ் - தமிழக நலன் என்ற ஒரே உணர்வுடன் அனைத்து அரசியல் இயக்கங்கள் முடிவு செய்வதே தமிழர் நலனுக்கு தீர்வு.

(1971), முதலிய மொழிகளில் மொழியாக்கம் பெற்று உள்ளது நூறாண்டுகளுக்கு முன்பிருந்தது.

அது மட்டுமல்ல ; உலகமொழிகள் பலவற்றில்-செர்மானியம் (1803), ஆங்கிலம் (1840), பிரெஞ்சு (1848), இலத்தீன் (1856), செக் (1952), உருசியம் (1956), போலியம் (1958), பர்மியம் (1964), பிஜியம் (1964), டச்சு (1964), சிங்களம் (1967), சீனம் (1967), மலாய் (1967), சுவீடியம் (1972), பின்னியம் (1972) முதலிய மொழிகளில் மொழியாக்கம் பெற்றுள்ளது 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து.

தேசிய நூல் திருக்குறள் என்னும் ஒருதனி நூலே. ஆராய்ச்சி நூரே எழுதலாம் ; பட்டம் பெறலாம் ; பதவிபெறலாம் ; பணம் பெறலாம் ; புகழ் பெறலாம் ; பாராட்டுப் பெறலாம் ; பாராட்டுக்குரியவர் யாரோ எவரோ?

எனவே அரசமைப்பில் அக்கறையும், தேசிய நூலில் அக்கறையும் கொண்ட ஒவ்வொருவரும் திருக்குறளை தேசிய நூலாக ஏற்க, பயன்படுத்த, பயன்பட இனம், சமயம், சாதி, கட்சி கடந்து முயலவேண்டும். முயல்வோமா முனைந்து.

(மூலம் : தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சிறந்த நூல் பரிசு பெற்ற தில்லைநாயகம் எழுதிய இந்திய அரசமைப்பு, 1989)

வள்ளுவம் ஓர் வாழ்வு நூல்


திருக்குறள் செம்மல் ந. மணிமொழியன்

வள்ளுவர் வழி உலக மக்கள் அனைவரும் ஏற்றிப் போற்றும் பொதுநெறி. மனித குலம் வாழும்வரை, எக்காலத்தும் எந்நாட்டினராலும் என்றும் போற்றப்படும் அற நூல், மறை நூல், திருக்குறள். ஒவ்வொரு மனிதனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ் வதற்கு வகுக்கப்பட்டது வள்ளுவர் வழி.

மனிதன் குறிக்கோளுடன், நல்ல இலட்சியத்துடன் வாழ வேண்டும் என்று நடைமுறைத் திட்டங்களை வகுத்து வாழ வழிகாட்டுவது வள்ளுவம். பல்வேறு துறை களில் வாழ்பவர்களுக்கும் அந்தந்தத் துறைக்கு ஏற்றார்போல் அறவழி காட்டிடும் ஆன்றோர் திருவள்ளுவர். மன இருள் நீக்கி இன்பம் பயப்பது; மருள் நீக்கி மாசறு காட்சி நல்குவது வள்ளுவர் வழி. வள்ளுவத்திற்கு இணையாக ஒரு நூல் இவ்வுலகில் இல்லை என்று மேலை நாட்டு அறிஞர்கள் எல்லாம் வியக்கின்றனர். வள்ளுவர் வழி வாழ வலியுறுத்துகின்றனர்.

மக்கள் அனைவரும் நாள்தோறும் நாடி வள்ளுவர் வழியைப் பின்பற்றினால், உலகில் நிலவும் பல்வகைக் கொடுமைகளும், தீமை களும் நீங்கி நன்மையும் இன்பமும் பெருகும். அல்லவை தேய அறம் பெருகும். வள்ளுவர் வழியில் நம் வாழ்வை அமைத்துக் கொண்டால். தற்போது நாம் வாழும் காலத்தில் அமைதி குறைந்து பகைமையும் தீவிரவாதமும் பெருகி வன்முறைச் சம்பவங்கள் நம்மை அச்சுறுத்தும் வகையில் பெருகியிருக்கின்றன. வள்ளுவத் தைப் பயின்றால், இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம் என்றுணர்ந்து, பகை நீங்கி மனித நேயம் மலரும். ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்' என்ப துணர்ந்து, உலகம் தழுவிய ஒப்பம் மிகுந்திருக் கும் நன்மையும் தீமையும் நாடி நலம் புரியும் தன்மையால் ஆளப்படும் நிலை உருவாகும்.

திருக்குறள் மனித குலத்திற்கு நல்வழி காட் டும், தடுமாறி நிற்கும் கப்பலுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்போல், தடுமாறி நிற்கும் மனித குலத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய் முழுமையான அறநூலாய் நல்வழி காட்டும்.



வள்ளுவர் வழி நடந்தால் மனித மனத்தில் மிருக உணர்வு கள் குறைந்து, அரக்க குணம் அழிந்து, தெய்வத்தன்மை மிகுந்து நல்ல பண்புகளைப் பெற்று, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட் டம், வாய்மை மிக்கவர்களாய், நல்உணர்வு மிகுந்தவர்களாக, அறிவுடைமை யுடன் எல்லா நலமும் இன்பமும் பெற்று தமக் கென மட்டும் வாழாது, மனித நேயத்துடன் பிறர்க் கென வாழும் பெருமை பெற்று புகழுடன் வாழ்வர்.

வள்ளுவர் வழி நடந்தால் தனிமனிதர்கள் மனத்தில் மாசு நீங்கி, பொறாமை, கடுங்கோபம், பேராசை, கடுஞ்சொல் நீக்கி ஆக்கம் தரும் அறவாழ்வு வாழலாம்.

அரிய தத்துவங்களையும், ஆழமான சிந்தனைகளையும் உலகத்தினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அனுபவக் கடலாக விளங்கும் வள்ளுவர் வழிநின்றால், வையத்துள் துன்பம் நீங்கி அமைதியுடன் வாழலாம்.

சமுதாயத்தில் உடற் பிணி, உள்ளப் பிணி, வறுமை, பசிப் பிணி, செறுபகை, பல்குழுக்கள், பாழ் செய்யும் உட்பகை, கொல் குறும்பு இல்லாததாக, தேடாமலே பெறும் செல்வ நாடாக, செல்வம், விளைவு, மகிழ்ச்சி, உள் நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுப் பாதுகாப்பு மிக்கதாய் நாடு விளங்க வேண்டும் என, வள்ளுவர் ஆட்சி செய்வோர்க்கு வழிகாட்டு வார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என ஏற்றத்தாழ்வில்லாத, உயர்வு, தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வழிகாட்டுவார்.

உலகில் வாழும் மக்கள் பல்வேறு துறை களில், பல்வேறு நிலைகளில் வாழ்பவர்கள். அவர்களுக்கு ஏற்றவாறு அறநெறிகளை அற வழிகளைப் போதித்தவர் வள்ளுவர். வள்ளுவர் வழி வாழ்பவர்கள், தெய்வ நிலையில், உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளி, எண்ணியதெல்லாம் எண்ணியாங்கு பெற்று வாழ்வர். பெருமைக் கும், ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் என உணர்ந்து, புகழ்ந்தவை போற்றி, செயல் செய்து, வள்ளுவர் வழி நிற்பவர்கள் உயர்வடைவார்கள்.

வள்ளுவம் ஒரு வாழ்வு நூல், பயன்பாட்டு நூல், செயல் நூல், வள்ளுவர் வழியில் வாழ்பவர் வாழுங்காலத்திலே தெய்வநிலை பெற்று, தன்னுயிர் தானறப் பெற்று வாழும் இவர்களை, மன்னுயிர்கள் எல்லாம் தொழும்; வணங்கும். என்றும் இறவாப் புகழ் பெற்று வாழ்வர்.

தேராமல், ஆராயாமல் எப்பணியையும், பொறுப்பையும், யாருக்கும் அவசரப்பட்டோ, அன்பாலோ, மயக்கத்தாலோ கொடுத்துவிடக் கூடாது. தேரான் தெளிவு தீராத இடும்பையை, துன்பத்தைத் தரும் என்று எச்சரிப்பார் வள்ளுவர்.

தொழில், வாணிகம், அரசுத்துறை, நாடாளுமன்ற சட்டமன்றம், எத்துறையாயினும் எத்துறைக்கு ஏற்ற தகுதியும், நேர்மையும், ஒழுக்கமும், பொறுப்புணர்வும் உழைப்பும் உள்ளவர் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தகுதியில்லாத ஒருவரை அன்பின் காரணமாக அல்லது உறவின் காரணமாக விருப்பத்தின் காரணமாக சிபாரிசின் காரணமாகப் பணியில் அமர்த்தினால் துன்பமும் கேடும் நிகழும். தகுதியும் ஆற்றலும் பொறுப்பும் இல்லாதவன். செயல் ஆற்றும் வல்லமை இல்லாததால், எடுத்த காரியத்தில் தோல்வியும், நட்டமும், தீமையும் ஏற்பட்டுவிடும். அவனைத் தேர்ந்தெடுத்தவர்களும் பேதைமை உடையவர், விவரம் இல்லாதவன் என்ற அவப் பெயரையும் பெற நேரிடும்.

''காதன்மை கந்ததா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்'' -

என்பார் வள்ளுவர்.

உறவினர், நண்பரர், வேண்டியவர் செல்வாக்குள்ளவர், சிபாரிசு செய்து வந்த நபர், இவர்கள் தகுதியற்றவரராய், அறிய வேண்டியவற்றை அறியாதவர்களாய் அமைந்துவிட்டால் பெருந் தீமை விளையும், நட்டம் ஏற்படும். பாசத்தின் காரணமாக அன்பின் காரணமாக இவர்களை நியமித்தால், பணியில் அமர்த்தியவர்களை மற்றோர் அறிவில்லாத மடையர் எனத் தூற்றுவர்.

இதுபோல, முன்பின் தொடர்பில்லாத அயலாரை, வெளிநாட்டினரை வெறும் கவர்ச்சியான பட்டங்களையும், தோற்றத்தையும் கொண்டு அவசரமாக, ஆராயாமல் நம்பி பொறுப்பை, பணியை ஒப்படைத்தால், அவ்வாறு ஒப்படைத்தவனுக்கு மட்டுமன்றி அவன் வழி வழி வரும் பரம்பரையினர்க்கும் துன்பம் வருரும்.

''தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்''

தன்னலம் மிக்கவர்கள், கொடியவர்கள், அறத்திற்கு, நல்ல நெறிகளுக்கு எதிராக வாழும் கயவர்கள், தொழிலுக்கு, வணிகத்திற்கு, நாட்டின் பொறுப்புள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்டால், தொழிற்சாலைகள், வணிக நிலையங்கள், அரசுத்துறை அனைத்தும் நிர்வாகச் சீர்கேட்டால் பாழ்பட்டு அழிந்துவிடும். இருட்டில் மறைந் திருப்பவர்களைக் கண்டுபிடிக்க ஒளிவிளக்கு வேண்டும். ஆகவே, இருள் சூழ்ந்த தன்மை மிக்கவர்களை, தகுதியில்லாத போலிகளை அடையாளங்காண ஆராய்ச்சியும், முறையாக தேர்வு ஆகிய ஒளிவிளக்கு ஏந்தி, தகுதியற்றவரை நீக்கி, தகுதியுடைய தக்கவரை அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். தகுதியுள்ளவர் என எப்படி ஆராய்ந்து தேர்ந்து எடுப்பது? குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிகமாக, கல்வித் தகுதியும் முன் அனுபவமும் உழைப்பும் உள்ளவனை பதவியில் அமர்த்த வேண்டும். அந்த குறிப்பிட்ட காலத்தில் அவன் எவ்வாறு வேலை செய்கிறான். எவ்விதமான வழி முறைகளைப் பின்பற்றுகிறான், வரும் இடையூறுகளை, தடைகளை எவ்வாறு எதிர் கொள்கிறான் வெற்றி பெறுகின்றான், லாபம் ஈட்டுகிறான் என்பது அறிந்து அவன் செயலாற்றும் தகுதிக்கு உரிய பதவியில் அமர்த்தலாம். அதுபோல் தலைவர்களைத் தேர்வு செய்ய மக்கள் வாக்களிக்கும்போது தலைமைப் பொறுப்பு ஏற்பவன், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் உடையவவனா? விழிப்புணர்வு, விரைந்து செயலாற்றும் தன்மை, தியாகம், பொறுப்புணர்வு உள்ளவனா? என்று ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

இவ்வாறு ஆராய்ந்து தேர்ந்தெடுத்தால் தொழில், வாணிகம், அரசுத்துறை எதுவாயினும் அத்துறை செழிக்கும், சிறப்புப் பெறும்.

ஆகவே யாரையும் ஆராய்ந்து தேர்வு செய்க. தேர்வு செய்த பின் சந்தேகம் கொள்ளற்க. தேர்வு செய்த தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு முழுப் பொறுப்பும் வழங்குக. இறுதியில் இலாபமும் வெற்றியும் கிடைக்கும் என்றெல்லாம் அன்றாட வாழ்க்கைக்கு - அரசுக்கு நிருவாகத் துறைக்கு வழிகாட்டும் வாழ்வியல் நூலாக வள்ளுவம் விளங்குகின்றது. ★

தமிழில் வழிபாடு எப்படி மறைந்தது!

''தமிழ்ப்பாவை கருணை தாசன்''

இந்தியாவில் பெரியதோர் வழிபாட்டு (பக்தி) இயக்கம் நாடு முழுதும் பரவியமைக்கு என்ன கரணியம்? இது எங்கே முதலில் தோன்றியது? இதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தோன்றிய காரைக்கால் அம்மையாரே தமிழில் வழிபாட்டு இயக்கத்தின் முன்னோடி. இவர் காலத்திற்குப் பின்னர் இரண்டு நூற்றாண்டு கழித்துத் தோன்றிய திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இந்த இயக்கத்தை உருக் கொண்டு வளர்த்து வந்தார் கள். இந்தப் பெருமை இவர்களையே சாரும்.

இவர்களுக்குப் பின்வந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் அமைச்சர் மாணிக்கவாசகரும் மேலும் பெரியதாக வளர்த்தார்கள். இந்திய நாட்டில் வழிபாட்டு இயக்கம் தமிழகத்தி லிருந்து தான் வடக்கு நோக்கிப் பரவியது என்று ஆர்.என்.தாண்டேகர் என்பவர், ''இந்து சமயம் உன் நோக்கு'' என்ற நூலில் குறித்துள்ளதாகப் பெரியபுரான ஆய்வு நூலாசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தர் தேவார மூவரில் முதலா மவர் ஆவார். மேற்குறிப்பிட்டது உண்மை யானால், தமிழ் நாட்டில் ஏன் பக்தி இயக்கம் தோன்ற வேண்டும்? ஞான சம்பந்தரும் அப்பரும் எதற்காக இந்த இயக்கத்தைா வளர்க்க வேண்டும்? என்று கேட்டு, நாம் அதற்குரிய விடை கண்டாக வேண்டும்.

திரு ஞானசம்பந்தர் தமிழால் இறைவனை வழிபட 4000 பாடல்கள் புனைந்து தந்த பெருமைக்குரியவர். இத்தகைய தேவையும் சூழலும்ட தமிழ்நாட்டில் திருஞான சம்பந்தர் காலத்தில் ஏற்பட்டமைக்குக் கரணியம் தமிழர் களது தொன்று தொட்ட சமயமான சிவனியமும் மாலியமும், பல்வேறு இயற்கை வழிபாடு களும் தலை தூக்கியிருந்ததே! நம் சமயம் இடையூறுக்கு ஆளான காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு தொடங்கிய காலம். இக்காலத்தில் இந்தச் சமயங் களை வழிபாட்டு முறைகளை



அழித்தொழிக்கச் சமணமும் பௌத்தமும் தமிழ்நாட்டில் படையெடுத்தன. இவை தமிழர் களின் தொல் தமிழ்ச் சமயங் களையும் தமிழையும் அழிக்கப் புகுந்தன. பெருவீச்சில் தொடங்கி பெருவீச்சில் முடிந்த களப்பிரர் ஆட்சியின் பின், அமற்புல அரசாய் மீண்டும் தமிழ் மண்ணை ஆண்ட அரசர்கள் பல்லவர் ஆவர்.

இப்பல்லவர்களில் சிலர் சமணம் சார்ந் திருக்க, பலர் சைவ வைணவம் சார்ந்தோராய் இருந்தனர். இங்குப் பல்லவர்கள் பேணிய பிராமணர்கள் என்போர் வடநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இவர்கள் வடமொழி மட்டுமே அறிந்த பிராமணர்கள் ஆவர்.

சமணம் பௌத்தம் என்பன தமிழ்நாட்டில் ஊடுருவி வளர்ந்ததற்கும் அடிப்படைக் கரணியம் தொல்காப்பிய காலஞ்தொட்டே சங்க காலத்திலும் பரவி இங்குச் செழிக்கத் தொடங் கிய சூரிய செல்வாக்கும், அவர்களின் வருணப் பிளவுச் சிந்தனைகளும் தாம் தமிழர் வழி பாட்டைக் கெடுத்தன.

அவர்களின் வேள்வி மதத்திற்குத் தமிழர் கள் உடன்படட்டு ஒன்றிப்போய்க் கொண் டிருந்த நிலைமைகளும் ஆகும். அதேபோன்று காஞ்சிபுரம் பல்லவர்களின் நகரமாக விளங்கி போது அங்குக் 'கடிகை' எனப்படும் வட மொழிக் கல்லூரியை நிறுவி வட்நாட்டுப் பிராமனர்களையே அதில் தங்கவைத்துப் பாது காத்தனர் பல்லவர்கள்.

தமிழ்நாட்டில் இவ்வாறு பல்லவர்கள்ட ஆட்சியில் தமிழ்நாட்டில் பிராமணர்களில் வடமொழி மட்டும் அறிந்த பிராமணர்களைக் குடியேற்றி அவர்களை நிலைக்க வைத்த நிகழச்சி நன்கு நடந்து வந்தது. இந்த விவரங் களைத்தண்டன் தோட்டச்செப்பேடு தெளிவாக எடுத்துரைக்கின்றது. பல்லவர்கள் தமிழ்நாட் டுப் பிராமணர்களை நம்பாமல் போனதற்குக் கரணியம் அவர்கள் தமிழ்நாட்டு அரசர்களோடு

தங்களையும் வெளியேற்றிவிடுவார்கள் என்ற அச்சம் தான்.

எவ்வாறாயினும் கோயில்களில் வட மொழி வேதங்கள் ஓதவும், வைதீகப் புராணங்கள் சொல்லவும் பல்லவர்களால் தான் கட்டளைகள் ஏற்படுத்தப் பெற்றன என்று, 'தமிழர் சமய வரலாறு என்ற நூலில் முனைவர் மா. இராச மாணிக்கனார் கூறுகின்றார்.

பல்லவர்கள் கூட்டங்கூட்டமாக வட மொழி ஆய்ந்த பிராமணர்களை அழைத்து வந்து நிலமும் வீடும் வரியில்லாத பயிர் நிலமும் தந்து அக்கிரகாரங்களை ஏற்படுத்தித் தந்த செய்தியைத் தண்டன் தோட்டச் செப்பேடு தெரிவிக்கிறது. ஆகவே தான் தமிழர்களின் வழிபாடு சிதைந்தது என்பதை அறிக.

ஆதாரம் : கனிமொழி சுறவம் இதழ் - நன்றி.

தமிழ் நிலை!

(ச.சி. செல்லம், சென்னை)

தமிழே யுன் நிலைகண்டு என்றன்
தலை சாய்ந்து மனம்வாடு கின்றேன்
'விதியே ஓ விதியே' யென் றேஅன்று சொன்ன
வீரக் கவிவாக்கு வீண்போன தென்னே!

சதியோ யுன் தலைவர்கள் செய்யும்
சாகசச் செயல்களால் தமிழ்வாழ்வ துண்டோ?
கதியிலா மக்கள் துணை கொண்டே
கதைபேசித் திரிவதால் தமிழ்வாழ்வ துண்டோ?

மதியினில் ஆங்கிலம் தனைமெச்சும் மாந்தர்
மத்தியில் உன்நிலை மெச்சவும் படுமோ?
தமிழுக்கு ஒருவழி உண்டு அது
தமிழினில் வல்ல தலைவரால் உண்டு!

பழிமிகு பல்கலைக் கழகத்தை மாற்று
பதவிக்கு அலையும் கிழவரைத் தூற்று
ஆங்கில மோகத்தைத் தள்ளு தமிழ்
ஆணவப் புலமையை அதனுடன் தள்ளு!

பாங்குடன் பலமொழி கற்றுப்பின்
பக்குவம் பெற்றநல் இளைஞரைக் கொள்ளு!
சென்றிடும் எட்டுத் திக் கினிலும்
செந்தமிழ் போற்றும் செல்வரைத் தேடு!

வென்றிடும் புலமைக ளெல்லாம் நாம்
மீட்டும் தமிழினில் மேம்படச் சொல்லு!
ஒளிமிகும் இளைஞரைத் தலைவராய்க் கொள்ளு
உன்நிலை ஓங்கும் இதுசத்யம் எண்ணு!

விடியலைக் காட்டட்டும்

மார்சல்முருகன்



பன்னாட்டுத் தமிழுணர்வு மன்ற, வெள்ளிவிழா, தமிழினத்தின் விடிவு விழாவாக, உலகத் தமிழ்ப் பண்பாட்டு, வெற்றி விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

தமிழினம் விழிப்போடு இருக்கிறதா?
வேதனைத் தவிப்போடு இருக்கிறதா?
தன்னம் பிக்கைகளை, விதைக்கிறார்களா?

அல்லது தொலைக்கிறார்களா? என்கின்ற கவலைத் தீ சுட்டெரிக்கிறது.

உலகில் எந்தநாட்டிலும், இல்லாத அவலம், தாய்மொழிக்கு,

ஒன்றுபட்டு நிற்கவேண்டுமெனக் கற்றுத் தேர்ந்த கண்ணிய வான்களுக்கே, - கற்றுக்கொடுக்க, கவிதைப் படைப்பாள

-பெருங்கவிக்கோ வா.மு.சே அவர்கள்.

குமரிமுதல் சென்னை வரை 52 நாட்கள் நடந்து வந்த பயணச் சுமைகளின் அழுத்தம், அவரை ஒன்றும் செய்யவில்லை.

பயணப் பாதைகளில் கண்டு வந்த, தியாகச் சுவடுகளின், அடையாளம்

அவரைத் தீயெனச் சுட்டது. நமது சிந்தையைத் தொட்டது.

மொழிகாக்கும் பயணத்தில் பதிந்திருந்த, அடையாளங்களைக் கண்டு வந்து காட்டினார். தொண்டுகள் நிலைநாட்டினார்.

அவையாவும் வெறும் அடையாளங்களா?
குருதிசிந்தியதாக
குடும்பம் இழந்ததாக
இளங்குருத்துகள் மடிந்ததாக
முதியவயதிலும் உடலை வருத்திப்
பட்டினிப் போர் நடத்தியதாக
சிறைக் கூடங்களில் நடந்த
சித்ரவதைக் காட்சிகளாக
விறகு எரிப்பதைப் போல் தன் உடம்பை
எரித்துத் தியாகத் தீயில்
தமிழ்த் தீ மூட்டிய தாகப்
பல பட்டியல், செய்தியாகச் சுட்டது.

துப்பாக்கிக் குண்டுகள் உடம்பைத்
துளைத்துக் கொண்டு போனாலும்
தமிழுணர்வைத் தொலைத்து விடக்கூடாதென்ற
தாய்மொழித்தீரர்களின் வரலாறு.
ஒவ்வொரு நாளும் பொதுக் கூட்டங்களிலே
நினைவுப்படுத்தப்பட்டது.

கொட்டிய குருதியும், எரிந்த உடல்களும், நடந்த பயணங்களும், வெற்றுக் கதைகள் மட்டுமா? நினைவுக் கூட்டங்களோடு மட்டும், அந்தத் தியாக வரலாற்றைத் தொலைத்துத் தான் ஆகவேண்டுமா? 1938 ஆம் ஆண்டில் தொடங்கிய மொழிப்போர் இன்றுவரை தொடர்கதையாய் தான் இருக்கிறது.

கட்டுத் தறிக்குள்ளே கிடந்து பழகிப் போன, விலங்கினங்கள், கால்நடைகள், பறவைகள், போலவே, வெள்ளையனின், கட்டுப்பாடுகளில் கிடந்து பழகிப்போன தமிழினம்.

அவனே வெளியேறிய பின்னும், அவனே அவிழ்த்து விட்ட பின்னும், இந்த அடிமைச் சாதிகள் மட்டும், கயிறு இல்லாமலேல கட்டிக் கொள்கின்றன. கூண்டுகள் இல்லாமலே தானே போய் அடைந்து கொள்கின்றன. வெள்ளையனின் மொழி, ஆடை, பழக்க வழக்கங்கள் என்னும், கயிறும், கூண்டும் இன்னும் தமிழனிடம் தான் மேலோங்கி நிற்கின்றன!

இந்த அடிமைக் குணங்களைத் தான், 'தொண்டு செய்யும் அடிமை உனக்குச் சுதந்திர நினைவோடா?' எனக் கேட்டார்.

அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும், உச்சத்தில் கொள்வாரடி, ஊமைச் சனங்களடி எனச் சாடினார்.

அன்று, சிலர் வெகுமதிகளாகக் கருதியதையெல்லாம், சிறுமதி எனக் காலம் காட்டியது.

இன்று பொன்விழாக் கண்ட புண்ணிய பாரதம் நம்கையில். நமது நாட்டில், மொழி வழி மாநிலம், அரசு, உரிமைகள், அதிகாரங்கள் எல்லாம் இருக்கின்றன.

ஏனைய மாநிலங்கள் சித்தம் தெளிந்து, நத்தம் மொழிகளில் உரிமைகாக்க, வளர்ச்சி

காக்க, துறைதோறும், துறைதோறும் தாய் மொழி காக்கத் திட்டமிடுதல், நிதிஒதுக்கிச் செம்மை காத்து, மொழிப் பிரச்சினை மாநில உரிமை என வரும்போதெல்லாம், தீராத பகையுணர்வு, கொண்டவர்கள், கூட ஒரே அணியில் திரள்கிறார்கள்.

பக்கத்தில் கர்நாடகம், அந்த மொழி யிலே கையெழுத்து, அறிக்கை, செய்திப்பறி மாற்றங்கள், இவைகளை ஓராண்டிற்குள் கற்றுக் கொள்ளத் தவறினால், வேறு மாநில அரசுத் துறை அதிகாரிகள், அங்கே நீடித்துப் பணியாற்ற முடியாது எனச் சட்டம் தாய் மொழிகாக்கிறது.

கேரளத்தில், ஊர்ப் பெயர்களும், தெருப்பெயர்களும், மாநிலப் பெயர்களும், மலையாள மொழியிலே மட்டும் இருக்க வேண்டும், அரசுத்துறைத் தொடர்புகள் மலையாள மொழிக்கே முதன்மை என்று தாய்மொழி உணர்ச்சி தலை நிமிர்ந்து நிற்கிறது.

இங்கே (தமிழ்நாடு) நம்மவர் மட்டும், இன்னும், மூடத்தனம், கலப்பு மொழிப் பேச்சு, கலப்பு மொழி எழுத்து, முழுமையாகக் கற்றுத் தேறாதவர்கள். அன்றாடக் கூலி வேலை பார்ப்பவர் கூட, ஆங்கிலத்தில் கையெழுத்து, தகப்பன் பெயர் (இனிசியலை) ஆங்கிலத்தில் வைத்துக் கொள்வது, அதற்கு நியாயம் கற்பிக்க வலிந்து சண்டை போடுவது, என்று இழிகுணம் இன்னும் தலைதூக்கிவருகிறது.

இந்தத் தமிழ் இன, ஐந்தறிவு மானிடர்கள் மட்டு தான், செக்குமாடுகளாகத் தாமே கட்டிப்போட்டுக் கொள்ளும், கட்டுத்தறி மாடுகளாக, கூண்டைவிட்டு வெளியேறி வர விரம்பாத, பாமரப் பறவைகளாக வெளிச் சத்தைக் கண்டு கூசும், கண்களைக் கொண்ட வர்களாக இருக்கிறார்கள் என்பதை மறைக்க முடியாது. நெஞ்சை நிமிர்த்தி தாய்மொழிகாக்க வரத் தயங்குகிறார்கள் என்பதை விடக் கேவலம், தாய்மொக்காகப் பரிந்து பேசவே பபயந்தகொள்கிறார்கள்.

ஒரு இனத்தின் பண்பாடுகளை, வெறும் பணத்தின், பதவியின், பயன்பாடுகளுக்காக, விலைபேசி, விலைபேசி இறுதியில், சும்மாவே கொடுத்துவிட்டுச் சொல்லக் கூசுகிறார்கள்.

அடிவிழுந்தால் கதறும் மொழி தாய் மொழி, அன்பொழுகப் பேசிக் கதைக்கும், மொழி தாய்மொழி, படுக்கையறையில் கணவன் - மனைவி பேபசிமகிழும் மொழி தாய்மொழி, ஆனால் பள்ளியறைகளில் மட்டும் ஆங்கில மொழி ஆங்கில ஆடை, விழாக்க ளெல்லாம் ஆங்கில வாடை (மாஸ் மீடியாக் கள்)வெகுசனத் தொடர்பு சாதனங்கள் எல்லாம் ஆங்கில மேடை.

உறவு முறைகளில் குழந்தை தவறுதலாய் அழைத்தால், பேசினால், பொறுத்துக் கொள் ளாத இயல்பிற்குப் பெயர்தான். பண்பாடு, உடுத்துகின்ற ஆடை, குடும்பப் பெருமை காக்கும் மரபுகள் தான் கலாச்சாரம்.

அந்த மரபும், கலாச்சாரமும் சிதைந்து, தாய்மொழி உணர்வும் அழிக்கப்பட்டு விடுமே யானால், அந்த இனமே அழிந்து போகும்.

கீத்தரமான சுகங்கள், பதவி ஆசை, பண வெறி கட்சிமாச்சரியங்கள், இப்படி நிரந்தரமற்ற, சுகங்களில் மயங்கி, நமது மொழி இனம், இவைகளை அடகு (ஈடு) வைத்தால், இல்லை... இல்லை இன்று விற்று விடுவோமேயானால், இவைகளை விற்றுப் பிழைக்கும் தூண்டுதலை, திணிப்பைச் செய் கிறவர்களை, வளர விடுவோமேயானால்,

அவன் பிழைக்கத் தெரிந்தவனாக ஆக லாம் - நாம் நம் இனத்தை மொழியை அழிக்கத் துணைபோனவர்கள் ஆனோம், என, எதிர்காலத் தலைமுறை நம்மை குற்றப்பிறவி எனக் கருதும் என்பது நிச்சயம்.

சொந்த வீட்டிலேயே, சமைக்க, படுக்க, உறவுகளோடு உல்லாசம் உரையாடல், என மகிழ, என்கட்டிய மனைவியோடு தாம்பத்தியம் நடத்த, அடுத்த வீட்டானிடமா, அல்லது அடுத்த நாட்டானிடமா, அனுமதி கேட்போம்.

ஆமாம்... நண்பர்களே, என் மீது கோபம் கொள்ளாதீர்கள். இன்று தமிழர்கள் பல்லாயிரம் பேர்களிடம், இந்த அனுமதி கோரும், மனுக்கள், ஏராளமாக இருக்கின்றன.

சேலம் சண்முகம் அவர்களின் வாழ்த்து



பன்னாட்டு தமிழ் உறவு மன்றம் பாங்காங்கில் நடத்திய நான்காம் ஆண்டு மாநாட்டில் உலகின் பெரும் பகுதியிலிருந்து ஜெர்மன், லண்டன், பாரிஸ், மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா மற்றும் பல நாடுகளிலிருந்து தமிழர்கள் கலந்து கொண்டார்கள்.

மேற்படி மாநாட்டில் கவிதை அரங்கம், ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பவள விழா போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நன்கு நடந்தேறியன. குறிப்பாக பன்னாட்டுத் தமிழர்களின் தொழில் மேம்பாட்டு கருத்தரங்கில் தொழில் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் நான் கலந்து கொண்டேன். அனைவரும் மிகவும் ஆர்வமாகப் பேசினார்கள். என் போன்ற தொழில் செய்பவர்களுக்கு அது மிகவும் புதிய அனுபவமாகும்.

ஐந்தாவது பன்னாட்டுத் தமிழ் உறவு மன்ற மாநாடு நல்ல முறையில் சிறப்போடு நடக்க என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

காதுவரை கம்பீரமான மீசை, முழங்கால் வரை துண்டு, மடிப்புக் கலையாத வேட்டி - சட்டை, இது தான் அரசியலாக ஆகிவிட்டது.

காவலர்கள் இவர்களின் ஏவலர்கள் பணித்தர்களோ இவர்களின் வலைக்குள் சிக்கியமீன்கள், இளைஞர்களோ, எய்யப்படும் அம்புகள், இப்படி ஒரு பிழைக்கத் தெரிந்த கூட்டம், அடுத்த தலைமுறையின் ஆட் கொல்லி நோயாக வளரத் தொடங்குகிறது. இதுதான் நண்பர்களே எதிர்கால இருட்டை நமக்குக் காட்டத் தொடங்குகிறது.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்.''

வெறும் மனப்பாடச் செய்யுளாக ஒய்வெடுக்கிறது. விதியே! விதியே! என் செய்ய நினைத்தாய் தமிழச் சாதியை என்ற, சூழலும் வாள் சும்மா கிடக்கிறது துருப்பிடித்து.

என்னை நன்றாய் இறைவன் படைத்தான், தன்னை நன்றாய்த்தமிழ் செய்யுமாறு என்ற அறிவுணர்ச்சி, உயிர் உணர்ச்சிப்பாடல், தன்னை வளர்க்கத் தமிழ் தேடி அழைக்கிறது. விதைக்கப்பட்ட பழைய புரட்சிக்காரர்கள் வெடித்துக் கிளம்பி வெளியேறி வராத வரை

புதைக்கப்பட வேண்டியவர்களே
போற்றப்படுவதும், புல்லுருவிகளே
வல்லூறுகளாய் வலம் வருவதும்

தமிழினம்,
தமிழ்மொழி
தமிழ்க்கலை
தமிழ்ப்பண்பாடு,

இவைகளை அகழ்வாராய்ச்சிக் கூடத்திற்கு, நினைவுச் சின்னங்களாக மட்டுமே, அனுப்பி வைத்து விடும், என எச்சரிக்கை மணி ஒசை, எங்கும் கேட்கிறது. அந்த அவல மணி ஓசைக்கு முடிவு செய்வோம்.

அந்த விடியலுக்கு வழி காட்டட்டும் கூடல் மாநகரில் கூடும் தமிழறிஞர்கள் கூட்டம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற வெள்ளி விழா, ஐந்தாம் உலக மாநாடு, ஐந்தறிவு வியாதியரை, ஆறறிவு மனிதராக்கட்டும்.

வாழ்க... வளர்க... வெல்க...


தமிழுக்கொரு தனிநாயகர்

முனைவர் சூ. இன்னாசி

‘தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டவர் பாரதி; அதனைச் செய்து முடித்தவர் தனிநாயக அடிகளார். ‘என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' எனக் கூறுவது திருமூலர் தந்த திருமந்திரம்; அதனைத் தாரக மந்திரமாய்த் தியானித்துச் செயலாற்றியவர் தனிநாயக அடிகளார். ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' எனப் பாடியவர் கணியன் பூங்குன்றனார். யாதும் தமிழூர்; யாவரும் தமிழுறவோர் என உலகுக்கு ஒளி காட்டிய கலங்கரை விளக்கம் தனிநாயக அடிகளார்.

பன்மொழியறிவு, பல்துறைப்புலமை, பன்னாட்டுத் தொடர்பு என விரிந்த கதிரவனாய் விளங்கியவர்; தமிழாக்கச் சிந்தனையில், தண்ணருவிப் பேச்சில் குளிர் நிலவாய் ஒளி பாய்ச்சியவர். திருமறைத் தொண்டராய் வாழ்க்கையை அமைத்துக் கொண்டாலும், தமிழ் மறை பரப்புநராய் உலகை வலம் வந்த தனித்தொண்டர். சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை ஒரு முறை குறிப்பிட்டதுபோன்று ‘தனிநாயகம் தமிழ் உலகின் சின்னம்' என்னும் கூற்று, தனிநயாக அடிகளாருக்குப் பெருமை சேர்ப்பது மட்டுமன்று; தமிழுக்கும், தமிழருக்கும் பெருமை சேர்ப்பதும் ஆகும்.

உலகத் தமிழறிஞர்களை ஒன்றுகூட்ட, உயர் தமிழ் வளர்ச்சிக்குக் களங்கான உலகத் தமிழ் மாநாடுகள் திட்டமிடப்பட்டன. இரண்டாம் மாநாடு 1968-இல் சென்னையிலும், மூன்றாம் மாநாடு 1972-இல் பாரீசிலும், நான்காம் மாநாடு 1974-இல் யாழ்ப்பாணத்திலும், ஐந்தாம் மாநாடு 1981-இல் மதுரையிலும், ஆறாம் மாநாடு 1986-இல் மலேசியாவிலும், ஏழாம் மாநாடு 1989-இல் மொரிசியசிலும், எட்டாம் மாநாடு 1995-இல் தஞ்சையிலும் நடத்தப்பெபற்றன. இவற்றுக்கெல்லாம் வித்திட்ட மூலவர் தனிநாயக அடிகளார். அவர் மலேயப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த



பொழுது தாமே முன்னின்று முதல் மாநாட்டை நடத்திக் காட்டி வழிகோலினார். மலேய நாட்டின் அந்நாளையத் தலைமை அமைசச்சர் துங்க அப்துல்ரகுமான் மாநாட்டைத் தொடங்கி வைத்தபொழுது தனிநாயக அடிகளாரின் செயலாற்றலை வியந்து பாராட்டினார். ''எமது பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறை, பன்மொழிவாணராகிய ஓர் அறிஞரைத் தலைவராகப் பெற்றிருபப்பது இப்பல்கலைக்கழகத்தின் பெரும் பேறு. இங்கு நான் குறிப்பிட்டுக் காட்டுவது பேராசிரியர் தனிநாயகத்தைத்தான். அவரது தலைமையே பொறுப்பையும் பணியையும் புகழந்து கூறினார். முதல் மாநாட்டைச் சிறப்பாக நடத்தியதோடன்றி இரண்டு, மூன்று, நான்காம் மாநாடுகள் செவ்வனுற நடைபெறத் துணை நின்றார். ஐந்தாம் மாநாடு மதுரையில் நடைபெறும்பொழுது அவர் இவ்வுலகில் இல்லை. அவர்தம் இழப்பை,

> ''திருமறைக்காய்த் துறவேற்ற தியாக சீல!
> தீந்தமிழ்க்காய்த் துதேற்ற தொண்டர் வாண!
> அருமொழிகள் பலவற்றை அறிந்த மேலோய்!
> அகிலமெல்லாம் சுற்றிவந்தே ஆய்ந்த நூலோய்!
> பெருவளர்ச்சி கண்டுயர்ந்த நாட்டார் எல்லாம்
> ‘பேறுபெற்றோர் தமிழர்' எனச் சொல்லு மாறு
> உருவான மாநாட்டை உலகிற் கூட்டி
> உயர்வானில் கூட்டுதற்கோ ஓடிச் சென்றாய்''

என்று பாடி இரங்கிய தமிழன்பர் பலராவர்

உண்மைத் தமிழ் வளர்ச்சி, கூட்டத்தைக் கூட்டுவதால் மட்டும் அமைந்துவிடப்போவதில்லை. கூட்டத்தில் கூடிநின்று, கூவிப்பிதற்றிவிட்டு நாட்டத்தில் கொள்ளாவிட்டால் நாட்டுக்கோ, மொழிக்கோ எப்பயனும் விளையப் போவதில்லை. தமிழ் மொழிபற்றிய ஆய்வு உலக நிலைக்கு நிகராக நிகழ்ந்து கொண்டே இருத்தல் வேண்டும். அதற்கோர் ஆராய்ச்சி நிறுவனம் அமையவேண்டும். இது குறித்துச் சென்னையில் நடைபெற்ற மாநாட்டிலேயே பேசப்பட்டது. ஆயினும் அது உருப்பெறப் பாரீசில் நடந்த மாநாட்டில்

நிர்மான வடிவத்தில் கொண்டுவந்து செயல் படுத்தி யுனெஸ்கோவின் நிதியுதவியைப் பெற்றுத்தந்த பெருமை அடிகளாருக்கே உரியது. அதன் விளைவுதான் தற்பொழுது சென்னையில் இயங்கிவரும் உலகத் தமிழ ராய்ச்சி நிறுவனமாகும்.

உலகமெங்கணும் தமிழ்த்தூதுவராக உலா வந்த அடிகளார் ஆங்காங்கே தமிழின் அருமை பெருமைகளை எடுத்துக்கூறி உரையாற்றிய தோடு அமையவில்லை. தமிழர் பண்பாட்டை, நாகரிகத் தொன்மைக் கூறுகளை நிலைநாட்டிய தோடு நிற்கவில்லை. அங்குள்ள நூலகங்களில் எல்லாம் நுழைந்து, மறைந்து கிடந்த தமிழ்ச் செல்வங்களைத் தேடித் துருவி ஆராய்ந்து மக்களுக்குத் தந்தார். தமிழகத்தில் அச்சேறிய முதல் தமிழ் நூலைக் கண்டு தந்த சிறப்பு அவருக் குண்டு. அடியார் வரலாறு (Flos Sanctorum) என்னும் நூல் அவரால் ஒளி பெற்றது. 1586-ஆம் ஆண்டில் புன்னைக்காயலில் அச்சிடப்பெற்ற 669 பக்கங்களைக் கொண்ட அந்நூல் என்றிக் (Henry Herrinques) அடிகளாரால் எழுதப்பெற் றது. பார்வைக்குக் கிட்டாமல்போன இந்நூல் வத்திக்கான் நூலகத்தில் இருப்பதைக் கண்ட றிவித்த பெருமைக்குரியவர் அடிகளார் ஆவார்.

தமிழில் முதலில் எழுந்த அகராதி சதுர காதி எனினும், தமிழ் - போர்த்துகீஸ் அகராதி அதற்கும் முன்னையது. அந்தோணி டி பிரோயன் சாவால் தொகுக்கப்பெற்றது. 1679-ஆம் ஆண்டு அம்பலக்காட்டில் அச்சிடப்பெற்றது. அதுவும் தமிழகத்தில் கிடைக்கப்பெறாத நிலையில் இருந்தது. அதனையும் அடிகளார் தேடிக் கண்டு பிடித்து மலேயாப் பல்கலைக் கழகத்தின் வழியாக 1966-இல் மறு பதிப்பாக வெளி யிட்டார். இவரது பன்மொழி அறிவு சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் பயன்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகம் 1965-இல் வெளியிட்ட ஆங்கிலம் - தமிழ் அகராதியின் அறிவுரைக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

தனிநாயக அடிகளார் தாம் சார்ந்த சமயத்தை யும், துறவு நிலையையும் ஒருங்கே போற்றி யவர். தம் ஆற்றல் அனைத்திற்கும் தாம் ஏற்றிருந்த துறவு நிலையே அடித்தளம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். ''கத்தோலிக்கத் திருமறை அடியார்கள் அருள் ததும்பி வழியும் நீர்த்தேக்கம் ஆவர். இத்தேக் கத்தில் உருவாகும் ஆற்றல் மானிட ஆற்றலுக்கு மேம்பட்ட உருளைகளாகச் சுழன்று சமுதாயத் திற்குத் தேவையான மின்னாற்றலைத் தருகிறது. அதனால் ஒளிரும் விளக்குகள் விண்ணுலகிற்கு வழியமைக்கின்றன. அந்நீர்த்தேக்கத்திலிருந்து வெளியாகும் நீர் கடவுளின் கழனிகளாகிய மானிட ஆன்மாக்களுக்குப் பாய்கிறது'' என்பது அடிகளாரின் உள்ளக்கிடக்கையாகும்.

இத்தகைய சமயப் பற்றுறுதிமிக் கோராயினும் பிற சமயங்களையும் மதித்துப் போற்றினார். பிற சமய இலக்கியங்களில் பொதிந்து கிடக்கும் சிறந்த வரிகளை மேற் கோளாக அடிக்கடி எடுத்துக் கூறி மகிழ்வார்.

''யாவும் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும்
இம்மூன்றும்''

என்னும் பரிபாடல் வரிகள் அத்தகையன.

அவ்வாறே,

''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே''

என்னும் திருமந்திர அடிகளையும் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார்.

உலக மொழிகள் பலவற்றைக் கற்றறிந்து அவற்றின் சிறப்புக்களை உணர்ந்தவரர் அடி களார். எனினும் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழி உணர்வு அவரது வாழ்வில் இரண்டறக் கலந்து நின்றது. தொல்காப்பியம் குறித்து அவர் கூறும் பொழுது, ''தொல் காப்பியத்தை என் கைகளில் ஏந்தி விரிக்கும் பொழுது எனக்கு ஏற்படும் அத்தகைய உளக் கிளர்ச்சி வேறு எந்நூலிலும் ஏற்படுவதன்று. நம் பண்டைத் தமிழ் நூல்களைத் தொட்டதும் பல்லாயிரம் ஆண்டுகளாகத் திகழ்ந்து, பண்பில் வளர்ந்து, திருந்திய இலக்கிய இலக்கணப் பயிற்சி நம் கண்முன் நிற்கிறது'' என்கிறார். பேரறிஞர் அண்ணா, தாம் நடத்தி வந்த ''திராவிட நாடு'' இதழின் பொங்கல் மலர் ஒன்றில் அடிகளாரைப்பற்றிக் குறிப்பிட்டி ருப்பது நினைவுகூரத்தக்கது. ''மலேயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறையின்

பேராசிரியராய் இருக்கின்ற தனிநாயக அடிகளாரைப் பார்த்து உங்கள் சமயம் எது என்று கேட்டால் கிறித்தவம் என்பார். உங்கள் ஊர் எது என்று கேட்டால் யாழ்ப்பாணம் என்பார். உங்கள் மொழி எது என்று கேட்டால் தமிழ் என்பார். அவ்வளவிற்குத் தமிழ் உணர்வு கொண்டவர் அடிகளார். அந்தத் தமிழ் உணர்வு எல்லோருக்கும் வரவேண்டும்'' என்று அண்ணா எழுதியுள்ளார்.

அடிகளார் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் மட்டும் புலமையுடையாரல்லர். அனைத்து இலக்கியப் பரப்பிலும் நாட்டமும் நுண்மாண் நுழை புலமும் கொண்டவர். சான்றாக 'எழுத்தாளர் கல்கி' என்னும் நூலிலல், 'கல்கியின் வரலாற்று நாவல்கள்' என்னும் தலைப்பில் அவர் எழுதியுள்ள கட்டுரையைக் கொள்ளலாம். ''வரலாற்று நாவல் துறையில், கல்கியின் காலத்திற்குமுன், கல்கி எழுதியதைப் போன்ற வரலாற்று நாவல்கள் தோன்றவில்லை. கல்கியின் காலத்திற்குப்பின் தோன்றிய வரலாற்று நாவல் ஆசிரியர்கள், பெரும்பாலும் கல்கியின் மாணவர்கள் என்றே கூறுதல் வேண்டும்'' என்று குறித்து, மேனாட்டைச் சேர்ந்த சர் வால்டர் ஸ்கார்ட் என்பாரோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். ''மேனாட்டில் வரவலாற்று நாவலாசிரியர்களிற் சிறந்த முன்னோடியாக வாழ்ந்த அவர், தம் காலத்துப் பின்புலத்தில் நாவல்களைப் படைக்கவில்லை. கல்கியோ தாம் வாழ்ந்த காலத்தை அடிப்படையாக வைத்துப் படைப்புகளைத் தந்தார்'' எனப் பாராட்டுகிறார்.


தமிழின் தொன்மைச் சிறப்பினையும், தமிழரின் சால்புகளையும் உலகிற்கு அறிவிப்பதற்கென்றே ''தாய்ப் பண்பாடு'' (Tamil Culture) என்னும் ஆய்விதழைத் தொடங்கினார். அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி உலகெங்கணும் சென்று தமிழர்தம் பெருமையையும் ஆற்றலையும் அவ்விதழ் எடுத்துரைத்தது. காலப்போக்கில் கொள்வாரில்லாமையாலும், கொடுப்பாரில்லாமையாலும் அவ்விதழ் நின்று போயிற்று. ஆயினும், கிறித்தவமும் தமிழும் இரு கண்களாகக் கொண்டு உலகைக் காண அவரால் தொடங்கப்பெற்ற 'தமிழ் இலக்கியக் கழகம்' நிலைத்துப் பொன் விழாவைக் கொண்டாடும் பேறு பெற்றுள்ளது தொலைநோக்கோடு அவர் இட்ட அடிக்கல் இன்று உயர்ந்து நிற்கப் பலருடைய முயற்சியும், உழைப்பும், ஊக்கமும் காரணங்கள் ஆகும். எனினும் அந்த மூலங்களை நினைத்துப் பார்த்துப் போற்றுவது கிறித்தவர்க்கு மட்டுமன்று; தமிழர்க்கும் கடனாகும்.

(துணை நின்றவை : மா.க. ஈழவேந்தன், 'தவத்திரு. தனிநாயக அடிகள்' (கட்டுரைகள்), 'சுதந்திரன்' இதழ்கள், மார்கழி - தை, மாசி - பங்குனி, 1990)

★

திருக்குறள் ஒன்றே உலகப் பொது மறை

குறிஞ்சிச் செல்வர் **கொ.மா.கோதண்டம்**



திருக்குறள் ஒன்றே உலகப் பொதுமறை
திறனாய் வள் செப்பிய பொதுஉரை
அறநூ லிதுபோல் உலகத்தில் வேறிலை
அரிய இலக்கியம் திருக்குறள் போலிலை
மனுநூல் சட்டநூல் அறநூல் அதுயிலை
மண்ணதில் கீதையும் தத்துவம் வேறிலை
இன்ப நிடதமும் அறநெறி தொகுப்பாம்
இதுபோல் தம்ம பதமுமே வகுப்பாம்
வேமனர் பாடலும் சர்வக்ஞர் உரைகளும்
விழுமிய இராம தாசரும் கபீருமே
ஆமிவர் நூலெலாம் உபதே சங்களே
அறநூ லிலக்கிய அருகதை இதற்கிலை
குடியர செனும்பிளே டோநூல் நீதிநூல்
கௌடில்ய பொருள்நூல் சுக்கிர நீதியும்
படிக்கலாம் சாத்திர நூலிவை வாத்ஸா
யானர்நூல் மூன்றாம் பானுக்கு நிகரிலை
ஆகவே திருக்குறள் இந்திய தேசிய
ஆக்கநூல் உலகதின் பொதுமறை ஆக்கிட
ஏகநூல் ஆக்கிட தமிழரே எழுங்கள்
இன்றே முனைந்தே எடுப்போம் சபதம்!

உலகத் தமிழருக்குப் பண்பாட்டுச் சாளரம்

மறவன் புலவு **க.சச்சிதானந்தன்** (மேனாள் ஐ.நா.ஆலோசகர்)

செட்டிநாட்டுக்கு விழா ஒன்றுக்குப் போயிருந்தேன். திருமயத்துக்கு அருகே இராமச்சந்திரபுரத்தில் ஒரு வீட்டில் தங்கினேன். அது வீடல்ல, மாளிகை. இருபதுக்கும் அதிகமான அறைகள். நாற்சார முற்றங்கள் மூன்று. பல அடுக்களைகள். மாளிகையின் நான்கு சுவர்களும் நான்கு தெருக்களை ஒட்டி இருந்தன. மாளிகையில் ஒரே ஒரு பாதுகாவலர் மட்டும் இருந்தார். ஆண்டுக்கு ஒருமுறையே உரிமையாளரான நகரத்தார் இல்லத்தவர் அங்கு வருவார்களாம்.

யாழ்ப்பாணம் சிவன்கோயில் மேற்கு வீதியில் அரிசிமண்டி நடத்திய வணிகரான நகரத்தார் கட்டிய மாளிகையே அது. பர்மாவில் இருந்து அரிசியை இறக்கி இலங்கை முழுவதும் விற்பனை செய்தவர் அவ்வணிகர். மாளிகை மரவேலை முழுவதும் பர்மாத்தேக்கு. வரவேற்பு அறையின் அலங்காரம் முழுவதும் ஐரோப்பியக் கலைவண்ணம்.

செட்டிநாடு முழுவதுமே இத்தகைய பல மாளிகைகளைக் காணலாம். சைகோன், சிங்கப்பூர், பினாங்கு, ரங்கூன், மண்டலே, யாழ்ப்பாணம், கொழும்பு எனத் தென்கிழக்காசியாவின் வணிகத்தில் பல நூற்றாண்டு காலமாகப் பங்காற்றி வருபவர்கள் நகரத்தார்கள்.

அவர்கள் கொணர்ந்த செல்வமும் சொத்தும் அயலகப் பழக்க வழக்கங்களும் ஏராளம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் எனத் தொடங்கிக் கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள், திருக்கோயில் திருப்பணிகள் எனப் பல்துறை அறக்கொடைகளால் தமிழகம் பயன்பெற்றது. மாதாந்திர உண்டியல் வருகையால் பல குடும்பங்கள் செழித்தன.

முப்பது பழந்தமிழ் நூல்களைத் தனிஒருவரின் முயற்சியாகப் பதிப்பித்து ஆறுமுக நாவலரும், தொல்காப்பியம், கலித்தொகை உள்ளிட்ட 11 நூல்களை முதன்முதலில் அச்சுவாகனம் ஏற்றிய சி.வை. தாமோதரனாரும் தமிழகத்தின் பண்பாட்டுச் செல்வத்துக்குக் காலந்தோறும் உரமூட்டி வருவோர் வழிவந்த ஈழத் தமிழ் மரபினர். சிங்கப்பூர் கோவிந்தசாமியும் மலேஷிய முரசு மாறனும் யாழன் சண்முகலிங்கமும் கணிப்பொறித் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பால் தமிழகம் பயன்பெற்று வருகிறது.

நகரத்தாரின் நீண்ட காலப் புலம்பெயர் வணிகம். ஆங்கிலேயர் காலத் தமிழ்த் தொழிலாளர் புலம்பெயர்வுகள், எண்ணெய்ச் செல்வம் ஈர்த்த அண்மைக் காலத் தமிழர் புலம்பெயர்வுகள், ஈழப்போரினால் அகதிகளாய்ப் புலம் பெயர்வுகள் யாவும் திரை கடலோடித் திரவியம் தேடிவர வழிவகுத்தன.

தமிழகக் கரைகளுக்கு வெளியே தமிழர் தொடர்ந்தும் தமிழராக வாழ்வது எளிதானதல்ல. மலர்க்காகச் செட்டிகளும், கொழும்புச் செட்டிகளும் தமிழை மறந்து, தமிழராக வாழ்வதை மறந்து, புகுந்த மண்ணுடனும் பண்பாட்டுடனும் ஐக்கியமாகினர். பிஜி, மொரிசியசு, தென் ஆபிரிக்கா, சீசெல்சு, பிரான்சு இறியுனியன், சுரிநாம், ஆகிய நாடுகளுக்கு ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் அழைத்துச் சென்ற தமிழர், தமிழ் மொழியைப் பேச எழுத மறந்த தமிழராக வாழ்ந்து வருகிறார்கள். பர்மா, மலேசியா, சிங்கப்பூர், ஆகிய நாடுகளுக்குக் ஆங்கிலேயருடன் சென்ற தமிழர் மட்டும் தமிழை மறக்காமல் பண்பாட்டையும் மறக்காமல் வாழ்ந்து வருகிறார்கள். அண்மைக் காலங்களில் ஐரோப்பாவுக்கும் வட அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் புலம்பெயர்ந்த தமிழக, மற்றும் ஈழத் தமிழர்களின் சந்ததியினர் தமிழர்களாகத் தொடர்வார்களா? அன்றி அந்தந்த மண்ணுடன் ஐக்கியமாகி விடுவார்களா? இதைக் காலம் தான் உணர்த்தும்.

தம் தாய் நாட்டை விட்டுப் புலம் பெயர்பவர்கள் தமிழர் மட்டும்தான் அல்ல. கடந்த 500 ஆண்டுகளில் அதிகம் புலம்பெயர்ந் தவர்கள் அராபியர்களும் ஐரோப்பியர்களுமே! வணிகத்துக்காகவும் நாடு பிடிக்கவும் இவர்கள் கடலாடினர்.

தங்கள் மொழிகளையும் மரபுகளையும் எடுத்துச் சென்ற இவர்கள், சென்ற இடங்களில் அவற்றைப் பேணியதுடன் மற்றவர்கள் மீதும் திணித்தார்கள். 58 நாடுகளில் ஆங்கிலம் வழங்குகிறது. 46 நாடுகளில் பிரஞ்சு வழங்குகிறது. 24 நாடுகளில் ஸ்பானிய மொழி வழங்குகிறது. 24 நாடுகளில் அரபுமொழி வழங்குகிறது. டானிஷ், டச்சு, இத்தாலி, போத்துக்கேயம் ஆகியவை சில நாடுகளில் வழங்குகின்றன.

அடையாள உணர்வுத் தேடலுக்கும் பாதுகாப்புக்கும் மொழியும் பண்பாடும் முக்கியம் என்பதால், புலம்பெயர்ந்து வாழும் அமெரிக்க, ஐரோப்பியரைத் தத்தம் தாய்ப்பண்பாட்டுடன் ஈர்த்துப் பிணித்து வைக்கவும், சேர்ந்த நாட்டின் பண்பாட்டுடன் ஐக்கியமாகி விடாமல் இருக்கவும் ஐரோப்பிய அரசுகளின் சிறந்த அடித்தள அமைப்புகள் செயற்படுகின்றன.

தமிழர் விட்டு வந்த மலாக்காச் செட்டிகள் போன்றோரே ஆங்கிலோ இந்தியர். இத்தகைய கலப்பினர் பல நாடுகளில் உளர். எனினும் அவர்கள் ஐரோப்பிய மொழி-பண்பாட்டினைத் தொடரத் தேவையான அமைப்புகளை ஐரோப்பிய அரசுகள் அமைத்துள.

அல்லயன்ஸ் பிரஞ்சைஸ், அமெரிக்கத் தகவல் நடுவம், பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற அமைப்புகள் உலகெங்கும் உள்ளன. அவை இல்லாத நாடுகளில் அந்தந்த நாட்டுத் தூதரகங்கள் அப்பணியைச் செய்கின்றன.

ஏடனில் நான் தங்கியிருந்தபொழுது பிரிட்டிஷ் தூதரகம், தம் நூலகத்தைப் பயன் படுத்துமாறும், வாரம் ஒருநாள் இலண்டனில் இருந்து வரும் திரைப்படத்தைப் பார்க்க வருமாறும் நிலையான அழைப்பை எனக்குத் தந்ததற்கு ஒரே காரணம் நான் ஆங்கில மொழியைத் தெரிந்தவன் என்பதுதான். ஏனெனில் ஏடனில் அப்பொழுது கம்யூனிச அரசு இருந்தது. ஆங்கிலப் படங்களை வெளியே பார்க்க முடியாது. அங்குள்ள ஆங்கிலேயர், அமெரிக்கர், ஆங்கிலம் தெரிந்த ஆபிரிக்கர், ஆகியோர் பார்க்கும் வசதிக்காக, பிரிட்டிஷ் அரசு வாரம் தோறும் ஆங்கிலத் திரைப்படம் ஒன்றை விமானத்தில் அனுப்பும், இலண்டனில் வெளியாகும் நாளிதழ்கள், செய்தி இதழ்கள், நூல்கள் ஆகியவற்றையும் பிரிட்டிஷ் அரசு அனுப்பும்.

ஆங்கிலேயர் எங்கு புலம்பெயர்ந்தாலும் ஆங்கில மொழி - பண்பாட்டுடன் வாழ்வதையும் அடையாள உணர்வு போய்விடாமல் பாதுகாப்பதையும் தனது கடமையாக பிரிட்டிஷ் அரசு நினைப்பதன் நீட்டமே பிரிட்டிஷ் கவுன்சிலின் அமைப்பும் செயற்பாடும். பிரஞ்சுக்காரர் எங்கிருந்தாலும் பிரஞ்சுக்காரராகத் தொடர வேண்டும் என்ற பிரஞ்சு அரசின் கடமை உணர்வின் வெளிப்பாடே அல்லயன்ஸ் பிரஞ்சைஸ் அமைப்பும் செயற்படும். ஜெர்மானிய, டச்சு, இத்தாலிய டானிஷ் போர்த்துக்கேய அரசுகளும் இத்தகைய அமைப்புகளைப் பிற நாடுகளில் அமைத்துள.

புலம்பெயர்ந்த தமிழர்கள், புகுந்த நாடுகளில் தமிழராகத் தொடர்வதை ஆதரிக்க வேண்டும் என்ற கண்டோட்டம் தமிழ்நாட்டில் குறைவு. கலைக்குழு வேண்டுமெனில், பயணச்சீட்டுடன் உணவு உறையுளையும் சம்பளத்தையும் வெளிநாட்டுத்தமிழர் கொடுக்க வேண்டும், தமிழ் நூல்களை விலை கொடுத்து வாங்க வேண்டும்.

1968 இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கும் பின்னர்தான் தமிழக அரசு மட்டத்தில், அயலகத் தமிழர் பற்றிய

புரிந்துணர்வு ஏற்படத் தொடங்கியது. சிறு சிறு முயற்சிகளாக அப்புரிந்துணர்வு வெளிப்பட்டது.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் பிஜித்தமிழருக்குத் தமிழ் கற்பிக்கப் பாடத்திட்டம் வகுத்து உதவியதுடன் தமிழ் நூல்களை அச்சிட்டு வழங்கியது. மொரிசியசு சென்று வந்த அந்நாள் அமைச்சர் இராசாராம் அந்நாட்டுக்குத் தமிழ் நூல்களை அனுப்பினார். அண்மையில் அங்கு இசை ஆசிரியர் ஒருவரை ஓராண்டுக்கு அனுப்பியிருந்தது தமிழக அரசு. ஈழத்துத் திருக்கேதீச்சரத் திருப்பணிக்குத் தமிழக அரசு கல்தூண்கள் அமைத்துக் கொடுத்தது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்குத் தமிழ் நூல்களைத் தமிழக அரசு வழங்கியது. உலகத் தமிழாராய்ச்சியாளனா இணைக்க அனைத் துலகத் தமிழாராரய்ச்சி நிறுவனமும், உலகத் தமிழரை இணைக்க உலகத் தமிழ்ச் சங்கமும் அமைந்தன. தமிழ்ப் பல்கலைக்கழகம் உலகத் தமிழருக்காகத் தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புகளை நடத்தியது. சென்னை, திருநெல்வேலிப் பல்கலைக் கழகங்கள் உலகத் தமிழருக்கு அஞ்சல்வழிக் கல்வியை அறிமுகம் செய்தன. மருத்துவம் மற்றும் தொழில் நுட்பக் கல்விகளில் உலகத் தமிழருக்கு இடஓதுக்கீடுகள் அமைந்தன. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இவ்வழி முயற்சியே.

அரசு சாரா முயற்சிகளாக, பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகம், உலகத் தமிழர் மையம் போன்றவை அமைந்து தமிழகத்துக்கும் உலகத் தமிழருக்கும் இடையே உறவுப்பாலங்கள் அமைத்தன. மார்கழியில் சென்னையில் உலகத் தமிழ்க் கலைஞர்களுக்காகத் தனியாக இசை நடன விழா அமைந்து வருகிறது.

பாலைவனத்தில் பசுஞ்சோலைகளாக இடையிடையே இவை தெரிந்தாலும் உள்ளக் கட்டமைப்புள்ள தொடர்ச்சியான அமைப்பு எதையும் தமிழக அரசு நிறுவவில்லை. உலகத் தமிழச் சங்கம் உயிர் பெறவேயில்லை. அல்லயன்ஸ் பிரஞ்சைஸ், பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற பண்பாட்டுச் சாளரம் ஒன்றைத் தமிழக அரசு அமைக்கவில்லை.

ஓர் இலட்சம் தமிழருக்கு மேல் வாழும் பிஜி, மொரிசியசு, இறியுனியன், தென்ஆபிரிக்கா, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, எமிரேட்ஸ், இலங்கை ஆகிய பத்து நாடுகளிலும் பத்துத் தமிழ்ச் சாளரங்களை அமைக்க இதுவே நல்ல சூழ்நிலை. அச்சாளரங்கள் வழி தமிழ்த் தென்றல் அந்த நாடுகளுக்குள் வீசும். தமிழகத்தில் வெளிவரும் நாளிதழ்கள், சஞ்சிகைகள், நூல்கள், ஒலி ஒளி நாடாக்கள் அம்மையங்களில் தவழவேண்டும். தமிழ்நாட்டைப் பற்றிய சுற்றுலா, கல்வி, மருத்துவத் தகவல்கள் அங்கு சேரவேண்டும். அந்நாட்டுத் தமிழர் தமிழகத்துடன் தொடர்பு கொள்ளவும் தமிழகத் தமிழர் அந்நாட்டுத் தமிழருடன் உறவு கொள்ளவும் இப்பண்பாட்டுப் பலகனி பாலமாக அமையும். கலைக்குழுக் களையும் ஓவியர், எழுத்தாளர், தமிழ்க்கணிப் பொறி வல்லுனர்களையும் அந்நாடுகளுக்கு அனுப்ப இச்சாளரம் பயன்படும். தமிழ்க் கலைச்சொல் சீர்மை, கணிப்பொறித் தமிழ் வளர்ச்சி, தமிழ் இலக்கணச் சீர்மை போன்ற தமிழ் வளர்ச்சி முயற்சிகளை ஒருங்கிணைக்க இச்சாளரம் உதவும்.

இலங்கையில் ஆட்சி மொழி, சிங்கப்பூரில் தேசிய மொழி, மலேசியாவிலும் மொரிசியசிலும் பிஜியிலும் பாடமொழி எனப் பரந்து பயனுறுத்தி வரும் மொழியாகத் தமிழ் இருப்பதால், உலகத் தமிழர் தத்தம் பண்பாட்டு அடையாளங்களைப் பேண, உள்ளகக் கட்டமைப்புள்ள தொடர்ச்சியான அமைப்பை ஏற்படுத்துவதே தமிழகத்தின் தொப்புழ்கொடிக் கடமையாகும்.

திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழரால் தமிழகம் பெற்ற நன்மைகளுக்கு ஈடாக, இன்றைய உலகமயமயாக்கச்சூழலில் தமிழகம் உலகத் தமிழருக்குச் செய்ய வேண்டிய முக்கிய மான கடமைகளுள் இதுவுமொன்றாகும்.

★

முல்லைப் பாட்டு

ஆ.அய்யம்பெருமாள் எம்.ஏ. எம்.எட்.



போரென்றால் புலிக்குணம் பொங்கு மின்பக் காதலென்றால் பூக்குணம் என வாழ்ந்த பெருமைக்குரியவர் பழந்தமிழர். அவரது வாழ்வியலைச் சித்தரித்துக் காட்டுவன சங்க நூற்கள், தொகையும் பாட்டுமெனப்படும். அவை இலக்கியச் செழுமையும் இலக்கணச் செம்மையும் வாய்ந்தவை.

பண்டை இயற்கை வளங்கலெல்லாம் - பத்துப்பாட்டின் ஐந்தாம் பாட்டு முல்லைப் பாட்டு காடும் - கடிமண முல்லையும் கமழும் அரிய பெயர்.

நூற்று மூன்று அடிகளைக் கொண்டு விளங்கும் - இச்சிறு நூலைப் பாடியவர் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார்.

நக்கீரன் நப்பூதன்
நன்னாகன் நப்பசலை
அக்கூர் மாசாத்தி

ஒண் சாத்தன் சிலம்பெடுத்த தக்கோன் இளங்கோ என அடுக்கிப்பாடும் கண்ணதாசன் வரிகளை நினைந்து கொள்ளுங்கள். பூதன் என்பது இயற்பெயராகலாம். சிறப்பினைக் குறிப்பன 'ந' கரம் 'ஆர்' காரம் என்பன போக நீள் புகார் நகரிலிருந்து சதுக்கப் பூதத்தின் நினைவாக இப்பெயர் இடப்பட்டிருக்கலாம் என்பது உ.வே.சாவின் கருத்து.

இல்லிருத்தல் 'முல்லை' என இலக்கணம் வகுக்கப்பட்டிருப்பதனை நாமறிவோம். காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்திற்குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என விரிந்து, தலைவன் பிரிந்து சென்றதனைத் தலைவி பொறுத்துக் கொண்டு கற்பில் வழுவாது பொறுப்புடன் இருத்தல் எனச் சிறந்து வருவது இதன் உள்ளீடு. எத்தகைய துன்பம் வரினும் தன்னிலையில் தளராது விளங்கும் ஒருத்தியை முல்லை சான்ற கற்பினள் என்பர். அத்தகைய ஒருத்தியின் திறத்தை விளக்குவதே முல்லைப்பாட்டு.

''போர் மேற் செல்கிறேன் எனவே உன்னைப் பிரிகிறேன் நான் மீளும் வரை நீ ஆற்றியிருக்க வேண்டுமெனத் தலைவன் சொல்ல ''அப்படியே இருப்பேன்'' எனத் தலைவி பதிலுரைக்க, சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வந்து அவளைக் கூடி இன்புற்றான். இதுவே முல்லைப்பாட்டின் மையக்கருத்து.

தலைவன் இன்னும் வரவில்லை ஆனால் கார்காலம் வந்து விட்டது. நேமியொடு வலம் புரி பொறித்த மாதாங்கு தடக்கை மா அல். அவன் வாமனனாக வந்து வந்து பின் திரிவிக்கிரமனாகி எடுத்த பேருரு வொத்த பனிக்கடல் பருகி எழுந்த மேகம், உலகை வளைத்துக் கொண்டு மழை பொழிந்த கார்கால மாலைப்பொழுது ஒன்று அப்போதினில் ஊர்ப் புறத்தே சென்றனைந்த பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர்.

எதிர் பார்த்த விரிச்சியும் ஒலிக்கிறது. யார் மூலம்? ஓர் ஆய்மகள் மூலம் குளிரால் நடுங்கும் பசலைக் கன்றைப் பார்த்து இரங்கி வருந்தற்க கோவலர் செலுத்திக் கொண்டு வரும் நின் அன்னை இன்னே வருவள்'' என்றாள். இதுவே விரிச்சியாக அதாவது நற்சொல்லாக அமைந்து விட்டது. பெருமுது பெண்டிற்கு தலைவியிடம் சென்று தேற்றலாயினர். தேறுவாளோ நங்கை? மாட்டாதவளாகி பூப்போல் உண்கண் பூவம்பு முத்து உறைப்ப வீற்றிருந்தாள் அவள்.

சரி இனி நாம் அவளின் அவனைத் தொடரலாம். அவன் பரந்த பாடியில் அதாவது அகன்ற பாசறையில் உள்ளான்.

திணை இலக்கியம் என்பதனால் கான் ஆறுபாயும் காடும் வேண் நாறும் பிடவமலரும், காறுகளும், வேட்டுவ அரணும் முன் புரிசை வளைந்திருக்கும் பாசறையும் சிறப்பாகப் பேசப்படுகின்றன முல்லைப்பாட்டில்.

நாற்சந்திக் காவலுக்கு நின்ற யானைகள் கரும்பையும் நெல்லையும் அதிமதுரத் தழைகளையும் தின்னாமல் அத் தழைகளினால் தம் நெற்றியினைத் துடைத்துக் கொண்டு நிற்க, பரிக்கோலினாகிய கரிப்பாகர்கள் கோலினாற் குத்திக் களைங்களைத் தின்னத்தூண் முடிகின் றனர். நாற்படையுள் சிறந்தது வேழப் படையன்றோ?

உறைவிடங்களாக வீரத்தை வெளிப் படுத்தவுதவும், வில், தோல், பரிசை அதாவது கேடயம் ஆகியவற்றைக் கொண்டு பாசறை சமைத்திருப்பது அருமை. பரிசாலையென்றில் இவையும் தழையும் பயன்பட்டிருக்கும் போர்க்களம் என்பதனால் வில்லும் கிடுகும் (கேடயமும்) பயன்பட்டிருக்கின்றன. இக் கூடாரங்களெல்லாம் வீரர்களுக்கென வேறாகவும் - தலைவன் உறையும் பாசறை வேறாகவும் விளங்குகிறது.

தற்போதைய ஷாமியானாவை ஒத்த கண்டத்திரையினால் அமைக்கப் பட்டிருந்தது. மன்ன பாசறை. அங்கு குறுந்தொடியணிந்த முன்கையும், கூந்தல் அசையும் சிறுமுதுகும் உடைய பெண்கள் ஒள்வாள் கட்டிய இடை யுடையோர், கச்சை யணிந்த கொங்கைமாதர் ஆகியோர் பாவை விளக்குகளை அவியாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

நெடுநா மணி முழங்கி கட்டிக் காட்டிய நள்ளிரவு வெள்ளிய துகில் அணிந்த பெரு மூதானர் என்னும் மெய்க்காப்பாளர்கள் மன்னவனைச் சூழ்ந்து நிற்கின்றனர்.

அம்மட்டோ! பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள் குறு நீர்க் கன்னல் என்னும் நீர்க்கடிகாரம் காட்டும் நேரம் இதுவாகும் என்றுரைத்து நிற்கின்றனர்.

மணற் கடிகையும் குறு நீர்க்கன்னலும் எவ் வாறிருக்கும்? அவற்றின் வடிவம்தான் என்ன?

ஃபேவர்லூபா கடிகாரத்தில் காணப்படும் அடையாளப் படத்தைக் கண்டு தெரிந்து கொள்க.

இனி மத்திகை அதாவது குதிரைச் சம மட்டி (சவுக்கு) வளைந்து தொங்கும் மெய்ப்பை இறுக அணிந்து அச்சந்தரும் தோற்றத்திற்குக் காரணமான முரட்டு மேனியராய் விளங்கும் யவனர்கள் புலிச்சங்கிலியைத் தொங்கவிட்டு, திருமணி விளக்கம் காட்டி, எழினி அதாவது திரைச்சீலைகளால் இயற்றியிருக்கும் ஈர் அறைப் பள்ளியுள், வாய்ப்பேச்சற்று சைகை காட்டிப் பேசும் மிலேச்சர் காவல் காக்கின்றனர் இவர்களை நப்பூதன், உடம்பின் உரைக்கும் உரையா நாவினார் என்று நாசுக்காக குறிப்பிடுகிறார். ஆங்கிலத்தின் Mutes இவர்கள் ஊமர்கள் அரண்மனை ரகசியம் அம்பலத்திற்கு வராதிருக்க இத்தகைய ஏற்பாடுகள்:

இத்தகு பாசறையில் தலைவன் உள்ளான். போர்க் கருமமே கண்ணாக சிந்தனை வயப் பட்ட நிலையில் உள்ளான் கண்படை பெறா அது காட்சி தருகிறான். அதாவது உறுக்கம் என்பதனை ஒட முனிந்த நிலையில் அவன் உள்ளான். அவன் சிந்தனைத் திரையில் நிழல் ஆடுவன கரியும் - பரியும் தான் பகைவர் எடுத்தெறி வேற்படை பாய்தலின் புண் கூர்ந்து தம் பிழைகளை மறந்த வேழங்களை அவன் நினைத்துக் கொண்டிருந்தானம். அடுத்து யானைப் படைகளை வென்ற சேனைத் தலைவர்களை அவன் நினைந்து பார்க்கிறான்.

அடிபட்ட பாம்பு துடிப்பதைப் போல் துடிதுடித்து, அறுபட்டு விழுமாறு களிறுகளின் புழைக் கைகளை வெட்டித் தள்ளி சோறு வாய்த்து ஒழிந்தோர் அஃதாவது கும்ப கர்ணனைப் போல் செஞ்சோற்றுக் கடன் கழித்த வீரர்களே அவர்கள் அவர்களை நினைக் காமலிருப்பானா?

பகையம்பு பாயப் புண்ணுற்று உண்ணாது உழலும் பரிகளைச் சுற்றியும் அவன் சிந்தனை சுழன்ற படுக்கையில் ஊன்றிய வண்ணமும் தலையணியைத் தடவிய வண்ணமும் அவன் கைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவன் நெடிது நினைந்து கொண்டிருக்கிறான். போர்ச் சிந்தனை சாதாரணமானதா? என்ன?

இப்படியொரு பாசறைக் காட்சியைக் காட்டுகிறார் புலவர்.

கடமையே நோக்கமாக, கருமமே கண் ணாகப் பிரிந்து சென்றவனல்லவா தலைமகன். அதனால் தானே ''ஆற்றியிரு'' என்று சொல்லிச் சென்றான். ஆற்றியிருப்பேன் என்று தானே அவள்

பதிலிறுத்தாள் ஆற்றியிருக்க ஒண்ணுமோ? பெண்ணல்லவா? ஆற்றாமை மேலோங்குகிறது தலைவனை எண்ணி ஆற்றியிருக்கத் தோன்று கிறது. தலைவனின் கடமையை எண்ணி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகிறாள், ஆயினும் நீடு நினைந்து தன்னைத் தேற்றியும், நெகிழும் கைவளைகளை நீங்காமல் தடுத்துத் திருத்தியும், மயங்கியும், நெட்டு யிர்த்தும் அம்பு தைத்த மயில் போல் நடுங்கியும், அணிகலன்கள் நெகிழவும், எழுநிலை மாடத்தில் தலைவி அமளியில் கிடக்கிறாள்.

அந்நிலையில் அவள் செவிகளில் நெடுந் தேர் பூண்ட மாக்கள் எழுப்பிய ஆரவார ஒலி விழுகின்றது. ஓகோ கார்காலந் தொடங்கி விட்டதா என்ன? தலைவனும் அவன் சகாக்களும் மீண்டும் வருகிறார்கள் போலும். அதுதான் இத்தனை அமளி, ஆரவாரம் வருகிற வர்கள் பகைப்புலம் கவர்ந்த பெருந்தனையர் வெற்றிக்கொடி தூக்கியவர்கள், சங்கொலிப் பவர்கள், கொம்பு ஊதுபவர்கள். அவர்கள் மீண்டு வரும் பெருவழியிலெல்லாம் கார்காலத் தொடக்கம் தன் கைவரிசையைக் காட்டிக் கோலம் செய்துள்ளது. புலவர் அதனைப் புனைந்த சித்திரமாகக் காட்டுகிறார் பார்ப்போமா.

காயா அஞ்சனம் மலர
முறியினர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை பூக்கத்
தோடார் தோன்றி குருதி பூக்க

செடி கொடி பற்றிய சசித்தனின் தாவரப் பார்வையும் கவிஞனின் கலைப்பார்வையும் இணைந்த சொல்வோவியத்தின் வர்ணக் கீறல் கள் இவ்வரிகள்.

காயா அஞ்சண வர்ணத்தில் அதாவது கருமையாகப் பூக்கின்றது. தளிரும் இணரும் (இணரூழ்த்தும் நாறா மலரனையர்.... குறள் நினைவுக்கு வந்திருக்குமே) தழுவியப்படி வளரம் கொன்றை பொன வர்ணத்தில் அதாவது மஞ்சள் நிறத்தில் பூக்கின்றது, ஒலியுமிழ்கிறது. கோடல் என்றும் வெண்காந்தள் அங்கை வடிவில் பூக்கின்றது. தோன்றிச் செடி குருதி நிறத்தில் பூத்துக் குலுங்குகிறதாம்.

அணிகளின் அரசியென உவமையைச் சொல்லுவர் உவமையே பலவகை நிற உவமை-வடிவ உவமை இப்படி 'இங்கே நிற உவமையும், வடிவ உவமையும் கைகோத்து வருகின்றன. புலவரின் நுண்மான் நுழைபுலம் அத்தகையது.

ஓங்கு பெருஞ் செந்நெற் ஊடுகயலுகள் என்பபாள் ஆண்டாள் அது போல் முல்லைப் பாட்டிலும் வருகிறது.

திரிமருப்பு இரலையொடு மடமான் உகள என்கிறார் நப்பூதனார். முறுக்கேறிய கொம்பு களையுடைய கலைமான்களொடு பெண்மான் கள் துள்ளிச் செல்கின்றன. பொருது மீளும் போராளிகள் பேரொலி கூட்டியிருளும் பார மான தேர்கள் இவற்றின் ஆரவாரமா? இல்லை இயல்புணர்ச்சியா? தெரியவில்லை முல்லை நிலத்தில் மான்கள் துள்ளி விளையாடுகின்றன.

தலைவியின் உள்ளம் மகிழ்ச்சியினால் துள்ளத் தொடங்கியிருக்கும் விரிச்சி பொய்க்குமோ?

முல்லைப் பாட்டை நாம் துருவிப் பார்க் கையில் நாம் மீண்டும் பயன்படுத்த வாய்ப்பான சொற்கள் கிடைக்கின்றன. எழிலி, கோவலர், கவளம், கிடுகு, கச்சு, மெய்ப்பை எழினி போன்றவை.

சங்க காலத்திலும் அதற்கு முன்பாகவும் தமிழகத்தில் புராண இதிகாச செய்திகள் பரவி யிருந்தன என்பதனைத் தெரிந்து கொள்கிறோம்.

நனந்தவை உலகம் வளை, நேமியொடு
வலம்புரி பொறத்த மாதாங்கு தடக்கை
நீர் செல நிமிர்ந்த மா அல்.

திருமாலின் திருவவதாரத்தைச் சுட்டும் வரிகள் இவை.

அன்று நிகழ்வில் இருந்த சில வழக் கங்களில் விரிச்சி கேட்டலும் ஒன்றாக விளங்கியதனை நாம் தெரிந்து கொள்கிறோம்.

....நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலர் தூ உய்க் கைதொழுது
நின்று விரிச்சி கேட்டனராம்.

அகத்துறைச் செய்திகளும் - புறத்துறைச் செய்திகளும் விரவி வருதலை முல்லைப் பாட்டில் காணலாம். ஆற்றியிருத்தலும் ஆரமர்



தரைமீது நீந்துகின்ற வித்தை!

முத்தமிழ்க் கவிஞர் முனைவர் கோ.மோகனரங்கன்

தாய்மொழியில் கற்றவர்க்கே வேலை என்னும்
கட்டத்தைக் கொண்டு வரவேண்டும்! மாற்றார்
தாய்மொழியை நாம்மதிப்போம்! அடுத்தவர்நம்
தமிழ்மொழியை மதித்திடவும் வேண்டும்! எங்கும்
தாய்மொழியில் கற்பிக்காக் கல்விக் கூடம்
தரைமீது நீந்துகின்ற வித்தை! என்றும்
தாய்மொழியைப் புறக்கணித்தால் உலகின் முன்னே
தனித்தன்மை இழந்தவராய் விளங்க நேரும்!
அன்னையினை மதிப்பதற்குப் பாடம் சொல்ல
அயல்நாட்டான் வரலாமா? மூடிக் கொண்டே
கண்ணிரண்டைத் திறந்துவைக்க அயலூருக்குக்
கடிதங்கள் அனுப்புவதா? தன்வாயால்தான்
உண்பதற்கு மறுத்துவிட்டுப் பிறன்வா யாலே
உண்பவனும் உலகத்தில் இருக்கின்றானா?
எண்ணமெலாம் அறியவைக்கத் தமிழிருக்க
இன்னும்ஆங் கிலத்தின்பின் சுற்றலாமா?

உலகமொழி ஆங்கிலமாம்! மறுக்கவில்லை!
உன்வீட்டு மொழியென்ன? 'என்றன் தாயார்
மலடியெனச் சொல்லுகின்ற மைந்தன் உண்டா?
மணித்தமிழால் முடியாத தொன்றுமில்லை!
நிலத்திலுள்ள கலையனைத்தும் விளக்க வல்ல
நிகரற்ற தாய்த்தமிழில் கல்வி கற்போம்!
இலைகளுக்குள் மறைந்து கொண்டு கனிகள் இல்லை
என்று சொல்லி எத்தனை நாள் கழிப்பதிங்கே?
அஞ்சுகின்ற தமிழ்மகனே! இன்னும் இன்னும்
ஆங்கிலத்தின் மயக்கத்தில் இருந்தால் சான்றோர்
நெஞ்சுசுடும்! நினைவுசுடும்! வையம் எங்கும்
நிகரற்ற தமிழுக்கு முதன்மை தந்தால்
தஞ்சமென முன்னேற்றம் வந்து விட்டுத்
தலைவாசல் நின்றிருக்கும்! ஆட்சி செய்வோர்
கொஞ்சுதமிழ்க் கோலங்கள் துறைகள் தோறும்
கோலோச்ச இப்போதே வழிசெய் வீரே!

செய்வதும் அரசன் முதல் அணையா விளக்கை காப்போர் வரை பற்பல பணியாளர்களை முல்லைப் பாட்டு நமக்கு அறிவிக்கிறது.

பாசறைகளும் எழுநிலை மாடங்களும் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

நால்வகைப் படைகளும் பயன்பட்ட தனை முல்லைப்பாட்டு நன்கு வருணிக்கிறது.

போர்க்கருவிகள் பற்றிய வருணனை களும் பொழுதுக்காட்டிகள் பற்றிய செய்தி களும் வந்து நம்மை மகிழ்விக்கின்றன.

வலி புணர் யாக்கை வன்கள் யவனர் என பேசப்படுகின்றன. யவனர்களைக் கிரேக்க நாட்டினர் என்று கூறுகின்றனர். சாண்டில்யனின் யவனராணியை எண்ணிக் கொள்ளுங்கள். யவன நாடு என்பது ஐம்பத்தாறு நாடுகளில் ஒன்றாகக் காட்டப்படுவதும் உண்டு. ஐம்பத் தாறு நாடுகளும் பாரத மண்ணில் உள்ளவையா, அயல் மண்ணிலுள்ளவையா? யவனர்கள் கம்மாளர் என அகராதி கூறுவது ஒரு பக்கம்.

தலைவி ஆற்றியிருந்து தலைவனின் கடமைக்கு ஒத்துழைப்பது இன்றியமையாதது என்பதனை முல்லைப்பாட்டு கோட்டிட்டுக் காட்டுகிறது.

உவமைகளும் உருவங்களும் அணி வகுக்க முல்லை நில வருணனை முல்லைப்பாட்டில் முத்திரை பதித்துள்ளது.

தொடி சுமக்கும் முன்கையினரான மகளிர் தாம் அணிந்துள்ள கச்சில் வாள் சுமக்கும் வீராங்கனைகளாகப் போர்ப் பாசறைகளில் பணி செய்வதனை முல்லைப்பாட்டு தெரிவிக்கிறது.

பேசும் இயல்பினை இழந்து உடம்பின் உரைக்கும் உரையா நாவினரோடு, தோன்றி தொழுது வாழ்த்தி பொழுது அளந்து கூறும் நாழிகைக் கணக்கர்கள் ஒருங்கே பணியாற்றும் பாசறைகளை முல்லைப் பாட்டு நாடக நயந் தோன்ற நவில்வது சிந்தைக்கு இன்பம் பயப்பதாகும்.

★

நட்புறவு

ஆ.பெருமாள், எம்.ஏ., எம்.எட்.,

உறவு என்பதின் பொருள் நட்பு, விருப்பம், சுற்றம், பொருத்தம், அடைதல் என்பவனாகும். உறவு என்பதின் பொருளில் ஒன்றான நட்பு என்பது குறித்து ஈண்டு சுருக்கமாக விளக்க யாம் ஆசைப்படுகிறோம்.

உறவின் மூலமாகத் தான் நட்பை வளர்க்க முடியும். நாம் வாழ்வில் முதலில் தாய், தந்தை, உடன் பிறந்தவர், சுற்றத்தார், அயல் வீட்டார், ஊரார், நாம் சந்திப்போர், சந்திக்காத சந்திக்க முடியாதவர்களுடனும் கூட உறவை உண்டு பண்ணும் வகையில் இன்று அறிவியல் வளர்ந்துள்ளது. உறவின் மூலம், அன்பையும், நட்பையும் மனித நேயத்தையும் பண்பையும், பாசத்தையும் வளர்க்க முடியும்.

உறவினர்கள் : உறவினர் என்பவர் யார்? இரத்தப் பிணைப்புடன் உள்ள உறவே உறவு என்று எண்ணியிருந்த காலம் மலை ஏறி விட்டது. இன்று தமிழகத்தில் பிறந்தோர் பணிக்காக அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, பிரெஞ்சு, உருசியா போன்ற வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு உறவினரர்கள் யார்? உடன் பிறந்தவர்களும், உற்றார்களும் அல்ல. அவர்களுடன் பணிபுரிகின்றவர்கள் மற்றும் அடுத்து வாழ்கின்றவர்களுமாகும். இப்படிப் பட்டவர்களின் நட்பே ஆபத்துக் காலத்தில் நமக்கு உதவுகின்றது. உறவு என்று கூறும் போது நாம் அவர்களுக்கு உரிய காலத்தில் உதவுவது, அவர்கள் நமக்கு உதவுவதுமாகும். எடுத்துக் காட்டாக இராமனுக்கு குகன், வாலி, வீடனன் ஆகியோர் நம்பியராகி உதவியதைக் கூறலாம்.

வள்ளுவனாரின் வெள்ளைக் குறட்பாவில் நட்பு, நட்பு ஆராய்தல் தீநட்பு கூடா நட்பு ஆகிய அதிகாரங்களில் நட்பைப் பற்றி அழகுற எடுத்தியம்பி உள்ளார். நட்பை இயற்கை நட்பு, செயற்கை நட்பு என இருவகையாகப் பிரிக்கலாம். இயற்கை நட்பு வளர்பிறை போல் நாளும் வளரும், செயற்கை நட்பு முழுமதி குறைவது போல் குறையும். உண்மையாக நட்பு கொண்டவர் தவறு செய்யும் போது திருத்துவர் இதனை.



''நகுதற் பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு''
என்கின்றார் வான்மறை வள்ளுவர்.

இன்று உறவுகள் எல்லா நிலையிலும் வளர்ந்துள்ளது. அவை பயண உறவு, கூட்டுறவு, இயக்க உறவு பன்னாட்டுத்தமிழுறவு, நாட்டுறவு உலக உறவு, ஆன்மீக உறவு, அரசியல் உறவு, விளையாட்டு உறவு என உறவுகள் பலவகையில் வளர்ந்துள்ளன.

வேற்று நாடுகளிலிருக்கும் போது மொழி உறவு, நாட்டுறவு வளருகின்ற வாய்ப்பு இயற்கையிலே ஏற்படுகின்றது. இந்நட்பு உறவாக மாறும் போது எல்லா நிலையிலும் முன் வந்து உதவிடவும், உயிர் கொடுக்கவும் தயங்க மாட்டார்கள்.

நம் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் பணியாற்றும் போதும், இயக்கங்களில் பணிபுரியும் போதும், பலரைச் சந்திக்கின்றோம். அவர்களில் சில நண்பர்கள் உறவினர்களாகி விடுகின்றார்கள். இது தான் ''நட்புறவு'' இவ்வுறவுக்குச் சாதி, மதம், இனம் மொழி, பழக்கவழக்கங்கள் குறுக்கிடுவதில்லை.

12.2.1993ல் ''நாடெங்கும் தமிழ் செழிக்க நடைப்பயணம் மேற்கொண்டதின் வாயிலாக நம் பன்னாட்டுத் தமிழுறவு'' மன்றம் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றது. நம் உறவு வளர்ந்து தமிழ் உறவின் காரணமாக, தமிழ் வளர முதல் ஐந்து வகுப்புகளிலும் தமிழே பயிற்று மொழி என்பதற்கு அரசு ஆவன செய்து வருகின்றது. தெருவெல்லாம் தமிழ் முழங்க ஆவன செய்து வருகின்றோம். தமிழ்ப் பயிற்று மொழியாகி தமிழன் உயரும் காலம் விரைவில் வந்திட தமிழ் உறவு ஆவன செய்யும் என்பதில் எனக்கும் கிஞ்சித்தும் ஐயமில்லை. அயல் நாடுகளில் நடைபெறும் உலகத்தமிழ் மாநாட்டில் நாம் கலந்துகொள்ளும் காலம்வெகு தூரத்தில் இல்லை.

தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்று வரும் ஜெர்மனி நாடுதான் அதிகமான நோபல் பரிசுகளைப் பெற்றுள்ளது. நாமும் உலகில் உயர்வான நோபல் பரிசினைப் பெற்றிட நம் தாய்மொழியாம் தமிழ்மொழி வாயிலாகக் கல்வி கற்றிட வேண்டும். திறமையானவர்கள் உலகமொழியாம் ஆங்கிலம், இந்தியமொழி யாம் இந்தி போன்ற பன்மொழிகளை படித்துப் பன்மொழிப்புலவராவதை நாம் எதிர்ப்ப தில்லை.

இந்திய ஆட்சிப்பணித்தேர்வில் (ஐ.ஏ. எஸ். தேர்வில்) சிலர் தாய்மொழியில் பயின்று பட்டம் பெற்றவர்கள். இதில் சிலர் தனித் தமிழிலும், சிலர் தமிழில், அறிவியல் பாடங் களையும் கற்றவரர்கள் என்பது பெருமைப் படக்கூடியது.

நம் தமிழ்மொழியிலுள்ள அரிய நூல்களை ஆங்கிலம், இந்தி மற்றும் உலக மொழிகளில் மொழி பெயர்த்திட நம் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் ஆவன செய்திட வேண்டும். அப்போது தான் தமிழின் எளிமை, புலமை, கருத்தாளம் முதலியவற்றை மற்றோர் புரிந்திட முடியும். பிற மொழிகளிலுள்ள இலக்கியங்கள் விஞ் ஞானக் கண்டு பிடிப்புகள் முதலியவற்றை உடனுக் குடன் தமிழில் அறிந்திட தமிழில் மொழிப்பெயர்த்திட பன்னாட்டுத் தமிழுறவால் ஆணை செய்திட வேண்டும்.

நட்புறவால் மனித நேயம் வளர்கின்றது. மனிதர்கள் அனைவரும் ஒன்றே. ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் என்பதின் அடிப்படையில் நட்புறவு வளருகின்றது. எத்தெய்வத்தை வணங்கினாலும், எந்தமதமாக, எந்தச்சாதியாக இருந்தாலும் அனைவரும் ஒன்றே, அவரும் புனிதரே என்று மதிக்கும் மனப்பக்குவம் வேண்டும். அவரவர் விருப்பம் போல் விரும் பிய தெய்வத்தை வணங்கட்டும் எத்தெய்வத்தை வணங்கினாலும் தெய்வம் ஒன்றே, இறை அனைத்தும் நமது தெய்வம். ஆனால் மனிதன், மனிதத் தன்மை மாறாமல் மனிதனாக வாழ வேண்டும் என்பதே அறிவுடைய சான்றோர்கள் கூறி நடந்து காட்டி நட்புறவை வளர்த்துள்ளனர்.

நட்புறவு இன்று மறைந்து வருவதின் காரணம் என்ன?

நட்பு உறவு இன்று சாதி, மத, இன வெறி யால் அழிக்கப்பட்டு வருகின்றது. திருவள்ளு வர், பாரதி, பாரதிதாசன், வள்ளலார், நாரா யணகுரு, சுவாமித்தோப்பு முத்துக்குட்டி சுவாமி, கவிமணி, கவிமணிதாசன், சேக்குத் தம்பி பாவலர் போன்ற தமிழறிஞர்கள் சொன்ன தையும் சொன்னது போல் செய்ததையம் இன்று நாம் மறந்துள்ளோம். சில சலுகைகளைப் பெற வேண்டும் என்பதற்காக சாதி சங்கங்களை வளர்த்து அரசியல் ஆதாயம் தேடத் தொடங்கி மக்கள் சண்டையிட்டு மண்டை உடையும் காட்சிகளைக் கண்டு மகிழ்கின்றனர். இவற்றை எல்லாம் மாற்றுவதற்கு மக்கள் மனம் மாற வேண்டும். சலுகைகளால் பலன் பெறுபவர்கள் அந்தந்தச் சமுதாயத்திலிருக்கின்ற மேட்டுக்குடி மக்களே. பல தலைமுறைகள் அமைச்சர் களாகவும், நீதிபதிகளாகவும், மருத்துவர்களா கவும் வழக்கறிஞர்களாகவும் அரசு அலுவலர் களாகவும் பணிபுரிகின்றவர்களே பலன் அடை கின்றார்கள். ஏழை விவசாயி, ஏழைக் கூலித் தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு இவர் களுடன் போட்டி போட முடியுமா? சிந்தியுங் கள் செயல்படுங்கள், ஒடுக்கப்பட்டவர்கள் பலன் பெற்றிடும் வகையில் சலுகை கிடைத்திட ஆவன செய்ய மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படச் செய்ய வேண்டும். இதனால் ஏற்படும் இழப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சாதிகள் ஒழிந்திட, அனைவரும் சமத்துவ மாகிட பள்ளியிலே குழந்தைகள் சேர்க்கும் போது சாதியைக் கேட்கக்கூடாது. கேட்டாலும் சொல்லவும், எழுதவும் கூடாது. பாரதி சொன்னது போல் நாம் உயர்ந்தவரும் அல்லர், தாழ்ந்தவரும் அல்லர் என்பதை நாம் உணர வேண்டும்.

"சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்ற பாரதியின் பொன்மொழியை மக்கள் உணரச் செய்ய வேண்டும்.

நட்புறவை வளரச்செய்யாமல் தடுத்திடும் செயல்பாடுகள் கண்டு கவிஞர்கள் பட்ட துன்பத்தைச் சுருங்கக் கூற விழைகிறேன்.

உலகில் பிறந்த மக்கள் அனைவரும் மனித சாதி என்று எண்ணம் நான் விரைவில் மலராகி காயாகி, கனியாகிட வேண்டும்.

''உடன் பிறந்தார்களைப் போலே - இவ்
வுலகில் மனித ரெல்லாரும்
இடம் பெரிதுண்டு வையத்தில் - இதில்
எதுக்குச் சண்டைகள் செய்வீர்?

''சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்
நீதி நெறியின் நின்று பிறக் குதவும்

நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர். என்றும் பாரதியின் பொன்மொழிதனை மறவாதிருப்போம்.

மேலும் நட்புறவு வளருவதை நம் கவிமணி அவர்கள் கூறுவதைச் சற்று கவனிப் போம்.

''இடர் படும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன்பிறந்தவர் போல் - மாந்தர்
உறவு கொள்வர், அப்பா!
ஓடும் உதிரத்தி - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவ துண்டோ அப்பா?
எவர் உடம்பிலும் - சிவப்பே
இரத்த நிறம் அப்பா!
எவர்விழி நீர்க்கும் - உபர்பே
இயற்கை குணமப்பா!
பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டும், அப்பா!
கூடியிருக்க வொட்டாது - நண்பர்
கொண்டு தருவதை உண்ண வொட்டாது
தேடி வருவோரை அன்பாய் - வீட்டுத்
திண்ணையில் உட்கார வைக்க வொட்டாறு
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற் குலத்தார்
திண்மை செய்பவரே - அண்டித்
திண்ட ஒண்ணாதார்''

என்று கவிமணியவர்கள் மனிதன் நல்ல பண்புள்ளவனாக மனிதனிடத்தில் அன்பு காட்டுகின்றவனாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

சாதியையும், சாதி வெறியையும் ஊட்டிய வரர்கள் ஊட்டுகின்றவர்கள் அரசியல்வாதிகளே என்பதை நம் வாழ்நாளில் வாழ்ந்த கவிமணி தாசன் அவர்கள் கூறுவதைச் சற்று கவனிப் போம்.

ஒற்றுமையை ஓட்டி
ஒரராளும் நோக்கால்
அன்றைய நாள் அற்பர்
ஆக்கினதே சாதி
தந்திரமாய் நாட்டில்
தாம் வாழ எண்ணி

வந்தவர்கள் இங்கு வகுத்ததுவே சாதி, மற்றும் திண்டாமைப் பேயை வளர்த்து இன்றும் நாட்டை ஆண்டு, தாம் வாழும் நாளைப் பெருக்க எண்ணுகின்றனர் இறுதியில் துன்புறுவர். நட்புறவு வளர்த்திட என்ன செய்ய வேண்டும்?

நட்புறவு வளர்த்திட, மனிதருள் சாதி வேற்றும ஒழிந்திட அரசு முன் வந்து கலப்பு மணத்தை ஆதரிக்க வேண்டும். சாதிச் சலுகைகளை ஒழிக்க வேண்டும்.

எல்லா மதத்தவர்க்கும் சமத்துவம் வேண் டும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற சலுகைகளை அறவே ஒழிக்க வேண்டும்.

சலுகைகள் இருப்பதால் சலுகைகளைத் தீயவழிகளில் பயன்படுத்துகின்றனர். உல கெல்லாம் சமத்துவபுரம் ஆகிவிட வேண்டு மானால் முதலில் சலுகைகள் ஒழிந்திட வேண்டும் சமூகத்தில் நீதியின் முன் அனை வரும் சமம் என்ற நிலை வரவேண்டும். சாதிச் சங்கங்கள் அமைக்க அனுமதி கொடுக்கக் கூடாது. சாதி ஊர்வலங்களை தடை செய்ய வேண்டும். சிறுபான்மையினர் என்பதற்காகக் கொடுக்கும் சலுகைகளை ஒழிக்க வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்பதை நிலை நிறுத்தும்படிச் சட்டங்கள் உண்டு பண்ண வேண்டும்.

நட்புறவுக்குத் தடையாக இருக்கின்ற தீண்டமை சாதிப்பேய்களை ஒழித்திட வேண்டும். கலப்பு மனம் குறித்து கவிமணி தாசன் அவர்கள்.

''தந்தைமலை யாளிஉன் தாயிடைச்சி நீ மணந்து
வந்தவளோ நல்ல மலைக்குறத்தி - செந்தூரின்

கந்தனே! நாட்டில் கலப்பு மணம் இது போல்
வந்திடுவ தென்றோ? வளர்ந்து"

என்று கலப்பு மணம் புரிந்த கந்தனிடமே வேண்டுகின்றார்.

நாம் பேசும் பேச்சில் எழுதும் கட்டுரைகளில் திரைப்படங்களில், தொலைகாட்சிகளில் நட்புறவை வளர்க்க, சாதி மத இன பேதங்கள், ஒழிந்திட மக்களும் அரசும் செய்ய வேண்டிய கருத்துகளை எடுத்துக்கூறி மக்கள் மாக்களாக மாறிவிடாமல் மனித நேயத்துடன் வாழ முடிந்த அளவு செயல்பட்டு உறவுகளிலே சிறந்த உறவு நட்புறவே என்பதை மக்கள் மத்தியில் பரப்பிசாதி மத, இன வேற்றுமைகளை அகற்றி அனைவரும் தனிதர்களே என்ற பண்பை வளரச் செசய்து சரிநிகர் சமானமாய் வாழச் செய்வோம். நட்புறவை வளரச் செய்வோம் நல்ல நட்பு நலம் பயக்கும் என்று கூறி என் கட்டுரைதனை முடிக்கின்றேன்.

வாழ்த்துகின்றேன்? வேண்டுகின்றேன்?

முனைவர் சூ. இன்னாசி

மாமதுரைத் தெருக்களிலே தமிழ் மணக்கும்;
மன்றத்தின் முழங்கத்தால் இனம்சி றக்கும்;
தேமதுரத் தமிழோசை செவிநி றைக்கும்;
தென்பொதிகைச் சாரலைப்போல் மனம்த ளிர்க்கும்;
பாமணக்கும் கவிஞர்களின் புகழ்சி றக்கும்;
பண்புடையார் உறவாலே மொழிசி றக்கும்
நாமமது தமிழரெனச் சொல்லிக் கொள்ளும்
நடைப்பிணங்கள் தோலுரிக்க வாய்ப்ப ளிக்கும்?
தமிழ்நாட்டில் ஆட்சிசெய்தோர் பல்லோர் உண்டு;
தமிழாட்சி முற்றுமாக ஏனோ இல்லை?
தமிழ்பேசி வளம்சேர்க்கக் கூட்டம் உண்டு;
தமிழாலே முடியுமென்னும் உரந்தான் இல்லை?
தமிழ்த்தாயின் மக்களெனச் சொல்வோரர் உண்டு;
தமிழுக்காய்ச் செயல்படத்தான் ஆட்கள் இல்லை?
தமிழுக்காம் அவலங்கள் போக்க இந்த
தமிழர்க்காம் மாநாடு வழிகா ணட்டும்?
கன்னித்தமிழ் வளர்ச்சியிலே கருத்தாய் நின்று,
காலமெலாம் அதன் பணிக்கே உலகம் சுற்றி,
முன்னாளில் தமிழ்வளர்த்த மூவர் போன்று,
முழுமூச்சாய் உழைத்துவரும் பெருங்க விக்கோ
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் சார்பில்
பைந்தமிழர் மாநாடு கூட்டும் நாளில்,
இன்னாசி வாழ்த்துகின்றேன்; இந்த மன்றம்
இன்றமிழர் நலம்பெருக்க வேண்டு கின்றேன்?

தேர்வடம் பற்றப் புறப்படுவீர்

கவியரசு பழனி இளங்கம்பன்



உலகத் தமிழர்கள் ஒன்றுபடின்
உலவும் பகைமையை வென்றுவிடும்
இலகும் கலைகள் வளர்ச்சியுறும் நம்
எண்ணங்கள் யாவும் மலர்ச்சியுறும்

பற்பல நாட்டிடை வாழ்ந்தாலும் - வாழ்வில்
பகரும் துயரங்கள் சூழ்ந்தாலும்
நற்றமிழ் நம்மை இணைத்திருக்கும் - எந்த
நாளும் தமிழே நிலைத்திருக்கும்.

சிதறிய மாமணி மாலை என - உயிர்
செந்தமிழ் மக்களும் ஆவதுவோ?
முதன் மொழியாக முகிழ்ந்த தமிழ் - இந்த
மூதுலகை ஆளப் போவதுண்மை!

காலப்புதுமைகள் பற்பலவும் - தமிழ்க்
கலைகள்யாவும் பொற்புறவே
ஞாலப் பரப்பை அளந்திடுவோம் - வையம்
நவினும் புதுமையில் வளர்ந்திடுவோம்.

ஓங்கும் தமிழின வெற்றிகளில் - ஆம்!
ஒளிமுகம் காட்டட்டும் நம்முறவு
தேங்கும் பெரும்புகழ் ஓங்கிடவே - தமிழ்த்
தேர்வடம் பற்றப் புறப்படுவீர்

திருமுறைகளில் மனித நேய வாழ்வியல் நெறிகள்

- திருமதி சு. சந்திரா எம்.ஏ., எம்.ஃபில்,

இந்தியாவில் சமுதாய சீர்திருத்த இயக்கங்கள் சமயத்தோடு பிணைந்தவை - தமிழ் பக்தி இலக்கியங்களில் சைவத் திருமுறைகளும் அவற்றைப் பாடிய அருளாளர்களும் இதற்கு விதி விலக்கன்று - திருமுறைவாணர்கள் வாழ்வில் நிகழ்ந்த அருட்செயல்கள் மனிதநேயத் தொண்டுகள் - அவர்தம் படைப்பிலும் வாழ்வியல் நெறிகள் உண்டு - சுந்தரர் திருப்பாட்டில் திருக்கேதாரத் திருப்பதிகத்தில் சமயப் பூசல் தீர நன்னெறி - வறுமை நீங்க வாழ்வியல் நெறி கூறுகிறார்.

திருமுறைகளில் மனிதநேய வாழ்வியல் நெறிகள்

'சமயம் என்பது ஒரு கோட்பாடு அன்று; அது ஒரு வாழ்க்கை முறை' என்பார் இராதா கிருட்டிணன். (Radhakrishnan.S 1968, P.12) அவ்வழி இந்தியச் சமுதாய வரலாற்றில் சமயம் என்பது காலகாலமாகத் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருவதை உணரலாம்.

நீண்ட நெடுங்கால வரலாற்றினை உடைய இந்தியாவில் பல்வேறு சமுதாய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியுள்ள அவ்வாறு தோன்றிய இயக்கங்கள் யாவும் சமயத்தோடு இணைந்தவையாக உள்ளன எனலாம். அவ்வகையில் சமய நோக்கில் முகிழ்த்த தமிழக பக்தி இயக்கம் சமுதாய மறுமலர்ச்சிக்கும் தொண்டாற்றியது என்பதனை மறுக்க வியலாது.

அருளாளர் தம் அருட் செயல்கள் :

தமிழ் இலக்கிய வரலாற்றில் பன்னிரு திருமுறைகளும் சைவ சமய இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. அவற்றைப் பாடிய அடியார்கள் இருபத்தியெழுவர் ஆவர். அவ்வருளாளர் நம் படைப்புக்கள் மட்டுமின்றி வாழ்வும் மானிட சமுதாயத்திற்கு நன்னெறிகளைப் புகட்டுபவை எனலாம்.

முயலகன் நோய் நீக்கியமை, நளிர்சுரம் தவிர்த்தமை, பாண்டியனது வெப்புநோய் போக்கியமை, பூம்பாவையை உயிர்ப்பித்தமை, திருமருகலில் விடம் நீக்கி வணிகனை உயிர்ப்பித்தமை, படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியமை, ஆண்பனையைப் பெண் பனையாக்கியமை முதலியன சம்பந்தப் பெருமான் நிகழ்த்திய அருளிச் செயல்கள்.

அப்பூதியடிகளார் மகனை உயிர்ப்பித்தமை, படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தமை, தலங்கள் தோறும் உழவாரப் பணி செய்தமை முதலியன அப்பர் பெருமான் வாழ்வில் நிகழ்ந்த அருட்செயல்கள்!

நெல்மலை பெற்றமை, முதலையுண்ட பாலனை அழைத்தமை முதலியன சுந்தரர் நிகழ்த்திய அருளிச் செயல்கள்!

இறைவனுக்கு அமுதான பயிற்றஞ் சுண்டலை விளைய வைத்தல் எதிரே வந்த பிணத்தை உயிர்ப்பித்து எழுந்து நடமாடச் செய்தல் முதலியவை திருமாளிகைத் தேவர் வாழ்விலும் தில்லைத் திருத்தேரினை ஓடச் செய்தல் சேந்தனார் வாழ்விலும் நிகழ்ந்த அருட் செயல்கள்!

அழுது உருகும் ஆக்களுக்காக மூலன் உடலில் புகுந்த திருமூலரது அருளிச் செயலே திருமந்திரமாக விரிந்தது எனில் மிகையன்று.

இவ்வாறான அருட்செயல்களைக் கீழ்க் கண்டவாறு வகுத்து உரைக்கலாம்.

(அ) நோய் நீக்குதல்

(ஆ) விடந்தீர்த்தல்

(இ) மாண்டோரை உயிர்ப்பித்தல்

(ஈ) விவசாயத்திற்கு நலம் சேர்தல்

(உ) அடியார் துயர்தீர்த்தல்

என்பனவாகும். அதாவது அருளாளர் தம் வாழ்வின் நோக்கம் சமயப் பணியாக மட்டுமல்லாது. சமுதாயத்தின் துயர் துடைக்கும்

மனிதநேயச் செயலாகவும் ஒளிர்ந்தது என்பதனை இவ்வகைப்பாடு சுட்டுகிறது எனலாம்.

படைப்பில் வாழ்வியல் நெறிகள் :

அருளாளர் தம் வாழ்வே மானிட சமுதாயத்திற்கு மனித நேயத்தை உணர்த்த அவர்தம் படைப்புக்களும் மதங்கடந்த வாழ்வியல் நெறிகளைச் சுட்டிச் செல்கின்றன எனலாம்

'வெந்துயர் உறுபிணி வினைகள் தீர்வது' (திருநெறிய தமிழ் ப.45) 'வஞ்சம் அற்று அடி வாழ்த்த' (மேலது ப.45) 'தொண்டனை செய் தொழில் துயாறுத்து உய்யலாம்' (மேலது ப.47) 'தீயதிர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே' (மேலது ப.52) எனச் சம்பந்தப் பெருமானும்,

'ஞாலமும் அறிய வேண்டில் நன்றென வாழலுற்றீர் காலமும் கழியலான கள்ளத்தை ஒழியகில்லீர், கோலமும் வேண்டா ஆர்வச் செற்றங்கள் குரோதங்கள் நீங்கில் சீலமும் நோன்புமாவார்' (மேலது ப.73) என நாவரசரும்,

'தொண்டு செய்வார் வினைகள் அவை போக' (பதி.23 பா.6) எனச் சுந்தரரும் உரைப்பது மானிட வாழ்விற்கு உரிய மனிதநேய நெறிகளைக் குறிப்பிடுகின்றன எனலாம்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாம் செம்பொருளை வழுத்துவதும் துதிப்பதும் அவர்தம் நோக்கமாயிருப்பினும் மாதிரி ஆய்வுக்காக எடுத்துக் கொண்ட மேற்சுட்டிய சில தொடர்கள் வஞ்சமில்லா வாழ்வினையும், தீய எண்ணத்தை விடுத்தலையும், குரோதம் நீங்கி வாழ்தலையும், தொண்டு வாழ்வினையும் வலியுறுத்துகின்றன எனலாம்.

மதங்கடந்த மனிதநேய வாழ்வியல் நெறிகளைச் சுந்தரர் திருப்பாட்டின் திருக்கேதாரத் திருப்பதிகத்தின் வழி காணமுற்படுவது ஆய்வுச் சொல் நெறியாகும்.

சமயப் போராட்டம் தீர சுந்தரர் காட்டும் நெறி:

இந்தியா போன்ற சமயச் சார்பற்ற சமத்துவக் கோட்பாடு நிலவுகிற நாட்டில் சமயத்தின் பெயரால் போராட்டங்களும், தீவிரவாதத்தை மையப்படுத்திய நாசவேலைகளும் நடைபெறுகின்றன. இந்நிலை தீரச் சுந்தரர் தமது திருப்பாட்டில்,

தளிசாலைகள் தவமாவது
தம்மைப் பெறிலன்றே
......
....

தெளியீர் உளம் (பதி.78 பா.6)

எனத் தீர்வு கூறுகிறார். அதாவது சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவரும் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களைத் தவச்சாலைகளாக எண்ணி அடைந்தால் துன்பம் ஏதுமில்லை எனவும் அதனை அனைவரும் உணர்தல் வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார்.

வறுமை நீங்க வன்றொண்டர் காட்டும் வாழ்வியல் நெறி :-

சமுதாயத்தின் மற்றொரு தீராத துயரமாக இருப்பது வறுமையாகும். இதனை வள்ளுவர்

'இன்மையின் இன்னாது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது'

என உரைக்கின்றார். இவ்வறுமைச் சிக்கலுக்கான அடிப்படையினைச் சுந்தரர்,

உழக்கேயுண்டு படைத்தீட்டி வைத்து
இழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கே மென்பர்
மதி மாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பார்...

(பதி, 78; பா.4)

எனச் சுட்டுகிறார். அதாவது பாடுபட்டுப் பொருளைத் தேடி, உழக்கரிசியை இட்டு உணவுண்டு, மீந்தவற்றைத் தொகுத்து வைத்து இழத்தலே உலகின் இன்மைக்கு - வறுமைக்குக் காரணம் என்கிறார் வன்றொண்டர். மேலும், 'பசி நோய் செய்த பறிதான்' (பதி.78. பா.1) 'பரியே சுமந்து ஊழல்வீர் பரி நரி கிறுவதறியார் (பதி.78 பா.2) எனவும் வறுமையின் நிலையினைப் புலப்படுத்துகிறார்.

'தொழு கேதாரமெனீரே!' 'திருக்கேதாரமெனீரே!' எனத் திருக்கேதாரத்து இறைவனை வணங்குதலைப் பாடல்கள் தோறும் வலியுறுத்தினாலும் வறுமைக்கு உரிய தீர்வாகத் 'தாழாது அறம் செய்மின்!' (பதி.78 பா.1) எனவும் 'நாளால் அறம் உளவே, அறிவானிலும்

உலகம் செழிக்க உழைப்பாய்!

பகுத்தறிவுப் பாவலர் தென்மொழி ஞானபண்டிதன்

தனித்தசுகம் காண்பதற்குத் தாவித் தாவித்
தன்னலத்தை வேண்டுகிறார் பலரும்! ஆனால்
இனித்திடுமோ மற்றவர்கள் ஏழை யாகி
இன்னலுறத் தனியொருவன் ஏற்றம் பெற்றால்?
பனித்துளிபோல் வாழ்வுதனைப் பாழாக் காமல்
பகலவன்போல் ஒளியுமிழ்ந்து பாரில் நம்முக்
கனித்தமிழ்போல் நிலைத்துயர்ந்து வாழ வேண்டும்!
கடமைதனை முடித்தினிதே மீள வேண்டும்!

கல்விதரும் நிலையங்கள் கரைதான் சேர்க்கும்!
காலெடுத்து முன்னோக்கிச் செல்ல வேண்டும்!
பல்விதமாய்க் காட்சிதரும் சந்தை போலப்
பரந்திருக்கும் உலகிதனில் பார்த்துப் பார்த்து
நல்விதமாய் அன்பீகை ஒழுக்கம் மானம்
நல்லறிவோ டுயர்நட்பு மனித நேயம்
நெல்விதைபோல் இவையெல்லாம் தேர்ந்தெடுத்து
நீடுபுக ழோடினிதே வாழ வேண்டும்!

'பார் உரைக்கும் படிவாழ வேண்டும்!' என்றே
பக்குவமாய் அறிவுரைகள் பகர்ந்தோர் தம்மின்
பேர்உரைக்கின் உடல்சிலிர்க்கும்! பிறநாட் டார்கள்
பெருமூச்சு விடுகின்றார்! வள்ளுவர்போல்,
சீர் உரைத்த புத்தர்போல், காந்தி யார்போல்,
செம்மையருள் வள்ளலார்போல் பிறந்து வந்தே
யார் உரைப்பார் இனியிங்கே? மனிதா! மண்ணில்
யாவரும் நம் உறவினராய் வாழ்வ தெப்போ?

அருமையெனும் நற்செயல்கள் ஆற்றி, நாளும்
அகத்ததூய்மை இனத்தூய்மை போற்றி, மக்கள்
ஒருமையுறச் சாதிமதம் மறைய, என்றும்
ஒய்வவறியா துழைத்தின்பம் நிறைய, வாழ்வில்
கருமைதரும் இழிவுதனைப் போக்கி, தோன்றும்
கபடம்பொய்ச் சூதுகளை நீக்கி, நாட்டில்
பெருமைதரும் படிவாழ்ந்து காட்ட வேண்டும்!
பெரியார்போல் உண்மைநிலை நாட்ட வேண்டும்!

பிறந்தபொருள் அனைத்திற்கும் பெயர்தான் உண்டு!
பிழையறியா மழலைக்கும் பெருமை உண்டு!
திறந்தவெளிக் காற்றதனில் தூய்மை உண்டு!
தீந்தமிழில் தோய்ந்தார்க்கு மகிழ்ச்சி உண்டு!
கறந்தபசும் பாலிலுயிர்ச் சத்தும் உண்டு!
கருணைவிழி யாலுயிர்கள் களிப்ப துண்டு!
சிற்ந்ததொரு பிறப்பே நீ மனிதா! உன்றன்
சிந்தனையால் உலகமதைச் சொழிக்கச் செய்வாய்!

அறிவான் நல்நறு நீரொடு சோறு கீறி பேசி நின்றிடுவார்' (பதி.78 பா.2) எனவும் அறத்தை வலியுறுத்துகின்றார்.

தொகுப்புரை :

திருமுறைவாணர்களின் வாழ்வியல் நோக்கம் சமயத்தைப் பேபாற்றல்; திருமுறைகளின் உட்பொருள் இறைவனைப் போற்றல் எனினும், அவர்தம் அருட்செயல்களும் அருளிப் பாடல்களும் மனிதநேய வாழ்வியல் நெறிகளை உணர்த்துகின்றன எனலாம். இதற்கொரு சான்றாகச் சுந்தரர் திருப்பாட்டில் திருக்கேதாரத் திருப்பதிகம் நோக்கப்படுகின்றது.

சமயப் பூசல் நீங்கச் சமயத் தலங்களைத் தவச் சாலைகளாகவும் சமுதாயத்தின் வறுமை நீங்க அறம் செய்தலையும் வாழ்வியல் நெறியாகச் சுந்தரர் சுட்டுகின்றார்.

இவ்வாறு சமயத்தை வலியுறுத்தும் பக்தி இலக்கியங்களும் தமிழில் மனிதநேய வாழ்வியல் நெறிகளை முன்னிலைப் படுத்துவதும் பிறருக்கு உற்ற இடர் தீர்க்கும் அருளாளர்தம் அருட்செயல்களுள் தமிழனின் தனித்தன்மைக்குச் சான்றாகின்றன எனலாம். ★

தமிழர் பண்பாடு

அறிஞர் ஞானி

I. தமிழர் பண்பாடு பற்றி இருபதாம் நூற்றாண்டில் எழுந்த கருத்தாக்கத்தின் வகைகள்

1. காதல், வீரம், கற்பு, யாதும் ஊர், யாவரும், கேளிர், அறம், ஒப்புரவு, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், முதலிய குணங்கள் தமிழர் பண்பாடு என்று கூறிய புலவர் நெறி.
2. தமிழர்க்குச் சாதி இல்லை. மதம் இல்லை, கடவுள் இல்லை சடங்குகள் இல்லை என்று கூறிய திராவிட இயக்க நெறி.
3. தமிழ் மொழியும் நாகரிகமும், இலக்கண இலக்கியங்களும் தொன்மையானவை, தூய்மையானவை. மொழி தமிழ் இனத்தின் உயிர். மொழியை அழித்தால் இனம் அழியும். வடமொழி அல்லது இந்தி தமிழர்க்குப் பகை என்று கருதிய தனித்தமிழ் இயக்க நெறி.
4. சங்க காலத்தில் தமிழ் மன்னர்களின் தனி ஆட்சியையும் சோழப் பேரரசையும் அடிப்படையாக வைத்து, வாணிபம், நகர நாகரிகம் தொழில்பெருக்கம், தனிநிலை அரசியல் ஆகியவற்றை வற்புறுத்தி தமிழர் தனிநாட்டுக்கு அரசு உரிமை உடையவர் என்ற தி.மு.க. நெறி.
5. தமிழர் நெறியே சைவம் என்று கருதப்பட்ட சைவ நெறி.

II. இவ்வகைக் கருத்துக்கான ஆதாரங்கள் :

1. புலவர் நெறிக்கு ஆதாரம், சங்க கால வாழ்வு சிலப்பதிகாரத்தில் கண்ணகி மாண்பு, சங்ககாலக் குறுநில மன்னர் கொடை, புறநானூற்றிலும், திருக்குறளிலும் போற்றப் பட்ட அறம் முதலியவை.
2. திராவிட இயக்க நெறிக்கான ஆதாரங்கள் சங்க காலத்தில் சாதி ஆளுகையில் இல்லை, மதமும். இவ்வாறு குறிப்பாகத் திருக் குறளில், சிலப்பதிகாரத்தில் தனிமதச் சார்பு இல்லை. சித்தர், நாயன்மார் முதலியவர் சாதியைச் சாடியுள்ளனர். வள்ளுவத்தில் சாதி ஒப்புக் கொள்ளப்பட்டாலும் மனிதர்க் கான மேன்மை கருதி மறுக்கப்படுகிறது.
3. தனித்தமிழ் இயக்க நெறிக்கு ஆதாரம் கால்டுவெல், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதி யார், பாவாணர் முதலியோர்.
4. தி.மு.க. நெறிக்கு ஆதாரம் சங்க இலக்கியம், சோழர்கால வெற்றிகள், சோழர்கால ஆட்சிமுறை, கிராமப் பஞ்சாயத்து
5. சைவ நெறிக்கு ஆதாரம் மறைமலை அடிகள்.

III. இவ்வகைக் கருத்தோட்டத்திற்குக் காரணமான, சமூக பொருளியல் நிலைகள்.

1. பிரிட்டிஷாருக்கு எதிராக இந்தியா தன்னைத் திரட்டிக் கொள்ளும் முறையில் தன் பழங்காலப் பெருமை, தனக்குள்ள ஆற்றல்கள் பற்றிப் பேச வேண்டியிருந்தது. இதன் மூலம் மக்களைத் திரட்ட வேண்டும். தங்களால் முடியுமென்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
2. இப்படிப் பேசும்பொழுதே தமிழர்கள் தம்மைத் திரட்டி கொள்வதும் நேர்கிறது. தமிழ் நாகரிகத்தின் தொன்மை, தனி நிலை ஆகியனவும் இப்போக்கைத் தீவிரப்படுத்து கின்றன.
3. நெடுங்காலமாக தமிழர்மீது சுமத்தப்பட் டிருந்த சமஸ்கிருத மொழியாக்கம், சமயம் முதலிய பல துறைகளிலும் பார்ப்பனர் ஆதிக்கம். இந்த ஆதிக்கத்தை நெடுங் காலமாகத் தமிழர் எதிர்த்து வந்துள்ள நிலைமை.
4. இந்திய விடுதலைக்குப் பின் வடவர் ஆதிக்கம் மிகும் என்ற நிலைமை. இதன் மூலம் பார்ப்பனர் ஆதிக்கம் மேலும் வலிமைபெறும் என்ற நம்பிக்கை.
5. தமிழ் மொழியை, ஆதிக்கத்தில் வைக்க வேண்டும் என்ற பற்று.
6. சமூக வாழ்விலுள்ள வெற்றுச் சடங்குகள், போலிச் சமய நெறிகள் முதலியவற்றைக் களைந்தாக வேண்டும் என்பதில் உறுதி.
7. தமிழ் மக்களிடம் குறிப்பாகத் தாழ்த்தப் பட்ட மக்களிடம் கிறித்தவ சமயத்தைக்

கொண்டு சேர்க்க வேண்டும் என்ற முறையில் கிறித்தவப் பாதிரிமார்கள், ஆரியர்களுக்கு எதிராக தீவிரமாக இயங்கினர்.

8. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக பொருளியல் துறையில், அதனால் அரசியல் துறையிலும் தமிழர் தம் வாழ்வைத் தாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம். இதற்கான பலவகை இயக்கங்கள், சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி, தி.க., தி.மு.க., தமிழாகக் கட்சி, நாம் தமிழர் இயக்கம், தனித்தமிழ் இயக்கம் இந்தி எதிர்ப்பு முதலியவை.

IV. இந்த இயக்கங்கள் பெற்ற வெற்றியும் தோல்வியும் இவற்றுக்கான காரணங்கள் :

1. சாதி மதம் ஒழியவில்லை. ஆனாலும் பெருமளவில் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளன. சிந்துசமவெளி நாகரிகத்திலேயே சாதி இருக்கிறது. சாதி மதங்களை ஆரியரர் மட்டுமே தோற்றுவித்தனர் என்பது உண்மையில்லை. மனுதர்மம் இந்தியா முழுவதும் எல்லாக் கால த்திலும் ஆட்சி செலுத்தவில்லை.

2. சாதி, மதம், கடவுள், கோயில், புராணங்கள் முதலியவை எத்தகைய சமூகச் சூழலில், எத்தகைய சமூக உள்ளடக்கத்தோடு தோன்றின. நிலைபெற்றன என்ற ஆய்வு முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக, வரலாறு என்றால் என்ன? தோல்பழங்கால வரலாற்றில் மனிதர் எவ்வாறு வாழ்ந்தனர்? புராணங்களின் தோற்றுத்துதக்குக் காரணம் என்ன? கடவுள், ஆன்மா, மோட்சம் அல்லது விடுதலை மறுபிறப்பு, விதி முதலிய கருத்தாக்கங்களுக்கு உள்ளடக்கமாக இருந்த சமூக உண்மைகள் யவை என்பது அறியப்படவில்லை. இன்றைய வாழ்விலும் மனிதர் உள்ளப் போக்கிலும் இந்தக் கூறுகள் ஏன் தொடர்கின்றன என்பது பற்றி அக்கறை இல்லாததனால், இவ்வகைக் கோட்பாடுகளால் குறுகிப்போய் நல்ல மனிதர்களை உருவாக்கும் திறன் இழந்து விட்டனர்.

3) தொல் பழங்கால நிலையிலேயே பொருள் முதலியல் கூறுகள், இலக்கியல் கூறுகள், சமூகத்தில் இயல்பாக எழுந்தன. ஆண், பெண், உறவின் மூலமே இனப்பெருக்கம் ஏற்படுகிறது என்ற உண்மையின் அடிப் படையிலேயே பொருள் முதலியல் கூறுகள், இயங்கியல் கூறுகள் சமூகத்தில் இயல்பாக எழுந்தன. ஆண், பெண், உறவின் மூலமே இனப்பெருக்கம் ஏற்படுகிறது என்ற உண்மையின் அடிப் படையிலேயே பொருள் முதலியல் கூறுகள், இயங்கியல் கூறுகள், சமூகத்தில் இயல்பாக எழுந்தன. ஆண், பெண் உறவின் மூலமே இனப்பெருக்கம் ஏற்படுகிறது என்ற உண்மையின் அடிப்படையில் இயற்கை, பிரபஞ்சம் ஆகியன நோக்கப் பட்டன. தாய் ஆதிக்க சமூக நிலையில் தாய்மை போற்றப்பட்டது. இயற்கையைக் கட்டுப்படுத்துவதற்காக இயற்கையில் போலச் செய்தல் சடங்குகளை உருவாக்கியது. மந்திரங்களைப் படைத்தது. இயற்கை, சமூகச்சிந்தனைகள் பற்றிய தீவிர சிந்தனையும், இதற்கான புலனடக்கமும் இணைந்து தியானமுறைகள் தோன்றின. இவை எல்லாச் சமயத்தினுள்ளும், எல்லாக் காலத்தினுள்ளும் தொடர்கின்றன. மனிதன் தன்னையும் இயற்கையையும் புரிந்து கொள்ளும் முறையில், கட்டுப்படுத்தும் முறையில் பலவகைக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. சசாங்கியம், உலகாயதம் முதலியவை பொருள் முதலியல் விளக்கங்கள். சமணம் பௌத்தம் போன்றவை கருத்து முதலியல் விளக்கங்கள். பொருள் முதலியலும் கருத்து முதலியலும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஒன்றோடொன்று கலந்தவை. இவ்வகைக் கோட்பாடுகளின்றி வாழ்க்கையை விளங்கிக் கொள்ள இயலாது. ஆதிக்கத்திலுள்ளவர்கள் இவற்றைத் தமக்கான முறையில் பயன்படுத்திக் கொள்வதில் வியப்பில்லை. இவ்வகைப் போக்குகள் எல்லாச் சமூகத்தினுள்ளும் இருக்கின்றன. தமிழ்ச் சமூகம் இதற்கு விலக்கானதல்ல.

4. இடையில் வந்து சேர்ந்த பிரிட்டிஷ் ஆட்சி இந்தியர்களை, தமிழர்களை, தங்கள் பழமையான நாகரிகம், தொழில், வேளாண்மை, கலாச்சாரம் முதலிய பல துறைகளிலும் அவர்களை வெட்டி விடுவதில் பெரும்பாலும் வெற்றி கண்டது.

இதனால் சமூகத்தில் ஏற்பட்ட குரூரங்கள் கடமையானவை. பழமை அல்லது கலார் சாரம் இகழப்பட்டது. நமக்கு வந்து சேர்ந்த அறிவியல் பழமையில் பொதிந்துள்ள சக்திகளைக் கண்டறிந்து சொல்லவில்லை.

5. நமக்கு வந்து சேர்ந்த அறிவியல் மட்டு மல்ல. மார்க்சியமும் இதே மாதிரியான தவறுகளைச் செய்தது. தமிழர்களின் பழங்கால வாழ்வு இருண்ட வாழ்க்கை என்றது. வரலாற்றில் வணிக வர்க்கம் நிலப் பிரபுத்துவத்தைக் கண்டது. வரலாற்றியக் கத்தைக் காணவில்லை. தமிழக வரலாற்றி னுள்ளும் நடைபெற்ற இயக்கங்களைக் காணத் தவறியதால், தமிழக வரலாற்றின் வழியே நமக்கு வந்து சேர்ந்த சக்திகளைப் புறக்கணித்தது. தமிழர் நாகரிகம் மேன்மை என்றால் குறுகிய பார்வை என்று இகழ்ந் தது. தமிழின தேசிய நலன்களைப் பற்றிப் பேசினால், இனக் கருத்தோட்டம் என்றது சர்வதேசியம் என்ற பார்வை, தமிழரின் தனி ஆட்சியை மறுத்தது. பார்ப்பன ஆதிக் கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படி பல தவறுகள்.

V. தமிழர் நெறியென நாம் எவற்றை மீட்டுக்கொள்ள இயலும்?

1) சங்க காலம் முதல் அறம், சான்றோர்களால் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. இறை, ஊழ், நியதி, அறம், என்ற கருத்தாக்கங்கள் ஒன்றோடொன்று மயங்கிக் கிடக்கின்றன. இவற்றை நம் கால நெறிக்கேற்றபடி விளக்க முடியும் அறத்தில் பற்றுறுதி கொள்ள உதவும்.

2) சித்தர் நெறி என்பது தமிழர்க்குரிய சிறப்பு நெறி என்று சொல்லுமளவுக்கு நெடுங் காலமாக வலுவாக இருந்து வருகிறது. பதினெண் சித்தர்கள் மட்டுமல்ல. தாயுமானவர், பட்டினத்தார், ராமலிங்கர் மட்டுமல்ல. இன்றைய இலக்கியத்திலும் சமூக வாழ்விலும் இத்தகையவர் மதிக்கப் படுகின்றனர். பொருள்பற்று இவர்களுக்கு இல்லை. சாதி மதச் சடங்குகளோடு இவர் கள் ஒட்டுவதில்லை. ஒப்புரவு இவர்கள் குணம். இதிலிருந்து சோசலிசத்திற்கான ஆதாரத்தை நாம் வகுக்க முடியும்.

3) சங்க இலக்கியம், திருக்குறள், சிலப் பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களி லிருந்தும் அக்காலம் வாழ்வுக்காக மக்கள் போராடியதை மார்க்சியர் நெறியில் நாம் கண்டறிந்து சொல்ல முடியும்.

4) தமிழக வரலாற்றில் பௌத்தம், சமணம், இரண்டும் அயல்நெறியென இகழ்ந் துரைக்கப்படுகின்றன. இது உண்மையல்ல. தமிழ் சமூகத்தின் பல குறைபாடுகளைக் கண்டறிந்து விமர்சனம் செய்வதோடு தமிழ்ச் சமூகத்தின் தேவைக்கான இலக் கணம், இலக்கியம், கல்வி, அறநெறி, வாழ்வியல் நெறி முதலியவற்றை அவர்கள் வகுத்துக் கொடுத்தனர். இவர்கள் தமிழர் களே என உறுதியாகச் சொல்ல முடியும்?

5) சைவ, சமயம், தமிழ்நாட்டில் உருவாகிய தனிச்சமயம் என்பதில் ஐயமில்லை. ஒதுக்கி விட்டு ஆன்மீக வாழ்வுக்கே அழுத்தம் கொடுத்த சமயப் போக்குகளை மறுத்து உலகியல் வாழ்வுக்கு ஏற்றம் தந்தது சைவம். சைவம் தன்னை நிலைநாட்டிக் கொள்ளும் முறையில் சங்கரரின் அத்வைதம் சமணரில் துறவு கோட்பாடு, பௌத்தரின் சில போக்குகள் ஆகியவற்றை எதிர்த்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. எதிர்த்த நிலை யிலேயே இச்சமயங்களின் முக்கியமான சில கூறுகளைத் தனக்குள் வயபப்படுத்திக் கொண்டது. சைவம் ஒரு எதிர்மறை வைணவர் தோற்றுவித்த பக்தி நெறி நிச்சயம் தமிழர் நெறி என்று சொல்ல முடியும். சங்க கால அன்பு நெறி இதில் கலக்கிறது.

6) தொடக்கக் காலம் முதல் ஆரியர்க்கு அல்லது பிராமணர்க்கு எதிர்ப்பு என்பது தமிழ்ச் சமூகத்தில் உறுதியாக இருந் திருக்கிறது. பார்பன எதிர்ப்பு என்பது பல வழிகளில் வெளிப்பட்டிருக்கிறது. 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டல்' என்பதை வள்ளுவர் எதிர்த்தார். 'மாங்காட்டு மறையவன்', தேவந்தி ஆகியவர் கூற்று சிலப்பதிகாரத்தில் மறுக்கப்படுகிறது. மனிதனிலிருந்து முற்றாகக் கடவுளைப் பிரித்து கடவுள் ஆதிக்கத்தில் மனிதனைக் கட்டுப்படுத்துவதை வள்ளுவர், இளங்கோ வடிகள், சித்தர்கள், சாத்தனார் முதலிய பலர்

எதிர்த்துள்ளனர். மாயாவாதம் சைவத் தாலும், வைணவத்தாலும் மறுக்கப் படுகிறது. கண்ணகி கதை, ஆபுத்திரன் கதை போன்றவை ஆழ்ந்து படிக்கத்தக்கன. பெரிய புராணத்திலும் பார்பனிய எதிர்ப்பை நாம் காணலாம். பார்ப்பனர் தம்மை முதன்மை யாக்கி பிற எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தும் அநாகரிகம் பெரும்பாலான சமயங்களில் மறுக்கப்படுகிறது.

7. தொன்மையான தமிழ்ச் சமூகம் தொன்மை யானது என்ற முறையில் சுமைகளும் உண்டு. வளமும் உண்டு. தொன்மையான நாகரிகம் நெடுங்காலம் நிலைத்திருக்க சில ஆற்றல்களை உள்ளடக்கமாகக் கொண்டி ருக்க வேண்டும். இவற்றை நாம் கண்டறிய வேண்டும்.

8) இன்று தமிழ்ச் சமூகத்தில் வரலாற்றை நாம் நேர்முகமாக காணும் நிலையில் பல வற்றைக் குறிப்பிட முடியும். இவை இன்றும் நம்மோடு கலந்து நம்மோடு உறவு கொண்டு நம்மை உருவாக்குவதில் பங்கு பெறுகின்றன.

(அ) தமிழகம் முழுவதுமுள்ள கோயில்கள், சிற்பங்கள், நாட்டியம், இசை, இசைக் கருவிகள்.

(ஆ) கிராமியக் கலைகள், கதைப் பாடல்கள்

(இ) கைத்தறி, பட்டுநெசவு முதலிய தொழில் வகைகள் வேளாண்மை முறை, நெல், வாழை முதலிய பயிர்கள்.

(ஈ) காவிரிப் பாசனம், வைகைப் பாசனம், தமிழகம் முழுவதுமுள்ள குளங் கள், இயற்கையிலிருக்கும் மிச்சங்கள் மலைகள், காடுகள் முதலியன.

(உ) தமிழ், இலக்கியம், இலக்கணம், இலக்கிய வளம் கொண்ட புலமை நெறியினர்.

9) நம் கிராமச் சமூகத்தில் இன்றும் நாம் காணத்தகும் சான்றோர். பெரியவர்கள், உறவை முதன்மையாகப் போற்றும் நல்ல மக்கள், தாய்மைக்குள்ள மரியாதை, சகோதரர் உறவு முதலியவை.

10) சிறு தெய்வங்கள். திருவிழாக்கள், சடங்குகள்.

11) தமிழர் நலத்துக்கான பல இயக்கங்கள்.

VI. மேலும் சில

1) தமிழர், தமிழ் இனம் என்ற கருத்தாக்கம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் 20 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியின் காலத்தில் தான் தோன்றி நிலைபெற்றது. இதற்கான காரணங்கள் தமிழகச் சூழலிலும் இந்தியா விலும் உலக அளவிலும் நாம் காரணங் களைக் காண முடியும். இந்தக் கருத்தாக்கம் அறிவு மட்டுமல்ல அதிகாரமும் தான்.

2) இன்று இந்தக் கருத்தாக்கத்தின் அதிகாரம் குறைந்து வருகிறது. திராவிட நாடு கைவிடப்பட்டது. தன்னாட்சிக் கோரிக்கை, தமிழர் எழுச்சிக்கு ஒரு தூண்டுதல். தமிழ் இனப்பற்று மங்கி வருகிறது. பெரியார், திராவிடன் அல்லது தமிழனை இதன் ஒட்டுகளிலிருந்து விடுவித்து மனிதனாக்க முயற்சி செய்தார். மனிதன் என்ற முறையில் இவன் தன்மானம் உடையவனாக இருக்க வேண்டும். தமிழர் பண்பாடு என்பது ஆழ்ந்து பார்த்தால் மனிதப் பண்பாடு. மனிதனுக்கான, மனிதனை உருவாக்கும் பண்பாடு. தமிழ்ப் பண்பாடு பற்றிய ஆய்வும் பேச்சும் இதை நோக்கியே செல்ல வேண்டும்.

3) தமிழர் நாகரிகம் தொன்மையானது என்பது மட்டுமல்ல. உலகில் தொன்மையான நாகரிகங்களில் ஒன்று. அதாவது உலகில் மனிதப் பண்பாட்டை வளர்க்க முயன்ற நாக ரிகங்களில் ஒன்று. தமிழ்நிலத்தில் நாகரிக மோதல்கள், கலப்புகள் விரிவாக நடை பெற்றன. இந்தியாவிலுள்ள அனைத்துச் சமயங்களும் ஒரு கால அளவில் தமிழ கத்தில் ஒரு குவிமையத்தில் மோதின. புதிய சமயப் போக்குகள் முளைத்தன. தமிழர் வாழ்க்கை சில காலங்களிலாவது சில அற்புதமான சிகரங்களைத் தொட்டன. இத்தகைய நாகரிகத்தை உலக வரலாறு இழந்துவிட இயலாது. இன்றைய நமது உணர்வுகள், நம்பிக்கைகள், சிந்தனைகள், செயல்முறைகள் ஆகியவற்றைப் பல கோணங்களில் உருவமைப்பதில் தமிழ் நாகரிகத்திற்குப் பங்குண்டு. இவை ஆழ்ந்து பார்த்து கண்டறிய வேண்டியவை. ★

நமக்குத் தேவை நல்ல மனித நேயம்!

கருவை வேணு

கவிஞர் காரிருள்ளா னத்தில் கார்கால மேகங்கள் கவிதை கவிழ்ந்திருக்கும் காந்தக் கோரங்களை கண்களால் காண் பதற்கு கொடுத்துவைத்திருக்க வேண்டும்

மீன்விழி : பற்பல பாசாங்குக்காரர்கள் படர்ந் திருக்கும் பணித்திரமில்லாத பாழாய்ப் போன பூவுலகில் பண்டைப் பெருமைகள் புதுமையாய் பொதித்துவந்த பாக்களால் பூமாலை பொழிகிறதோ...

கவிஞர் : ஆம். மீன்விழி... ஆரம்பத்திலிருந்து ஆழ்மனதில் அடங்காத ஆசைகளை அவ்விவந்து அதை அன்புடன் கொடுக்க ஆட்களில்லாததால் ஆரவாரமில்லாமல் அமர்ந்துள்ளேன்...

மீன்விழி : என்னருமைக் கவிஞர் பெருமானே, என்ன எண்ணங்களை எண்ணி ஏற்புடைய தெல்லாம் ஏற்றமுடன் நீவிர் எடுத்துச் சொல்ல, இந்த ஏந்திழையாள் எப்போதும் காத்திருக்க... தயக்கமென்ன பெருமானே!

கவிஞர் : தயக்கமில்லை... இந்த தென்பொதி கைத் தென்றல். தேன் தமிழ்நாட்டில் மட்டுமல்ல. திசையெங்கும் தன் பணியை திகட்டும் மட்டும் ஆற்றும்போது, அது, இவன் இந்த மதம், இவன் இந்த சாதி, இவன் கிருத்துவன், இவன் பௌத்தன், இவன் இஸ்லாமியன், இவன் சீக்கியன், இவன் ஜைனன் என்று பேதம் பிரித்தா வீசுகிறது...

மீன்விழி : இல்லைதான் அதற்கு இப்போது என்ன பெருமானே...?

கவிஞர் : மீன்விழி - அங்கே பார்... யாரோ வருவதுபோல் தெரிகிறதே... அருகே வரட்டும் - இதோ வந்துவிட்டார் - யாரென விசாரிப்போம்...

மீன்விழி : அய்யா... தாங்கள்...

பீர்கான் : நானா...? என்னைத் தெரியவில்லை; போரிலே விழுப்புண்கள் பல தாங்கி புறை யோடிப் போயிருக்கும் சீக்கியத்தின் தவப் புதல்வன், தன் நாட்டிற்காகவே சேவை செய்து தாங்கொணா துயர் கொண்டு தடியடி பட்டு செத்தானே சீக்கியத்தின் குலக் கொழுந்து, ''கசார்கானின்'' குலத் தில் வந்தவன் - எங்கள் பெருமையை நம் நாடே அறியும் - என் பெயர் ''பீர்கான்''!

கவிஞர் : மட்டிலா மகிழ்ச்சி மறவர்குல வீரனே... மராட்டியத்தில், மார்மீது சுத்தி பாய்ந்தும், மடியும் முன்னே மாட்சிமை தாங்கிய நம் நாட்டை எண்ணி மடிந்தானே அந்தப் பரம் பரையல்லவா நீ...

பீர்கான் : கவிஞர் பெருமானே... உங்களுக்குத் தெரியாததையா நான் கூறப்போகிறேன் - வாழ்விலும் சாவிலும் எங்கள் வாழ்க்கை இரண்டறக் கலந்ததல்லவா?

மீன்விழி : ஆமாம். அதற்கு இப்போதென்ன ஏற்பட்டது?

பீர்கான் : அப்படிப்பட்ட எங்கள் பெருமை களை எண்ணி நகையாடுகிறார்கள் அண்டை வீட்டாளன் அமீது என்பவன் போர் என் றால் புறமுதுகு காட்டி ஓடிவந்துஅவன் பாட்டனாரைப் பற்றி தெரியாதா?

கவிஞர் : ஓ... அப்படியா சொன்னான் அமீது... இப்போது அவன் எங்கே... அழைத்து வா இங்கே...!

பீர்கான் : இதோ, அவனே வருகிறானா பெரு மானே...

கவிஞர் : வா அய்யா அமீது... அனைவரும் நலமா... அண்டை அயலாரிடம் சண்டை சச்சரவில்லாமல் கூடி வாழ உன்னால் இயலாதா...?

அமீது : ஓ... வந்துவிட்டானா 'பீர்''... இவன் இங்கிருந்தபோதே எண்ணினேன் ஏதோ ஒன்று சொல்லியிருப்பான் என்ன?

முகப்பு!

– கவிவேந்தர் கா. வேழவேந்தன் (மேனாள் அமைச்சர்)

மின்னல்களே மழைமேக முகப்பு! துள்ளும்
வெள்ளலைகள் கடற்கிழவன் முகப்பு! வீட்டின்
சன்னல்களே இல்ல ஒளி முகப்பு! கீழைச்
செவ்வானம் பகலவனின் முகப்பு! மங்கைக்
கன்னத்து முத்திரைகள் காதல் வாழ்வுக்
கற்கண்டுக் காவியத்தின் முகப்பு! சோழப்
பொன்மகளின் காப்பியமாம் 'சிலம்போ' தூய
புகழ்பாடும் 'தமிழ்க்கற்பி'ன் முகப்பே என்பேன்!

கல்வெட்டே வரலாற்றின் முகப்பு! வேகக்
கடிகாரம் காலத்தின் முகப்பு! நல்ல
நெல்விளைச்சல் வளவாழ்வின் முகப்பு! தோயா
நேர் உழைப்பே வெற்றிக்கு முகப்பு! நூலின்
கல்வியொன்றே அறிவுக்கு முகப்பு! பாழும்
கர்வந்தான் வீழ்ச்சிக்கே முகப்பு! பண்டைத்
'தொல்காப்பியப் பெருநூல் தமிழர் வாழ்வின்
சுடர்க்கொள்கை முகப்பென்றால் தவறா உண்டு?

மாம்பூக்கள் இளவேனில் முகப்பு! சூடும்
மாலைகளே இல்வாழ்வின் முகப்பு! சேர்ந்து
கூம்புங்கை அடக்கத்தின் முகப்பு! வீழும்
குளிர் அருவி மலைப்பெண்ணாள் முகப்பு! வந்து
தேம்புகின்ற விழி நீரோ நெஞ்சத் துள்ளே
தேக்கிவைத்த துயரத்தின் முகப்பு! நாளும்
நலம்போற்றும் 'திருக்குறளே அகிலத் திற்கு
நமைக்காட்டும் முகப்பென்பேன்!! மறுப்போர் உண்டா?

கவிஞர் : ஒன்றுமில்லை... ''பீர்'' உன்னைப் பற்றியெல்லாம் எதுவும் கூறவில்லை. மாத்தான் முன்னே மண்டியிடுவதை விட மரணத்தை மனதார ஏற்று முத்திமிட்ட முன்னோர்கள் பற்றி சொன்னான்...!

அமீது : அப்படியெனில் நாங்களெல்லாம் என்ன கோழைகளா? கர்வம் அவனுக்கு அதிகம் - அதனால் தான் அடங்காத்தனம் கொண்டு ஆர்ப்பரிக்கிறான்?

மீன்விழி : இதோ பாருங்கள் கவிஞர் பெருமானே... ஜோசப் வருகிறார்...

கவிஞர் : வா... ஜோசப்... கேட்டாயா இவர்களின் கேலிக்கூற்றை...!

ஜோசப் : நானும் கேட்டுக் கொண்டுதான் வந்துகொண்டிருந்தேன் - நாட்டில் நாம் நிமிர்ந்து நடக்க நல்ல பாதை காட்டிய எத்தனையோ தியாகிகளின் தீரமிக்க திண் தோள்களின் வலிமையால் வ்நததடைந்த ஆனந்த சுதந்திரத்தை ஆளுக்கு ஆள் சொந்தம் கொண்டாடினால் அப்புறம் எண்ணற்ற தியாக உள்ளங்களை எப்படி நாம் போற்றுவது...?

கவிஞர் : அப்படிசொல்... அவனவன்துண்டுதுண்டாக்கி மகிழ இது ஒன்றும் திண்பண்டமில்லையே - வீரத்தின் விளைநிலமல்லவா- வீரம் இங்கே விலை போகக்கூடாது...

மீன்விழி : நன்றாய்ச் சொன்னீர்கள்...

கவிஞர் : ஆமாம் மீன் விழி - இது நமது நாடு - நாம் அதன் மக்கள் - இந்திய நாடு இப்போது மட்டுமல்ல - எப்போதுமே கோழைகளை கொண்டதில்லையே

மீன்விழி : அரும்பாடு பட்டு அல்லல் பட்டு அழுது அழுது பெற்ற நம் நாட்டை இப்படி இந்து - இஸ்லாம் - சீக்கியர் என இனம் பிரிக்கலாமா - அது நமக்கே இழிவல்லவா?

கவிஞர் : வாழும் வகையை எடுத்துச் சொன்ன நம் பெரியோர்கள் புனிதப் பாட்டையில் புத்துணர்வு நடைப்போட்டு புடம் போட்ட தங்கமென தவித் தன்மையுடன் கூடிய தீரவாய் திகழ நாம் ஒற்றுமையாய் வாழ்ந்து வழிகாட்டுவோம்!! எல்லோரும் மனித இனம் - இதில் என்ன வேறுபாடு நமக்குத் தேவை நல்ல மனித நேயம் - அதை நம் முன்னோர்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்ததால் தான் நாம் நமது நாடு என்று கர்வம் கொண்டு வாழ்கிறோம்!

மீன்விழி : பெருமானே... பெருமளவில் சொல்லிவிட்டீர்கள்...

மூவரும் : நன்றி கவிஞர் பெருமானே... நமக்குத் தேவை ஒற்றுமை - அதற்கு நம்மால் இயன்றிதை செய்வோம்.

★

அச்சமா? ஆனந்தமா?

பெரியபுராணப் பெரு நாவலர் துரை நமசிவாயம்

எதிர்நிற்கும் நூற்றாண்டு நமது உள்ளத்தைத் துள்ளவைக்கப்போகிறதா? துவளவைக்கப் போகிறதா? அச்ச உணர்ச்சியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லுமா? ஆனந்தத்தின் எல்லைக்கு இட்டுச் செல்லுமா? மனிதநேய உணர்ச்சிகளின் உந்துதல்களை முந்தச் செய்யுமா? வெந்து மடியச் செய்யுமா? மெய்ஞ்ஞானத் தேடல்களை விஞ்ஞான வளர்ச்சியின் வேகம் குறைக்குமா? பெருக்குமா? கலாச்சாரக் கலப்படத்தால் நிலை தடுமாறுமா? அவரவர் கலாச்சாரக் கூறுகள் காப்பாற்றப்படுமா? என்ற வினாக்களுக்கு விடை தேடும் முயற்சியே இந்தக் கட்டுரை.

மனித வெடிகுண்டு புனிதமானவர்களை எல்லாம் பதம் பார்க்கத் தொடங்கி விட்டது. அமரர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையும் அண்மைக் காலத்தில் இலங்கை அதிபர் சந்திரிகாவின் கண் குழப்பும் கூட இதற்கு ஆளாகும் சூழ்நிலை. மக்கள் வாழுமிடங்களையே கூட விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பான வெடி மருந்து தாக்குகின்றது. நாட்டு வெடிகுண்டுகள் கூட சாமானியர் வாழ்வில் வன்முறை வழக்கமாகி விட்டது. இந்நிலையில் குற்றவாளிகளைத் தேடிப்பிடித்திட மோப்பநாய்களுக்குக் கவசமணியச் செய்திடும் விஞ்ஞானப் புதுமைகள் தோன்றத் துவங்கிவிட்டன என்பது மகிழ்ச்சியளிப்பதாகும்.

விஞ்ஞான வளர்ச்சியால் இன்பத்தையும் துன்பத்தையும் சேர்த்தே அனுபவிக்கும் ஆற்றலைப் பெறத் தயாராக வேண்டும். இது தான் இந்த நூற்றாண்டின் அழைப்பாக இருக்க முடியும். மின்னணுச் சாதனவளர்ச்சி நிலைகள், தனித்தனி மொழி அடையாளங்களை வலுவிலக்கச் செய்வதோடு, எழுதும் பயிற்சியை வெகுவாகக் கறைக்கும் நிலையை உண்டாக்குகிறது.

கல்வி, தேசிய அடையாளங்களை மீறி வேறு நாடுகளில் வாழவைக்கிறது. எனினும் வேறுநாடுகளில் வாழ்பவர்கள் தங்கள் சொந்தக் கலாச்சார அடையாளங்களைத் தேடி வாழ வேண்டிய சமூகக் கட்டாயம் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

மனிதநேயம் மாந்துப்போய் இயந்திரமயமான வாழ்க்கையில் மூழ்கிப் போகும் காலகட்டத்தில்தான் நமது வாழ்க்கைச் சக்கரம் பதிந்து பதிந்து எழுந்து எழுந்து சுழன்று கொண்டிருக்கிறது.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே'

என்று சகோதரத்துவத்தின் மேன்மையை எடுத்துக் காட்டிய தாயுமாணவரின் வரிகளை மறந்துவிட்டோம். 'அன்பே சிவம்' என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் நமது சாத்திரங்களும் தோத்திரங்களும் எழுதப்பட்டுள்ளன. இவற்றைக் கற்றவர்களும், கற்காதவர்களும் மனிதநேயப் படிக்கட்டுகளில் கால் பதித்தே வாழ்கின்றனர். ஆனாலும் மனிதநேய உணர்வுகளைக் கரைத்துக் கொள்ளத் தூண்டும் நிகழ்வுகளே முன் நிற்கின்றன.

வாகனவிபத்தில் வீழ்ந்து கிடப்பதைப் போல பாசாங்கு காட்டி கொள்ளை அடிப்பதும், கூட நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இனி வருங்காலத்தில் ஹெலிகாப்டரில் வந்து இறங்கி ஏமாற்றுவித்தை செய்வோரையும் சந்திக்கும் சூழ்நிலை உருவாகலாம்?

சமயலறை விஞ்ஞானப் புதுமைகள், உணவு ஊட்டி விடும் இயந்திரங்களையே உண்டாக்கக் கூடும். உடம்பைத் துவட்டிவிடும் இயந்திரங்கள் வரத்துவங்கிவிட்டன. இந்நிலையில் மனிதநேய அடிப்படையான பரஸ்பர உதவிகளுக்குக் கூட வழியில்லாமல் போகலாம்.

இவ்வாறு, சிந்திக்கும் பொழுது பரவச உணர்ச்சி மட்டுமல்ல, அச்ச உணர்ச்சிக்கும் உட்பட்டே நம் வாழ்க்கை நிலைகள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதோ விவேகானந்தப் பெருமான் பேசுகிறார் கேட்போம்:-

''சிவன் பயங்கரமாயிருக்கும் போது ருத்ரன் அல்லது வீரபத்ரன் - பயங்கர சொரூபம் சகுணப் பிரம்மத்துக்கு இன்றியமையாத ஒரு பகுதியாகிறது. பயங்கரத்தைப் போற்றிப் பழகாதவன் அன்பின் முடிவைக் கண்டவன் அல்லன்''

அவர் மெய்ஞ்ஞான வழியில் கூறியது இன்றைக்கு விஞ்ஞான நெறியில் செல்லும் நமக்கு முழுப்பொருத்தம் உடையது. விஞ்ஞானத் தேடல்களால் பெருகியுள்ள வசதிகளாலேயே நம் வாழ்வு நாசமடையும் போது மெய்ஞ்ஞானத் தேடல் அதிகமாகிறது. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கைகோர்த்துக் கொள்ளும் காலமே எதிர்வரும் காலம் என்று முடிவு செய்யலாமன்றோ? ★

நாட்டுப்புற இயல்

புலவர் கோ.பெ. நாராயணசாமி எம்.ஏ. எம்.எட்.,

சேலம் மாவட்டத்தில் தெருக்கூத்துக் கோமாளி

பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் நாட்டுப் புறங்களில் நிகழ்த்தப் பெற்ற பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்றவையே 19 ஆம் நூற்றாண்டில் தெருக் கூத்தாக மாற்றப் பெற்றது என்பார் 'இந்திய நாடகங்கள்' என்ற நூலில் மு.சேரன் அவர்கள்.

நாட்டுப்புறக் கலை வடிவங்களாகிய, கும்மி, கோலாட்டம், நிலா விளையாட்டுக்கள் போல அடிக்கடி நிகழ்த்தப் பெறாமல் 'பண்டிகை' போன்ற குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே தெருக்கூத்து நிகழ்த்தப்பெறும்.

இது பெரும்பாலும் கோயில்களின் முன்புறங்களில் ஊரை ஒட்டிய வெற்றிடங்களிலும்,கூத்து நிகழ்த்தப் பெறுவது வழக்கம்.

தெருக்கூத்து எதுவாயினும் அதில் பெரும்பங்கு வசிப்பவர் கோமாளியே! அவர் தான் இரவு முழுதும் சபையோரைத் தூங்க விடாமல் நகைச்சுவையால் எழுப்பி உட்கார வைப்பவர்!

1998 தினமணி பொங்கல் விழா மலரில் பொன் தன சேகரன் அவர்கள் தெருக்கூத்து பற்றி எழுதிய கட்டுரையில், (கலாச்சாரத்தில் வேர்கள்) கோமாளி என்ற பாத்திரம் பற்றி எதுவும் கூறவில்லை.

ஆனாலும் அவர், தெருக்கூத்தில் குறிப்பிடத் தக்க அம்சம் கட்டியக்காரன் நடிகர்களுக்கு பார்வையாளர்களுக்கும் பாலம்போல இருப்பவன் அவனே. புரியாதவற்றைத் தான் பேச்சு வண்மையால் புரிய வைப்பது பார்வையாளர்களின் கவனம் முழுதும், கூத்தை நோக்கியே இருக்கும்படி, சிரிக்கவைப் பவனும், கட்டியக் காரனே' என்று கூறுகிறார்.

ஆனால், சேலம் மாவட்டத்தில் இவர் கூறும் அனைத்தும் கோமாளிக்கே பொருந்தும் எங்கள் மாவட்டத் தெருக் கூத்துக்களிலும் கட்டியக்காரன் உண்டு. அவன்

''ராஜன் வருகின்ற வீதியே
அலங்காரம் செய்யச் சொன்ன சேதியே!''

என்று பாடிக் கொண்டு வந்து 'ராஜா' பாத்திரம் மேடைக்கு வரும் செய்தியைச் சொல்லுவான்.

பிறகு, கூத்தின் முதலில் வந்து ஆடிப் பாடிய கோமாளியும், அதன்பின் மேடைக்கு வந்த கட்டியக் காரனும் உரையாடுவார்கள்.

அவர்கள் இருவரும் தெருக்கூத்து நடத்த ஏற்பாடு செய்தவரை வாழ்த்தியும் வெளியூர் ஒன்றில் கூத்தாடிய பிறகு பணம் தராத ஒருவரை இகழ்ந்தும், பின் கதைச் சுருக்கம் கூறியும் முடித்துக் கொள்வார்கள். அத்துடன் கட்டியக் காரன் பாத்திரப் பணி முடிந்து விடுகிறது.

கட்டியக்காரன் இல்லாத தெருக்கூத்துக் கூட நடக்கும். ஆனால் கோமாளி இல்லாத கூத்து நடப்பதில்லை.

உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள 'அமிர்த மதன கூத்து நாடகம்' என்ற ஆய்வு நூலில் 'நகைச் சுவைப் பகுதிக்காகவே, கட்டியக்காரன் அகசியக்காரன், சண்டப் பிரசண்டன், சாத்திரப்பாடி ஆகிய கோமாளிகள் செயல்படுவர்' எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், எமது மாவட்டத்தில் இத்தனை பேருக்கும் பொதுவாக 'கோமாளி' என்ற ஒரே பாத்திரம் தான் உண்டு. ஆனால் அந்த கோமாளி தெருக்கூத்தின் இடையிடையே, தொப்பைக் கான, குறவன் குறத்தி, வண்ணான் வண்ணாத்தி போன்ற கோலங்கள் மாற்றி மாற்றிப் புனைந்து கொண்டு, இடையிடையே வந்து நகைச்சுவை செய்வதுண்டு.

தொழில் முறைத் தெருக்கூத்தில், பெரும் பாலும் 'கோமாளியே' தெருக்கூத்தின் அமைப் பாளராக இருப்பார். 'கோமாளி' பாத்திரமேற் பவர், ஏதாவது ஒரு குறிப்பிட்ட சிற்றூருக்கு வந்து, ஊர்த்தலைவர்' அல்லது பெருந்தகைக் காரரைக் கண்டு கூத்து நடத்த அனுமதி, அதற்கான தொகை முதலியவற்றைப் பேசுவார்!

இதனை கோமாளிப் பாத்திரம் தாங்கி நடிக்கும் ஆடையூர் நாகிராசன் என்பவர் உறுதி செய்தார்.

இதே கோமாளி இராஜா வேடம் போடு பவனுக்கு சேவகனாகவும் அரசி வேடம் வரும் போது தோழியாகவும் பாவித்துப் பேசுவார்.

நகைச் சுவைக்காக கூத்தின் இடையி டையே அரிதாரம், செந்தூரம், கரித்ததூள், முத்து வெள்ளை ஆகியவற்றை மாற்றி மாற்றிப் பூசிக்கொண்டும் வேடிக்கையானஒப்பனை செய்து கொண்டு, உடைகளையும் மாற்றி மாற்றி அணிந்துகொண்டும் வந்து ஆடுவார்.

கூத்தில் எந்தப்பாத்திரம் நடிப்பவர் வரா விட்டாலும்கோமாளிப் பாத்திரம் ஏற்பவர் நிறைவு செய்துவிட முடியும்; ஏனெனில் கூத்து முழுதையும் இவர் நன்கு அறிந்தவராக இருப்பார்.

சிற்றூர்களில் வாழும் இளைஞர்கள், அவரவர் ஊர்களில், தெருக்கூத்து பழகுவதும் உண்டு. அதற்காக தெருக்கூத்து 'வாத்தியார்' ஒருவரை வெளியூரில் இருந்துகூட வர வழைத்துக் கொள்வார்கள்.

இளைஞர்கள் கூத்தின் பல பாத்திரங் களை ஏற்றாலும், கோமாளிக்கு மாத்திரம் அந்த வட்டாரத்தில் 'கோமாளி பாத்திரத்தில் நடித்து அனுபவம் உள்ளவரை ஏற்பாடு செய்து கொள்வார்கள்.

கோமாளி வேடம் தாங்குபவர், சிற்றூர் களில் எங்கு கூத்து நடத்தினாலும் 'செல்வார்! அவருக்கு செல்வாக்கு மிகுதி. அவர் இயற் பெயர் மறைந்து கோமாளி என்ற பெயரே நிலைத்து விடும்.

அவர் கடை வைத்திருந்தாலும் கோமாளி கடை என்று பெயர் பெற்றுவிடும்.

கூத்து தொடங்கி அரசர் அல்லது கடவுள் வேடம் வந்து ஆடிவிட்டு உள்ளே சென்றவுடன் கோமாளி, கடவுள் அல்லது ராஜா வேடம் போட்ட வரை நையாண்டி செய்து பாடி ஆடுவார். பெரும்பாலும் கோமாளிபாடுவது, முன் ஆடிய பாத்திரம் தாங்கிய வரைக் கேலி செய்வதாக இருக்கும்.

எடுத்துக் காட்டாக, ஒருவர் கிருஷ்ணன் வேடம் தாங்கி ஆடிவிட்டு உள்ளே சென்றவுடன் அந்தப் பாத்திரம் தாங்கியவரைக் கேலி செய்து பாடுவார்.

'அதா வந்தான் மாயவன்
இதா வந்தான் மாயவன்
அய்யரூட்டு பந்தலிலே
குந்திருந்தான் மாயவன்!
நண்டுகளும் நாரைகளும்
தின்ன பெருமான் - அவள்
நூலாஞ் செடியிலே
பேண்ட பெருமான்!
குஞ்சுகளும் கோழிகளும்
தின்ன பெருமான் - அவன்
கோனாஞ் செடியிலே
போண்ட பெருமான்!'

என கொச்சையாகப் பாடி விடுவதுண்டு. இதனை பார்வையாளர்கள் சிரிப்புக்காக ஏற்றுக் கொள்வார்கள். யாரும் தவறாக எடுத்துக் கொள்வதில்லை.

சமுதாய சலத்துக்கான கருத்துக்களையும் கோமாளி அவ்வப்போது கூறுவதுண்டு கலை வாணர் கூட 'நல்லதம்பி' என்ற திரைப் படத்தில்,

'நாட்டுக்கு சேவை செய்ய
நாகரீகக் கோமாளி வந்தானய்யா!''

என்ற உடுமலை நாராயண கவியின் பாடலைப் பாடுவார்! தெருக்கூத்துக் கோமாளி சொல்லும் சமூகக் கருத்துக்கள் சிலவற்றைக் காணலாம்.

திருமணமான ஒரு பெண்ணின் கணவர் இறந்துவிடுகிறார், அவளுக்குக் குழந்தையும் இல்லை. தாய்வீட்டுக்கு வருகிறாள். தாய் வீட் டில் அண்ணன், தம்பிகள் மட்டுமல்ல. அண்ணி, தம்பி மனைவி இவர்களும் இருக்கிறார்கள். குழந்தைகளும் இருக்கக் கூடும்.

அடிக்கடி சண்டை வருகிறது. காரணம் என்ன? வெளிப்படையாகக் கண்டு பிடிக்க இய லாது. குடும்பத்தில் குழப்பங்கள் பெருகும். அமைதி குறையும் இதனை கோமாளி பாடு கிறார்.

'தாலி அறுத்தவ முண்டை தானுங்க - அவ
தாயிவீடு வந்துவிட்டா சண்டை தானுங்க'

எவ்வளவு பெரிய உண்மை இது. பெண் கணவனை இழந்தாலும் கணவனின் குடும்பத்தில் வாழ்வதே நல்லது' என்ற கருத்தை இது வலியுறுத்துகிறது.

1950 ஆம் ஆண்டுக்குப் பின், நம் நாட்டில் மழை இன்மையால் பஞ்சம் வந்தது. புஞ்சை நிலங்களில் வேளாண்மையே இல்லாத நிலை. ஆடுமாடுகளுக்குக் கூட புல் பூண்டு கிடைப்பது அரிதாகியது.

சிறுநில, குறுநில உடைமையாளர்கள், மரங்களை வெட்டி விறகாக விற்றும் வாழ வேண்டி இருந்தது. காட்டில் கட்டைகள் வேர் பறித்து எடுக்கப்பட்டன. வேரும் கட்டையும் இருந்தாலாவது, மழை வந்தால் துளிர்க்க வழி உண்டு. அதற்கும் வழி இல்லாமல் போய்விட்டது. காடுகள் அழிந்தால் மழையும் வாராதல்லவா?

கோமாளி, தனது பாட்டின் வழியாக மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்ட முயற்சிக்கிறார்.

'காட்டிலே இருப்பது கட்டை தானுங்க - அதை
கட்டையோட வெட்டிவிட்டா மொட்டைதானுங்க'

என்று பாடுகிறார். இது நகைச்சுவையுடன் மக்களைச் சிந்திக்க வைக்கிறது.

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்தில் 'செலவடை' என்ற ஒரு சிற்றூர் உள்ளது. அங்கு ''மாக்கன் வீட்டுப் பொட்டைகள்'' என்று பெயர் பெற்ற பெண்கள் குழு கூத்தாடுவதுண்டு. பெண்களே எல்லாப் பாத்திரங்களிலும் நடிப்பர். ஆனால் கோமாளி மட்டும் ஆண் தான்!

பெண்கள் குழுவுக்குள் ஒரே ஆண்மகன் தான் என்ற போதிலும் கோமாளிப் பாத்திரத்தில் அவர் பாடல்கள் விரசமாக இருப்பதுண்டு எடுத்துக் காட்டாக

''சித்தாடைக்கு உள்ளிருக்கிற
சித்திரம் என்னா வெல''

''சாய வேட்டிக்குள்ள இருக்கும்
சாரப்பாம்பு என்னாவெல''

என ஆணாகவும் பெண்ணாகவும் மாறி மாறிப் பாடுவதுண்டு.

கூத்தின் இடையில் ஒரு புடவையை சுற்றிக் கொண்டு வந்து, பெண் போல நடை நடந்து ஆடி,

கதவையும்தான் தொறக்கச் சொன்னான்
யாரோ ஒரு பாவி - எவனோ ஒருபாவி
கதவையும் தான் திறந்து விட்டேன்
என்னமேகதி எப்படியோ?

எனத் தொடங்கி, பாயையும் தான் போடச் சொன்னான். பாயிலதான் படுக்கச் சொன்னான் - என விரசமாகவே தொடருவான்!!

ஆண்கள் பெண்கள் அனைத்துப் பார்வையாளர்களும் அவற்றை நகைச் சுவையாக எடுத்துக் கொள்வார்களேயன்றி விரசமாக எண்ணுவதில்லை.

இப்பொழுது அந்த குழு கலைந்துவிட்டது. ஆனால் 'வனவாசி' என்ற ஊரில் ஒரு புதிய பெண்கள் குழு இப்பொழுது தெருக்கூத்து ஆடி வருகிறது.

அவ்வப்போது, அந்தந்த வட்டாரத்தில் நடக்கும் நிகழ்வுகளையும் கோமாளி தெருக் கூத்தில் சேர்த்துப் பாடுவதுண்டு.

மேட்டூர் அணை 1927 கட்டத் தொடங்கி 1937 இல் முடிக்கப்பட்டது. சுற்று வட்டாரத்தில் இருந்த மக்கள் பலர் சிற்றாள் வேலை செய்தார்கள். அணையின் மேல்புறம், பதினாறு கண்பாலம் - அதைத் தொடரும் சாலைகளில் முதன் முதலில் தார்ச் சாலை போடப் பட்டது.

அங்கு பணி செய்தவர்களில் பொறிஞர் பலர் வெள்ளையர்களே! அவர்களை நையாண்டி செய்ய கோமாளிக்கு ஆசை. ஆகவே பாடுகிறான்.

'மேட்டூரு பாலத்திலேல
ஊத்தி இருக்குது தாரு
அதுமேலே போவுது பாரு
நாலு சக்கர காரு
அதுல இருப்பான் தொரை - எனக்கு
மாமன் மச்சினன் மொரை
உட்டான் பாரு ஒரு அறை
மூக்கிலியும் வாயிலியும் நொரை'

நையாண்டி செய்தாலும் அவனிடம் அறை வாங்குவது நாம்தான்! என்பதைச் சுட்டுகிறான்!

கூத்து முழுமையும் இயங்குபவன் கோமாளி மட்டுமே. தெருக்கூதத்துக்களில் மட்டுமின்றி, பெருமாள் கோயில்களில் கோமாளி இருப்பான். விழாக்காலங்களிலல் அவன் பங்கு மிகுதி.

விழாக்கட்ட நெரிசலை தன்கையில் வைத்திருக்கும் மான் தோல் பட்டையில் அடித்து ஒழுங்கு செய்பவர் கோமாளியே! சிலர் மான் தோல் அடி புண்ணியம் தரும் என தலை குனிந்து, கேட்டு அடிவாங்குவதும் உண்டு.

மேட்டூர் அணை வட்டாரத்தில் இருக்கும் கோனூர் பெருமாள் கோவில் திருவிழா சிறப்புற நடைபெறும் இதில் பங்காற்றும் உரிமை ஒரு குடும்பத்தார்க்கே உண்டு!

சிறுவர்கள் கோமாளியிடம் நெருக்கி அடித்து ஓடுவதும், கோமாளி துரத்தினால், பின் வாங்கி ஓடுவதும், விழாவின் வேடிக்கைகளுள் ஒன்று!!

சேலம் அருகில் வெள்ளாள குண்டம் என்ற ஓர்ஊர் உள்ளது. அதன் அருகில் பெருமாள் கோயில் உள்ள பெருமாள் மலை என்ற குன்று உள்ளது.

அக்கோயிலில் புரட்டாசி கடைசி சனிக்கிழமை ஒரு விழா உண்டு. அந்த விழாவுக்கு, 'மொச்சைக் கொட்டைப் பண்டிகை' என்று பெயர் சொல்லுவர்.

இவ்விழாவுக்காக, வீடுவீடாகச் சென்று மொச்சை கொட்டை வாங்குவது, அதை வேக வைப்பது, வேக வைத்த மொச்சையைப் பலருக்கும் வாரி வழங்குவது வரை கோயில் கோமாளியின் பணிதான்!

வீடுவீடாகச் சென்று மொச்சை கொட்டை வாங்கும் பணியில் ஈடுபடும்போது பாடலும் பாடுவார்.

எடுத்துக் காட்டு

'கச்சை கட்டி ஒட்டியாணம்
காலிலே சலங்கையாம்
கரிய பெருமாளோட
கோமாளியைப் பாருங்க''

என்பது போன்றவை. நகைச் சுவைப் பாடலும் உண்டு.

'சிப்பாயின்னா சிப்பாயி
பட்டாளத்துச் சிப்பாயி
மூட்டைப் பூச்சிக்குக் குல்லா தைக்கிற
மொரட்டுச் சிப்பா''

போன்றவை அவை. மேற்கண்ட இரண்டு எடுத்துக் காட்டுகளால் பெருமாள் கோயிலில் 'கோமாளி' பங்காற்றுவதை அறிகிறோம்!

'சர்க்கஸ்' எனப்படு வீரவிளையாட்டுகளிலும் சர்க்கஸ் கோமாளிகள் இருப்பர். அவர் உருவம் குட்டையானவர்களாகவும், திறமையானவர்களாகவும் பார்த்தாலே சிரிக்கும்படி இருப்பர்.

வழக்கில் ஒன்றுகிடக்க ஒன்றைச் செய்பவர்களை கோமாளித் தனம் உடையவன் என்பர். ஆனால் உண்மையில் கோமாளித் தனம், நன்மை செய்வதே, தெருக்கூத்தில் மக்கள் அமர்ந்து சுவைத்த பாங்கை இறுதியில் கோமாளி பாராட்டுவார்!

தலவாழ எலையும்
முத வாழப் பழமும்
முத்தரிக்கை நெய்யும்
அட்டை ஊட்டுக்கு
ஆப்பு அடிச் சமாதிரியும்
குச்சு ஊடுக்கு
கொட்டாப்பு அடிச்ச மாதிரியும்.

மக்கள் கூத்தில் ஒன்றி, இறுகி, உருகிப் போவார்கள் என்பது இதன் பொருளாகும். ★

"தனி மனித இராணுவம் வா.மு.சே..!

கவிஞர் பா.குமரன்

தனிமனித இராணுவம்...
பெருங்கவிக்கோ வா.மு.சே.!
உலகத் தமிழின் ஆவணம்..
பெருங்கவிக்கோ வா.மு.சே!
காந்தியின் செயலனு
வா.மு.சே...!
மரபுக் கவிதையின் செயலனு
வா.மு.சே...!
எம்.ஜி.ஆர்., சிவாஜி, ரஜினி, கமல் போல்
இலக்கியக் கவிதை நாயகன் வா.மு.சே...!
செயற்கைக் கோளிலும்
உன் புகழ் பாடுவேன்!

குமரன் நான்!
கங்கை அமரன் நீ!
நோபெல் பரிசு வென்றிட...
இம்மாநாட்டில் சூளுரைப்போம்!
உன் திருமகன்
அரிமா திருவள்ளுவர்
சாதனைச் செயல் சிகரம்!
மலர்க்குழு உறுப்பினர் வீரமுத்து
எங்கள் தமிழ்த்தேனி!
வாழ்க! பெருங்கவிக்கோ!
வெற்றி சூழ்க உலக முழுதும்!

பன்னாட்டுக் கொள்கை வித்து காலத்தால் அழியாத் தமிழ்

கோ.முத்துக்கருப்பன்

உலகில் தோன்றிய மொழிகளுள் முதன்மைமொழி தமிழ்மொழி. பல்லாண்டு காலத்திற்கு முன்பே கன்னியாகுமரிக்குத் தெற்கே நாவலத்தீவு அல்லது லெமுரியா எனப்படும் நிலப்பரப்பு இருந்துள்ளது. மக்கள் தாய்க் கடவுளை வழிப்பட்டு வந்துள்ளனர் கன்னி அல்லது குமரி என்னும் பெயர் அதற்கு உள்ளது. அந்த நிலப்பரப்பே குமரி நாடு தமிழ் மக்களின் தாயகம் எனப் பெயர் பெற்றது. அந்த நிலப்பரப்பில் செங்கோன் என்ற அரசன் ஆண்டதாக குறிப்புகள் உள்ளது.

சிந்து நதியை வைத்து சிந்து என்ற எழுத்தே திரிந்து பின்பு இந்தியா என மாறியுள்ளது. இந்த இந்தியா முழுமைக்கும் ஒரு காலத்தில் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர், மொஹஞ்சதாரா, ஹராப்பா, புதைப்பொருள் ஆராய்ச்சி மூலம் இந்த உண்மைகள் தெரியப்படுகின்றது. கி.மு. 6000 ம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் ஒலியெழுத்து தொடங்கி உள்ளது. அதன் பின்புதான் மற்றமொழி எழுத் துக்கள் தோன்றி இருக்கலாம். தமிழ் எழுத்துக்கள் தான் குறைவான உருவில் எளிதாக எழுதக் கூடிய அமைப்பில் குறைந்த எழுத்துக் களை கொண்டதாக இருந்து வந்துள்ளது. சீனமொழி எழுத்துக்கள் உலகிலேயே கூடுதல் எழுத்துக்களைக் கொண்டு எளிமையாக எழுத முடியாத எழுத்துக்களாக உள்ளது. இதுப்போல் தான் மற்றமொழி எழுத்துக்களும், எழுத்துக்கள் உருவத்தில் இருந்து உருவாக்கம் பெறுகின்றது, 2200 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இலங் கையை ஆண்ட தமிழ் அரசன் வாலகம்வாகு அரசரின் உருவம் மரத்தில் வெட்டப்பட்டு தம்பளை மலைக் கோயிலில் வைக்கப்பட்டுள் ளது. இதிலிருந்தே தமிழர்களின் எழுத்து, உருவம், ஓவியம் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது என்று உலகிற்கு புலப்படுத்து கின்றது. 6000ம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா முழுவதும் பரவி இருந்த தமிழர்களை கி.மு. இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்பு மத்திய ஆசியாவில் கால்நடைகளை வளர்த்து பிழைத்துக் கொண்டிருந்த ஆரியர்கள் அங்கு நிலவிய பஞ்சத்தால் ஒரு பகுதியினர் பிழைப் பிற்காக கனவாய்கள் வழி இந்தியாவிற்குள் புகுந்து பல நூற்றாண்டுகள் தமிழர்களுடன் போராடி இப்போதைய தெற்கு பாகத்திற்கு தள்ளி விட்டுவிட்டனர். மொஹஞ்சதாராவில் தமிழ் மொழி மேலோங்கி நின்றபொழுது அதை பின்பற்றி பிராகிருதமொழி உருவாகியுள்ளது அதன்பின்பே தான் தொல்காப்பிய செய்யுளில் தமிழகத்தின் வடதென் எல்லைகள் கூறப் பட்டுள்ளது அவை



''வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு
நல்லுலகத்து'' என்று

தென்குமரியில் குமரி அம்மனின் உருவச் சிலை அப்பொழுதே இருந்தது என்று 2000 ஆண்டிற்கு முன்பே வந்துள்ள ரோமானியர்கள் தமது குறிப்பில் எழுதி வைத்துள்ளனர். அந்தக் காலக்கட்டத்தில் தான் நாம் இப்பொழுது பன்னாட்டு உறவு பற்றியும், கட்டு பற்றியும், சகோதர தத்துவத்தைப் பற்றியும் கூறு கின்றோமே இதையெல்லாம் முன்பே தீர்க்க தரிசனமாக உணர்ந்த கணியன் பூங்குன்றனார் என்ற தமிழ்ப் புலவர் உலக வாழ்வின் உண்மையை தெரியவைத்து பாடியுள்ளார்.

''யாதும் ஊரே! யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;
சாதலும் புதுவ(து) அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னா(து) என்றலும் இலமே; மின்னோடு
வாமை தண்துளி தலை இ ஆனது
கல்பொரு(து) இரங்கும் மல்லல் பேரர்யாற்று
நீர்வழிப்ப டூஉம் என்பது திறவோர்

காட்சியின் தெளித்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே - என்றார்.

உலகம் முழுவதும் இனிது வாழ்ந்தாலன்றி ஒரு தனி நாடோ ஒரு தனி ஊரோ, ஒரு தனிக் குடும்பமோ இன்பமாக வாழ இயலாது என்றார். எனவே தான் ஒரு புலவர் கூறுகின்றார்.

மூலமென்றே சொல்லல் முத்தமிழாம் - புவி
மூர்க்கம் தவிர்த்தும் இப்புதமுதாம்
ஞாலமெலாம் தமிழ் தமிழர்களே புவி
நாமெனவே குதித்தாடுவோமே - என்றார்.

தமிழ் மொழியில் இருந்து பிறந்த தெலுங்குமொழி 1900ம் ஆண்டுக்கு முன்பில் இருந்து வழக்கத்தில் வந்துள்ளது. கன்னட மொழி 1500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து வழக்கத்தில் வந்துள்ளது. 1200 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து மலையாளம் மொழி தோன்றியுள்ளது. இந்தியாவில் 1600 மொழி பேசுகின்றவர்கள் இருந்தாலும் சில மொழிகளே பெரும்பான்மையினர் பேசியும் பின்பு அழிந்தும் அதில் இருந்து பிறந்த சிலமொழிகள் வழக்கத்திலும் உள்ளது.

இந்தியாவில் முதன் முதலில், புகுந்த மொழி பிராகிருதமொழி என்றும் அடுத்து மங்கோலிய மொழி என்றும் அதனையடுத்து பாரசீகம், அராபியம், இந்தி, உருது, இந்துஸ்தானி, ஆங்கிலமொழி என்றும் தெரிய வருகின்றது.

இத்தனை மொழிகள் வந்தாலும் இளமை குன்றாமல் இன்றும் இருப்பது தமிழ்மொழியே என்று மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை கூறுகின்றார்.

''பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தப்படி
இருப்பதுபோல்
கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும்,
துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து
வாழ்த்துதுமே''

என்று தமிழ் மொழியின் பெருமைதனைக் கூறுகின்றார்.

உலகில் பிரெஞ்சு இலக்கியம், கிரேக்க இலக்கியம் ஜெர்மன் இலக்கியம், சீன இலக்கியம், ரஷ்ய இலக்கியம், உருது இலக்கியம், பாரசீக இலக்கியம், கன்னட இலக்கியம், தெலுங்கு இலக்கியம், வடமொழி இலக்கியம் என்று மொழி, பண்பாடுவாரியாக பல இலக்கியங்கள் தோன்றியிருந்தாலும், தமிழ் இலக்கிய நயத்திற்கு ஈடாகாது.

2800 ஆண்டுகளுக்கு முன்பே ரோமாபுரியை ஆண்ட ஏழாவது சாலமோன் காலத்திலேயே தமிழர்கள் அங்குச் சென்று தமிழின் தமிழர்களின் பெருமையினை பறைசாற்றி வந்துள்ளனர். அதுப்போல் 2400 ஆண்டுகளுக்கு முன்பு பாலி காலத்தில் நற்றிணை என்றும் சிறந்த நூல்வெளியானது என்ற அவர் குறிப்பில் இருந்து தெரிய வருகின்றது. 2300 ஆண்டுகளுக்கு முன்பே பிராமிய கல்வெட்டுகளும், 2000ம் ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்கர்களும், அதுப்போல் சீனியாத்திரீகர்களான பாசியான், யுவான் சுவாங் போன்ற வெளிநாட்டினர் மூலம் தமிழ்மொழியின் பெருமை உலகளவில் தெரியவருகின்றது.

மேல்நாட்டினரான இங்கிலாந்தியர் கூறுவர் – எம் பேரரசை இழக்க துணிந்தாலும் துணிவோம் ஆனால் ஷேக்ஸ் பியரையும் அவர்தம் மொழியாம் ஆங்கிலத்தையும் இழக்கமாட்டோம் என்று என்னே அவர்களது இலக்கிய மொழிப்பற்று.

ஒரு ஷேக்ஸ்பியரை வைத்தே அவர்கள் இவ்வளவு பெருமை கொண்டாடுகின்றார்கள் என்றால் தமிழ்மொழியில் இலக்கிய ரத்தினங்களாக உள்ள ஐந்து நூல்களான சிந்தாமணி, கம்பராமாயணம், பெருங்கதை, சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற பல இலக்கியங்களைப் பெற்றுள்ள நாம் எத்தனைப் பெருமைப்பட வேண்டும்.

எனவேதான் அவற்றில் நான்கு நூலின் பெருனமயை புலவர் ஒருவர் கூறுகின்றார்.

''திருத்தக்க மாமுனி
சிந்தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும்
வேண்டேம் உருத்தக்க

கொங்குஅவேள் மாக்கதையைக்
கூறேம் குறளனுகேம்
எங்கெழிலேன் ஞாயிறெமக்கு

தமிழ் இலக்கியத்தில் தலை சிறந்த நூலான குறள் மனித எண்ணத்தில் மிக உயரிய மிக தூய் மையான நூல் என்று கூறுகின்றார் வெளி நாட்டினரான எம். ஏரியல்.

தமிழ், தமிழ்க்கலை, தமிழ் பண்பாடு, அழியாதிருக்க காரணம், செந்தமிழ் வெறெந்த மொழியையும் விட, வடமொழியையும் விட எளிமையானது என்று திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானத்தின் திவானாக இருந்த அறிஞர் சர்.சி.பி. ராமசாமி அய்யர் கூறியுள்ளார் மேலும் சங்கம் வைத்து மொழி வளர்த்த ஒரே இனம் தமிழ் இனம் என்று அவர் கூறுகிறார். தமின் பெருமையினை அறிந்துதான் மேல் நாட்டினர் களான இராபர்ட் தி நோபிலி, சீகன்பால்கு, இரண்ட்லர், கார்ல்சிரவுன், வீரமாமுனிவர், வின்சுலோ, கால்டுவெல், கார்த்திகேயர், ஜி.யு.போப், சிண்டர் ஸ்லேகேமர்ஸ், வள்ளுவர், நாணயத்தை வெளியிட்ட எல்லீஸ், போன்றோர்கள் தமிழை வளர்க்க முற்பட்டு தமிழ்மொழியினையும் வளர்த்து அதன்மூலம் தானும் இன்றுவரை உலக தமிழர்களிடேயே வாழ்ந்து வருகின்றனர். ஆகவே தான்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடெனும் பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது முச்சினிலே" -

என்று தேசிய கவி பாரதி பாடிய ஆழ்ந்தகருத்து நமக்கு புலப்படுகின்றது.

நாடகத்தமிழ், இசைத்தமிழ், இயற்றமிழ் என சிலப்பதிக்காரத்தில் கண்ட முத்தமிழ் பெய ரளவில் போற்றப்பட்டு வந்துள்ளது. ஆனால் இப்பொழுது ஒரு தமிழை அகற்றி இரண்டும் தமிழும் ஒதுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்ப் பற்றும், அறிவும், கடமைப் பொறுப்பும் மிக்க இளைஞர்கள், மாற்று மொழியின் வசீகரத்தில் சிக்கிக் கொள்ளாமல், தமிழின் வளமும் குறையும் அறிந்து அதனை வளர்த்தல் வேண்டும்.

"மெய்யுடையொருவன் சொல மாட்டாமையால்
பொய் போலுமே பொய் போலுமே"
என்றும்
"மெய்யுடையொருவன் சொல் வன்மையினால்
மெய் போலுமே மெய் போலுமே"

என்றும் அதிவீரராம பாண்டியர் கூறியது போல்.

ஒவ்வொரு மொழியிலும் தானாக ஈட்டிய பண்பே அதன் தேசிய பண்பு. அது பிறமொழி களுக்கும், உலகுக்கும் கொடுக்கும் பண்பே அதன் உலகப் பண்பு .அல்லது சர்வதேசிய பண்பு ஆகும் என்று அறிஞர் பெருமக்கள் கூறியது போல ராமலிங்கம்பிள்ளை கூறினார்.

"தமிழின் என்றோர் இனமுண்டு தனியே
அவர்க்கொரு பண்புண்டு" என்றும்

பெண்புலவர் ஸ்ரீமதி. ஹாகி வாலம் தமிழ்மொழியை ஆதி சக்தியாகவே கருதி பாடுகின்றார்.

தமிழக நாயகி, தமிழ்மொழித் தாயகி
தண்டமிழ் வஞ்சி மணிக்கொடியே
அமுத கலாமய அன்னை புராதனி
ஆரனி, காரனி, நாரணியே
சமரஸ பரவமும் சாத்வீக போதமும்
ஜகத்துக்களித்திடும் ,அம்பிகையே
அமரமனோன்மனி, அம்பசிரோமனி
அந்தரி சுந்தரி வந்தனமே - என்று

இத்தனை சிறப்புமிக்க தமிழை தமிழர் களே மாற்றுமொழி மாயையில் சிக்குண்டு புறக்கணிக்கப்படுகின்ற பொழுது வேதனைப் பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். உலகில் இப்போது 32 நாடுகளில் தமிழர்கள் பரவி இருக்கின்றார்கள். வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்களுக்குள்ள மொழிப்பற்றுக் கூட தாய் தமிழகத்தில் உள்ள தமிழர்களுக்கு இல்லையே என்று நினைக்கின்ற பொழுது நெஞ்சு வெம்முகிறது. 1906-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி தமிழகமான சென்னை மாகாணத்தில் தமிழ் பேசுகின்றோர் 1-55 கோடி யினர் தான் இருந்தனர். வெளிநாட்டினரின் அடிமையினராக இருந்தபொழுதுக் கூட தமிழ்

மொழியை அழியாமல் பாதுகாத்து வந்துள்ளனர். இப்பொழுது தமிழகத்தில் 6 கோடிபேர் கொண்ட மக்கள்தொகை உள்ளது என்று கணக்கெடுப்பு கூறுகின்றது. அதில் 4 1/2 கோடி மக்களாவது தமிழர்களாக இருப்பர். ஆனால் மாற்றுமொழியினரைப் போன்ற மொழிப் பற்றோ, மொழியினுப் புணர்ச்சியோ இவர்களிடையே இல்லை என்கின்றபொழுது தான் வேதனையாக உள்ளது. உலகமுழுவதும் 9 கோடி தமிழர்கள் இருப்பதாக கணக்கு, உலகமொழி என்று கூறுகின்ற ஆங்கிலமொழி அதற்கடுத்தார் போல் சீனமொழி, உருது மொழிகளுக்கு காலத்தால் அழியாமல் ஈடுகொடுத்து வரும் மொழி நமது தமிழ்மொழி. மொழி வெறி நமக்கு வேண்டாம், மொழிப்பற்று மொழி உணர்ச்சி நமக்கு வேண்டாமா? தமிழை வளர்க்க பல ஆன்றோர்கள் பாடுப்பட்டு வருகின்றனர். 1977ம் ஆண்டு மலேசிய மாமணி, தமிழ்க்கடல் சுவாமி இராமதாசர் பிறந்த நாளில் தொடங்கிய பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் உலகளவில் நான்கு மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி வெள்ளிவிழா மாநாடாகவும், ஐந்தாம் உலக மாநாடாகவும் தமிழ் வளர்த்த மதுரையம் பதியில் நடத்துகின்றனர். அந்தத் தமிழ் அன்பர்களுக்கு நாம் உறுதுணையாக இருக்க வேண்டாமா? தமிழ் நெஞ்சங்களே தமிழை காக்க கங்கணம் கட்டிக்கொள்ளுங்கள்.

தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!! தமிழ்த்தாய் வாழ்க!!!

தமிழ்ப்பண்பு வாழ்க!!!! தமிழ் இலக்கியம் வாழ்க!!!!!

தமிழிசை வாழ்க!!!!!!

★

உலகமொழியாய்த் தமிழை உயர்த்துவோம்

- பாவலர் கருமலைத்தமிழாழன்

முத்தமிழோ அறிவியலின் மொழியாய் மாறி
மூன்றோடு நான்காகிக் கணினிக் குள்ளும்
முத்தாகப் புகுந்தின்றோ ஐந்தா யாகி
முன்னேற்றப் பாதையிலே விரைந்து யர்ந்து
சத்தான மொழியென்றே பிறநாட் டார்கள்
சான்றளித்துப் போற்றுகின்ற திறனைப் பெற்றும்
வித்தான தமிழகத்தி லின்னும் ஆட்சி
விளக்கினிலே ஒளிவீச இயல வில்லை!

அணுக்கொள்கை பாசுகலின் கொள்கை யின்னும்
அறிவியலின் பலகொள்கை சங்கப் பாட்டில்
கனுக்களுடை கரும்பைப்போல இனிக்கத் தந்தும்
கல்லணையை கல்லில்லா தஞ்சை மண்ணில்
வானுயரக் கோபுரத்தைக் கட்டி வைத்தும்
வானூர்தி நீரூர்தி ஓடச் செய்தும்
தேனுமிழும் செந்தமிழ்தான் சிறந்தி ருந்தும்
தெளிவாகப் பிறாறிய விளக்க வில்லை!

கணினிக்கே ஏற்றமொழி இணையத் துள்ளும்
கற்கண்டாய் இனிக்குமொழி இலக்கி யங்கள்
அணியணியாய்ப் பெற்றமொழி இலக்க ணத்துள்
அகம்புறத்தை உரைத்தமொழி உலக மாற்ற
கணிப்புகளுக் கேற்றவகை கட்ட மைந்த
கருத்துமொழி தமிழ்மொழிதான் என்னு முண்மை
மணியொலித்தே உலகத்தார் அறியும் வண்ணம்
மானமுடை தமிழரின்று செய்ய வேண்டும்!

உலகமெல்லாம் பரவியுள்ள தமிழர் அன்னை
உயர்தமிழை செம்மொழியாய் ஆக்கும் வண்ணம்
நலம்பலவும் ஒற்றுமையாய்ச் செய்ய வேண்டும்
நாள்தோறும் புதுக்கருத்தில் நூல்க ளாக்கி
உலகமொழி அனைத்திலுமே மொழிபெ யர்த்தே
உலகமொழி நூல்களினைத் தமிழ்ப டுத்தி
புலப்பண்பை நாகரிகத் தொன்மை நாட்டிப்
புவிமொழியாய்த் தமிழையேற்ற உழைப்போம் நன்றாய்!

ஆன்மிகமும் அரசியலும்

திருமதி பிரேமா

ஆன்மிகமும் அரசியலும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றது.

ஆன்மிகம் என்பது இறைவனிடத்திலே அன்புடன் கூடிய பய பக்தியுடன் செயல் படுவது. பக்தியுடையவர் என்ற ஆன்மிக வாதிகள் தொண்டு புரிவதே முக்கிய நோக்கமாக எல்லாப் பொருள்களிலும், (உயிர் உள்ள வற்றிலும், உயிர் இல்லாதவற்றிலும்) அன்பு காட்டுபவர்களாக இருக்க வேண்டும்.

எந்த இறைவனை வணங்குகின்றவர் களும் இறைவனின் பக்தர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும். எல்லா இறைவனும் ஒன்றே. மனிதர் அனைவரும் ஒன்றே. ஆதி இறைவன் சிவனே என்பது ஆய்வாளர் கருத்து. எம்மத மானலும் எந்த இறைவன் ஆனாலும் சிவன் என்றும், அனைவரும் சிவனின் பக்த்ர்களாக வேண்டும் என்பதும் ஆன்மிக ஆய்வாளர்களின் கருத்து. இதனை

''தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பர்

இறைவன் எங்கும் இருக்கிறான் என்பதை நம் கவிமணி அவர்கள்

''எங்கும் மனிதர் உனைத்தேடி இரவும் பகலும்
அலைகின்றார்
எங்கம் உனது உன் வடிவம் எனினும் திருடர்கள்
பாரார்
எங்கும் எழுவது உன்குரலாம் எனினும் செவிடர்
கேட்பாரோ
எங்கும் என்றும் என் உயிரும் எல்லாம் ஆன
இறைவனே''

''கோயில் முழுவதும் கண்டேன் உயர் கோபுரம் ஏறிக்
கண்டேன் - தேவாதி தேவனைத் தோழி யான்
தேடியும் கண்டிலேன் - உள்ளத்திலே உள்ளாண்டி''

என்று கூறுகின்றார்.

இறைவனுக்குச் செய்யும் தொண்டில் சிறந் தது மக்களுக்கு (தொண்டர்களுக்குச்) செய்வதே சிறப்பானது.

ஒரு தெய்வம், ஒரு சாதி, ஒரு மதம் என் றார். நாராயண குரு, வள்ளல் இராமலிங்கம் பிள்ளை, திரு.வி.க., பாரதியார், ஈ.வே.ரா போன்ற பெரியயோர்களும் சாதி ஒன்று என்பார்.

மக்கள் சமுதாய வளர்ச்சி :

மிருகங்கள், பறவைகள் ஊர்வன போன்று வாழ்ந்த மனிதன் கூட்டம் கூட்டமாக வாழத் தொடங்கினான். பயிரிடத் தொடங்கினான். பயிரிட்டு கூடி வாழத் தொடங்கினான்.

தனி ஒருவனாய் இருந்தவன் (அவனும் - அவளும்) ஆகி, பின்பு குடும்பம் விரிந்து, ஆற் றங்கரை நாகரிகத்தில் சிறு கூட்டமாக, சமூகமென வளர்ந்து, நாம் நாங்கள் என்று உதவி வாழத் தொடங்கினார். ஆனால் கூட்டங் கூட்டமாய் வாழ்ந்தனர்.

வீட்டுத் தலைவனும், நாட்டுத் தலை வனும் மற்றவர்கள் அடக்கி ஆண்டான். நாடோடிக் கூட்டத்திற்கும் தலைவன் உண்டு.

கடவுள் உணர்வு:

அச்சத்தின் காரணமாக ஏற்பட்டது. தீ, மரம், இடி, பாம்பு, புலி போன்ற விலங்கு களையும் விழிப்பட்டனர். இன்றும் அச்சம் காரணமாகவே, இறைவனை வணங்கி படைப்புகள் படைக்கின்றார்கள்.

''அச்சமே கீழ்களது ஆகாரம்'' என்ற வள்ளுவரின் கூற்றுப்படி ''சிறந்த பண்பாடு இது'' என்று அறியாத கீழ்மக்களாகிய அந்த முன்னைய இனத்தவர்கள் அச்சத்தால் ஆன்மீக வழிபாடாகிய ஆசாரத்தை மேற்கொண்டார்கள். அப்பர் பாடிய பாடல்

''அஞ்சியாகிலும் அன்புள்ளாகிலும்
நெஞ்சம் வாழி நினை''

என்று மதத்துக்கு ஆன்மீக உணர்வை ஊட்டுகின்றனர். தனக்கு மேல் உள்ள ஆண்ட வன் தன்னை பாடினார் என்ற அச்ச உணர்வு இருந்தது. அதனால் மனிதர்கள் பெரும்பாலோர் பெரிதும் ஏற்ற தாழ்வுகள் இனப்போராட்டம், வர்க்கப் போராட்டம் போன்ற உரிமைப் போராட்டங்கள் ஆன்மீகத்தில் தொடங்கி அரசி யல் வாழ்வில் கலந்து மக்களைக் கதி கலங்கச் செய்துள்ளது.

ஆதி காலத்தில் குழுக்களின் தலைவர்கள், ஊர் சபைகள், தலைவர்கள் தேர்ந்தெடுத்தல் ஆன்மீக முறைப்படி பயபக்தியுடன் கோயில்களில் இறைவனை வணங்கி குடஓலை முறைப்படித் தேர்ந்தெடுத்து ஆன்மிகப் பணியும், அரசியல் பணியும் செய்தனர்.

மன்னர் ஆட்சி பல ஆண்டுகள் நடந்தன. மன்னன் எவ்வழி. அவ்வழி மக்கள்'' என்ற நிலை உருவானது. மன்னன் எச்சமயத்தைச் சேர்ந்தனோ அவ்வழி மக்கள் ஆர்வமுடன் செயல்படத் தொட்கினர். பலனை எதிர்பார்த்து, பலன் அடைந்தனர். இந்து மன்னர்கள் ஆட்சியில் மன்னன் சைவ மதத்தவராக இருந்தால் மக்களில் பெரும் பகுதியினர் மன்னன் வழியே பின்பற்றினர். மன்னன் எந்த இறைவனை வணங்குகின்றனோ. அந்த இறைவனுக்கு கோயில் கட்டுகின்றான். இருக்கின்ற கோயிலில் தெய்வங்களை மாற்றுவதோடு கோயில் அமைப்பையும் மாற்றி பலனை எதிர்நோக்கி மக்களும், மன்னன் வழியைப் பின்பற்று கின்றனர். மன்னனை ஆதரிக்காதவர்களை துன்புறுத்தினர் தொல்லைகளுக்கு ஆளாக்கி னர். இன்று அரசியல் வாதிகள், கட்சி மாறுவது போன்று பதவிக்காக அன்றும் இன்றும் ஆசையின் காரணமாக மன்னன் வழியை பின் தொடர்ந்தனர்.

அடிப்படை சமூகம் குடும்பமே - தொடர்ந்து ஊரும், உலகமும், ஆணும் பெண்ணும் சேர்ந்ததே சமுதாயம்.

வழக்குகள் ஊர்ச்சபையில் விசாரணை செய்யப்பட்டு, உடனே தண்டனையும் நிறைவேற்றப்படும். பெரிய புராணத்தில், இறைவன் சுந்தரர் எனது அடிமை என்றதும் கையொப்ப ஏடு எடுக்கப்பட்ட உடனே தீர்ப்பு வழங்கப் பட்டது. பழையனூர் நீலி'' வரலாற்றில் தவறாகத் தீர்ப்பு கூறிய 70 வேளாளர் தாங்கள் தவறை உணர்ந்து தீயிடை புகுந்து மாய்ந்தனர்.

ஊர்ச் சபை உறுப்பினர்களுக்கு பல கட்டுப்பாடுகள் இருந்தன. ஊர்ச்சபை உறுப்பினர்களும், தலைவர்களும் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் நீதி தவறாதவர்களாகவும் இருக்க வேண்டும். தீர்ப்புகளை விரைவில் வழங்கினர்.

மனுநீதிச் சோழன் எல்லா உயிர்களிடத்திலும்

அன்பு காட்டினார்.

பற்றற்றால் பற்றினால் பற்றுக -

விருப்பு, வெறுப்பு இல்லாதவன் இறைவன். அவனைப் பற்றி அவன் மீது அன்பும், பக்தியும் காட்டி பெரியோர் வகுத்த நன்னெறி வழி வாழ்வதே ஆன்மீகம்.

மன்னன் அவையில் அறிவுடைய முனிவர், குருமார்கள் போன்ற ஆன்மிக வாதிகள் பலர் இருந்தனர். அரசியலில் தசரதன், பாண்டு போன்ற மன்னர்கள் ஆன்மிக வாதிகளை மதித்தனர் வணங்கினர். அவரவர்கள் சொல்படி நடந்தனர்.

ஆன்மிக வாதிகள் கூறியபடி நடந்தால் பல தவறுகளை மன்னர்கள் செய்தனர்.

திருநாவுக்கரசர், மாணிக்க வாசகர், போன்ற ஆன்மிகவாதிகளுக்கு துன்பங்கள் பல கொடுத்தனர்.

ஆன்மிக வாதிகள் சண்டை, அன்று மிகுந்தது இன்றுமிருக்கிறது. மன்னன் கருத்துப் படி வாழ்ந்தவர்கள் பலன் பெற்றனர். இன்று குடியரசுத் தலைவருக்கு கொடுக்கும் மதிப்பு அன்று முனிவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆன்மீக வாதிகள் பிற மதத் தலைவருக்கு, துன்பங்கள் பல கொடுக்க மன்னனைத் தூண்டினார்கள். அதன்படி நடந்தான் மன்னன். செய்யும் தவறுகளை சுட்டிக் காட்டி திருந்தாது தீய வழிகளில் தூண்டினர்.

''யாதும் ஊரே - யாவரும் கேளிர்''

என்ற கனியன்பூங்குன்றனார் கருத்தே உலகமக்கள் சமுதாய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றது.

மன்னன் ஆட்சி :

மன்னன் ஆன்மிக வாதியாக இருந்தான். இறைவனுக்குப் பயந்தால் மக்களுக்கு பணி செய்வதே தன் கடன் என எண்ணினான். முனிவர்கள், குலகுரு போன்ற ஆன்மிகவாதிகள் கருத்து அறிந்து செயல்பட்டால். ஆன்மீக வாதிகள் என்று கூறும் போது மன்னன் எம்மதத்தைச் சார்ந்தவனாக இருந்தானோ, அம்மதத்தைச் சேர்ந்தவரே மன்னனுக்கு

ஆலாசனைக் கூறி நாட்டைக் கெடுத்து வந்தனர். சைவர்களுக்கு சமணர்களுக்கும் சண்டை, பௌத்தர்களுக்கும் பிற மதத்தினருக்கும் சண்டை, எடுத்துக்காட்டு 7 ஆம் நூற்றாண்டில் நடந்த சமயச் சண்டை வாதங்கள் சமணர்களுக்கு கழுகில் ஏற்றப்பட்ட நிகழ்ச்சியாகும்.

இன்றைய உலக அரங்கில் ஜக்கிய நாட்டுச் சபை செயலாற்று சக்தியற்ற ஒரு சபையாக விளங்குகிறது. தன் இச்சையாகச் செயல்படும் சபையாக அது செயல்பட வேண்டும் எந்த நாட்டிற்கும் வீட்டோ பலர் இருக்கக் கூடாது எல்லா நாட்டிற்கும் சம அதிகாரம் இருக்க வேண்டும்.

வெள்ளையர் ஆட்சியின் கிருத்தவ ஆன்மீக வாதிகளின் அதிகாரம் உயர்ந்திருந்தது. வெள்ளையர் ஆட்சியில் அரசு வேலைக்கு மதிப்பிருந்தது. ''உத்தியோகம் புருச லட்சணம் என்ற பழமொழியும் உண்டாயிற்று. குறைந்த சம்பளம் உள்ள ஏவலர் வேலையும் சிறப்புடையதாக கருதப்பட்டது.

சிறந்த ஆட்சி என்றால் மக்கள் செல்வம் எல்லாம் பெற்று மகிழ்வுடன் வாழ வேண்டும். மக்கள் அச்சமின்றி வாழ வேண்டும். மன்னருக்கு நல்ல ஆலோசனைகள் ஆபிமிகவாதிகள் கூற அதன்படி நடந்து வந்தார்கள்.

ஆன்மீக நூல்கள்:

அரசன் நல்ல முறையில் ஆட்சிச் செய்ய வேண்டும். என்ற பரந்த நோக்கில் எழுதப் பட்டது. அதை படித்த மக்கள் நல்லமுறையில் வாழ்ந்தனர். என்பதை இராமயணத்தில்

> ''எல்லாருக்கும் எல்லா செல்வங்களும் எய்தலாலே
> இல்லாரும் இல்லை உடையார்களும்
> இல்லைமாதோ''

இதுபோன்ற குற்றமற்ற சமுதாய வாழ்விலே என்றென்றும் மனித சமுதாயம் அமைக்க கடமைப்பட்டிருப்பது என்பதாகும். தனிமனிதன் வாழ்க்கையில் சமுதாயத்திற்கு மிகுந்த பயனுடையதாகும்.

தொண்டுள்ளம் :

தனி மனிதன் தொண்டும் செய்யும் மனமும் தொண்டும் செய்ய வேண்டும். அப்போது தான் அரசும் சமுதாயமும் சிறப்படையும். பெரிய புராணத்தில் தொண்டர்களின் சிறப்பு பற்றி கூறுவதோடு மன்னர்கள் தனி மனிதர்கள் எப்படி தொண்டு செய்தார்கள் என்பதை விளக்கப்படுகின்றது. இதனை படிக்கின்ற ஆன்மிகவாதியும், அரசனும் நன்மை செய்வதில் நாட்டம் கொண்டு நன்மைகள் செய்கின்றான். நாடும் நாமும் நலம் பல பெறுகிறோம்.

அரசியல் அன்றும் இன்றும் :

அன்று அரசியல் குறுநில மன்னர்களிடமும் சக்கரவர்த்திகளிடமும் அடிமைப் பட்டிருந்தது. மன்னர் இட்டது சட்டம் அவையின் பல முனிவர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆலோசனை படி ஆட்சிச் செய்தான். அவர்கள் ஆலோசனைதான் கூறுவார்கள். ஆட்சியில் தலையிட முடியாது. மன்னன் விருப்பம் போல் ஆட்சி நடக்கும். ஆன்மீக வாதிகள் மன்ன் வழியில் சென்றார்கள்.

முகமதியர்கள், கிருத்தவர்கள் ஆட்சிகளிலும் மக்கள் மதம் மாறினர். வேலை கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில்

கோவில் மன்ன் சார்ந்திருக்கும் மதத் தெய்வங்களுக்கு ஏற்றவாறு முகப்பு மாற்றங்கள் செய்யப்பட்டு வந்ததோடு அங்கிருக்கின்ற இறைவனின் சிலைகளும் மாற்றப்பட்டன. காட்டாக நாகர்கோவில் நாகராஜகோயில் சமணக்கோயில் என்பர். அது ஆட்சி மாற்றத்தின் போது சைவமாக மாறியது. பல ஆண்டுகளாக ஒரு ஆட்சியின் கீழ் இருந்ததால் அக்கோயிலின் வடிவமைப்பை பழைய முறையில் மாற்ற அனுமதிப்பதில்லை. பழைய நிலைக்கு மாற்றினால் ஏற்படும் நிகழ்ச்சிகளை நீங்களே பார்க்கின்றீர்கள்.

உங்கள் நிலம் பல ஆண்டுகள் ஒருவரிடமிருந்தால் அவருக்குச் சொந்தம் உழுவனுக்கே சொந்தம். 400 ஆண்டுகள் ஆட்சி புரிந்த ஆங்கிலேயனை மாற்றி விட்டோம். பல ஆண்டுகள் ஆக்கிரமித்து அபகரித்த கோயில் களை மாற்றுவதுடன் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மன்னன் ஆட்சி மாறி மக்கள் ஆட்சி ஏற்பட்டதால் தலைவர்கள் பலரும் ஏத்தர்களாவும், ஏமாற்று காரர்களாகவும் இருக்கின்றனர். லஞ்சம் தலைவிரித்து ஆடுகின்றது. நல்லவர்கள் அரசியிலிருந்து இன்று ஒதுங்கிவிட்டார்கள்.

ராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டாள் என்ன? ஆண்டுதோறும் வாக்

களிப்பதே நமது வேலையா என்று சலிப் படைகிறார்கள். அரசியர் வாதிகள் கேடி களையும் கோடிகளையும் நம்பியுள்ளனர். போலி சாமிகள் காலடியில் அரசியல்வாதிகள் சிக்கி தவிக்கின்றனர். நல்வழிபடுத்தும் ஆன்மீகவாதிகளும் உள்ளனர்.

நட்டை ஆளும் ஆட்சிமுறை காலந் தோறும் மாறி வந்துக்கொண்டே இருக்கிறது. இன்னும் பல மாற்றங்கள் பெற வேண்டும்.

இன்றைய நிலையில் நாடாளும் உரிமை ஒவ்வெருவருக்கும் இருக்கின்றது. அமைதியாக நாட்டை ஆளுவது சிறப்புடையது. நல்ல முறையில் தேர்தல் நடத்த முடிவதில்லை. தேர்தல் நில்லுமுல்லுகள் இன்றும் நடை பெறுகிறது. தேர்தலில் வன்முறை துப்பாக்கிச் சூடு அதுதான் இன்றைய பத்திரிகைச் செய்தி.

கள்ளர்களும் கொள்ளையர்களும் கொலை காரர்களும் நாட்டை ஆட்சிச் செய்கின்றனர். மக்கள் துன்பம் அடைகின்றனர். குண்டர் கலா சாரம் அரசியலில் புகுந்துவிட்டது. தவறு செய் கின்றவர்கள் தண்டனையிலிருந்து தப்புகின்றனர்.

அரசு சக்தி வாய்ந்த அரசாக இருக்க வேண்டும். சக்தி இல்லையானால் அண்டை நாட்டார் அச்சமூட்ட அமைதியற்ற வாழ்வுதான் நடக்கும்.

ஆன்மிகத்தின் வழி :

ஆன்மீகம் பண்பாட்டில் மாளிகையின், வாயிற்படி, அன்பின் வழிதான் ஆன்மீகம். ஆன்மீகமும் அரசியலும் இரட்டை குழந்தைகள் போல் செயல்படுகிறது. ஆன்மீகத்தின் பெய ரால் ஆட்சியைப் பிரிக்க எண்ணுகின்றனர். ஆன்மீக வாதிகள் அரசியல்வாதிகளை கை பொம்மைகளாக ஆட்டி படைக்கின்றனர்.

அரசியல் மக்கள் வாழ்வில் உயிர் நாடி

"எவ்வழி நல்லலவர் ஆடவர்,
அவ்வழி நல்லை வாழிய நிலனே"
"மன்னன் எவ்வழி
மன்னுயிரர் அவ்வழி"

''அருமந்த அரசாட்சி அரிதோ மற்றும் எளிதோதான் என்றார் சேக்கிழார். தன்பிள்ளை தவறு செய்தால் அன்று தண்டனை கொடுத்தனர்.

வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டும்:

''எல்லாரும் இன்புற்று இருக்க நினைப் பதே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே'' என்றார் தாயுமானவர்.

ஆன்மிகமும் அரசியலும் மக்களுக்கு பயன்படும்படி நடக்கவேண்டும். தவறு செய்கின்ற ஆன்மீகவாதிகளுக்கு அரசியல் வாதிகளுக்கும் கடும் தண்டனை கொடுக்கின்ற நாள் என்று வருகின்றதோ அன்றே நாடும் நிலமும் உலகும் நாமும் நலம் பெறுவோம். ★

இற்றைத் தமிழ் நிலை!

ச.சி. செல்லம்

தமிழே யுன் நிலைகண்டு என்றன்
தலை சாய்ந்து மனம்வாடு கின்றேன்
'விதியே ஓ விதியே' யென் றேஅன்று சொன்ன
வீரக் கவிவாக்கு வீண்போன தென்னே!

சதியோ யுன் தலைவர்கள் செய்யும்
சாகசச் செயல்களால் தமிழ்வாழ்வ துண்டோ?
கதியிலா மக்கள் துணை கொண்டே
கதைபேசித் திரிவதால் தமிழ்வாழ்வ துண்டோ?

மதியினில் ஆங்கிலம் தனைமெச்சும் மாந்தர்
மத்தியில் உன்நிலை மெச்சவும் படுமோ?
தமிழுக்கு ஒருவழி உண்டு அது
தமிழினில் வல்ல தலைவரால் உண்டு!

பழிமிகு பல்கலைக் கழகத்தை மாற்று
பதவிக்கு அலையும் கிழவரைத் தூற்று
ஆங்கில மோகத்தைத் தள்ளு தமிழ்
ஆணவப் புலமையை அதனுடன் தள்ளு!

பாங்குடன் பலமொழி கற்றுப்பின்
பக்குவம் பெற்றநல் இளைஞரைக் கொள்ளு!
சென்றிடும் எட்டுத் திக்கினிலும்
செந்தமிழ் போற்றும் செல்வரைத் தேடு!

வென்றிடும் புலமைக ளெல்லாம் நாம்
மீட்டும் தமிழினில் மேம்படச் சொல்லு!
ஒளிமிகும் இளைஞரைத் தலைவராய்க் கொள்ளு
உன்நிலை ஓங்கும் இதுசத்யம் எண்ணு!

சங்கம் தொகுத்த தமிழிசை மரபு

கவிப்பேரரசு புரட்சிதாசன்

''கொடுத்தே சிவந்த கொடைவேளிர் முன்னே
அடுத்தே இசைவிருந் தாற்றித் - தொடுத்தயாழ்
சீறியாழ் பேரியாழ் தேனிசை அவ்வழி
வாரிபோல் ஐந்திணை வைப்பு''

- புரட்சிதாசன்

செழிப்பு மிக்க நாட்டு வளமுடைய தமிழ்ச் சங்க கால மன்னர்களும், வள்ளல்களும் தமிழ் வளர்த்த சிறப்பு மிக மிக மகிழமுவு தரத்தக்கது. தமிழழ் மொழியை, இலக்கணத்தை, செய்யுளை புலவன் வளர்த்தான் இசையை அதன் இலக் கணத்தை, அதன் உறுப்புகளான பதப்பாடல் களை பாணர் பாடினி வளர்த்தனர். ஆடல், பாடல் நளி நயங்களைக் கூத்தர்கள் வளர்த்தனர். இந்த மூவரையும், முடியுடை மூவேந்தரும், வேளிர்க் கோமான்களும் வளர்த்தனர்.

ஆடன் மாந்தரும், பாடற்பாணரும், கருவிப் பொருநரும், விரலியும் என்னும் நாற்பதாலரும், இசையால் தாம் பெற்ற பெரும் செல்வத்தை, எதிர் வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி, அவரும், அந்த மன்னர்களையும், வள்ளல்களையும், பார்த்துத் தாம் பெற்றவை யெல்லாம், அவர்களும் பெறுமாறு கூறிப் பாடுதலைத் தொல்காப்பியர்: ''புறத்திணைப் பாடாண் திணையுள் தாவினல்லிசை'' என்ற தலைப்பில் தமது நூற்பாவில்

''கூத்தரும், பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க்கு' அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கம்''

- சொல் - புறத் - 36

என்றார். இதனையே பிற்பட்ட பன்னிரு பாட்டியலும்

''புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில் தெறும் இருங்கானகத்திடை
வறுமையுடன் வரூஉம் புலவர்பாணர்
பொருநர் விறலியர் கூத்தர் கண்டப்
புரவலன் நாடுஊர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கஎன விடுப்பதாற்றுப் படை''

என்றது. புலவராற்றுப் படைகளில், அந்த அந்தப் புலவர்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட மன்னர்களையும் வள்ளல்களையும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், - நிலச் சிறப்பினையும், மலை அருவி, ஆறு, குளம், காடுகள், இயற்கை, மரங்கள், பூஞ்செடிகள், மணம், பறவைகள், விலங்கினம்; அந்த அந்தச் சூழலில் மக்கள் எப்படி வாழ்ந்தனர்? மனைகள் எப்படி இருந்தன(?) அணிகலன் என்ன (?) உடைகள் எப்படி அணிந்திருந்தார்கள், தொழில்கள் என்ன (?) அவர்கள் பயன்படுத்திய கருவிகள், பொருள் கள், பழக்க வழக்கம், களவு, காதல் குடும்பம், குழந்தை வளர்ப்பு, கல்வி, நாகரிகம், பற்று, பாசம், கொடை அனைத்தும் அத்தகைய சிறப்பில் வளங்கொழித்தது என்பதை மிக மிக அருமையாகச் சொல்லிச் செல்கின்றனர்.

புலவர்கள் : தமிழிசை பாடும் பாணர், பாடினிகளை வைத்தே, அவரவர், அவரவரை அனுப்பி மன்னர்களையும் வள்ளல்களையும் பார்த்த வரச் செய்வதில் தமிழ் மண்ணின் ஈரத்தை உணர்த்துகின்றனர். அந்த வரலாற்றில்,

பாணர்கள் இசையமுதூட்டிப் பரிசு பெறச் செல்கிறார்கள். ஆனால் ஒரு பாணன் தன் குடும் பத்தை மலைவழி, அருவி வழி, ஆற்றுவழி, காட்டு வழி, நாட்டுவழி, என அவர்கள் அந்த நாடாளும் மன்னரிடம் போய்ச் சேருவதற்கு முன் எத்தகைய அவன் சூழல், குடும்பம், எத்தனை நாள், எங்கெங்கோ, எதை எதை, யார் யாரை எப்படி எல்லாம் முகம் மலர்ந்த அன்புடன் ஒருவருக்கொருவர் உதவி செய்தும், விருந்துண்ண வைத்தும், இசை மீட்டச் சொல்லிக் கேட்டும், பக்க வலிமையாகத் துணை நின்று. அனுப்பி வைத்த பல தரப்பட்ட சூழலில் வாழும் மக்களினத்தைக் காட்டுகின்ற னர். அந்தச் சிறப்பும் கடைசியில் மன்னன் பரிசில் ஈந்து, மகிழ்வித்த கொடைச் சிறப்பும், இன்றும், என்றென்றும் அந்தச் சான்றுகள் பசுமையாகவே இருக்கின்றன.

இயற்கை, தமிழக அறிவு வளத்தையும், வழுவாத நீதி, இசைமை, குடியுயர்வு, கொடைமை இவைகளைப் பாடிய இரண்டா யிரம் வருடப் புலவர்கள், பாணர் வழியில்

அதற்குப் பிற்பட்டவர், திருமூலர், கம்பர், கூத்தர், புகழேந்தி, சேக்கிழார், சமயக் குரவர் கள், ஆழ்வார்கள், ஆகியவர்களனைவருமே, தமிழ்க் கானம்பாடிகள் தான், ஆனால் பிறகு வைணவக் கனபாடிக் கூத்தர்கள் ஆகிவிட்டார் கள். இவர்களை விட்டு விடுவோம்.

பொருநராற்றுப்படை

''கரிகாற் பெருவளத்தான் காவிரி நாடன்
பொருநர் தமிழிசையைப் போற்றிப் - பரிசில்
கொடை யளித்த வள்ளற் கொடுப்பினைப் பாடும்
முடத்தாமக் கண்ணி மொழி''

- புரட்சிதாசன்

எனவாகப் புலவர், இசைமேதை முடத்தாமக் கண்ணியார் சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தானைப் பாடுகிறார். இசை விழாக் கொண்டாடி, தம் சுற்றத்தோடு மகிழ்ந்து, பிறிதோர் விழாக் காணச் செல்லும், பாணர் தலைவருக்குப் பொருநன் என்று பெயர். அவனும், அவன் மனைவியும் வைத்திருந்த யாழ் சீறியாழ், அது அனைத்து இசை உறுப்புக் களும் அடங்கியது. கரிகாற் பெருவளத்தானைப் பாடும் பட்டினப் பாலையுள்ளும், பெரும் பாணாற்றுப் படைபாடிய உருத்திரங் கண்ண னார்:-

''வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழல் அகவயாழ் முரல முழவதிர முரசியம்ப
விழவறா வியலா வணத்துமையறு சிறப்பின்''

- பட்டினப்பாலை - 155

என்றார்.

புல்லாங்குழல் ஊதி, யாழ் மீட்டி, முழவு கொட்டி, முரசினை ஒலித்து, வெறியாடு மகளிர் அங்காடித் தெருவில், அவ்வப்போது இசை விழா நடத்துவர். வெறியாடு மகளிர் என்றால் தலைக்கோல் மடந்தையர் உள்ளிட்ட ஆடல் பெண்கள் எனவாம்.

சிறுபாணாற்றுப்படை

''நட்டைக் குறிஞ்சியில் நல்லியக் கோடனின்
பாட்டில் அவன் வளத்தைப் பாடுகின்றார் - கேட்போமா
நத்தத்தின் யாழின் நரம்பில் தமிழ்மணக்கும்
தித்திக்கும் அன்னார் திறம்''

- புரட்சிதாசன்

எனவாக, பாணர் சீறியாழை மீட்டி, நட்டப்பாடைப் பண்களைப்பாடுகின்றனர். வஞ்சிமுதூர் குறிஞ்சி நிலச்சேரன், வள்ளல் ஓய்மான் நாட்டு நல்லியக் கோடன்; இசை ஞானி - நத்தத்தனாரின் இசை மயக்கத்தில் பாடி மகிழ்ந்த பாணர்களுக்குக் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கையுடைய வனாகின்றான். எவ்வாறு?

சோழ மருத நிலத்தே மலை போல வளர்ந்த கடப்ப மரங்கள் நெருக்கமாக பூத்து நிற்கின்றன. அப்பூக்களோ தம்பலம் என்ற பூச்சியைப் போன்ற தாது உதிர்த்து, படர்ந்து கிடப்பதால் நீர்த்துறைக்கரை ஓவியம் போல காட்சியளிக்கிறது. அந்த நீர்க்குளத்தில் மலர்ந்திருக்கும் தாமரைகளில் தன் பேடையைத் தழுவும் ''தும்பிகள்'' சிகாமரம் என்ற பண்ணை ஒலிக்கிறது என்று கூறுகிறார் நத்தத்தனார்.

''ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கெயில் எறிந்ததொடி விளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர் செம்பியன்''

- சிறுபாணாற்றுப்படை - 80

என்றார்.

தூங்கெயில் எறிந்த வீர வளைக் கையுடையவன் வள்ளல் சோழச் செம்பியன்.

''கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கிள் ஆவியா பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன்''
- சி - அ - 85

என்றார் மஞ்ஞை - மயில், கலிங்கம் - ஆடை.

பருவத்ததில் பொய்யாது மை பெய்த லால், செல்வம் மிகுந்த மலை வாழ் மயில் கூவியதைக் கேட்டு, அது குளிர் மிகுதியில் கூவுகிறதென்று தனது போர்வையை அதற்குப் போர்த்தி மகிழ்ந்தவன் பேகன்.

''சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரி''

- சி.ஆ - 89

சிறு புன்னையின் நறிய பூந்தேன் துளிர்க்கின்ற வழியிடத்தே, பிடி கொம்பும், தொடர் கொம்பும் இன்றித்தவித்த சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடிக்கு, அது படருவதற்குத் தனது தேரையே கொடுத்தவன் பறம்பு மலைப் பாரி.

''வால் உளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி இரவலர்க் கீத்த
அழல் திகந்திமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
சுழல் கொடித் திடக்கைக் காரி''

- சி.ஆ.92.

பொன்னையும், மணியையும், புரவியையும், ஏன் நாட்டையுமே கொடையாக வழங்குபவன் காரி.

''நீலநாகம் நல்கிய கலிங்கம்
ஆலிமர் செய்வற் கமர்ந்ததனன் கொடுத்த
சாவுந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்''

- சில. ஆ.98.

வாழ்நாள் முழுவதுமே நஞ்சினைக் கக்காது இறந்த, அது கக்கி வைத்த நாகமணியை ஆலவாய்ப்பனுக்குக் கொடையாக வழங்கியவன் ஆய். கலிங்கம் - நாகரத்தினம்.

''அமிழ்து விளை தீகனி ஔவைக் கீந்த
உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ்நெடுவேல்
அரவக் கடல்தானை அதிகன்''

- சி.ஆ.101

தமிழ்ப் புலமை, என்றும் இளமையாகவே இருக்க வேண்டுமெனத் தமது கமுக மலை நெல்லிக்கனியை ஔவையாருக்கு வழங்கியவன் அதிகன்.

''முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளி''

- சி.ஆ. 101

தம்மை நாடி வந்தவர்க்கெல்லாம், அவர்கள் வாழ்வு சிறக்க. முட்டமுட்ட அள்ளி அள்ளி, கொட்டிக் கொட்டிக் கொடுத்த வள்ளல் நள்ளி.

இவ்வாறு செம்பியன், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, மேற்கண்ட ஏழு வள்ளல்களைச் சொல்லிய நத்தத்தனார் பாணனிடம் கூறுகிறார். ''பாணர்த் தலைவா! நான் சொன்ன ஏழு வள்ளல்களை விட மிகப் பெரியவன் நல்லியக் கோடன். இசைத் தமிழை உணர்ந்து வாரி வழங்கிய வள்ளல். புலி போன்ற வலிமையுடைய அவன் பகைவர்களைக் களத்தில் வெட்டிச் சாய்த்த வாளுடன் இருப்பான். பயப் படாதே! அவன் ஓவியர் குடியில் பிறந்த கலைஞன்''

''துறையாடும் மகளிர்க்கு தொடைப்புணை யாகிய
பொருபுனல் தருஉம்''
''பாலியல் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடன்

- சி.ஆ.125

நறுமணங் கமழும் சுரப்புன்னை, அகில், சசந்தனம் ஆகிய மரங்களை வெட்டி வீழ்த்தி நீராடு துறையில் புனலாடும் பெண்களுக்கு மிதக்கும் தெப்பக்கட்டைகளாக வழங்கியவன். இசைக் கூத்தர்களுக்குப் பெரிய புரவலன் நல்லியக்கோடன். அவனுடைய ஐந்திணை மக்கள் அனைவருமே ஈகைச் சிறப்பு மிக்கவர்கள். அங்கு செல்வாயாக... என்று வழி அனுப்புகிறார்.

பெரும்பாணாற்றுப்படை

''சோழன் இளந்திரையன் தொண்டைமான் தான் விரும்பும்
யாழோன் இசைகேட்டு யாத்த கொடைப்பேழை
உருத்திரங்கண்ண ஓதுபர் மாலை
பெரும்பாணன்ஆற்றுப் படை''

- புரட்சிதாசன்

தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படையில், இசைக் கருவிகளின் உறுப்புகளை விரிவாகச் சொல்கிறார். ஆயர்பாடி முல்லை நிலத்து இடையர்கள் நெருப்புக் கொள்ளியால் இட்ட துளைகளையுடைய சூழல்களில் பாலைப் பண்ணை இனிமையாகப் பாடுவார்கள். குமிழின் கொம்பை வளைத்துக் கட்டிய அரலையின் தும்பாகிய நரம்பைக் கையினால் தெறிந்து, வண்டினங்கள் தம்மினத்தின் ஓசை என்று, அவைகள் கேட்கும் வண்ணம் குறிஞ்சிப் பண்பாடுவார்கள் - என்றார்.

நெய்தற் தளத்தில் உப்பேற்றிச் செல்லும் உமணர் வண்டிகளில்; அதன் காடிப்பானைகள் எவ்வாறு இருந்தன வென்பதற்கு,

''நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த
வீசி வீங்கின்னியங்கடுப்பக் கயிறு பிணித்துக்
காடி வைத்த கலன்''

- பெரும்பாண் 55

என்று, நாடக மகளிர் ஆடுகளத்தில் கொட்டப்படும் மத்தளத்தை ஒப்ப, வரிந்து கட்டப்பட்ட பெரிய காடிப் பானைகள் இருந்தன என்று உவமை கூறினார்.

குறிஞ்சிப் பாட்டிலும் நக்கீரர்; முல்லை ஆயர் பாடியில் அம்பல் என்னும் பண்ணினை யுடைய அழகிய இனிய குழலிடத்துத் தெளிந்த ஓசையைப் பலகாலும் பரப்பினர்'' என்றார்.

நெடுநல்வாடை

> ''குளிரில் நரம்பிற்குக் கொங்கைகளைத் தேய்த்த
> தளிர்த்தினவு வெப்பத்தால் தண்டில் - மிளிரும்
> தமிழிசை இராப்பண்ணில் தன்னை மறந்தாள்
> கமழ் பூங்கோதை கனிந்து''
>
> **- புரட்சிதாசன்**

போரில் புகழ் பெற்ற - தலை சிறந்த பாண்டியன் என்று கூறப்படும், மதுரைக் காஞ்சி, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடியது நெடுநல்வாடை.

நெடிதாய நல்வாடை விரிதலில் பண்புப் பெயர் உணர்த்தி, கூதிர், வேனிற், பாசறை யாயிற்று. பகைமையை வெல்லச் சென்ற பாண்டியனைத் தழுவ முடியாது துயருற்ற கோப்பெருந் தேவியை நச்சினார்க்கினியார் தமது உரையில்,

''தலைவனைப் பிரிந்திருந்து, வருந்தும் தலைவிக்கு, ஒரு பொழுதோ ஒரூழிபோல, நெடிதாய வாடையாய் இருந்தது''

என்றார். அந்தப்புரத்தில் தலைவி வருந்தும் மண்டப மஞ்சத்தை நக்கீரர், நவரத்தினங்களைக் கொட்டி அழகுபடுத்தி வைக்கப் பட்டிருப்பது போல. ஆங்கதன் பொருள்களை உருவகப்படுத்துகிறார்.

''தூண்கள் நீலமணியால் அமைக்கப்பட் டவைப் போன்று கருமையும் திரட்சியும் பெற்றிருந்தன. உயர்ந்த சுவர்கள் செம்பினாற் செய்தாற் போன்ற பல வேலைப்பாடுகளுடை யவாக இருந்தன. சுவரின் பல இடங்களில் பல பூக்களையுடைய கொடிகள் விளங்கும்படி, செஞ்சாந்தினால் எழுதப்பட்டிருந்தன. அவை பல நிறமுடையவனாகத் தோன்றின. அந்தப் புரத்தே யவனர் செய்தபாவை விளங்கின் நெய் நிறைந்த களியில் பெரிய திரிகள் கொளுத்தி எரிய விடப்பட்டிருந்தன. கூதிர் வேனில். அதனால் தலைவன் வரவு காணத் தலைவியின் தினவு ஆற்றாமைக்காக, அந்தப்புரமுழும் அமைதியாக வருந்திற்று'' என்றார்.

ஆனால், கோப்பெருந்தேவி கண் உறங் காது நிழலாக அலைகிறார். இதோ:

> ''பொன் பாவைத் தீபங்கள் மின்னி எரிந்தன
> பூத்துக் குலுங்கிய கொடிகளும் தளர்ந்தன,
> செஞ்சாந்து பூசிய செழித்தத கரங்களின்
> சித்திர விரல் சூழும் தந்துகி யாழ்களும்
> பாடமறுத்தன போதை இழந்தன
> பச்சைப் பசுந்தளிர் மேவிய தென்றலும்
> ஊடல் உறவோடு சாளரத் துள்தாவ
> ஆடை விலகிய முத்துப் பதித்திட்ட
>
> கச்சு இறுகிய நெஞ்சு முயங்கிடக்
> காலெங்கோ கையெங்கோ சேர்ந்து படிமீது
> அச்சுக்கள் வார்த்ததாய் ஒன்றிப் பதித்திட்ட
> அரபுக் கம்பள மீதில் கிடக்கின்ற
> அழகுத் தோழியர் தூங்கி ஓடிந்தனர்
> அன்னத் துவிமஞ்ச மாட்சி இழந்தது
> நிறைவு கண்டிடும் சந்தனப் புகையும்
> நின்று வெவளிச்சாரல் கண்டங்கு செல்கின்ற
>
> அமைதி தன்னையே கூர்ந்து உணர்த்திட்ட
> அஞ்சு நிறமுள்ள கன்னிமாடக் கிளி
> தமது கூண்டிலே தலையைச் சாய்த்திட
> தங்கநிறம் வேய்ந்த சதுரங்கத் தூண்களும்
> வண்ணக்கதை சொல்லும் ஓவிய மதில்களும்
> சவார்ப்புக் குலையாத காட்சிப் பொருள்களும்
> பொன்னும் மணிகளும் கண்ணைப் பறித்திடும்
> பூச்சரம் சூடிய மாணிக்க மரகத
>
> சிற்பங்கள் இழைத்திட்ட சிங்காரக் கட்டிலில்
> சேல்கொடி பொறித்திட்ட முத்திரைக் கால்களும்
> பற்பல அருமைகள் கலைகெட்டு நிற்பதாய்
> பார்வைக்குத் தெரிந்தன வெண்மதி ஒளிபடர்
> படிகளும் உறங்கின பனித்திரை ஊடின
> மலர்முகம் தேம்பிட மதுஉடல் பசலையாய்
> வெளிரிடக் காதலின் துயரினால் ஏங்கிய
> துடியிடைத் தலைவியின் நிழல் அங்கே வந்தது
>
> **- புரட்சிதாசன்**

கூதிர் வேனிலில் நிழலாகி, உருவாகி, தலைவி வருகிறாள் தோழியர் பரபரப்புடன் எழுந்தனர். யாழ் வைத்து இசை மீட்டி ஆடும் பெண்கள் அப்போது யாழை மீட்ட முயன்றனர். போதை இழந்த யாழ்களை.

> ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர் மாற்
> தன்மையிற் றிரிந்த இன்குரல் தீந்தொடை

கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப

நெடுநல்வாடை - 67

என்றார் நக்கீரர்:

ஆடும் மகளிர், தாம் பாடுகின்ற பாடல்களைக் கரிய தண்டினையுடைய சீறியாழில் வாசித்தற்கு அதன் நரம்புகளை தத்தமது முலைகளின் மேல் தழுவித் தடவி வெப்பம் ஊட்டி யாழை, பண் நிற்கும் முறையில் நிறுத்திப் பாடினார்கள். என்றார். பெண்களின் முலைகள் வெய்யில் காலத்தில் குளிர்ந்தும், குளிர்காலத்தில் வெப்பமுடைய தாகவும் இருக்கும். தங்கள் உணர்வுகளைச் சூடேற்றிக் கொள்ளத் தலைவியின் பக்கமிருக்கும் ஆடற் பாடற் மகளிர்.

''செம்பொன் வள்ளத்துச் சிலதியர் ஏந்திய
அம்தீம் தேறல் மாந்தினர்''

- சிலம்பு - ஊர்காண் - 132

பொற்கிண்ணங்களில் பணிப் பெண்கள் ஊற்றித் தந்த (தேறல்) பழரசத்தைப் பருகினும், யாழ் நரம்புகளுக்குத் தாங்கள், தங்கள் முலைகளில் தேய்த்தே சூடேற்றிப் பண்ணிசைத்தனர் என்பதாம், கூதிர் முலையின் வெப்பம் பற்றியதாக:

மைம்மலர் உண்கண் மடந்தையரடங்கா
கொம்மை வரிமுலை வெம்மை வேதுரீஇ

- சிலம்பு - நடுகற் 15 16

''தங்குகண் வேல் செய்த புண்களைத் தடமுலை
வேது கொண்டொற்றியும்''

- கலிங்கத்துப்பரணி - 35

''புழுங்குறு புணர்முலை கொதிப்பப் புக்குலாய்க்
கொழுங்குறைத் தசை என ஈர்ந்து கொண்டது
விழுங்குறு பேய்என வாடை வீங்கிற்றே''

- கம்பன் கார்காலம் - 13

என்றார்.

இவ்வாறாகக் கூதிர்ப் பனியிலும், யாழ் விறலியர் இசைத் தமிழ் பண்ணிற்கு - அதை மீட்டுதற்குக் கொடுத்த பெரும்பான்மைச் செய்திகள் அறியக் கிடைக்கின்றன.

மலைபடுகடாம்

''இன்னிசைச் செந்தமிழ் யாழ்நரம்பில் மெய்மறந்த
நன்னன் சேய் நன்னன் நனிபுகழைப் - பண்ணில்
பெருங்குன்றூர் கௌசிகனார் பேசினார் பேசி
விருந்தெனக் கொண்டார் விழா''

- புரட்சிதாசன்

நன்னன் சேய் நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைபடுகடாம்.

நன்னன் சேய் நன்னனிடம் இசைத் தமிழர் பாடிப் பரிசு பெறச் சென்ற, வழிப்பாணர் குடும்பத்தை கௌசிகனாரே நேரில் கண்டது போலப் பாடுகிறார்.

''விண்ணதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொரு ஆகுளி
நுண்ணுருக்குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி அணித்தலைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயிர் இமிரும் குறும்பரந் தூம்பொரு
விளிப்பது கவரும் தீங்குழல் துதை
நடுவு நின்றிசைக்கும் அரிக்குரல் தட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வாய் எல்லரி
நொடி தருபாணிய பதலை பிறவும்''
மலைபடுகடாம்''

என்றவாறு, ஆகுளி என்ற மத்தளப்பறை விண்ணதிர முழங்கும் ஓசையுடையது. அது வலித்து இறுக்கிய வார்க்கட்டுகளுடையது. வெண்கலத்தை உருக்கித் தகடாகத் தட்டிச் செய்யப்பட்டது கஞ்சதாளம், (கஞ்சிரம்) கணுக்களிற்றுளைகளுடையது, கொம்பு மயிலிறகுந் தழையுங் கட்டப்பட்டதால் ஆனவை. யானையின் துதிக்கை போன்ற பெரும் கொம்பான நெடுவங்கியம், அதற்குரிய தூம்புகள் பஞ்சமம் என்ற இளி என்னும் நரம்பின் ஓசையைத் தோற்றுவிக்கும் தன்மையுடையது. இனிய குழற்பாட்டின் சுருதி குன்றாமல், அனைத்து இசைக் கருவிகளுடனும், அது இணைந்து இருக்கும்.

கரடிகை என்ற நாள முழவு மத்திமமாகிய உழை என்னும் நரம்பொலியைக் கொண்டு இயங்கும், தாளம் 'எல்லரி' என்பதும் 'ஒரு கண்மாக்கிணை' என்பதும் இசை மாத்திரைக் கணக்கினைக் கூட ஒலிக்கும்.

இவற்றுடன் பாணர் கூட்டம் செல்வதை படம் பிடித்துக் காட்டுகிறார். யாழின் பண்களை மாற்றி மாற்றி வாசிக்கு மிடத்து, எவ்வாறு அவை இனிதாக இருக்குமோ, அவ்வாறு

தினைய உரலில் போட்டு உலக்கையால் குத்தும் மகளிரோ அதற்குரிய வள்ளைப் பாட்டு பாடுகின்றனர். (அரிசிகுத்துப் பாட்டு)

பலநிறம் பொருந்திய மாலை யணிந்த மகளிரின் ஆடலுக்கு ஏற்ற முழவின் ஓசை யினால் ஊரிடத்தில் உள்ளவர்கள் தூங்காது விழித்திருக்கின்றனர். இனிய யாழையுடைய விறலியரோகுறிஞ்சி என்னும் பண்ணைப் பாடுகின்றனர்.

இவ்வாறு, பெருங்குன்றூர் கௌசிகனார் நாட்டு வளத்தையும், மக்களின் அன்றாட வாழ்வியலோடு இசை இனிமையைத் தழுவிப் பாடிக் கொண்டே போகிறார்.

நானிலத் தமிழ் ஐந்திணையில், அரசன், புலவன், பாணன், விறலியர், கூத்தர் ஆகியோ ரிடம் இசை, பண், யாழ், முழவு; அவைகள் களிப்பிற்காக எவ்வாறெல்லாம் தழுவப்பட்டு, செறிவாகக் கொள்ளப்பட்டிருப்பதைச் சங்க காலச் செய்யுளான பத்துப்பாட்டுகளில் தெளி வாக அறிந்தோம்.

இசைக் கருவிகளின் உறுப்புகளையும் அதன் தன்மைகளையும் அந்த அந்த நூற்பாப் புலவர்கள் அவற்றில் விளக்கிச் சொல்வதைத் தொடர்ந்து அறிவோம்.

வாயால் பாடும் பாட்டின் குரலையே மிடற்றுக் குரல் என்றார். அந்தக் குரல்பாடற் இசை இனிமையுடனும், (சுரம், சுருதி) பற்றுமை கேள்வியுடனும் ஒழுங்குபட்டுச் செயல்படத்தாளக் கருவிகளும், நரம்புக் கருவிகளும் இணைந்து செயல்பட்டன.

யாழ்க் கருவிகள், தோல் கருவிகள் எவ்வாறு, எப்படி வளர்ச்சி பெற்று, அதன் உறுப்புகள் தோற்றங்கள் அவற்றிற்குப் பயன் படக் கூடிய, கொண்ட அமைப்பை ஆரம்ப முதல், சொல்லி செய்து ஒழுங்குபடுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

தம்பட்டம், தவுல் ஆகியும், யாழ் வீணை ஆகியும் வந்த உறுப்புச் செய்திகள் நமது சங்கத் தமிழ் செய்யுள்களிலே தெளிவாக இயம்பப்படு கின்றன.

அன்றைய, யாழ் வேறு, இன்றைய வீணை வேறு என்று அறியாமல், பேசுபவர்களுக்குச் சான்றுடன் விளக்குவது அவசியம், இன்றியமை யாததும் கூட.

சங்க நூல்களின் காலங்களைக் கணிப் பதில்; அதனதற்குரிய பாட்டுடைத் தலைவர் கள், தமிழ் மொழியின் சிறு சொற் பெருவிளக்கச் சொற்றொடர்ப் பாங்கு, பாடிய புலவர்கள், நாட்டு வளம், மக்கள் வாழ்வியல் பண்பாடு ஆகியவை கொண்டே உறுதிப்படுத்த வேண்டிய திருக்கிறது.

பத்துப்பாட்டு என்ற தொகுப்பில் அடங் கிய, 1. திருமுருகாற்றுப்படை, 2. பொருநராற் றுப்படை, 3. சிறுபாணாற்றுப் படை, 4. பெரும்பாணாற்றுப்படை, 5. முல்லைப் பாட்டு, 6. மதுரைக் காஞ்சி, 7. நெடுநல்வாடை, 8. குறிஞ்சிப் பாட்டு, 9. பட்டினப்பாலை, 10. மலைபடுகடாம் ஆகியவை, ஏட்டுச் சுருளாக எழுதியும், பிறகு உரைப்பித்துத் தொகுக்கப் பட்ட காலம் கி.பி. மூன்றிலிருந்து ஐந்துக்குள் முன்னும் பின்னுமாக இருக்கலாமே தவிர, அந்தத் தமிழ்ச் சொற்களின் அழுத்தம், மன்னர் கள் ஆன; நல்லிய கோடன், தொண்டைமான் இளந்திரையன், தலையலங்கானத்து நெடுஞ் செழியன், நன்னன் சேய் நன்னன் ஆகியவர்கள் இன்றைக்கு இரண்டாயிரம் வருடத்திற்கு முற்பட்டவர்கள். எட்டாம் நூற்றாண்டு நக்கீர ரால் செய்யப்பட்ட சின்னஞ்சிறு ''இறையனார் களவியல் உரை'' செவிவழிச் செய்தியாக பல தலை முறைகளில் கேள்வி வழக்காகவும் இருந்து யாரோ ஒருவரால் அதாவது உறையூர் நீலகண்டன் என்ற இடைப்பட்ட வேதி ஒருவ ரால் எழுதி வைக்கப்பட்டதாக அறியப்படு கிறது.

ஒன்பதாம் நூற்றாண்டுப் பெருந்தேவனார் சங்க இலக்கியங்களுக்குக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பாடியதற்காக, அந்த நூல்கள் எல்லாம் அவர் காலமென்று கொள்ள முடியாது. ஆனா லும் புராண அகத்தியரில், பலர் சொல்லப் படுவது போல, வரலாற்றுப் புலவர்களிலும், பரணர் இருவர், பெருங்குன்றூர்க் கிழார் இருவர், கணக்காயர் இருவர், இளநாகனார் இருவர் எனப் பல குழப்பங்கள், திணிப்புகள்

இருக்கின்றன. சங்க நூல்கள் கி.மு. 500 முதல் கி.பி. 300 முடிய. அதில் பத்துப்பாட்டு நூல்களின் காலம் கி.பி. 110 முதல் கி.பி. 190 என இடைப்பட்ட எண்பது வருடம் என, கனக சபைப் பிள்ளை குறிப்பிடுகிறார். கா.சு. பிள்ளையோ கி.மு. 30-இல் துவங்கி கி.பி. 220 என்பவற்றோடு நிற்கிறார்.

கரிகாற் பெருவளத்தானைப் பொருநராற்றுப் படையும், பட்டினப் பாலையும் பாடுகின்றன. அதே சமயம் சிலப்பதிகாரத்திலும்; சேரன் செங்குட்டுவனின் தாய் சோணை, கரிகால் பெருவளத்தானின் மகள் என்றும், ஆதி மந்தியும் கரிகாலன் மகளே என்றும் குறிப்பிடுகிறது. ஆகவே அவைகள் சற்று முன்னதாகவும் பின்னதாகவும் கணிக்கப்பட்டிருக்கின்றன.

பத்துப்பாட்டு நூல்களில் ஆரியத் துதிக் கலப்படங்கள் இருக்கின்றன. ஆனாலும், யாழைப் பற்றிய உறுப்புச் செய்திகள் தெளிவாகவே அறியக் கிடைக்கின்றன.

அந்தந்த நூல்சளைத் தலைப்பிட்டு, அதில் வரும் யாழைப்பற்றிய பா வரிசை எண்களையும், கீழ்கண்டவாறு வரிசையாய் அறிவோம்.

1. சிறுபாணாற்றுப்படை

பாடியவர் : நல்லூர் நத்தத்தனர்

பாட்டுடைத் தலைவன் : வள்ளல் ஓய்மான் நாட்டு நல்லியக்கோடன்

தற்பொழுதையத் திண்டிவனம் சார்ந்த இடமாக அவற்றில் வேலூர், ஆமூர், இடம் பெற்றிருக்கிறது. இசைக் கருவிகள் அதன் உறுப்புகள் எனவாக:

''பொன் வார்ந் தன்னபுரி யடங்கு நரம்பின்
இன்குரற் சீறியாழ் இடவயின் தமீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை''

- சிறுபாண் 34, 35, 36

''பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்.
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறு சேர் பொழுகி வகையமை அகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ் வினைப் பொலிந்த பச்சை''

- சிறுபாண் 221 - 226

''காமறுதும்பி (சீ) காமரம் செப்பும்''

- சிறுபாண் - 77

''அமிழ்து பொதிந்திலிற்றும் அடங்கு புரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பபயன்தெரி கேள்விக்
கூடுகொள் இன்னியம் குரல்குரல் ஆக''

சிறுபாண் - 227 - 229

என்றார்.

2. பொருநராற்றுப்படை

பாடியவர் : முடத்தாமக்கண்ணியார்.

பாட்டுடைத் தலைவன் : கரிகாற் பெருவளத்தான்

இதனின் பாக்கள் ஆசிரிய அடிகளால் தொடங்கி, வஞ்சிபடி விரவி வந்தவை. இதை இயற்றிய முடத்தாமக் கண்ணியார் இசைப் புலமையுடையவர். இசை உறுப்புகளுக்கு அவர் எடுத்தாண்ட உவமை அணிகள் சிறப்பானவை. எளிதாக அறியத் தக்கவை.

''குளப்புவழி யன்ன சுவடுபடு பத்தல்
விளக்கழல் உருவின் விசியுறு பச்சை
எய்யா விளுஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லாம் பொத்திய பொதியுறு போர்வை
அளைவாழ் அலவன் கன்கண்டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை ஆணி
எண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
அண்ணா வில்லா அமைவரு வறுவாய்
பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்கும்
கண்கூடிருக்கைத் திணபிணித் திவவின்
ஆய்தினை யரிசியவைய லன்ன
வேய்வை போகிய விரலுணர் நரம்பிற
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்

-பொரு - ஆற் - படை - 4 - 18

என்றார்.

3. பெரும்பாணாற்றுப் படை

பாடியவர் : கடியலூர் உருத்திரங் கண்ணனார்

பாட்டுடைத் தலைவன் : தொண்டைமான் இளந்திரையன்

வழிவழியாக ஆறுதல் கூறி வழிப்படுத்தல் ஆற்றுப்படை

''பெற்ற பெருவளம் பெறாக்கு அறவுநீஇச்
சென்றுபயன் எதிர்ச் சொன்ன பக்கம்''

ஆற்றுப் படையாகுமென்றார். பெரும் பண், பெரியபண். பெரிய பாண் என்றாலும் பெரும் பண். இதையாழோடு பாடியவர் பெரும்பாணர். பண்ணை ஆற்றுப்படுத்துதலால், பெரும்பாண், ஆற்றுப்படையாயிற்று. இது தொண்டை மான் இளந்திரையனைப் பாடியது.

''காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பரா அரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததன்
உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந்தன்ன கண்கூடு செறி துளை
உருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந்தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்து வீங்கு திவவின்
மணிவார்த்தன்ன மாயிரு மருப்பின்
பொன்வார்த்தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி''

- பெரும்பா - ஆ.படை 3 - 16

''என்றம ருடுக்கைக் கூழாரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
அந்துண விர்புகை கமழக்கைமுயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிரல் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி.

- பெரு. பா.ஆ. படை. 175-182

என்றார்.

4. மலைபடு கடாம்

பாடியவர் : இரணிய முட்டத்து பெருங்கௌசிகனார்

பாட்டுடைத் தலைவன் : நன்னன் சேய் நன்னன்

''விண்ணதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி''

மலைபடு 2-3

''தொடித் திரிவன்ன தொண்டுபடு திவவின்
கடிப்பகை யனைத்தும்கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்தசுகிர்புரி நரம்பின்''

மலைபடு - 21, 22, 23

சிலம்பை பத்தல பசையொடு சேர்த்தி
இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கையாப் பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை

மலைபடு - 26, 27, 28, 29

மேற்கண்டவற்றுடன் மாங்குடி மருதனாரின் :

''திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி''

மதுரைக்காஞ்சி - 605

என்பதிலும்

இசை மீட்டலை அணுகும் முறையும், உவமையில் அது எத்தனையுடையது எனக் கூறும் அருமையிலும், யாழ் உறுப்புகளின் தலைப்புகளும், சிறப்பாகக் குறிப்பாகக் கூறப் பட்டிருக்கின்றன. ஆற்றுப் படைகளடங்கிய பத்துப் பாட்டுக்கும் நச்சினார்க்கினியரே உரை எழுதி இருக்கிறார். அவருக்கு முன் மற்றவர்கள் எழுதிய உரை நமக்குக் கிடைக்காத குறையால், நச்சினார்க்கினியரின் உரைப் பொருள்களையே திரும்ப வழி மொழிந்தது போன்று பிற்பட்ட உரையாசிரியர்கள் அனைவரும் மேற்கொண்டனர்.

சங்கத்தமிழ்ச் செய்யுள்களில் பெரும் பான்மை பெற்ற தமிழிசைக் கருவிகளின் தோற்றம்; வளர்ச்சி வடிவம் - அவை உலகளாவிய அளவில் பரவியமை பற்றியும் அறிஞர் ராகவனாரும் பாணர் கைவழி அறிஞர் வரகுணபாண்டியனாரும் நல்ல பல சான்றுகளை எடுத்துத் தொகுத்து விளக்கியவை மிக மிகப் பாராட்டுதற்குரியதாகும். ★

தமிழில் மொழிக் கலப்பு

முனைவர் சரளா இராசகோபாலன்

மக்களின் வாழ்விலே பிறந்து, மக்களால் வளர்க்கப்பட்டு, மக்களின் வாழ்வை நாகரிகம் உடையதாக உயர்த்தி வரும் மொழி ஓர் அரிய கலையாகும். ஒரு மொழியின் சொற்பொருள் வளமும், வளமின்மையும் பேசுவோரின் மன வளத்தையும் வளமின்மையையும் ஒட்டி அமைவதாகக் கூறுவர். ''உலகத்து மொழிகள் ஒவ்வொன்றும் பல்லாண்டுகளாகப் பல தலை முறையினரால் வளர்க்கப்பட்டு அவர்களின் பேருழைப்பினை உறுதுணையாகக் கொண்டு இன்று பேரமைப்பாகத் திகழ்கின்றது'' என்று விட்னி (Whitney) என்பார் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் இனத்தாரிடமிருந்து மற்றோர் இனத்தார் பெறுவன இரண்டு வகைப்படும் 1. நிறம், உறுப்புகளின் அமைப்பு முதலியவை. இவை இரத்தக் கலப்பால் அன்றிப் பெற முடியாதவை. 2. சமயம், நாகரிகம் மொழி முதலியன. இவை இரத்தக் கலப்பில்லாமலே ஒருவரைப் பார்த்து மற்றொருவர் கற்றுக் கொள்ளக் கூடியவை. ஒரு மொழியிலுள்ள சொற்களும், இலக்கணக் கூறுகளும் மற்றொரு மொழியில் கலந்துள்ளன என்றால் அம்மொழி பேசுவோரிடையே நெருங்கிய கலப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உணரலாம். அரசியல், சமயம், கலை முதலிய காரணங்களுள் ஏதேனும் ஒன்றால் அவ்விரு வகையார் கூடிப் பழகியதால் மொழிகளிடையே கலப்பு ஏற்பட்டது எனக் கருதலாம்.

மொழக் கலப்பிற்கான காரணங்கள்

1. சமயத்தாக்கம் காரணமாக மொழிக்கலப்பு உண்டாகும். வைதீக சமயத்ததால் சமஸ் கிருதமும் சமண பௌத்த மதங்களால் பாலி மொழியும், இஸ்லாமிய சமயத்தால் அரபு, உருது, பாரசீக மொழிகளும், கிறித்துவச் சமயத்தால் ஆங்கிலம், இலத்தீன் ஆகிய மொழிகளும் தமிழில் கலந்தன.
2. கல்வி காரணமாக மொழிக் கலப்பு உரு வாகும். வடமொழியாளர்கள் கல்வியாளர் களாக இருந்த நிலையில் தமிழில் வட மொழிக் கலப்பும் ஆங்கிலேயர்களின் கல்வி முறையால் ஆங்கிலக் கலப்பும் புகுந்தன.
3. தமிழர்கள் புதுமை மோகம் கொண்டவர்கள் தம் நாட்டில் புகுந்த புதிய மொழிகளை வரவேற்பதில் ஏற்றுக் கொள்வதில் இவர் கள் பெருமை கொண்டனரர். காலந்தோறும் தமிழகத்திற்குள் புகுந்த இனங்களின் மொழிகளை ஏற்பதில் மகிழ்ந்தனர்.
4. தாம் உயர்வாக மதிக்கும் இனத்தாரும், தனிப்பட்ட வரும் பேசும் மொழி வழக் கைப் பின்பற்றிப் பேசுதல் உலக வழக்காக உள்ளது.
5. ஆட்சி மாற்றங்கள் ஏற்படும் போது ஆளு வோரின் சொற்களை ஏற்றல் இயல்பாகி யது. பல்லவர், சோழர் ஆட்சிக் காலங்களில் வடமொழியும் விசயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தெலுங்கும் முகம்மதிய மன்னர்களின் ஆதிக்கத்தால் வந்து அரபுச் சொற்களும், பிரெஞ்சு, போர்த்துகீசிய, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலங்களின் ஆர்வம் மொழிகளும் கலந்தன.
6. தம்மிடம் இல்லாத புதிய பொருட்களைப் பயன்படுத்தும் போது அவற்றின் மொழிச் சொற்கள் புகுந்தன. சமயம், சோதிடம், கலை தொடர்பான சொற்கள் வடமொழியி லிருந்தும் அறிவியல் தொடர்பான கலைச் சொற்கள் ஆங்கிலத்திலிருந்தும் ஏற்கப் பட்டன.
7. மொழி பெயர்ப்பாளர்கள் சோம்பலின் காரணமாக, மொழிப் பற்றின்மை காரணமாக தம்மொழிச் சொற்களைத் தேடிக்காணாமல் பிறமொழிச் சொற்களை அப்படியே கலத்தல் இன்று அதிகமான நிலையில் உள்ளது.

மொழிக்கலப்பு மூன்று நிலைகளில் ஏற்படுகின்றன. (1) எழுத்துக் கலப்பு - சிரந்த எழுத்துகளையும் ஆங்கில எழுத்துக்களையும் கையாளுவது வடமொழி - பாஷை, ரோஜா, சரஸ்வதி, ஹேமம். ஆங்கிலம் - கியூவில் நின்றான்.

2. ஒலிக்கலப்பு - சென்னை - Chennai

பாரதி - Bharathy

3. சொற்கலப்பு - பொருள்களின் பெயர்கள் ரேடியோ, டி.வி.

மொழியின் இலக்கணம் கலப்பதில்லை. வினைச் சொற்கள், இடைச்சொற்கள், துணை வினைகள், வேற்றுமை உருபுகள், வினை விகுதிகள், மூவிடப் பெயர்கள் ஆகியவற்றில் கலப்பு நிகழ்தல் இல்லை.

மணிப்பிரவாள நடை:

வாக்கிய அமைப்புகளில் பிறமொழியைக் கலந்து எழுதுதலை மணிப்பிரவாள நடை என்றனர். மணியும் பவழமும் கலந்த மாலையைப் போன்று இரு மொழிகள் கலந்த கலவையை 'மணிப்பிரவாளம்' என்றனர். 'ஸ்ரீ புராணம் என்ற சமண நூல் இந்நடையில் எழுதப்பட்டது. நாலாயிரத்திவ்வியப் பிரபந்த உரைகள் மணிப்பிரவாள நடையில் எழுதப் பட்டன.

''ஸம்ருதிஹாச புராணங்களாலே - இதிஹாச சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தில் சிறையிருந்தாளின் ஏற்றம் சொல்கிறது (வடமொழி - தமிழ் கலப்பு)

''என்னுடைய டாட்டர் எம்.ஏ. படிச்சிக் கிட்டு இருக்குதுன்னு சொன்னேன்லே. அதுக்கு 'மேரேஜ் புரோபோசல் நடந்து கிட்டு இருக்கு மாப்பிள்ளை 'டெல்லி செக்ரடடரியோட்டிலே' இருக்கார். 'தே ஆர் குட் பார்ட்டி' என்னுடைய 'பிரண்ட்ஸ்' எல்லாம் அவருக்கே கொடுக் கணும்னு 'ரெக்கமண்ட்' பண்றாங்க'' தமிழ் ஆங்கிலம் மணிப்பிரவாள நடை.

மொழிக்கலப்பு நிலையில், தமிழ்மொழியிலிருந்து, பிறமொழியிலும், பிறமொழியிலிருந்து தமிழ் மொழியிலும் கலப்பு ஏற்பட்டுள்ளன. தமிழ் மொழியிலிருந்து திராவிட இன மொழியாகிய முண்டா மொழி, வடமொழி, கீழைநாட்டு மொழிகளாகிய பாபிலோனியம், கிரேக்கம், ஆங்கிலம், ஜப்பான் ஆகிய மொழிகளில் கலப்பு ஏற்பட்டுள்ளன. வடமொழி, தெலுங்கு, கன்னடம், உருது, அரபு, போர்ச்சுகீசியம், பிரெஞ்ச், மராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலிருந்து தமிழ் மொழியில் கலப்பு நேர்ந்துள்ளது.

மொழிக் கலப்பை எதிர்த்தல்.

பிரெஞ்சு மொழிச் சொற்கள் ஜெர்மனியில் கலந்த போது அடிக்கடி எதிர்ப்பு இருந்து வந்தது. தமிழில் வடசொற் கலப்பு எதிர்க்கப்பட்டது. மொழி எதிர்ப்புக்கான சில காரணங்கள் கவனத்திற்குரியன

1. கற்றவர்கள் சிலர் பழகாத புதுச் சொற்களைப் புகுத்த முயலும் போது எதிர்ப்பு ஏற்படுகிறது.
2. இன்றியமையாமை இல்லாமல், அழகுக்காக ஆடம்பரத்திற்காக புகுத்தும் போது எதிர்க்கப்படுகிறது
3. ஒரு மொழியில் கலக்காத உரிமையுடைய சொற்களையும் கடன் வாங்கப் பட்டவை என்று இழிவு படுத்தும் போது எதிர்க்கப் படுகிறது.
4. மற்றவர் மொழியைக் கற்க விரும்பாமல், தாம் கற்ற மொழியை மற்றவர் கற்பிக்க விரும்பும் போது எதிர்ப்பு ஏற்படுகிறது.
5. தன்மொழி உயர்ந்தது என்ற பெருமிதத்தால் மற்றவர் தன் மொழியைத் திணிக்கும்போது எதிர்ப்பு நேரிடுகிறது.
6. தன்மொழியையும் பிறமொழியையும் ஒப்பிட்டு அவற்றின் உரிமையான வளர்ச்சியையும் சிறப்பையும் சீர்தூக்கிப் பார்க்காமல் இழிவு படுத்தும் போது எதிர்ப்பு நேர்கிறது.

தமிழ் நாட்டில் மொழிக் கலப்பு காரணமாகப் பலமுறை மொழிப் போராட்டம் நேர்ந்துள்ளது. மொழிக் கலப்பை எதிர்க்கும் முகமாக மறைமலையடிகளால் தனித்தமிழியக்கம் தோற்றுவிக்கப்பட்டது. மொழிப் போரில் பல மறவர்கள் தன் இன்னுயிர் ஈந்தனர்.

இன்று தமிழ் மொழிக்குப் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. ஆங்கில ஊடகக் கல்விக் கூடங்கள் பெருகியதால் தமிழ்மொழி கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற நிலை இல்லை. இதன் விளைவாக இளைய சமுதாயத்தினரால் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் தமிழ் கலந்து திமிங்கலம் போன்ற 'தமிங்கிலம்' பேசுகின்றனர். உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் 'வேலைக்காரர் மொழி' என்று இழித்துரைக்கப்படுகிறது. அம்மா, அப்பா உறவு முறைகள் கூட ஆங்கிலமாக்கப் பட்டுள்ளன. தமிழகத்தில், தமிழ் மொழி பேசுவோர் எண்ணிக்கை குறைத்து விடும் அவலம் தோன்றியுள்ளது.

மொழி அழிந்தால் இனம் அழியும் என்பதை மக்கள் உணர வேண்டும். தமிழர்களுக்க மொழி உணர்வும், மொழிப் பாதுகாப்பு உணர்வும், மொழி வளர்ச்சி உணர்வும் பெருக வேண்டும். அப்போது தான் தமிழும் வாழும்! தமிழனும் வாழ்வான். ★

அயலகப் பேரறிஞர்களின் அருந்தமிழ்த் தொண்டு

இராம. கோவிந்தன் எம்.ஏ.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்'' -

என்று பாட்டுக் கொரு புலவன் பாரதியும்,

''கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனி பசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என் உயிர் என்பேன் கண்டீர்''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும், என்றும் இளமை குன்றாமல் இயங்குவதால் அதன் திறம் வியந்து மனோன்மணியம் சுந்தரனாரும் ஏற்றியும் போற்றியும் பாடிய உயர்தனிச் செம் மொழியாம் தமிழ் மொழியை உயர்த்திடவும், உணர்வுடன் கற்று உலகிடைப் பரப்பிடவும் முயன்ற முன்னின்ற அயலகப் பேரறிஞர்கள் பல்லோராவர். தமிழகத்துக்குச் கிறித்துவத் தொண்டாற்ற வந்து தமிழ் மொழியின் இனிமை யையும், எளிமையையும் கண்டுணர்ந்து தெளி வுறக் கற்று பிற மொழிகளோடு ஒப்பிட்டுக் காட்டிய கால்டுவெல், தமிழ்ச் சொற்கள் நாற்பதினாயிரத்துக்கும் மேல் தொடுத்து தமிழ் அகர முதலியை உருவாக்கிய டேன் இனத்துப் பாதிரியார் பார்த்தலோமசு சீசன்பால்கு, தேம்பாவணி என்னும் ஒப்பற்ற ஏசு காவியத்தை தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கி ஓங்கு புகழ் எய்திய கான்சு என்டைன் சோசப் பெசுகி என்னும் வீரமாமுனிவர், தமிழ் மொழியின் மீது ஆராக் காதல் கொண்டு மரணத்துக்குப்பின் என் கல்லறையின் மீது ''நான் ஒரு தமிழ் மாணவன்'' எனப் பொறித்துவையுங்கள் என்ற போப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கால்டுவெல்

டாக்டர் குண்டர்ட் என்னும் செருமானி யப் புலவர் மலையாளத்தையும், கிட்டல் என்னும் மேலை நாட்டறிஞர் கன்னடத்தையும்



பிரௌன் என்னும் அயலக அறிஞர் தெலுங்கு மொழியையும் கற்றுத் தேர்ந்து அவைகளின் சிறப்புக்களை ஆராய்ந்து வெளியிட்ட காலத்தில் கிறித்துவ மதத் தொண்டினை மேற் கொள்ள தமிழகத்தின் தெற்குப் பகுதிக்கு வந்த கால்டுவெல் பாதிரியார் தமிழ் மொழியின் சிறப்புக் களை நன்குணர்ந்து ஆழ்ந்து கற்கலானார். பண்டைத் தமிழ்ச் சொற்களை தமிழ் இலக்கியங் களிலிருந்து தொகுத்து பழங்கன்னடம் மறற்றும் பழந் தெலுங்குச் சொற்களோடு அவைகளை ஒப்பிட்டு அச் சொற்களின் வேர்கள் (மூலம்) ஒன்றாயிருக்கக் கண்டார். ஆனால் வட மொழியி னின்றும் வேறுபட்டு நின்று தனித்தன்மையுடன் விளங்கிச் சிறப்பது தமிழ் மொழி என்று அதன் மாட்சிமையை உலகு ஒப்ப உரத்த சான்று களுடன் எடுத்துரைத்தார். தென்னக மொழி களை நன்கு கற்று ஆய்ந்த அவர் 'திராவிட ஒப்பியன் மொழி நூல்' என்னும் அரிய நூலை இயற்றி தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கினார். தமிழ் மொழி உள்ளளவும் திராவிட மொழி நூலின் தந்தை என இவரை போற்றிடல் சாலும் தானே! திராவிட ஒப்பியன் மொழிநூலின் அருமை பெருமைகளை அறிந்திட்ட கிளாசுகோ பல்கலைக் கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

தனது தீவிர ஆராய்ச்சியின் பலனாக டாக்டர் கால்டுவெல், ஆங்கிலம் இலத்தீனுக்குக் கடன் பட்டிருப்பது போல தமிழ் சமஸ்கிருதத் திற்குக் கடன்பட்டிருப்பதாகக் கூறுவது ஒரு சிறிதும் பொருந்தா தென்றும், பொருள் விளக் கத்தைக் கைவிடாமல் இலத்தீன் சொற்களை கைவிடுவது ஆங்கிலத்தால் இயலாது என்றும் தமிழ் மொழியோ சமற்கிருதச் சொற்களுக்கு இணையாக எண்ணற்ற தமிழ்ச் சொற்களைப் பெற்றுள்ளது எனவும், ஆய்ந்து கூறியுள்ளார். மேலும் வடமொழிச் சொற்களை தேவை

அறிந்து மேற் கொள்ளாது காலக் கோளாறு விரும்பும் வெளிப்பகட்டு காரணமாகவே மேற் கொள்ளப்பட்டுள்ளது என்று கூறியுள்ளதையும் நினைவில் கொள்ள வேண்டியது திராவிட மொழிகளின் தொன்மையை நிலைநாட்ட பேரளவில் பெருருந்துணை புரிவது செந்தமிழே என்றும் திராவிட மொழிகள் அனைத்தும் பழங்காலத்திலேயே நாகரிக நிலை பெற்று விட்டதன் விளைவே என்றும் ஆரியத்தின் மீது திராவிட மூலமொழியும் அதன் இலக்கணக் கூறும் ஆட்சி பெற்றுள்ளது என்னும் உண்மை யையும் புலப்படுத்தினார் கால்டுவெல். தமிழ் எம்மொழிக்கும் தாழ்ந்து வளையாது தலை நிமிர்ந்து நின்று தன் தனித்தன்மை காத்து தன்னை அழிக்க வந்த வடமொழியை வலு விழக்கச் செய்து வாழ்ந்து வருகிறது என்னும் ஒப்பற்ற உண்மையை உலகுக்கு உணர்த்திய கால்டுவெல் என்றும் போற்றுதலுக்குறியவர் தானே.

சீகன் பால்கு:- மயிலாடு துறைக்கருகி லுள்ள தாரங்கம்பாடி என்னும் கடற்கரைப் பட்டினம் கிறித்துவத் தொண்டாற்ற வந்த பாதிரிமார்களுக்கு தமிழ் மொழியைக் கற்றுச் சிறந்திடவும், ஆய்ந்து நூல்களை இயற்றிடவும் தமிழ் மொழியைப் பரப்பிடவும் உதவிடும் பாடி வீடாக பயனுற அமைந்து நின்றது. பதி னெட்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்ததில் இங்கு வந்த தமிழ் மொழியை பெருவிருப்புடன் உணவருந்தும் பொழுதும் பிறர் பழக்கக் கேட்டு கேள்விச் செல்வதத்தை மிகுதியாகக் கொண் டார். சீகன்பால்கு தமிழ்ச் சொல் அகராதியை உருவாக்கிட முனைந்து, தரங்கம் பாடி அகராதி, மற்றும் சில அகராதிகளையும் உருவாக்கினார். நான்கு ஆண்டுகள் கடுமையாக உழைத்து நாற்பதினாயிரம் தமிழ்ச் சொற்களை தொகுத்து வழங்கினார். தமிழ் இலக்கண விளக்க நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார். தென்னக மக்களின் சமயக் கொள்கைகள், வழிபட்ட தெய்வங்கள் பற்றியும் அவர் எழுதியுள்ளார் இரு நூற்றாண்டுகள் வரை கண்டுபிடிக்கப்படாத நிலையிலிருந்து அவரின் எழுத்துக்கள் இந்நூற் றாண்டில் தான் வெளியிடப்பட்டுள்ளன. அவர் இயற்றிய 'மலபார் மதம்' தமிழர்களின் சமய தத்துவங்களையும் நெறிகளையும், நம்பிக்கை களையும், சாதி, சடங்குகள், கலை, கவிதை, இசை, மருத்துவம், போர், விவசாயம், போன்ற வற்றைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளன. நீதி வெண்பா, கொன்றை வேந்தன் போன்ற சிறந்த நீதி நூல்களை மொழி பெயர்த்துத் தமிழர் களுக்கு இலக்கியப் புலமை இல்லை, ஒழுக்க மேம்பாடற்ற கூட்டத்தினர் என்பன போன்ற ஐரோப்பிய மக்கள் மனங்களில் பதிந்திருந்த தவறான கருத்தை நீக்கினார். அதற்காகவே இந்நூல்களை தங்கள் மொழியில் மொழி பெயர்ப்புச் செய்ததாகவும் கூறுகிறார்.

பெசுகி என்னும் வீரமாமுனிவர்

கோசப் கான்சுடான்டைன் பெசுகி என்றும் இத்தாலியர் தமிழகத்தில் கோவை, தூத்துக்குடி, மணப்பாடு ஆகிய இடங்களில் தங்கி தமிழ் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார் இளம் வயதிலேயே ஐரோப்பிய மொழிகளான இத்தாலி, இலத்தீன், எபிரேயம், கிரேக்கம், ஆகியவற்றில் தேர்ந்திருந்தத அவர் தமிழ் மொழியுடன் தெலுங்கும், கன்னடமும் பயின்ற தோடு வடமொழியிலும் புலமை பெற்று விளங்கினார். அவர் எழுதிய 'தேம்பாவணி' என்னும் கிறித்துவக் காப்பியம் ஏசுநாதரின் மணிமுடியை அலங்கரித்திடும் அழகிய அணி கலனும், தமிழ் மொழிக்குக் கிடைத்திட்ட ஒப்பற்ற கருத்துக் கருவூலமும் ஆகும். அவரரின் உரைநடை நூலான பரமார்த்த குரு கதை' ஓர் சிறந்த நகைச் சுவைப் படைப்பு. அவர் எழுதிய உரை நடை நூலான 'வேதியர் ஒழுக்கம்' மேல் வரிச்சட்டமாக மாணவர்களுக்கு உரியதாகி உதவிடுகிறது என்று போப் ஐயர் கூறியதியிருந்து அதன் உயர் பெருமையை உணர்ந்து கொள்ள முடிகிறது. தமிழ் இலக்கணத்தின் கூறுகளை நன்கு ஆய்ந்து பல இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். அவர் இயற்றிய தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணத்தையும் சுருங்கக் கூறிடுவதாகும். அதற்கு உரையையும் அவரோ வரைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது அவரால் தொகுக்கப்பட்ட 'சதுரகராதி' என்றும் அவர் பெயரை பறைசாற்றிக் கொண்டிருப்பதன்றோ? தமிழில் தோன்றிய நிகண்டுகள் அனைத்திலும் சிறந்ததாகக் கருதப்படுவதன்றோ இது! தமிழ் - இலத்தீன் அகராதி ஒன்றும், போர்ச்சுகீசியம் - தமிழ் -

இலத்தீன் அகராதி ஒன்றுமாக பன்மொழி அகராதிகளை உருவாக்கிய இலக்கண வித்தகர் அவர். உலக ஓவியமாகத் திகழும் ஒப்பற்ற தமிழ் மறையாம் திருக்குறளின் அறத்துதுப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். தமிழ் எழுத்து வடிவத்தில் இவரால் செய்யப்பட்ட மாற்றங்கள் இவர் புகழுக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளன. தமிழை உயிர் மூச்சாகக் கொண்ட அப்பெரியார் இயற்பெயரான கான்சுடான்டியர் என்பதை தைரியநாதன் என மாற்றிக் கொண்டதே அவரின் உள்ளார்ந்த தமிழ்ப்பற்றினை உலகறியச் செய்திடும். அவரது சீரிய தமிழ் தொண்டினைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச் சங்கம் 'வீரமாமுனிவர்' என்னும் பெரியனையும் 'செந்தமிழ்த் தேசிகர்' என்றும் பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

போப் ஐயர் :- தமிழ் மொழியின் ஒல்காப் புகழினை நிலைநிறுத்திட அரும்பாடு பட்ட அயலக அறிஞர்களில் முன்னிற்பவர் போப் ஐயர் என்றழைக்கப்படும் போப் ஆவவர். 1839 இல் தமிழகத்துக்கு வந்த இவ்வறிஞர் ஏறத்தாழ 40 ஆண்டுகள் தமிழுக்குத் தொண்டாற்றவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பாங்கு அனைத்து தமிழ் நெஞ்சங்களிலும் மகிழ்ச்சிப் பெருக்கினை ஏற்படுத்தவே செய்யும். கேள்வி ஞானத்தாலேயே தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணச் சிறப்பினை உணர்ந்து கற்பதில் ஆர்வம் காட்டிய பெருந்தகை அவர் இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு, முதலான இதழ்களில் தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை தீட்டினார். புறநானூற்றுப்பாடல்கள், புறப்பொருள் வெண்பா மாலை, திணை விளக்கங்கள், தமிழ்ப் புலவர் வரலாறு ஆகியவை பற்றி ஆங்கிலதத்ததில் கட்டுரைளாக எழுதினார். 'தமிழ்ச் செய்யுள் கலம்பகம்' என்னும் நீதி நூலினைத் தொகுத்து அப்பாக்களுக்கு ஆங்கில விளக்கமளித்தார் அந்நூலில் ''திருக்குறள், நாலடியார் போன்ற அருமை வாய்ந்தத அறநூல்களைப் படைத்துள்ள தமிழ் மக்களின் பண்பாட்டுச் சிறப்பு எத்துணை உயர்ந்ததாக உள்ளது. என்று நான் பலகாலும், உன்னியுன்னி வியந்திருக்கிறேன். அத்தகைய மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியைத் தாழ்வாக மதித்து தலை குனியும் போக்கினை விட்டொழிவாராக என்கின்ற அவரின் விருப்பமும் வேண்டு கோளும் தமிழ் மொழியின் மீதும், தமிழின மக்களின் மீதும் வைத்திருக்கின்ற அவரின் ஆழ்ந்த பற்றினையும் நம்பிக்கையையும் புலப்படுத்துவதன்றோ?

போப் அவர்கள் தமிழர்களின் சமய நெறியை மேலை நாட்டவரும் அறிந்து கொள்ளா ஏதுவாக சிவஞான போதத்தையும், திருவாசகத் தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் பரிதிமாற் கலைஞரின் தனிப்பாசுரத் தொகை யின் கவிதை நலம் பாராட்டி அதனை மொழி பெயர்த்ததுடன் பேராசிரியர் சுந்தரனாரின் மனோன் மணியத்தையும் ஆழந்து கற்று அதன் பெருமையை மக்களுக்கு கருத் தோவியமாக அளிந்துள்ளார், எவரும் எளிதில் கற்றிடும் வண்ணம் தமிழ் இலக்கணத்தை உரைநடையில் முதலில் எழுதிய பெருமைக்குறியவர் போப், எப்பாலுக்கும்நற்பாலாக விளங்கும் முப்பாலா லான திருக்குறளை முழுமையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். தன்னை ஒரு தமிழ் மாணவனாகவே உலகம் உணர்ந்து பாராட்டிட வேண்டும் என்றும் உயர்ந்த வேட்கையை இறுதி வரை தன் இலட்சியக் கனவானக்க கொண் டிருந்தார்.

தன்னேரில்லாத் தமிழின் தனித்தன் மையை, உயர்தனிச் செம்மொழியின் ஓங்கு புகழை, என்றுமுள செந்தமிழின் இனிமை, எளிமை, இலக்கணச் சிறப்பினை இவ்வுலகுக்கு இயம்பிட மறைமலை அடிகள், திரு.வி.க. நாவலர் சோம சுந்தர பாரதியார், விடுதலைக் கவி பாரதி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், ஓலைச்சுவடிகளை அச்சேற்றிய உ.வே.சாமி னாதர், கா.சு.பிள்ளை போன்றோர் தமிழகத்தில் தோன்றி ''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார்'' என்னும் வள்ளுவ னின் வாக்கினை உண்மையாக்கி ஒளி பொருந்திய எதிர்காலத்தை தமிழ் மொழிக்கும், தமிழின மக்களுக்கும் உருவாகிட வாழ்ந்து மறைந்தார்கள். இத்தகைய தமிழ்ப் பெரியார்கள் என்றும் நம் வணக்கத்துக்கும், வாழ்த்துக்கும்

சாட்டையடி?

இயக்குநர் குருதேவன்,

பாரதி கண்ட புதுமைப் பெண்ணே!
எங்கே சென்று ஒளிந்து கொண்டாய்?
கலிகாலம் இங்கே ருத்ரதாண்டவம் ஆடுது!..
அதனால்,
'சடுதியில் வந்து நில்லடி!
சாட்டையைக் கையிலெடுத்துக் கொள்ளடி!!'
அயோத்தியின் அவலத்தைப் பார்த்தால்...
'இராமன்' அங்கே பிறக்கவில்லை?!...
அப்படியொரு அவதாரம் எடுக்கவில்லை!
அவரவர் வாய்மொழி சொல்வதற்குள்
'சடுதியில் வந்து நில்லடி!
சாட்டையைக் கையிலெடுத்துக் கொள்ளடி!
'குருவும், சனீஸ்வரனும்' ஒரே வீட்டில்?
பூமாதேவி' வெருண்டு விட்டாள்.
'குஜராத்தில்' தங்கி விட்டாள்?
'அங்கே, சாந்தம் அடைய
'சடுதியில் வந்து நில்லடி!
சாட்டையைக் கையிலெடுத்துக் கொள்ளடி!
''பூக்களை விடவும் மென்மை காமம்'' - அதை
இல்லறக் கட்டிலில் அரங்கேற்றனும்!
இங்கு கடற்கரையிலே களியாட்டம்!? - இனி,
சந்தையிலே கசிந்து பாடுவதற்குள்...
'சடுதியில் வந்து நில்லடி!
சாட்டையைக் கையிலெடுத்துக் கொள்ளடி!'

'ரோபோ'

கவிஞர் மு. வீரமுத்து

நிலவில் ஓர் மன்னன்
ரோபோ!
அறிவியல் கனவுகளின்
தானியங்கும் தானியன்! ஞானியன்!
அந்நியன் அல்லவே!!?...

உலகத் தீவிரவாதிகளை
கதிர்வீச்சால் அழிப்பான்!
ஏழை மக்களுக்கு
இலவச வீடுகள் தருவான்!

இதய இணையத்தில்... தொடரும்
மெகா தொடர் யுகமழை!
பெருங்கவிக்கோவிற்கு - நாளை
நிலவில் சிலை!!

'ரோபோ'
காதல் கவிதைகளும் எழுதுவான்!
மனிதாபிமான மகரந்தங்களை
பால்வெளியில்,
மீண்டும் மீண்டும் தூவுவான்!

உயிரில்லா இயந்திர மனிதனே!
உயிரில்லா எகிப்தின் பிரமிடல்ல..?
மயிலில்லா காடுமில்லை! - ரோபோ
விஞ்ஞான வெயில்!
அவனைப் பாட... எல்லையில்லை!!

உரியவர்களன்றோ? தமிழகத் தமிழறிஞர்களுடன் மேலே குறிப்பிடப்பட்ட அயலகப் பேரறிஞர்களும் ஆற்றிய அருந்தமிழ்ந் தொண்டாலன்றோ தமிழகம் இன்றும் பீடு நடையிட்டு பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. தன்மானத் தமிழ் நாட்டில் வாழ்ந்திடும் இனமானத் தமிழர்கள் தங்கள் குழந்தைகளை தமிழ்வழிக் கல்விக் கடத்தில் சேர்ந்திட முன்வர வேண்டும். தமிழக அரசும் இனி தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரை தமிழே பயிற்றுமொழி எனவும், ஆறாம் வகுப்பிற்கு மேல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொள்ளவும், சிறிது சிறிதாக பொறியியல், வேளாண்மை, சட்டம், மருத்துவம் என அனைத்து தொழிற்கல்விகளும் தமிழ் வாயிலாக் கற்றிடவும் வாய்ப்பு ஏற்படுத்திடவும் ஆணைகள் இட வேண்டும். அரிச்சுவடியிலிருந்து ஆராய்ச்சிக் கல்வி வரை தமிழ் கற்காமலே கல்வி பெறும் அவல நிலையை தமிழக் கல்வி நிலை யங்களிலிருந்து நீக்கிட வேண்டும். இசை மொழி, வழக்குமன்ற மொழி, வழிபாட்டு மொழி, ஆட்சி மொழி என அனைத்துது நிலைகளிலும் தமிழே அரசோச்சிட வேண்டும். நம் குழந்தைகளின் நற்பெயரை நல்ல தமிழ்ப் பெயராக சூட்டவும், பெயர்ப் பலகைகளை தமிழில் எழுதிடவும் உறுதி கொள்வோம். உலகப் பொதுமறை திருக்குறள் தேசிய நூல் ஆகிடவும் தமிழ் செவ்வியல் மொழி ஆகிடவும் உரத்த குரலெழுப்பிடுவோம்! இதுவே மாறிவரும், உலகை நோக்கி தமிழ் - தமிழர் பயணம் நன்கு தொடர்ந்திட ஏதுவாகும்.

★

தமிழ்நாட்டில் தமிழே முதன்மை

ஜே.ஆர். இலட்சுமி

மனிதனின் நற்பண்புகளையும், நல்லாற்றல்களையும் வளர்த்து, அதன் மூலம் மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்குத் துணை புரிவது கல்வியே ஆகும். மாந்தர் பிறந்து பல ஆண்டுகள் பிறரைச் சார்ந்து வாழ்கின்றனர், அவன் தானே இயங்கும் நிலையினை அடைய உதவுவதும் கல்வியே ஆகும்.

ஒரு சமுதாயம் மதித்துப் போற்றும் வாழ்க்கை நோக்கங்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றையும், வழிவழியாக வந்து, தற்போது அதனுள் பரவிக் காணப்படும் திறன்களையும் இன்றைய தலைமுறைக் குழந்தைகளுக்கு அளிக்க அச்சமுதாயம் மேற்கொள்ளும் பல்வேறு செயல் முறைகளின் தொகுப்பாகக் கல்வி அமைகிறது.

கல்வி என்பது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும், அவனை உயர்த்துவதாகவும் அமைய வேண்டும். கல்வி எனப்படுவது குழந்தைகளின் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய அதன் ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயல் முறையாகும். இக்கல்வியை தமிழகத்தின் ஒவ்வொரு மாந்தரும் தமிழ் வழியே பெறுவார்களானால் சமுதாயம் முன்னேறும் என்பது உறுதி. மேலும், மொழியின் சிறப்புப் பணி, மனிதனின் சிந்தனையைச் செதுக்கி ஒருவரையறைக்குள் ஒழுங்குபடுத்திக் கொடுத்து அவனது அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவதாகும். எனவே, கற்றல், கற்பித்தல் ஆக இரு கூறுகளில் தருவோன், பெறுவோன் ஆகியோருக்கு இடையேயான கருத்தாடலில் மொழி முதன்மைப் பங்காற்றுகிறது.

சமுதாயப் பார்வை

தமிழ் மொழியை மாணவர்களுக்கு கற்றுத் தருவதுடன், அதன்மீது விருப்பத்தையும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு மாநில அரசு, மத்திய அரசு, தனியார் நிர்வாகம் அனைத்தும் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை தாய்மொழிக் கற்பிப்பதில் கவனம் காட்ட வேண்டும். இவ்வகையில் சமுதாயத்தினரின் கருத்துக்களைக் கணக்கிட்டால்,

1. தமிழ் படித்தால் வேலை கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டால் தமிழைத் தானாக விரும்பிப் படிப்பார்கள்.
2. ஆரம்ப நிலையில் எல்லாப் பாடங்களையும் தமிழில் படிக்க வேண்டும் என்று மொழியைக் கட்டாயமாகப் புகுத்துவதை விட சமுதாயத்தில் வேலை வாய்ப்பைத் தருதல் பற்றி சிந்தித்தல் வேண்டும்.
3. முதலில் அனைத்துத் தொழில் கல்வியையும் (மருத்துவம், பொறியியல்) தமிழில் மாற்ற வேண்டும். அடுத்ததாகத் தொடக்க நிலைக் கல்விக்கு மொழிமாற்றம் ஏற்படுத்த வேண்டும்.
4. தமிழ் நாட்டில் தமிழ்வழியில் கற்பவர்கள், தொழிற் கல்வியில்சேரும் பொழுது, ஆங்கில வழியில் கற்றுக் கொடுக்கப்படுவதால், அப்பாடங்களை நிறைவான வகையில் புரிந்து கொண்டு கற்றுக் கொள்ள முடியாத குறைபாடே உள்ளது. எனவே, தமிழ் வழி பயிற்றுவித்தல் முறை என்ற மாற்றம் உயர் கல்வியில் இருந்து செயல்படுத்தப்பட வேண்டும்.
5. தமிழ் நாட்டில் தமிழ் வழியாகப் பாடம் கற்றவருக்கு மட்டுமே வேலையில் முன்னுரிமை என்று ஏற்பட்டால் அனைவருமே தன் எதிர் காலத்தைக் கேள்விக்குறியாக எண்ணாமல் விரும்பி, தமிழ் வழிக் கற்க முன்வருவர்.
6. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் அவர்களது தாய்மொழியிலே கற்கிறார்கள் என்றால், அவர்களுக்கு அவர்கள் நாட்டிலே வேலை வாய்ப்பு அதிகம் இருப்பதால் அவர்களது மொழியை விரும்பிக் கற்றுக் கொள்கிறார்கள். அந்நிலை தமிழ்நாட்டிலும் வரவேண்டும்.
7. தமிழ் மொழி கற்றல் செயல்படுத்தப்பட வேண்டும் என்றால் தமிழ் நாட்டில் உள்ள அரசாங்கப் பள்ளிகளில் இருக்கும் ஆங்கில வழிப் பயிற்றுவித்தல் முறையை நீக்கி விட்டு, எல்லா வகுப்புகளும் தமிழிலே பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழே முதன்மை என்ற நிலை சமுதாயத்தில் உருப்பெற வேண்டு மெனில் மேற்கண்ட கருத்துக்களைச் சிந்தித்தல் வேண்டும்.

தமிழ் மட்டுமே என்ற நிலையில் - இன்னல்கள்

தமிழ் நாட்டில் தமிழ் மட்டுமே வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் தமிழ் மட்டுமே என்ற நிலை ஏற்படும் பொழுது சில இன்னல்களையும் எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இந்தி, மொழி கற்றலையும், இந்நியையும் தமிழர் புறக்கணித்த காரணத்தால் மத்திய அரசாங்க வேலையை இழக்க நேரிடுகிறது. மேலும் மத்திய அரசாங்க வேலையில் இருப்பவர்களுக்குத் தமிழ்மொழி மட்டுமே தெரிந்திருந்தால் பதவி உயர்வு கிடைப்ப தில்லை. இந்தியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும். ஆகவே இந்நிலையில் தமிழை மட்டுமே பயிற்று மொழியாகக் கொண்டு தமிழ்நாட்டில் கூட வேலை வாய்ப்பு பெற்றிட வழி இல்லாமல் போய்விடுகிறது.

தமிழ்நாட்டில் மக்கள் தொகைப் பெருக் கம் மிகுதியாய் உள்ளன. எனவே படித்தவர்கள் அனைவருக்கும் தமிழ்நாட்டிலே வேலை கிடைத்து விடாது. அதனால் தம் வாழ்க்கை மேம்பாடு அடைய வெளிநாட்டிறற்கும் சென்று வேலை தேடிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதற்கு தமிழைத்தவிர பிறமொழி தெரிந்திருந்தல் வேண்டும். இதுபோன்ற கார ணத்தினால் தமிழை மட்டுமே சார்ந்திருத்தல் என்பது நடைமுறைக்குப் பொருத்தமாக அமை வது இல்லை.

நிலைப்பாடுகளும் தீர்வுகளும்

எங்கும் தமிழ் முதன்மை நிலை வர வேண்டுமென்றால் தமிழ் மொழிக்கு முன் னுரிமைக் கொடுக்க வேண்டும். அது கல்வி நிலையில் இருந்து தொடங்க வேண்டும். ஆனால், தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகள் தமிழ் வழிக் கற்றால் எதிர் காலத்தில் ஏற்படும் சிக்கலை நினைத்து அச்சப் படுகிறார்கள். எனவே, இதற்குத் தீர்வாக சில கருத்துக்களை முன் வைக்கலாம்.

1. தமிழ் வழி கற்றவர்களுக்கு வேலையில் முன்னுரிமை அளித்தல் வேண்டும்.
2. கல்லூரி / தொழிற் கல்வி சேர்க்கையின் போது தமிழ்ப் பாட மதிப்பெண்களையும் சேர்க்கைத் தகுதிக்குச் சேர்க்கப்பட வேண்டும்.
3. பள்ளியில் தமிழ் வழியே பயின்று வந்த மாணவர்களுக்கு கல்லூரி / தொழிற் கல்வியில் சேரும் பொழுது முன்னுரிமை சேர்க்கையில் வழங்க வேண்டும்.
4. தமிழ் வழி பயிற்றுவித்தல் என்ற இறுக்க மான சூழல் சற்று மாறுபட முதலில் உயர் கல்வி, தொழிற்கல்வி நிலையில் தமிழ்வழி பயிற்றுவித்தலையும், அப்படி பயின்ற வர்களுக்குத் தமிழ் நாட்டில் உடனே வேலை வாய்ப்பும் அளித்தால் தமிழ் வழி பயிற்றுவித்தல் முறை வெற்றி பெறும்.

முடிவுரை

மொழி நாட்டின் ஒரு பகுதி. இது மக்களது மனநலனை வெளிப்படுத்துகிறது. மக்க ளுடைய நாட்டுச் சுற்றுப்புறத்ததையும் அதன் செயல்களையும் பிரதிபலிக்கிறது. பிட்சே (Fitche) எனும் புகழ்வாய்ந்த ஜெர்மன் தத்துதுவ அறிஞர் ''மொழி மனிதர்களை அமைப்பதைக் காட்டிலும் மனிதர்களை ஒரு பாகமாக ஆக்கு கிறது. மொழி வேறு அம்சத்தைக் காட்டிலும் நாட்டுப் பண்பை அமைப்பதில் மிக முக்கிய மானது. இயற்கையில் இது மனிதனின் மரபு நிலையோடு ஒட்டியது என்கிறார்.

இந்தியா ஒரு குடியரசு நாடு எனவே, நாம் எதையும் மக்கள் மீது கட்டாயப்படுத்த முடியாது. ஜனநாயக முறையில் தான் எதையும் செயல் படுத்த முடியும். சுதந்திரம் அடைந்த பிறகு மிகவும் சிக்கலானது மொழியே. இம் மொழிச் சிக்கலை மிக எளிதாகத் தீர்க்க முடியவில்லை. இதற்கான காரணம் அரசியல் குறுக்கீடுதான். எனவே, மக்கள் மனதில் தமிழ் வளர்ச்சி பற்றிய எண்ணமும், சுயநலம் இல்லாத மனப்பான்மையும் ஏற்பட வழிசெய்ய வேண் டும். அதை மக்களிடம் உருவாக்க வேண்டும். அப்பொழுது தான் தமிழ் நாட்டில் தாய் மொழியாம் தமிழ் முதன்மை பெறும். ★

கவிதை கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்

முனைவர் இராம.குருநாதன்

கவிதையைக் கற்பித்தல் என்பது சுவையானதொரு நுகர்ச்சி; அதனை உணர்தலும் உணர்த்தலும் மகிழ்வூட்டும்படியான பயிற்சி. எனவே கவிதையை அறிதல், புரிதல், புரிந்து கொண்டு போற்றுதல் என்பன கற்பதற்கும் கற்பிப்பதற்கும் உரிய இன்பத்தைத் தரும். ஏனைய இலக்கியப் பாடங்களை வகுப்பறையில் நடத்துவதைக் காட்டிலும், கவிதையை நடத்துவது என்பது இன்பம் பயப்பதாகும். கற்பது / கற்பிப்பது ஆகிய இரு செயல்களில் மேலோட்டமாகவும் விரைந்தும் உணர. / உணர்த்த முற்பட்டால், விளைவு, சுவைக்குப் பதிலாகச் சோர்வை உண்டாக்கிவிடும். வகுப்பறையில் கவிதையைக் கற்பித்தல், 'மெல்லவே கருவிருந்து ஈன்று காய்த்துப்' பயன் விளைவிக்கச் செய்வதாகும். 'செவிப்பால் நுழைந்து புக்கு உள்ளத்துக்குள்ளே நின்று தித்திக்குமே' என்ற கம்பனின் சொற்களுக்கு ஒப்ப, வகுப்பறையில் கவிதை வகுப்பு அமைய வேண்டும். அவ்வாறு கவிதையை பயிலும் போதும், பயிற்றுவிக்கும் போதும் இன்பம் வரும்.

வழிவழி மரபு

ஏனைய இலக்கிய வகைகளுக்கு இல்லாத பெருமையை, வகுப்பறையில் பெற்றுத் தருவது கவிதையே ஆகும். அதன் அருமையையும் ஆற்றலையும் வெளிக் கொணர்ந்து காட்டும் போதும், 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' நடத்தும் போதும், உண்மையான இலக்கிய இன்பத்தைப் பெற முடியும். சொல்லும் பொருளும் ஓசை நயமும் கவிதையின் இயல்பிற்கு இனிமைக்கும் உயிர்ப்புத் தருவன. மனத்தைத் தாலாட்டும் இனிமைக்கு மட்டும் உரியதன்று கவிதை; மானவீரத்தை உரத்த சிந்தனையில் முழங்குதற்கும் உரியது அமைதியைத் தரும் அதுவே, ஆர்ப்பரிப்பான வீர முழக்கத்தையும் தரும். இத்தகைய ஈருணர்ச்சிகளைத் தரவல்ல இலக்கிய வகைகளில் கவிதை முதன்மையாக உள்ளது. எனவே, கவிதை வழி அறிவுறுத்தலும் அறிவூட்டலும், கல்வி நிலையங்களில், வழிவழி வந்த மரபாக நிலவி வந்துள்ளது. ஆங்கிலேயரின் கல்வி முறை வருவதற்கு முன் செய்யுட் பாடங்களே கல்வித் துறையில் சிறப்பிடம் பெற்றிருந்தன.

வழிவழிவந்த சமூகத்தில், நாகரிகத்தையும், பண்பாட்டையும் அறிதற்குரிய திறவு கோலாகச் செய்யுளே இருந்தது. மொழிவளத்திற்கும் அதுவே பெரும்பங்கு ஆற்றியது. செய்யுள் வழிக் கற்பித்தல் என்பது, அன்றைய காலங்களில் ஆற்றலை வளர்ப்பதற்கும், அறக் கருத்துகளின் வழியே ஒழுக்கம் நிலைநாட்டப் பெறுதற்கும் உறுதுணையாக இருந்து வந்துள்ளது. அன்றைய நாள் பாடத்திட்டத்தில் செய்யுட்பகுதி, எனைய இலக்கியப் பாடங்களை விடச் சற்றுக் கூடுதலாகவே இடம் பெற்றிருந்தது.

அன்றைய காலங்களில் கவிதைப் பாடம் கற்பதில் மாணவர்களுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. கற்றல் Learning), பதிய வைத்தல் (Retention), திரும்ப மொழிதல் (Recalling), கற்றதை ஏற்றுப் போற்றல் (Recognition) ஆகியவை மாணவருலகில் இடம் பெற்றிருந்தன. வாய்விட்டுத் திரும்பக் கூறலும் ஒப்புவித்தலும் (Spaced repetition and recitation), பொருளோடு கற்றலும் (Meaningful learning), நினைவுகூர்தலில் ஆர்வமும் (will to remember), மறுபார்வை செலுத்துதலும் (Reviewing) ஆகியவை கற்பதையும் கற்பிப்பதையும் முழுமையாக்கின. வகுப்பறைச் சூழ்நிலையை (classroom climate) நிறைவாக்கின. இவற்றால் இலக்கியப் பாடங்களில் ஈடுபாடும் ஆர்வமும் மிக்கிருந்தன. இன்றைய நிலையில், செய்யுட் பாடம் நடத்துவதும், ஈடுபாட்டு உணர்ச்சியோடு கேட்பதும் பெரும்பான்மையும் அருகிக் கொண்டு வருவதனை உணரமுடிகிறது. மொழிப் பாடங்களில் அக்கறை வேண்டும். மாணவர் / ஆசிரியர் ஆகிய இருதரப்பினரிடமும் ஆர்வம் தணியுமானால், மொழி மீது பற்று எவ்வாறு ஏற்படும்? இலக்கியபப் பாடங்களைக்

கடல்நீராக எண்ணிக் கொண்டு, கானல் நீரால் தாகம் தீர்க்கலாம் என்ற போக்கே உயர்கல்வி நிலையில் மாணவரிடையே காணப்படுகிறது.

செய்யுட்பாடத் திட்டங்கள் - ஒரு குறை

இலக்கியப் பாடத் திட்டங்களில் காணப் படும் சில போக்குகளே இதற்குக் காரணமா கின்றன. அவை வருமாறு:

1. உயர்கல்வியில் செய்யுட்பகுதியை அழமாக வும் நுட்பமாகவும் நடத்தும்படியான சூழல் இல்லாமை.
2. செய்யுட் பகுதிகளில் இலக்கியச் சுவை ஊட்டவல்ல கவிதைகள் மிகமிக அருகியே இடம்பெற்றிருத்தல்.
3. செய்யுட் பகுதிகளில் மேலோட்டமான வினாக்கள் கேட்கப்படுதல்.
4. பகுதிப்பகுதியாகச் செய்யுட்கள் (Part Poems) வைக்கப்படுவதால் முழுமையான கண்ணோட்டம் கிடைப்பதில்லை.
5. படைப்பாற்றலையும், கற்பனைத் திறனை யும் வளர்க்கக் கூடியவாறு பயிற்சிப் பட்டறை பாடத்திட்டத்தில் (வகுப்பறைக் கல்வி) இடம் பெறாமை.
6. 'சர்வ சமயக் கீர்த்தனை போல' - ஒவ்செமயத்திலிருந்தும் (பாடல்கள் இடம் பெற்றாக வேண்டுமே என்ற நோக்கில்) சுவையற்ற பகுதிகளை இடம் பெறச் செய்தல்.
7. மொழியார்வமும், கருத்துச் செறிவும், நன் னோக்கமும் கொண்ட பாடங்களை இடம் பெறச் செய்வதில் பாடத்திட்டக் குழுவின ரின் கூடுதலான அக்கறையும் கவனமும் இன்மை.
8. தன்னார்வத்தையும் ஆளுமையையும் உண் டாக்கும்படியான தொரு புதிய சூழலைச் செய்யுட் பகுதிகளில் அணுகாமை.

- இவை போன்ற காரணங்கள் மாணவர் களிடம் கவிதையை அணியமாக்காமல் அந் நியப்படுத்திவிடுகின்றன.

புதிய சூழ்நிலைகள்

கவிதைப்படம் நடத்துவதில் சில புதிய சூழ்நிலைகளை உருவாக்குதல் மூலம் இலக்கிய வகுப்புகளை ஆர்வம் ஊட்டக் கூடிய வகையில் கொண்டு செல்ல முடியும். கவிதையை மாணவர்க்கு அறிமுகப்படுத்தல் வழியே பாடத் திட்டங்களில் புதிய முறைகளை வகுக்க வேண்டும். அதற்குரிய சில வழிகாட்டுதல்கள்:

1. கவிதைகளில் (பழையதும் புதியதும்) சிறந்தனவற்றைப் பாடமாக்குதற்குத் தகுதியானவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுப் பாடத் திட்டக்குழு அவற்றைத் தெரிவு செய்தல்.
2. பழங்கவிதையாயின் அதனை இன்றைய மாணவர்களின் ஏற்புத் திறனை (Receptive) அறிந்து பாடமாக்குதல்.
3. சங்ககாலக் கவிதைகள் பெரும்பான்மையும் காட்சி வார்ப்பின (Scenic); அவற்றைத் தெரிவு செய்யும்போது சுவைபட அமைந்த அகப்பாடல்களையும், புறப்பாடல்களை யும் ஆர்வம் ஊட்டக் கூடிய வகையில் அமைத்தல்.
4. சமூகப் பின்னணியில் தோன்றிய கவிதை களை அறிமுகம் செய்வித்தல்.
5. கதைவழிக் கவிதைகளை (காப்பியங்கள்) நிகழ்ச்சித் தொடர்பு அறாமல் உள்ள பகுதிகளாக வைத்தல்.
6. சமயப் பாடல்கள் இடம் பெறச்செய்வது சமய ஒருமைச் சிந்தனையை வளர்க்கும் என்றா லும், சுவையற்ற நிகழ்ச்சி வழி அமையும் சமயப் பாடல்களை அறவே நீக்க வேண்டும்.
7. கால அடிப்படையில் கவிதைப் பாடத் திட் டம் அமையாமல், பொருண்மை அடிப் படையிலான செய்யுட்பகுதிகள் அமையின் வரவேற்கத்தக்கதாகும்.
8. பன்முகப் பார்வையினால் அமையும்படி யான உத்திகளைக் கொண்ட புதுக்கவிதை கள் (சிறந்ததாக மதிக்கத்தக்கவற்றை அவற்

றின் புரிதல் தன்மை நோக்கி) இடம் பெறச் செய்தல்.

9. கருத்து, வடிவம், உத்தி, அழகுணர்ச்சி முதலானவை இடம் பெறும் வகையில் எத்தரப்பினரும் (இளங்கலை முதுகலை பயிலும் தமிழிலக்கிய மாணவர்கள் / பொதுத் தமிழைக் கற்போர்) போற்றும்படி யான செய்யுட்பாட உருவாக்கம் அமைத்தல்.

கவிதை கற்பித்தல் - சில நெறிகள்

கவிதை பயிற்றுவித்தலில் சில அணுகு முறைகளை மேற்கொள்ளலாம்.

(அ) முதலில் மாணவர்களை அது தொடர்பான சூழ்நிலைக்கு உளதாக்குதல் வேண்டும் நுதலிப் புகுதல் என்ற உத்தி தமிழில் உண்டு. அதனைச் செய்யுள் பயிற்றுவித்தலில் பொருத்தலாம். எவ்வாறு கவிதைக்குள் புகலாம் (enter into a poem) என்பது இன்றியமையாதது. நேரடியாகப் புலப்படுத்தவது பழைய முறை. கவிதையைக் காட்சிப்படுத்துதல் மாணவர் களைக் கவிதையின் ஈர்ப்புக்கு நெருங்கிவரச் (Proximity) செய்யும்; இலக்கியக் காட்சிகளோடு இன்றைய நடப்புச் சூழ்நிலையையும் இணை வித்தால் இலக்கிய வகுப்பின் சுவை சூடுகிறது. இன்றைய மாணவர்களின் நிலை, 'புதுவது கிளத்தலில்' ஆர்வம் காட்டுவதை எண்ண வேண்டும். செய்யுட் பகுதியைக் கீழ்க்காணும் மூன்று வகைகளில் எடுத்துக் கூறலாம்.

ஒரு கவிதையை உணர்த்தும் முன் அக் கவிதையை பற்றிய சிந்தனை பிறக்கவும். அது பற்றிய சூழ்நிலை அறிவு பெறவும் இம்முறை துணை செய்கிறது.

(ஆ) கவிதையைச் சுவைபட முழுமை யாகக் கற்பிக்குமுன் கருத்து முடிவுகொண்ட சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து (Segmented and segregated) அதன்பின், அவற்றைக் காட்சிப் படுத்த வேண்டும். செய்யுளின் முழுமை நோக்கிச் செல்லும்படியான பகுதிப் பிரிப்பு (Stage by Stage response to a poem) மிகப் பயனுடையது. இம்முறை கவிதையை மிக நுணுக்கமாகப் படிப்பதற்கும் நுட்பமாய் அறிதற்கும் (too encourage the habit of close reading and accurate understanding) வகை செய்கிறது.

(இ) ஒரு பாடலின் அகவடிவங்களையும் புறவடிவங்களையும் தனித்தனிப் பாகுபடுத்திப் பிரித்துக் காட்டி, அப்பாடலின் செய்தியையும் அதில் படைப்பாளன் எத்தகைய வடிவங்களை/ உத்திகளைப் பயன்படுத்தியுள்ளான் என் பதையும் விளக்கும்போது கவிதையின் முழுப் பயன் (Total effect of poem) கிட்டுகிறது. காட்சி வழிப்படுத்துவதன் வழியே பாடலைப் பகுப் பதும், ஒருங்கிணைப்பதும் (Synthesis is followed by analysis) கவிதையை நன்கறியச் செய்வன. பொழிப்புரைகளிலோ, பதவுரைகளிலோ, பதம் பிரித்துதுப் பொருள் கூறுவதிலோ கவிதைச் சுவை குன்றிவிடுகிறது. கவிதையின் சூழ் நிலையையும் உணர்ச்சியையும் அறிதற்குச் அவை தடையாக அமைந்துவிடலாம்.

(ஈ) ஒவ்வொரு கவிதையும் ஏதாவதோர் உணர்ச்சியையும் கருத்தையும் வெளிப்படுத்து வல்லது. சங்ககாலக் கவிதை முதல் இற்றைநாள் கவிதை வரை உணர்ச்சிகளை உள்ளடக்கிய கவிதைகளே பெரும்பான்மையாக உள்ளன. கவிதை உணர்ச்சியில் பல்வேறான கூறுகள் உள்ளன. உணர்ச்சிகளை உள்ளடக்கிய கவிதைக்கு ஓசை உயிர்ப்புத்தன்மை தருகிறது. ஓசைப்பட அமைந்து கவிதை உணர்ச்சியையும் காட்சியையும் ஒருங்கே வெளிப்படுத்த வல்லது. உணர்ச்சியை எத்தகு யாப்பில் கவிஞன் எடுத் தாளுகிறான் என்பதும் இங்கு எண்ணப்படு கிறது. கவிஞனோ அல்லது பாடலில் இடம் பெறும் மாந்தரோ எவ்வாறு தங்கள் உணர்ச் சியை வெளிப்படுத்துகிறார்கள் என்பதைப் புலப்படுத்த வேண்டும். கோபமாகவா? அமைதியாகவா? உரத்த குரலிலா? அடக்கிக் கூறுதலிலா? குரலின் ஏளனம் தொனிக்கிறதா என்பன போன்ற சூழ்நிலைகள் வகுப்பறைச் சூழ்நிலையை இனிதாக ஆக்கும் என்பதில் ஐயமில்லை.

(உ) கூற்று முறை என்பது கவிதையை யார் கூறுகிறார்கள் என்பதனைச் சுட்டுவதாகும். சங்க அகத்திணைப் பாடல்களில் ஒருவர் மற்றவரோடு பேசுதல் போன்ற தன்மை உண்டு.

நாடகப் பேச்சு (Moonologus) போன்றது இது. கூற்றை நிகழ்த்தும் மாந்தர் உணர்ச்சி வழியே செய்யுளின் கருத்து, நிலை பெறுகிறது. வினாவிற்க விடை இறுக்கும் பாணியில் தலைவனோ / தலைவியோ / மற்றும் சிலரோ பேசுவதை அறியலாம். சங்க இலக்கிய அகப் பாடலுக்குப் பொதுவானது இது. எனினும், கவிதையில் அமையும் அகநோக்கிலான கூற்று முறை. கவிதையின் மையத்தை வெளிப்படுத்தக் கூடியது (Every poem is a dramatic monologue, in which the character of a speaker is a part of the Poem's message) இதையறிந்து கவிதை உணர்ச்சியைக் காட்ட வேண்டியது கற்பிப்பார் கடன் ஆகும்.

(ஊ) இன்றைய நிலையில் மொழிப்பற்று குன்றி வருகிறது. பொதுத்தமிழ் படிப்போரிடமும் அது இருப்பினும் இல்லாதிருப்பினும் குற்றமன்று. இருக்க வேண்டும் என்பதுதான் தாய் மொழி அறம்! சிறப்புத் தமிழ் பயில்வாரிடையே அவ்வுணர்ச்சி குன்றி வருவது குன்றனைய குறை! செய்யுள் பயிற்றும்போது கவிதைச் சுவையோடு மொழியார்வத்தையும் ஊட்ட வேண்டும். மொழிப் பற்றை ஊட்டுதற்குச் செய்யுள் பாடம் ஒரு கருவியாக உள்ளது. ஏனைய இலக்கியப் பாடங்களைவிடச் செய்யுள் பாட் நடத்தும் போது, வாய்விட்டுப் படித்துச் சுவைத்தறியும் வாய்ப்பு மிகுதி. தொல்காப்பிய உரையாசிரியர் களுள் ஒருவரான பேராசிரியர், பா. என்பதற்கு உரிய விளக்கமாக.

> பாவென்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன்
> எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால்
> அவன் சொல்கின்ற செய்யுளைக் கற்பித்து இன்ன
> செய்யுள் என்று உணர்த்தற்கு ஏதுவாகிப்
> பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை

எனச் சுட்டுகிறார். செய்யுளை அறிதற்குரிய சூழ்நிலைகளால் உணர்த்தலாம்.

உணர்ச்சி - ஓசை - நாடகப்பாங்கிலான கூற்று = செய்யுள்

ஆகிய சூழ்நிலைகளில் கவிதையின் பண்டைய உணர்வைப் பதிய வைக்கலாம். சங்க இலக்கியக் கவிதைகளையும், காப்பியங் களையும் மேற்கூறியவாறு கற்பிக்க முனையலாம். தொன்மையான சங்க இலக்கியத்தை மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது, திணை மரபு பற்றிய அறிமுகம் மிகத் தேவை. தமிழ் இலக்கியத்தை, இளங்கலை யிலும் முதுகலை யிலும் ஆய்வு நிலையிலும் பயிலும் மாணவர் களுக்கு நவீனத்துவத் திறனாய்வுகளைச் சங்க இலக்கியத்தோடும், காப்பியங்களோடும் இணைத்துக் கூறும்போது புரிதல் தன்மையும் பொருத்தக்கூறலும் மிகமிக இன்றியமை யாதவை என்பதைக் கற்பிப்போர் உணர வேண்டும். கல்லூரிகளிடையே செய்யுள் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் இன்னும் சரியாக உணர்த்தப்படவில்லை.

கேள்விகளை நோக்கிய வேள்வி

கல்லூரிகளில், செய்யுளின் சொல்லும் பொருளும் எடுத்துக்காட்டப்படுவதோடு செய்யுள் வகுப்பு முடிந்துவிடுகிறது. முழுமை யாக அறியப்படாமல் அதனை மேம்போக்கான நிலையில் கற்பித்தால் போதும் என்ற நிலை உயர்கால்வி வகுப்புகளில் உள்ளது. இதற்கு முழுமுதல் காரணம் தேர்வு முறையே! தேர்வை நோக்கியே பாடங்கள் நடத்தப் பெறுகின்றன. உண்மையான இலக்கிய ஈடுபாடு குறைவதற் கும் இதுவே காரணமாகும். தேர்வுக்கு இந்தச் செய்யுளிலிருந்து இன்னின்னவாறு கேள்வி கேட்கப்படலாம் என்பதனை எடுத்துக்காட்டு வதே வகுப்பறையை ஒரு தொழிலறையாக ஆக்கிவிட்டது மாணவர்களின் எதிர்பார்ப்பும் கேள்விகளை நோக்கிய வேள்வியாகவே ஆகியிருக்கிறது. கல்லூரிகளில் மட்டுமன்றி அஞ்சல் வழியிலும் இத்தகைய எதிர்பார்ப்பு மிகுதி.

செய்யுள் பயிற்றுவிப்போர் திறன்

செய்யுள் வகுப்பு என்றால் அதற்கு எனத் தனிச்சிறப்பு இருந்துவந்த கலம் ஒன்றிருந்தது; ஆழமாகவும் நுட்பமாகவும், கற்கவும் கற்பிக்க வும் அக்காலச் சூழ்நிலை இடம் தந்தது; செய் யுள் பாடத்திட்டற்குரிய சிறப்பு உணரப்பட்டது.

> 'பொம்மையைக் காட்டிக் குழந்தைகளைக்
> கவர்வது போலத் தமிழ்ச் செய்யுள்களின்
> நயத்தை எடுத்துக்காட்டி, என் உள்ளத்துக்குள்
> அந்த இளம்பருவத்தில் தமிழ் விதைத்தவர்'

ஒற்றுமையால் உலகை ஆள்க!

கவிக்கோ ஞானச் செல்வன்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் கூட்டும்
பார்போற்றும் மாநாட்டுப் பணிகள் வெல்க!
பொன்னாட்டு விழுப்பமெலாம் இந்நா குற்றுப்
புவிமீது நிகரற்ற பெருமை காண்க!
தென்னாட்டுத் தீந்தமிழர் எந்நாட்டுள்ளும்
திருவோங்க வலுவோங்க இணைந்து நின்று
முன்னாட்டுங் கொள்கையராய் முரண்கள் வென்று
முற்றன்பால் ஒற்றுமையால் உலகை ஆள்க!

ஈழத்து நந்தமிழர் இன்னல் நீங்கி
இதமுறவே சுயாட்சிதனை வென்றெ டுத்து
வாழவொரு வழிகாணும் முயற்சி வெல்க!
வரலாற்றுச் சாதனையாய் மலர்க் ஈழம்!
தாழவரு தத்துவங்கள் தறிகெட்(டு) ஓடத்
தண்ணிலவாம் தமிழமெனும் ஒருமை நேர்க!
சூழவரும் ஞாலத்துத் தமிழர் எல்லாம்
துலங்கவரு நட்புறவு பேணி வாழ்க!
மொரிசியசு தென்ஆப்பி ரிக்கா வாழும்
மொத்தமுள தமிழர்களும் மீண்டும் நந்தம்
பரிசுமிகு தமிழ்பேச எழுத வல்ல
பாங்கான திட்டங்கள் வகுத்த ளிப்போம்!



கரிசனமே இல்லாமல் வேற்று பாசை
கற்றுதமிழ்ம் மறந்திழிந்த தமிழர் எல்லாம்
உரியநல்ல முயற்சியினால் தமிழர் என்னும்
உரிமையுடன் தாய்மொழியைப் போற்றிக் கற்க!

சாதிவெறி மதவெறியும் சூட்டி வைக்கும்
சதுரங்கக் காயாக ஆகி டாமல்
யாதினிய தமிழினமாய் ஒன்று பட்டு
யாவர்க்கும் நல்லவராம் மாண்பு காத்து
வாதுபுரி அரசியலின் கேடு நீக்கி
மானமுடன் நேர்வழியாம் நெறிகள் கொண்டு
தீதகற்றித் தமிழரெலாம் ஒருங்கே கூடித்
திகழ்ந்தோங்கி நிலைபெறவே வழிவ குப்போம்!

ஆட்சிமொழி பயிற்றுமொழி ஆல யத்தும்
அரங்கிசையும் வாணிகமும் தமிழே யாக
தாழ்ச்சியின்றித் தமிழ்க்கல்வி எவரும் கற்க
சட்டமுடன் உறுதிநிலைப் பாடு வேண்டும்!
மாட்சியுயர் தமிழன்றி வாழ்வில் மேன்மை
மலருவது முயற்கொம்பாம் உண்மை தேர்ந்து
வாட்டமெலாம் போக்குகிற வழிகள் நாடி
வல்லாங்கு மாநாடு வெற்றி காண்க!

என உ.வே.சா. தம் ஆசிரியரான சடகோப ஐயங்காரின் பாடம் கற்பிக்கும் திறன் பற்றிச் சுட்டியிருப்பது எண்ணிப் பார்க்கத்தக்கது. செய்யுள் நலம் பாராட்டல் கீழ் வகுப்புகளோடு நின்றுவிட்டது. அதுவும் கேள்விக்காக என்ப தோடு சரி!

அணுகுமுறைக் கல்வி

உயர்கல்வி நிலையில் செய்யுள் கற்பித்தல் என்பது புதிய அணுகுமுறைகளைக் கொண் டிருக்க வேண்டும். உளவியல் சூழல், அறிவியல் சூழல், சமூகச் சூழல், பொருத்தப்பாடு, ஒப்பீடு, உத்திகள் முதலிய நிலைகளில் செய்யுள் பாடங் களை நடத்துதற்குரிய சூழலை உருவாக்கலாம். பழங்காலக் கவிதைகளை மேற்கத்திய திறனாய் வுக்கு உட்படுத்தி நடத்தப்பெறும் சூழ்நிலைகள் வளர்க்கப்பட வேண்டும். இலக்கியத்தை அறிவியல் கொண்டு பார்க்கும் நிலை செய்யுள் வகுப்பில் பெருக வேண்டும் இதற்குரிய வர வேற்பைப் பொறுத்திருந்துதான் அணுக இய லும் எனினும், செய்யுள் பாடம் கற்பிப்பதில் புதுமை வேண்டும் என்போர்க்கு மத்தியில், புரிதல் வேண்டும் (மேலை நாட்டுத் திறனாய்வு உத்திகள்) என்ற உணர்வு கற்பிப்போரிடையே உள்ளது.

விழித்திரையில் காணுவதை மனத்திரை யில் வெளிப்படுத்தும் கவிதைக்கலையை எளி தாக்கிக் கற்பிக்க இன்று ஊடகங்கள் உறுதுணை யாய் உள்ளன. வாய்வழி நடத்துவதைக் காட்டிலும், பல்வேறு ஊடகங்களின் துணையை மேற்கொள்ளலாம். காட்சி வழி உணர்தலும் உணர்த்தலும் இனிவரும் காலங்களில் மொழியை ஒரு பரிசோதனைக் கூடமாக (Language Laboratory) ஆக்கும். இலக்கியக் கல்வி இனி அறிவியல் வழி உருவாகும். செய்யுளை அறிவியல் வழிக் கற்பதற்கான வாய்ப்புகளும் பெருகும். ★

திருக்குறள் ஆவணங்கள்

கவிஞர் தமிழ்நாடன்

உலகம் போற்றும் பொதுமறை திருக்குறள். திருக்குறள் தமிழ்நாட்டில் ஓர் ஆட்சி நூலாகவும் விளங்கியது. தமிழ் நாட்டில் சோழர், பல்லவர் காலத்தில் மனிதருமமே ஆட்சி நூலாய் விளங்கிற்று கொங்கு நாட்டில் திருக்குறள் ஆட்சி முறை என்னும் குறிப்பு புதியது. தமிழ் நாட்டில் வேறு பகுதியில் கூடத் திருக்குறள் ஆட்சி நூலாக விளங்கி இருக்கக் கூடும். அத்தகைய ஆவணங்களைத் திரட்ட வேண்டும் என்பார், ஈரோடு முனைவர் செ.ராசு.

1. கல்வெட்டு

சேலம் மல்லூர் அருகே உள்ளது பொன் சொரிமலை. இந்த மலையில் திருக்குறள். கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தமிழகத்தில் அறியப்படும் மிகப்பழைய திருக்குறள் கல்வெட்டாகும் இதன் காலம் 15 ஆம் நூற்றாண்டாகும். இந்த கல்வெட்டில் கீழ்க்காணும் திருக்குறள் பொறிக்கப்பட்டு உள்ளது.

தன்னூன்

பெருக்கற்

குத் தான் பி

றிதூனுண் பா

னெங்ஙன

மாளுமருள்

(எண் 251) இந்த குறள் கொங்கு நாட்டு மக்கள் கொல்லாமையை வலியுறுத்தி வாழ்ந்ததை விளக்கும். மேலும் கொங்கு நாட்டில் சமணம் 15 ஆம் நூற்றாண்டு வரையிலும் இருந்ததற்கு இது ஒரு சான்றாகும்.

2. பழனிசெப்பேடு

அடுத்துபழனி செப்பேடு

மதுரை நாய்க்கர்கள் கொங்கு நாட்டை ஆண்டபோதும் கொங்கு நாட்டுச் சிற்றரசர்கள் திருக்குறளைப் போற்றி ஒழுகினர். திருமலை நாயக்கர் காலத்தில் பழனியில் வீரமுடியாளர் சார்பில் ஒரு மடம் கட்டப்பட்டது. இதனைக் கட்டுவித்தவர் சின்னோப நாயக்கர் என்பார்.

வள்ளுவர் மரபு காத்து
முப்பால் மொழியின் படிக்கு
அல்லவைகடிந்து நல்லவை
நாட்டி
ஆறிலொன்று கடமை
கொண்டு
அசையாமணிகட்டி
அரசாள்பவர்
சின்னோபர்

என்று வீரமுடியார் செப்பேடு பாராட்டு கிறது. (கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம் 1991).

3. பூந்துரைநாட்டார் மேலோலை

மதுரை முத்துவீரப்ப நாய்க்கர் காலத்தில் கொங்குப்பகுதியிலுள்ள அரச்சலூருக்கும் காரை யூருக்கும் எல்லைத்தகராறு இருந்து வந்தது. அதைத் தீர்த்துவைக்கப் பணிக்கப்பட்டவர் நாய்க்கரின் தாராபுரம் அதிகாரி திம்மபமுதலி யார். தகராறுதீர்ந்து 1617 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இப்பதிவு பூந்துறை நாட்டார் மேலோலை என்றழைக்கப்படுகிறது. அதில்,

அன்புடைய தாயேபோல்
அனைத்து உயிர்கட்கும்
இனிமைநல்கி
வள்ளுவர் உரைத்த
முப்பால் மெழியின்படியே
செங்கோல் நீதிவழுவாமல்

நத்திவரும் நாளில் என்ற வாசகம் பதியப் பெற்றுள்ளது (கொ.ஆ)

4. கபிலமலைச் செப்பேடு

பரமத்தி பகுதியைப் பதினெட்டாம் நூற் றாண்டில் ஆண்ட குறுநிலத்தலைவன் அல்லாள இளையாநாய்க்கன் என்னும் வேட்டுவன். அவர் கபிலமலையில் திருவள்ளுவருக்கு ஒரு மடம் அமைத்தார் மடத்தின் தலைவரின் பெயர் திருவள்ளுவர் இணையாநாய்க்கன், திருச்செங்

கேடு, பழனியிலும் இவ்வாறான மடங்கள் அமைத்து மூன்றையும் கபிலமலைத் திருவள்ளுவருக்கு எழுதிக் கொடுத்தார். (கபிலமலை செப்பேடு கொ.ஆ) கபிலமலை வள்ளுவர் மடத்திற்கு ஒரு லட்சம் வராகன் செலவானதாம். நூறு கொத்தர்கள் கோவில் பணிசெய்தனராம். திப்புசுல்தான் காலத்தில் இந்தமானியம் நிகழ்ந்தது என்று செப்பேடு விளக்குகிறது.

5. பல்லடம் செப்பேடு

பல்லடத்தில் நாரணபுரம் என்று ஓர் ஊர் உண்டு. இந்த ஊரின் தலைவராக நாராயணக் கவுண்டர் இருந்தார். ஊரின் தெய்வம் அங்காள பரமேஸ்வரி. அம்மனுக்குக் குடிவரியாக 24 மனைச் செட்டியார்கள்.

ஆண்டுடொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட பணம் கொடுத்தனர். அது பற்றிய விவரம் ஒரு செப்பேட்டில் பதியப்பெற்றிருக்கிறது. இதன் காலம் 1.2.1798.

நீதிசாகரம்
நினைவுடன் கற்று. .
வள்ளுவர் மரபுகாத்து
முப்பால் மொழியின் படியே
அல்லவை கடிந்து
நல்லவை நாட்டி
ஆறிலொரு
கடமைகொண்டு

குடிதழைக்க ஆள்பவர் நாராயணக் கவுண்டர் என்று புகழ்கிறது. அந்தச் செப்பேடு (பல்லடம் செப்பேடு, கொ.ஆ)

6. காரையூர் செப்பேடு

பாளையக்காரர்கள் காலத்திலும் கொங்கு நாட்டில் திருக்குறள் போற்றிப் பின்பற்றப் பட்டது. பழைய கோட்டைப் பட்டக்காரர் அழகன் உத்தமக்காமிண்டர்

அன்புடைத்தாய்போல்
அனைத்து உயிர்க்கும்
இனிதென
வள்ளுவர் உரைத்த முப்பால்
மொழியின் படியே
அறமே அறிந்து
ஆறில் நன்று கடமை
கொண்டு

ஆட்சி செய்தார், என்கிறது, காரையூர் செப்பேடு. (தென்னிந்தியக் கோவில் சாசனங்கள் தொகுதி மூன்று பாகம் ஒன்று, எண் 1223)

7. பழையக் கோட்டை பூர்வபட்டயம்

பழையக் கோட்டைப் பாளையக்காரர் குமாரரத்தினக் கவுண்டர் பள்ளிக்கூட மொன்று அமைத்தார். திருவாவாடு துறை ஆதினத்திலிருந்து ஆசிரியர் வரவழைக்கப் பட்டார். அந்தப் பள்ளிக் கூடத்தில்'

சங்கீதபண்ணுடன்
தமிழ்மன்ற
சாதிமத பேதமிலாது
சகலருக்கு நலநீதியாய்

கற்பிக்கப்பட்டதாம். (பழைய கோட்டைப்பட்டக்காரர் நாட்டுப்பாடலும் பூர்வ பட்டயமும் 1965) குறள் இசையோடு பயிற்றுவிக்கப்பட்டது. முக்கிய தகவல்.

8. திருக்குறள் ஓலைச்சுவடி

ஈரோடு மாவட்டத்தில் திருக்குறள் ஓலைச் சுவடி யொன்றைக் கண்டறிந்தார். கல்வெட்டறிஞர், செ.இராசு. ஓலையில் வலப்புறம் மென்றில் இருபங்கு இடத்தில் திருக்குறள் கீழே பரிமேலழகர் உரை குறளுக்கு இடதுபுறம் உத்தமம், மத்திமம், அதமம் என்று ஒவ்வொரு குறளுக்கும் ஒருமாதிரி குறிப்பு. இச்சுவடி சேசாசிய சுவடியாகப் பயன்பட்டதாம். இந்த ஓலைச் சுவடியை ஒன்றாகச் சேர்த்துப் பிடித்து அந்த ஓலைகளுக்கு இடையே கயிற்றை சோசியர் வீசுவாராம். அதை பிரித்துப் பார்த்தால் பலன் இருக்குமாம். அந்த மூன்றில் ஏதோ ஒன்றை சோசியர் கூறுவாராம். கேட்க வந்தவர் அப்பலனுக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டியது.

இந்தச் சுவடியின் காலம் இருநூறு ஆண்டுகள்.

9. மரக்கோட்டை திருக்குறள்

அண்மையில் சேலம் அருகேயுள்ள மரக் கோட்டை என்னும் ஊரைச்சேர்ந்த பாரம்பரிய மிக்க மருத்துவம் பார்க்கும் குடும்பத்தினரது ஓலைச்சுவடிகள் பார்வைக்கு வந்தன. அவற்றில் பெரிய அளவிலான மருத்துவச்சுவடிகள் பத்து. இதிகாசம், புராணங்கள் என எழுபது இருந்தன. திருக்குறள் சுவடியொன்றும் இருந்தது. இது இருநூறு ஆண்டுக்கு முன்னர் எழுதப் பட்டிருக்கலாம். அதில் பரிமேலழகர் உரை. அதிகார வைப்பு மாறிக்காண்கிறது. முன் னோர்கள் இந்த திருக்குறள் சுவடியை மருத்துவநூலாக பயன்படுத்தியிருக்கக் கூடும்.

10. இராசிபுரம் (ஆங்கிலத் திருக்குறள் கல்வெட்டு)

கடந்த மார்ச்சுத் திங்கள் இராசிபுரம் அரசு மாதுதுவமனை சீரமைப்பின் போது, புதை யுண்டிருந்த ஓர் ஆங்கிலத் திருக்குறள் கல் வெட்டு அறியப்பட்டது. அதிற்காணுவது.

The wealth of generous soul is like the Tree that healing Balm Distils for every ill

The Sacret Kural

மருந்தாகித்தப்பா மருந்தற்றால் செல்வம்
பெருந்தகையான் கண் படின் (217)

எனும் குறளாம். இக்குறளை வெட்டு வித்தவர் திருமதி எம். ஹெச். ஏ. டோட் அம்மையார்.

1929 ஆம் ஆண்டு முதல் 1933 ஆம் ஆண்டு வரை 3 முறை (42 மாதங்கள் சேலம் மாவட்ட கலெக்டராக இருந்தவர் ஏ.எச்.ஏ.டுட் அவரது துணைவியார் தாம் திருக்குறள் கல்வெட்டு வெட்டுவித்தவர்.

1931 ஆம் ஆண்டில் ஏற்பட்ட காலரா மற்றும் காய்ச்சலினால் தற்போதைய தர்மபுரி, நாமக்கல் மாவட்ட்களையும் உள்ளடக்கிய சேலம் மாவட்டத்திலல் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இறந்தனர். அதன் பிறகு விரைவாக சேலம் மாவட்டத்தில் சேலம், ஆத்தூர், நாமக்கல், ராசிபுரத்தில் மருத்துவ மனைகள் தொடங்கப்பட்டன. ராசிபுரத்தில் 23 படுக்கை வசதியுடன் மருத்துவமனை தொடங் கப் பட்டது (1932) ஆங்கிலர் ஆட்சியில் மருத் துவமனைகள் இராணுவ நிர்வாகத்திலிருந்து பொது நிர்வாகத்திற்கு மாறியது. இந்தக் காலகட்டத்தில்தான் பொதுமக்களிடம் நிதி திரட்டித்தான் இராசிபுரம் மருத்துவமனை அமைக்கப்பட்டது. ஆதலின் அதற்குப் பொதுப் பணியில் மக்களை ஈர்க்கும் படியான பொருத்தமானதோர் குறளைத் தேர்ந்து பதிவுசெய்துள்ளனர். அப்போது ''ராசிபுரம் மருத்துவமனையின் சமகாலக் கட்டிடங்களில் இன்னும் வேறுபல திருக்குறட்பாக்கள் பதிக்கப்பட்டிருக்கலாம்.

இவை கொங்குநாட்டில் இதுவரை அறிய வந்த திருக்குறள் தொடர்பான ஆவணங்கள்.

ஒன்று கல்வெட்டு, சிலசெப்பேடுகள், சில ஓலைச் சுவடிகள் இவை 15, 16, 17, 18, 19 - ஆம் நூற்றாண்டுகளின் கொங்கு மகக்களின் வாழ்க்கைப் பதிவுகள். இவற்றில் சாதிபேதம் கடந்த அனைத்து மக்களுக்கும் பொதுவான, அறம் சான்ற ஆட்சி என்னும் கோட்பாடு ஒலிக்கக் கேட்கலாம்.

உலக அரங்கில் குறளின் 'குரல்'

தமிழ் நாகரிகத்தில் பூத்த பண்பாட்டு மலர் திருக்குறள். மனிதநேயம் கமழும் ஒப்பற்ற மானுடக் காப்பியம். முழுமையான லட்சிய வாழ்வுக்கு வழிகாட்டி. ஆன்மிக வாழ்வு - அறவாழ்வு, பொருளியல் - அருளியல், இல்லறம் - துறவியல், ஈரம் - வீரம், காதல் - கற்பு ஆகிய பல்வேறு துறைகளையும் தழுவிய வாழ்க்கைக் கையேடு. இந்த ஒப்பற்ற மாமறை உலக நாகரிக அரங்கில் ஒளி விரிக்கவும் அதே சமயத்தில் திருக்குறளை முன்வைத்து தமிழ் மக்களை ஒன்றிணைப்பதற்கும் ஆன அபூர்வத் திட்டம் ஒன்று தமிழ் உலகில் அறிமுகமாகி யுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்து வரும் தமிழ் உள்ளங்களை இணைக்கும் வசிய மருந்து இது. சென்னையில் உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற திருக்குறள் நூல் வெளியீட்டு விழாவில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன்படி தமிழ் மக்களை

"தீ! தீவு!! தீப கற்பம்!!!

- கவிஞர் மு. தமிழ் நிலவன்,

உலக நாடுகளில் உலவும் செய்திகளே!
கலகம் செய்வதும் காட்டிக் கொடுப்பதும்
காலம் அறிந்து கைக் கொடுப்பதும்
கடலுக்கு அப்பால் கருவாகும் பிரச்சினைகள்

தேசப் படத்தில் தெளிவாகத் தெரிகிறது
நிலவும் சூழ்நிலையே நீண்ட வரலாறு
'மாதம் ஒரு மதக் கலவரம்!..'
பரவி வருகின்ற 'பூகம்பப் பயங்கரங்கள்!'

தீவு பிரச்சினையில் தீர்வு காண்போமா?
தீவிரவாதம் திசை திரும்புமா? தீக்குளிக்குமா?
தீபகற்ப இந்தியாவின் தீயின் காயங்கள்
உலகப் பஞ்சாயத்து உன்னத அமெரிக்காவின்

வானை முட்டிய வர்த்தக மையங்கள்
தரை மட்டமானது உலக சோகமே!?
வளரும் நாடுகள் வல்லரசு ஆகட்டும்.
வல்லரசுகள் நல்லரசுகள் ஆகட்டும்!!

நூதனங்கள், சாதனங்கள், நுட்பமான கணினிகளும்
கவி பாடும் உலகத்தின் தேசத்தை உயர்த்தட்டும்
கவிப்பாடும் புலவர்க்கோ ஓராயிரம் பார்வை!
புவியாளும் தமிழ்மீது உலகப் பார்வை!

நதிமூலம் அறிந்தோரே, நட்பை நாடுங்கள்!
நன்னெறியால் காவிரிக்குத் தீர்வு காணுங்கள்!
வளர்பிறை ஆகட்டும் தமிழகத்தில் ஒருமைப்பாடு
பொதிகைமலை அருகினிலே 'தமிழ் மாநாடு!'

ஒன்றிணைக்கும் தமிழ் வட்டங்கள் உலகெங்கும், தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் அமைக்கப்படும் என்ற தகவலை அறக்கட்டளை இயக்குநர் அழகப்பா ராம்மோகன் தெரிவித்துள்ளார். தமிழின் பலமுனை வளர்ச்சிக்காக இந்த அறக்கட்டளை உருவாக்கியுள்ள பல்வேறு திட்டங்களையும் அவர் விவரித்திருக்கிறார்.

வெகு விரைவில் தொடங்க இருக்கும் தமிழ் வட்டத்தில் திருவள்ளுவர் சிலையும் குத்துவிளக்கும் இடம் பெறும். தமிழ் உள்ளத்தை மேம்படுத்துவதற்கான நூல் நிலையமும் அமைந்திருக்கும். இது தவிரக் கோயில்களில் 'வள்ளுவர் அறிவகங்கள்' ஏற்படுத்தப்படும். இதன் மூலம் கோயில் வழிகாட்டுடன் சேர்ந்து அறிவு சிறக்கவும் வகை செய்து தரப்படும்.

உயர்ந்த தரத்தில் வசீகர வடிவமைப்பில் நவீன தொழில் நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள 'தமிழ் மறை திருக்குறள்' நூலை, பிரதமரின் அறிவியல் ஆலோசகர் அப்துல் கலாம் வெளியிட்டு கூர்மையான உரை நிகழ்த்தியுள்ளார். அவ்வுரையில் இந்த முன்னணி விஞ்ஞானியின் நெஞ்சகத்துள் மண்டிக்கிடக்கும் தமிழ்ப்பற்று மட்டுமன்றி குறள்வழிச் சிந்தனைப் பொறிகளும் வெளிப்பட்டன. அவருடைய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் திருக்குறள் எங்கெங்கு எப்படியெல்லாம் வழிகாட்டியாக, பற்றுக் கோடாகக் கைகொடுத்து உதவியுள்ளது என்பதையெல்லாம் - ஆரவாரமில்லாமல் பழகுதமிழில் ஒப்பனைப் பூச்சு சிறிதும் இல்லாமல் விவரித்துள்ளார். ஏவுகணைத் தொழில்நுட்ப கர்த்தாவான அப்துல் கலாமின் குறள் சிந்தனை எண்ணங்கள் மென்மையான மலர்க்கணைகளாக மாறி விழாவில் கலந்து கொண்டவர்களின் இதயங்களில் இதமாகத் தைத்து இனிய சிலிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பெற்ற நூல் இன்றளவும் உயிரோட்டத்துடன் அதே பசுமையுடன் பொலிந்து நிற்கிறது. இன்றைய மனித வாழ்வுக்கு பொருந்துகிறது. இதைவிட வேறு அதிசயம் என்ன இருக்க முடியும்? என்று கேட்கலாமல் கேட்டுள்ளார் - அவர்.

ஆகத் திருக்குறளை மையமாகக் கொண்டு தமிழ் மக்களின் இதயங்களை இணைப்பதற்கான கலாசசார இயக்கம் இதன் மூலம் உதித்திருக்கிறது. இந்த இயக்கம் தமிழினத்துக்கு அதன் முக விலாசத்தை மீட்டுத் தருவதும் கூட. இதன் பரிமாணமாக உலக அரங்கில் தமிழ் நாகரிகம் தனக்குரிய எடுப்பான இடத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் அரும்பியுள்ளது.

நன்றி - தினமணி

இனியும் வேண்டாம் இந்த உறக்கம்

பேராசிரியர் இரா. கோதண்டபாணி



உலகத்துக் காட்சிப் பொருள்கள் எல்லாம் கருத்துப் பொருள்களாக மாறும்போது தான் மாந்தனின் சிந்தனை வளர்ச்சிகளை அறந் தறியும் வாய்ப்புக் கிட்டுகின்றது. மலை காட்சிப் பொருள்; அதில் வடித்தெடுத்த சிலை கருத்துப் பொருள். எதுவும் தீட்டப்படாத திரைச்சீலை காட்சிப் பொருள்; அதில் ஓவியம் வந்த பின்பு கருத்துப் பொருள். நிலவு ஒரு காலத்தில் கவிஞன் பார்வையில் விட்டெறிந்த வெள்ளித் தட்டாய்க் காட்சியளித்தது; நிலவை மனிதன் தொட்டு ஆய்ந்து அறிந்த பின்பு அது கருத்துப் பொருளாகியது. காட்சிப் பொருள் களை எல்லாம் அறிவின் திறத்தால் கருத்துப் பொருள் களாக மாற்றிவரும் மாந்தர்கள், தம் தாய் மொழியை மட்டும் கருத்துப் பொருளி லிருந்து காட்சிப் பொருளாக மாற்றி வருகிறார் கள். காட்சிகளை எல்லாம் கருத்துக்களாக மாற்றும் மாந்தனின் சிந்தனையுணர்வு, அதற்கு அடிப் படையாய் விளங்கும் மொழி கருத்துப் பொருளி லிருந்து காட்சிப் பொருளாகி வரு வதைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவே இல்லை.

தமிழில் வழங்குகின்ற நல்ல சொற்க ளெல்லாம் வழக்கிழக்கின்றன. வேண்டாத வேற்று மொழிச் சொற்களெல்லாம் வேண்டிய மட்டும் கலக்கின்றன. பயிர் மறைந்து களை செழித்துவிட்டது. இந்நிலை நீடித்தால் 'இதுதான் செம்மொழி' என்ற முத்திரை குத்தப் பட்டு, உயர்தனிச் செம்மொழி என்ற அருகதையும் போய் விடும். ஆண்ட மொழிக்கு நம்முடைய காலத்தில் குழிதோண்டும் நிலையா? புலவர்கள் புலம்பிப் பயனில்லை! அறிஞர்கள் அழுது அரற்றுவதால் புண்ணிய மில்லை! தூங்கும் தமிழர்களைத் தட்டி எழுப்ப மீண்டும் ஒரு மொழிப் போராட்டம் வெடிக்க வேண்டும்! தமிழ் அமைப்புகள் பிணக்குகளை விட்டுவிட்டு, மொழியைக் காக்கும் புதுக் கணக்குகளைப் போட வேண்டும். இனியும் இது நடக்காவிடின், தாயின் சாவைத் தாம் இருந்து முடித்த தமிழர்களாய் ஆகிவிடுவோம்.

இடைக்காலத் தமிழகம் ஏற்படுத்திய மொழிக் கலப்பினைக் களைந்தெறிவதற்கு நாம் பட்ட துன்பங்கள் சொல்லும் தரமன்று. ஆனால் இதற்குப் பின்பு வந்தவர்களின் மொழிச் சொற்களெல்லாம் ஏராளமாகத் தமிழில் நுழைந்து, கலப்பு வேலையாக முடிந்திருக் கிறது. வந்தவர்கள் எல்லாம் சென்றுவிட்டார் கள். ஆனால் அவரர்கள் வழங்கிய கலப்பு நின்றுவிட்டதுது. தமிழகத்தில் அயலக ஆட்சி முடிந்தது; ஆனால் அயலக தமிழ் நின்று விட்டது. தமிழன் இன்று தமிழனாக இல்லை! ஆங்கிலேயனாக போர்ச்சுக்கீசியனாக - வடக்கு மொழிக்காரனாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். பிறக்கும்போது இருந்த தனித்தன்மை போய்விட்டுத. உலகத்துச் செம்மொழிகளில் ஒன்றிற்குச் சொந்தக்காரன் என்ற பெயர் மாறி, அவியல் மொழிக்குச் சொந்தக் காரனாகிவிட் டோம். அடுத்த தலை முறையினர் வாயில் வாஞ்கப்போகும் தமிழ் மொழியை நினைத் தால் நெஞ்சம் பதறுகின்றது.

இதையெல்லாம் அறிவுறுத்தும் நிலை களும் குறைந்து வருகின்றன. முந்துதமிழ்ப் புலவர்கள் மொழிப் பெருமை பேசினார்கள். நாமும் தொடர்ந்தோம். மறைமலையடிகளார் போன்றவர்கள் மொழித் தூய்மையாய் வாழ்ந் தார்கள்; பாராட்டி மகிழ்ந்தோம் பாரதிதாசசன் பாட்டால் சாடினார்; சரியாகத் தான் சொல்கிறார் என்றெல்லாம் தலையாட்டினோம். ஆனால் இத்தனை பேரையும் அரசியல் வாதிகள் என்ற வணிகர்கள் மொத்தமாக மூட்டையில் கட்டி வைத்து விட்டு, தமிழ் மொழியைத் தங்கள் வயிற்றில் வைத்துக் கட்டிக் கொண்டார்கள். அது முதற்கொண்டு கோவில்களில் தூய மறைகளா கவும், பள்ளிகளில் பழகு தமிழாகவும், மன்றங்களில் மணக்கும் மலர்களாகவும்

புரட்சிப் புலவன்..!

சு. இராமராசன்.

மனதுக்கு நிம்மதி புலவனின் புகழுரை!!
புரிந்துக் கொள்பவனுக்கு இதுவொரு தேனுரை!
தொடங்கும் பணி சுகமாய் சுகம்பெற
அறமாய் வளர மணிக்குடை சிரக்குமென்று,
ஆன்ற முத்தமிழர் அறிஞர் பலவோரால்
தென் மாமதுரை புகழாய் திகழ்ந்தது!
விரிந்த வரலாறாய் முத்தமிழ் மதுரையென
இன்பப் பெயராய் இன்முகம் கொண்டது.
ஓங்கிய சிறப்பாய் தொன்மை தொடங்கி
இந்நாள் வரை பெருமையின் ஒளிக்கொடியாய்
இத்தரை பரப்பிய அமிழ்தமிழ் மொழியே
இன்றும் புதுமென்மை பொலிவாய் புகழுரை -
யோங்கியது!

சிலம்பின் ஒருபரல் கலங்கச் செய்த
காட்சிப் பதிவின் பழமை சிறப்பிடமாய்
புலவனின் கவித்தும் கலங்காது புரியவைக்கும்
மகோன்னத மதிப்பிடும் மதுரையம் பதியிடம்.
அறம்புரிந்து நடந்தவர்க்கு அற்புதப் புலவர்கள்
அறிவொலிவீசி வாழ்வொளி பகர்ந்த இடம்!
திருவிளையாடலின் இறைமைப் புலமையை துணிவுற
குற்றமென்று வாதிட்ட புரட்சிப்புலவன் நக்கீன் -
வாழ்ந்ததயிடம்!
நான் இவைபகர காரணம் அன்றுதொட்டு
இன்றுவரை யாருக்கும் நீதிமான் புலவனென்றே!
சட்டங்கள் இயற்றினாலும் திட்டங்கள் தீட்டினாலும்
அன்றைய அறிவுரைச்சான்று புலவன் புலவனே!

விளங்கிய தமிழ்மொழி, வாக்கு வங்கிகளில் அரசியல் வாதிகளால் நிலைப்பு வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் வட்டிகளை மட்டும் பெற்று வருகின்றார்கள் கலைத்துறை என்ற பெயரில் மொழிக் கொலை செய்யும் திரைப்படப் பேய் களும், சின்னத் திரை பிசாசுகளும் இப்போது சேர்ந்து கொண்டன. பாரதக் கதையில் பாஞ்சாலிக்கு ஏற்பட்ட கதிதான் இன்று தமிழ் அன்னைக்கும் ஏற்பட்டுள்ளது.

எது எப்படி நுழைந்தாலும் அது இருக் கின்றதைக் கொடுக்கின்றது என்ற உணர்வு தமிழனுக்கு எழுவதில்லை. மொழிக்கு ஆக்கம் என்றும் வாதாடுகின்றனர் சிலர் ஆங்கிலம் ஆங்காங்கே எடுத்துக் கொள்ளவில்லையா?' இப்படிச் சிலர் ஏகடம் பேசுகின்றனர். ஒரு மொழி வளர்கின்ற போது வேண்டுமானால் இது நடைபெறலாம். ஆங்கிலம் அப்படித்தான் வளர்ந்தது. தமிழுக்கு இது தேவையா? எதனையும் எங்கும் பெறத் தேவை என்று இல்லாத தமிழ் மொழிக்கு இந்தவகை 'ஆக்கம்' தேவைதானா? இப்படியெல்லாம் ஏமாற்றிப் பிழைக்கின்ற கூட்டத்தினரை இனங்கண்டு விரட்ட வேண்டாமா? முடியவில்லையே! என்ன கரணியங்கள்?

தன் உணர்வுக் குறைவே முழுமுதற் கரணியம் மொழிச் சீர்திருத்திகள் மட்டுமே மொழித் தூய்மையை உண்டு பண்ணி விட முடியாது. குமுகாயத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தன் உடமைகளில் ஒன்றாக மொழியைக் கருதும் காலம் கனிய வேண்டும். தமிழ் என்பதே தம்-இல் (தம் இல்லத்து மொழி) என்று கூறும் பாவாணர் எண்ணம் ஈடேற வேண்டும். தனித் தமிழ் என்ற உணர்வுக்கு முன்னர் 'தன் தமிழ்' என்ற உணர்வு தூங்க வேண்டும். தன்னுடையது எதுவாயினும் அது காக்கப்படவும் போற்றப்படவும் வேண்டும் என்ற உணர்வு ஏற்படுவது இயல்பு. அந்த உணர்வைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த உணர்வு இல்லாததால் - இன்னுஞ் சிலருக்குத் தெரியாததால் மொழித் தூய்மை என்ற ஒன்று மேலோங்கவில்லை.

தமிழ் அன்னை அரியணை ஏறி மகிழ வேண்டாம். அவள் அவளாக இருந்தாலே போதும். அவளுக்கு ஒட்டுப்போட்ட பட்டா டைகள் வேண்டாம். சொந்தச் சேலையைச் சுற்றிக் கொண்டு நம் சொந்த அன்னையாக வாழ்ந்தாலே போதும். அந்த நாள் வந்து சேருமா? ★

உலகத் தமிழனும், உள்ளூர்த் தமிழனும்

சுதாகர்

தமிழராய்ப் பிறந்தும் தமிழராய் வாழ வழிவகை காணாத நிலையில் தான் தமிழ் நாட்டுத் தமிழர்களிருக்கின்றனர். வேறெந்த இனத்திற்கும் கிடைக்காத வாய்ப்புக்களையும் வரலாற்று நாயகர்களையும் தமிழர்கள் காலந்தோறும் பெற்று வந்திருந்த போதிலும், அனைத்தையும் கோட்டை விட்ட நிலையில் ஏமாந்து நிற்கின்றனர்.

தமிழராயிருப்பது ஒரு மாபெரும். வரலாற்றுக் கடமையை உள்ளடக்கியிருப்பது என்பதை உணராமலிருக்கிறோம். நமது தேசத்தின் மொழி, பண்பாடு, கலை, இலக்கியம் போன்றவற்றால் நமக்குப் பெருமைகள் இல்லை, அயல் பண்பாட்டிற்கும் பல்லக்குத் தூக்கிகளாயிருக்கிறோம். மாற்றான் தோட்ட மல்லிகை மணக்கிறது. நமக்குச் சொந்தமான தமிழ் நிலத்தில் பூத்துச் சிரிக்கும் மல்லிகை மொக்குகள் கருகிப் போய்க் கொண்டிருக்கின்றன. தமிழருக்குரிய கடமைகளை நிறைவேற்றாமலிருப்பது தேசத் துரோகக் குற்றம்.

தமிழ்த் தேசத்தின் வரலாறு தெரியாத ஒரு தலைமுறை தமிழகத்தில் உருவாகிவிட்டது. ஒரு தலை முறை வீணாகிவிட்டது. வள்ளுவனை, கம்பனை, இளங்கோவை இழந்துவிட்டது. தொட்டிலிலிருந்து கற்றுக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய தமிழ்த் தேசிய உணர்வுகள் கற்றுக் கொடுக்கப்படவில்லை. சுதந்திரத் தமிழன் சுடுகாட்டுத் தமிழனாகி விட்டான். சுதந்திர நாட்டிலிருப்பவனுக்குத் தான் சுதந்திரத்தின் பெருமை புரியும். விடுதலை வேட்கைக்கு விடை கொடுத்து விட்டு, விட்டேத்தியாய் அலைந்து திரிகிறான் தமிழன். பெற்றோர்கள் மரபுரிமையாகத் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழரின் வீரமும், மானமும் செறிந்த விடுதலை உணர்ச்சியைப் புகட்டவில்லை. தமிழாசிரியர்களும் தமிழுக்குத் துரோகம் செய்வதையே தங்களின் கடமையெனக் கருதுகின்றனர். ஆசிரியர்களுக்கு தமிழ்க் கல்வி குறித்து அக்கறை இல்லை. கல்லூரிப் பேராசிரியர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. இவர்களின் ஊதியம் பெருத்தது தொப்பைகள் பெருத்தன. அறிவு வளரவில்லை மக்களை நோக்கிச் செல்லவில்லை. இவர்களால் தமிழ் சமூகத்திற்குப் பயன் இல்லை. வீணுக்கு வாழ்கின்றனர் வெட்டிக்குருகத் திரிகின்றனர்

தமிழ்நாட்டிற்கு வெளியிலுள்ள தமிழர்கள் தமிழைக் காப்பதற்கு எடுக்கின்ற முயற்சிகளைக்கூடத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மேற்கொள்வதில்லை. ஈழத் தமிழர்களின் எழுச்சியை இங்கு காணமுடிவதில்லை.

ஆங்கிலத்திற்கு அடுத்து தமிழ் தான் இணையத்தில் அதிகம் இடம் பெற்றுள்ளது என்று பெருமைப்படுகிறோம். இதில் தமிழ் நாட்டுத் தமிழர்களின் பங்கு எத்தனை விழுக்காடு? வெறும் இருபது விழுக்காடு! இதுதான் தாய்த் தமிழகத்தின் பெருமை. வெளிநாடுகளிலிருக்கும் தமிழர்களின் தமிழுணர்வைச் சிதைக்கவும், மழுங்கடிக்கவுமான வேலைகளில்தான் நமது தமிழர்கள் திரைப்படங்கள் சின்னத் திரைகள், ஊடகங்கள் வாயிலாகச் செய்கின்றனர்.

ஒரு சமூகமாய் இயங்குவது குறித்து நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. சிங்கப்பூரிலுள்ள தமிழர்கள் தமிழ்க் குழந்தைகளுக்கேற்ற கல்வித் திட்டத்தைத் தயாரித்துள்ளனர். கேரளாவிலுள்ள தமிழர்கள் கூட ஒன்று சேர்ந்து தமிழ்க் குழந்தைகளுக்கேற்ற தமிழ்க் கல்வியைத் தயாரித்துள்ளனர். மிகவும் சிறப்பான இக்கல்வி முறையை கேரள அரசும் ஏற்றுக் கொண்டு, கடந்த நான்கு ஆண்டுகளாக அரசு பாடத் திட்டமாகவே இக் கல்வியை நடைமுறைப் படுத்தி வருகிறது. தமிழ்க் கல்விப் பாடத் திட்டத்தினைப் பின்பற்றி மலையாளப் பாடத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. தூங்கி வழியும் தமிழர்களுக்கு இது பற்றித் தெரிந்து கொள்கிற ஆர்வம் கூட இல்லை. வெளியில் இவ்வளவு துடிப்பாகப் பல மாற்றங்களைக் கொண்டு வரப் போராடிக் கொண்டிருக்கும் தமிழர்களை கண்டு கூட நாம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை.

21 ம் நூற்றாண்டிலும் நாம் அக்கறையற்ற தமிழர்கள், அசட்டுத் தமிழர்கள். சொரணையற்ற

தமிழர்கள். நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் தொலைத்த தமிழர்கள். முன்னோர்களின் பெருமைகளைச் சொல்லியே செயல் மறந்த தமிழர்கள் தமிழர்கள் எருமை மாட்டின் மீது மழை பெய்தது போன்று தானிருக்கின்றனர் என்ற பாரதியின் அன்றைய கணிப்பு இன்றைக்கும் அப்படியேதான் உள்ளது. தமிழர்கள் திருந்துவதற்கான அறிகுறியே இல்லை. தமிழ்ச் சிந்ததனையுடையவர்கள் செயலாற்றுவதற்கான களம் குறுகிக் கொண்டே செல்கிறது. தமிழ்ப் பகைவர்களின் தளம் விரிவடைந்து கொண்டே இருக்கிறது. தமிழை இழந்து விட்டோம். தமிழ்த் தேசத்தையும் இழந்து விடுவோம். தமிழை மீட்க முடியாமல் கையைப் பிசைந்து கொண்டிருப்பது போன்றே, தமிழ்த் தேசத்தையும் இழந்து கையாலாகாதவர்களாய் நிற்கப் போகிறோம்.

தமிழ்த் தேசம் பல்வேறு நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கின்றது. தன்னையே காப்பாற்றிக் கொள்ளத் தெரியாத தமிழ்த்தேசம் பிறநாட்டுத் தமிழர்களை எப்படிக் காப்பாற்றப் போகிறது? தனது அடையாளங்களையும், முகவரிகளையும் இழந்துவிட்ட தமிழ்த்தேசத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டது, 'தமிழன் என்றோர் இனமுண்டு,' தனியே அவனுக்கோர் குணமுண்டு' என்பது அவனது மந்தக் குணமா? இனஉணர்வற்ற இறுமாப்புக் குணமா? மடி பறிக்கும் மாற்றானுக்கு அடிவருடும் குணமா? தமிழ் இருக்க வேண்டிய இடத்தில் அயல் மொழிகளை வைத்துப் பார்க்கும் அடிமைக் குணமா? விழக் கற்றுக் கொண்டவன் எழக் கற்றுக் கொள்வது எப்போது?

இங்கிலாந்து நாட்டின் நிலப்பரப்பு முழுவதையும் இழந்தாலும் சேக்சுபியரின் எழுத்துக்களில் ஒரு வரியைக்கூட இழக்க மாட்டோம் என்று இங்கிலாந்துக்காரர்கள் கூறுகின்றனர். ஆனால், தமிழர்கள் எதை வேண்டுமானாலும் இழப்போமே தவிர எங்களின் அடிமைப் புத்தியை மட்டும் எக் காலத்திலும் இழக்கமாட்டோம் என்கின்றனர்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று ஸ்பானியப் பல்கலைக் கழகத்தின் கட்டிட முகப்புவாயிலில் பொறிக்கப்பட்டுள்ளது என்று பெருமை பேசுகிறோம். ஆனால், தமிழ்நாட்டில், தமிழ்ப் பாடப் பகுதியில் இடம் பெற்றிருந்த கணியன் பூங்குன்றனின் பாட்டுஇப்போது இல்லை என்பது குறித்துக் கவலைப்பட யார் இருக்கிறார்கள்? தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழர் வரலாறு, தமிழர் எழுச்சி முதலியவற்றைப் படிக்க வேண்டிய தமிழர்கள் அயல்மொழி, அயல்பண்பாடு, அயலவர் வரலாறு பற்றித் தெரிந்து கொள்ளவே விரும்புகின்றனர். எதையெல்லாம் இழக்கக்கூடாதோ அவற்றையெல்லாம் இழந்து விட்டோம்.

ஆரிய நாகரிகம், எகிப்திய நாகரிகம், சீன நாகரிகம் என்றெல்லாம் குறிப்பிடுகிறோம். எகிப்திய நாகத்தை நைல்நகரி நாகரிகம் என்றோ, சீனநாகரிகத்தை மஞ்சளாற்று நாகரிகம் என்றோ சொல்வதில்லை. ஆனால், தொல் தமிழர், நாகரிகத்தை மட்டும் சிந்துச் சமவெளி நாகரிகம் என்றல்லவா குறிப்பிடுகிறோம்? வரலாற்றுணர்வை நாமும் இழந்து விட்டோம்? உப்பு சாரமற்றுப் போனால் எதைக் கொண்டு சாரமேற்றுவது? கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்பே என்றெல்லாம் நீட்டி முழங்குவதால் என்ன பயன்?

இன்றைக்குத் தமிழனத்திற்கு ஏற்பட்டுள்ள அரசியல், பொருளியல், பண்பாட்டு நெருக்கடிகளுக்கு யார் காரணம்? தமிழர்கள் எப் 'படித் தமிழக வரலாற்றில் குன்றினார்கள் என்பதை அறிந்துக்கொள்ளாமல் தமிழகத்திற்கு விடுதலை இல்லை. தமிழ் மக்களுக்கு விடியல் இல்லை.

பிறநாட்டு நல்லறிஞர் சரித்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்றான் பாரதி. பிறநாட்டுத் தமிழறிஞர்கள் தமிழுணர்வாளர்கள் தமிழ்ஆர்வலர்கள் பலவற்றிலும் சாதனை நிகழ்த்தி வருகின்றனர். அவற்றை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் தமிழ்த் தேசத்தின் வளமான எதிர்காலம் குறித்து இனியேனும் நாம் சிந்திக்க வேண்டும். தற்போதைய வெற்றிகள் போதுமானவை அல்ல. தமிழர் ஒற்றுமையை சாதிப்போம். நமது தமிழ் மக்களைக் கவ்விப் பிடித்துள்ள அனைத்துத் தீங்குகளிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றுவோம்.

தூங்கும் புலியைப் பறை கொண்டெழுப்பினோம்!
தூய தமிழரைத் தமிழ் கொண்டெழுப்பினோம்!
தீங்குறு பகைவரை இவனின்று நீக்குவோம்
செந்தமிழ் உணர்ச்சி வேல் கொண்டு தாக்கினோம்!

- பாரதிதாசன்

திருவடி

முனைவர் அரங்க. இராமலிங்கம்

திருவடி, நற்றாள், தாள் பாதம் மாணடி, இறைவனடி என்றெல்லாம் சுட்டப் பெறும் சொற்களின் பொருள்தான் என்ன? என்பதை அறிய முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து எனும் முதல் அதிகாரத்தில் உள்ள பத்து குறட் பாக்களில் ஏழில் திருவடி பற்றிக் குறிப்பிடு கிறார். தாள், அடி என வள்ளுவர்பிரான் குறிப்பிடுவது தூல உடலின் பாதங்களை அல்ல. குருகீதை எனும் நூல் பாதத்தின் குரு பாதத்தின் அருமை பெருமைகளைப் பலபட விரித்துப் பேசுகிறது. மாயாஜாலங்கள் செய்வது, குங் குமம், விபூதி, கடவுளர் உருவங்களை வர வழைத்தல், கல்லை வாந்தியெடுத்துச் சிவலிங்கம் எனக் கூறுதல் இதுபோன்ற சித்து வேலை செய்பவர் குருவாக முடியாது. சீவனைச் சிவமாக்கப் பேசுபவர்தான் குருவாக முடியும்.

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு.

எனத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் குருபெருமானாகிய முருகப் பெருமானிடம் வேண்டுகிறார். அகர உயிர்ப் பொருள் சிகரமாக (சிகரத்தில் ஏற்ற என்னைச் சிவமாக்கிக் கொண்டது பாரீர் - வடலூர் வள்ளற்பிரான்) குருவாக உருவெடுத்து வருகிறது. அப்படி உரு எடுத்து வந்த குருவே பிரம்மம். அவரே கடவுள், இறைவன் எல்லாம். அவரின் பாத தீர்த்தம் எல்லாப் பாவங்களையும் போக்கிப் பிறப்பறுக் கும். இந்த அரிய பெரிய செயலின் செழுமையை - சிறப்பை - சீர்மையைக் குருகீதை மிக விரிவாக எடுத்துரைக்கின்றது. ஆனால் இன்று குரு எனத் தங்களைக் கூறிக் கொள்ளுவோரின் செயற் பாடுகள் செம்மையாக இல்லை.

"குருமார்கள் என்போரின் தூல உடலின் கால்களையும் கால்களின் படங்களையும் பூசை செய்வதும், கால்களைக் கழுவிய தண்ணீரைப் பாததீர்த்தம் என்று பருகுவதும் இன்று மக்களிடையே நடைமுறையில் இருந்து வருகின்றன. இப்படித் தூல உடலின் கால்களையும், கால்களின் படங்களையும் வைத்துப் பூசை செய்வதாலும், பாதங்களைத் தட்டில் வைத்துக் கழுவிய தண்ணீரைப் பாததீர்த் தம் என்று பருகுவதாலும் மேலே குருகீதையின் சுலோகங்களில் கூறப்பெற்ற பலன்களைப் பெற முடியுமா? நிச்சயமாகப் பெற முடியாது. பாதம் என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளாத தால் ஏற்பட்ட விளைவு மேலே கூறப்பெற்ற தவறான பழக்கவழக் கங்கள் ஆகும்.[1] என்னும் கருத்துரை கவனத்திற்குரியது. பாதமாகிய திருவடியின் அளப்பரும் செயலினை,

திருவடி யேசிவம் ஆவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சிந்திக்கில்
திருவடி யேசெல்கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள் தெளிவார்க்கே (138)

திருவடி ஞானம் சிவமாக் குவிக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே (1598)

என நுட்பமான உணர்த்துகிறார் திருமூலர் பிரான். வடலூர் வள்ளற் பிரானும் திருவடியின் பெருமையினைப் பலபட விரித்துப் பாடியுள் ளார். அறியாமையுள் அடங்கிய அனைத்து மாயைகளின் உருவமாக விளங்கும் முயலகனை ஆழ அமுத்தி நிற்கும் திருவடியையும், ஓங்கி உயர்ந்து ஒளிர்ந்து ஒலிதந்து உலகை - உயிர்களை இயக்கும் - ஆடும் திருவடியையும் (மண்தீண் டாப் பாதம்) உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து வள்ளற்பிரான் பின்வருமாறு பாடியுள்ளார்.

சாகாவரம் தந்த தாரகப் பாதம்
சச்சிதானந்த சதோதய பாதம்
தேகாதி எல்லாம் சிருட்டிக்கும் பாதம்
திதிமுதல் ஐந்தொழில் செய்கின்ற பாதம் (8)

ஓங்கார பீடத்து ஒளிர்கின்ற பாதம்
ஒன்றாய் இரண்டாகி ஓங்கிய பாதம்

தூங்காத தூக்கத்ததில் தூக்கிய பாதம்
துரியத்தில் ஊன்றித் துலக்கிய பாதம் (9)

ஆருயிர்க்கு ஆதாரம் ஆகிய பாதம்
அண்ட பிண்டங்கள் அளிக்கின்ற பாதம்
சாருயிர்க்கு இன்பம் தருகின்ற பாதம்
சத்திய ஞான தயாநிதி பாதம் (11)

அருட் பெருஞ்ஜோதிய தாகிய பாதம்
அம்மையும் அப்பனும் ஆகிய பாதம் (15)

(6 ஆம் திருமுறை - ஆடியபாதம்)

எனப் பாதமாகிய திருவடியே அனைத்திற்கும் மூலம் - அதுவே ஆதிமூலம் - அதுவே ஆதிபகவன் என உணர்த்துகிறார்.

ஓங்கார பீடத்து ஒளிர்கின்ற பாதம், ஒன்றாய் பின் இரண்டாகி ஓங்கிய பாதம் என்னும் வரிகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கன. பிரணவப் பொருளாக இருப்பது ஓங்காரம். ஓங்காரமாகிய பிரணவச் சுழியில் அமர்ந்து ஒளி செய்து கொண்டிருப்பதுதான் பாதம் எனத் திட்டவட்டமாக வடலூர் வள்ளற்பிரான் கூறியுள்ளார்.

ஏகபாதம்

ஏகபாதமாய் - ஒன்றாய் - தனிமுதலாய் - தனியனாய் - ஏகாட்சரமாய் - ஏகனாக இருந்த அந்தப் பொருள் பின் இரண்டாகி திதிமுதல் அனைத்தும் செய்து ஆருயிர்க்கு ஆதாரமாக அமைந்து அண்ட பிண்டங்களை அளிக்கின்றது என அருளிச் செய்கிறார் வடலூர் வள்ளற்பிரான். இன்றும் காசிக்குச் செல்பவர்கள் கங்கையில் மூழ்கி காசி விசுவநாதரைத் தரிசனம் செய்துவிட்டுப் பின்னர் 220 கிலோமீட்டர் கடந்து விஷ்ணு கயாவிற்குச் செல்வார்கள். அங்கு முன்னோர்களுக்குப் பிண்டம் கொடுப்பது பெரும்புண்ணியம் என்ற நம்பிக்கை இன்றும் உள்ளது. அங்கிருந்து புத்தகயா ஏழு கிலோ மீட்டர். இங்குதான் புத்தர் அரசமரத்தடியில் ஞானம் பெற்றார். பௌத்தர்களின் வழிபாட்டுத்தலங்களில் ஒன்றாக புத்தகயா விளங்குகிறது. விஷ்ணு கயாவில் உள்ள திருக்கோயிலில் விஷ்ணுவின் ஏகபாதம் உள்ளது. இந்த ஏகபாதத்தை செப்புத்தகட்டில் சிறியதும் பெரியதுமாகப் பல்வேறு நிலைகளில் செய்து விற்கிறார்கள். நம்முள் ஏகபாதமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும். உயிர்ப்பொருளான உண்மையான விஷ்ணுவை அறியாமல் அங்குள்ள கல்லில் உள்ள ஏகபாத வடிவத்தை மக்கள் வழிபட்டு வருகிறார்கள். நம்முள்ளே ஏகபாதமாய் ஒளிதரும் திருவடியை வணங்கினால் மரணமிலாப் பெருவாழ்வு பெறலாம். ஏகபாதம் இரண்டாகி நின்றாடும் நிலைகண்டு - ஒளிகண்டு - அங்கிருந்து வரும் பாதோதகத்தை அருந்தினால் இனிப் பிறவாமை பெறலாம். என் செய்ய இயலும், எல்லாவற்றிற்கும் அந்த ஆதியே துணை.

அனைத்திற்கும் ஆதிமூலமாக ஆதியாக இருக்கும் திருவடியினை குருபாதம், பிள்ளையார்சுழி, சிவமயம், திருச்சிற்றம்பலம், அருட்பெருஞ்ஜோதி எனச் சித்தர்கள் போற்றிப் பரவியுள்ளனர். இவையாவும் பூரணமாய் நிறைந்த பராபரத்தின் பாதத்தையே குறிக்கின்றன என்பதை உணர்வுடையார் உணர்ந்து தெளிதல் வேண்டும். இவை யாவும் சித்தர்களுக்கெல்லாம் மூலபுருஷராக - ஆதிகுருவாக - குருநாதனாக அவதாரம் செய்தருளிய முருகப் பெருமானின் காலத்தில் இருந்தே வாழையடி வாழையாக நம் முன்னோர்கள் பின்பற்றி வரும் வழக்கம் ஆகும்.

தூல உடலின் பாதங்கள், தூல உடலின் பளுவைத் தாங்குகின்ற ஆதாரமாக இருக்கின்றன. அதுபோலவே ஆதி பாதமாகிய பராபரத்தின் பாதம் அகிலாண்ட கோடி சராசரங்கள் அனைத்தையும் தாங்கி நிற்கிறது. அறிவாகிய இத்ததிருவடியே அனைத்திற்கும் ஆதாரம் ஆகும். எனவே இதனைப் பாதம், நற்றாள், திருவடி, மாணடி, இறைவனடி, பூங்கழல், பொன்னார் திருவடி, பொன்னடி, ஆடிய பாதம் எனப் போற்றி வணங்கி வாழ்த்தி வாழ்ந்தனர் பெரியோர். எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்கும் இது, ஆதாரம் அற்றது. நிராதாரமானது. தூல உடலின் பாதத்தினின்றும் வேறானது இது என்பதை உணர்த்தவே, இதை மண்தீண்டாப் பாதம் என ஞானநூல்கள் குறிப்பிடுகின்றன. மண்தீண்டாப் பாதமாகிய இஞ்ஞான பாதத்தை அறிவு எனும் பாதம் எனக் குறிப்பிட்டனர் சித்தர். இந்த அறிவான பாதமே,

திருவடியே தெய்வம். இந்த. தெய்வம் எங்கே இருக்கிறது, எப்படி இருக்கிறது; என்ன செய்கிறது! இதோ கருணையே வடிவமாகத் திருவவதாரம் செய்தருளிய அருட்பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய ஞான இரகசியத்தை உணர்வுடையோர் உணர்ந்து தெளிக!

என்னிதயக் கமலத்தே இருந்தருளுந் தெய்வம்
என்னிரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்
பொன்னடி என் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம்
பொய்யாத தெய்வம்இடர் செய்யாத தெய்வம்
அன்னியம்அல் லாததெய்வம் அறிவான தெய்வம்
அவ்வறிவுக் கறிவாம்என் அன்பான தெய்வம்
சென்னிலையில் செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமே தெய்வம்

(6 ஆம் திருமுறை - பரசிவ நிலை : 4)

எனத் தெளிவாக அறிவே தெய்வம் என்றும் அந்த அறிவுப் பொருளே திருவடியாய் நம்முள் ஜோதியாய் ஒளிர்கிறது என்றும் வள்ளலார் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிவுப்பொருள் என்றும் அழியாதது. ஆக்கப்படாதது; தான்தோன்றி. தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்றும் இதற்கு இல்லை.

அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு
அறைகின்றன மறையீறுகள் தாமே

(திருமந்திரம் : 2358)

என்கிறார் தெய்வத் திருமூலர். அறிவே திருவடி. திருவடியே அறிவு.

பாதத்தின் பொருளை இவ்வாறு உணர்ந்து நினைவில் வைத்துக்கொண்டால் 'திருக்குறளில் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்' என்பதன் உண்மை விளங்கும். குருபிரானின் அறிவு எனும் பாதமாகிய மாணடியுடன் சேர்ந்து இரண்டறக் கலந்து அறிவுரு ஆனால் அழியாமை அடையலாம் என்றும் அழியாத ஞானதேகம் பெற்று நித்திய சுக பூரணப் பெருவாழ்வு என்ற மரணமிலாப் பெருவாழ்வில் வாழலாம் என்பதை உணர வேண்டும். அப்பொழுதுதான் நில அந்நிலமிசை நீடூ காலம் காலா தீதனாக வாழலாம் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். அறிவுடன் சேர்ந்து இரண்டறக் கலந்து ஞானாகாய வடிவம் பெற்று ஒளிவெளிநிலை அடைந்தால் - அங்கு மனம் இல்லாததால், அது மனம் இறந்த பரிசுத்த நிலை ஆதலால் - மனக்கவலையும் இருக்க இடமின்றி இல்லாது ஒழியும் என்ற பேருண்மையைப் புரிந்து கொள்ள முடியும். இந்த நிலை பெறாதவர்கட்கு மனக்கவலை மாற்றல் அரிது என்று திருவள்ளுவர் பெருமான் கூறியருளுகிறார். இறைவன் திருவடி சேர்ந்தால் பிறவாமை பெறலாம். எனவே இறவாமையும் பெறலாம் என்பது தானே போதரும். அறிவுக்கு அழிவில்லை, ஆக்கமும் இல்லை என்பது திருமூலர் பிரான் திருவாக்காகும். பாதம், நம் தேகாதி எல்லாம் சிருஷ்டி - திதிமுதலாகிய ஐந்தொழில் செய்கின்ற சிவமயப்பொருள் ஆகும். சற்குரு பெருமான் நம்மிடம் அதைக் காட்டித் தரப்பெற்று நாம் அதை அறிதலே தன்னை அறிதல் ஆகும்''2 என்னும் உண்மையுரையினை உணர்வுடையோர் உணர்வர். உணர்வு ஒன்றுமிலார்க்கு ஒன்றுமில்லை.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே

(திரும.2335)

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே

(திரும.2611)

எனத் தெய்வத் திருமூலர் தெளிவாகக் கூறியருளியிருக்கிறார். தன்னை அறிவதுதான் அறிவு (திருமந்திரம் : 2318)

தாயின் கருவறையில் பத்துத் திங்களுக்குள் இத்தேகாலயத்தைக் கட்டி முடித்துத் தன்னை உருவாக்கிய உயிரை. தான் என்று உணர்தலே தன்னை அறிதல் ஆகும். தான் உயிர் என்றும் உயிர் சிவம் என்றும் சிவம் அறிவு என்றும் அறிவே திருவடி என்றும் உணர்தல் வேண்டும்.

தானென்ற வழியறியா னிடமுங்காணான்
தன்னுயிரைத் தானென்று போற்றமாட்டான்

வானென்று பொழியுமந்த அமுதம்சாரான்
வாடாத மணிவிளக்கை யறியமாட்டான்
தேனென்ற திரையேழை யறுக்கமாட்டான்
தேகசித்தி மாயசித்தி செய்யமாட்டான்
கோனென்ற குருபாதம் அடுக்கமாட்டான்
கூறுவான் வாய்ப்பேச்சால் ஞானந்தாமே

(சுப்பிரமணியர் ஞானம்: 500 பாடல். 4)

எனப் போலி ஞானியரின் செயல்களை ஆதி குருநாதராகிய முருகப்பெருமான் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். ஆடும்பாதமாகிய குரு பாதத்தை அறிந்தவரே தன்னுயிரைத் தான் என்று போற்ற முடியும் எனத் திட்டவட்டமாக எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி அருளியுள்ளார் முருகப் பெருமான். இப்பௌதிக உடம்பில் நீ யார் என வினவில், நான் ஆன்மா, சிற்றணுப்பசு வடிவினன், இருப்பிடம் லாட ஸ்தானம் என வடலூர் வள்ளற் பிரானும் அருளியிருப்பதை அறிவுடையோர் உணர்க.

திருவடி ஆகிய அதுவே - அறிவாக - அதுவே நற்றிருவாசியாக - அதுவே சிவமயப் பொருளாக, அதுவே பஞ்சாட்சரமாக, அதுவே பரீட்சிக்க ஒண்ணா வித்தாக, அதுவே பிரணவமாக, அதுவே ஜோதியாக, அதுவே வாலறிவனாக, அதுவே நாதவிந்துவாக, அதுவே சிவசக்தியாக, அதுவே எட்டிரண்டாக அமைந்து சுழிமுனையில் அமர்ந்து ஒளிர்ந்து ஒலிக்கிறது. எல்லாம் தானாகி - தானே எல்லாமும் ஆகி அதுவே நிற்கிறது. அது இல்லாத இடம் இல்லை. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாச மாய் ஆனந்த பூர்த்தியாகி எங்கும் நிறைகின்ற பொருளாக அது இருக்கிறது. இது ஆதியும் அந்தமும் அற்றது. அழிவற்றது. இதனை

காண்பதும் அழிந்து போகும் காயமும் அழிந்துபோகும்
ஊண்பொருள் அழிந்துபோகும் உலகமும் அழிந்துபோகும்
பூண்பணி நாகைநாதர் பொற்பாதம் அழியா தென்று
வீண் பொழுதினைப் போக்காமல் வெளிதனில்
ஒளிபார் நெஞ்சே

எனக் கணபதிதாசர் உணர்த்துகிறார். ஞானப்பேறாகிய திருவடிப் பேற்றினை அடைந்த - அறிந்த - உணர்ந்த அருளாளர்கள்,

ஞானமேயாய திருவடி காட்டி
... சத்து ஆகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வமே
தேஜோ மயானந்தமே

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற, மெய்யா

எனப் பலவாறாக உணர்ந்து உணர்ந்து போற்றினர். திருவடியே ஞானம், ஞானமே திருவடி. எல்லாமும், அதுவே. அதுவே எல்லாமும். என் செய்ய இயலும். எல்லாம் உணரத்தக்கதாய் உள்ளது. குருவின் பாதோதகம் ஆகிய திருவசனம் சகல பாவங்களையும் போக்கும். பிறப்பை வேரறுக்கும். இதனை விரிப்பின் பெருகும். நிற்க. ஞானமாகிய திருவடியினைக் குருவருளால் கண்டு களித்தவர் அடையும் பெரும்பேற்றினை

விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகம்
திருந்தில் அவனடி தீர்த்தமும் ஆகும்
வருந்தி அவனடி வாழ்த்தவல் லார்கே (2996)

எனத் திருமூலர்பிரான் உணர்த்துகிறார். இந்த அறிவாகிய திருவடிப்பூவின் வாசனை அண்ட சராசரங்களையும் கடந்து வீசும். எனவேதான் திருவடியினைக் குறிப்பிடும் பெரியோர்கள் திருவடிக்கமலம், திருவடித்தாமரை, மலர்மிசை ஏகிய மாணடி என்றெல்லாம் குறிப்பிட்டுப் போற்றினார்கள். ஆசைக்கடலில் அகப்பட்டு எமன்கையில் சிக்கி அல்லல்பட இருந்த தன்னைப் பாதத்தின் மூலம் காப்பாற்றியதாக அபிராமிபட்டர் அருளிச் செய்கிறார்.

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கை
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை நின் பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலிய வைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்? ஈசர் பாகத்து நேரிழையே

- அபிராமி அந்தாதி : 32

தனக்குக் குருவாகவும் தெய்வமாகவும் அமைந்த அபிராமி அம்மையை நோக்கி நேர்முகத்தில் பாடியது இத்திருப்பாடல். பாதமென்னும் வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்ட தெய்வத்தின் திருவருளை - தனிப்பெருங் கருணையை நினைந்து நினைந்து உருகுகிறார் அபிராமி பட்டர். வாசக்கமலமாகிய ஞானப் பூவாகிய இந்தத் திருவடியே ஒருவரை மறலி கை தீண்டா சாலையில் குடியேற்றி வைக்கும்.

அழுது அடிஅடைந்த அடியாராகிய மாணிக்க வாசகர் தமக்குக் குருபிரான் கருணையோடு காட்டிக்கொடுத்த சிவத்தையும், சிவம் வீற்றிருக்கும் பரமகயிலாய மென்னும் பேரின்ப வீட்டினையும் அங்க சிவமாக நின்றொளிரும் திருவடித் தாமரையினையும் பின்வருமாறு உருகி உணர்ந்து உரைத்துள்ளார்.

காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவம்காட்டித்
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆள்தான்கொண் டாண்டவா பாடுதுங்காண்
அம்மானாய்

- திருவம்மானை : 6:3-6

மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தின் முத்தி முகப்பாக ஒளிவீசுகின்ற சிவபுராணத்தின் முதல் பதினைந்து அடிகளும் திருவடியின் பெருமையை வாழ்த்தி - போற்றி உரைக்கின்றேன். நமச்சிவாயப் பொருளாகவும் நாதனாகவும், இமைப்பொழுதும் தம் நெஞ்சத்தைவிட்டு நீங்காமல் நின்றொளிரும் திருவடியினை மணிவாசகப்பெருமான் போற்றித் துதிப்பதை உணர்வுடையார் உணர்ந்து உய்தி பெறுக.

நமச்சியவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்விக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபேற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

- சிவபுராணம் : 1-15

மாயப் பிறப்பறுக்கும் வல்லபம் திருவடி ஞானத்திற்கே உண்டு. அஃது இருதயகமல மாகிய செந்தாமரை மலர் மேல் மண்தீண்டாப் பாதமாய் செம்பொன் நிறத்ததாய் ஒளிர்ந்து அண்டத்தையும் பிண்டத்தையும் ஆள்கிறது. அதுவே பேறறிவாய் பெரும்பொருளாய் எங்கும் நீக்கமற நிறைந்த பூரணமாய் வெளியாய் விளங்கித் துவங்குகிறது.

இறுதியாக ஒரு சொல்

தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள் கடவுள் வாழ்த்தில் ''மாணடி சேர்தல், தாள் சேர்தல், இறைவனடி சேர்தல் என்ற சொற்றொடர்களின் பொருளை ஆழ்ந்து சிந்தித்து உணர்தல் வேண்டும். சேர்தல்3 என்றால் ஒன்று சேர்தல், ஒன்றாகுதல், பாலுடன் நீர் சேர்தல்போல இரண்டறக் கலத்தல் எனப் பொருள் பெறும். நற்றாள், மாணடி, இறை வனடி என்று திருவள்ளுவர் பெருமான் குறிப் பிட்டுள்ளது பூரணமாய் நிறைந்த பராபரத்தின் பாதத்தையே ஆகும். தூல உடலின் கால்களை அல்ல''4 என்பதை உணர்வுடையோர் உணர்ந்து உய்தி பெறுக. திருவடி தீட்சை என்பது இந்தத் தூல உடலின் கால்களைத் தூக்கி இன்னொருவர் தலையில் வைப்பது அன்று. மெய்க்குரு பிரானின் ஞானமாகிய திருவடியிலிருந்து பொங்கிவரும் ஞான கங்கையாகிய - அருளமுதமாகிய - வானமுதமாகிய - திருவாய் மொழியாகிய - திருவாசகமாகிய - திரு வசனத்தை இருசெவி வழியாக உண்ணுதலே. அறிவுருவாகிய குருபிரானின் அறிவாகிய ஞானத்தீ சீடனின் இருசெவி வழியாக உள்ளே சென்று சீடனையும் அறிவுருவாக மாற்றிவிடும் இரசவாதமே திருவடிதீட்சை. என்னையும் நின்னையும் ஒருருவாக்கி - யான் உன்னிய படியெலாஞ் சீருறச் செய்து - உயிர்த் திறம்பெற அழியா அருளமுது அளித்தனை - அருள்நிலை ஏற்றினை - அருளறிவு அளித்தனை (அகவல் 1570 - 1574) எனத் தன் குருபரனை வடலூர் வள்ளற்பிரான் போற்றித் துதிப்பதை உணர்வுடையார் உணர்க. எனவே அறிவே திருவடி; திருவடியே அறிவு. அறிவே தெய்வம்; தெய்வமே திருவடி.

1. முருகப் பெருமான். அகஸ்திய மஹாமுனிவருக்கு உபதேசித்தருளிய யோக ஞானம் 500, பக்.148
2. மேற்படி நூல் பக்.155
3. சேர்தல் என்பதற்கு இடைவிடாது நினைத்தல் என்பர் பரிமேலழகர்.
4. மேற்படி நூல் பக்.150

★

சரித்திரம் படைக்கும் சாதனைச் செம்மல்

'தமிழ்த்தென்றல்' ஏ.பி. மருதழகன், மலேசியா

'பொன் மகன் வந்தான் பொருள் கோடி தந்தான்!''

உலகில் மனிதர்கள் பிறக்கின்றார்கள்; இறக்கின்றார்கள். இதில் ஒன்று புதுமையல்ல. ஆனால் வாழும் காலத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதில்தான் புதுமையும் புரட்சியும் உள்ளது.

உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் சிறப்பான மனிதர்கள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலரே தலைவர்கள் என்று வர்ணிக்கப்படுகிறார்கள். அந்த தலைவர்களிலும் மிகச் சிலரே மக்களைக் கவர்ந்தவர்களாகப் புகழப்படுகிறார்கள்;

''தோன்றின் புகழோடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

என்று வள்ளுவன் சொன்னது போல அந்த வரிசையில் மலேசியாவில் ம.இ.காவின் தேசியத் தலைவரும், பொதுப்பணி அமைச்சருமான டாக்டர் 'கலைஞர்' மாண்புமிகு டத்தோ சாமிவேலு அவர்களும் ஒருவராகத் திகழ்கிறார்.

மக்களின் மனமறிந்து தொண்டு செய்யும் தொண்டன் அவர். தலைவர் என்று மக்கள் சொல்கிறார்கள். ஆனால், அந்தத் தலைவர் இன்றுவரை ஒரு தொண்டனாகவே கருதி வருகின்றார்; அதுதான் அவரது வெற்றிகளுக்கு அடித்தளம். தலைவர் என்பது மக்களின் அங்கீகாரம், தொண்டு என்பது இறைவனின் கட்டளை!

பிறத்தல், இறத்தல் இந்த இடைப்பட்ட காலத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் இறைவனின் கணக்கெடுப்பு!

இந்த பூமியில் மனிதனை இறைவன் படைக்கும்போதே கடமைகளையும் கொடுத்தே அனுப்புகின்றான். அதை சரியாக செய்கிறானா இல்லையா என்பதையும் அவன் கவனித்தே வருகின்றான்.

சிலருக்கு வசதிகளை பெருக்கிக் கொள்ள வேண்டும். இது அவர்களுக்கு கிடைக்கும்



வாய்ப்பு. இன்னும் சிலருக்கு வசதியே இல்லாத வாழ்க்கை! இருப்பவன் இல்லாதவனுக்கு கொடுக்க வேண்டும். இறைவன் கட்டளை, இதை மறப்பவன் மன்னிக்கப்படுவதே இல்லை. 'கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்' என்று நினைத்த மாத்திரத்தில் வாரி வழங்குபவனே வள்ளல். அத்தகைய மனிதர்கள்தான் உலகத்தில் போற்றப்பட வேண்டும்!.

1980 க்குப் பிறகு அபூர்வமாய் மலேசிய இந்தியர்களின் ஒப்பற்ற தலைவராய் ம.இ.கா.வின் தேசிய தலைவராய் நமக்கெல்லாம் டத்தோஸ்ரீ சாமிவேலு கிடைத்துள்ளார்.

பதவி என்பது சிலருக்கு அலங்காரம், இன்னும் சிலருக்கு ஆடம்பரம், இன்னும் ஒரு சிலருக்கு அது உதவியாய் அமைகிறது. என்னதான் திறமை இருந்தாலும் இருக்கும் இடம் பொறுப்பான இடமாக அமையா விட்டால் அவர்களால் ஒன்றுமே செய்ய இயலாது மலேசியாவில் ம.இ.கா, டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்களுக்கு அந்தப் பொருத்தமான இடத்தைச் சரியான காலக் கட்டத்தில் அமர்த்திக் கொண்டது!

மலேசியாவில் - நமக்கெல்லாம் நன்றாகவே தெரியும்! நாடு சுதந்திரம் பெறாத காலத்திலேயே அம்னோ, ம.சீ.ச. மற்றும் ம.இ.காவும் தான் இந்த மூன்று சமூகத்தையும் கட்டிக் காத்து - அன்றும் இன்றும் வழி நடத்தி வந்துள்ளது!

எத்தனை தலைவர்கள் வேண்டுமானாலும் வரலாம், போகலாம்! இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் அவர்கள், அவர்களுடைய காலத்தில் இந்தச் சமூகத்திற்கு என்ன செய்துவிட்டு போகிறார்கள் என்பதே மிக மிக முக்கியம்.

''இறைகாக்கும் வையகம் எல்லாம் - அவனை முறைகாக்கும் முட்டாச் செயின்'' என்று வள்ளுவன் சொல்வது போல.

மன்னவன் வையமனைத்தையுங் காப்பான்; செங்கோல் முறையைத் தடை நேரிடாமல் செலுத்தினால் அவனை அது பாதுகாக்கும்.

இந்தச் சமுதாயம் உயர்வடைய வேண்டும் என்று அல்லும் பகலும் பாடுபடும் இந்தத் தலைவனுக்கு மக்களே பாதுகாப்பு. நல்லதைச் செய்ய வேண்டும் என்று நாளும் நினைக்கும் டத்தோஸ்ரீ சாமிவேலு நீடுழி வாழ்க.

''நான் நினைத்ததை செய்து முடிக்கும் வரை ஓய மாட்டேன். நான் எழுந்து புறப்பட்டு விட்டேன். எனக்கென்று ஒரு குறிக்கோள் உண்டு! என் நடைபாதையில் எத்தனைத் தடங்கல்கள் வந்தாலும் தயங்கப் போவதில்லை. எனது காரியங்களை நான் செய்து முடிப்பேன். இடையில் யாராலும் என்னைத் தடுத்து நிறுத்தவே முடியாது. ஆனால், ஒருவன் மட்டும் நினைத்தால் என்னைத் தடுத்து நிறுத்த முடியும்? அந்த ஒருவன் யார் தெரியுமா? மேலே இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்றானே அவன் தான்!'' இது டத்தோஸ்ரீயின் சிம்மக் குரல்தான். கடந்தாண்டு சித்தியவானில் நடந்த ஒரு நூல் வெளியீட்டின் போது அவர் பேசிய மணித்துளிகள் தாம் அவை!

மலேசிய நாட்டின் இந்திய சமுதாயத்தின் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையே, அவர் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிக்கும் வெற்றிப் பாதைகளாக அமைகிறது.

இன்றைக்கு உலக நாடுகளில் மலேசியாவில் மட்டுமே பல இனங்கள் - பல மொழிகள் என்ற ரீதியில்; ஆனாலும் அரசியல், அரசு என்று போகும்போது ஒன்றுபட்ட மலேசியர்களாக சுபிட்சமாக வாழுகின்றோம். இதற்கு காரணம் நாம் அன்றும் இன்றும் தெளிவாகவே இருக்கின்றோம்.

சற்று குறைவான புரிந்துணர்வு என்பது மனிதர்களிடையே இயற்கை! ஆனாலும் அது நிரந்தரமல்ல. மலேசிய இந்தியர்களாக அனைவரும் ஒன்றாக வாழுகின்றோம் என்ற நம்பிக்கை எல்லோருக்குமே உண்டு.

அரசுடன் இணைந்து 'ஒன்று பட்ட மலேசியர்கள்' என்ற தூய சமூகமாக வாழ அன்று முதல் இன்று வரை ம.இ.கா. போராடியே வருகிறது. இது மறுப்பதற்கில்லை.

'அரசு' என்பது நமது தாய். அந்த தாயிடம் கூட நாம் நமது உரிமைகளைப் போராடித்தான் பெற வேண்டும்.

ஒவ்வொரு காலக் கட்டத்திலுலும் நமது தலைவர்கள் அவரவர் சக்திக்கு ஏற்றபடி போராடியே வந்துள்ளனர். இருப்பினும்;

கடந்த இருபது ஆண்டுகளில் நமது இன்றைய தலைவர் டத்தோஸ்ரீ அவர்களின் சாதனை மகத்தானது இல்லையா?

மலேசிய இந்தியர்கள் ஏழைகள் இல்லை என்று நிரூபித்தவரே இன்றைய நமது ம.இ.கா. தேசிய தலைவர் தானே! வெள்ளி 11 கோடி பணத்தைச் சேர்த்து 'மைக்கா' நிறுவனத்தை வெற்றி கரமாக உருவாக்கினாரே!

ஏழை இந்திய சமூகத்தினர்க்கு சொந்த வீட்டுடமைத் திட்டம் வர வேண்டும் என்று நினைத்துதானே 'தொழிலாளர்கள் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம்' அமைக்கப்பட்டது.

நமது பிள்ளைகளின் எதிர் கால கல்விக்காக உருவாக்கப்பட்டதுதானே ம.இ.கா. உதவி கல்வி நிதித் திட்டம்.

நாட்டிலுள்ள பிற சமூகங்கள் தங்களின் பிள்ளைகளை உயர் கல்விக் கூடங்களுக்கு அனுப்பும் போது, நாம் விரல் சூப்பிக் கொண்டிருப்பதைக் கண்டு, மனம் நொந்துப்போன இந்த டத்தோஸ்ரீ அவர்கள் தானே சிரம்பானில் 'டேஃப்' கல்லூரியைக் கட்டினார். இன்று ஆயிரக் கணக்கில் நாடெங்கும் இளம் தொழில்நுட்பக் கலைஞர்கள் மாதம் ஆயிரம் வெள்ளிக்குமேல் சம்பளம் பெற்று கௌரவமாக வாழ வழி வகுக்கப்பட்டுள்ளதே!

இதன் அடிப்படையில் மற்றொன்று! நிபோங் திபால், கிறியான் ரோடில் விரைவில்

கைத்தொழில் நிலையம் ஒன்றும் ஆரம்பமாகப் போகிறது! தென்னிந்திய தொழிலாளர்களின் சேம நிதியை நல்ல காரியத்திற்கு பயன்படுத்திய பெருமை நமது இன்றைய ம.இ.கா. தேசியத் தலைவரான டத்தோஸ்ரீ சாமிவேலுவைத் தானே போய்ச் சேர வேண்டும்.

இதோ இன்னொரு இமாலய சாதனை! கெடாவில் விரைவில் செயல்படவிருக்கும் ம.இ.கா.வின் இலட்சிய இலக்கு! மருத்துவக் கல்லூரி! இது மாத்திரமா...

கடந்த நூறு வருடங்களாக தோட்டங்களையே நம்பி வாழ்ந்து வரும் நமது முன்னோர்களின் கனவுகள் இப்போதுதானே நினைவுகளாக மாறி நிஜமாகிப் போனது. அது மட்டுமா! அவர்களுக்கு சொந்த வீடுகள் கட்டிக் கொள்ள இருபதாயிரம் வெள்ளி கடனாக கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு குரல் ஒலித்ததே... அந்தக் குரலுக்கு சொந்தமான டத்தோஸ்ரீயை இன்று... நாம் மகிழ்ச்சியோடு வாழ்த்த வேண்டாமா!

''புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் - செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையும் இல்''

வள்ளுவன் சொல்லியிருக்கின்றானே!

நல்லதை யார் செய்தாலென்ன, போற்றிப் புகழ் பாடுவதில் தவறே இல்லை.

'உதவி' என்று ஓடிவரும் இந்த ஏழை எளியவர்க்கு ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற மனம் டத்தோஸ்ரீ அவர்களிடம் இருப்பதால்தான், மக்கள் தினமும் அவரை நாடி ஓடி வருகின்றார்கள்.

ஒரு சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமெனில் கல்விக்கு முக்கியத்துவம் அவசியமாகிறது. சிறப்பான தேர்வுகளை கையில் வைத்து கொண்டு மடியில் பணமில்லாமல் கண்ணீர்விடும் ஏராளமான மாணவ - மாணவிகளுக்கு ம.இ.கா.வின் பெயரால் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் கல்வி உபகார நிதியாக பல லட்சம் வெள்ளியை வாரி வழங்கி வந்துள்ளார்கள். கல்விக்காக கடனுதவி என்று வரும்போது முகத்தைக் கூட பார்க்காமல் பாரபட்சமில்லாமல் உதவி செய்து வந்துள்ளார். பயன்பெற்றவர் அறிவர்.

தம்முடைய பால பருவத்தில் டத்தோஸ்ரீ, படிப்பிற்காக எத்தனை இன்னல்களை அனுபவித்துள்ளார். 'தாம் பெற்ற அந்த இன்னல்களை மற்றவர்களும் அனுபவிக்கக்கூடாது' என்ற எண்ணம் எப்போதுமே அவரிடம் இருக்கின்றது.

''காக்கை கரவா கரைந்துண்ணும், ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள.''

பார்த்தீர்களா வள்ளுவன் எத்தனை அழகாக - அர்த்தத்துடன் சொல்லியிருக்கின்றான்.

காகங்கள் இரையைக் கண்டதும் மறைக்காமல் உடனே தன் இனத்தையும் அழைக்குமாம். அழைத்து மொத்தமாக கூடி உண்ணுமாம். செல்வர்களும் அத்தகைய இயல்பினர்க்கே உள்ளனவாகும் என்று வள்ளுவன் கூறும் அந்த பொருள் இன்று இன்றைய நமது தேசிய தலைவர் டத்தோஸ்ரீ அவர்களுக்கு எத்தனைப் பொருத்தம் பார்த்தீர்களா!

''அவரால் முடிகிறது... அதற்கான மன வலிமையும் இருக்கிறது. அவரையே போய் பார்த்து விடுவோம்!'' என்று பலர் நம்பிக்கையோடு போகிறார்கள் மன நிறைவோடும் திரும்புகிறார்கள்.

போகும் நூறு நபர்களில் இருவர் தோல்வியுடன் திரும்பினால் அதற்கும் சரியான காரணம் இருக்கவே செய்யும். மீண்டும் மீண்டும் சோர்வடையாமல் அவரைச் சந்தித்தால் நிச்சயமாக அவர்களாலும் வெற்றி பெற முடியும்!

தெளிவான சிந்தனை - கூர்மையான அவரது பார்வை - நேர்மையான பேச்சு - செயல்- மிகவும் உதவி செய்யும் மனம் இவையனைத்தும் ஒரு சிறந்த தலைவனை நமக்கு அடையாளம் காட்டுகிறது. நீண்ட ஆயுளுடன் இதுபோன்று பல்லாண்டுகள் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி டத்தோஸ்ரீ அவர்களை வாழ்த்துவோமாக! ★

பெண்மை

ம. பகவதியப்பன்

பெண்மை வாழ்கவென பேரிகை கொட்டி
பேதம் எண்ணா அறத்தினுள் நின்று
கண்ணுள் ஒளியென வாழ்வினில் என்றும்
கலந்து மகிழ்ந்து களிப்பவள் அந்த
பெண்ணினம் அன்றோ மறுப்பவர் உண்டோ?
பேசரும் வாழ்வில் மாசிலா நிலையில்
எண்ணும் எண்ணத்திரங்கிடும் பெண்மை
என்றும் அறிவுடன் வாழ்ந்திடல் வேண்டும்.

(வேறு)

வயல்மேல் நாற்றங்கால் வளப்படுத்தி வைப்போம்
வளருகின்ற நெற்பயிரும் வளனோடு வளர்ந்து
பயன்மிகவே தருதலன்ன பாங்காக சமுதாயத்தில்
பாவையர் குலம்ஒரு நாற்றங்கால் ஆகும்.
நயமிக்க அறிவென்னும் நல்வளம் கொடுத்தால்
நன்மக்களாம் உறுபயனை நாட்டகத்தில் தருவர்
செயற்கரிய செயல்பலவும் செய்திட்ட மகளிர்
சிறப்புறவே தொண்டாற்றி காத்திடுவோம் உண்மை.

மலரில் மணத்தை பிரித்திடல் ஆமோ
மணியுள் ஒலிகை பகுத்திடல் ஆமோ
கலையாம் கன்னித் தமிழ்தரு சுவையை
கவிதை தன்னில் அழித்திடல் ஆமோ
உலகில் இதுபோல் பெண்மையும் அன்பும்
ஒன்றிற் கொன்று பிரித்தல் இயலா
தவத்தில் பெண்மை தவநெறி பெரிதாம்
தக்கார் இதனை மறுத்திடல் அரிதாம்.

பெண்களுக் குண்டு விடுதலை என்றே
பேசரும் நீதி உணர்ந்திடல் வேண்டும்
கண்ணென வாழ்வில் கலந்துமே வாழ்ந்திடும்
காரிகை என்பாள் அறத்தின் உயிராம்
எண்ணியே இதனைப் போற்றியே வாழ்வோம்
என்றுமே இதனை மறந்திடல் வேண்டாம்
பண்புடன் அன்பும் பாங்குற அறமும்
பாவையர்க் குரித்தாம் பெண்மை நீ வாழ்க!

அறிவு படைத்த உயிரில் ஒன்றை
அடிமை என்றிடல் அறிவின் அழகோ
நெறிகள் யாவினும் மேம்பட்ட வாழ்வே
நேர்மை கொண்ட நேரிழை வாழ்வாம்
சிறிய சிந்தனை தீய நினைவுகள்
தீயிலிட்டு பொசுக்கிடல் வேண்டும்
நெறிய மென்மலர் நங்கையர் வாழ்வு
நலம்பெற என்றும் உழைத்திடல் வேண்டும்.

ஆணுடன் பெண்ணும் சமமெனக் கொண்டால்
அறிவுஅது ஓங்கி வையம் தழைக்கும்
பூணும் நல்லறம் அன்பின் உருவாம்
பூவையர் என்றும் வாழ்ந்திடல் வேண்டும்
காணும் நற்குண காரிகை அன்பால்
கவலைகள் ஓடி மறைந்திடும் காணீர்
பேணும் தெய்வ சக்தியே ஒன்று
பெண்மை தன்மை போற்றிடல் வேண்டும்.

உயிரினைக் காப்பதும் உயிரினைச் சேர்ப்பது
உயிர்க்குயிராய் உறவினில் கலப்பதும்
அயர்வைப் போக்கி அல்லும் பகலும்
அரிய தியாகம் பெண்மையில் தன்மை
கயமை குணத்தினில் பெண்ணினை அடிமையாய்
கருதிடல் மாபெரும் கசடது ஆகும்.
உயிரினும் இந்த பெண்மை பெரிதாம்
உண்மை இதனை உயர்ந்திடுவீரே!

பெண்மையே வெல்க! பெண்மையே வாழ்க!
பெண்மை மாபெரும் சக்தியே என்னும்
எண்ணம் உயர்க! இழிநிலை அழிக!
எங்கணும் பெண்மை சக்தியே காண்க!
வண்ண மலரின் மென்மையின் மென்மை
வனிதையர் உள்ளம் வாழ்வினில் அறிக!
பெண்மை சமூக வாழ்வில் உயிராம்
பெண்மையின் பெருமை பேசுதல் எளிதோ!

பார்க்கும் இடம் எல்லாம் பெண்மையின் ஏற்றம்
பயனுற வேண்டும் சமூக மாற்றம்
ஆர்க்கும் சிலம்பது அரிவையர் அறிவு
அரும்பெரும் தியாகம் பெண்மையின் நிறைவு
சீர்த்த மதியுடன் நாற்பெரும் செயல்கள்
சேயிழை வாழ்வில் திரும்பிடா நிலைகள்
வார்த்தை கொண்டு நான் பெண்மையை போற்றனும்
வாழிய பெண்மை வாழிய என்றே!
''அன்பிற்கும் அறத்திற்கும் வாழ்வே ஆசிடி
அறிவோடு அருள்தன் வடிவே கொண்டு
இன்பத்தின் நிலையாக கற்பைப் பூண்டு
எழிலுருவாய் தோன்றிதே பெண்மை ஆகும்''
வையத்தை வளமுறவே வாழ வைப்பாள்
வாழ்வினிலே சுயநலத்தை எண்ணா உள்ளம்
துய்யநெறி நல்லறிவு தியாக நெஞ்சம்
தாய்க்குலத்தில் உயிராகும் அறிவீர் உண்மை

தாயன்பே உலகத்தில் சிறந்த அன்பு
தன்னலத்தை நினையாத தூயஅன்பு
நேயமுற குடும்பத்தின் சுமையைத் தாங்கி
நிலைத்திடுவாள் பொறுமைக்கு எல்லை ஆவாள்
பெண்மைதான் சமுதாய உயிராம் அறிவர்
படுபெறும் நல்வாழ்வை தருவாள் இங்கே
கண்ணெனவே வாழ்விற்கு ஆவாள் தெரிவீர்!
கருதியே போற்றிடுவோம் பெண்மை வாழ்க!

★

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம்

முனைவர் கடவூர் மணிமாறன்



திருவள்ளுவர் தலைசிறந்த மெய்ப்பொருள் அறிஞர். வாழ்வியல் உண்மைகளை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி வகுத்தும் தொகுத்தும் எடுத்துரைத்தவர். ஒவ்வொன்றையும் ஆய்ந்தும் உணர்ந்தும் அறிந்தும் தெளிந்தும் உரைத்த முதிர்ந்த சிந்தனையாளர். அவர்தம் சிந்தனைக்கு எட்டாதது எதுவும் இருக்க இயலாது. எனினும் அத்தகு பேரறிஞரே ஒரு முடிவையும் கூறாது, அய்யத்தற்குரிய செய்தியாம் என்று சிலவற்றைக் கூறிச் செல்கிறார். அவற்றுள் ஒன்றே 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும்' என்னும் குறளாகும்.

அறத்துப்பாலில் பதினேழாம் அதிகாரமாகிய அழுக்காறாமையில் 169 ஆம் குறளாக இடம் பெற்றுள்ள இக்குறள் சமூக முரண்பாடுகளை எதிரொலிப்பதால் உள்ளது. உலகப் பொதுமறை என்னும், வாழ்க்கைச் சட்ட நூல் என்றும், எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டவர்க்கும் எல்லா மொழியினர்க்கும் ஏற்புடைய அறநூல் என்றும் அறிஞருலகம் இதனை ஒப்புக்கொள்கிறது. இத்தகு பெருமைக்குரிய வள்ளுவம் சிந்தனைத் திறவுகோலாய் அமைந்து அறிவுக் கண்களைத் திறக்க வழிகோலுகிறது. அனைத்துக்கும் தெளிவான விடை அளிக்கின்றது.

அதிகார வைப்பு

பிறர் நமக்குச் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யாமல் இருத்தலாகிய பொறாமையுடைமை அதிகாரத்தின் பின்னர் அழுக்காறாமையை வைத்துள்ளதன் நோக்கு ஈண்டு சுட்டத்தக்கது. அழுக்காறாமை அதிகாரத்தின் பின்னர், பிறருக்கு உரிமையான பொருளை எப்படியாவது தான் அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு விடாமல் இருத்தலாகிய வெஃகாமையை வைத்துள்ளமையும் நோக்கத்தக்கது. குற்றமின்றி வாழ்தல் வேண்டும் என்னும் அறக்கருத்தினை நிலை நாட்டவே முன்னும் பின்னும் பொறையுடைமையையும், வெஃகாமையையும் வைத்து இடையே அழுக்காறாமையை வைத்துப் பொறாமையால் வரும் கேடுகளையும், தீங்குகளையும் புலப்படுத்துகின்றார் வள்ளுவர்.

நாமக்கல்லார் உரை

திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளோர் பலர். பெரும்பாலும் எல்லோருமே பொறாமையுடைய கொடியவன் செல்வ வளம் மிக்கவனாகவும், பொறாமைக் குணமற்ற சீரிய பண்பினன் வறுமையில் உழல்பவனாகவும் இருப்பது ஆய்ந்து பார்க்கவேண்டிய ஒன்றாகும் என்றே பொதுவாக உரை எழுதியுள்ளனர். பொறாமை மனமுடையோனிடம் திருமகள் வாழாள். மூதேவியே இருப்பாள். அவனின் செல்வம் சிதைந்து அவன் தீமையுறுவான் என்பது பட்டறிவுக்குப் பொருந்துவதாய் இல்லை. பொறாமைக் குணமுடையோர் பலர் செல்வச் செழிப்பிலும், பொறாமைக்குணம் அற்றோர் ஏழைகளாய்த் துன்புறுவதையும் உலகில் கண்கூடாகப் பார்க்கிறோம் எனினும் இது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இதை ஆய்ந்து பார்ப்போம் என்று குறிப்பிடும் நாமக்கல்லார் இதற்கு அடுத்த குறள்வழி பொறாமைக் குணத்தால் நன்மைகள் வாரா. தீமைகளே உண்டாகும் என உறுதிபட உரைக்கின்றார்.

பாவாணர் உரை

அவ்விய நெஞ்சத்தானின் ஆக்கமும் செவ்வியான் கேடும் எக்கரணியம் பற்றி நேர்ந்தன என்று அறியப்படும். இரு நிலைமையும் இயற்கைக்கும் அறநூற்கொள்கைக்கும் மாறாயிருப்பதால் அவற்றிற்குக் கரணியம் பழவினையே என்பது ஆராய்ச்சியால் அறியப்படும் என மொழி நூல் அறிஞர் தேவநேயப்பாவாணர் குறிப்பிடுகின்றார். இதனை உறுதி செய்திட

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
யும்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்து"

(சிலம்பு)

என்னும் மாடலன் கூற்றும்,

''என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வம்,
உன் செயலே என்றுணரப் பெற்றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே''

என்னும் பட்டினத்தார் திருவாக்கு துணைபுரி கின்றன என்று மேலும் பாவாணர் சுட்டு கின்றார்.

''ஊழ்வினை உறுத்துவந்துஊட்டும்'' என இளங்கோவடிகளும் ஊழ்வினையின் வலிமையை உணர்த்துகின்றார். அதனையே இற்றை வாழ்வில் பலரும் 'விதிப்பயன்' என்று கூறுவதை அன்றாடம் கேட்க முடிகின்றது. 'ஊழிற் பெருவலியாஉள' என்பதை உணரார் எவரும் இவர் எனலாம்.

மாந்தன் மாந்தனாக வாழவேண்டும் என்று நோக்கினர் திருவள்ளுவர். தீய இயல்புகளில் இருந்து ஒருவன் விடுபட்டு நல்லவனாக வாழ வேண்டும் என்பதே அவரின் அவா. அதற்குரிய நெறிமுறைகளையே தம் நூலில் வகுத்தளித்தார். அழுக்காற்றைப்பாவி என உருவகப்படுத்தும் திருவள்ளுவர் அக் கொடிய அழுக்காறானது செல்வத்தை அழிப்ப தோடு ஒருவரை நரகத்திலும் கொண்டு சேர்க் கும் என்கிறார். அறிவு, ஆற்றல், உடல்நலம், மனநலம் முதலியவற்றால் வேறுபட்ட பல நிலைகளில் உள்ள மக்களைக் கருத்தில்கொண்டு பலநிலை அறத்தினை அவர் அறிவுறுத்தியுள்ள அழகு குறிப்பிடத்தக்கது.

சமூக முரண்பாடு

நல்லோர் செல்வ வளத்துடன் வாழ்வதும் தீயோர் வறுமையில் நலிவதும் இயற்கையாய் இருத்தல் வேண்டும். மாறாகப் பொறாமை யுடையவன் செல்வத்தில் புரளவும், உயரிய குணமுடையோன் வறுமையில் வாடவும் வாய்ப்புடைய சமூக முரண்பாட்டை இக்குறள் எடுத்து மொழிகிறது. இக்காலச் சூழல் பெரிதும் மாறுபட்ட தன்மைத்து. உழைப்பே இல்லா தவன் மாளிகையிலும் உழைத்து உருக்குலைந்து ஓடாகிப் போனவன் ஓலைக் குடிசையில் ஒண்டிக் கிடப்பதும் முரண்பாடான்றோ? இதனையே பாவலன் ஒருவன் நடப்பியலைப் படம் பிடித்துக் காட்டும் வகையில்

''தர்மம் உறங்கும் தாழம்பாயில்
பாவம் நடைபெறும் பஞ்சுமெத்தையில்''

என்கிறான். இன்றைய சமூக அவலமோ மிக்க கொடிது. காணும் இடமெங்கும் கயமை களின் அணிவகுப்பு. கொடுமைகளின் ஊர்வலங் கள். அநீதிகளின் ஆர்ப்பரிப்புகள். இவற்றைக் கண்டு கொதிக்கும் பாவலன்,

செல்லரித்த ஏட்டைப்போல் இருக்கும் இந்தச்
சீர்கெட்ட சமுதாய வீதி எங்கும்
புல்வர்களின் நடமாட்டம்; வயிற்றுக்காகப்
பொய்பேசி வாழ்கின்ற கூட்டம், வாழ்வில்
கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சி உண்ணக்
கற்றோமோ எனப் புலம்பும் ஏழை மக்கள்

என் ஏழைகளில் கையாலாகாத் தனத்தை யும், பொய்பேசி வாழும் புலவர்களில் ஆளுமையையும் கண்டு பொங்கி எழுகின்றான்.

இதனையே புரட்சிப் பாவலர் பாரதி தாசனும் ''கொலை வாளினை எடடா! மிகு கொடியோர் செயல் அறவே'' எனப்போர்ப்பண் இசைக்கின்றார். மேலும் ''பொத்தல் இலைக் கலமானார் ஏழைமக்கள்; புனலால் நிறைந்த தொட்டியைப் போல் ஆனார் செல்வர் என்றும் மனம் குமுறுகின்றார். பிரிதோரிடத்தில்,

அதிகரித்த செல்வமெல்லாம் தொகை தொகையாய்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம் போய் ஏறிக்கொண்டு
சதிராடு தேவடியான்போய் ஆடிற்று
தரித்திரரோ புழுப்போலத் துடிக்கின் றார்கள்''

சமன்மை நோக்கு

ஏழை, செல்வர் என்ற வேறுபாடு நீங்கவும், ஏழைகள் வாழ்வு, ஓங்கவும் குரல் கொடுக்கும் பாரதிதாசன்

''ஓடப்ப ராயிருக்கும் ஏழை மக்கள்
உயரப்பர் ஆகிவிட்டால் ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒடப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ.1''

என்று புரட்சிக்கு வித்திடுவதோடு பொதுவுடை மைக் கோட்பாட்டுக்கு உரமூட்டுகின்றார்.

ஆக்கம் நல்லவரிடத்தே இருக்குமாயின் அது ஊருணி நீர் நிறைந்தது போலவும் பயன் மரம் உள்ளூரில் பழுத்துப் பிறர்க்குப் பயன் படுவது போலவும், மருந்து மரம் போலவும்,

அனைவருக்கும் பயன்படும் பெற்றியைச் சிறப்பித்துக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

அவ்விய நெஞ்சத்தான் அறவாழ்வினன் அல்லன். மாந்தப் பண்புகளுக்கு மாறாக நடப்பவன். பிறரை மதியாதவன். மன்னுயிர்க்கு இன்பம் செய்திடும் மனநலம் இல்லாதவன். ஈதலோ, இசைபட வாழ்தலோ அவனின் குறிக்கோளாக இருப்பதில்லை. எனவே, உயிருக்குரிய ஊதியத்தை ஒருக்காலும் பெற இயலாது. இதனை,

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

என்னும் குறள்வழி அறியலாம்.

ஆன்றோர் சிந்தனை

மேலும் ஒருவன் பொருளைச் சேர்த்து வைப்பதன் நோக்கமே ஒன்றும் இல்லாத வறியவனின் பசிப்பிணியைத் தீர்க்கவேயாம் என்ற வள்ளுவரின் அறச்சிந்தனையினின்றும் அவ்விய நெஞ்சத்தான் விலகிச் செல்வான். அற்றார் அழிபசி போக்குதலை ஒரு பொட்டாக எண்ணான். யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையம், ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் வேறொன்றறியேன் பராபரமே'' என்ற ஆன்றோர்களின் பொதுமை யுணர்வு அவ்விய நெஞ்சத்தானுக்கு (ஒரு போதும் புலப்படாது; புரியாது.

வாழ்வின் முதன்மையான குறிக்கோளே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலாம். தமக்காக மட்டுமே வாழ்வது வாழ்வன்று. பிறருக்காகவும் வாழ்வதே பெருமைக்குரிய வாழ்க்கை. அத்தகு நற்குணங்களை உடையவர் வாழும் நிலமே நன்னிலமாகப் போற்றப்படும். இதனை,

''எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே''

என்னும் ஔவையாரில் புறநானூற்றுப் பாடல் உயர்த்துகின்றது. அன்பு, அருள், அடக்கம், அறம், அறிவு மாந்தநேயம் இன்னோரன்ன பிறபண்புகள் அன்னிய நெஞ்சத்தானிடம் இருக்காது. மாறாகப் பகையுணர்வு இழிந்தன புரிதல், பிறர்க்கும் கேடு எண்ணுதல், பிறர் உயர்வும் புகழும் பெருமையும் கண்டு பொருமுகின்ற பொறாமைப் புயல் ஆகியன அவனை அலைக்கழிக்கும் உருக்குலைக்கும். அவன் கடைத்தேறும் நிலைக்கு முட்டுக்கட்டையாய் அமையும்.

முடிவுரை

பண்புடையார்ப் பட்டுண்டுலகம் என்றும் ''உண்டாலம்ம இவ்வுலகம், தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென வாழுநர் உண்மையானே என்றும் வையத்துள் வாழ் வாங்கு வாழ்தல் வேண்டும் என்றும், ''அறிவை விரிவு செய், அகண்ட மாக்கு'' மானிட சமுத்திரம் நானென்று கூவு'' என்றும் தமிழ் மரபினை வேரும் விழுதுமாய்க் கொண்டு வாழ்ந்த பெரியோர்கள் உரத்த சிந்தனைகளை உலகுக்கு உணர்த்தியுள்ளனர். அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம் அழிவுதரும்; செவ்வியான் கேடு மிகவும் இரங்கத்தக்கதாம். இதனை வலியுறுத்தும் வள்ளுவர் நல்லோரிடம் உள்ள வறுமையைக் காட்டிலும் கல்லாத அவ்விய நெஞ்சத்தானிடம் அகப்பட்ட செல்வம் பெருங்கேடு பயப்பதாம் என்றும் அறிவுறுத்து கின்றார். அவ்விய நெஞ்சத்தான் பிறரையும் அழித்துத் தாமும் அழிவான். செவ்வியான் கேடு எவ்வகையிலும் அவனுக்கு சிறுமை சேர்க்காது. வறுமையிலும் செம்மையாக அவனால் வாழ்ந்து காட்ட இயலும். அவ்வறுமை துன்பத்திலும் பிறருக்கு ஆக்கமே எண்ணுவான்; அழிவை ஒருபோதும் எண்ணான்.

ஆதலின் அவ்விய நெஞ்சத்தானிடம் ஆக்கமோ, செவ்வியானிடம் வறுமையோ அமைந்துவிடாத புதிய சமூகச் சூழலை உருவாக்க வேண்டும். செல்வத்தால் ஒருவனை அளவிடவோ, மதிப்பிடவோ கூடாது. இன்றைய வாழ்வியலில் செல்வமே முதன்மையாக இருக்கும் போக்கினைத் தடுத்து அறிவினால் இவ்வையம் ஓங்கிச் செழிக்கும் இனிய சூழலை உருவாக்கி நல்லன விளையவும் அல்லன விலகவும் நாளும் அறப்பணிகளையும் திருப் பணிகளையும் ஆற்றுவதே நல்லோர் கடனாகும் நாடும் அதனையே எதிர்பார்க்கின்றது. ★

தமிழால் முடியும், தமிழா!

தூத்துக்குடி மோ. அன்பழகன்

அன்னைத் தமிழ்மொழி, இலெமூரியாக் கண்டத்தில் தோன்றிய ஆதிமுதல் மனிதனின் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் பேசிய மொழியாகும். கொடுந்தமிழ் தோன்றிய காலம் கி.மு.50,000 என்பர். உலகின் முதலில் தோன்றிய ஐந்து மொழிகளில் ஒன்று, திராவிட மொழிகளின் தாய்மொழி. ஆரிய மொழியின் மூலமொழி. உயர் தனிச் செம்மொழியெனவும், இலக்கண இலக்கிய வளம் நிறைந்த சீரிளமையோடு விளங்கும் கன்னித்தமிழ் என்று பெசுகி, போப், டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர், அறிஞர் கால்டுவேல் போன்ற மேனாட்டு மொழியியல் அறிஞர்களும், பாரதியும், பாரதிதாசனும், ''மொழி ஞாயிறு'' தேவநேயப் பாவாணரும் பலரும் தமிழ் மொழியின் பெருமையைப் பெரிதும் போற்றியுள்ளனர்.

பழந்தமிழர்கள் கடல் கடந்த நாடுகளோடு வாணிபத் தொடர்பும், அரசியல் ஈடுபாடும் கொண்டு தலைசிறந்து விளங்கினார்கள் என்று தமிழர் வரலாறு கூறுகிறது. உலகம் போற்ற வாழ்ந்த தமிழர்கள் இடையில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியுற்றனர். இன்றைய அறிவியல் உலகில் தமிழர்களால் உலக அளவில் ஏற்றம் பெற்று வாழ முடியுமா? உயர்வு பெறத் தமிழர்களால் முடியுமா? என்ற வினா எழுந் துள்ளது. கலை, அறிவியல் வளர்ச்சிக்கேற்ற வாறு அறிஞர்களின் அரிய ஆலோசனையின் பேரில் அறிவியல் தமிழாகச் சீர்திருத்தம் செய்வார்களேயானால் தமிழால் முடியும் என்பதை நாம் உணர முடியும். தமிழால் முடியும் என்ற நம்பிக்கை ஒளியைத் தமிழர்களிடையே உருவாக்க வேண்டும்.

நாட்டின் செல்வங்களில் ஒன்றாக விளங் கும் மொழி, மனிதனின் கருத்தை வெளிப் படுத்தும் கருவியென்று கருதப்பட்டது. சன நாயகத்தின் தூண்களான சட்டமன்றம், அரசு நிர்வாகம், நீதிமன்றம், பத்திரிகைத் துறை களிலும் மொழியின் தேவையை உணர முடி கிறது. ஆட்சியாளரின் சட்டத்தைப் பொறுத்தே ஒரு மொழியின் சிறப்பும், நாட்டின் வளர்ச்சியும் மக்களின் வாழ்வும் வளமும் அடங்கியிருக் கிறது. அக்கருத்தின் அடிப்படையில் புரட்சிக்



கவிஞர் பாரதிதாசனும், ''தமி ழாய்ந்த தமிழன் தான் தமிழ் நாட்டின் முதலமைச்சாய் வரு தல் வேண்டும்'' என்றார்.

மூவேந்தர்கள் முச்சங்கம் வைத்து முத் தமிழ் வளர்த்தனர். அக்காலத்தில் தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ்ப் புலவர்கள் போற்றப் பட்டதின் மூலம் இலக்கிய நூல்களான எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு ஐம்பெருங் காப்பியங்கள், சிறு காப்பியங்கள், பக்தி மார்க்க நூல்களும் தோன்றின. தமிழ் மொழியையும் பக்தி மொழியென்று மொழியி யல் அறிஞர்கள் கூறுகின்றனர். ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்ற பாரதி ''மெல்லத் தமிழ் இனிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும் என்றந்தப் பேதை உரைத்தான்'' என்றார். ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை அடியோடு விரட்ட வேண்டுமென்று விடுதலை முழக்கமிட்ட விடுதலை கவி. தமிழகத்தை ஆட்சி புரிந்த தமிழ் மொழியை அறியாத அரசர்களாலும், ஆட்சி யாளர்களாலும், தமிழ்க்கலை, தமிழ்மொழி, தமிழக வரலாறு மறைப்புற்றது. மணிப்பிரவாள நடை தோன்றித் தமிழ் மொழியும், தமிழர்களின் வாழ்வும் வீழ்ச்சியுற்றன. தமிழ்த் துரோகிகள் தமிழ் நூல்களை எரித்தும், அழித்தும் 18 ஆம் பெருக்கில் ஆற்றிலும் விட்டனர். தமிழ் நூல்களைக் காப்பாரின்றி இயற்கையின் சீற்றத்தால் மும்முறை ஏற்பட்ட கடற்கோளால் முத்தமிழ் நூல்கள் பல அழிந்தன. எஞ்சியதை சிலவானாலும் உலக மொழிகளிலுள்ள இலக் கண இலக்கிய நூல்களைவிடத் தலைசிறந்த நூல்களாய் விளங்குகின்றன.

தமிழ் அறிஞர் பெருமக்கள் சிந்தனையில் தோன்றிய சீரிய கருத்தினைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்போம்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்,
தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்''

பிற மொழிகளில் தோன்றிய சிறந்த நூல்களைத் தமிழ் மொழியிலும், தமிழ் நூல் களைப் பிற மொழிகளிலும் மொழி பெயர்த்தல் வேண்டும். சிறந்த நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்றார் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

துறைதோறும், துறைதோறும் துடித் தெழுந்து தமிழுக்குத் தொண்டு செய்வாய், தமிழ்த் தாய்க்கு வரும் பெருமை உன் பெருமை, வணிகர்கள் தம் முகவரியைச் செந்தமிழால் வரைக, அறிவிப்புப் பலகை அருந்தமிழில் இடம் பெற வேண்டும், அரசினர் மொழியாக, அரசியலார் மொழியாக, சட்டமன்ற மொழியாக ஆலய வழிபாட்டு மொழியாதல் வேண்டும், ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்ற கருத்து அனைத்து துறைகளிலும் இடம் பெற வேண்டும், தமிழ் வழிக் கல்வியை ஆதரிக்க வேண்டும், ஊர்களுக்கும், மழலையர்களுக்கும் மாத்தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும். தமிழுயர்ந்தால் தமிழ் நாடும், தமிழரும் உயர்வர் என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

''மொழி ஞாயிறு'' தேவநேயப் பாவாணர் அவர்கள், தமிழாய்ந்தவரைத் தமிழகக் கல்வி அமைச்சராக நியமிக்க வேண்டும். தமிழுக்கு எதிரான கருத்துக்களைக்

கொண்ட சென்னைப் பல்கலைக் கழக அகராதி, ஆச்சுபோர்டு ஆங்கில அகராதி முறைப் படுத்தப்பட வேண்டும். செந்தமிழ்ச்சொற் பிறப் பியல் அகராதி எழுதப்பட வேண்டும். தமிழ், தமிழர்களின் உண்மை வரலாறு எழுதப்பட வேண் டும். திராவிட மொழிகளுக்குக் கல்லூரி நியவு தல், தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி செய்தல், தமிழ் நாகரிகப் பண்பாட்டை வளர்க்கக் குழு அமைத்தல் வேண்டுமெனவும் கூறுகிறார்.

தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு பகுதியாகும். நடுவண ரசுக்கும், மாநில அரசுக்கும், தனித்தனிச் சட்டங்கள் உள்ளன. இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி மொழி, 1965 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அறிஞர் அண்ணா அவர்கள் இருமொழிக் கொள்கை யைத் தமிழகத்தில் கொண்டு வந்தார். 1956 ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறை வேற்றப்பட்டாலும், பிறகு வந்த ஆட்சியாளர் கள் நடைமுறைப்படுத்த பல முயற்சி எடுத்தும் முழுமையான பலனைக் காணமுடியவில்லை. தமிழக முன்னாள் முதல்வரும், முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சருமான முத் தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர் கள் அரசுப் பேருந்துகளில் திருக்குறளும், திருவள்ளுவர் படமும் இடம் பெறச் செய்தார். போக்குவரத்துக் கழகங்களுக்கு மூவேந்தர்களின் பெயர்களைச் சூட்டினார்.


தமிழ் அறிஞர் பெருமக்களின் கனவுகள் நனவாகிடத் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை முறைப்படி முழுமை யாக நடைமுறைப்படுத்த ஆணைகள் பிறப்பித்திருக்கிறார். அதிகாரிகள் தமிழில் கையொப்பமிடல், மழலையர் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பு வரையிலும் தமிழ்க் கட்டாயக் கல்வி என்றும் தமிழ்க் கற்றவர் களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்றும், தொழில் நுட்பம், மருத்துவம், பொறியியல் துறைகளில் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்துதல் என்றும், ஆந்திராவில் தொடங்கியுள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி செய்தல், தமிழ் நூல்கள் பிறமொழியிலும், பிற நூல்கள் தமிழ் மொழி யிலும் மொழி பெயர்த்தல் பணியை ஊக்கு வித்தல், தமிழில் தலைசிறந்த நூல்கள் எழுதப் பட ஊக்கம் அளித்தல், தேவநேயப் பாவாண ரின் நூல்கள் நாட்டுடமையாக்கி அவரது குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்குதல், தமிழ் மொழி அறிஞர்கள், மொழிப்போர்க் காவலர் களுக்கு நிதியுதவி அதிகரிப்பு, அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ததைத் தொடர்ந்து மெட்ராசு என்றழைக் கப்பட்ட தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை என்றழைக்கப்படுமென்றும், ஆங்கிலப் பெயர்களில் வழங்கப்படும் ஊர்களில் பெயர் கள் தமிழில் அழைக்கப்படும் என்றும் ஆணை கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழமி இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகிட மத்திய அரசுக்கு மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது. அக்கோரிக்கை நிறைவேற தொடர்ந்து பாடுபட வேண்டும். தமிழ் வளர்ச் சிப் பெறப் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். தமிழ் அறிஞர் நிறை வேற்றிட வேண்டும். தமிழ்மொழி வழி நின்று தமிழர்கள் உயர்வுபெற, தமிழால் முடியும் என்ற நம்பிக்கை ஒளியைப் பெறுவோம். தமிழால் தமிழர்கள் உயர்வு பெறவும் தமிழர்களால் தமிழ் மொழி ஏற்றம் பெறவும் தமிழர்களாகிய நாம் உறுதிமொழி எடுப்போம்; வெற்றி பெறுவோம். ★

கணக்கியல் வல்லுநர் எசு. எசு. பிள்ளை

கோ.சா.அநந்தகிருட்டிணன்

இ.டி.பெல் என்ற உலகப் புகழ் பெற்ற கணக்கியல் அறிஞர் ஒவ்வொரு நாட்டின் கணக்கியல் வல்லுநர்களைப் பற்றி எழுதும் போது இந்தியாவிலிருந்து உலக வரிசையில் எண்ணக் கூடியவர்களாக இருவரைக் குறிப்பிட்டுள்ளார். ஒருவர் சீனுவாச ராமானுஜம் மற்றொருவர் எசு.எசு.பிள்ளை (சு. சிவசங்கர நாராயணப்பிள்ளை) பிள்ளையவர்களின் கணக்கியல் நுட்பத்தை இந்திய கணக்கியல் கழகம் போற்றவில்லை; மாறாக இங்கிலாந்து நாடும், அமெரிக்க நாடும் அவர் பெருமையை உணர்ந்து பாராட்டின.

எசு.எசு.பிள்ளை திரு. சுப்பிராயப்பிள்ளை, திருவாட்டி கோமதி அம்மாள் இணையருக்கு, 5-4-1901 அன்று (1906 எனச் சிலர் கூறுவர்) திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலத்துக்கு அருகில் வல்லம் என்ற ஊரில் ஏழைமையான குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு ஓர் ஆண்டு நிறைவுறும் முன்னரே இவர் தாய் மறைந்தார். சில ஆண்டுகள் வீட்டிலேயே படித்தார். பிறகு செங்கோட்டை நடுத்தரப் பள்ளி ஒன்றில் கற்றார். பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் போது தந்தையும் மறைந்தார் நெருங்கிய உறவினர் ஒருவரின் ஆதரவில் வளர்ந்து வந்தார். கல்வி உதவித் தொகைபெற்று நாகர்கோயிலில் சுகாட்டு கிறித்துவக் கல்லூரியில் இடைநிலை வகுப்பு படித்தார். திருவனந்தபுரம் மாவரசர் கல்லூரியில் இளங்கலை வகுப்பில் படித்தார். அப்பொழுதே கலையியல் முதுநிலை வகுப்புரிக்குரிய கணக்குப் புதிர்களை விடுவிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கணக்கியல் துறை ஆய்வு மாணவராகச் சேர விரும்பினார். ஆய்வுத்துறை மாணவராக முதுநிலை வகுப்பில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பது பல்கலை கழக விதி. பச்சையப்பன் கல்லூரி முதல்வராயிருந்த பேராசிரியர் சின்னத்தம்பி பிள்ளை சென்னைப் பல்கலைகழக ஆட்சிக்குழு உறுப்பினராயிருந்தார் அவர் எசு.எசு.பிள்ளையிடமிருந்து அரிய கணிதவியல் அறிவினை எடுத்துக்கூறி, விதிக்கு விலக்களிக்கவைத்து, எசு.எசு.பிள்ளை ஆய்வு மாணவனாவதற்கு வழி வகுத்துத் தந்தார். நான்கு ஆண்டுகள் ஆய்வு நடத்தி தன் கணிதவியல் ஆய்வு முடிவுகளை அறிவியல் முதுநிலை (எம்.எஸ்.சி) பட்டத் தேர்வுக்கு வழங்கினார். அதைப் பார்த்த அறிஞர்கள் அது பண்டாரகர் பட்டத்துக்கு ஏற்ற ஆய்வு எனப் பாராட்டினர்.



1929 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பிறகு சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் பண்டாரகர் பட்டமும் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் டி.எஸ்.சி. என்னும் இப்பட்டத்தைப் பெற்ற முதல் ஆய்வாளர் எசு.எசு. பிள்ளைதான்.

1941 இல் திருவநந்தபுரம் பல்கலைக் கழகத்தில் கணக்கியல் துறையில் பணியாற்றினார். 1942 இல் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் கணக்கியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1770 ஆம்யாண்டில் வாரிங்கு என்பவர் இலக்கதத்துவத்தில் ஒரு கணக்குப் போட்டிக்குப் போனார். உலகப் புகழ் பெற்ற கேம்பிரிட்அப்பல் கலை கழகப் பேராசிரியர்களான ஆர்டி, இலிட்டில்வுட்டுப் போன்றோரெல்லாம் அக் கணக்குக் விடைகாண முயன்றும் முடியாமற் போயிற்று. பண்டாரகர் பிள்ளை தக்கதொரு விடை கண்டு நூலாக்கி வெளியிட்டார். அவர் புகழ் உலகெலாம் பரவியது. ''போரியர் வரிசை'க் கோட்பாட்டில் விடுவிக்கப்படாத புதிர்பற்றியும் ஆய்வு செய்து வந்தார். பல அரிய ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டார்.

அமெரிக்காவில் ஆர்வார்டுப் பல்கலைக் கழகத்தில் நடந்த பன்னாட்டுக் கணிதவியல் அறிஞர் மாநாட்டில் கலந்து கொள்ள இவர்க்கு அழைப்பு வந்தது. பிரின்கடன் பல்கலைக்

நல்லன காண்போம்! நல்லன நவில்வோம்!

பெரும் புலவர் சா.மருதவாணன்

செந்தமிழ் வளர்க்கும் தீந்தமிழ் மாநாடு
கவிக்கோ கூட்டும் கன்னித்தமிழ் மாநாடு
இன்பம் ஊட்டும் இன்றமிழ் மாநாடு
உலகை இணைக்கும் ஒண்டமிழ் மாநாடு
மதுரையின் நிகழும் மாத்தமிழ் மாநாட்டில்
இலக்கியத் தேனை இனிதே பருகுக
தமிழர் நெறியைத் தக்காங்கு ஆய்க!
உண்மை உணர்க! உலகம் மகிழ்க!
நன்னெறி காட்டுக! நலமே சூழ்க!
நல்வளம் பெருகுக! நல்லின்பம் விளைக!
''யாதும் ஊரே யாவரும் கேளிர்''
உலகம் வியக்கும் உயர்நெறி யன்றோ?
இரக்கப் பண்பே இனிய செல்வம்!
தமிழ்நெறி காட்டும் தலையாய கருத்து
இடர்பல செயினும் இனியவை செய்க!
வள்ளுவன் வழங்கிய வாய்மொழி யன்றோ?
நல்லவை செய்க! அல்லவை அகற்றுக!
இலக்கியம் காட்டும் இன்ப நெறியே
மக்களை காத்தல் அரசுகள் கடமை
அரசைக் காத்தல் மக்களின் கடமை
என்ன கொள்கை இன்றமிழ்க் கொள்கை
உலகம் உணர்க உயர்நெறி ஒழுகுக!
வன்முறை வழியை வேரொடு களைவோம்
போர்வெறிக் கொடியரை புறத்தே தள்ளுவோம்
மாந்த நேயத்தை மாண்புற வளர்ப்போம்!
சமய வெறியை சடுதியில் மாய்ப்போம்!
அன்பு நெறியை அவனியில் வளர்ப்போம்!
உலக உத்தமர் உயர்ந்த பண்பாளர்
அண்ணல் காந்தியின் அருள்நெறி நிற்போம்!
வாய்மை நெறியில் வலிமை காண்போம்!
என்ற எண்ணங்கள் எங்கும் பரவிட
உலகத்தமிழ் மாநாடு உய்வழி காட்டும்!
பன்னாட்டுத் தமிழுறவு பாரில் சிறந்திட
நல்வழி காண்போம்! நல்லன நவில்வோம்!

அறிஞர் மாநாட்டில் கலந்து கொள்ள இவர்க்கு அழைப்பு வந்தது. பிரின்சுடன் பல்கலைக் கழகத்தில் அவர்கள் அளித்த கல்வி உதவித் தொகை பெற்று மேலும் படிப்பதற்காகவும்; நோபெல் பரிசு பெற்ற அய்ன்சுடீன் தன்னோடு ஆய்வு செய்ய அழைத்ததன் பேரிலும் நண்பர் களின் வற்புறுத்தலின் பேரில் அமெரிக்கா செல்ல இசைந்தார். ''மேரிலாந்தின் விண்மீன்'' என்ற பெயர்கொண்ட வானவூர்தியில் சென்றார். அவ்வானவூர்தி. 30.8.1950 அன்று கெய்ரோ நகரத் தருகில் அதிர்ச்சிக்குள்ளாயிற்று. கண்ணிமைக் கும் நேரத்தில் கரிந்து நொறுங்கி விழுந்தது. கணக்கியல் உலகு ஒரு வல்லுநரை இழந்தது.

''எப்பொழுதும் இளநகை தவழும் முமக் எல்லாரிடமும் இன்சொல் இசைக்கும் இனி யர். ஒழுக்கத்தை உடைமையாக்க கொண்டவர். உயர் பண்புடையவர். தயங்கித் தயங்கிப் பேசும் இயல்புடையவர்; கள்ளரையும் வெல்ல வல்லவெள்ளையுள்ளங் கொண்டவர்'' என அவரை நேரில் அறிந்த தமிழகம் பொருளாதார வல்லுநர் பா.நடராசன் புகழாரம் சூட்டுவார். எளிய வாழ்வும், உயரிய சிந்தனையும் கொண்ட எசு.எசு. பிள்ளை மறைந்து நூறாண்டாகியும் அவருக்கு நூற்றாண்டு விழா எடுக்கப்பட வில்லை. கடுகுக்கு நேர்மூத்து துவரை யுள்ளத்தின் அவரை இருட்டடிப்பு செய்ததால் உலகக் கலைக்களஞ்சியங்களில் அவர் பெயர் விடுபட்டுப் போயிருக்கிறது.

அண்ணாமலை, திருவநந்தபுரம், கல் கத்தா பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய அவர் ஆய்ந்த நூல்களை எடுத்து திறனாய்வு செய்தால் கணிதவியல் மாணவர்கள் பண்டாரகர் பட்டம் பெறக் கூடும்.

அவர் பெயர் விளங்க ஒரு குழு ஏற்படுத்தி அவர் ஆய்வுகளை மறுபதிப்புச் செய்து, நூற்றாண்டு விழா வொன்று நடத்தி உலகப் புகழ் பெற்ற கணிதவியல் அறிஞர்களை அழைத்து அவர் பெருமையை உலகறியச் செய்வது கணக்கியல் அறிஞர்களின் கடமையாகும். ★

குடும்ப வாழ்க்கை

இந்திராணி மணியன்



குடும்ப வாழ்க்கையை 'இல்லற வாழ்வு' எனக் குறிப்பிடுகிறது தமிழ் இலக்கியம். இல்லறம் எனில் இல்லிலிருந்து நடத்தப்படும் அறம்'' எனப் பொருள்படும். இல்லறத்தின் பண்பும் அதுதான்; பயனும் அதுவே தான். இப்படித் தான் வாழ வேண்டும் என்று வரன்முறைக்கு உட்பட்டு வாழ்வது தான் அதன் பண்பு; சிறந்த பண்புகளைப் பெறுவதுதான் இல்வாழ்வின் பயன்.

இல்லறம் சமுதாயத்தின் ஒப்பற்ற உறுப்பாகும். இல்லங்கள் இணைந்தது தான் சமுதாயம் இல்லறமாகிய பயிற்சிக் கூடத்தில் பெறும் பண்புகள் தாம் சமுதாயமாக, ஊராக, நாடாக உலகமாக விரிந்து வரந்து ஓர் இணைப்புக்குள் அனைத்தும் ஒடுங்கச் செய்கின்றது. உறவினரிடம் காட்டும் அன்பு உறவல்லாதவரிடம் காட்டும் அருளாக மலர்கிறது. இல்லங்கள் சிறந்த பண்புகளைக் கொண்டதாக அறவாழ்வு வாழ்ந்தால்தான் சமுதாயத்தில் ஒற்றுமையும் அமைதியும் நிலவும். அதனால் தான் தமிழ்ச் சமுதாயம் இல்லற வாழ்வை அக வாழ்வு என்றும், சமுதாய வாழ்வைப் புற வாழ்வு என்றும் கணித்துக் கூறியுள்ளது.

அகவாழ்வு என்பது தாமும் தம் பெற்றோரும், கணவனும் மனைவியும், மக்களும் உறவினரும், நண்பரும் ஆக நெருங்கிய உறவுடன் வாழும் இல்வாழ்க்கை ஆகும். புற வாழ்வு என்பது கல்வி, கடமை தொழில் காரணமாகப் பிறருடன் இணைந்து வாழ்வது. காலமும் இடமும் புறவாழ்வைச் சற்றே மாற்றலாம். பொருளீட்டச் செல்லும் தலைவன் காடு மலை கடந்து பாலை வழியில் சென்றிருக்கலாம். திரும்பி வரும் வரை அவனைப் பற்றி செய்தி அறிய வழியில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அரை மணி நேரமானாலும் அரையாண்டு ஆயினும் 'வரு'வேன் என்று குறிப்பிட்ட நேரத்தின் எல்லை கடந்து போனால் இல்லிலிருந்து பெண் தவிக்கும் தவிப்பு மாறாததாகும். இவ்வாறு, மாறாத உண்மைகளையும் உணர்வுகளையுமே அக இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட பாடல்கள்தாம் எனினும் இன்னும் ஈராயிரம் ஆண்டுகள் என்ன, இரு நூறாயிரம் ஆண்டுகளாயினும் நிலைத்து நிற்கும் தன்மையைக் கொண்டுள்ளன அவைகள்.

காதல் ஒரு வலிய உணர்வு. கரை புரண்டு ஓடும் காட்டாற்று வெள்ளம் போல் எதையும் உருட்டிப் புரட்டி இழுத்துக் கொண்டு ஓடும். காதல் உணர்வுக்கு முன் எல்லாமே துச்சமாகத் தோன்றும். அத்தகைய வலிய உணர்வை ஓர் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் சமுதாயமே உயர்ந்த சமுதாயமாக இருக்க முடியும். அதற்குத் தனிமனிதன் கோட்பாடுகளுடன் சமுதாயக் கோட்பாடுகளும் இணைந்திருக்க வேண்டும். பழக்க வழக்கங்களும் பாரம்பரியமும் துணை நிற்க வேண்டும்.

காதல் உணர்வுகளைப் போற்றாத இலக்கியங்களே எம்மொழியிலும் இல்லாதிருக்க முடியாது. ஆயின் சங்க இலக்கியங்கள் போல் காதல் உணர்வினை மென்மையாகவும் மேன்மையாகவும் நுண்மையாகவும் கையாண்டுள்ள இலக்கியம் வேறு எந்த மொழியிலும் இருக்க முடியாது என்றே கூறலாம். காதல் உணர்வுகளை உள்ளத்தோடு இணைத்து வார்த்தது தமிழகம். உடல் உள்ளத்திற்குக் கட்டுப்பட்டது. உள்ளத்தைக்கட்டுப்படுத்தினால் உடலைக்கட்டுப்படுத்தலாம். காதலை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஒரு நிலைத்த தன்மையை அதற்கு அளிப்பதே மண முறையின் பணியாக உள்ளது. எப்படி வேண்டுமானாலும் அல்ல. ஒரு வரன் முறைக்கு உட்பட்டு இப்படி வாழ்வதே சிறந்த வாழ்வு எனக் கற்பிக்கிறது அகத் திணையின் ஒரு பகுதியாகிய 'கற்பியல்'

உலகம் முழுவதும் ஆண்களும், பெண்களும் நிறைந்து இருப்பினும், யாரோ ஓர் ஆண்

யாரோ ஒரு பெண்ணுடன் இணைந்து வாழத் தொடங்குகிறான். இந்த இணைவுக்குப் பெற்றோர் காரணமாக இருக்கலாம் அல்லது அவர்களே காரணமாகவும் இருக்கலாம்.

சங்கப் பாடல் ஒன்று இவ்விணைவினை மிக ஆழகாக எடுத்துக் கூறுகிறது.

''யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்''

என் தாய் யாரோ, உன் தாய் யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவினர்? அல்லது நீயும் நானும் தான் இதற்கு முன் ஒருவரை ஒருவர் அறிந்துள்ளோமா? இது காதல் வயப்பட்ட இரு உள்ளங்களின் உரத்த குரலாயினும். திருமண உறவில் ஒன்று சேர்ந்த இரு உள்ளங்களின் எதிரொலியும் இதுவாகத் தான் இருக்கும்.

திருமணத்திற்கு முன்பு அறிந்தவராயினும், அறியாதவராயினும் திருமணத்திற்குப் பின்பு உடல் இணைவது போல் இருவர் உள்ளமும் இணைய வேண்டும். அதுவும் எவ்வாறு?'' செம்புலப் பெயல் நீர் போல'' அதாவது செம் மண் நிலத்தில் பெய்த மழையால் நீரும், மண்ணும் தத்தம் நிலையை விட்டு ''இரண்டறக் கலத்தல் போல்'' இதற்கு விளக்கமாக, நீர் தன் நெகிழ்வுத் தன்மையையும், நிலம் தன் வன்மைத் தன்மையையும் விட்டு மண்ணும் மழை நீரும் ஒன்றாகக் கலந்து, இது மண் இது மழைநீர் என்று பிரித்துக் காண இயலாத வகையில் நிறமும் தன்மையும் ஒன்றாகப் பெறுதல் போல்'' என்று கூறப்படுகிறது.

'நான்', 'நான்' என ஒருமைத் தன்மையில் வாழ்ந்த இருவர், இம் மண உறவில் இணைந்து 'நாம்' எனும் தன்மைப் பன்மை பெறுகின்றனர். ''என்னுடைய பெற்றோர், உற்றார் உறவினர் என்னைச் சேர்ந்த பொருட்கள்' என்று 'என்' என்னும் நிலை மாறி எல்லாவற்றிற்கும் 'நம்' என்னும் அடை மொழி இடப் பெறுகிறது. தன் நலம் குறைந்து பிறர் நலம் காழ் கொள்ளும் இடம் இதுவேயாகும். இல்லறத்தில் பெறும் அன்பே சமுதாயத்தில் அருளாக மலர்கிறது.

பொருள் தேடும் பணியை முடித்துக் கொண்ட தலைவன் தேரில் வருகிறான் மனைவியைக் காண. அவன் உள்ளத்தில் அவள் நினைவே நிறைந்துள்ளது. அவன் வரும் வழியில் மலர்களில் வண்டுகள் மகரந்தத்தை உறிஞ்சி இணைந்து உள்ளன. அவற்றின் இணைவு தேரின் ஒலியால் கலைந்து விடக் கூடாதே என்று தேர் மணியின் நாவைப் பிணிக்கச் செய்து தேரைச் செலுத்துகிறான். இன்பத்தை அனுபவித்த அவன் அன்புள்ளம் இன்பத்திற்கு இடையூறாக இருக்க விழையவில்லை. வாழ்வில் இன்பமும் அன்பும் காணாதவர் தாம் பிறருக்குத் துன்பத்தை விளைவிப்பர்.

குடிக்க நீரின்றித் தாகத்தால் தவிக்கின்றன ஆணும் பெண்ணுமாகிய இரு மான்கள். எங்கோ சிறிது நீர் இருப்பத்தைக் கண்டுவிட்டது. ஆண்மான். தான் குடிக்காவிட்டால் பெண்மான் குடிக்காது, ஆனால் தான் குடித்தால் பெண் மானுக்கு நீர் இருக்காது என்னும் நிலையில் ஆண்மான் நீரைக் குடிப்பது போல் உறிஞ்சி பாவனை செய்கிறதாம்!

அடுத்தவருக்காகத் தம் நலத்தை விட்டுக் கொடுக்கச் செய்வது அன்பின்றி வேறு எதுவும் இருக்க முடியாது. அன்பு என்னும் அடித்தளத் தின் மேல் கட்டப்படுவது தான் கணவன், மனைவி என்னும் உறவு.

இல்லற வாழ்வு அறவழிப்பட்டதாக அமைய வேண்டும். எனில் கணவன் மனைவி இருவரிடமும் அன்பு முழு ஆட்சி செலுத்த வேண்டும்.

திருக்குறள் இதற்கு நல்லதோர் உதாரணத்தைக் காட்டுகிறது.

காப் போல இருதலை யானும் இனிது.

காவடிச் சுமைபோல இருபக்கமும் அழுத்தம் ஒருதன்மைத்தாய் இருத்தல் வேண்டும்.

நாம் விரும்புகின்றவர் நம்மை விரும்புகின்றவரே என்பதினும் மகிழ்ச்சி தரக் கூடியது எதுவும் இல்லை.

அகநானூற்றில் ஒரு பாடல் தலைவி தன் வாழ்க்கை பற்றித் தோழியிடம் கூறுகிறாள்.

எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும் இனியவன் (அகம் 252) எழு சுரங்கள் தாம்

எனினும் அதில் எத்தனை எத்தனை புதுமை. புதுப் புதுப் பண்கள்; புதுப் புது இனிமை. அவ்வாறு புதுவது புனையும் திறத்தினும் இனியவன். உண்மையான அன்பு வளர்பிறை போன்றது. திருமண நாளினும் இனியவனாக இருக்கிறான் என்கிறாள்.

அதே போல் தலைவனும் 'வினை முடித்தன்ன இனியோள்' அதாவது ''நினைத்த செயலை முடித்துவிட்டால் இருக்கும் இனிமை போன்றவள்'' என்கிறான். பாலை வழியில் செல்லும் பொழுதும்,

ஒள் நுதல் அரிவையை உள்ளுந்தொறும்

தண்ணிய ஆயின சுரத்திடை ஆறே.

'அவள் நினைவு பாலை வாக் கொடுமையை அறிய விடாது செய்து விட்டது'' என்கிறான். அன்பான மனைவி அமையின். பாலைக் கொடுமை என் வாழ்வின் கொடுமையையே அறிய விடாமல் செய்து விடுவாள்.

இதனைத் தான் வள்ளுவப் பெருந்தகை,

'இல்லது' என் இல்லவள் மாண்பானால்'' என்கிறார்.

மாட்சிமைப்பட்ட மனைவி உள்ள வீட்டில் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லாம் இருப்பது போன்ற ஒரு நிறைவைத் தரும். நிறைவான வாழ்வை நரை இலா வாழ்வைக் காட்ட வந்த புறநானூற்றுப் புலவரும், ''மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்' என மாட்சிமைப்பட்ட மனைவியை முதற்கண் குறிப்பிடுகிறார்.

பெண்ணுக்குப் பெருமை செய்தது பண்டைத் தமிழ்ச் சமுதாயம். பெண் குழந்தையை வேண்டிப் பெற்ற சமுதாயம் அது. பெண் குழந்தைகளைச் சீரும் சிறப்புடனும் வளர்த்த சமுதாயம் அது. பெண்களுக்குச் சமமான கல்வி அளித்த சமுதாயம் அது. பெண்பாற் புலவர்களைப் போற்றிய சமுதாயம் அது.

அதுமட்டுமன்று பெண்கள் இன்னார் மகள், இன்னார் மனைவி என்று குறிப்பிடப்படும் உலக வழக்கத்திற்கு மாறாக 'இன்னார் கணவன்' என்று சுட்டிக் காட்டப்படுதலை நினைக்கும் பொழுது தமிழ்ச் சமுதாயத்தின் பெருமை தெற்றெனத் தெரிகிறது. ''நல்லோள் கணவன்'' என்று மனைவியால் கணவன் பெருமை பெறுகிறான்.

அதுமட்டுமன்று இல்லத் தலைமை இருவர்க்குமாக அமைந்தால் இரட்டை ஆட்சி போல் குழப்பமே விளைவிக்கும். என் வீட்டுத் தலைமையைப் பெண்ணிடமே ஒப்படைத்தது. தமிழ்ச் சமுதாயம் இல்லாள் தான் இல்லத்தை ஆள்பவள். இதற்கு இணையான ஆண்டாற் சொல் தமிழில் இல்லை என்பதே இதன் உரிமையையும் பெருமையையும் எடுத்துக் காட்டும்.

ஆனால் இல்லத்தை ஆள்வது எளிதான செயல் அல்ல குணக்குன்றாக இருந்தால் தான் நல்லாட்சி நடத்த முடியும். அக் குணக்குன்றின் கடமைகளை அடுக்கிக் கூறுவார் வள்ளுவர்.

தற்காத்து - முதலில் ஓர் பெண் தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டும். காத்துக் கொள்ளுதல் என்பது ஒழுக்கக் காப்பாகும். 'சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை'' என்பது வள்ளுவர் வாக்கு. ''தன்னைத் தலையாகச் செய்வதும் தான்'' என்றாற் போல் தன் கடமையைச் செய்து, தன் பெருமைக்கு இழுக்கு வராது. தன் தலைமைத் தன்மையைக் காத்துக் கொள்ளுதல் அவள் கையில் தான் இருக்கிறது. அதுமட்டுமல்ல, தன்னை எவ்வாறு காத்துக் கொள்கிறாளோ அதே போல், 'தற்கொண்டான்' தன்னைக் கொண்டவனாகிய கணவனையும் காக்க வேண்டும்'. ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே' என்பது போல், பிள்ளைகளைப் பெறும் இயற்கை அளித்துள்ள கடமையுடன், சிறந்த குடிமக்களாக அவர்களை வளர்த்தலும் பெண்டிர் கடமையாகும். பாலோடு வீரத்தையும் நற்பண்புகளையும் ஊட்டி வளர்ப்பவள் தாயே ஆவாள். அதனால் இல்லிருந்து பணிபுரியும் பெண்ணிடம் தான் சமுதாய உருவாக்கமே அமைந்துள்ளது. மனைவியாகக் கணவனையும், தாயாக மகனையும் (மகளையும்) சான்றோர்களாக மாற்றும் மந்திரக் கோல் பெண்ணிடம் தான் உள்ளது. இன்று உலகில் பரவியுள்ள கொடுஞ் செயல்களுக்கெல்லாம் காரணம் சரியான வளர்ப்பு இன்மையே ஆகும். ஒரு மகாத்

தமிழ்வேலி காத்த பெருங்கவிக்கோ!

அமரர் சுகவாசி

அறுசீர் விருத்தம்

அடையாளம் பொறித்தவளே! அமித்த்தமிழ் வரலாற்றில்
அழியா வண்ணம்
கடையாணி ஊன்றியமா கவிக்கோவே! தமிழ்வேலி
காத்த மேலோய்!
புடைசூழத் தமிழ்த்தொண்டர் புலவரேறு கவிச்சான்றோர்
போற்றும் புனித
நடைப்பயணம் மேற்கொண்ட நாதன்நீ! வாழ்ந்திடுக!
நானிலத்தே!

(2)

நமக்கென்ற கொள்கைதமிழ் நாட்டுக்குத் துணைஒன்று
நந்தா தமிழே!
விமரிசையாய் எங்கும்தமிழ்! எதிலும் தமிழ்! விளங்குதற்கு
வினைசெய் தாயே!
சமவெளியில் கல்ஒன்றைக் கடப்பதற்கே தடுமாற்றம்
தானே! என்றால்
குமரிமுதல் சென்னை வரை குறித்தபடி நடந்தீரே!
கூட்டத் தோடே!

(3)

வீரத்தை முன்வைத்தாய்! வெற்றிக்கு வழிவகுத்தாய்!
வேகத்தாலே!
நேரத்தைத் திட்டத்தால் நிலைநாட்டிக் காட்டியவா!
நிதியே இன்றி
வனமென்றோ கரடான வழியென்றோ கருதவிலை
வளர்ந்த உணர்வால்
கனல்கணடீர்! புனல்வேண்டி கலங்கியபின் தமிழ்
கண்டீர்! வாழ்க!

மாவையும் வீரசிவாஜியையும் உருவாக்கியவர் அவர்தம் தாயரே ஆவர். தட்டித்தட்டிச் சீராக்கும் மண் பானை போன்று, வெட்டி வெட்டி உரு வாக்கும் அழகுச் சிலை போன்று செம்மைப் படுத்தப்பட வேண்டிய பயிற்சிக் கூடம் இல்லமே ஆகும்.

இல்லம் என்பது நான்கு சுவர்கள் அமைந்த இட ஒதுக்கீடு அல்ல. அன்பு ஆட்சி புரியும் அரண்மனை. அன்புக்கு வணங்காதார், வளை யாதார் யாருமே இல்லை. அந்த அன்பு நிலத்தினும் திண்மையுடையதாக வானினும் உயர்ந்ததாக கடலினும் ஆழம் உடையதாக தன்னலம் அற்றதாக இருக்க வேண்டும்.

'நிலம் புடை பெயரினும் நீர்தீப்பிறழினும்

இலங்கு திரைப் பெருங் கடற்கு எல்லை தோன்றினும்'

மாறாத் தன்மை உடையதாக இருக்க வேண்டும்.

'யாண்டு கற்றனள் இக் குடும்பக் கல்வியை' எனத் தாயே வியக்கும் வண்ணம் இல்லறம் நடத்துகிறாள் மகள். இப்படித்தான் வாழையடி வாழையாக சொல்லித் தரும் கலையாக இல்லா மல் கண்டுணரும் கலையாகத் திகழ்ந்து வந்தி ருக்கிறது இக் குடும்பக் கலை.'' சான்றோ னாக்குதல்'' தந்தைக்கக் கடனே என்றார் பொன் முடியார்.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்.

என்றார் வள்ளுவர்.

சமுதாயத்தில் காணப்படும் அத்தனை மக்களும் இல்லறக் கூடத்தில் உருவாகுபவர்கள் தாம். ஆதலால் உருவாக்கப்படும் இடம் தூயதாக. அற உணர்வு உள்ளதாக நற்பண்புகள் கொண்ட வர்களை உடையதாக இருக்க வேண்டும். சேற்றிலும் செந்தாமரை மலரலாம். ஆனால் களர் நிலத்தில் நற்பயிர்களைக் காணமுடியாது.

அதனால் இல்லறமே நல்லறம் என்னும் தமிழ்ச் சமுதாயக் கோட்பாடு, எங்கும் எப்பொழுதும் செயல்பாடாகி நின்று நிலவ வேண்டும். ★

ஈரடி நாலடி இயம்பும் ஆன்மிகம்

இரா.பச்சையப்பன். எம்.எ., ஐ.பி.எஸ்.

இவ்வுலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், எனும் ஐம்பெரும் பூதங்களாலானது. இவை ஐந்தும் ஐந்து வழியாகச் செல்லாமல் ஒழுங்காக இயங்கினால்தான் உலகத்தில் இன்பம் நிலவும். எதாவதொன்று தன்னுடைய நிலைதவறி இயங்கினால் உலகத்தில் துன்பந் தான் மிகும். நிலத்தில் பூகம்பம் தோன்றி நிலை கெடுவதைக் காண்கின்றோம். கடுமழை பெய்து வெள்ளத்தால் உலகம் அழிவதையும் பார்க்கின்றோம். சூறாவளியால் மரங்களும் மற்றும் பல பொருள்களும் அழிவது கண்கூடு. இப்படியே நெருப்பால் அழிவதைப் பற்றிக் கூறத்தேவையில்லை. மேலும் விண்ணில் இயங்கச் சூரியனோ சந்திரனோ, மற்றெந்தக் கோள்களோ நிலை தவறினால் நமக்கு வரும் துன்பங்கள் ஏராளம் எனலாம். இவற்றை ஒழுங்காக இயக்க ஒரு சக்தி வேண்டும். அவ்வாறு இயக்கும் சக்தியைத்தான் இறைவன் என்கின்றோம் . நம்முடைய உடலும் ஐம்பெரும் பூதங்களுடைய உதவியால் தான் இயங்குகிறது. அவற்றை நம்மிடையே இயக்க உதவுவது நம்முள் இருக்கும் ஆன்மாதான். மூச்சு நிற்காமல் நம்முள் சுழன்று கொண்டிருந்தால் தான் ஆன்மாவும் உடலுக்குள் இருக்கும். உடலை நன்கு வைத்துக் கொள்வது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். நைந்து போன உடலொத்து ஆன்மா நல்ல உடல் மாறும் தன்மையைக் கொண்டது என்று பகவான் கண்ணன் பகவத் கீதையில் சொல்லுவதை நினைவில் கொள்ள வேண்டும். உடலை விட்டு ஆன்மா நீங்கிவிட்டால் நம்முடல் அழிகிறது. நிலமகளுடன் சேர்ந்து மண்ணோடு மண்ணாக மாறிவிடுகிறது. அதே போல் நீரும், நெருப்பும் காற்றும், வெற்றிடமும் முறையே அவ்வவற்றின் மூலத்தோடு இணைந்து விடுகிறது. இறைவனது ஒரு பொறி தான் ஆன்மா. ஆன்மாவைப் பற்றிக் கூறுவதை நாம் ஆன்மிகம் என்கின்றோம் ஈரடிகளைக் கொண்ட திருக்குறளும், நான்கடிகளைக் கொண்ட நாலடியாரும் ஆன்மிகத்தைப் பற்றி என்ன கூறுகின்றன வென்பதைப் பற்றிச் சிறிது கூறமுயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறளை எழுதிய வள்ளுவரும், நாலடியாரை நவின்ற புலவர்களும் இறைவணக்கம் பாடியுள்ளனர். இறைவன் இருப்பதை ஒப்புக் கொள்கின்றனர். 'அ' என்னும் எழுத்து மற்ற எழுத்துக்களையெல்லாம் முன்னின்று இயக்குவது போல் உலகை இறைவன் முன்னின்று இயக்குகிறான் என்கின்றார் வள்ளுவர்.



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன்முதற்றே உலகு (குறள்1)

அதுபோலவே நாலடியாரும்

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்" 36

என்கிறது பாடல்

ஆன்மா எப்பொழுது வேண்டுமானாலும் உடலைவிட்டு நீங்க நேரிடும். எனவே தீயவை செய்தலை ஒழித்து உயிருள்ளவரை எவ்வளவு முடியுமோ அவ்வளவு அறங்களைச் செய்து முத்திபெற முயலுங்கள் என்று இயம்புகிறது நாலடியார். மனிதன் அறவழியில் நின்று அறத்தைக் காப்பதோடு, மற்றவர்களையும் அறநெறியில் இயங்க உதவுதல் வேண்டும். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, அறத்துப்பால், பொருட்பால் என இருபெரும் பிரிவுகளைக் கூறி, மனிதன் இயங்க வேண்டிய நெறிகளை வகுத்து ஈரடியும் நாலடியும் இயம்புகின்றன.

இல்லறவியல் துறவறவியல் என்ற இப்பிரிவுகளை அறத்துப்பாலில் காணலாம். இல்லறவியலில் இல்லத்தில் மேற்கொள்ள வேண்டியவற்றை விவரிக்கின்றார் வள்ளுவர். இல்வாழ்வோன் எல்லோர்க்கும் துணையாக இருப்பவன். இல்லறத்தான் பால் இயங்கும் ஆன்மாதான் இளைஞர்க்கும் தவசியர்க்கும், முனிவர்க்கும் உதவுகிறது. இவர்கள் மூவர் பாலும் பொதிந்திருக்கும் ஆன்மாக்கள் இல்லறத்தின் பால் பொதிந்திருக்கும் ஆன்மாவால் பொலிவு பெறுகின்றன. இதனை வள்ளுவர்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. என்கின்றார்

(குறள் 41)

அதே போல் நாலடியாரும், ஒருவன் தான் செல்வம் பெற்றிருந்தும் உண்ணாது கிடப்பதை

யும், அறஞ்செய்து தன்புகழை நிலை நிறுத்தா திருப்பதையும், நெருங்கிய சுற்றத்தின் துயர் களையாதிருப்பதையும், வாழ்நாள் முழுதும் பெற்ற செல்வம் பயன்படாது அழிதலையும் கண்டு வருந்துகிறது.

உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தான் என்றெண்ணப் படும்

பா-10

எல்லா உயிரினங்களையும் இறைவன் படைத்துள்ளான். ஓர் ஆன்மா இன்னொரு ஆன் மாவைத் தாங்கி நிற்கும் உடலைக் கொல்வது அறமாகாது. அது கருதியே வள்ளுவர், கொல்லாமை என்ற அதிகாரத்தையே வகுத்துத் தந்துள்ளார். தன்னுடைய உயிர், உடலை விட்டு நீங்கப் போவதாக இருந்தாலும். அதைத் தடுத்து நிறுத்த வேறொரு உயிரை நீக்கும் செயலைச் செய்யாதே என்கின்றார் வள்ளுவர்.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை

குறள் - 327

இதுபோலவே கொல்லாமையை வற்புறுறுத்துவது நாலடியாகும்.

ஒருநாட்டின் அரசனும், அவனது குடி மக்களைக் காக்கும் பொறுப்புடையவன். இறைவன் எவ்வாறு எல்லா ஜீவராசிகளையும் காத்து வருகின்றானோ அவ்வாறே அரசனும் தன் குடிமக்களைக் காத்தல் வேண்டும். இறைவன் போல் அரசன் நடந்து கொள்வதால் அரசனும் ஆண்டவன் ஆகலாம் என்கின்றார் வள்ளுவரர்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்

குறள் - 388

இந்நிலை ஜனநாயக முறைக்கும் 'ஒக்கும்' எனலாம்.

ஐம்புலன்களைத் தாங்கி நிற்கும் உடல் அறநெறியில் இயங்க ஆன்மா உதவுகிறது. மெய் (உடல்) உழைக்க உதவுகிறது. வாய் உண்ண வும், பேசவும் உதவுகிறது. கண் உலகிலுள்ள அனைத்தையும் கண்டு உணர்த்தவல்லது. மூக்கு நம்முடல் நிலைத்து நிற்க, காற்றை உடலுள் புகவைக்கவும் வெளியேற்றவும் செய்து வரு கிறது. செவி மற்றவர் பேசுவதையும் ஒலிகளை யும் கேட்டு அறிவைச் சிறக்கச் செய்கிறது. இவ்வைம்புலன்களும் கலங்காதிருத்தல் வேண் டும். அப்போது தான் அறநெறியில் நின்று, ஆன்ம விழிப்பு பெற்று வீடுபேற்றை அடைய முடியும். இதனை நாலடியார்.

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக் -கைவாய்
கலங்காமற் காத்துய்க்கும் ஆற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்

என்கிறது - பாடல் 59

மானிடப்பிறவியை அரிய பிறவியென் கின்றார் ஒளவையார். ''அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது மானிடராய்ப் பிறந்தகாலையும் கூன்குருடு செவிடுபேடு நீங்கிப் பிறத்தல் அரிது. பேடு நீங்கிப் பிறந்த காலையும் தானமும், தவமும் தாம் செயல் அரிது. தானமும், தவமும் தாம் செய்வராயின் வானவர் நாடு வழிதிறந் திடுமே'' என்கின்றார்.

ஐம்பொறிகளை நன்கு இயக்கக் கூடிய நிலையில் நமக்கு மனிதப் பிறவியைக் கொடுத் திருப்பது ஆண்டவனது திருவருளாகும். அந்த அருட்கொடையைப் பெற்ற நாம், அற நெறி நின்று வாழ்க்கை நடத்தினால் வீடுபேறு பெறு வது உறுதி எனலாம். வாழ்க்கையின் நோக்கமே வீடுபேறு பெறுவது தான். ஜீவாத்மா பரமாத்மா வோடு ஒன்றுவது தான் எனலாம்.

இல்லா இடத்தும் இயைந்த அளவினால்
உள்ள இடம்போல் பெரிதுவந்து - மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு.

(பா.93)

தன்னிடம் சிறிது பொருளிருந்தாலும் அதற் குத்தகுந்தபடி பிறருக்குக் கொடுத்து வாழவேண்டு மென்ற எண்ணமிருந்தால் விண்ணுக்கு தன் வாயிலைத் திறந்து வைத்துக் கொண்டு இவன் வரும் நாளை எதிர்கொண்டு காத்துக் கிடக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

விரிப்பின் பெருகுமென்றுகருதி இக்கட் டுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். விரிவாக 'ஈரடி நாலடி இயம்பும் அன்பகம்'' என்று ஒரு நூலையே எழுதி வெளியிட்டுள்ளேன் வேண்டு வோர் படித்து இன்புறலாம். பயன் பெறலாம்.

★

This article is a fitting tribute to Dr. N. Mahalingam as he is striving his best to prove the existence of Kumarikkandam.

KUMARIKKANDAM AND HARRAPPAN CIVILZATION

Natana. Kasinathan,

Birth Place of Ancient Language, Script and Arts.

It would be a repeating venture if I present the facts for the existence of Kumarikkandam or Lemuria Continent as a considerable number of books and valuable articles have been brought out on this subject citing sufficient literary, geographical, anthropological and archaeological evidences'. The recent discovery of a fossilized remains of a bizarre dogsized predatory dinossaur assignable to a date to the Late Cretaceous period (about 65-70) million years ago), on the island of Madagascar proves beyond an iota of doubt that the Gondwana landmasses were connecting the South America and Indian - Madagascar via intervened landmasses as such predatory dinossaurs found in Argentina and in India and the possible existence of Kumarikkandam linking the present Southern tip of the Tamilnadu.2 With these I want to add a few external evidence to prove that the above Kumarikkandam could be the birth place for the Harappan and the present Indian scripts, the Harappan language, the art and religion. The philologists had already postulated theories that the first language of the world had originated in Kumarikkandam3. Hence it is quite natural that the first script of the world should have originated in Kumarikkandam only.

Since the evoultion of the first human beings at Lemuria4 Continent is believed to have proved with tangible evidences by the geologists and anthropologists, it is quite possible that all branches of arts also could have originated in this Kumarikkandam.

Against this background I want to postulate a few possible hypothesis for discussion and to arrive a final conclusion.

From inarticulate language to articulate language.

The language and the script first envolved in Kumarikkandam could have been in inarticulate and pictograph forms respectively. The human population which migrarted from this continent due to the successive submerson off land could have carried this inarticulate language and the pictograph script with them to differrent parts of the world5. One such group of this population should have settled in Harappan region by travelling either through sea or through the western sea coast.

Refined language and the evolved script

The people who remained in the remaining part of the continent after several submersions could have evolved a refined language known as Tamil Language. In course of time they should have evolved from pictograph to deograph from ideograph photograph and from photograph to a standard script known as Tamil Script. The differed kind of pictographs and the standard script evolved from them appear to be found mentioned in an old commentary on a grammar called yapparunkalam as follows:

""The aya-eluttu like a, ka, ca, ta, ta, pa, and ya; the irasi -eluttu like a, ca, la, va, ra, na, and ya; the nal-eluttu like the karttikai; the four kinds of letters like topam, the tanmai letters like the catti; the uhra letters like the uccatanam; the muttira-u-eluttu like the cittira-Karudam; the four kinds of letters like the pakiyal; the narkati letters like the puttel; the oli-y-eluttu like the tatu; the sanketa letters like the makta-mataiyam; the sanketa letters like the kali; thirteen letters of the parppan-valakku (brahmana usage), and so forth (commenciing with this), the katturai-y-eluttu, the vadiv-eluttu like the vacciram (vajra) and all the other letters denoted in so many ways, learn (or should be learnt) through the (mouths) of experts"6.

According to T.N. Subramaniam the above passage, though full of scribal errors and varriant readings, is still interesting. He further says that it narrates fifteen kinds of eluttu and these have not been explained anywhere7.

Either during this period of evolution or even before this time, the migration to North-western

part of India should have taken place and the people who settled at Harappan region seem to have used the pictographs which were familiar to them for their writing.

The script which was in transition period ie from Ideograph to phonograph could be the graffiti found engraved on Megalithic postherds. The above state of evolution is also found stated in our ancient commentaries on grammars such as Yapparunkalam and Nannul.

While commentiing on the last sutra of the work of Yapparunkalam the commentator mentions various kinds of writing quoting the following sutra,

"Uruve unarve oliye tanmai-y-ena
iru vagai y-eluttum ir-irand -agum"8

Standard Script

The earliest available standard Tamil Script assignable to 8th - 7th Century B.C. written on post sherds has been unearthed from Anurathapuram10 in Srilanka. Since Sri Lanka is believed to have been branched off from Kumarikkandam at the last phase i.e. in the 3rd Millennium B.C., it has become possible to get there this well developed script". While the script was in transition form ideograph to phonograph both the scripts appear to have used in mixed form. The copper seal picked out at Anaikkottai in Sri Lanka12 during excavation and a potsherd13 unearthed from Alakankulam, and a few standard Tamil inscriptions of Kongarouliankulam and Alakarrmalai14 and SriLanka15 bear the mixed Scripts of both ideograph picture and the standard script. The paintings drawn on a mountain at Kilvalai16 depict a few pictographs which could also be the transitional period ideographs.

In addition to these pictographs there are a few mysterious scripts engraved iin a natural cavern near Kurralam17 and on a seal18 collected from Amaravati river running near Karur the ancient Chera capital. These musterious scripts could also be one of the scripts found mentioned in the commentery on Yapparunkalam.

Pictographs, origianted from Kumarikkanndam.

All the above discoveries ascertain the fact that Kumarikkanndam could probably be the place where the pictographs had originated first. That is the reason why we get the earlie form of the standard Tamil Script in Tamilnadu at Korkai which19 was also called as Kapadapuram recalling the ancient Kapadapuram where the Second Tamil Sangam had held.

Pandyas and Cheras

Of the three crowned Kings, Pandyas to be the oldest rulers as their dynastic name appear to have been derived frrom Pandaiyar, Old People. It appears that they were the first migrators to the northern border of Kumarikkandam. Hence they had written more number of inscriptions in Standard Script. Cherar could probably be the next group of migrators who later joined with the earlier group. Hence they appear to have been called as Cernthar, which might have been shortened as Cerar.

The above facts appear to be the reasons why both Kingdoms have retained some of their ancestral customs which were prevalent in Kumarrikkandam.

Tamil research with Agastiya

Pandyas in the prasasti portion of their copper plates claim the researches carried out along with Agastya as one of their great achievements20. The incident seems to be the recollection of the first Tamil Sangam held under the presidentship of Agastya, an eminent Tamil poet.

They have also retained Bull and Elephants as their favouriteand respectable animals by depicting them on their coins unearthed at Alangankulam21 as the Harappans who had migrated iin earler phases had depicted them with due importance on their seals. In addition to this one Pandya is said to have donated thousand elephants.22

Cholar

The term Cholar appears to have derived from Chular the shortened form of Chulndar meaning those who accompanied or the relatives. Since they had accompained the previous exodus of mass from Kumarrikkandam they could have been named as Chulndar.22A

Athiyar-Athiyar

Another hypothesis can be postulated by proposing that the old name Athiyer may be Athiyar, one of the first settlers in the present Tamilnadu migrating from Kumarikkandam and they could have brought sugarcane saplings with them. Hence they are praised by Tamil poets that they had brought sugurcane from heaven and ruled a territory surrounded on all sides by sea.23 This heaven was no other place than the lost Kumarikkandam. It appears that these Athiyars were ruling in different parts of Tamilnadu since the Athirajas are stated to have been defeated by Kalabhras.24 This presumption is attested by the fact that there were more number of Athiya kings referred to in Sangam literature.25

Athiars are also said to have worn the garland of Palm Flower26 and Palm tree as their royal crest as Cheras had. Hence Athiars are considered as a branch of Cheras. This in fact supports the theory that Athiars were one of the first immigrants of the followers of the Cheras from Kumarikkandam.

Occurrence of Tamil words in other Languages

Occurrence of Tamil words such as Togai, Ibam27 etc in west Asian languages like Hebru and Greek clearly indicate the fact of the exodus of Kumarrikkandam to the Western Countries in the first Millennium of the Pre-Christian era. Ibam, the word found in Greek for Elephant is also found used as "iva' in Tamil inscription28 engraved at anaimalai assignable to Ist Century A.D. It is also said that the historical records of Sumeria mentions the arrival of the ships, the temple dedicated to God "Iya' and the import of larrge size ivories from Dilmun29. Mathivanan identified the country of Dilmun as a country of Indian. Ocean and the God, Iya, as Iyavul-Kadavul30. Murukan is called Iyavul in Thirumuragarruppadai31. The name of the God ""Iya' prompts me to equate with our Goddess 'Aiyai' which means Chief Woman or Kali 32, Probably the Mother Goddess. Because the Tamil literature referes to mother Goddess as Palaiyol 33 and Mudiyol 34 suggesting her existence and worship in ancient period most probably in Kumarikkandam. Continuity of Mother Goddess worship even in later periods has been attested by the discovery of Mother goddess figure assignable to 7 th Century B.C. from Adichanallur 35 of Tirunelveli District and the existence of number of Bhagavathi temples in Kerala from the begiinning of the historical period.

Palm tree and Elephants

Another important factor which remainds the migration of Cheras from kumarikkandam is their royal crest Palm tree and the figure of the same on their coins. Cheranadu is also known as ""Malainadu possessing Elephants". One Chera king is called Palyanaicel Kelukuttuvan suggesting kuttuvan was the possessor of may elephants.36 Ivory was one of the major items said to have marketed in the Western Countries, brought from dilmum. As pointed out by Mathivanan 37 it is quite possible that the above item could have been brought from a country located in Indian Ocean, most probably the then palimuka Nadu. It is also said that the palm tree was the tree grown in large number in E1 Panai Nadu. 38 Since Palm tree and the elephant have been given prominence in Cheranadu by putting their figures on their coins 39 and having the Palm tree as their royal crest, is conceived that the Cheras were recalling their migration from Kumarrikkandam.

Harappan's mastership on Arts

It is well known that the Harappans were the great masters in fine arts such as clay moulding, casting bronzes, producing stone sculptures, painting on potteries and constructing buildings. Music and Dance should also be known to them as a few fascinating dancing figures have been unearthed. Above all they were highly educative in Arithmatics and Literature. How did they get this mastership on all these arts and literature Di they develope themselves? Or did they learn from themselves were great masters and they owed this knowledge to their ancestors who lives in Kumarikkandam. The people of Kumarikkandam seem to have been familiar with Agamas which describe the rules and regulations on all the above arts and should have been in existence during the First or Second Tamil Meet as Dr. Ganapati Sthapati assigns Pre-Vedic date to the agamas 40. The Mandira mountain where from agamas are

said to have told by Lord Siva could be one of the several Mountains being refered to as ""Panmalai" in Kumarikkandam.41 Some one can argue that the Harappans could have learnt these things from Sumerian Civilization. But it could not be possible as the style and workmanship of the sculptures and bronzes are purely different and are close to the style of South Indian.

Harappan religion

The most important factor which links Kumarikkandam with Harappan civilization is the religion. The only religion that could be ascertained from the artefacts of Harappan civilisation is Hinduism especially Saivism. Harappan Saivism could have originated only from Kumarikkandam. This is the obvious reason why Saiv saint Manikkavasakar eulogises Siva as living in South 42. That South nadu could be the land beyond the present Kanyakumari. Dhakshinamurti aspect of Siva distinctly atributes Siva as the God worshiped in the southern region i.e. Kumarikkandam. The figure which is identified as Pasupati on Harappan seals copes with the South Indian style and the animals found around Siva are also delineated in typical South Indian workmanship.

Other religious objects such as Phalus, Yoni, Bull, the figure that represent Mother Goddess and Sapta Matrika and a figure seated on a branch of the tree relate to Saivism only 43 which was the indigenous religion of Kumarikkandam.

Indus weights comparable with Tamilnadu weights

It is found by Venkatachalam that the weights prevalent in Harappan civilization are equivalent to the weights used till recently in Tamilnadu. In Indus cities a number of stone weights made of "agate" of "chert' in small and big sizes were unearthed. They are binary and partly decimal in the ratio of 1, 2, 4, 16, 32, 64, 160, 200, 320, 640, 1600, 6400, 8000 and 12800. The Indus weight of 0.871 gram is quite equal to the weight of eight Kunrimani. The Indus weights and measures appear to have been based on the Cirriakkam Table used for barter by the Tamils from time immemorial to the recent past. 44 The familiarity of Cirrilakkam and the Numerals to our ancient Tamils is proved by the discovery of standard script inscriptions and a dice 45 bearing the pictographs that are similar to Harappan symbols.

How it was possible? It could be possible if the authors of the Harappan civilization were the migrators from Kumarikkandam wherein the said system of weights and measures could have been originated and practised during Tamil meets period.

Thus Kumarikkandam was the place where language, script, art, architecture, and religion had originated and spread to the different parts of the world including Harappan region. Hence a considerable number of artefacts that are similar to Harappan objects are being discovered now a days in Tamilnadu especially in the Southern most part of it and in Sri Lanka. For more reliable evidences underwater exploration off the shore of Kanyakumarri and Sri Lanka has to be carried out.

Foot Notes

1. Elliot Scot, Lost Lemuria, PP. 23-38, Releigh, Sir Walter, History of the World, P. 99;Hackel, (1). History of Creation, Vol.1, 364, A/01.11, PP 325-326. (2) The pedigree of Man,p.99, Evan, Sir John: "The home of mankind' in the science of Man, August, 1901,p.48; Tamilnattu Varalaru, Govt of Tamilnadu publication, Tolpalankalam, (1975), pp.114-115; Dr. N. Mahalingam, Kumarikkandam - the Lost Continent, Proceedings of the Fifth International Conference - Seminar of Tamil Studies, (1981)pp 2-53-65.
2. "Dog-sized dinosaur fossil unearthed", news published in The Hindu on 08.02.2001. The discovery was announced in the Journal NATURE by a team of researchers led by paleontologist Scott Sampson of the Universityof Utah, U.S. Mathew Carrona and Catherine Forster from the State University of New Yorrk at Stony Brook, U.S.
3. R. Mathivanan, From Lemuria to Harappa (Tamil), (1977) pp.92-93.
4. Devaneya Pavanar, Mutal Taimozhi, (Tamil), (1962) introduction pp.19-32.

5. Tamilnattu. Varalaru, (Topalankalam, (1975), published by Tamilnadu State Government.

6. T.N. Subramaniam, S.I.T.I, Vol, III, part 2 (1957), P.1581.

7. Ibid p.1581.

8. Ibid p.1577

9. Ibid p. 1578

10. Sunday Observer on april 29,

Sunday times, Srilanka, 15.04.90.

11. Tamilnattu Varalaru, (Topalankalam), P.122

12. Indrapala, The Hindu, April 26, 1981

13. Natana, Kasinathan, ed. Tamilar Nagarikam (Tamil) p.268

14. I.Mahadevan, Corpus of the Tamil Brahmi Inscription, Seminar on Inscriptions, (1966) Published by the T.S.D.A. pp. 70-71; 72-73

15. S. Paranavitana, Inscriiptions of Ceylon, Vol. I, Introduction, P.XXVI, (pub 1970)

16. P.L. Samy, Tamilnattil Sinduveli Eluttoviam, pp65-66.

17. A.R.E. for 1912, Part II, Para 2, p.50

18. Alakkudi, Arumuga Sitaraman, Tamilakottolliyal canrukal, (Tamil)1994, Appendix, P.41

19. R. Nagaswamy, Demilica, Vol. I, part 1,pp.39-41, (1970).

20. Ten Padya copper plates, The Tamil Varalarru Kazhagam Publication, (1967), Talavaypuram cacanam, LL,88-89; Sivakasiccacanam, L.48.

21. Natana Kasinathan, Tamilar Kasu Iyal (Tamil), p.21.

22. Ten Pandya Copper - Plates, Sivakasiccacanam, P.181

22 A. Even now it is found in invitations that the invitee is requested to attend the function with their Churram Chula

23. Purananuru, Poem-99; 392.

24. Ten Pandya Copper-Plates, (1967), Velvikkudiccacanam, 1-39, p-22.

25. Dr. Marxia Gandhi N.Tamilaka Varalarril Athiyar Marapu (Tamil), (1998) p.44,62

26. Purannanuru, Poem - 99.

27 Dr. c. lakkuvanar, Palatami (Tamil), pp.156-157.

28. I. Mahadevan, "Corpus of Tamil Brahimi Inscriptions, ed. R.Nagaswamy, (1965), p.65.

29. Kondratov, the Riddles of Three Oceans, p.155

30. Mathivanan 6p Cit, p.133

31. Thirumurukkarrupadai, Line 274.

32. Tamil Dictionary

33. Tirumurukarrupadai, Line 268.

34. Mannimekalsi, Ulakavaravipukka Katai, Line -88.

35. Alexander Roy, Report of excavations conducted between 1899 - 1906.

36. Pathirruuppattu, Munram Pattuu.

37. Mthivanan, Op.Cit,p,136.

38. Ibid.p.125

39. Dr. Nagaswamy, R Tamil Coins A Study (1981), Plate 9 and 10.

40. Dr. V. Ganapathi Stapathi, who created God, Pub.2001, Dakshina Publishing House, Chennai.

41. Devaneya Pavanar, Tamilar Matam, (Tamil) 1902, P.124; Mathivanam, Op.Cit.p.125.

42. Thiruvacakam, Tiruvammanai-6; Kuyirpattu-7; Porrittiruvakarl,1-164.

43. Natana Kasinathan, ""contribution of Harappa Civilization toi Saivism'', Paper presented at a Seminar organised by the department of Christianity. University of Chennai, in the month of September, 2000

44. Venkatachalam K. ""A Study of the weights and Measures of the Indus Valley Civilization", Kumarikkandam and sinduveli Nakarika Malar (Tamil) 1994, pp-78-88.

45. Alagankkulam An ancient sea port, Collected Papers, p.72.

★

"ஓலைச் சுவடியை உலகறியச் செய்தவர்."

முனைவர். நா. செயப்பிரகாசு

தமிழ் இன்று நாடுகள் தோறும், ஏடுகள் தோறும் உலா வருதலுக்கும், உயர் நிலையிலிருப்பதற்கும் தொண்டாற்றிய பெருமக்கள் பலர் அத்தனை பேருக்கும் அடித்தளமாக்கும் அரிய பணியைச் செய்தவர் உ.வே.சா. அவர்கள்.

அவரது தேடுதல் முயற்சிகள் இல்லாமலிருந்தால், ஏடுகளிலிருந்து தமிழ் எவர்கைக்கும் கிட்டாமல் போயிருக்கும். சிறப்புமிக்க செந்தமிழ்ப் பாக் களும், நூல்களும் கால வெள் ளத்தில் கலந்து காணாமல் போயிருக்கும். ஏடுகளைத் தேடுதலும், ஒப்பு போக்கிப் பார்த்துத் தொகுத்தலும் தொகுத்தவற் றைப் பயன்தரு வகையில் பதிப்பித்தலும் என அமைந்த அவரது அயரா அருந்தமிழ்ப பணிகளே அவரைத் தமிழ்த் தாத்தா ஆக்கியது. அப் பெருமகனாரே 'ஓலைச் சுவடியை உலகறியச் செய்த உத்தமாவார்.

19.2.1855 இல் தாயாரின் ஊரான சூரிய மூலையில் பிறந்து, உத்தமதான புரத்தில் வளர்ந்த உ.வே.சா. இளமையிலேயே அரிச் சுவடி, எண் சுவடி, சம்பூர்ண ராமாயணம், விஷ்ணு சகஸ்ர நாமம், நீதிசாரம், ஆத்திசூடி, மூதுரை, நாலடியார், குறள், ஆங்கில எண் முறைகள் ஆகியவற்றைக் கற்றார். இசையிலும், புராணக் கதைகள் கேட்பதிலும், சித்திரம் தீட்டுவதிலும் ஆர்வம் கொண்டிருந்த அவர்க்கு நாராயண ஐயர், சி. நாதையர், கிருஷ்ணவாத்தியார், கோபாலசாமி ஐயங்கார், சிதம்பரம் பிள்ளை, ஆகியோர் தொடக்க கால ஆசிரியர்களாவர். சதகங்களையும் சங்கீதத்தையும் தன் தந்தை யாரிடம் கற்றார் உ.வே.சா.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பேரன்பும் பேராதரவும் உ.வே.சா. அவர்களின் கல்வி - வளர்ச்சிக்குப் பெருங் காரணங்களாயின மகாவித்துவானின் மறைவுக்குப் பின்னர். மேலகரம் சுப்பிரமணிய தேசிகரின் ஆதரவுடன் உ.வே.சா. திருவாவடுதுறை மடத்திலேயே தொடர்ந்து தமிழ்ப்பாடஞ் சொல்லி வந்தார். மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் தொடர்பும், தேசிகரின் உதவியும் உ.வே.சா. அவர்களுக்குப் பெருந்துணையாயின.

வேணுலிங்க விலாசம் பற்றி பாடல்களை ஒழுங்கு செய்து பலரின் விருப்பப்படி (உ.வே.சா) எழுதிய எட்டு பாடல்களுடன்) புதுப்பித்தார் உ.வே.சா இதுவே இவரது முதல் பதிப்புப் பணியாகும். தொடர்ந்து சின்னப்பட்டம் நமசிவாய தேசிகரிடம் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டும், மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லியும் வாழ்ந்து வந்தார் உ.வே.சா.

1880 பிப்ரவரி மாதம் உ.வே.சா. கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார் விரைந்து கவிதை புனையும் ஆற்றலையும், வினாக்களுக்கெல்லாம் தக்க விடைசொல்லும், புலமை சான்ற ஆற்றலையும், இலக்கியங்களுக்குப் படித்துப் பொருள் சொல்லும் ஆற்றலையும் பரிசோதித்துக் கண்டறிந்த பேராசிரியர்களும் முதல்வரும் உ.வே.சா. அவர்களின் கல்லூரிப் பணிக்குக் காரணமாயினர். 16.2.1880 இல் கல்லூரியில் முதல் நாள் வகுப்புகளில் முதல்வர் மாணாக்கர் முன் சிறப்பாகப் பாடம் நடத்தி அவரிடையே நன் மதிப்பை பெற்றார் உ.வே.சா. பின் சிறப்பனப் பாடம் நடத்தி அவர் தம் நன் மதிப்பைப் பெற்றார் உ.வே.சா.

சிலப்பதிகாரம் அச்சேறாத அக்காலத்தில் இந்திர விழவூர் எடுத்த காதை பாடமாக இருந்தது. ஏட்டுச் சுவடியிலிருந்து ஏராளமான பிழைகளால். அப்பகுதியின் பொருள் சரியாகப் புலப்படாமலும், தொடர்பில்லாமலும் தோன்றின. உ.வே.சா. கல்லூரிப் பணியேற்ற போது பாடமாக இருந்த கானல் வரி முதலான நான்கு காதைகளை விடுமுறையில் மடத்திலிருந்து சுவடிகளை நமசிவாய தேசிகருடன் ஆராய்ந்து பொருளுணர்ந்து வரையறை செய்தார்.

சேலம் பெருமாள் முதலியார் கும்பகோணத்து மூன்சீப்பாக மாற்றலாகி வந்தார். தமிழ், இசை, வடமொழிகளில் ஈடுபாடு

கொண்ட அவரை. உ.வே.சா. சந்தித்த போது, சிந்தாமணி மணிமேகலை, சிலம்பு ஆகியன படித்தறியச் சொல்லி சுவடிகளையும் தந்தார். அப்போதிருந்த சிந்தாமணிப் பதிப்பில் தெளிவின்மையால், சமணர்களின் துணையுடன் சிந்தாமணியின் சிறப்புகளைக் கேட்டு அறிந்து ணர்ந்தார். சேலம் குமாரசாமி முதலியாரின் விருப்பப்படியும் உதவியின் படியும் சிந்தாமணி ஆராய்ச்சியைத் தொடங்கித் தொடர்ந்தார். பலரது உதவியுடன் தொடர்ந்து தேடுதலின் பேரில் இருபத்து மூன்று படிகளைப் பெற்று ஆராய்ந்தார் உ.வே.சா.

பாட வேறுபாடுகளைத் தொகுத்துப், பொருத்தமான பொருளுணர்ந்து தடைப்புத் தகங்களில் குறிப்புகளைத் தொகுத்தெழுதி ஆராய்ந்தார் உ.வே.சா. நச்சினார்க்கினியர் மேற்கோள் பகுதிகள் எந்நூலில் உள்ளன என்பது எழுதப்படாதது கண்ட உ.வே.சா அவற்றைக் கண்டறியப் பழைய நூல்களைத் தொகுக்க முயன்றார். திருவாவடுதுறை மடத்திலிருந்து கலித்தொகை, பரிபாடல் நீங்கலாக எட்டுத் தொகை எட்டுப் படிகளையும், பொருநராற்றுப் படையையும் கண்டெடுத்து பொருளுணர்ந்து தொகுக்கலானார்.

சேலம் இராமசாமி முதலியாரிடமிருந்து சிலம்பு மேகலை ஏட்டுப்படிகளையும் ஏற்றார். உ.வே.சா. சங்க இலக்கியங்களின் அழகையும் ஆழத்தையும் செறிவையும் சிறப்பையும் கண்டறியத்தொடங்கினார் இடையிடையே எழுத்து பொருள் மயக்கம் பெருந் தடையை தந்தது. ஏடுகளில் எட்டுத் தொகை ஏட்டுத் தொகை எனவும் சாபம் - சர்ப்பமாகவும், சரகு - சாடுவாகவும் தாள் தான் எனவும் கருதும் வகையில் ஏடுகளும் எழுத்துகளும் இருந்தன. பலகாலம் பெரும்பாடுபட்டுச் சரியான எழுத்தை யும் பொருளையும் கண்டறிந்த உ.வே.சா அவற்றை நிலைநிறுத்தும் வகையில் பதிப்பிக்க எண்ணினார்.தியாகராசச் செட்டியாரின் விருப் பப்படி, பிள்ளையர்களின் திருக்குடந்தைப் புராணத்தின் மூலத்தைச் செம்மைப்படுத்தி பதிப்பித்தார் உ.வே.சா. சுப்பிரமணியத் தம்பி ரானின் விருப்பப்படியும் தேசிகரின் விருப்பப் படியும் திருவிடைமருதூர்த் தலப் பெருமையை யும் உரைநடையில் எழுதும் பொருட்டு உ.வே.சா. புராணங்களைப் படித்து ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மீயம்' என்னும் நூலை உரு வாக்கினார். அச்சிடும் பொருட்டுச் சென்னை வந்து அதனைச் சிறப்புறச் செய்தார் உ.வே.சா.

யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளைபல நூல்களை வெளியிட்டவர்; மேலும் பல நூல்களைபப் புதுப்பிக்க இருப்பது கேட்ட உ.வே.சா. சிந்தா மணியை விரைவில் அச்சிட உறுதிபூண்டார். விளம்பரம் செய்து பலரிடம் முன்பணம் திரட்டிச் சென்னை வந்து தங்கிச் சிந்தாமணி, பதிப்பிக்கும் பணியை முடித்தார்.

அதன்பின்னர் அடிக்கடி சென்னை வந்து அச்சுப்பணிகள் செய்தார். உ.வே.சா. சிந்தாமணி மேற்கோள்கள் சில பொருநராற்றுப்படையில் வருதல்கண்ட உ.வே.சா. அது முதல் எட்டுத் தொகை ஏடுகளையும், திருக்கோவையாரையும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும் படித்துப் பல மேற்கோள்கள் பெரும் இடங்களைக் கண்டு மகிழ்ந்து, தான் அதன்பின் பதிப்பித்த பகுதிகளில் அடிக் குறிப்பில் மேற்கோள்களால் புலப்படுத்தினார். சேர்க்க இயலாதனவற்றைப் பின்னினைப் பில் தர முடிவு செய்தார். தொடர்ந்து தமக்கு கிடைத்த சிந்தாமணி ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கி உறுதிசெய்தார். முகவுரையை அடுத்து, நூலாசிரியர் வரலாறு உரையாசிரிய; வரலாறு ஆகியவற்றையும் எழுதி னார். உரையாசிரியர் வரலாற்றின் இறுதியில், பத்துப்பாட்டுகளின் பெயர், பாடினோர் பாடப் பட்டோர் பெயர் ஆகியவற்றையும் சேர்த்தார்.

மேலும், ஆராய்ந்து பதிப்பித்த செய்தி சேலம் இராமசாமி முதலியார் பதிப்பிக்கத் தூண்டியது - பல படிகள்கிடைத்தமை ஆராய்ந்த போது பட்ட துன்பங்கள் - பொருளுதவி செய்தவர்கள் - உடனிருந்து உதவியவர்கள் - ஏட்டுப் பிரதிகளின் விவரம் எனப் பல செய்திகளையும் பதிப்பில் இடம் பெறச் செய்தார் உ.வே.சா. அச்சுக் களத்திலேயே உறங்கியும், பணப்பற்றாக் குறையால் கடும். பாடுபட்டும், பிரதிகள் தந்தவருக்குத் தக்க பொருளுதவி செய்தும் பல வகையில் பெரும் பாடுபட்டு உ.வே.சா. பதுப்பித்த படிகளைக் கண்ட பலரும் அவரைப் பெரிதும் பாராட்டினர்.

உ.வே.சா. பத்துப்பாட்டை வெளியிட எண்ணினார். தியாகராசச் செட்டியாரின் படைப்புகளை வெளியிட எண்ணியும் பத்துப் பாட்டு பதிப்பிக்கும் முயற்சியைக் கருதியும் உ.வே.சா. சென்னை வந்து செயலாற்றத் தொடங்கி னார். இடையில் தேசிகரின் மறைவும், தியாகராசச் செட்டியாரின் மறைவும் உவேசா அவர்களுக்குப் பேரிழப்பாக இருந்தன.

பத்துப்பாட்டு பதிப்புப்பணியைக் கருதி, திருநெல்வேலி செட்டியார் உ.வே.சா. நெல்லை யப்பிள்ளை வீட்டிலிருந்து கொங்குவேள் மாக்கதைச் சுவடியும், எட்டு தொகையில் கலி, பரிபாடல் நீங்கலாது ஆறு நூல்களும் கிடைத் தன. திருப்பாற்கடல் நாதன் கவிராயர் இல்லத்தி லிருந்து உரையோடு கூடிய பத்துப்பாட்டுப் பழைய ஏடு ஒன்று கிடைத்தது. பழைய சுவடி கள் சிலவும் கிடைத்தன. மறுமுறை சென்ற போது, ஆழ்வார் திருநகரில் லட்சுமண கவிராயர் மாமனார் விட்டிலிருந்து சுவடிகளையும்,

ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பாமாலை எனப் பல படிகளை வாங்கிக் கொண்டு ஊர் திரும்பினர் சென்னை மந்தை வெளி அண்ணாசாமி உபாத்தியார் இல்லத்தில் கிடைத்த சில பத்துப்பாட்டு உரைப் படிகளை யும் ஒப்பு நோக்கி, பத்துப்பாட்டு ரத்னாகர அச்சுக்கழத்தின் வழியே 1899 இல் வெளியானது. தொகுத்தார் ராச கோபாலாச்சாரியார். கருத்துப் படி அரும்பத அகராதி வொன்றும் அச்சிடப் பட்டது.

அறிஞர்கள்போற்றுதலையடுத்து, உ.வே.சா. சிலப்பதிகார ஆராய்ச்சியைத் தொடங்கினார். சேலம் இராமசாமி முதலியார் தந்தது, பிள்ளையவர்களின் மூலப்பிரதி, தியாகராச செட்டியார் பிரதி மற்றும் சில படிகளைக் கொண்டு முதலில் உ.வே.சா சிலப்பதிகார ஆய்வைத் தொடங்கினார்.

கரிவலம் வந்த நல்லூரில் தீக் குண்டத்தில் பழஞ்சுவடிகள் நெய்யில் தோய்த்துப் போடப் படுதல் கண்டு துடித்தார் உ.வே.சா. திருநெல் வேலி ஓதுவார் வீட்டில் மூலமும் உரையும் ஒருபிரதி - ஆறுமுக மங்கலத்தில் ஒரு பிரதி - ஆழ்வார் திருநகரில் ஒரு பிரதி எனப் பல இடங்களில் ஏடுகளைத் தேடிப் பெற்றார். உ.வே.சா. களக்காடு சைவமடத்திலிருந்து பத்துப் பாட்டு மூலம் முழுவதும் கொண்ட பிரதி எனப் பல ஏடுகளை தேடிக் கொண்டார் உ.வே.சா.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இசை குறித்த ஐயங்களைத் தக்கவரிடம் கேட்டறிந்து தெளிவு பெற்றார்.

1891 ஏப்ரலில் பாரிஸிலிருந்து ஜுலியன் வின்ஸோன், சிந்தாமணிப் பதிப்பைப் பாராட்டி, சிலம்பு முதலிய காப்பியங்களை வெளியிட வேண்டினார். மிதிலைப்பட்டி அழகிய சிற்றம் பலக்கவிராயர் வீட்டிலிருந்து சிலம்பு மூலம் மணிமேகலை மூலம் அடங்கிய சுவடிஒன்று கிடைத்தது. இப்பணி தமக்குக் கிடைத்த பல படிகளை ஒப்பு நோக்கியும், பாட வேறுபாடு களைந்தும் ஆய்வாளர்க்குப் பயன்படு வகையில் பல்வேறு அகராதிகளையும் கதைச் சுருக்கம், இளங்கோவடிகள் வரலாறு, அடியார்க்கு நல்லார் வரலாறு, மேற்கோள் நூற்குறிப்பு, முன்னுரை எனப் பலவற்றை எழுதிவைத்தார். 1891 இல் சிலப்பதிகாரத்தைப் பதிப்பிக்க தொடங்கினார். அடுத்துக் கிடைத்த ஏடுகளையும் ஒப்பு நோக்கித், தம் பதிப்பில் திருத்தங்களைச் செய்தும் சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்து உ.வே.சா. பெரும் பாராட்டுதல்களுக்கு உரியவரானார். பரிசுப் பொருள்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய உவேசா, பதிப்பித்தல் கடனிலிருந்து மீண்டார் என்பது குறிப்பிடப் பட்ட வேண்டியதாகும்.

புறநானூற்று ஆராய்ச்சி முறையில் புது முறையாக - சொல், பொருள், ஊர், வாழ்க்கை குறிப்பு ஆகியன தேடி, கனகசபை பிள்ளை தந்த ஊக்கத்தால் 1893 இல் புறநானூற்றுப் பதிப்பு வெளி வந்தது. பெரும் பாராட்டுதலையும் பெரும் பொருளையும் ஈட்டித்தந்த புறநானூறு பதிப்பை அடுத்துப் புறப் பொருள் வெண்பா மாலை பதிப்பும், அதனை அடுத்து மணி மேகலை ஆராய்ச்சியும் அமைந்தன.

மணிமேகலை நூலின் சமயம் கண்டறிய உ.வே.சா பௌத்த சமய நூல்களையும் செய்திகளையும் தேடித் தேடிக் கண்டுகற்று அறிந்தார். வீரசோழியும், சிவஞான சித்தியார்,

அமிழ்தம் நல்கும் தமிழ்க் கடல்

- கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்



தமிழ்தமிழ் என்றால் அமிழ்தமிழ் தென்றும்
அமிழ்(து) அமிழ் தென்றால் தமிழ்தமிழ் என்றும்
தமிழே அமிழ்தாய் அமிழ்தே தமிழாய்
தமிழ்மொழி இயல்பாய்த் தானே அமைந்தது.
தமிழுக் குள்ள தனிசச்சிறப் பிதுவே!
'தமிழுக் கும்அமு தென்றுபேர்' என்றே
தமிழ்ப்பா வேந்தரும் பாடினார் அன்றே!
தமிழில் உள்ள ழகர எழுத்தும்
தமிழ்மொழி பெற்ற தனிச்சிறப் பன்றோ!
தமிழினும் இனிய பிறமொழி இல்லை!
தமிழே இனிமை எனப்பொருள் படுமாம்!
தமிழ்த்தொண்டு செய்வோர் சாவ தில்லை
தமிழைக் கற்றால் வாழ்நாள் நீளும்!
தமிழை வளர்த்தோர் தமிழாய் வாழ்வர்!
தமிழால் வளர்ந்தோர் தமிழையே வணங்குவர்!
தமிழ்ஒரு மாக்கடல்; அமிழ்ததன் புனலாம்!
தமிழ்க்கடல் விளைத்த இலக்கிய முத்துகள்
தமிழ்போல் என்றும் ஒளிர்ந்து மிளிரும்!
தமிழ்ஒரு பூம்பொழில் தேன்சுவை நல்கும்
தமிழ்மலர் என்றும் நறுமணம் கமழும்
தமிழில் மலர்ந்த மலர்களை மொய்க்கத்
தமிழ்த்தே னீக்களே பறந்து வருக!
தமிழை மறந்தோர் தாயை மறந்தோர்!
தமிழர் என்போர் உணர்ந்து கொள்க.
தமிழுணர் வழிந்தால் தமிழினம் அழியும்
தமிழா தமிழா தமிழ்மற வாதே!
தமிழன் என்பவன் யாவன் என்றால்
தமிழைத் தாயினும் மேலாய் மதிப்பவன்
தமிழனாய் வாழ என்றும் விழைபவன்
தமிழில் தன்பெயர் சூடுடிக் கொள்பவன்
தமிழ்ப்பெயர் குழந்தைக்குச் சூட்டி மகிழ்பவன்
தமிழில் கலவி கற்கச் செய்பவன்
தமிழையே வீட்டிலும் நாட்டிலும் பேசுவோன்
தமிழிசை யேதன் இசையெனச் சொல்பவன்
தமிழமறை யாகக் குறள்நெறி ஏற்றவன்
தமிழ்க்கலை வளர்வதைக் கண்டின் புறுபவன்
தமிழ்ப்பண் பாட்டினை உயிரெனக் காப்பவன்
தமிழில் பிறமொழி கலவாது தவிர்ப்பவன்
தமிழின் பகையைத் தயங்கா தெதிர்ப்பவன்
தமிழர் திருநாள் பொங்கலே என்பவன்
தமிழைப் பழிப்பவன் தருக்கை அழிப்பவன்
தமிழாய்ச் 'சாதி'யை ஏற்க மறுப்பவன்
தமிழர் அனைவரும் ஓரினம் என்பவன்
தமிழைப் பிழையற எழுதுவோன், பேசுவோன்
தமிழைச் செவ்விய மொழியென உரைப்பவன்
தமிழ்மொழி உலகெலாம் பரவும்வா காண்பவன்
தமிழ்க்குத் தீங்கெனில் பொங்கி எழுவோன்
தமிழன் என்பதில் பெருமை கொள்வோன்
தமிழா உன்னைநீ ஆய்ந்து பார்ப்பாய்
தமிழனின் இயல்புகள் உன்னிடம் உளவோ?
இத்தனை இயல்புகள் இல்லையென் றாலும்
பாதி யேனும் உளவேவா பகர்வாய்!
மீதி யையும் நீ முடிந்த வரையில்
கைக்கொள முயல்வாய் தமிழா இன்றே

பரபக்கம் ஞானப்பிரகாசர் உரை ஆகியவற்றில் வரும் பௌத்த சமயக் கருத்துக்களையும் கண்டுணர்ந்தார். பௌத்த சமயக் கருத்துக்கள் மணிமேகலையில் தைரியமாகவும் நயமாகவும் கூறப்பட்டிருத்தலை உ.வே.சா. கண்டு மகிழ்ந் தார். இலங்கையோடு தொடர்பு கொண்ட பௌத்தரோடு தொடர்புடைய சிலகுறிப்பு இடங் கள் பற்றியும் உ.வே.சா அறிந்து கொண்டார்.

ஜி.யு.போப், உ.வே.சா. அனுப்பியிருந்த சிந்தாமணி, புறப் பொருள் வெண்பா மாலை பதிப்புகளைப் பாராட்டி எழுதினார். நாலடியார் படியொன்றை அனுப்பியதுடன், புறப்பொருள் வெண்பா மாலைச் செய்யுட்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் அனுப்பி யிருந்தார்.

ஜுலியன் வின்லோன் - ஜி.யு.போப் ஆகியோரது பாராட்டு உ.வே.சா. அவர்களுக்கு பேருக்கம் தந்தது. அதனையடுத்து மணிமேகலை ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, பெருங்கதை ஆகியனவற்றைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

உத்தமதான புரத்தில் பிறந்த உ.வே.சா ஆசிரியராகி - ஆராய்ச்சியராகி - பதிப்பாசிரி யாகி உரையாசிரியராகி, ஓலைச்சுவடிகளை உலகறிய செய்த பெருமகனாராக விளங்குதல் பெருஞ்சிறப்பாகும் - தமிழின் பெருமைக்கும் - தமிழரின் வரலாற்றுச் சிறப்பிக்கும்; சிலப்பதி காரம், மணிமேகலை இரண்டையும் ஏடுகளால் உலகறியச் செய்த உயர் பணிக்கும் உரியவரான உ.வே.சா. அவர்கள் புகழ் எப்போதும் நின்று நிலைக்கும். ★

தொன்மைத் தமிழ்மொழி இலக்கியங்களில் அண்மைக்காலச் சிந்தனைகள்

டாக்டர் கஸ்தூரி ராஜா

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்தக்குடி நம் தமிழ்க்குடி என்பது வரலாற்று உண்மையாகும்.



இந்தத் தமிழ்க்குடியில் பிறந்த தமிழ் வாணர்களின் சிந்தனையில் முகிழ்த்த இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இன்றும் நம் பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கு கின்றன.

இந்தத் தொன்மைத் தமிழ்மொழி இலக்கியங்கள் அண்மைக்காலத்தில் உலகுக்கு வேண்டிய சிந்தனைகளை எவ்வாறு வெளிப் படுத்தின என்பதையும், அச்சிந்தனைப் பெட்டகங்கள் இன்றைய மக்களுக்கு எவ்வழியில் பயன்படும் என்பதைப் பற்றியும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இடவரையறையைக் கருதி, எட்டுத் தொகையில் குறுந்தொகை, கலித்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியார், திருக்குறள் பழமொழி நானூறு மற்றும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களில் அண்மைக் காலத்திற்கு வேண்டிய சிந்தனைகள் எங்ஙனம் குறிப் பிடப்பட்டுள்ளன என்பதைப் பற்றி இனி பார்ப்போம்.

இன்று மனிதன் கண்டதே காட்சி, கொண் டதே கோலம் என்று வாழ்ந்து, அறநெறியில் பிறழ்ந்து சுயநலத்துடனும், தன்னலத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறான். இந்நிலை நீடிக்கு மானால் உலகம் வெகுவிரைவில் அழியும். எனவே, நாம் தொன்மைத் தமிழ் இலக்கியங் களைப் படித்து பொற்காலத்தை உருவாக்க முயல வேண்டும்.

தனிமனிதன் :

நல்லதோர் உலகம் உருவாக தனிமனித ஒழுக்கம் மிகவும் இன்றியமையாததாகும். இதனை,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

(புறம் : 187)

என்ற பாடலால் அறியலாம்.

வீடு நன்றாக அமைந்தால் தான் நாடு செழிக்கும். நாடு செழிப்பின் உலகம் மலர்ச்சியுறும். மனிதனாகப் பிறந்தவனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், என மூன்று இன்றியமையாத தேவைகள் நிறைவேறும் வகையில் அவன் வாழும் நாட்டில் சூழ்நிலை அமைந்திருக்க வேண்டும். ஆனால் இங்கு இளைஞர்கள் தன்னிறைவு பெறாது, மேனாடு செல்லும், ஏன் அங்கேயே குடியுரிமை பெற்று தங்குகின்ற குறைநிலை மிகுந்துள்ளது. இச்சிக்கல் தீர இளைஞர்கள் சுயதொழில் செய்து நாட்டை முன்னேற்ற வேண்டும். அப்பொழுது தான் குடும்ப உறவுகள் சீராய் அமையும்.

குடும்பத்தில் சிறப்பாய் வளர்கின்ற, பெண்ணுக்குத் தகுந்த துணையைத் தேர்வு செய்வதிலும் பிரச்சினை மிகுதியாக உள்ளது. இதனால், பெண் வயதால் முதிர்ந்து முதிர் கன்னியாகிறாள்.

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று"

1007

என்ற இக்குறட்பாவிலிருந்து இளமையில் மணமே மனம் நிறைந்தது என்பதனை உய்த்துணர முடிகிறது.

காதல் :

இன்று சாதி, மத, இன மாறுபாட்டால் காதலர் இருவர் பிரிய நேருகின்றது. இந்தச் சிக்கலுக்குத் தீர்வாக நமக்கு இலக்கியங்கள் வழி காட்டுகின்றன. உடன் போக்கு மேற்கொண்டு மணம் புரிந்து கொண்ட தலைவன் தலை வியரைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் நவில்கின்றன. (குறுந் : 7) (குறுந் : 229) (நற் : 110) பிறகு, இருவரும் இணைந்து இல்லறம் நடத்துங்காலத்து பெறுவதற்கு அரிய மக்கள் பேற்றைப் பெறுகின்றனர். இதனை,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு''

60

என்ற குறட்பாவால் அறியலாம்.

இல்லறத்தானின் கடமைகளாக,

''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''

437

என்று கூறி,

''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை''

41

என்று வள்ளுவர் ஆண்மகன் என்பவன் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவர்க்கும் உற்ற துணையாக விளங்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

இதனையே நாலடியார்,

''சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழுன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிந்தான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்''

(197)

என்ற பாடலின் மூலம் உணர்த்துகிறது. ஆனால் இன்று சில குடும்பங்களில் பெற்றோர் முதியோர் இல்லங்களுக்குத் தள்ளப்படுகிறார் கள்.

இன்று சில குடும்பங்களில் பொருளீட்டும் பேராசையால் கணவனும், மனைவியும் வெவ் வேறு இடங்களில் தங்கிப் பொருளீட்டுகின்ற னர். இதனால் இல்லற இன்பமும் தவணை முறையில் துய்க்கின்றனர். இதனால், தவறு செய்ய வாய்ப்புகள் அதிகமாகின்றன. இப்போக் கால், எய்ட்ஸ் போன்ற உயிர்க் கொல்லி நோய்கள் உருவாகவும் காரணமாகின்றது. இந்நிலை மாற இன்றைய இளைஞர்கள் அக இலக்கியங்களை ஆழ்ந்து படித்தல் வேண்டும்.

சமுதாயம் :

மக்களிடையே ஒருவருக்கொருவர் அன்பு டன் மனிதநேயத்துடன் பழகுவது அருகிக் கொண்டு வருகிறது. அதனால் பகுத்துண்டு வாழும் பண்பு ஒரு சில இடங்களில் மறைந்து விட்டது. பகுத்துண்டு வாழ்தலே எல்லா அறன்களிலும் தலையானது ஆகும். இதனை,

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

(322)

என்கிறது.

இல்லறம் சிறக்க, புறம் *(189; 7-8) (173 : 11)(361 : 6) (234 : 5-6)* போன்ற அடிகளைப் படித்து நினைவில் இறுத்த வேண்டும். மேலும் மனிதநேயம் தழைக்க (புறம் *(157:2) (43 : 16) (195 : 6-7) (134 : 1-2)* புறப்பாடல் காட்டும் வழிப்படி நடக்க நாடு நலமுறும்.

இதனை;

''தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே''

(புறம் : 182; 8-9)

என்ற அடிகளால் அறியலாம். இதனைப் பத்துப்பாட்டு இலக்கியத்தாலும் உய்த்துணர லாம். மதுரைக்காஞ்சி *(527-535)* பட்டினப் பாலை *(44-45)* போன்ற இலக்கியங்களில் மூலம் உண்டி கொடுத்து மகிழ்விக்கும் முறையை அறிய முடிகிறது.

நாடு : நாட்டில் எங்கு நோக்கிலும் சாதி, மத, இனப்போராட்டம் சார்ந்த அழிவைப் பற்றிய செய்திகளே மலிந்துள்ளன. இதற்குக் காரணம் சமயக் காழ்ப்புணர்வுகளேயாகும். இந்நிலை மாற,

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

(972)

என்ற குறட்பாவை நினைவு கூர்தல் வேண்டும். மேலும், கலித்தொகை *(26:1-6)*; *(104:8-14)* மதுரைக்காஞ்சி *(453 - 483)*; மணி *(1-54-56)* ஆகிய அடிகளை ஊன்றிப் படிப்பின் சாதி, மத, இனப்போராட்டம் நீங்கிப் பொது மையறப் பண்பு பூத்துக் குலுங்கும் பண்டைக் காலத்தில் ஐவகை நிலத்திற்கு ஐவகைத் தெய்வங்கள் இருப்பினும், மக்கள் மனதில் மதப்பூசல்களுக்கான தீய உணர்வுகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி :

இன்று கல்வி அனைவருக்கும் எளிமை யாகக் கிட்டும் வாய்ப்பு இல்லையெனலாம். பண்டைக் காலத்தில் இந்த மாறுபாடான நிலை இருந்ததாக அறிய இயலவில்லை. உலகம் முழுவதையும் ஒருணர்வுடன் நோக்கும் தன்மையை உருவாக்குவது கல்வியே ஆகும். இதனை:

''ஆற்றவுங் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்று நாடாகா; தமவேயாம்; ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்''

(பழ : 4)

என்ற பாடலால் அறியலாம்.

மொழி :

கல்வியோடு மிகவும் நெருங்கிய தொடர் புடையது மொழியாகும் உலகில் தோன்றிய அனைத்து மொழிகளும், ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்புடையதாகும். இதனை மறந்து ஒருவருக்கு ஒருவர் தம் மொழிச் சிறப்பினை நிலைநாட்டும் போது, பிற மொழியினைத் தாழ்த்திப் பேசுகின்ற அவைநிலையினால் மொழிச் சண்டை, வலுத்து அழிவு நிலைக்குச் செல்கிறது. இந்நிலை மாற வேண்டும். பண்டைக் காலத்தில் மக்கள் பல்வேறு மொழிகளைக் கற்று, மாறுபாடு இல்லாது வாழ்ந்தனர் என் பதனை நமக்கு இலக்கியங்கள் பறை சாற்று கின்றன. *(பட்டின 216-217) (சிலம்: 6:130-133)* இதனை;

''பல்வேறு குழா அத் திசையெழுந் தொலிப்ப''

- மதுரை 360

அடியால் அறியலாம். மொழிக்கு இடையே ஆன ஒருமைப்பாடு வளரவளர உலக ஒருமைப் பாடு வளர வழி வகுக்கமெனலாம்.

நீக்க வேண்டிய பகை :

''உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு''

(734)

என்ற குறட்பா மூலம் பசியெனும் பிணி நாட்டில் இல்லாமல் ஓட்ட வேண்டுமென அறிய முடிகிறது. ஆனால் இன்று ஒருபக்கம் வளமையும் ஒரு பக்கம் வாட்டமும் மலிந்திருப் பதைக் காணலாம்.இதனைச் சரியாக்க சமப் படுத்த, பண்டை இலக்கியங்கள் காட்டும் வழி செல்ல வேண்டும். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று எண்ணுகின்ற உயர்உணர்வு, ஏழ்மையில் வாடிய தலைவர் களிடம் இருந்தமையைத் தெளிவாக உணர முடிகிறது. இதனை:

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்

(தொல் : புறத்: 30)

என்ற பாடலால் அறியலாம். இதனையே மணி : *(11.93-96) (16:133 - 135) (11:76-81)*; ஏலாதி 9. அனைத்து இலக்கியங்களும் வலியுறுத்து கின்றன. (குறள் : 221-230) இதனை;

''அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்''

(மணி :25 : 228 - 231)

என்ற அடிகளால் அறியலாம்.

உலகம் :

உலகில் மக்கள் தங்களுக்குள் பகைமை யைப் பாராட்டாது;

தமிழாள்வது எக்காலம்?

கவிஞர் பிரபாகர் பாபு

திக்கும் முத்தமிழில் இருள்நீக்கும் பொன்விளக்கில்
எத்திக்கும் சுடரேற்றி இளைப்பாறல் எக்காலம்?
யுகம்நூறு போனாலும் அணையாத தவத்தீபம்
செகமெங்கும் கோலோச்சி அரசாள்வ தெக்காலம்?
தமிழ்க்காற்று வீசாத நாடில்லை தரணியில்
எனக்கேட்டு செவிக்கூட்டம் சுகம்கூட்டல் எக்காலம்?
அழகாலும் சுவையாலும் முதலான எம்அன்னை
உலகாளும் திலகமென உயர்வாதல் எக்காலம்?
என்நாவில் வரமான என்சுவாச தெய்வதமே
எந்நாவிலும் ஒலிக்கப் புலன்சிலிர்ப்பது எக்காலம்?
தனக்கென்று நிகரற்று ருசிகொண்ட மொழிச்சாறு
தமிழ்என்று புவிகூற மனம்குதிப்ப தெக்காலம்?
கலையூட்டி கவியூட்டித் தோளுக்குத் திறனூட்டும்
விலையற்ற அமுதென்று பதிவாதல் எக்காலம்?
வைரங்கள் மணிகளென வரம்பின்றி தந்தாலும்
வையத்தில் சுகம்இந்த தமிழென்ப தெக்காலம்?
பன்னாட்டுத் தமிழுறவின் பலம் ஓங்கி மெருகேறி
எந்நாட்டிலும் ஊடி வேரூன்றும் அக்காலம்!

என்று குறட்பா வழி நடந்தால் நல்லதோர் உலகம் உருவாகும்.

''உளநாள் சிலவா லுயிர்க்கேம மின்றாற்
பலர்மண்ணுந் தூற்றும் பழியாற் - பலருள்ளுங்
கண்டா ரோடெல்லா நகாஅ தெவனொருவன்
தண்டிப் தணிப்பகை கோள்''

(நாலடி : 324)

என்ற பாடலின் வழி வாழ பகைமை மறக்கும் மனப்பாங்கு (நான்மணி. 88) வளரும். தீவிரவாதமும் பிறநாட்டை அழித்து விடும் பொல்லாப்பும் மறையும்.

அறிவியல் வளர்ச்சியின் பயனான அணு குண்டுகளின் ஆதிக்கத்தின் காரணமாக அநேக நாடுகள் வரைப்படத்தின் வறண்ட பாலையாகக் காணப்படுகின்றன. இந்நிலை மாற உலக ஒருமைப்பாட்டுணர்வு வளர மனதைச் செம்மை செய்ய வேண்டும். மனமது செம்மையானால் மன்பதை பொலிவுறும்.

'' யாதும் ஊரே யாவரும் கேளிர்''

192 : 1

என்ற ஓர் அடி நமக்கு உலக உண்மை உணர்த்தும் உன்னத அடியாகும். ஒன்றே உலகம் என்ற எண்ணத்தில் பண்டைப் புலவர் வாழ்ந்தனர் என்பதனை அவர்தம் பாடலடிகள் நமக்கு உணர்த்துகின்றன. (திரு.முரு.1) புறம் *(29;23-24) (18 : 18 - 19) (358 : 1-31) (356 : 7-8) (206 : 13) (207 : 71) (169 : 1-6) (1:11) (195:8) (163:7) (165:1-2) (203:3)* கலி *(34:1-2)* குறுந் *(101:1)* மணி : *(11:93-96) (25:228-231)* குறள் : *13, 140, 215, 425, 426, 542, 773, 871, 874* - இவை போன்ற இலக்கியங்கள் உலகம் சார்ந்த பார்வையை அன்றே எண்ணி எழுதப்பட்டன என்பது தமிழர்களின் பரந்த எண்ணத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகும்.

இன்று உலகம் அழிவுப் பாதைக்குச் செல்லுவதற்குக் காரணம் மூவாசைகளாகும். இந்த ஆசைகளை அறுப்பதற்கு நம் புலவர்கள், அறிவுறுத்திய வழி நிலையாமை உணர்வாகும். திணை, காஞ்சித்திணையாகும். இதனை;

''பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றாலும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே'' -

தொல். புறம் : 18

என்ற அடிகளால் அறியலாம்.

இத்திணையை மக்கள் ஆழ்ந்து படித்து உண்மையை உணரின் தீய சக்திகள் மண்ணோடு மண்ணாக மறைந்து நல்லதையே சிந்தித்து நல்வழி பெற முயல்வர். விழுமிய தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் வீடு, நாடு, உலகம் - என அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படும் வகையில். பரந்த நோக்கத்துடன் எழுதப் பட்டவையாகும். இவ்விலக்கியங்கள் கூறும் உண்மை உணர்ந்து நடப்பின், அண்மைக்கால சிக்கல்களுக்குத் தீர்வு தரும் சிறந்த சிந்தனைச் சிதறல்கள் என்பது அனைவரும் மறுக்க முடியாத உண்மையெனலாம்.

வாழ்க தமிழ் வளர்க!! ஓங்குக!!!

★

எக்காலமும் உயிர்மொழியாகத் தமிழ்!

டாக்டர் பெ.ராசேந்திரன்

வளர்ந்துவரும் அறிவியல் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பத் தமிழை மக்கள் பயன்பாட்டு மொழியாக வளப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய காலச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு மொழி என்பது உயிர்வாழும் சூழலில் வாழ்வியல் அணுகுமுறையோடு உருவாக்கப்பட்டது என்பர். இந்த மொழி மனிதன் பார்க்கும் காட்சிகளைப் பின்னணியாகக் கொண்டது. ஆனால் அந்த மொழியின் ஒலி, பொருள், கட்டமைப்பு ஆகியவை மாறாது. இவைதான் மொழியினது அடிப்படை குணாம்சத்தை நிர்ணயிக்கின்றது. இது மனிதன் சார்ந்துள்ள சூழ்நிலைக்கு ஏற்பவே அமையப் பெறுகிறது. இந்த மாறாக் கோட்பாடுகள் ஒருவரையறைக்குட்பட்டவை. ஒரு மொழியை மொழியினுடைய ஒலி, பொருள், கருத்துக் களை வெளிப்படுத்தும் திறன், கதை சொல்லும் ஆற்றல் என்ற நிலைகளில் ஆய்வு செய்யும் போது, அந்த ஆய்வு அந்த மொழியினது மாறாத கோட்பாட்டை உணரச் செய்யும். இந்த அணுகுமுறைகளைக் கணக்கில் கொண்டு ஆய்வு செய்யும்போது, உலகத்திலுள்ள அத்தனை மொழிகளிலும் ஒரே ஒரு மொழிதான் இதற்கு ஒத்துப்போகிறது. அந்த மொழி தமிழ் மொழி என்று உலகியல் மாபெரும் மொழி அறிஞர் நோம் சாம்ஸ்கி (Noam Chomsky) கூறுகிறார் (2002:30) அதறற்கு அடுத்ததாக உள்ள மொழி சுவாகிலி என்றும் கூறுகிறார். இதனால்தான் தமிழை உலகின் மூத்த மொழி என்றும் (எம்.கே.ஈ.மல்லானா, 1982:197) தமிழனை

'கல்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி' என்றம் கூறுகின்றார்கள் போலும்.

இத்தகைய சிறப்புடைய மொழியாகத் தமிழை நோம் சாம்ஸ்கி கூறினாலும், நாம் அவற்றைத் தொடர்ந்து உயிர்மொழியாகக் கொள்ள வேண்டும் எனில் அதற்காக நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் பல உள்ளன. இதற்கு அடிப்படையாக அமைபவை மொழி வளர்ச்சி ஆகும் அப் போதுதான் அது 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற உயர்நிலையை எட்டும்.

தமிழில் மொழி வளர்ச்சி தமிழின தன்மைக்கு ஏற்ப இருக்க வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டுப் பார்க்கும் போது, திராவிடமொழி இனமில்லாத வேற்று மொழிச் சொற்கள் தமிழில் புகும் போது, அவை தமிழின் தன்மைக்கு ஏற்றவாறு மாற்றப்பட வேண்டும் (மயிலை சீனி. வேங்கடசாமி, 1966:28-29). இன்று உலகம் கிராமமாக சுருங்கிவிட்டது. அதன் காரணமாக நாம் தினந்தோறும் புதிய புதிய கருத்துக்களையும், எண்ணங்களையும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நாமும் மேலைநாடு களுடன் சரிசமமமாக முன்னேற வேண்டும் எனில் அந்நாடுகளின் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியும் நம்மொழியில் இடம் பெற வேண்டும். அவை தமிழ் மரபுக் கேற்ப அமைக் கப்படவேண்டும்.

இவ்வுலகம் பரந்துபட்டது. இவ்வுலகத் துப் பலவகைப் பொருள்கள் தன்மைகள், செயல்கள், உள்ளன. அதுபோல, மொழி பேசும் மக்களும், அறிவும், ஆற்றல்களிலும் வேறுபாடு உடையவர்கள். அவர்களும் அதற்கேற்பவே உலகத்துப் பொருள்களைத் தம் மொழியில் உணர்த்த முற்பட்டிருக்கிறார்கள். மனிதனின் வாழ்வில் எவ்வெப்போது எந்தெந்தப் பொருள் கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனவோ, அந்தந்தப் பொருள்களுக்கு உரிய சொற்கள் அவ்வப்போது தோன்றிருக்கும். பிற மொழியார் வந்து கலந்தபோது, தொடர்பு இல்லாத பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் உரிய சொற்கள் வந்து புகுந்திருக்கும். இயல்பாக தோன்றி பல கருத்துக்களுக்கும் தாமே அவ்

வப்போது சொற்களைப் படைத்துக் கொண்டனர் (மு.வரதராசன் மறுபதிப்பு 1990 : 19-20) இந்த அடிப்படையில்தான் தற்கால மொழியின் வளர்ச்சியும் அமையும். ஒரு மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டிய அமைப்பு, அரசு என்று கூறலாம். அதனால்தான் அரசன் எவ்வழியோ அவ்வழியே மக்கள் என்று கூறினார்கள் போலும் அரசு நவீன தகவல் தொழில் நுட்பத்தை மற்ற மொழிகளுக்கு இணையாக தமிழில் வளர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுவாகத் தமிழ் என்றால் இலக்கியத்திற்கு மட்டும் உரியது போலவும், அறிவியலுக்கு ஏற்ற மொழியல்ல என்பது போலவும் கருதுகின்றனர். இதற்குக் காரணம் மேலை நாட்டு அறிவியல் தொழில்நுட்பம் இன்னும் தமிழ் மொழியில் அதற்கேற்ப வளர்ச்சியடையாததே என்று கூறுகின்றனர். இதற்கு அரசுதான் உரிய வல்லுநர் குழுவை அமைத்து ஆக்கப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்தாக நாம் தாய்மொழிக் கல்விக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றும் கூறலாம். மாணவர்கள் மத்தியில் தாய்மொழி மீது ஓர் பற்றை ஏற்படுத்த வேண்டும். அதற்கு அவர்களை, அதனை நோக்கிச் செயல்நோக்கப் (Motive) படுத்த வேண்டும். அதற்கான உரிய பாடத்திட்டங்களை வகுத்து தமிழை எளிமையாகக் கற்றுக் கொடுக்க முன் வரவேண்டும். அதற்கான பாடத்திட்டத்தை நடுவண் அரசின் இந்திய மொழிகளின் நிறுவனம் (டி.பி.பட்நாயக்,1977:6) உருவாக்கியுள்ளது. தாய்மொழியை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் முன் அதனது புறவயத்தை (Objectives) வரையறை செய்து கொள்ள வேண்டும். இந்தப் புறவயத்தை அடிப்படையாகக் கொண்டு மொழிப் பாடத்தை அடிப்படை நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை என்று மூன்று நிலைகளாக டி.பி.பட்நாயக் (மேலது) திட்டம் வகுத்துக் கொண்டுள்ளனர்.

மொழிப்பாடம் மாணவர்களுக்கு ஒரு சுமையாக இருக்கக் கூடாது. அது கற்போரின் செயற்பாடு, மொழியின் நோக்கம் அல்லது செயல் தேவை ஆகியவற்றைப் பொறுத்து அமையும். இது உரிய கவனத்துடன் கூடிய உரிய நெறிமுறைகள் (Methods), பொருள்கள் (materials) ஊடகம் (Media) ஆகியவற்றைக் கொண்டு கற்றுக் கொடுக்கப் படவேண்டும். தாய்மொழியைக் கற்றுக் கொடுக்கும் போது அவர்கள் ஏற்கனவே அம்மொழியைப் பேசத் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு அம்மொழியின் காட்சி உருப்படுத்த முறையை (Visual representation system) கற்றுக்கொடுக்க வேண்டும். அதில் அவர்களை முழுமையாகத் தேர்ச்சியடையச் செய்ய வேண்டும். பின் அவர்களுக்குப் பொதுத் தமிழ் பேச்சுத் தமிழ் ஆகியவற்றின் பல்வேறு கூறுகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும். பின் பல்வேறு எழுத்து நடை, எழுத்தின் தன்மை அல்லது வகை (genres) ஆகியவற்றையும் கற்றுக்கொடுக்க வேண்டும். அதன்பின் அறிவியல், தத்துவம் போன்றவற்றிற்குரிய பல்வேறு அடையாளங்களைக் (Registers) கற்றுக் கொடுக்க வேண்டும். பின் மொழியின் பல்வேறு வழக்குகள் (Varities), பல்வேறு பயன்பாடு ஆகியவற்றையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பொதுவாக அடிப்படை நிலையில் (முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை) பாடத்திட்டம், சமூக அங்கீகாரம் பெற்ற மொழி வடிவம் (Form) வாசித்தல், எழுதுதல், எண்கள் உறவுநிலை போன்ற பயன்பாட்டு மொழியினைச் சுற்றியுள்ள செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அது சமூகத்தின் மதிப்புறு மாதிரியும் (Prestigious model) இருக்க வேண்டும்.

இப்பாடத்திட்டம் குழந்தைகளுக்கு எழுத்துக்களைத் தனியாகவும், சேர்த்தும் அடையாளம் (Recognise) கொள்ளும் வரை பயிற்சியுடன் கற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வெழுத்துக்கள் வார்த்தைகளாகவோ சிறிய வாக்கியங்களாகவோ இருக்கலாம். மேலும் அதனை அறிவுணர்திறன்

(Comprehenson) செய்யவும், ஆற்றொழுக்காக (Fluent) படிக்கவும் தெரிய வேண்டும். சிறிய அளவில் கட்டுரை எழுதுதல், ஒரு நிகழ்ச்சி அல்லது விரிவுரையை (narration) வாய்மொழி யாகக் கூறல், எழுத்துவடிவத்தைப் பேச்சு விரிவுரையாகக் (Spoken narration) கூறல், ஒரு கதை அல்லது கலந்துரையாடலை (discussion) சுருக்கி வாய்மொழியாக அல்லது எழுத்து வடிவத்தில் சொல்லல், கடிதம் எழுதுதல், பாடுதல், கவிதைகளை ஒப்புவித்தல் என்ற நிலைகளில் அமையப் பெற வேண்டும்.

பாடத்திட்டம், மாணவர்களுக்குப் பரிச்சய மான அனுபவங்கள், தன் ஆரோக்கியம் (Personal Hygiene), சூழல், சமூக உறவு, அத்துடன் கூடிய சமூக கோட்பாடுகள் அல்லது ஆச்சாரங்கள், புராணக்கதைகள் (myths), பழைய கட்டுக்கதைகள் (legends) கதைகள் (Tales) மற்றும் குழந்தைகளுக்குரிய பரிச்சயமான உள்ளடக்கம் (Content) போன்றவற்றை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். மேலும் இயற்கையை உற்றுநோக்கல் (Obser vation of nature), சமூக ஆய்வுகள் (Social Studies) சார்ந்த பாடங்களை, மொழி சுற்றி வட்ட மிடுவது போல (Encompass) பாடத்திட்டம் இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது தான் அறிவியல் சிந்தனைகள் மாணவர் களிடையே தளிர் விடுவதற்கும், வளர்வதற்கும் அதிக வாய்ப்பு உள்ளது.

இரண்டாம் நிலையில் (ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை) பாடத்திட்டம் மாணவர்களுக்கு மொழியை அறிவுணர்திற னுடன் தெளிவாகக் கற்றுக் கொடுத்தல், கொடுக்கப்பட்டத் தலைப்பைத் தெளிவாக எழுதச் செய்தல், செயலில் கலந்து கொள்ளல் ஆட்டத்தில் பாத்திரமாதல், மொழிபற்றிய அடிப்படைக் கருத்துக்களைக் கூறல், சமூக செயல்பாடுகள், மொழி வழக்குகளின் பல்வேறு செயல்பாடுகள், முறை மற்றும் முறைசாரா நடைகள், இலக்கிய மொழி நடை மற்றும் பேச்சு மொழி நடை ஆகியவற்றை வேறு படுத்துதல், அடையாளம் காணல் ஆகியன வற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேலும் அவர்களின் சொந்த கலாச்சார வழக்கங் கள் தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்த வேண்டும். இதற்குப் பரந்துபட்ட பாட உள்ளடக்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இத்துடன் இதற்குத் தேவையுடைய இலக்கியம், மொழியின் சிக்கல் (Complexity) தன்மைகள் ஆகியவற்றை உரிய விளக்கங்களோடு கற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

மூன்றாவது நிலையில் (11 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை) பாடத்திட்டம் மாணவர்களின் படைப்பாற்றல் (Creative), உணர்ந்து பாராட்டும் திறனாய்வு (Critical appreciation) ஆகியவற்றை வளர்க்கக் கூடிய இலக்கியத்தை அறிமுகப்படுத்துதல், மொழி யின் அறிவியல் தன்மை, மொழியின் தத்துவம் ஆகியவற்றை அறிமுகம் செய்தல், மொழியின் வழி எந்தப் பாடத்தையும் கற்பதற்கு இடர்ப் பாடு இல்லாநிலையில், மொழியியல் கூறுகள் கொண்டு மொழியின் முறையான இலக்கணத் தைக் கற்றுக் கொடுத்தல், ஆகிய தன்மைகளைக் கொண்டு இருக்க வேண்டும் மொழியின் உள்ளடக்கம், பாதுகாக்கக் கூடிய சமூக சிந்தனைகள் உடையதாகவும், மூடநம்பிக் கையை வேரறுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இந்தப் புறவயத்தை (Objectives) அடைய ஆசிரியர் கற்போர் இவர்களின் மனப்பான்மையில் ஓர் அறிவுணர்திறன் மாற்றம் தேவை. இந்த மாற்றத்தைப் பாடநூல் (text book), தேர்வு (examination), கற்போர் ஆகிய நிலைகளில் உருவாக்க வேண்டும்.

இதைவிட, ஒரு மொழியைச் சரியான உச்சரிப்புடன் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு மொழி ஆய்வுக் கூடம் (language laboratory) ஒவ்வொரு தொடக்கப்பள்ளியிலும் ஏற்படுத்த வேண்டும், தமிழை மேலும் தழைத்தோங்கச் செய்ய குறைந்தது +2 வரை தமிழ் வழிக் கல்வியைக் கட்டாயமாக்க

சிவனுக்கு விண்ணப்பம்

கவிஞர் ம. இளங்கீரன்

வான வெளிமீது வந்தவனே! தோடுடையாய்!
கானக் குரல் அழுகை காதினில் கேட்டவுடன்,
ஞானத் தமிழ்பொழிய நாவினிக்கப் பாலூட்டிப்
போனஉன் ஏழிசைஇப் பூவுலகில் கேளேனோ?

''நாவுக் கர''சென நல்லபெயர் கொண்டழைத்தாய்!
பாவுக்(கு) ஏங்கிநீ, 'பாடுகலென்று சொன்னமொழி
''கோவிலுக் குள்ளே நுழையக் கூடா(து)'' என்றவரைக்
காவு கொடுக்கிறநாள் கடுகித்தான் வாராதோ?

சுந்தரச் செந்தமிழைச் சொந்தமெனக் கொண்டிங்கே,
வந்த பெருமான்நீ, வழ்கிட்ட தெந்தமொழி?

அந்தமிலா அம்மொழிக்(க) ஆட்சி மொழி உரிமை
இந்திய நாட்டிலே இடமளிக்க லாகாதோ?

அணிதிரு முறைகள் ஆலயத்தே கேட்டுநீ,
பணிகொண்டாய்! நல்ல பனை ஓலைத் தாள் எழுதி,
மணிவாசகம் தந்த மாதேவா! உன்தமிழைப்
பணிந்தேத்திப் பாரெங்கும் பரப்பும்நாள் வாராதோ?

நால்வர் தமிழமுதம் நன்றாய் நுகர்ந்தவன் நீ!
பால்வாய்ப் பைங்குழந்தைப் பள்ளிகள் தலை எழுத்தின்
மேல்வைப்பாய்! சூலமாம் எழுத்தாணிக் கூர்முனைவேல்
கால்வைத் தெழுதுக, பன்னாட்டுத் தமிழுலகே?

வேண்டும். அதனால் காலத்திற்கேற்றாற்போல தமிழை வளப்படுத்த உரிய நடடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். ஆசிரியர்களுக்கும் மொழிபயிற்சி நவீன வளர்ச்சிக்கு ஏற்ப கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தகவல் தொடர்புச் சாதனங்கள் மக்கள் தொடர்புச் சாதனங்களாக விளங்குவ தால் அந்த நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள் பிறமொழி கலந்து தமிழ் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். பழந்தமிழ் இலக்கியம் மற்றும் மற்ற மரபுசார்ந்த துறைச் சொற்களைப் பாடப்புத்தகங் கள் மூலமாக மறுபடியும் வழக்குக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழ் கலாச்சாரக் கூறுகளை ஆய்ந்து தெளிந்து அதனைப் பாதுகாக்க உரிய நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும். மொழித் தூய்மைட அவசியம் இருப்பினும் வழக்கி லுள்ள தமிழா, பிறமொழியா என்று அறிய இயலாத சொற்களை வழக்கில் பயன்படுத்து வது தவறு என்று கருதுதல் கூடாது. மேலை நாடுகளின் வளர்ச்சிக்குக் கருத்துக்கு இணை யான சொல் தமிழில் இல்லாதபோது மொழியி யலார் துணைகொண்டு அதற்கான புதிய செசாற்களை ஆக்க வேண்டு. தமிழார்வ அறிஞர் கள் சமுதாய மொழி, அறிவியல் மொழி, மொழி பெயர்ப்பு, அகராதி தயாரிப்பு போன்றவற்றிற் குரிய முக்கியத்துவம் கொடுத்து அவற்றைத் தற்கால வளர்ச்சிக்கு ஏற்ப உருவாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்களும் ஆங்கில மோகத்தை விட்டுவிட்டுத் தம் குழந்தைகளுக்குத் தமிழ் வழிப் பாடம் கற்பிக்க முன் வரவேண்டும்.

அவ்வாறு செய்யும்போது தான் தமிழ் எக்காலமும் உயிர் மொழியாக வளரும்! வாழும்!! இதில் எள்ளளவும் ஐயமில்லை.

வாழிய தமிழ்! வாழியவே!!

உதவிய நூல்கள்:

ந.நி., மொழியியல் அறிஞர் நோலாம் சோம்ஸ்கி தமிழ்பற்றி... ஓம் சக்தி, ஏப்ரல் 2002, பப.30-32 மல்லானா, எம்.கே.ஈ., சேதுமுதல் சிந்துவரை (பூர்வ மனித ஆய்வு) பசுங்கதிர் பதிப்பகம், சென்னை 1982.

மயிலை சீனி வேங்கடசாமி, சமயங்கள் வளர்த்த தமிழ், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1966. வரதராஜன், மு., மொழி வரலாறு, கழக வெளியீடு சென்னை, மறுபதிப்பு 1990

Pattanayak. D.P., Language Curriculum, CIIL Mysore, 1977.

நூலக மொழியாக, செவ்வியல் தமிழ்!

மருத்துவர். கோபி

எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு

வாழ்வும் வளமும் தமிழ் என்றால் உயிரும், உடலும் தமிழ் அன்றோ! ஒருவனது தாய்மொழியே அவனை அடையாளங் காட்டு கிறது. அவனது மொழியே நாட்டையும் அறி முகப்படுத்துகிறது. அவனது தொன்மை மிகு பாரம்பரியப் பட்டறிவும், பகுத்தறிவும், சிந் தனைச்சேமிப்புக்களையும் உள்ளடக்கி, வாழ்வை நெறிப்படுத்தி அழைத்துச் செல்வதே மொழி யாகும். தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைக்குச் சான்று பகர்ந்து, அவனைத் தலை நிமிர்ந்து வாழச் செய்த அந்த மொழி, அய்யகோ! இன்று தானே தலை கவிழ்ந்து, தாழ்ந்து கிடப்பதுவோ!

ஆங்கிலத்தின் நச்சாணிவேர்

நமது நாகரிகம் ஆலமரமாகத் தழைத் தோங்கிப் பந்தலிட்டு நின்ற காலத்தில், காளானைப் போல் முளைவிட்டு, நச்சு மரமாக வளர்ந்ததே ஆங்கில மொழி. கி.பி. 1575 வரை தங்கள் மொழியின் மீது ஆங்கிலேயர்களே வெறுப்புற்றிருந்தனர் இலத்தீன் மொழியைத் தான் அவர்கள் விரும்பிப் படித்தார்கள், எழுதினார்கள். ஆங்கிலத்தைக் காட்டுமிராண்டி மொழி என அவர்களே இழித்துரைத்த காலம் இது.

அந்தக் காலத்தில் தான் கிராம்வெல் தலைமையில் மதப் புரட்சிபோல் தோற்ற மளித்த அரசியல் புரட்சி ஒன்று உருவாயிற்று. மக்களுக்குத் தெரிந்த மொழியில் மட்டுமே பேச வேண்டும் எழுத வேண்டும் என்ற எழுச்சி ஆங்கில சமுதாயத்தில் வீறு கொண்டது. ஏறத்தாழ 200 ஆண்டுகள் நடைபெற்ற அந்த அரசன் 1733 ம் ஆண்டு ஒரு சட்டத்தை நிறை வேற்றினான்.

''இன்று முதல் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகப் பெற்றவர்கள் எவரும். ஆங்கிலத் தைத் தவிர வேறு எந்த மொழியிலும் பேசவோ எழுதவோ கூடாது. சட்டத்தை மீறி யாராவது வேற்று மொழியில் பேசவோ, எழுதவோ செய்தால், 50 பவுன் தண்டம் செலுத்துவதுடன், ஓராண்டுச் சிறைத் தண்டனையும் அனுபவிக்க நேரும்'' என்பதே அந்தச் சட்டம். அந்தச் சட்டத்தை மீறியதால் பல்லாயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள் தண்டம் செலுத்தியதுடன், சிறையும் புகுந்தனர். இருந்தாலும் தாய் மொழிக்காகவும் தாய் நாட்டுக்காகவும் சட் டத்தை அந்த அரசன் அழுத்தமாகச் செயற் படுத்தினான்.

அந்தச் சட்டம்தான் ஆங்கில நச்சுச் செடியானது வளர்ந்து, பார்த்தீனியம் போல் உலகெலாம் பரவி, பிற மொழிகளையும் பண்பாடுகளையும் சீரழிக்கக் காரணியானது.

கடந்த 1000 ஆண்டுகட்கும் மேலாக பல்வேறு மொழியினரும் நம்மீது தாக்குதல் நடத்தி ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். அவ்வந்த மொழிகளின், பண்பாடுகளின் தாக்கமும் நமது செவ்வியல் தமிழுக்குச் சவாலாக அமைந் துள்ளன. ஆயிடினும் தொடர்ந்து வந்த ஆங்கி லேயரின் தாக்குதலும், ஆதிக்கமுமே நம்மை, நமது மொழியை, நமது பண்பாடுகளை நிரந்தர மாகக் காயப்படுத்தி, நோயாளியாக மாற்றி விட்டது. மெக்காலே திட்டமிட்டபடி நாம் அடிமைகளாக இருக்கிறோம்! ஆங்கிலேயன் ஆணவத்துடன், தொழிற்புரட்சியின் அகந்தை வெறியோடு உலகை வலம் வந்தான். சைனாவின் வெடி மருந்துப் பயனாக்கத்தைத் தனதாக்கிக் கொண்டு, கடற்கொள்ளைகளும், ரத்த வெறியும் 'விஸ்வ' ரூபமெடுக்க மனித இனத்தின் சுதந்திர உணர்வுகளுக்கும், உடமை களுக்கு எமனாகப் புறப்பட்டான்.

இந்த நச்சுவெறிப் பேயாட்டத்தில் உயிரும், உடலுமாக இருப்பதே ஆங்கில மொழி! அந்த

மொழி மனித நேயத்தின் முதல் எதிரி. மனித குல நாகரிகத்தின் நச்சு விதை. சமதர்மச் சிந்தனைகளின் சாவு மணி. அவர்களின் கலை களில் இசையென்பது மனித உள்ளங்களை மரக் கட்டைகளாகவும், வெறியர்களாகவும் உரு மாற்ற வல்லது. பாசப் பிணைப்புகளை அறுத்தெறிவது அவர்களது கோர நடனம். ஜீவராசிகளைக் கொடுமைப்படுத்துவது அவர் களின் விளையாட்டு. சொந்த இனத்தையே கொலை செய்வது அவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகள். அது சுற்றுச் சூழல்களையும், உணவுப் பொருட்களையும் நச்சுப் படுத்துவது. மனித சமுதாயத்தையே நோயாளிகளாக மாற்றி, சாகும் வரை தாங்கள் உற்பத்தி செய்த மருந்துகளையே உட்கொண்டு சாக வேண்டும் என்பது அவர்களது மருந்து ஆராய்ச்சிகளின் நோக்கம். இவ்வாறாக மனித சமுதாயத்தைச் சிறிது சிறிதாகச் சாகடித்து தாங்கள் மட்டுமே போக வாழ்வில் திளைக்க வேண்டும் என்ற சுரண்டல் சமுதாய நெறி ஆங்கில மொழியால் விதைக்கப்பட்டு, இன்று உலகெலாம் அறு வடையாகி வருகிறது!

செவ்வியல் தமிழ். அமிழ்தத்தமிழ் என்பது நமது மொழி. அது அன்பே சிவமெனக் கூறுகிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உடன்பிறப்பு உணர்வைப் பரப்பி, வணிகத்தில் பரஸ்பர நலன்களைப் பேணிக்காத்த மொழி, மனித குலம் மரணமில்லாப் பெருவாழ்வு பெற வழிகாட்டுகிற மொழி. வாடிய பயிருக்குத் தேரளித்த மொழி. பகிர்ந்துண்ணப் பாதை காட்டிய செம்மொழி. நமது கலைகளின் சிறப்பு என்பதே மாசற்ற மனிதத்தை உயர்த்திப் பிடிப்பதாகும். உள்ள உன்மத்தங்களையும், துன்ப துயரங்களையும் மாய்த்துவருவது நமது இன்னிசை. கர்னாடக இசையின் (பழைய தமிழிசை) மனதுருக்கும் ஆலாபனையில் கருமேகங்களே கரைந்து மழையாகக் கொட்டும்! சுக நலத்தையும் நல்லுணர்வையும் ஊட்டுவது நமது விளையாட்டுகள் தான் பாதிக்கப்பட்டாலும் இதர ஜீவராசிகள் துன்புறக் கூடாது என்பதே நமது வீரவிளையாட்டுக்களின் நெறி.

இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற செம்மொழி ஏன் அடிமைப்படவேண்டும்? அங்குதான் எட்டப்பன்களின் இழிசெயல்கள் அப்பட்டமான சுயநலப் பணிகள் அரங்கத்திற்கு வருகின்றன.

பார்ப்பனச் சூழ்ச்சிகள்

பார்ப்பனர்களின் பயங்கரச் சூழ்ச்சிகளை நாம் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வது நல்லது. தேவதாசி முறையை அவர்கள் திணித்து, பெண்ணினத்தைக் களங்கப்படுத்தியது ஒரு சோக நிகழ்ச்சி. அதன் தொடராக அரச பரம்பரையைக் காமக் களியாட்டங்களில் ஈடுபடுத்தி, மாமா வேலை செய்து வயப்படுத்தினர். அந்த அரசர்கள் ஆண்டவனின் நேரடி வாரிசுகள் என்பதை அதிகார - வன்முறை - தாசி முறைகளால் நிலைப்படுத்தினார்கள். தமிழறிஞர்களும், ஏன், சித்தர் பெருமக்களும் கூட ஏற்கும் படி செய்தார்கள். இந்தப் பார்ப்பனர்களின் கொடூரச் செயல்கள் எத்துணை ஆழவேர்களைப் பாய்ச்சி யுள்ளன என்பதை நாம் உணர முடியும். அரசர் களைப் போற்றிப் புகழ்ந்து பாடியே வயிறு வளர்க்கும் ஒரு கூட்டத்தை உருவாக்கினார்கள். பெரும் புலவர்களுக்கெல்லாம் பரிசுகளை அள்ளிக் கொடுப்பத்தின் மூலம் மக்களிடம் மரியாதை கிடைக்கும் என அரசர்களை ஊக்கு வித்தனர் அதில் வெற்றியும் பெற்றிருக் கிறார்கள்.

திராவிடப் பெருமக்களால் எழுதப் பெற்ற வேதாகம நூல்களை. தங்கள் விருப்பம் போல் திருத்தி எழுதி மறுபதிப்புச் செய்தார்கள். மற்றும் இராமாயண, மகாபாரதம் போன்ற இதிகாசங்களையும் திருத்திக் குலைத்து, பார்ப் பனப் பிழைப்புக்கு ஏற்ற முறையில் உருமாற்றி னர். பார்ப்பனர்களுக்கு கோதானம் (பசுதானம்) பூதானம், தட்சிணை முதலியன கொடுத்து புண்ணியம் தேடும் படி, 'சூத்திரர்'களுக்கு அறிவுறுத்தினார்கள்.

திருமணம் செய்து கொண்ட புதுப் பெண்கள் கன்னி கழிவதற்கு மூன்று நாட்கள் கோயிலில் தங்கி, அரசர்கள், குருக்களின் 'ஆசீர்வாதம்' பெறவேண்டும் என்னும் நடை முறையைக் கொண்டு வந்தனர். நமது பெண்கள் இந்த 'மேன் மக்களைக் கண்டவுடன் மாறாப்புச் சேலைகளைக் கீழிறக்கி இடுப்பில் கட்டிக் கொள்ளும் படி செய்தனர். இதுபோன்ற களியாட்டங்களுக்கு கடவுள் தன்மை கற்பிக்கும் நோக்குடன் 64 கலைகள் என்ற பெயரால் நிர் வாண ஆபாச உடலுறவுச் சிற்பங்களை கோவில் தோறும் செதுக்கும்படி செய்தனர். கடவுள் களுக்கெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவி மார்களைச் சமைத்தனர். அவர்களின் பிள்ளைப் பிறப்புகளையும் அருவருப்பான கதைகளாக எழுதினார். தெள்ளிய நீரோடை போன்ற பண் பாட்டில் சாக்கடையைக் கலந்தனர்.

பரங்கியரின் பாதகச் செயல்கள்

இந்தக் காலங்களில்தான் காலகண்டனான வெள்ளைப் பரங்கிகள் பக்குவமாக நுழை கிறார்கள். பார்ப்பனப் பிரிவினைகளை ஏற்றுக் கொண்டு. சமுதாய அமைப்புகளையே தனக்குச் சாதகமாக மாற்றுகிறான். வெள்ளைத் தோலைக் கண்டு மயங்கிய நமது அரச போகிகள் வர வேற்றனர். இடைத்தரகர்களும் எட்டப்பன் களும் ஊட்டி வளர்க்கப்படுகின்றனர். தங்களின் ஆதிக்கத்திற்கே ஆபத்துவிளைந்ததால் காலங் கடந்து எதிர்க்கத்துணிந்து பாளையக்காரர்களும், மன்னர்களும் சாம-தான-பேததண்டங்களால் வீழ்த்தப்படுகின்றனர்.

ஒருவனது சொந்தத் தாய்மொழியில் அவனுக்கு வெறுப்பு ஏற்படும் படி செய்தால் அவன் தன்னையே இழந்து விடுவான் என்ற தனது வரலாற்று அனுபவத்தையே அறிந்திருந்த ஆங்கிலேயன், 'மெக்காலே' திட்டத்தைக் கொண்டு வருகிறான். தொடர்ந்து நமது மொழி மீது குறிவைத்துத் தாக்கினான். ஆங்கிலம் கற்றவர்களுக்கே வேலைகள் அளித்தான். நிர்வாக அலுவல்கள் அனைத்தையும் முற்றிலு மாக ஆங்கில மொழியில் மாற்றினான்.

சுதந்திரம் பெற்று 55 ஆண்டுகளைக் கடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில், நாட்டின் மொழிக் கொள்கையை எண்ணிப் பார்க்கிற சிந்தனையாளர்கள் எவரும், கண்ணீர் விட்டுக் கதறாமல் இருக்க இயலாது! ஆங்கிலேயன் ஆண்டபோது பள்ளியை விட்டு வீடு திரும்பும் நமது குழந்தைச் செல்வங்கள் அம்மா - அம்மா என அன்புகுழைய வாய்நிறைய அனழத்துக் கொண்டே வந்தனர். ஆனால் இன்று 'மம்மி - மம்மி', என்று நீ, கூப்பிட்டால் காது கேட்காதா? 'நான் சென்ஸ்' என எரிச்சலுடன் வீடு புகுவதைக் காணலாம். பண்பாட்டின் அடித்தளமே அரிக்கப்பட்டு வருகிறது. எனவே எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற இலட்சியத்தை எட்ட, தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழித்திட வேண்டும். ஆங்கில மழலைப் பள்ளிகளை சட்டமியற்றி உடனடியாகத் தடைசெய்து, வருகிற கல்வியாண்டு முதல் தாய்த் தமிழில் மட்டுமே கற்பிக்க வேண்டும் என கட்டாயப் படுத்தியே ஆகவேண்டும். துவக்கக் கல்வி முதல் கல்லூரி, பல்கலைக் கழகங்கள் ஈறாக ஆங்கிலப் பயிற்சியை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் கல்லூரிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் இரண்டு ஆண்டுகள் முதல் அய்ந்தாண்டுகள் வரை அவகாசம் கொடுக்க லாம்.

நூலக மொழியாகத் தமிழ்!

அறிஞர்கள் பலர், என்ன தான் தமிழ்ப் பட்டக் கல்வி பயின்றாலும், மேற்படிப்பிற்கும், ஆராய்ச்சிகட்கும் ஆங்கிலம் இல்லாமல் முடி யாதே என ஏளனமாக நம்மைப் பார்க்கிறார்கள். ஆம்! உண்மைதான்! ஆனால் நம்மவர்கள் மனம் வைத்தால் அந்த ஏளனப் பார்வையை அய்ந்தாண்டுக் காலத்தில் எரித்துவிட முடியும்.

உலகெலாம் அமர நிலை எய்தும் நன் முறையை மரணமற்ற பெருவாழ்வை - நாம் உலகிற்களிக்கும் கடமையும், வல்லமையும் பெற்றவர்கள்! அன்பரவணைப்புத் தமிழின் உலகாளுமையை ஏற்றமுறச் செய்தேயாக வேண்டும். அதற்கு முன்னோடியாக, நூலக மொழியாகத் தமிழ் உயர்ந்து நிற்க வேண்டும்.

பன்னாட்டுத் தமிழறிஞர்களின் பிரதிநிதிகள் பலர், இந்த உலகத் தமிழ் உறவு மாநாட்டில் கம்பீரத்துடன் அமர்ந்திருப்பதைக் காணும் பொழுது, நூலக மொழியெனும் இலட்சியத்தை நோக்கி நமது அடிவைப்பு, ஆரம்பித்து விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது!

திட்டமிட்ட முறையில் முனைப்புடன் ஒரு அய்ந்தாண்டுக் காலம் உழைத்தால் நூலக மொழியாகத் தமிழ் உயர்ந்துவிடும்! ஆங்கில மொழியில் மட்டுமல்ல, இலத்தீன் மொழியிலும், ஜப்பான், சைனா, ஜெர்மனி, பிரெஞ்சு போன்ற ஏனைய மொழிகளிலும் குவிந்து கிடக்கின்ற இலக்கிய, அறிவியல் தொடர்பான ஆய்வுக்குரிய அனைத்து நூல்களையும், உலகெலாம் பரவி வாழ்கின்ற நமது தமிழ் அறிஞர்களால் மொழி மாற்றம் செய்ய முடியும். தேவையெல்லாம் தன்னம்பிக்கையும், உழைப்பும், பொருளுமாகும். இவை அந்த அறிஞர் பெருமக்களிடம் தேவையான அளவு உள்ளன!

வெளிநாடுகளில் வாழும் தமிழறிஞர்கள் தங்களுக்குள் தகுதியான மொழியாக்கக் குழுக்களை அமைத்துக் கொள்ள வேண்டும். தாங்கள் மொழி பெயர்க்கவிருக்கிற நூல்களைத் தேர்வு செய்து, தமிழகத்தில் அமைக்கப்படுகிற ஒருங்கிணைப்புக் குழுவுக்குத் தகவல் தர வேண்டும். இந்தத் தகவலை, மற்ற நாடுகளிலுள்ள மொழிமாற்றக் குழுக்களுக்கு ஒருங்கிணைப்புக் குழு அனுப்பி, ஒரே நூலை வேறொருவரும் பெயர்ப்பதைக்குறைக்கும். இவ்வாறு வெளிநாடுகளிலுள்ள மொழி பெயர்ப்புக் குழுக்களின் பணிகளைச் சீராகச் செய்து முடிக்கத் தமிழகக் குழுவால் இயலும். பரஸ்பர ஒத்துழைப்புடன் - ஆர்வமுடன் பணிகள் திட்டமிட்டு நடைபெறுமானால், அய்ந்தாண்டுகளில் நமது நோக்கம் உறுதியாக நிறைவேறிவிடும்.

ஆய்வுகளுக்கான ஆதார நூல்களைத் தேடிப் பற்பல நாடுகளுக்கு செல்ல வேண்டியவர், நமது நாட்டிற்கு வந்தாலே அனைத்து நூல்களும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வரக் கூடும்.

வெளிநாட்டு மாணவர்களுக்கும், நமது மாணவர்களுக்கும் வேற்று மொழிக் கல்வி

பல்கலைக் கழகப் படிப்பில் விரும்பக் கூடிய அனைத்து மாணவர்களுக்கும் ஆங்கிலம் உள்ளிட்ட உலகின் முக்கிய மொழிகள் அனைத்தையும் ஓராண்டுப் பட்டயக் கல்வியாக அளிக்கப் படவேண்டும். அதன் மூலம் பன்மொழிப் புலவர்களை நாம் உருவாக்க முடியும். வெளிநாடுகளுடனான தொடர்புகளை உடன் பிறப்புணர்வோடு புதுப்பித்திட இவர்களால் முடியும். தமிழ் மொழியின் ஆளுமைத் திறனையும் இவர்களால் அங்கீகரிக்கப் பெறும் நிலை உருவாகும்.

தமிழ் மொழியைக் கற்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் வருகின்ற வெளிநாட்டு மாணவர்களுக்காக, ஓராண்டுத் தமிழ்க் கல்வியினை சிறப்பாக அளித்திடும் பயிற்சித் திட்டத்தை உருவாக்குவதும் மிக - மிகத் தேவையான தாகும்.

சிறுபான்மை மக்களின் மொழிக் கல்வி

சிறுபான்மையினருக்கு அவர்களது தாய் மொழியில் கல்வி கற்பிக்க முடியாது. நிரந்தரமாக ஒரு மாநிலத்தில் வாழக் கூடியவர்கள் அந்த வாழிடத்தின் தாய்மொழியைத்தான் பயில வேண்டும். தங்கள் மொழிக் கல்விதான் தேவையென்றால் அந்தச் சமுதாயமே செய்து கொள்ள வேண்டும். தேர்வெழுதவும் சொந்த மாநிலத்ததிற்கே செல்ல வேண்டும். இக் கொள்கை அனைவருக்கும் பொருந்தும். மய்ய அரசூழியர்கள் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக நியமனம் செய்ய வேண்டும். அப்போது பெரும் பாலான பிரச்சினைகள் சிக்கல்கள் தீர்ந்துவிடும். தலைமுறை தலை முறையாக இங்கேயே வாழ்ந்து கொண்டு இந்திதான், மலையாளம் தான், அரபிதான் எங்களது தாய் மொழியென்றால் அதனை ஏற்க முடியாது. இந்தக் கொள்கையை மேலும் ஆழமாக ஆராய்ந்து சரியான தீர்வுகாண வேண்டும்.

★

அற்றை நற்றமிழ் எங்கும் பொங்கிடத் தமிழர் கூட்டொருமை (Solidarity) வேண்டும் தமிழா!

யாழன் இரா. சண்முகலிங்கம் - அமெரிக்கா

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்,'' என்று துணிந்து பாடியவன் பாரதி. அந்த ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.'' என்று எமக்கொரு கட்டளையையும் பிறப்பித்துள்ளான். பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் கொண்டாடும் வெள்ளி விழாவில், ''தமிழ் மொழிப் பாதுகாப்பு, - தமிழ் இனப் பாதுகாப்பு, தமிழ் இலக்கியப் பாதுகாப்பு - தமிழர் ஒருமைப்பாடு - தமிழர்தம் அறிவியல், பொருளாதாரம் குறித்த மேம்பாடு, தமிழர்தம் நெருக்கடிக்குத் தீர்வுநிலை காணும் நிலைப் பாடுகள் - போன்ற அனைத்து அமர்வுகளும்,'' பாரதியின் கட்டளையை நிறைவேற்ற ஏதுவாக அமையும்; அமையவேண்டும். இதனாலன்றோ, தென் ஆபிரிக்காவில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது உலக மாநாடு பல தீர்மானங்களை முன் வைத்துள்ளது.

தமிழ் மொழி, தமிழ் இனம், மற்றும் தமிழ் இலக்கியங்களுக்குப் பாதுகாப்பு என்ற அமர்வுகள் விழாவில் இடம் பெறுவது வருந்தத்தக்க தெனினும், இன்றைய நிலையில் அவற்றின் அவசியத்தை உதாசீனம் செய்ய முடியாது. புலம் பெயர்க்கப்பட்ட தமிழரும், புலம் பெயர்ந்து வாழும் தமிழருக்கும், புலம் பெயராத தமிழருக்கும் தமிழ் அன்பும் தமிழ் ஆர்வமும் இருக்கத்தான் இருக்கின்றது. ஆனால் அவர்கள் தனித்து இயங்குவதாலே அன்றைய நற்றமிழை இன்றும் பொங்கிடச் செய்யலாமோ என்ற ஐயம் ஒரு பயத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் சில தமிழர் தாம் தமிழரென்று வெளிப்படுத்த வெட்கப்படுவது ஒரு வகைப் பலவீனம் என்றுதான் கூற வேண்டும். இதற்கு ஒரு வழி காணும் பொருட்டு இந்த மாநாட்டில் உலகத் தமிழர் ஒரு குடை இயக்கமொன்றின் அவசியத்தை வற்புறுத்தி உலகத் தமிழ் இயக்கங்களின் தலைவர் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முகமாக மாநாட்டு நிகழ்ச்சிகளிலல் ''உலகத் தமிழர் நிறுவனம்'' என்னும் தலைப்பும் ஒன்றாக இருப்பது தமிழுக்கு நல்லகாலம் என்றுதான் கூற வேண்டும்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் பங்குனி 2002 தமிழ்ப்பணி மாத இதழில், ''பன்னாட்டுத் தமிழுறவுப் பாதை வெல்லும்!'' என்ற கவியில்,

''தன்னலத்தாலே அல்ல! அல்ல! அல்ல! - தோழரே
தமிழ் தமிழர் நலத்தாலே அழைக்கின்றோம்
என்னலம் உன்னலம் பெரிதல்லத் தமிழரே- நம்மின்
இனநலம் மொழிநலம் இணைத்திட
அழைக்கின்றோம்''

என்று தொடக்கி'

''இந்த இனத்துக்கும் - நம்மின்
மொழிக்கும் விடுதலை
தந்திட மாட்டாமல் - தமிழர்
சாகோம் நாம் சாகோமே!
தந்தைதாய் மீதாணை!
தமிழ் தமிழர் மீதாணை! - ஒங்கும்
சந்ததிகள் மீதாணை!
தமிழரே வாருங்கள்!

வாருங்கள் சேருங்கள்'' என்று முடிக்கும் கவிதை அன்னாரின் தமிழுக்கு எடுக்கும் விரதத்தை மேலும் விளக்கின்றதல்லவா?

தன்னலங் கருதாத தமிழ்ப் பித்தன் வழி செல்லத் தயக்கமேன் தன்மானம் விரும்பும் தமிழா? மக்களின் தன்னலப் பலவீனம் தமிழனையும் விட்டபாடில்லை. அதனால் அனைத்துலகத் தமிழ் இயக்கத் தலைவர்ககளை ஒன்று கூட்டி அவர் மூலம் தமிழர் கூட்டொருமையை (Solidarity) உண்டாக்கும் நல்லெண்ணத்தை நன்குணர்ந்து ''பன்னாட்டுத் தமிழர்களின் ஒருங்கிணைப்புக்காக உலகத் தமிழர் நிறுவனம் அமைக்கும் பணி உருவாக்கம்

பெறும்'' என்பதும் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் வெள்ளிவிழா - ஐந்தாம் மாநாட்டு நிகழ்வுகளில் ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டு முடிவடைந்ததும், முதலாளித்துவம் (Capitalism) அதன் போட்டிகளான ஆட்சி வல்லாண்மை முறை (Fascism), பொதுவுடைமை (Communism), சமதர்மம் (Socialism) தோற்கடிக்கப் பட்ட போதிலும், பெருமளவு மக்களிடத்தில் சமூக நீதியை நிலைநாட்டக்கூடிய நிலையை ஏற்படுத்தும் முயற்சி எதுவும் உண்டு என்பதற்கில்லை. அதனால், முதலாளித்துவம் இன எல்லை முழுதாக்கும் நிலை (Globalization of Capital) மக்களிடத்தில் ஒரு புதுப் பயத்தை உண்டாக்கியுள்ளது. வசதி படைத்த நாடுகளின் நிற பேத இறுமாப்பு ஓரளவு ஒடுங்குகின்ற போதும் இங்குநிற மக்களுக்கு வேண்டிய பாதுகாப்புக்களை உருவாக்க வேண்டும். அத்துடன் கல்வி முறைகளும் மாற்றமடைந்து பொருளியல் கல்வி பொருள் வளம் ஒன்றினையே மதித்தும், (Economics is about value) மண்ணாய நூல் கல்வி நல் வாழ்வுக்கு வேண்டிய பலநிலைகளை மதிப்பதாலும் (Sociology is about values) இடருண்டாக்கும் தனி முதலாளித்துவப் பொருளியல் கல்வி முறைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும். அத்தோடு, இருபத்தோராம் நூற்றாண்டு மத வெறி யாட்ட நூற்றாண்டாக அமைந்துள்ளது. இந்நிலையில், சமூக நீதியை வளர்க்கும் வகைகளை நாம் இனம் கண்டு உலகறியச் செய்வதற்கு முன் நம் தமிழினம் தன்னை அறியச் செய்ய வேண்டும்.

இன்று அனைத்துலக மொழி யென்று கருதப்படும் ஆங்கிலம் பதினைந்து நூற்றாண்டு களுக்குள் எவ்வளவு வளர்ந்துள்ளது. கிட்டத் தட்ட அறுநூற்று முப்பதாயிரம் ஆங்கிலச் சொற்கள் அகராதியிலுள்ளனவென்றும், பத்து இலட்சத்திற்கும் மேலான ஆங்கிலச் சொற்களை உருவாக்கியுள்ளார்களென்றும் நாம் அறி கிறோம். ஆங்கிலமும் ஆங்கிலேயரும் இருந்த நிலையும் அவர்கள் எம்மைப்பற்றி ஏளனம் செய்வது பலர் அறியாததினால் தமிழைத் தேங்கவிட்டு ஆங்கிலத்தை மட்டும் ஆதரிக்கும் இழிவை மாற்றும் வழிகளை நாம் கையாள வேண்டும்.

ஈடற்ற கூரறிவும், ஆர்வக்கொள்கைகளை யும் நம்பிக்கைகளையும் தாக்குபவரும், புகழ்பெற்ற நாடக ஏட்டாசிரியருமான சார்ச் பேணாட் சா (Immitable wit, iconoclast, and distinguished dramatist George Bernard Shaw) தீட்டிய ''வறுமையுற்ற நிலையில்'' என்ற நகைச்சுவை நாடகத்தில் சேர். யாழ்ப்பாணம் பண்டாரநாத் பாத்திரத்தை உருவாக்கி யாழ்ப் பாணத்திற்கு அழியாப் புகழை அளித்ததோடு, எங்கள் கண்களையும் திறந்துள்ளார் என்பது எனது முடிவு. (He has immortalized the name of Jaffna by using it to one of his characters in the political comedy, "On the Rocks' written in 1933) அந்த நாடகத்தில் வரும் பகுதியொன்றைத் தமிழில் தரும் முயற்சி பின்வருமாறு:

பிறித்தானிய பிரதம மந்திரி சேர். ஆதர் சவென்டர் (Prime Minister Sir Arthur Chavender) நிலத்தைத் தேசியமயமாக்க வேண்டும் என்று முன்மொழிவதை, சேர். யாழ்ப்பாணம் ஆதரிக் கின்றார் என்று அறிந்ததும் கோபங் கொண்ட சேர். டெக்ச்ரர் றையிற்சைட் (Sir Dexter Rightside, Foreign Secretary) சேர். யாழ்ப்பாணத்தை, ''ஆங்கில நன்மகனென்று பாசாங்கு செய்யும் முதிரறிவற்ற நீ கிரோ'' (A silly nigger pretending to be an English Gentleman.) என்று ஏளனம் செய்து திட்டியதும் சேர் யாழ்ப்பாணம் கடுஞ்சினம் கொண்டதை, பேணாட் சா சேர் யாழ்ப்பாணம் வாயிலாகத் தமிழர் தம் பெருமையை எப்படித் தாம் எண்ணுகிறார்கள் என்பதை:

''நான் இகழப்பட்டேன். கடவுள் களெல்லாவற்றையும் தனக்குள்ளே கொண்ட ஆயிரமடங்கான பிரமாவின் கோவில்களி லிருந்து இதுவரை மக்கள் அடையாத அதி உன்னத அறிவூட்டுதலைப் பெற்று பாரெல்லாம் நாம் பரப்பிக் கொண்டிருக்கையில், இந்த அழுக்கு மூஞ்சைக் காட்டுமிராண்டியின்

ஆடையற்ற மூதாதையர் காடுகளிலுள்ள மரஞ் செடி கொடிகளை வணங்கினார்கள். முதிராப் பண்புடைய கரடுமுரடரான தம்மை நான் பின்பற்றுகிறேனென்று எண்ணத் துணிவோடு குற்றஞ்சாட்டுகிறான்; உங்கள் இந்த நாய்ப் - பொந்துத் தீவிலும் பார்க்க இலட்சக்கணக்கான நாய்ப்-பொந்துகளை பல கண்டங்களிலும் வென்று வெற்றி வாகைச் சூடிய மன்னர்களின் இரத்தம் ஓடும் நரம்புகளை உடைய என்னையா ஏளனம் செய்கிறீர்? நம் முன்னோர் தோற்றுவித்த நாகரிகத்துடன் ஒப்பிட்டால் உங்கள் இந்தக் குட்டி அரசு ஒரு அரச எதிரிகளை ஒதுக்கி வைக்கும் பாசறையிலும் கேவலமானது.

''நீங்கள் வைத்திருக்கும் மதம் கிழக்கிலிருந்து வந்ததல்லவா? இருந்தும் ஒரு இந்துவோ, பாசியரோ, சமணரோ, உங்கள் பக்குவமடையா நிலைக்குப் பணிந்து செல்ல மாட்டான். முகம் பார்க்கும் கண்ணாடி இங்கு இருக்கின்றதா? அதில் நாகரிகத்தின் பிறப்பிடமான இலங்கை மக்களின் முகத் தோற்றத்தைப் பாருங்கள்; அதே வேளை உங்கள் முகத்தையும் பாருங்கள். அங்கு காணும் மனிதனில் கடவுளின் கைவண்ணம் தெரியும், அந்த மனிதனின் ஒவ்வொரு உருவக் கூற்றிலும் புகழ்பெற்ற மூலப் படைப்பு ஓவியரின் தெளிவான முத்திரை பதியப்பட்டிருக்கும். அங்குள்ள பெண்ணின் தலையிலுள்ள கண்கள் அண்டத்தை எதிரொளிக்குமே யன்றி கூழாங்கல் நிறைந்த பார்க்குந் துளைகளல்ல... எனது நிறத்தைப் பார்த்து நீகிரோவர் என ஏளன இகழ்ச்சி செய்வது உனக்கென்று ஒரு நிறம் இல்லை என்பதால். இங்கு இருப்பதால் எனது நாட்டுக்கும் இனத்துக்கும் நான் இகழ்ச்சி தேடுவதாகும்; ஏனென்றால் அவ்விரண்டும் அவமதிக்கப் பட்டுள்ளன... அதனால் உங்களை இன்றே ஒதுக்கித் தள்ளுகிறேன். இங்கிலாந்திலிருந்து இந்தியாவை முழுமையாகத் தொடர்பறுத்து உங்களின் அறியாமையிலும், வீணான தற்செருக்கு மற்றும் உங்கள் வெறுக்கத்தக்க செயல்வகைகளிலும் நீங்கள் அழிந்து போக உங்களை விட்டுச் செல்வேன்''

மேலும், அப்படியான ஒரு பேச்சைத் தாம் மறக்க முடியாது. எதைக் கூறிய போதும் நாம் வெள்ளையர் என்று ஒருவரின் முறைப் பாட்டுக்கு பிரதம மந்திரி சேர் ஆதர் வாயிலாக பேணாட் சா பின்வருமாறு விளக்கம் கொடுத்துள்ளார்.

சேர். ஆதர்: ''நான் உறுதியாகக் கூறுவேன் நீங்கள் செந்நிறம் படர்ந்தவர்களல்ல. உங்கள் நிறம் வாதுமைப் பருப்பை ஒத்து (Walnut color) திண்சிறப்பு நிறம் (Pink) தடவிய மூக்குள்ளவர்கள். கிளென்மொறிசன் (Glenmorrison - Chairman of Board of Trade) நிறம் அவரது இனமக்களுக்குரிய புல்லரிசிக் கூழ் (Oatmeal) நிறமேயன்றி வெள்ளை நிறம் அவரிடம் தொடக்கூட இல்லை. இருப்பவருள் ஒளிர்வுடைய நிறமுள்ளவர் கோமகன் ஒருவரே. ஆனால் அவர் மலாய் தேசத்துத் தலைகொய் வேடர் (Headhunter) போல் மஞ்சள் நிறத்தவர். எம்மைச் சீனர் இளஞ் சிவப்பு (Rosy) நிறத்தவரென்று அழைப்பதால் அவர்களெமக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள்.'' (ஆங்கில மேற்கோள் : http://www.sangam. org)

வரலாறு, இதிகாசம் மற்றும் புராணம் எல்லாம் எமது மூலப் பண்பாடு, நாகரிகம் அவற்றை எதிரொளிக்கும் இலக்கிய இலக்கணங்கள் ஓரளவு வெளிக்கொண்டுவந்த போதிலும், அவற்றைசாதாரண மக்களால் புரிந்து கொள்ள இயலாதது சிலர் தமிழராய்ப் பிறந்தும் தமிழறியாப் பெருமாள்களாகத் தம் இனத்தை வெறுத்து விற்று வாழும் நிலை வருந்தத்தக்கது. உதராணமாக, ''சிலப்பதிகாரம் - மூலமும் திறனாய்வும்'' என்ற தமது நூலின் முன்னுரையில் முனைவர் இரா. சீனிவாசன் கூறுவது.

''வள்ளுவத்தையே ஒரு மாபெருங்கவியமாகத் தந்தவர் இளங்கோவடிகள்; பாத்திரப் படைப்பில் குறட்பாக்களின் கருத்துக்களைப் பேச வைத்தவர்; இயக்க வைத்தவர். இது திருக்குறள், கம்பராமாயணம், போன்று மதிக்கப்பட்ட காவியம் ஆகும்.

''இதற்குப் பல உரை நூல்கள் வந்துள்ளன. மூலநூல் தனியாக யாரும் அச்சிட முன்வர

வில்லை. உணர இல்லாமல் படிக்க இயலாது என்று கருதப் படுகிறது. ஒருசில பகுதிகள் உரை இருந்தாலும் படித்து உணர முடியாது என்பதுதான் உண்மை. அந்த நூல்கள் அகராதி போன்றவை.''

சேச்சுபியர் (Shakespear) போன்ற ஆங்கில எழுத்தாளர்களின் நூல்கள் பாடசாலைகளில் கற்பிக்கும் நோக்கத்தில் பாடசாலைகளுக் கென்றே வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் புரியாத சொற்களுக்கு அடிக்குறிப்பாக விளக்கம் கொடுத்திருப்பதுபோல் தமிழ் நூல்களும் வெளியிட வேண்டும்.

அலெயின் டானியெலு (Alaimn Danielou) *சிலப்பதிகாரத்தை 1965 ல் ஆங்கிலத்தில் மொழி* பெயர்த்துள்ளார் - Shilappadikaram (The Ankle Bracelet) By Prince Ilango Adigal A New Directions Book.'

மனையறம் படுத்த காதையில் தனிமனை வகுத்தலில் வரும்:

''தூமைப்பணிகள் ஒன்றித் தோய்ந்தால் என ஒருவார்
காமர் மனைவினைக் கைகலந்து - நாமம்
தொலையாத இன்பம் எலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று.''

அலெயின் டானியெலுவின் மொழிபெயர்ப்புப் பின்வருமாறு:

Image of Kama and Rati,
the god of love and his consort,
Kovalas and Kannaki lay entwined
like two black serpents on their couch,
drank to its depths their cup of love,
already having felt, perhaps,
how transient is human joy."

பழம்பெரும் நூல்களைத் தமிழர் அனுபவிக்கச் செய்வதோடு பிறமொழியாளரும் அறிந்து விரும்பத்தக்க மொழிபெயர்ப்புகள் செய்வதோடு தமிழில் அறிவியல், சூழ்கலை (Technology) மூல நூல்களும் பிறமொழி நூல்கள் தமிழிலும் வெளிவர முயற்சி செய்ய வேண்டும். காலத்துக்கு ஏற்ற கவிகளும் கதை கட்டுரை களும் காவியங்களும் நூல்வடிவில் ஏராளம் வெளிவந்துகொண்டிருக்கின்றன. பத்தொன் பது, இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழினம் அடிமை விலங்கிடப்பட்டுச் சிறந்த தொழில் களிருந்தும் உழைப்பவருக்கு உழைப்புக்கேற்ற நேர்பயன் இல்லாமையினால், அன்று பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடியதுபோல்,

''காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்குக்
கையும் காலும் தானே மிச்சம்''

என்று இருக்கும் போது புதிது புதிதாகக் கண்டுபிடிப்பது எப்படி இருப்பவற்றைப் புது மாறுதல்கள் உண்டுபண்ணுவ தெப்படி? அந்த நிலை இன்று ஓரளவு மாறிவருகின்ற போதிலும், மேலோங்கி வளர வழி வகை செய்ய வேண்டும். சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் பொன் கோதண்ட ராமன் "Tamil Studies - Selected Papers" என்னும் ஆங்கில நூல் மூலம் தமிழரைப் பற்றிய சில தப்பு எண்ணங்களை அகற்றியிருப்பது பழமையைப் புதுப்பிக்கும் முயற்சி என்று சொல்லத் தோன்றுகிறது. சங்கத் தமிழ் காலம் கிறித்துவுக்கு முன் 500 ல் இருந்து கிறித்துவுக்குப் பின் 200 ஆண்டுகாலம் என்று அவர் குறிப்பிட்டு, அந்தச் சங்கத் தமிழ் இலக்கியம் மதசெல்வாக்கு அற்றவை என்றும் அவை உலக வாழ்வை முழுநிறைநலம் (ideal) தழுவிய இலக்கியம் என்று கூறியிருப்பது தமிழப் பண்பாடு மதசார்பற்ற நிலைத்த பண்பாடு என்று பிறர் அறிய உதவுகின்றது. இன்று மதத்தின் பெயரால் மூன்றாவது உலகப் போர் நடக்குமோ என்ற நிலையிருப்பினும், நடந்து கொண்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் போர் பல மதங்களைத் தழுவும் தமிழரைப் பொறுத்தமட்டில் அது மதப் போரன்று, ஆனால் தமிழர் வாழ வேண்டுவதற் கான விடுதலைப்போர்.

மனித இனம் இயற்கையையும் மூதாதை யரையும் வணங்கி வந்தனர். இன்றும் அமெரிக்க செவ்விந்தியர் மூதாதையரையும் இயற்கை யையும் வணங்கி வருகின்றனர். ஆரிய சமசுகி ருத செல்வாக்கு தமிழரின் இயற்கை வணக்கத்தைமாற்றிக் கடவுளை நம்பினோர்

கைவிடப்படார் என்ற மூட நம்பிக்கையை வளர்த்துப் புரியாத மொழியிலே புரட்டுப் பேசிப் பாமர மக்களை தற்குறிகளாக்கி விட்டனர். பெரியார் போன்றவர் பகுத்தறிவுப் பாதையைக் காட்டியும் மக்கள் திருந்திய பாடில்லை. மூட நம்பிக்கையில் மூழ்கியிருக்கும் மக்களை அவர்கள் வணங்கும் சின்னங்களைத் தகர்த் தெறிவதால் அவரவர்கள் பகுத்தறிவு அடையப்போவதில்லை. தெய்வம் வணங்கி உய்வோம் என்பது உயர்ந்த கருத்து என்று இருப்போருக்கு விளக்கம் கொடுத்து கடவுளின் தன்மையை அறியத்தர வேண்டும். வள்ளுவர் தெய்வத்தை மத மகாகுரு என முழுதாக நம்பியிருந்தால் இப்படிப் பாடியிருப்பாரா?

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

காலஞ்சென்ற பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் தெய்வத்துக்கு நல்லதொரு உவமானம் காட்டியுள்ளார்:

"செய்யும் தொழிலே தெய்வம் – அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலும் தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி."

பல திசைகளில் தமிழ் நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பழமையை அத்திவரமாகக் கொண்டு எழும்பும் நூல்கள் பல. மறக்குணத்து புலவர் வே பிரபாகரன் திருக்குறள் அத்திவாரத்தில் வேளாண்மை பற்றிய மண்புழு என்ற கட்டுரை தமிழ்ப்பணியை அலங்கரித்திருப்பது போல் பல கட்டுரைகள் வெளிவர வேண்டும். சென்னை கிறித்தவ கல்லூரிப் பேராசிரியர் முனைவர் கு.அரசேந்திரன், ''உலகம் பரவிய தமிழின் வேர் கல்'' என்ற தலைப்பில் 4 பகுதிகளில் நூல்களை வெளியிட்டுள்ளார். முதல் பகுதிக்குச் சிறப்புரை வழங்கிய முனைவர் பொன் கோதண்டராமன் பின் வரும் பகுதி மூலம் அரசேந்திரனின் தமிழ்ப் பணியை நன்கு விளக்கியுள்ளார்: ''தெரிபொருளுக்கும் புதைபொருளுக்கும் இடையே உள்ள தொடர்புகளை ஒலித்தொடர்பாலும் பொருள் தொடர்பாலும் கண்டறிந்த மையப் பொருளை முடிவு செய்து சொல்லும் பொருளும் ஒன்று பலவாகப் பல்கிய வரலாற்றை இந்நூலாசிரியர் மிகச் செம்மையாக விளக்கியிருக்கிறார். மிக இயல்பாகவும் முறையாகவும் இவர் மேற்கொண்டுள்ள இந்த ஆய்வுப்பணியில் பிற மொழிகளில் இன்று நாம் காணும் பல சொற்கள் தாமாகவே வந்து தமிழுறவுச் சான்றுகளோடு தட்டுப் படுகின்றன. இவற்றையெல்லாம் ஆசிரியர் அடக்கமாக நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். இவையெல்லாம் சொற்பொருளாய்வில் யாரும் எண்ணிப் பாராத பல புதிய செய்திகளையும் மொழிவரலாற்றில் பல புதிய உண்மைகளையும் கொண்டுவந்து சேர்க்கும் என்று கூறுவது மிகையாகாது.

''இப்படிப்பட்ட ஆய்வுக்குத் தமிழ்மொழி ஒரு வாய்ப்பான களமாக அமைந்து இவருக்கு உதவுகிறது. இது மிகப் பெரிய அளவுக்கு வளர்ந்து மிகச் சிறந்த அளவுக்குப் பயனளிக்கக் கூறிய ஆய்வு. தமிழ் நெஞ்சங்கள் இந்த ஆய்வு வளர்ந்து சிறக்க உவந்து உதவும் என நம்புகிறோம்.''

இவ்வரிய முயற்சி உண்மையில் மிகச் சிறந்த பயனளிக்க வேண்டுமாயின் ஆங்கில மொழிபெயர்ப்போடு மற்றும் மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும். ''தமிழரில்லா நாடில்லை, தமிழருக்கென்று ஒரு நாடில்லை'' என்ற ஏக்கம் எப்போ நீங்குமோ? அதுவரை காத்திருப்பது, ''இருக்கிறவனுக்கு ஒரு வீடு, இல்லாதவனுக்குப் பல வீடு'' என்ற பழமொழிக்கு ஏதுவாகத் தமிழ் உரிமையற்ற நிலையில் தவிக்க வேண்டியதுதான். அந்நிலை மாற வேண்டும்.

இவ்வரிய முயற்சி உண்மையில் மிகச் சிறந்த பயனளிக்க வேண்டுமாயின் ஆங்கில மொழிபெயர்ப்போடு மற்றும் மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும். ''தமிழனில்லா நாடில்லை, தமிழனுக்கென்று ஒரு நாடில்லை'' என்று ஏக்கம் எப்போ நீங்குமோ? அதுவரை காத்திருப்பது, ''இருக்கிறவனுக்கு ஒரு வீடு, இல்லாதவனுக்குப் பல வீடு'' என்ற

பழமொழிக்கு ஏதுவாகத் தமிழ் உரிமையற்ற நிலையில் தவிக்க வேண்டியதுதான். அந்நிலை மாற வேண்டும்.

இளங்கவிஞர் பலர் இன்றைய நிகழ்வு களைக் கவிவடிவில் படம் பிடித்துக் காட்டு கின்றனர். இலங்கைத் தமிழருக்கு நடக்கும் இன்னலை ''அம்மாவுக்கு மகள் எழுதிய கடிதம்'' என்ற தலைப்பில் வ.ஐ. செயபாலன் கவியில் ஒரு பகுதி:

''நீ சிந்தும் கண்ணீருக்கு வலிமை இல்லை அம்மா, ஏனெனில் எனது தோழர்கள் சிந்துவது இரத்தம்.

உன் அழுகைக்கு ஒலி இல்லை அம்மா, ஏனெனில் எனது அயலெல்லாம் மரண ஓலம்.

....

நரைத்த தலையும் பரம்பரைப் பெருமையு மாகச் செவ்விகளாக எத்தனைப் பெண்கள்

நசிந்துபோய்

இப்படி நானும் வீழ்வேனென்று நினைத் தனையோ?

பொன் முலாமிட்ட தமிழரின் கவுரமெல் லாம் கறுத்துப் போனது அம்மா.

ஒவ்வோர் வீட்டு ரொட்டித்துண்டிலும் பெண்களின் வியர்வை.

தோட்ட நிலங்களில் நமது வியர்வை, தொழிலகங்களில் நமது வியர்வை

தடைகளை உடைத்து போர்க் கோலத் துடன் ஊர்வலம் போகும் கொதிப்பில் எல்லாம்

பாதிக்கு மேலே பெண்கள் அம்மா.

....

அண்ணன் செர்மனி சென்றதும் நான் பல்கலைக்கழகம் செல்வதும்

பொய்யென உனக்குத் தெரியுமா அம்மா?

இன்று நாமெல்லாம் விரிவுரை எடுக்கும் காலம்

உன்னால் எம்மைக் காட்டிக் கொடுப்பது இயலுமா அம்மா?

உன் கண்ணீரை விடவும் தடித்தது அம்மா தோழரின் இரத்தம்.''

அரைச்செயற்கை ஆரிய மொழியின் அட்டகாசத்தால் தமிழ் ஓரளவு பாதிக்கப் பட்டிருப்பது வரலாற்று நிகழ்வுகளே. அகராதி களில் நிகழ்ந்த குளறுபடிகட்கும் சமசுகிருத மோகமே காரணம். முக்கியமாகத் தமிழை ஆங்கில எழுத்து (உரோமன் எழுத்துக்களில் எழுதுவதால் இனிய தமிழ்ச் சொற்களைக் கிரந்தம் கலந்த தமிழில் எழுதித் தமிழின் தனித்தன்மை அழிப்பதுடன் தமிழின சிறப்பைக் குலைத்துத் தமிழுக்கு இழுக்குத் தேடும் வழக்கு மழுக்க வேண்டும்.

20, 21 ம் நூற்றாண்டுகளுக்கு வேண்டிய சுஊழ்கலைச் செயல்களில் தமிழர் பிந்தியவர் களல்ல. ஆனால் அவர்கள் தமிழராகத்தான் செயல் பட முடிவதில்லை. இன்றைய கணினி உலகில் தமிழர் முன்னணியில் இருந்த போதிலும் தமிழில் கணினிக்கு வேண்டிய மூல மென்பொருள் ஒன்று தமிழில் சீர்மைப்பட வில்லை. 1993 இல் இருந்து தமிழ் தட்டச்சு முறையை காலத்துக்கேற்ப மாற்றி அமைக்கும் முயற்சியில் நாம் ஓரளவு முன்னேற்றம் அடைந் தும் முழுமையான ஒரு மென்பொருள் முன்னுக்கு வராதிருப்பது வேதனை தருவதாகும். தமிழ்ப் பிரச்சினைகளுக்குத் தமிழில் சிந்தித்துத் தீர்வு காண முயல வேண்டும்.

பாரதி பாடிய ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்'' என்பது போல் நானறிந்த தமிழ் மொழி போல் ஆங்கிலத்துக்கு ஈடாக 26 பித்தான்களில் 247 தமிழ் எழுத்துக்களை அடக்கத் தமிழில் சிந்தித்து யாழன் மென் பொருள் கண்டேன். அதனால், தமிழ் மொழி போல் ஆங்கில 26 எழுத்து முறைக்கு ஈடு கொடுக்கத் தமிழ்மொழி போல் வேறு மொழி இல்லை என்பதை எமது ''யாழன் தமிழ் மென்பொருள்'' நிரூபித்தும் அதை முதற் கொண்டு செல்ல முன் வருவாரில்லை. இது போல் பல ஆய்வுகள் உலகத்துக்கு எடுத்துக்

காட்டு பணியில் நாம் முயலவில்லை, முன்னேறவில்லை.

யாழன் தமிழ் மென்பொருள் அறிமுகத் துக்குப் பெருங்கவிக்கோவின் ஆசி:

''அறிவியல் உலகினிலே அன்னைத் தமிழுக்கோர் நிறைவு தரும் புதுமை

குறைவில்லா வளமை குன்றிட்ட விளக்கு நன்றுதரு வழக்கு

தமிழ்க் கணினித் தட்டெழுத்ததின் தாயக நிறை மொழி!

மறை மொழி நிறை மொழி ஆன மந்திரம் இருபத்து ஆறு ஆங்கில எழுத்தில்

இருநூற்று நாற்பத்தேழு தமிழ் எழுத்துக்களின் குறியீடுகளின் அடக்கம்.''

26 ஆங்கிலப் பித்தான்கள் கொண்டு 247 தமிழ் எழுத்துக்களை கணினி மூலம் வெளிக் கொண்டுவரும் 'மந்திரம்' இணைவலையி லிருந்து பணச் செலவின்றிப் பெறும் முறை, கீழ்வரும் இணைவலைத் தடத்திலிருந்து இலவசமாகப் பெறலாம் : http:/www.tsnh.com/cpd.htm

அதுபோல 247 தமிழ் எழுத்துக்களை எதுவித குழப்பமின்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதலாம். இன்று பரவலாக இருக்கும் முறைகள் யாவும் உரோமன் எழுத்துக்களுக்கு மேல், கீழ், பக்க குறியீட்டு முறையால் தமிழை ஆங்கிலம் மற்றும் பிற மொழி உச்சரிப்புக்கு ஏற்ப எழுதப்படுவதால் பனை - பானை யாகவும், தமிழ் - டமிலாகவும் கொச்சைப் படுத்துவதோடு பெருந் தொல்லையும் கூட. அதனால் யாழன் உரோமன் எழுத்தில் தமிழ் எழுதும் அட்டவணைப் படம் ஒன்று (Appendix A) யில் இணைக்கப்பட்டுள்ளது. (மற்றும் முறைகளுடன் ஒப்பிட்டு இந்த இலகுவான தர்க்க ரீதியான முறையை ஏற்கவொ எதிர்க்கவோ ஆவன செய்யவும்.) அன்றைய நற்றமிழ் என்றும் பொங்கிட ஒரு தமிழ் அரசு அவசியம். அந்த நிலை வரும் வரை காத்திராது இயங்கத் தமிழர் ஒரு குடை இயக்கத்தில் இயங்குவதால் ''அடம்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு'' என்பது போல் உலகத் தமிழ் இயக்கத் தலைவர் கூட்டணி அமைத்து அந்த அந்தத் தலைவர்கள் ஊடாக உலகத் தமிழரின் கூட்டொருமை பெற்று தமிழ் ஓங்கச் செய்யும் முயற்சியின் முதல் அணி கீழே தருகின்றோம்:

உலகத் தமிழ்த் தலைவர்கள் கூட்டணி பின்னணி:

தமிழர் புலம் பெயர்க்கப்பட்ட நிலை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் 1834 ல் தொழில் முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தின்படி (Indenture) 1830 ல் அடிமை அழிப்புக்குப் பதிலாக உருவாக்கப்பட்டது. இந்தக் கட்டுப்பாட்டுத் தொழில்முறையும் 1917 ல் அழிக்கப்பட்டது. 1937 ல் எழுபது இலட்சம் இந்தியர் இந்தக் கட்டுப்பட்டுத் தொழில் முறை அடிமைத்தனம் என்ற பொறியில் அகப்பட்டிருந் தனர் என்றொரு மதிப்பீடு காட்டிற்று. இந்த மறைமுக அடிமை வழக்குக்க கிர்மிட்டியா (Ghirmitityas) என்ற மங்கல வழக்கு இடக் கரடக்கல் (Euphemism) மற்றொரு பெயராகும் இந்த அடிமை நிலைபற்றி அறிந்துகொள்ள மன்னரால் நியமிக்கப்பட்ட ஆய்வு ஆணைக் குழு (Royal Commission), தொழிலாளிகள் சங்கிலிக் கோர்வைகளில் கட்டப்பட்டு வேலை செய்யக் கட்டாயப்படுத்தி, மனிதத்தன்மையற்ற வாழ்க்கைச் சூழ்நிலையில் இயங்கும்படி அவர்கள் ஆங்கிலேய எசமானரால் நிர்பந்திக் கப்பட்டுள்ளார், என்று உறுதிப்படுத்தியுள்ள னர். தென் இந்தியர் அதிலும் மதராசு மாகாண (Madras Presidency) மக்களே கட்டுப்பாட்டுத் தொழில் முறையில் பெரும்பான்மையினராவர். இலங்கையில் இன்றும் இந்தக் கொடிய கட்டுப்பாட்டுத் தொழில் முறை நடைமுறை யில் உள்ளது.

இரண்டாவது உலக மகாயுத்தத்துக்கு முன் போதிய அளவு இந்தியர் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் குடியேறியிருந்தும், குறிப் பிடத்தக்க அளவு இந்திய கலைத்தொழிலர் இந்தியா சுதந்திரம் பெற்ற பின் இந்த நாடுகளில்

குடியேறிய இரண்டாவது புலம்பெயர்ந்த வகையினராவர். அமெரிக்காவில் மட்டும் ஏறத்தாழ பத்து இலட்சம் இந்திய மக்கள் குடியேறியுள்ளார்களென்று ஒரு மதிப்பீடு குறிக்கின்றது; அதிலும் மூன்றரை இலட்சம் மக்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்களாகும்.

தொழில் ஒப்பந்தம் செய்து மேற்கு ஆசிய நாடகளில் பணியாளர்களாக வேலை செய் வோர் மூன்றாவது புலம் பெயர்ந்த வகையினர். 1992 மதிப்பீட்டின்படி இவர்கள் தொகை 1,150,000 ஆக வளர்ந்துள்ளது.

1983 ல் நடந்த இனக் கலவரத்துக்குப் பின்னர், கலைத்தொழிலர் (Professionals), செயற்றிறனார்ந்த (Skilled), தேர்ச்சியற்ற (Unskilled) ஈழத்தமிழர் நான்காவது வகையின ராவர். ஒரு மதிப்பீட்டின்படி 10 இலட்சம் ஈழத்தமிழர் 70 நாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ளனரென்றும், ஈழத்தமிழர் கனடா நாட்டில் அடர்த்தியாக உள்ளனர். என்றும் அவர்கள் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் மேலாக உள்ளது என அறிகிறோம்.

6 கோடி தமிழர் இந்தியாவிலும், 1 கோடி தமிழர் உலகெலாம் பரவியிருந்தும், அநேக தமிழரின் முறைப்பாடு என்னவென்றால், 'தமிழர் தாய்நாடு' (Tamil Homeland) ஒன்று இல்லையென்பதே! அண்மைக்காலம் வரை புலம் பெயர்ந்த தமிழர் அந்தந்த நாட்டு அரசியலில் பங்கு கொள்ளவில்லை என்பது உண்மை. ''நாமுண்டு எமது குடும்பம் உண்டு, குண்டு எங்கு வீழ்ந்தாலென்ன'' என்று உண்டு களித்து உண்டியலுக்கும் உல்லாச வாழ்வுக்கும் மயங்கி வாழ்ந்தவராவார். அந்தந்த நாட்டு மக்களுடன் தாம் சமமாக இருக்கும் நிலையை செயல்முறை அற்ற நிலையினால் இழந்து விடுவோம் என்ற அச்சத்தினால் அரசியலில் மெல்ல மெல்லப் பங்கு கொள்கின்றனர். உள்ளூர் அரசியலில் பங்கு கொள்ள வேண்டுமென்று ஊக்கப் படுத்துவதோடு துன்பத்துக்கு ஆளாக்கப் பட்ட தமிழீழரையும் நினைவில் கொண்டு இந்தச் சந்ததி அழியுமுன் தமிழர் கூட்டொருமையைப் பேணி வளர்க்க வேண்டும் என்பது தமிழ்ப் பற்றுடையோரின் வேண்டுகோள்...

2001 மார்கழியில் தென் ஆபிரிக்காவில் நடந்த உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது உலக மாநாட்டில் கலந்து கொண்டு மொறீசியசுசு (Marritius), றியூனியன் தீவு (Reunion Island) களுக்குச் சென்றேன் அன்னியர் ஆட்சி யில் அடங்கியிருந்து தமிழைப் பேசக் கூட வாய்ப்பில்லாதிருந்ததனால் அங்கு தமிழ் மணம் கவரும் தன்மையை இழந்துவிட்டதென்று தான் கூற வேண்டும். ஆனால் இன்று தமிழ் ஆர்வம் தலைதூக்கியுள்ளது தமிழின் பெருமை யினாலன்றோ!!

உலகளாவிய தமிழ் இயக்கங்கள் பல மொழி, பண்பாடு, மதம் போன்றவற்றிற்கு வேண்டிய மேடைகளை அவ்வப்போது அமைக் கின்றனர். முக்கியமாக நான்கு இயக்கத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குடைக்குள் இயங்க ஒப்புக் கொண்டது தமிழின் விடிவு காலம் என்று கொள்ள வேண்டும். இந்த நால்வர் விருப்பப்படி இந்த ஒருகுடை இயக்கம் உலகத் தமிழ் இயக்கத் தலைவர் கூட்டணியாக அமைய வேண்டி இந்த மாநாட்டில் சில அமர்வுகள் முன்வைக்கப்படும். முக்கியமாகக் கீழ்வரும் பொருள்வில்லைகளை (Objectives) அடிப்படை யாக அமைத்து இயங்கும்:

உலகத் தமிழ் இயக்கத் தலைவர் கூட்டணி (உதஇதகூ) பாரபட்சபாதமில்லாத (Non-partisan), மத சார்பற்ற (Secular), இன எல்லை முழுதளாவிய (Global) அமைப்பாகும். தமிழ் வழித் தோன்றிய மக்களின் நலனுக்கென ஆரர்வப்பற்றுக்கொண்டு (Devoted) உலகெங் கணும் வாழுகின்ற தமிழரின் ஒத்துழைப்புக்கு ஊக்கம் ஊட்டுகிற தோடு அவர்களிடையே செய்தி இணைப்பை உண்டாக்கி ஒரு கொடிக்கீழ், ஒரு நாட்டுவணக்கப் பாடல் பாடி, தமிழ்மொழி கொண்டு தமிழ்த் தனித்துவத்தை அழியாமற்காக்க அமையும்.

மேற்கூறிய பொருள்வில்லைகளை அடைவதற்கான திட்டவட்டமான கருத்துக்கூறுகள்:

1. இன்று காணப்பெறும் உலகளாவிய தமிழ் இயக்கங்க ளூடாகத் தமிழ்ச் சமுதாயத்தின் தமிழ்ப் பற்று, பேரார்வம் போன்றவையை எல்லை முழுதளாவிய பருமன் அடையும் வண்ணம் மேம்படுத்தல்.

2. தமிழ்க் கல்வியை வளர்க்கவும் முக்கியமாகக் கடந்த காலங்களில் தமிழைப் பேசவோ எழுதவோ தடைசெய்யப்பட்டிருந்தவரின் தமிழ்க் கல்வியை வளர்க்கவும், தமிழரிடத்தே இறுகப்பற்றும் உறவை மேம்படுத்தல்.

3. மொழி ப்ண்பாட்டு வெளிக்காட்டல்களூடாக (Expose) தமிழர் மரபுரிமை வரலாறுகளைப் புரியுமாறு மேம்படுத்தல்.

4. தென் ஆபிரிக்காவில் 2001 மார்கழியில் நடந்த உலகத்தமிழ்ப்ப் பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது உலக மகாநாடு முன்வைத்த தீர்மானங்களான, தமிழர் கொடி, தமிழர் நாட்டுவணக்கப் பாடல், தமிழர் புத்தாண்டைத் தமிழ்ப் பொங்கலன்று கொண்டாடுதல், மற்றும் தமிழர் மதச்சைவக் கோவில்களில் தமிழ்மொழியை வழிபாட்டு மொழியாக ஏற்றுக்கொள்வது என்பனவற்றை உறுதிசெய்வது.

5. உலகெலாம் பரவியிருக்கும் தமிழர் நிதி நிலை, அறிவு, கலைத்தொழில் வள ஆதாரம், (Resources) போன்றவற்றை புழக்கத்துக்குக் கொண்டுவரும் (Mobilize) நிதிநிலைக்குரிய, (Financial) பொதுநோக்கத்துக்கான அமைப்பு, (Institution) தமிழர் ஒருவருக்கொருவர் பரிமாற்றமான (Mutual) விரிவாக்கத்துக்கும் (Development) அபிவிருத்திக்கும் (Advancement) சட்டப்படி அமைத்தல் (Establish).

6. கல்வி கலை, மனிதஉரிமை அத்துமீறல், சமுதாய நியதிக்குக் குறைவான தொழில் முறைகள், மற்றும் குடியுரிமைச் செயல் முறைகளைச் சந்திக்கும் தமிழ்ச் சமுதாயங்களை அவைபற்றி ஆழ்ந்து ஆராய்ந்து ஒருமுடிவுக்கு வருதற்கு வேண்டிய பின்னிய செயல்விளைவுகளை ஊக்கப்படுத்தல்.

7. தமிழர் அகதி வழக்குகளை எச்சரிக்கையோடு அவதானித்து அவர்கள் படும் துன்பத்தைக் குறைக்க வேண்டிய உதவிகளைச் செய்தல்.

8. முழுதளாவிய உலக மட்டத்தில் உலக அமைதி, முன்னேற்றம், மற்றும் உயிரின வாழ்க்கைச் ச்ஊழலின் ஒத்திசைவு ஏற்பட, தமிழ்ச்சமுதாயத்துக்கும் மற்றைய சமுதாயங்களுக்கும் பின்னிய செயல்விளைவுகளை அமைக்க உதவுதல்.

இதுவரை திரு செல்லையா - தலைவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பெருங்கவிக்கோ முனைவர் வா.மு.சேதுராமன், நிறுவனர், உலக அமைப்பாளர் பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றம், முனைவர் இரா. சனார்த்தனம், தலைவர் உலகத் தமிழர் மன்றம், மற்றும் மருத்துவர் வின்சறன் பஞ்சாட்சரம், தலைவர் உலகத் தமிழர் நடுவம் ஆகிய நால்வரும் உலகத் தமிழ் இயக்கத் தலைவர்கள் கூட்டணியின் (உதஇதகூ) நிறுவனர்களாகவும், அடியேன் உதஇதகூவின் அமைப்பாளராகப் பொறுப்பேற்றுள்ளோம். ஆதரவாளர், புரவலர் மற்றும் பொறுப்பேற்று உதஇதகூ யை உலகத் தமிழரின் ஒரே குரலாக இயங்க ஒத்துழைக்க விரும்புவோர் உலக இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு, ''கனடாவில் பெருங் கவிக்கோ'' என்ற நூலில் பெருங்கவிக்கோ வேண்டுவதையே அன்றை நற்றமிழ் பொங்கிட நாம் எல்லோரும் வேண்டுவோம் :

கோடி கோடித் தமிழ்க் கரங்கள்
கூடி ஒன்றாய் உயரட்டும்
கோடி கோடிக் குரலொலிகள்
கூடி ஒன்றாய் ஒலிக்கட்டும்!

★

மொழி வாழ்வில் வாழும் வழு அமைதிகள்

பொள்ளாச்சி மணிமொழியார்

வழு விழாநிலை வழு அமைதி என்ற தலைப்பில் நன்னூல் சொல்லதிகாரம் பொதுவியலில் 35 நூற்பாக்கள் உள்ளன. முதல் நூற்பாவே

''திணையே பால்இடம் பொழுது வினா நிறை மரபாம் ஏழும் மயங்கின் ஆம் வழுவே'' (௩௭௫) என்று அமைந்து வழுக்கள் ஏழையும் விளக்கமாக்குகிறது அஃதாவது இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் ஆறுவினா வும் எட்டு விடையும் பல்வகை மரபுகளும் ஆகிய ஏழும் தத்தம் முறை தவறி வந்தால் வழு ஆகும்.

1. சொற்கள் தொடருமிடத்து முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை பால் இடம் காலம் வினா விடை மரபு என்னும் இவ்வேழிலும் மாறுபடல் தொடர்ந்து நிற்பதுவழா நிலை, அதாவது இலக்கணக் குற்றம் இல்லாதது (வழு - குற்றம்)
2. அத்திணை பால் இடம் முதலியவற்றில் மாறி நிற்பது வழுவாம்.
3. இனி அப்படி மாறி நின்று இலக்கணக் குற்றமுள்ளதாகக் காணப்பட்டாலும்,

எப்பொருள் எச்சொலில் எவ்வாறுயர்ந் தோர்

செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (௩அ௮)

என்றபடி முன்னோரால் இருக்கலாமென்று ஏற்றுக்கொண்டு அமைக்கப்பட்டன. வழு அமைதியாம் மேலே சொல்லப்பட்ட மூன்றனுள் வழு நீக்கப்பட மற்ற இரண்டும் கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டு: 1. அவன் வந்தது

2. அவன் வந்தாள் - இவ்விரண்டில் அவன் என்ற உயர்திணை ஆண்பால் முன்னதில் வந்தது என்று அஃறிணை முடிவு கொண்டதாலும் பின்னால் வந்தாள் என்று பெண் பால் முடிவு கொண்டதாலும் முறையே திணை பாலில் மாறி வழுவானது.

இதுவே யான் வந்தான், நாளை வந்தான் என அமையும் போதும் யான் என்ற தன்மை வந்தான் என்ற படர்க்கையோடு முரணி இடவழுவும் நாளை என்ற எதிர்காலம் வந்தான் என்ற இறந்தகாலத்தோடு முரணி காலவழுவும் ஆகி இலக்கணக்குற்றங்களாம், இவை அவன் வந்தான் அவள் வந்தாள் யான் வந்தேன் நாளை வருவான் என அமையின் வழாநிலை காணும். இதில் முன்போல் முரணாமல் உயர்திணை முடிபும் பெண்பால் பெண்பால் முடிபும் தன்மை தன்மை இடமுடிபும் எதிர்வு எதிர்கால முடிவும் ஏற்று பொருந்தி முடிவதைக் காணலாம்.

இனி வழு அமைதியைக் காண்போமா

(நூற்பா ௩௭௭) உயர்திணை தொடர்ந்த பொருள் முதலாலும்

அறனொடு சார்த்தின் அத்திணை முடிபின

அஃதாவது உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து வந்தாலும் எழுவாயாக நிற்கிற அஃறிணையாகி பொருள் இடம் காலம் சினை, குணம் பண்பு முதலிய ஆறும் அவ்வுயர்ததிணையோடு சார்த்தி அஃறிணையாகிய பொருள்... முதலியவற்றின் தன்மையை அவற்றை உடைய திணையின்மேல் ஏற்றிக்கூறி முடிக்கப்பட்டால் அவ்வுயர்திணை முடிவைப் பெறுவனவாம்.

சான்று: தம்பி பொன் பெரியன். இங்கே பொன் என்னும் அஃறினை எழுவாயால் தம்பி என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால், வழு எனில் அன்று தொடர்புண்டாயிருத்தலால் அதாவது சார்த்தி முடித்தலால் அவ்வழு அமைதியாயிற்று இதுவே சார்த்தாவிட்டால் வழாநிலையாக தப்பிக்கும் பொன் பெரிது எனத் தன்முடிவே கொள்ளும் மாறின் வழுவாகும்.

வழு அமைதிகள் பலவற்றையும் தன்னூல் ஆசிரியர் பவணந்தியார் பல நூற்பாக்களின் நன்கு விளக்கியுள்ளார்.

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்

இழப்பினும் பால்திணை இழுக்கிலும் இயல்பே எனஎடுத்து

ஒருமையிடத்து பன்மையும் பன்மையின் ஒருமையும்

ஒரிடம் பிறஇடந் தழுவலும் உளவே எனத் தொடுத்து

அடைமொழி இனமல்லதும் தரும் ஆண்டுறின்

இயற்கைப்பொருளை இற்றெனக் கிளத்தல் (இதுதொல்காப்பிய நூற்பா)

முன்னத்துணருங் கிளவியு முளவே

கேட்குந போலவும் கிளத்துந போலவும்

இயங்குந போலவும் இயற்றுந போலவும

அஃறிணை மருங்கிலும் அறையப் படுமே எனப் பலவாறு விரித்து

உருவக உவமையில் திணைவினை முதல்கள்

பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே (சக) என முடிப்பார் இவற்றை ஆழப்பயில்பவர் உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பனகொளலேல் என்றபடி வழுவமைதி காண வல்லவர் ஆவர்.

நமது வாழ்வில் குற்றம் செய்யாமல் வாழ்வது சிறப்பு குற்றம் அல்லது தவறு செய்யும்போது தண்டிக்கப்படக் காண்போம் அக்குற்றம் சிலசமயம் பொருள்குற்றமாக இல்லாது சூழல் காரணமாக அறியாமல் செய்திருப்பின் மன்னிக்கப்படுவதும் உண்டு. வழு குற்றம் போன்றது என்றால் வழுவமைதி மன்னிக்கப்படுதல் போன்றதாகும் வழுவமைதியை மற்றுமொரு எடுத்தக்காட்டால் இன்னும் நுணுகிப் பார்ப்பதன் மூலம் (இதை) உணர்வோம்.

பொதுவினை மரபுவழா நிலையை இப்படிக் குறித்ததை

அடுத்தே சிறப்பு வினை மரபுவழாநிலை குறித்து

வினைசார்பு இனம் இடம் மேனி விளங்காப்

பலபொருள் ஒருசொல் பரிப்பர் சிறப்பெடுத்தே (உகுஎ)

என்ற நூற்பாவும் காணும் இதை விளங்கிக் கொள்ளவும் (சான்றாக) மா என்பத மரத்திற்கும் எருதிற்கும் குதிரைக்கும் திருமகளுக்கும் பொதுவாகிய பலபொருள் ஒருசொல் மா ஏறினான் மாயாது என்ற இடத்து இது குறித்த பொருள் விளங்காது எனவே விளங்குதற்பொருட்டு பாயமா எறினான் (பாய்மா குதிரை) மாமரம் ஏறினான் என பாய்மா மாமரம் என மாயாது எனச் சிறப்புச் சொல்லோடு கட்டிக்கூற வேண்டும் இவ்வாறே இதன் பிற நூற்பாக்களையும் அமைத்தறிந்து கொள் இனி புத்தியில்லாதவன் என்பதைப் புத்தி இல்லாதவன் என இசையறுத்துக் கூறினால் அறிவு கெட்டவன் என்றும் புத்தியில் ஆதவன் என இசையறுத்துக் கூறினால் அறிவிற் சூரியன் என்றும் பொருள் துணியக் கிடப்பதை எடுத்துக்காட்டி புரிந்து கொள்ளுமாறு செய்தனர்.

எழுத்தியல் திரியல் பொருள்திரி புணர் மொழி

இசைத்திரிபால் தெளிவெந்து மென்ப (உகூக) என்ற வழியும் வழுவமைதி உண்டு என்பதுணர்க.

அக்காலத்தில் அரசனைக் காண அவைக்கு வருவோர் திரும்பிச் செல்கையில் அரசனுக்குத் தம் உடலின் பின் புறத்தைக் காட்டுதல் மதிப்பாகாது என்பதால் பின்னோக்கி நடப்பாராம் முன்னோக்கி நடத்தல் இயல்பு பின்னோக்கு நடத்தல் இயல்பன்று ஆனால் மதிப்புக் கருதி நிகழ்ந்தது அதுபோலவே நீங்கள் இதுவும் வழுவமைதி என்பது இயல்பு அதனையே தாங்கள் என்பது இயல்பன்று ஆனால் மதிப்புக் கருதிக் கூறப்படுகிறது பேபராசிரியர் இலெ.தங்கப்பா (நற்றமிழ் 2033 மேழம் (சித்திரை பக்கம் 13) பருமனான அடிமரம் என்னும் பொருளில் பராரை என ஒரு தொடர் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையில் உள்ளது பருமை அரை என்பது பரு அரை பராரை என வந்தது என அரை என்னும் இரு சொற்குளம் சேர்ந்தால் தமிழ்ப் புணர்ச்சி விதிப்படி பருவரை என்றே அமைதல் வேண்டும் பருமை எனும் பண்புப் பெயர்மை ஈறு கெட இடைநின்ற உவும் கெட்டு பர் என நிற்க அரை என்னும் வருமொழியின் சேர்ந்து பரரை என அமையவேண்டுவது வருமொழி முதிழொத்தாகிய ஆனாகிப் பராரை எனஅமைந்துள்ளது. இங்ஙனம் நீண்டுகடும் நீள் கடல் புணர்ப்பு தமிழில் (தீர்க்கச்சந்தி) எங்கோ ஒரோஒரு இடத்தில் ஒலிக்கும் எளிமைகருதி வழுவமைதியாகஅருகிக் காணப்படும்.

வழுவை இங்ஙனம் நலம் கருதிய காரணத்தின் பொருட்டுச் சான்றோர் பெருந்தகவுடன் இடங்கொடுத்து ஒரோஒரு இடத்தில் மட்டும் அமைத்துக் கொள்வர் வழுவமைதி என்பது அருகிவரத்தக்க இந்த வாய்ப்பை பெருக வைத்துக் கொண்டால் வழுவே விதியாகி எல்லாம் வழுவாகிவிடுமேயன்றி வழுவமைதியாகாது என்பதை நாம் உணர்க ★

ஐயா வா.மு.சே. அவர்களின் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு

இளம்பாரி உ. கருணாகரன்

அய்யா பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் நான் கண்ட மனிதர்களில் வித்தியாச மானவர் ஆவார். பொதுவாக மனிதர்கள் தம் பெண்டு, தம் பிள்ளை என்றே குடும்பப் பற்றையும் பாசத்தையும் மட்டும் வைத்துக் காலந்தள்ளித் தம் வாழ் நாளைக் கழிப்பர். ஆனால் இப் பெருமகன் பள்ளியாசிரியராக ஓராசிரியராத் தம் வாழ்நாள் சீவியத்தைத் தொடங்கி அந்த நாள் முதலே தமிழ், தமிழ் என்று முழங்கி அதன் துயரத்திலும், துக்கத் திலும் கவனம் எடுத்து அதற்கு ஏற்படும் இடை யூறுகளைக் களைந்து தம் தாய் மொழியை வலுப் படுத்தும் வகைகளை ஆய்ந்து தேர்ந்து அதற்காக அல்லும் பகலும், ஒல்லும் வகையாலும் பாடு பட்டு வருபவர் என்பதால், இவர் மீது ஒரு தனிப் பற்று பாசம் அப்போதும் உண்டு, இப்போதும் உண்டு, எப்போதும் உண்டு.

தமிழகத்தில் எத்தனையோ பெரியோர்கள் எத்தனையோ வழிகளில் தமிழை உயர்த்தப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர் வழியோ ''தனி வழி'' எவரும் கடைப் பிடிக்க முடியாத தனி வழி.

அந்தத் தனி வழிதான் தாம் தனியாக ஒற்றைக்காலில் நின்று ஆயிரம் இடையூறுகள் வந்தாலும் உள்ளூராயினும் வெளி நாடாயினும், எதிர்த்து வரும் களிற்றையும் எறி ஈட்டி கொண்டு குத்தி வீழ்த்தி வெற்றி வாகை சூடிய தலை வனைப் போல எத்தனை இடர்கள் எதிர் வந்தும் அவற்றை எல்லாம் துச்சமாக மதித்து அவற்றை எப்படி யாரைக் கொண்டு எதிர்ப்பட்டால் இடர் வென்று பயணம் வெற்றியாகத் தொடரும் என் பதை வள்ளுவர் கட்டிய வழியைப் பின்பற்றி, காட்டாற்றைக் கடந்து, கடும் மலையைத் தாவி வெற்றிக் கனியைப் பறித்து அவர் மட்டும் அல்ல அனைவருக்கும் பகிர்ந்தளித்த பரந்த மனத்தார் நமது பெருங்கவிக்கோ என்றால் அவரது சாதனைகளை மறக்க முடியுமா? இல்லை மறுக் கத்தான் முடியுமா? அதில் ஐயம் கொள்வோர் ஒருவரும் இரார்.

திருச்சி, சென்னை, மதுரை என உள்நாட் டிலும், ஜெர்மனி, தாய்லாந்து என வெளிநாடு களிலும் தமிழுக்காக தனி ஒருவராக நின்று வென்று மாநாடுகள் நடத்திய பெருந்தகை இவர் ஒருவர்தான். வேறு ஒருவரை சுட்டுவிரலாலும் காட்ட முடியுமா? நிச்சயம் முடியாது. ஏனெனில் ஒருவரும் இல்லை. சிலர் சேர்ந்து உலகத் தமிழ் மாநாடுகளை நடத்துவார்கள். அப்படிப்பட்ட வர்களைக் குறை கூறவும் மாட்டேன். அவர் களும் தமிழுக்குப் பாடுபடுகிறார்கள். வாழ்த்து வோம். அந்த மாநாடுகள் அய்யாவின் மாநாட் டுக்கு இணையாகாது என்பதால் தான் இவர் தனியாக நிற்கிறார் எனலாம்.

மனித சமுதாயம் உயரத் தேவையானது மொழிதான். ஒருவர் கருத்தை ஒருவருக்குத் தெரிவிக்க உதவுவதே மொழியாகும். அதனை அழியாமல் பாதுகாப்பாக வைப்பது எழுத் தாகும். தமிழர்களின் மொழி தமிழ் என்பது. இங்கிலிஷ் காரர்களின் மொழி இங்கிலிஷ், பிரெஞ்சுக் காரர்களின் மொழி பிரெஞ்சு, மராட்டியர்களின் மொழி மராட்டி. இப்படி மொழியை ஒட்டியே அந்தந்த இன மக்களை அழைக்கிறோம். மொழியை ஒட்டி இலக்கியம், இலக்கணம், கலாச்சாரம், பண்பாடு நாகரிகம் என்று மொழியினை அடிப்படையாகக் கொண்டே அமையும். மொழியை ஒட்டிய இலக்கிய, இலக்கணம், பண்பாடு அம்மொழியாளர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ப ஏற்றம் பெறும். ஆனால் கலை, கலாச்சாரம் நாகரிகம் அம்மொழியாளர் களின் பெருளாதார வளர்ச்சியின் அடிப்படை யில் முன்னேறவும் கூடும்.

அடிவானம் வெளுத்ததம்மா

கோ. இராசேந்திரன்,



அடி வானம் வெளுத்த தம்மா
ஆயிரம் கை எழுந்த தம்மா
செங்கமலம் விரிந்த தம்மா
செழுங் கழுநீர் சிரித்த தம்மா,

குயிலின் கீதம் கேட்குதம்மா
குளிரின் வாடை அடங்குதம்மா
குவளைப் பூவும் அழைக்குதம்மா
குலவி மகிழ நினைக்குதம்மா

முகிலின் மனம் கனிந்த தம்மா
முத்து முத்தாய் சிரிக்குதம்மா
மணிக்கதிர்கள் குலுங்குதம்மா
மலை மலையாய் நிறையுதம்மா

கழனி நகை செய்யுதம்மா
கலம் கலமாய்க் காணுதம்மா
உள்ள மெல்லாம் மகிழுதம்மா
உய்வை எண்ணி வணங்குதம்மா

இவற்றின் வளர்ச்சியானது நூற்றுக் கணக்கான ஆண்டுகளில் முழுமை அடைந்து விடாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தேவைப் படும் இந்த வயது முதிர்வின் காரணத்தால்தான் தமிழ் மொழி செவ்வியல் மொழியாக எல்லா வகையிலும் நாகரிகம் பெற்ற மொழியாக விளங்குகிறது. இந்த உண்மையை மூதறிஞர்கள் நிரூபித்துச் சென்றுள்ளனர்.

தமிழ் மொழி வளர மூலாதாரமாக இருந்தது மதுரை என்பார்கள். அப்படிப்பட்ட சிறந்த இடமான மதுரையில் பாண்டித்துரைத் தேவருக்குப்பின் தமிழ் வளர்க்க மதுரை செல் கிறார் நம் பெருங்கவிக்கோ அவர்கள். உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களையும் அர வணைத்து, ஒருங்கிணைத்து நம்மொழி தமிழ் வளரப் பாடுபடுகிறார். ஏற்கனவே பல வெற்றி மாநாடுகளை (நான்கு) நடத்திய இந்த மனிதத் தேனீ, ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டை பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் வெள்ளி விழாவினையும் சேர்த்துக் கொண்டு அமைந் திருப்பது பாராட்டத்தக்க ஒன்று. தமிழர்களா கிய நாம் ஒன்று சேர்ந்து அந்தத்தேனீ சேர்க்கும் தமிழ்த்தேனை அழிக்காமல் பாதுகாக்கப் புறப் படுவோம் மதுரை நோக்கி என்று எனது எழுத் துலகப் பெருமன்றத்தின் சார்பில் தமிழர்களுக்கு வேண்டுகோள் வைக்கிறேன்.

தமிழ்த்தேனை அழித்துவரும் தன்மான மற்றவர்களைத் தமிழ்த் தேனீ கொட்டவும் தயங்காது. இப்படி இவர் பலவகையிலும் தமிழ் மொழியை, தமிழ் இனத்தின் நலம் காக்கா மாநாடுகள், நடைப்பயணம், கவியரங்கம், என் றும், மேலும் நூல்கள் எழுதி அவற்றின் வாயி லாகவும் பாடுபடுகிறார். வருங்கால புத்தமிழ்ச் சமுதாயத்துக்கு இவர் அமைத்துத் தரும் திட்டங்கள் அடிப்படையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. அதனால் இவரைத் திட்டங்களின் பிதாமகன் என்று அழைத்தாலும் தகும்.

பொதுவாக இப்படிப்பட்ட பெருஞ் செயல்கள் எல்லாம் அரசுதான் செய்ய முடியும். அப்படி அரசு செய்யாத காரியங்களை இவர் தம் தலையில் சுமந்து தமிழ் காக்க முன் வந்துள்ளார். ழகர, ளகர, லகர, உச்சரிப்பு வேறுபாட்டை அறியாமல் இருப்போர், பிறமொழிச் சொற் களைத் தமிழில் கலந்து பேசுவதை எதிர்ப்பது, தமிழுக்குத் தலைகுனிவைத்தரும் கோயில் பூசை முறை, பள்ளிகளில் தமிழ் அழிப்பு வேகம், நீதி மன்றங்களில் ஆங்கில மோக வெறி, தமிழர்கள் வைக்கும் பெயர்களில் அந்நியப் பெயர் ஆதிக்கத் தாண்டவம் போன்றவற்றுக்காக குரல் கொடுக்கும் பெருங்கவிக்கோ இன்றுபோல் என்றும் நின்று வாழ்க.

மதுரை மீனாட்சியம்மை கோபுரம் போல வானளாவி கொடிகட்டிப்பெருமையுடன் வாழ்க.

அவருக்கு உடனிருந்து இந்த மாநாடு வெற்றி பெற உழைக்கும் அவரது குடும்பத்தாரும், நண்பர்களும்ந லமுடன் வாழ்க என்று உளமார வாழ்த்துகிறேன்.

இவர் வேறு தமிழ் வேறு அல்ல. அதனால் தான் தமிழக அரசும் முரசொலி அறக்கட்டளை யும் இவருக்குப் பொற்கிழியும், விருதும் வழங்கி சிறப்பித்துள்ளது.

தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பித்த தமிழகத்தின் தலை சிறந்த குடிமகனாய் விளங் கும் பெருங்கவிக்கோ அவர்களின் காலத்தில் நாமும் வாழுகின்றோம் என்பதில் பெருமை கொள்ளுவோம்.

★

முத்துக் குறள் மூன்று

கந்த. தங்கவேலு



முகம் :

தமிழர் நாகரிகத்தின், பண்பாட்டின் கரு வூலங்களான நூல்களை காப்புச் செய்ய வேண் டிய சூழ்நிலையில், தொல்வரவுகள் இலக்கண இலக்கியங்கள், 'தொல்காப்பியம்' என்ற நூலாகவும், வகைப்படுத்தி பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கணக்கு நூல்களாக வும் மலர்ந்தன பாட்டும், தொகையும் மேல் கணக்கு எனப்படும். மேல்வரிச்சட்டமாக கண்ணுக்கும் மற்ற புலன்களுக்கும் புலப்படும், புறம் எனவாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், கீழ்வரிச்சட்ட அடித்தள அமைப்பாக கண்ணுக்குப் புலனாகாத தமிழ் நூல்களில் குறிப்பிடப்படும் மறை நல்கள், 'நான்மறை' தோல், தோல் வரவு என்று வழங்கி வந்தவை களும், ஒரு ஒப்பற்ற நூலாக வள்ளுவப் பெருந் தகையால் திட்டமிட்டு தனி நூலாக இயற்றப் பட்டது. இதுவே திருக்குறள். 'தேவர் குறளும் திருநான்மறை முடிவும்' ... ஒரு வாசகம் என்று உணர், என்ற பழம்பாடல் இக்கொள்கைக்கு அரண் செய்யுமாறு அமைந்துள்ளது.

வள்ளுவத்தில் ஓரளவு அமிழ்ந்து ஆழங்கால்பட்டு பரல் எடுத்து மூன்று முத்துக் குறள்கள் புதுப்பொலிவு ஊட்டம் பெற்று ஒளிர்கின்றன. இன்று வரை எம் கண்ணில் பட்ட உரைத் தொகுப்பை முகமாகக்கொடுத்துப், பின் எம் உரை பாலிக்கப்பட்டுள்ளது. (அதிகார விளக்கமும், முறை வைப்பும் ஆய்வு முடிவு பெறாததால் எம் உரையில் இப்போது முகிழ்க்கவில்லை. போதுவரும் போது போது அலர்ந்து மலரும்)

கல்வியதிகாரம் :அதிகார விளக்கமும் முறை வைப்பும :

அஃதாவது, ஒரு அரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல், அவையாவன: அறநூலும், நீதிநூலும் யானை குதிரை தேர் படைக்கல மென்ற இவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடை யன் ஆயக்கால் தன்னுயிர்க் கேயன்றி மன்னுயிர்க்கும் பயன் டுதல் நோக்கி, இஃது அரசி யலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடையமை யின் பொதுப்படக் கூறுகின்றார். மேல், 'தூங்காமை கல்வி' (குறள் 383) எனத் தோற்றுவாய் செய்த மாட்சிமை விரித்துக் கூறுகின்றமையின், அஃது இறைமாட்சியின் பின்வைக்கப்பட்டது - பரிமேலழகர்.

கல்வியானது கல்வியாமாறும் அதனானா கிய பயனும் கூறுதல். இது முதலாகப் பொருள் வரவு இயற்றும் திறம் கூறுகின்றார். ஆதலின், அஃது இயற்றுங்கால் கல்வி முந்துற வேண்டும் - மணக்குடவர், பரிப்பெருமாள்.

கல்வியானது அரசற்கு மனுசாஸ்திரம் மந்திரம் தொண்ணூற்றெட்டு ஆயுதக் கல்வி வேணும் என்றவாறு - பரிதி.

அஃதாவது, அரசன் தான் கற்றதற்குரிய நூல்களைக் கற்றல், அவை இலக்கண நூல், கணித நூல், வனப்பியல், வரலாறு, அறநூல், அரசியல் நூல், போர் நூல் முதலியன. இவற்றுள் அரசியல் நூலுமு போர் நூலுந் தவிர ஏனைய வெல்லாம் எல்லார்க்கும் பொதுவாம். அரசியல் நூல் அமைச்சர்க்கு போர்நூல் படைமறவர்க்கும் அரசர்க்குப் போன்றே சிறப்பாக வுரியனவாம் தேவநேயபப்பாவாணர்.

முத்துக் குறள் ஒன்று

குறள் உரைகள்:

பரிமேழகர் : அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றையெழுத்தென்று சொல்லுவனவுமாகிய கலைகளிரண்டினையும் அறிந்தார் சிறப்புடையுயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர். எண் என்பது கணிதம்.

எண் என்ப ஏனை எழுத்தென்ப என்பதற்கு உரை.

பரிதியார் : எண்ணாகிய சோதிடமும் எழுத்து முதலாகிய அஞ்சு லட்சணமும்

காளிங்கர் : எண் என்றது, இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது, எழுத்து என்றது தாம் கற்கும் கல்விக்குத் துணையறுப்பாகிய எழுத்து என்று ஆயிற்று, மற்று, இவ்வாறன்றிக் கணக்கு, நிலை, ஆகிய சிற்றெண்ணும், பேரெண்ணும், நிறை எண்ணும், நிலவெண்ணும் பிறவும் ஆகிய நுண்குறி எண் என்றும், மற்று இவற்றின் அறிகுறி எழுத்தாய் அடிப்பட வருகின்ற தொகை வரி எழுத்தும் என்றும், இவை இரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு.

வரதராசனார் : எண் என்பது தன்னறிவை யும், எழுத்து என்பது நூலறிவையும் குறிப்பிட்ட வாறு. இதனைப் பின்னேயும், 'மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு (636) என்று எடுத்துக் காட்டுவர்.

மயிலை சிவமுத்து : எண் - கணக்கு நூல் கள் ; வீட்டுக்கணக்கு, கடைக்கணக்கு நூல்கள்; நிலநூல்; வானநூல், முதலிய யாவும், எழுத்து இலக்கண இலக்கிய நூல்கள்.

வ.செ.குந்தைசாமி : 'எண்ணென்ப எழுத் தென்ப' என்று ஒவ்வொன்றாக வரிசைப்படத்தி மட்டும் சொல்லவில்லை. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்று கூறுகிறார்.

இவையிரண்டும் கண் என்ப.

அகமும், புறமும் ஆகிய இவ்விரண்டும் கண் இணை. இருவாழ்வு நிகழ்வுகளையும் கண் நின்று மூளைக்கு உணர்த்தி துய்ப்பதில், வாழும் உயிரின் ஐம்புலன்களில் கண் இணையே முதல் என்க. கண்ணிரண்டும். கண் நகையாக மிளிரும். நகை உகுக்கும் நோக்கும். நோக்கிக் கலக்கும். படும் ஓடும்.

வாழும் உயிர்க்கு : மக்கள், தேவர், மாக்கள் ஆகிய முத்தொகுதிக்கும் என்க. மாக்கள் மக்களைப் போன்றே. புலன்களால் நுகரும். தேவர், (தெய்வம்) பார்வை ஒன்றி னாலே நுகர்வர் என்பது வழக்கு. எனவே இக் குறள் முத்திறத்தாரான வாழும்உயிர்க்கு உரித்தாகியது பொருள் முதல் இடத்தை இழந்து விடுகிறது. எழுத்திற்கு இக்குறளில் இரண்டா வது இடம் உறுதிப்படுத்தப்பட்டு விடுகிறது.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' என்று கூறிய வள்ளுவர் எண்ணின் இடத்தையும் எழுத் தின் இடத்தையும் ஆழமாக, அறிவார்த்தமாக அறிந்தே எழுயிருக்கிறார். அன்றைய உலகின் அறிவுத்துறைகள் பலவற்றின் வளர்ச்சியை முழுமையாக உணர்ந்து, அதன் அடிப்படையில் தனது அணுகுமுறையை வகுத்திருக்கிறார் என்பது புரிகிறது.

க. சாரங்கபாணி 'கற்பவை கற்க' என்பதால் ஈண்டுச் செயற்கைக் கல்வியே பேசப்படும். ஆதலின் 'எண்' என்பதற்கு 'மதிநுட்பம்' என்னும் குறள்காட்டித் தன்னறிவு எனப்பொருள் கோடல் கல்வி அதிகாரத்துக்கு இயைவதன்று. 'எண்' என்பதற்குக் கணிதம், சோதிடம், உள்ளத்தால் எண்ணிக் கொள்வது, தன்னறிவு எனக் காணப்பெறும் பல பொருள் களுள், கணக்கு முதலிய அறிவு நூல்களைக் குறிப்ப தாகக் கொள்ளுதல் பொருந்தும். 'எழுத்து' என்பதற்கு இலக்கண இலக்கிய நூல்களைக் குறிப்பதாகக் கொள்வார் உரை தகும்.

பி.எஸ்.சுந்தரம் எண்ணை அடிப்படை யாகக் கொண்டனவும் ஏனைய எழுத்தை அடிப் படையாகக் கொண்டனவுமான இருவகை நூல் களையும், வாழும் உயிர்களாம் மக்களுக்கு இரு கண்கள் என்று கூறுவார்கள். 'வாழும் பிற உயிர் கள் வாழ்வதாகக் கூறுவதில்லை. சிறப்பாக வாழ் வதால் மக்கள் உயிர் உயிர் எனப்பட்டது. எண் வழிப்பட்டவை கணிதம், வானநூல், அறிவியல் என விரியும். எழுத்து வழிப்பட்டவை இலக்கிய இலக்கணமாக விரியும்.

எம் உரை

'எண்' என்ப 'ஏனை' 'எழுத்து' என்ப, இவ்விரண்டும் கண் என்ப, வாழும் உயிர்க்கு.

எண் என்ப ஏனை எழுத்து என்ப.

எண்ண அலைகள், நனவில் கனவில் ஆழ்நிலையில் வரும் வண்ண எண்ண ஊற்றுக் குவியல்கள். இவை வரையறைக்குட்படாதன. வானமளந்தது அனைத்தையும் அளந்திடும் ஆற்றல் பெற்றவை. ஒரு கட்டுக்குள் அடங் காதவை. எழுதாக்கிளவி, கோளா ஒலி, போன்றவை எல்லாம் அகத்தில் நிகழ்வது எண்ணங்கள் வடிவம் பெற்று, எழுத்து, சொல் முதலிய எழுத்துலகம், சொல்லுலகம், பொருளுலகம் ஆக முப்புரம் ஆகும் போது, எண்ணங்கள் சிறைப்பட்டு பொருள்கட்டுக்கு ஆளாகின்றன. வரையிலாது, கட்டுகளின்றும், வீடு (விடுதலை) இயல்பாற் பெற்றுள்ளவை எண், சிந்தனை உலகம் அகம் எனவே ஏனை எழுத்து என்று வள்ளுவர் குறிப்பது, கட்டுண்ட 'புறம்' என்பது தெளிக.

''எனவே இலக்கண நூல், கணித நூல், வனப்பியல், வரலாறு, அறநூல், போர்நூல், அறிவியல் நூல், காமநூல் தொடங்கிய பல்வகை நூல்களாகும். இன்றைய ஒலி ஒளி நாடாவில் வரிக்கப்பட்டிருக்கும் எல்லா வகையான வெளிப்பாடுகளும் அன்றியும் கைவினையால் உருவாக்கப்பட்ட ஓவியம், சிலை, கூடம், கட்டிடம் என்ற அனைத்தும் உள்ளீடாகும்.

வள்ளுவர், தொல்காப்பியரை ஒட்டியும், நான்மறை மரபுகளான, தமிழ்ப்பண்பாட்டை விளக்கவும் அகம், புறம் என்று நிகழ்வுகளைப் பால்படுத்திய நுண் மாண் நுழைபுலத் தமிழரின் மாட்சியை ஏற்றிக் கூறும் குறள்களில் இந்த முத்துக் குறள் ஒன்றெனக.

'எண்' என்ற அகமும், 'எழுத்தெனசச் சொல்லப்பட்ட' புறமும், ஆகிய இரண்டும், வாழும் உயிர்க்கு இருகண் எனத் தெளிக. இது நான்மறை கூற்று ஆதலின், என்ப என்று முடிக்கிறார்.

நீத்தார் பெருமை :

அதிகார விளக்கமும் முறைவைப்பும் :

அஃதாவது முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல்' - பரிமேலழகர். உலகப் பற்றை ஒழித்து, இறைவனருளைப் பெற்ற பெரியோரே உள்தை உள்ளபடியே உணர்த்த வல்லவர்கள். ஆதலால், கடவுளையும், அவர ருட் சத்தியையும் தொழுதபின், அடியார்களுக்கு வணக்கங் கூறுதல் முறைமையாதலால் நீத்தார் பெருமை அவற்றின் பின் வைக்கப்பட்டது - கா.சு.பிள்ளை,

'நீத்தாரது பெருமை கூறுதல், நீத்தார் மனமாசுகளை விடுத்தவர்; கட்டற்றவர். இறைக்குரிய கோயில் இரண்டு; ஒன்று இயற்கை. மற்றொன்று நீத்தார் நெஞ்சத்தாமரை, ஒரு கோயிலுக்குப் பின் மறறொரு கோயில் திகழும் முறையில் வான் சிறப்புக்குப் பின் நீத்தார் பெருமை வைக்கப்பட்டது - திரு.வி.க

அளித்தலும் அழித்தலுமாகிய ஆற்றலை இயல்பாகவே எய்தியவான் போலாது. அவற் றைத் தவத்தான் எய்தியவர் துறவோராதலின், அவரர் பெருமை வான் சிறப்பின் பின்வைக் கப்பட்டது - சொ. தண்டபாணி இல்லற இன்பத்தைத் துறந்து பொது நலம் புரியும், பெரியாரது பெருமை கூறுதல் நீத்தார் பெருமை - புலவர் குழந்தை.

இவ்வதிகாரம் சமணரின் சாது சரணத் துடனும் பௌத்தரின் சங்க சரணத்துடனும் ஒத்தவையாகும் - கா.அப்பாத்துரை

இவ்வதிகாரத்துக்குக் கூறப்பட்டுள்ள இலக்கணமும் முறைவைப்புக் கரணமும் தம்முள் மாறுபட்டவை யல்ல. ஒருவகை விளக்கமே யாதலின் அவையெல்லாம் ஒர சேரத் தொகுத்து நினையத் தகுவனவேயாம் - சாரங்கபாணி.

ஒப்பற்ற சான்றோராய், உயர்ந்த குறிக் கோளுடன் வாழ்ந்து உலகிற்கு வழிகாட்டும் தந்நலம் நீத்தார் பெருமை - பி.எஸ். சுந்தரம், தமிழ்மறை திருக்குறள்.

முத்துக்குறள் இரண்டு

செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரரிய செய்கலாதார்.

குறள் உரைகள் :

பரிமேலழகர் : ஒத்த பிறப்பினராய் மக்களுள் செய்தற் கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர்; அவ்வெளிய வற்றைசச் செய்து அரியவற்றைச் செய்ய மாட்டாதார் சிறியர்.

செயற் கெளியவாவன, மனம் வேண்டிய வாறே அதனை பொறிவழிகளால் புலன்களிற் செலுத்தலும் வெஃகலும் வெகுளலும் முதலா யின. செயற்கரியவாவன, இயமம், நியமம், முதலாய எண்வகை யோக உறுப்புகள்.

திரு.வி.க ஐந்து அவித்து வாழுதலே செயற்கரும் செயல் என்பது அவ்வருஞ் செயல் புரிவோரே பெரியர் என்பதும் ஆசிரியர் உள்ளக்கிடக்கை. ஆகவே, பெரியர் எவர்? சிறியவர் எவர்? பெரியர் ஐந்தவித்தாரென்க. சிறியர் ஐந்தவியாதாரென்க.

வ.உ.சி. செயற்கரியன - உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை, 'யான்' 'எனது' விடுத்தல் முதலியன.

கி.ஆ.பெ. செயற்குரிய செய்கலாதார் சிறியர் எனப்பாடம் திரித்துச் செய்தற்குரியன வற்றைச் செய்யாதவர்கள் சிறியர் என்பர்.

பிறர் உரை : செயற்கரிய வாவன என் பதற்கு நீரிற் பலகான் மூழ்கல் முதலாய நாலிரு வழக்கிற் றாபதப்பக்கம் (தொல் பொருள் - புறத் 20) என்பாருமுளர் எனப்பரிமேலழகர் தம் உரையிற் காட்டியுள்ளார்.

சாரங்கபாணி : தவத்திற்கு உருவான 'உற்றநோய் நோன்றல்' 'உயிர்க்கு உறுண செய்யாமை' ஆகியவற்றையும் நாலிருவழக்கின் தாபதப்பக்கத்தையும் செயற்கரிய செல்களாகக் கொள்வதினும், ஐம்பொறிகளை அடக்குதலைச் செயற்கரிய செயலாகக் கொண்டு திரு.விக.க உரை சிறப்பினது. பரிமேழகர் செயற்கரிய செயலாகக் கூறும் இயமம், நியமம் முதலான யோக உறுப்புகள் பொறி அடக்கமும் அதன் பயனாகிய மன ஒருமைப்பாடும் ஆதல் தெளியலாம். நீத்தாரை, 'உரன்' என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் (24) 'ஐந்தவித்தான்' (25) என்று குறிப்பிடுவதால் ஐம்பொறி அடக்கம் செயற்கரிய செசயலாதல் பெறப்படும். கி.ஆ.பெ. விசுவநாதம் சிறியர் செயற்குரிய செய்கலாதார் என்று கொண்ட பாட வேறுபாடே அவர்தம் உரை வேறு பாட்டிற்கு காரணமாகிறது. இப்பாட வேறுபாடு ஏடுகளில் காணப்பட்டிலது.

பி.எஸ். சுந்தரம் : செய்வதற்கு எளியவற் றைச் செய்து, எல்லோரையும் போல் இருந் தொழியாது, அரியவற்றைச் செய்பவரே பெரிய வராவார். செய்தற்கரியவற்றைச் செய்ய மாட்டாதவர் சிறியவராவார். வெறுமனே நீத்தா ரெல்லோரும் பெரியராகார் என்பதாம்.

எம் உரை :

செய்தற்குப் பிறரால் அரியவாம் செயல்களை, இயல்பாய் செய்பவர்கள் பெரியர் இவ்வாறு அரிய செயல்களைச் செய்யாதார் சிறியர் என்பது பொருந்தாது. செயற்கரிய செய்வார் ஒரு வள்ளுவர் போன்றோ, ஒரு காந்தி போன்றோ, நியூட்டன், ஐன்ஸ்டீன் போன்றோ, ஒரு சிலரே தோன்றுவர். மற்றோரெல்லாம் சிறியரா? தலை, இடை, கடை என்பதே வழக்கு.

செயல் கரிய செய்கலாதார் சிறியர் (கரி- சான்று எடுத்துக்காட்டு இந்திரனே சாலும் கரி) குறள் செயல் அல்லது செயல்கள் சான்றாக செய்து காட்டி விளக்கியும் செய்ய இயலாதவர் சிறியர் என்பதே சிறப்பு இவரையே வேறு ஒரு துறையில் அலகிட்டால் பெயராக இருக்கலாம். சிறுமை இச்செயல் திறமையின்மையின் மேற் பட்டது மற்ற எல்லோரும் இடைப்பட்டோரே பெரியரும் அல்லர் சிறியரும் அல்லர்.

விளக்கம் :

ஒரு குமுகம் பதினாயிரம் மக்களால் இயங்குவது என்று கொள்வோம். ஒரு துறையைத் தெரிந்தெடுத்து பெருமை சிறுமைக்கு அளவை வைத்து, அலகிட்டு அத்துறை வல்லமையை, பொலிவை மதிப்பீடு செய்யும்போது பெரும்பாலோர் இடைப்பட்டவராக இருப்பர்.

அன்றியும் சிறப்பும் பல் துறைகளை தெரிந்தெடுத்து அலகிட்டு இனம் பிரிக்கவும் செய்யலாம். பெரியர் மிகச் சிறுபான்மையானராகவும் சிறியரும் மிகச் சிறுபான்மையாளராகவும் இருப்பார் (Aistogram with normal distribution - statistical study) எனவே பெரியர், இடைப்பட்டோர், சிறியர்; தலை, இடை, கடை எனப் பகுப்பதே முறை, பெரியரின் ஏற்றம் பேசவந்த குறள் இது. மற்றெல்லோரையும் சிறியர் எனப் பொருள் கோடலே தகும்.

முத்துக் குறள் மூன்று :

வாழ்க்கைத் துணைநலம் :

அதிகார விளக்கமும் முறைவைப்பும் : அஃதாவது அவ்வில் வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை'' - பரிமேலழகர். வாழ்க்கைக்குத் துணையாகி பெண்மை இலக்கணம் கூறுதல் மணக்குடவர். இவ்வதிகாரத்து முதற்குறள் இறுதியில் ''கூளத்தக்காள் வாழ்க்கைத்துணை'' என முடிதலால், அதிகாரத் தலைப்பு வாழ்க்கைத் துணை என்று இருத்தலே சாலும் என உரைப்பர் - திரு.வி.க. வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்தை ஈண்டு கூறியது என்னை. மனையாள் இலக்கண மாயின் காமத்துப் பாலுட் கூற்றபாற்று, எனின், இது மனையாளாற் செய்யப்படும் தருமம் ஆதுலால் ஈண்டுக் கூறப்பட்டது என்க கூறற்பபாற்று, எனின், இது மனையாளாற் செய்யப்படும் தருமம் ஆதுலால் ஈண்டுக் கூறப்பட்டது என்க பரிப்பெருமாள். ஆகவே, இவ்வதிகாரம் மனைவியின் இலக்கணம், அவள் அற்ற வேண்டிய அறங்கள் பற்றிக் கூறுவது எனக் கொள்ளலாம் - சாரங்கபாணி.

உலகில் இல்வாழ்க்கைக்குத் தலைவியும், துணையும் மனைவியே வாழ்வின் அச்சாணியாய் இயங்கும் பெண்ணின் பெருமை - பி.எஸ். சுசுந்தரம்

தெய்வந் தொழ அள், கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

தெய்வம் தொழா அள் கொழுநன். தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை.

குறள் உரைகள் :

பரிமேலழகர் :

பிறதெய்வந் தொழாது தன்றெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும்.

கணவனைத் தானாக எண்ணுபவளே சிறந்த மனைவியாவாள், அத்தகைய மனைவி தன் கணவனுக்கு மக்கள் ''பெய் என்னும் பருவகாலத்தே பெய்யும் மழை போல்வாள் என்றுமாம். பாரதிதாசன் - இதே கருத்தைக் கூறியுள்ளார்.

கா. அப்பாத்துரை :

சமுதாயத் தெய்வங்களை அவ்வழியில் தான் வணங்காதவளாகி, தன் கணவனையே அத்தெய்வங்களின் திரண்ட ஒருமை வடிவாக மனத்துள் உருவகித்து வணங்கி, அவனை அத்தகைய தெய்வமாக்கும் முயற்சியில் முனைபவளாகிய கற்புடைய வாழ்க்கைத் துணைவியானவள் பெய்தால் நல்லது என்று மக்கள் விரும்பும் குறிப்புணர்ந்து காலமும் இடமும் அளவும் அறிந்து பெய்யும் மழை என்றுறு கூறத்தக்கவள் ஆவள்.

சாரங்கபாணி:

கணவனைத் தானாக எண்ணுபவளே சிறந்த மனைவியாவாள் என்னும் கருத்துக்கும் கணவனைத் தெய்வமாக்கும் முயற்சியில் முனைபவளே வாழ்க்கைத் துணைவி என்றும் கருத்துக்கும் மூலத்தில் நேரரடித் தொடர்பில்லை. 'அருமனை தரல் வேண்டின தருகிற்கும் பெருமையளே' (39:6) என்று கலித்தொகை

யும் ''வான் தரும் கற்பின் மனையுறை மகளிர்'' (15:77) என மணிமேகலையும் கூறும், ஆகவே, ஏறத்தாழத்திருக்குறள் அக்கால நூலாதலின் அக்கருத்தை ஒட்டி எழுதிய பரிமேலழகர் உரை சிறப்புடையது. நடப்பியலுக்கு ஒத்து வர வேண்டும் எனக்கருதிப் ''பெய்யெனபப் பெய்யும் மழை'' என்பதற்குச்சிலர் மழைபோல் வாள் என உரை கொண்டுள்ளனர். அங்ஙனம் கொள்ளினும், இக்குறளிற் கூறிய கொழுநனை நாளும் தொழுதெழலும் நடப்பியலுக்கு - பெண்ணுரிமைக்கு - ஒவ்வாமை காணலாம். ஆதலின், காலமரபறிந்து, குறளுக்கு உரைசெய் தால் வள்ளுவர் உள்ளம் அறியத் துணைபுரியும்.

பி.எஸ். சுந்தரம் :

முன்பு கன்னியர் நல்ல கணவன் வாய்க்க இரவில் பிறைதொழுவர். தெய்வம் தொழுவர். அங்ஙன் தொழுதலால் நல்ல கணவனைப் பெற்று, மேற்கொண்டு தொழ வேண்டாமல் கணவனைத் தொழுது எழும் இல்லற நெறியைப் பெற்றவள் திருமணமான கற்புடைப் பெண். அவள் பெய் என்று சொன்னால் மழை யும் பெய்யும். பெண்ணின் திருமண வாழ்வை வற்புறுத்துவது இது. (ஒள்ளிழை மகளிர் உயர் பினை தொழுஉம், பல்லெலன்மாலை 'அகம்' 239)

எம் உரை : இல்லறமாகிய வாழ்க்கை நடத்தும் களத்திற்கு இல், அகம் என்று பெயர் சூட்டி, அதில் பெண்ணை வாழ்க்கைத் துணை என்று முதல்முதலில் ஏற்றம் கூறியவர், வள்ளு வரே என்பது திண்ணம். அன்றியும் இல்லத்தை ஆள்பவள் இல்லாள் என்றும், கொழுநனை இல் வாழ்வான் என்றும் குறிப்பிட்ட பெருந்தகை வள்ளுவர். ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பெண்ணேற்றம் பேணிய பெருமான் வள்ளுவர். இதுவே தமிழ்ப் பண்பாடு. பொளத்த சைனத் துறவிகள் மலிந்திருந்து, ஆரியரும் துறவறமே சிறந்தென தமிழகத்தில் உலாவிவந்த நிலையில், இல்லறமே சிறந்ததென தமிழகத்தில் உலா விவந்த நிலையில், இல்லறமே சிறந்தது, அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என ஆணித்தர மாக நிறுவிய மாமலை வள்ளுவர். தமிழர் நான்மறை (வேதத்திற்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை) அறம்பொருள் இன்பம் (வீடு) இன்பம் பொருள் அறம் (வீடு) வாழ்வின் பயன் எல்லாக்கட்டுகளின்றும் விடுதலை பெறுவதே என்று நிலைநாட்ட பாயிரம் புகன்று, அதன் முடிவில் அறன்வலியுறுத்தி, அறம், பொருள், இன்பம் என்பதத்தி நிலை அறிவித்த அத்தன் அருளியது. திருக்குறள்.

இக்குறள் வாழ்க்கைத்துணை நலம் பற்றியது. இருபாலாரின். துய்ப்பு பற்றியது. மழை பெய்விக்கும் ஆற்றலைப் பற்றியன்று.

இக்குறளின் இதுகாறும் ஆகி வந்த உரையின்படி, எத்துணைபேரால் மழைபெய் விக்கச் சாலும்? இக்குறளின் உட்கிடை, உள்ளாழம் தான் என்ன

தெய்வம் தொழா அள் எனபதன் பொருள் : அளபெடை பெய்யும் போதெல்லலாம் நாம் சற்றே நின்று சிந்திக்க வேண்டும். ஓசைநயம் பற்றி மட்டும் அன்று. பொருள் நயமும் பொதிந்திருக்கக் காணலாம்.

தொழாள் அள் என்பதற்கு வணங்குதல், வழிபடுதல் இல்லை என்பது பொருள் : தொழுதல் என்பது, பொருந்துதல், புல்லுதல் என்றும் பொருள்படும் முதல் தாய்மொழி தமிழ் - பாவாணர்) கொழுநன்தொழுது என்பது கொழுநனைப்புல்லி எனவும், கொழுநன் துணையைப் புல்லி எனலுமாம் பால்பொது.

தெய்வம் / தேவர் : தொல்காப்பியர் அறுவகைப் பிறப்பையே, மரபியலில் எடுத்துக் கூறி, ஏழாம் பிறப்பாகிய தெய்வப் பிறப்பும் இதனுள் அடங்கும் என உரைப்பர். மக்கள் தாமே ஆரறிவுயிரே' என்று கூறியதோடு அமையாது 'பிறவும்' உளவே அக்கிளைப் பிறப்பே என்று பிறிதும் அசிரியர் இணைத்துப் பாலித்தினால், ஆறறிவுள்ள தெய்வப் பிறப்பும், மக்கள் பிறப்போடு சேர்த்துக் கூறப்பெற்ற தாகும். ஆறறிவுயிர் என்னும் பிறப்பளவில் மக்கட்கும் தேவர்க்கும் வேறுபாடின்மையை

தமிழ் நாட்டரசியவள்

புலவர் பொன். தெய்வநாயகி சோதி



கத்தும் திரைகடல் கரைதனிலே-நின்று
நித்தம் தவம்புரி தமிழன்னை
குமரி முதல் இமயம் வரை - நம்மை
குறையாது ஆட்சி செய் தமிழன்னை

கருணை பொழியும் தமிழன்னை
கலைபல நிறைந்த தமிழன்னை
குலநலம் காப்பவள் தமிழன்னை
நலம்பல தருபவள் தமிழன்னை

கற்றவர் ஏத்தும் தமிழன்னை
கவிஞர் பாடும் தமிழன்னை
குறைகளை நீக்கும் தமிழன்னை
குவலயம் போற்றும் தமிழன்னை

வளம் பல நிறைந்த தமிழ்நாட்டில்
வற்றாத பொருள்தரும் தமிழன்னை
சங்கம் வளர்த்த தமிழன்னை
சாதனை புரிபவள் தமிழன்னை

பொன் பொருள் புகழ்தரும் தமிழன்னை
பெருவாழ்வளிப்பவள் தமிழன்னை
வள வினை தீர்ப்பவள் தமிழன்னை
பார் புகழ் தமிழ் நாட்டரசியவள்

உணர்க (நோக்குக பாவாணர் - மெய்ப்பொருள் சொற்கள்)

இல்லறம் துறவறம் ஆகிய இருவகை யத்திலும் சிறந்தோரை தெய்வத்தோடு ஒப்பக் கூறுதல் இருவகை வழக்கிலும் காண்பபட்ட தாகும். துறவிகளை, தேவர், அடிகள் பகவர் என்று அழைப்பதையும், 'வையத்து வாழ் வாங்கு வவாழ்பவன் வானுறையும் தெய்வத் துள் வைக்கப்படும்' என்று வள்ளுவம் பேசுவதையும் ஒப்பு நோக்குக.

கொழுநன் தொழுது எழுவாள் : கொழுனன் புல்லி, அன்றிக் கொழுநனைப் புல்லி கூடிக் கலந்து கிளர்ந்து எழுவாள். நெஞ்சவிழ்ந்து புணர்ச்சியில், குன்றேறிக் கள்ள விழ்க்கும் பாங்கினார், தெய்வம் என்றும் தேவர் என்றும் ஏந்தலாகப் பேசப்பட்டோரை, தானும் மதித்தாலும், வணங்காதவர். 'பெரியாரை வியத்ததலும்' இலமே, என்ற புறநானூற்றுறுப் பாங்கும்,, ''பீடன்று'' என்று பிலிற்றிய சிலம்புச் செல்வி கணணகியின் மாண்பும் இத்திறத்தன. இன்று திரைப்பட நடிக நடிகரையும், விளையாட்டு வீரரையும், அரசியல், துறவியல், மற்றும் பல்சான்றோரையும் மனத்தில் பொருத்தி, துணையைப்புணரும் மக்கள் பலர் இதுபால்பொது மன்றம் அமைத்தும், தீக்குளித் தும் தன் நம்பிக்கையும், தன்மானத்தையம், இழந்து நிற்கும் அபலைகள் பலர். தமிழ்ப் பண்பாட்டை இழந்து நிலைதவறி வாழ்கின்ற வர் பலர். தமிழ்ப் பண்பாட்டின் வழி ஒழுழுகுவராம். கொழுநனை, அழங்காற்படும் பொழுதில் காமநீர் சுரந்துப் பெருகுதலும் உண்டு இன்பத்திலாழ்த்திக் தானும் இன்புறுவள் என்பது பொருள். இது நுண்மையின்பப் பேரின்ப வாயில் எனினும் தகும் இருபாலாறும் களிக்குன்றேறி வளம் சுவைத்தலைப் பற்றியது. சிற்றின்பமே பேரின்பமாக அருள் ஆற்றுப் படுத்துவது எனினுமாம்.

இக்காம நீரை மாந்துவதும் உண்டென் பது, கிராமப்புற வழக்கினால் தெரியவரும் விரிவைக் காமநூல் வல்லார்வாய் கேட்டுணர்க.

பெய்யெனப் பெய்யும் மழை : சேய் அழுகுரல் எழுழுப்பி, அமுதுபெய் எனக்கேட் கும் முன், பால் நினைந்து, சுரந்து அமுது (மழை) பெருக்கி பசியாற்றும் தாய் - இங்கே ஒப்புமை. மழை, துப்பு, அமுது என்று பொருள்படும்.

இது மழை பெய்விக்கும் பெருமை பேசும் குறள் அல்ல பெண் துணைய்யாக நின்று கொழு துப்பாயவதூவம் மழை' குறள் தாயாக நின்று சேசயையும் இன்பத்திற்கு ஆற்றுப்படுத்தும் பெருமைபேசும் குறள் இது. கொழுநன் துணைவியர் கலப்பினால் எழும் இன்பம் தாய் துய்க்கும் இன்பத்திற்கு ஒப்புமையாகும். ★

திருமூலரும் திருவள்ளுவரும்

புலவர் மகாலிங்கம்

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு ஏற்ப, மனிதப் பிறவிதான் அனைத்துப் பிறவிகளுள் உயர்ந்தது ஆகும். இம்மனிதப் பிறவியை பயனுடையதாக புகழுடையதாக ஆக்கிக் கொள்ள முயல வேண்டும். அதற்கு திருமூலரும் திருவள்ளுவரும் வழிகாட்டுகிறார்கள்.

திருமூலர்

நந்தியெம் பெருமான் அருள்பெற்ற நான்மறையோகி. அணிமாதிசித்தி பெற்ற தவமுனிவர். சாத்தனூர் என்னும் ஊரில் மாடுமேய்ப்பார் குடியில் தோன்றிய மூலன் என்பானின் வினைமாள வீழ, பசுக்களின் துயரைநீக்கக் கருதி மூலனுடைய உடலில் தவமுனிவர் தம் உயிரைச் செலுத்தி திருமூலராய்த் திகழ்ந்தார். இவருடைய வரலாறு சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் என்னும் நூலில் விரிவாகக் காணலாம். இவர் இயற்றிய தமிழ் மூவாயிரம் என்ற திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்குகிறது.

திருவள்ளுவர்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் அவதரித்த புலவர் பெருமகனார் திருவள்ளுவர் ஆவார். இவருடைய வரலாறு தக்க சான்றுகளுடன் கிடைத்திலது. எனினும் இவர் இயற்றிய திருக்குறள் "உலகப் பொது மறை எனப் போற்றப்படுகிறது. அறத்துப்பால் பொருட்பால், காமத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளையும் 1330 குறட்பாக்களையும் 133 அதிகரங்களை உடையது.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று பாரதியால் போற்றப்பட்டவர் வள்ளுவர்.

"தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண் குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும் - ஏனோருக்கு
ஊழி னுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று"

என்று நக்கீரனார் அறம், பொருள், இன்பம் வீடு என்ற நான்கையும் உணர்த்துவது திருக்குறள் என்கிறார்.

"தம்முடைய கவிதைகளைக் கற்றவர் பால் தத்துவ மனப்பான்மையைத் தூண்டித் தோற்றுவிக்கும் அளவைப் பொறுத்தே கவிஞர்களின் சிறப்பும் பெருமையும் அமைகின்றன" (The great poets are judged by the frame of mind they Induce) என்கிறார் எமர்சன் என்னும் பேரறிஞர். "தத்துவத்திற்கே முதல் இடம் அதனை அடுத்தே அதன் உயர்ந்த விளைவாகிய கவிதைக்கு இடம்" (Philosophy first, and poetry whhich is its highest out come afterwards) என்பது இராபர்ட் ப்ரவுனிங் கூற்றாகும். மேலும் "சிறந்த தத்துவ ஞானியல்லாத எவரும் ஒரு பெருஞ் சீர்த்திமிக்க கவிஞராக விளங்கியதில்லை" (No man was ever get a great poet without being at the same time a profound philosophere) என்று கோல்ரிட்ஜ் என்னும் அறிஞரின் கருத்துப்படி திருமூலரும் திருவள்ளுவரும் சிறந்த தத்துவ ஞானியாக, சீர்த்தி மிக்க கவிஞராகத் திகழ்ந்தனர்.

கடவுட் கொள்கை

உலகம் ஒரு தொழிற் கூடம். ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரை இதில் பணியாற்றும் தொழிலாளர்கள். இத்தொழிலாளர்களுக்கு ஒரு முதலாளி இருத்தல் வேண்டுமன்றோ! அவன் தான் இறைவன். இதனை திருமூலர் "ஒருவனே தேவன்" என்கிறார். வள்ளுவரும் கடவுள் வாழ்த்தில் முதல் குறளில்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்கிறார். இவ்விரைவன் எண் குணங்களைக் கொண்டவன். தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பபாகவே பாசங்களில் இருந்து நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என்னும் எண் குணத்தானாக இறைவன் உள்ளான். வள்ளுவர்

''கோளில் பொறியல் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

என்கிறார். திருமூலரும்

''ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள் நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து வென்றனன் ஆறு விரிந்தனன் எழும்பர்ச் சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே'' என்று இறைவனின் எண் குணச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார். திருமூலரும் திருவள்ளுவரும் கடவுட் கொள்கையில் இறைவன் ஒருவனே என்றும் அவன் எண் குணத்தானாய் விளங்குகின்றான் என்றும் கூறுகின்றனர்.

யாக்கை நிலையாமை

இவ்வுலகில் தோன்றிய உயிர்கள் யாவும் இறக்கும் தன்மை உடையன. இவ்வுயிரைத் தாங்கிய உடல் அழியும். ஆனால் உயிர் அழிவதில்லை என்பது சாத்திரம். உடம்போடு உயிருக்கு உள்ள உறவு, தான் இருந்த கூடுதனியே இருக்க அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

''குடம்பை தனித்து ஒழியப் புட்பறஞ் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு''

என்கிறார் வள்ளுவர்.

இவ்வுடலை ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி, ஐந்தும் உடம்பு என்னும் வயலில் உயிரெனும் பயிர் விளைந்து கிடந்தது. அதை ஐம்பொறிகளான ஐவரும் காத்து நின்றனர். ஐவருக்கும் தலைவனான இறைவனிடமிருந்து ஓலைவந்தது. ஐவரும் தாங்கள் காத்த காவலை விட்டனர்.

''ஐவருக்கும் ஒருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செசய்யைக் காவல் விட்டாரே''

என்கிறது திருமந்திரம். எனவே நிலையற்ற உடலைக் கொண்ட மக்கள் நிலையான புகழைப் பெற வழிகாண வேண்டுமல்லவா?

அன்பும் அறனும்

அன்பு தான் எதனையும் வெல்லும் சாதனமாகும். அன்புள்ளவரே உயிருடன் கூடிய உடலைப் பெற்றவர் ஆவார். வள்ளுவர் ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்பார். கிருத்துவசமயமும்'' Love is God; God is Love" என்கிறது. எனவே ''அன்பு தான் கடவுள்; அன்புதான் கடவுள்'' என்ற கருத்தை திருமூலர்.

''அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சசிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''

என்கிறார். இந்த அன்பு நாம் செய்யும் செயலின் மூலம் வெளிப்படும். முகத்தால் சொல்லால், செயலால், அன்பை பிறரிடம் காட்ட அவ்வன்பு நட்பாய் உறவாய் மலரும். அதுவே அறமும் ஆகும்.

''முகத்தான் அமர்ந்தினிது நோக்கிஅகத்தானாம்
இன்சொ லினதே அறம்''

என்கிறார் வள்ளுவர். மேலும் மனத்தின் கண் குற்றமில்லாது இருத்தலே அறங்களுள் தலையாய அறமாகும்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற''

எனவே மனத்தில் தீய குணம் கொண்டு செய்யப்படும் அறச் செயல்கள் யாவும் வெறும் ஆரவாரத் தன்மை உடையவையாகும். அடுத்த நிலையாக ஏழைகளுக்கு உதவுதல் சிறந்த அறமாகக் கருதப்படுகிறது. ''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'' என்றும் வறியவரின் கடும் பசியைத் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்துவைக்கும் இடமாகும். இதனை

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என்கிறது வள்ளுவம். திருமூலரும்

''படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே''

என்று இறைவனுக்காகச் செய்யப்படுகின்ற செலவை விட இறைவனால் படைக்கப் பட்ட மக்களுக்குச் செய்வது இறைவனுக்குச் செய்யப்பட்டதற்கு ஒக்கும் என்கிறார். மேலும் பிறர்க்கு துன்பம் விளைக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழங்குவோருக்கும் இன்பம் தரும்.

''சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந்தரும்''

என்கிறது திருக்குறள். திருமந்திரமும்

யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே

என்கிறது.

உவமைத்திறம்

திருமூலரும் திருவள்ளுவரும் உவமையைத் தக்க இடத்தில் அமைத்துப் போற்றுவர். அருளாளர்களின் கருத்து அடிப்படையில் ஒன்றாய் இருத்தல் போல உவமையும் ஒன்றாய் அமைவது இயல்பு.

மனிதன் தனக்குக் கிடைத்த பொருளைத் தானே அனுபவிக்காமல் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பை பெற்றிருத்தல் வேண்டும். இதனை வலியுறுத்த காக்கையின் செயலை உவமையாக்கித் திருவள்ளுவரும், திருமூலரும் காட்டுகின்றனர்.

''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீ ரார்க்கே உள''

என்பது வள்ளுவர் வாக்கு. காக்கை தனக்குக் கிடைத்த உணவை தான் மட்டும் உண்ணாது பிற காக்கைகளையும் அழைத்து உண்ணும் அதுபோன்ற பண்பு சான்றோர்களுக்கே உண்டு, திருமூலர் ''எல்லோருக்கும் கொடுங்கள். அவர் இவர் என்று வேற்றுமை பாராட்டாதீர்கள் இன்னும் விருந்தினர்கள் வருவாரோ என்று பார்த்திருந்து உண்ணுங்கள். பழம் பொருளைப் பாதுகாத்து வைக்காதீர்கள். பசி உடையவர்களாக மிக விரைந்து உண்ணாதீர்கள். காக்கை கூடத் தம் இனத்தைக் கரைந்து உண்ணுகின்ற காலத்தை அறியுங்கள் என்கிறார்.

''ஆர்க்கு இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந்துண்மின் பழம்பொருள் பேபாற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே''

என்பது திருமூலர் வாக்கு.

மறுபிறப்பு

உயிர்கள் தங்கள் தங்கள் வினைக்கு ஏற்ப மறுபிறப்பு கொள்ளும் என்பது சித்தாந்தம். இம்மறுபிறப்பு ஏற்படாமல் இருக்க, பிறவிப் பெருங்கடல் நீந்த, இறையருளைப் பெற வேண்டும். காரைக்கால் அம்மையார் ''பிறவாமை வேண்டும்'' என்று வேண்டுவதாக பெரிய புராணம் கூறுகிறது. இம்மறு பிறப்புக் கொள்கையை திருமூலரும் திருவள்ளுவரும் ஏற்றுக் கொள்கின்றனர். சாத்திரங்களும் பழவினை, செய்வினை நுகர்வினை என்ற மூவினையிலிருந்து விடுபட பிறவி நீங்கும் என்கிறது. வள்ளுவர்

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்''

என்கிறார். மேலும் ஏழுவகையான பிறவிகளையும் குறித்துக் காட்டுகிறார்.

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப் புடைத்துது''

என்பது வள்ளுவர் வாக்காகும். திருமூலரும் மறுபிறப்பிலிருந்து விடுபட இறைவனை வணங்க வேண்டும் என்பார்.

கல்வியும் கல்லாமையும்

''கேடில் விழுச் செல்வம் கல்வி''. இக்கல்வியைக் கற்றவர்க்குத் துன்பம் வந்துற்றக் காலத்து கல்வி துணையாய் நிற்கும். இக்கல்வியைக் கற்றவனுக்குத் தன்நாடும் வளரும்

போலவே வேறு எதுவாயினும் நாடாகும் ஊராகும். ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலம் கழிப்பது ஏன்? என்கிறார் வள்ளுவர்.

''யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு''

என்கிறது திருக்குறள்.

இக்கல்வியைக் கற்காது இருப்பவன் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்வி கற்ற வரைப் போன்ற பெருமை இல்லாதவரேயா வார்.

''மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு''

என்கிறார் வள்ளுவர். திருஞான சம்பந்தர் ''கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்'' என்பார். திருமூலர்

''துணையது வாய் வருந்துாய நற் கல்வியே'' என்று கல்வியின் சிறப்பும் ''கல்லா தார் இன்பம் காணுகிலாரே'' என்றும் ''எல்லா இடத்தும் உளன் எங்கள் தம் இறை; கல்லா தவர்கள் கலப்பறியாரே'' என்றும் கல்லாமை யின் இழிவைக் கூறுகின்றார்.

உடலைப் பேணுக!

நல்லுடலே நல்லறிவை உண்டாக்கும். ஆதலால் உடலை நன்கு பேண வேண்டும், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது பழமொழி. உடலைப் பேணுவதற்கான வழி முறைகளை 'மருந்து' என்ற அதிகாரம் மூலம் ''உணவே மருந்து'' என்ற கொள்கையை வள்ளுவர் வலியுறுத்துகிறார். திருமூலர்

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர் தேனே''

என்றும்.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளும் புறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''

என்றும் உடலோம்பல் அவசியத்தை விளக்கியிருளுகின்றார்.

சமத்துவக் கோட்பாடு

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று வள்ளுவர் பிறப்பால்யா வரும் ஒன்றாவர் என்கிறார். மக்கள் சமுதாயம் பிறப்பினால், ஓடும் குருதியால் ஒன்று பட்டிருந்தாலும் தொழிலால் ஏற்பட்ட பிரிவு சாதியாக உருவெடுத்து சாதி வெறியாகத் தலைவிரித்து ஆடுகிறது. அன்பையே அடிப்படையாகக் கொண்டு விளங்கும் சமயங்களெல்லாம் இன்று அன்பை மறந்து, சமயக் கொள்கைகளை மறந்து சமயவாதிகள் சமயவெறியர்களாய்த் திரிவதைக் காணும் போது நாட்டிற்கும் மக்களுக்கும் துன்பமே மிஞ்சும் என்று எண்ணத்தோன்று கிறது. திருமூலரும் திருவள்ளுவரும் சாதி சமய வேறுபாட்டால் தோன்றும் வேறுபாட்டை நீக்க வேண்டும் என்றனனர். திருமூலர் யாவர்க்கும் பொதுவாய்

''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்''

என்றார் இறைவன் ஒன்றே; மனித குலமும் ஒன்றே என்ற தத்துவம் உலகிற்கே வாகாட்டும் மாண்புறு தத்துவமாகும்.

மெய்ப் பொருள் காண்க!

ஆன்மாக்களின் நிலைக்கு ஏற்ப இறை வனே குருவாக வந்தும் ஞானம் வழங்குகின் றான் என்கிறது சைவ சித்தாந்தம். பூதக் கண்ணாடி வழியாக வருகின்ற சூரிய ஒளி பஞ்சை எரிக்கும் அது போல இறைவனாகிய குருவின் முன் ஆன்மாதன்னை நிறுத்திக் கொண்டால் அந்த ஞானக் கதிரொளியின் வேகத்தால் குற்றங்கள் எரிந்து போய்விடும்.

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே''

என்கிறது திருமந்திரம். வேடன் காட்டில் மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல மனிதச் சட்டைத் தாங்கிய குருவின் மூலமே இறைவன் உயிர்களை உணரச் செய்து உய்விக்கின்றான். அக் குருவின் வாக்குகளே மந்திரம் என்பதாகும்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்து
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியர் கருத்தாகும். வள்ளுவரும்

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்கிறார். திருமூலர் நிறைமொழி மாந்த ராய் விளங்கியவர். அதனால்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே"

என்று தன்னைப்பற்றி மக்கள் உணரும் வகையில் எடுத்துரைத்தார்.

அனுபவித்துது உணர்க!

இறைவனை வழிபடும் இன்பத்தை அனுபவித்துதான் உணர முடியும். பிறரால் உணர்த்தவது என்பது எளிதன்று. அதாவது ஒருதாய் தன் கணவனோடு அனுபவித்த இன் பத்தை பருவம் எய்தி நிற்கும் பெண்ணிற் குச் சொல்வது இயலாது. அதுபோல கடவுள் இன்பத்தையும் அந்தந்த பக்குவ நிலையில், ஞானமுதிர்வில் அனுபவித்து உணர வேண்டும்.

"முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறு எங்ஙனே"

என்கிறது திருமூலர் வாக்கு. இறைவன் அருளை அனுபவித்துத் தெளிந்தார்க்கு வையக மும் வானகமும் நனித்தாம் தன்மை உடையது. இதனை வள்ளுவர்

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"

என்கிறார்.

நாட்டின் ஆட்சி

ஒரு நாட்டில் நாட்டை ஆளுகின்றவர்கள் நேர்மையாளராக, ஒழுக்கமுள்ளவராக நீதியாள ராக இருந்தால் அந்நாட்டில் வாழும் மக்கள் இன்பமாக வாழ்வார்கள். நேர்மையான ஆட்சி நடத்துவோர் இறைவனுக்குச் சமமாகக் கருதப் படுவர்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்பது வள்ளுவர் வாய்மொழி முறை செய்து மக்களைக் காப்பாற்றாமல் கொடுங் கோலனாக இருப்பனோயானால் நாட்டில் தவநெறி குன்றும். நாடே, கெட்டொழியும்.

"நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடுகெடும்"

என்ற வள்ளுவரின் வாக்கிற் கேற்ப திருமூலரும்

"நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அவன் நெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாடோறும் செல்வம் நரபதி குன்றுமே"

என்கிறார்.

செம்பொருள் காண்க!

பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு, முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு ஆகும்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு"

மேலும் எல்லாப் பொருளுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து பற்றுக் கெடுமாறு ஒழுகினால் சார்வதற்கு உரிய துன்பங்கள் வந்தடையாது.

"சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்பது வள்ளுவர் வாக்கு. திருமூலரும்.

"இருள் நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள் நீங்கா வண்ணமே யாதி யாருளும்
மருள் நீங்கா வானவர் கோனொடுங் கூட்டிப்
பொருள் நீங்கா இன்பம் புலம்பயில் தானே"

என்கிறார், எனவே செம்பொருளாய் விளங்கும் பரம்பொருளைப் போற்றி வையத் துள் வாழ்வாங்கு வாழ முயலுவோமாக.

★

தற்கால தமிழ் நாட்டின் நிலை!

- நடிகர் கடவுள் கண்ணன்

'கல்தோன்றி மன்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியில் பிறந்த தமிழ் என்பது முதுமொழி. ஆனால் இன்றே இந்த தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்த தமிழர்களே கல்லாய், மண்ணாய், மான மிழந்து வாழும் அவநிலை. என்னடா இப்படி சொல்கிறானே என படிக்கும் உங்களுக்கு கோபம் வரலாம் உண்மை கசக்கத்தானே செய்யும். இன்று தமிழ்நாட்டிலேயே தமிழன் தலை நிமிர்ந்து வாழ முடியாது. காரணம் தமிழன் மெல்ல செத்துக் கொண்டு வருகிறான். அண்டை மாநிலம், அகில உலகமும் என்ப ஆட்சி செய்தான் நம் முன்னோன். ஆனால் இன்று அண்டை மாநிலத்திலும் அகிலத்திலும் விரட்டி அடிக்கப்படுகிறான் நம் தமிழன். காரணம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றதல் கண்டு!

என்றான் பாரதிதாசன். ஆனால் அவல நிலை மெல்ல தமிழ் இனிச் சாகும் என்றான் பாரதி? தமிழ் செத்துவிடும் என்பது தமிழன் சாவான் என்று தானே அர்த்தம். ஆம் இன்று தமிழனிடம் ஒற்றுமை இன்மை, கண்ணிருந்தும் குருடனாய், காதிருந்தும் செவிடனாய், வாயிருந் தும் ஊமையாய் தன்மான மிழந்து வாழ்கிறான் தமிழ் நாட்டிலேயே தமிழன் விலை போவதில்லை, அவன் விலை போகாது இருக்க குழத்தை கொடுக்க வதை கோடறி காம்பாய் தமிழனே! உணர்வின்றி வாழும் அவல நிலை எத்துறையை எடுத்துக் கொண்டாலும், தமிழன் அல்லாதவர்களே முன்னிலை இதில் மற்றோரை குறை சொல்ல நமக்குத் தகுதியில்லை காரணம், நம்மை முதலில் நாம் சரிசெய்து கொள்ள வேண்டும். ''பராசக்தியில் பெருந்தகை கலைஞர் அவர்களின் ஒருவரி என்னை இன்றும் கவரும்'' ''வந்தாரை வாழவைக்கும் தமிழகம்'' என்னே இந்த பொன்மொழி! தமிழன் பண் பட்டவிதை இவன் திராவிடர்களின் முன் னோடி, பரந்த நோக்குடையாவன், தமிழி லிருந்து, கன்னடம், களித் தெலுங்கு, கவின் மலையாளம், எல்லாம் பிறந்தாலும் அரியம் போல் உலக வழக்கழிந்து ஒழியாமல் சீரிளமை சிதையாமல் என்றும் கன்னி தமிழாய் விளங்கு கிறது இதன் பெருமை. மறைவாக பழங்கதை கள் நமக்குள்ளே பேசி, தமிழ் மண்ணில் பிறந்த நமது சந்ததியினர் பிறருக்காகவே வாழ பிறந்தவர்கள் என நினைத்து விட்டு நமது மூதாதையரின் வீரத்தையும், விவேகத்தை யும், மறந்து விட்டனர். இவை நான் உங்களுக்குச் சொல்லப் போகும் கதையின் தோற்றுவாய் தான்.

இன்று உலக முழுதும் பத்து கோடி மக்களுக்கு மேலாக தமிழர்கள் வாழ்கின்றனர் குறிப்பாக தமிழ் நாட்டில் எட்டுக்கோடி மக்கள் தமிழர்கள் அவற்றில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே, தமிழுக்காக தமிழன் வாழ்வு மலர்ச்சியுற தன்னை அற்பணித்துக் கொண்டவர்கள். ஐயா பெருங் கவிக்கோ வா.மு.சே. போன்ற பெரியார்களின் மூலம் தான் தமிழ் ஒரளவேனும் இங்கு உயிர் காற்றை சுவாசிக்கிறது. உதாரண மாக அவர் தன் வாழ்நாளை தமிழுக்காக, தமிழனுக்காக பணித்துவிட்டார் எனில் அவை மிகையாகாது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது முதுமொழி ஆனால் திரைகடல் ஓடி தமிழனைத் தேடி, அவன் தன் மான உணர்வை தட்டி எழுப்பும் புதுமொழி படைத்து வருகிறார். பெருங்கவிக்கோ அவர்கள் தனது அருமை புதல்வர்களையும் தமிழ் தமிழனின்

வாழ்விற்காக அற்பணித்து விட்டார்

தமிழ் நாட்டில் தமிழைப் பற்றியும், தமிழனைப் பற்றியும் பேசினால் அவர்கள் தமிழினடமிருந்து புறக்கணிக்கப்படுவதோடு, தீவிர வாதிகள் என்கின்ற முத்திரை கூட குத்தப்படலாம் என்ற அவலநிலை இப்படி இருக்கும் போது! புறநானூற்று தமிழனாக வலம் வரும் வா.மு.சே ஐயா அவர்களின் குடும்பத்தினரையும் அவரது தொண்டினையும் தமிழர்களும் தமிழ் கூறும் தொல்லுலகமும் போற்றி, புகழ்ந்து தலைவணங்க வேண்டும். எம்பெருமானும், முருகப் பெருமானும், நக்கீரனும், அகத்தியரும், தொல்காப்பியரும், வள்ளுவரும், கம்பரும் கட்டிக் காத்த நம் தாய் மொழியான கன்னித் தமிழுக்காக தங்களை அர்ப்பணித்து பெருந்தகையாளரான பெருங் கவிக்கோ என்பது உள்ளங்கை நெல்லிக்கனி யாய் வெள்ளிடையாய் விளங்கும். அவர்தம் தமிழக்கு ஆற்றிய பணியை கூற வேண்டுமாயின் ஆயிரம் நாவுடைய ஆதி சேசனாலும் இயலாது அவர்தம் தொண்டு வாழ்க! வளர்க.

தமிழ் என்பது அமிழ்து என்னும் சொல்லின் திரிவு இது என்று கற்பனை அன்று அமிழ்து அமிழ்து என்று வேகமாக சொல்லின் அவை தமிழாக மாறும் இது உண்மை இஃது நிற்க மேலும் தமிழ் முத்தமிழ் என்பது எல்லோருக்கும் தெரியும் அது என்ன முத்தமிழ்! என்றால் இயல், இசை, நாடகம் என்பர் அறிவிலார், தமிழ் தெய்வத்தால் தோற்றுவிக்கப் பட்ட மொழி தெய்வம் என் 'திவ்' என்றும் தேயு என்ற சொல்லின் திரிப்பு 'தெய்வம் என்பது அண்ட பகிரண்ட முழுதும் வியப்பிக்கும் அருட்பெரும் சோதியான், நெருப்பையும் வெப்பத்தையும் குறிக்கும். அப்படியாயின் முத்தமிழ் என்பது மூன்று + அமிழ்து என்பதே அதன் உண்மைப் பொருள் இந்த அமிழ்தமானது நம் உடலில் சூரிய, சந்திர, சுக்கிரன் நாடிகளின் சங்கமத்தால், மீன்று தீ, முகத்தி பெரும் பொருட்டு படைக்கப்பட்டது. இந்த மூன்று தீயில் உள்ள அமிழ்தத்தைப் பருகுவதே முத்தமிழ் என்பது இதைப் பருகியவனே நமது மூதாதையர் எனவே தான் தமிழனுக்கு மரணமே இல்லை எனலாம் வள்ளுவரின் முதல் குறளே கூட

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்பதுதான் பின்னால் இவை பகவன் ஆயிற்று.

மேலும் கன்னித் தமிழ் என் தமிழ் என்று கன்னியாக இருக்கிறான் என்று நம்மை இயக்கும் அந்த வாலையான கன்னி அணுவிலும் கோடி மடங்கு சிறியவையாக உள்ளது. அவை கோடி சூரியப்பிரகாசம் உடையது. இதை அறிந்த நமது, தென்னாட்டுச் சித்தர்கள் தான் உயிர் எழுத்து பன்னிரெண்டு என்பது ஒன்று(1) இரண்டாக (2) உள்ளது அது நம்மை பண்படுத் தும் என்றும், மெய் எழுத்து பதினெட்டு என்பது, மெய்யில் இருக்கும் இறைவன் எட்டாக இருக்கிறான் அதாவது 'அ' அகரமாக இருக்கிறான் என்பதை குழுவுக்குறியாக விளக்க பதி எட்டாக இருக்கிறான் என்பதையும் இந்த உயிரையும் - மெய்யையும் (உடலையும்) இணைந்த ஆய்தமாக ஃ என்ற ஆய்த எழுத்தை பயன் படுத்தினார் இந்த ஆய்த எழுத்து தான் முக்கண் என்று சொல்ல சூடிய முத்தமிழ்து - தமிழை அறிந்தவர்கள் சாகவே கூடாது இது தான் உண்மை இவை தான் எது உங்களை குழப்புவதற்காக சொல்லும் வார்த்தைகள் அல்ல இது தான் உண்மை.

பின்னே நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல் தம் செய்தலீர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு

திருமூலரின் திருமந்திரம் திருவருட் பிரகாச வள்ளலாரின் திருவருட்பா, வள்ளுவர் குறள், இவைகள் தமிழன், இருக்கலாம் இக் காலத்தே என்னலில் கோடி, ஆண்டுகள் என்ற உண்மையை எடுத்துரைக்கும் இவை தமிழர் களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டிய

மெய்ப் பொருள்.

ஏனெனில் தமிழன் தன் மூதாதையராரின் உண்மைநிலையினை மறந்து விட்டான். ஏட்டுக் கல்வியிலேயே வாழ்வை ஓட்டுகிறான்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோட ஏனை யவர்

எனவே கல்வி எனில் அது சாகா கல்வியே என்பதை அறிய முற்பட வேண்டும்.

மேலும் இன்று தமிழர்கள் உலகளாவிய ஒற்றுமையை வளர்க்க உறுதி கொள்ள வேண்டும்.

தமிழனும் அவனது தாய் மொழியும் வாழ தனது வாழ்வை அற்பணிக்க வேண்டும். தமிழர்கள் இம் மண்ணுலகில் வாழும் பொருட்டு வந்தவர்கள் அல்லர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட வேண்டியவர்கள். ஆகையால் எல்லோரையும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் நம் தாயையும், நமது சகோதரனையும் காக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய தல்லவா, இன்று தமிழ் நாட்டில் தமிழனின் நிலை மிகவும் தாழ்ந் துள்ளது எனவே உலகள்ாவிய தமிழர்கள் உலகில் எந்த மூலை முடுக்குகளிலெல்லாம் தமிழன் இருக்கிறானோ அவனை பன்னாட்டு தமிழுறவு மன்றம் அணைக்கும் இணைப்புப் பாலமாக அமைந்துள்ளது.

தமிழர்கள் இறைவனுடன் நேரடி தொடர்புடையவர்கள். 'அ' கரமாக இறைவன் இருக்கிறான் எட்டு இரண்டு தெரிந்தால் இறைவனே வசப்படுத்தலாம். எட்டு அகரம் இரண்டு உகரம் இவை இரண்டும் சேர்ந்ததே பத்தான மகாரம் அ+உ+ம இவையே (ஆஊம்) ஓம் என்ற ஓங்காரம் எனவே தமிழை பேசு வதாலும் தமிழைப் போற்றி வளர்ப்பதாலும் நீங்கள் இறைவனுக்கே நேரடியாக தொண் டாற்றி வருவது உண்மை.

எனவேதான் தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!

இங்கே சக்தி என்பது ஆங்கிலத்தில் (Energy) தீயாக இருப்பதை அதன் மூலம் சிவன் சிவமாக இருப்பதையும் குறிக்கும் அதனை விளக்குவதே:

உள்ளப் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சிவன் சிவ லிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே'

தமிழை இறைவனோடு சேர்ந்தே கண்டனர் நம் முன்னோர். எனவே ஆன்மீகம் தழைத்தது. ஆன்மீகம் என்பதே ஆன் என்றாலே உயிர்கள் என்றும் மீகம் என்பது அதன் மேலான உணர்வு என்பது பொருள் எனவே தமிழனின் மேலான உணர்வு போற்றுதலுக்குரியதே ஸ்பானிய தீவிற்குள் ஆங்கிலம் நுழையும் போது ஆயிரத்து எழுநூறு வார்த்தைகளுடன் நுழைந் தது இன்று ஐந்து இலட்சம் வார்த்தைகளுடன் விளங்குகிறது. தினமும் பலமொழிகளிலிருந்து புதுச் சொற்கள் சேர்ந்த வண்ணம் உள்ளது. ஆனால் தமிழ் தோன்றிய நாளிலிருந்தே எவ்வித மாற்றமும் இல்லை. வரவேற்கப்பட வேண்டிய விசயம் தான் ஆனால் தமிழனும் அவ்வாறு இருப்பது முறையன்று. தமிழை நன்கு பயில வேண்டும், தமிழின் உண்மை பொருளை தக்க ஆசான்களை கொண்டு அறிய வேண்டும் தமிழ் பண்பாட்டையும் அதன் சிறப்பையும் போற்றி பாதுகாக்கப் பட வேண்டும்.

உலகளாவிய தமிழர்கள் தாங்கள் வாழும் பகுதிகளில், மாவட்ட, மாநிலம், உலகளாவிய பகுதிகளில் எங்கிருப்பினும் எல்லோரும் அவ்வப்போது ஒன்று கூடி, அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், என்ன எல்லோரும் ஒன்று கூட பன்னாட்டுத் தமிழுறவு மையம் பெரும் துணையாக இருக்கும். வாழ்க தமிழன்! வளர்க அவன் இனம் வழிகாட்டட்டும் அவன் வையத்து மனிதர்களுக்கெல்லாம் .

★

தமிழனுக்குத் தலைகுனிவு

ழகரக் கவிஞர் கடலூரார் அ.தேவநாதன்



தமிழ் என்பதற்குப் பலவாறு பொருள் கூறியுள்ளனர் தமிழ் அறிஞர்கள். எழுதுவது எழுத்து. சொல்லுவது சொல். பேசுவது பேச்சு. தம் என்றால் மூச்சு என்ற பொருளும் உண்டு. தம் கட்டி தண்ணீரில் மூழ்கு என்பார்கள், மூச்சை அடக்கி மூழ்கு என்ற பொருளில். தம்+இழி = தமிழி, இது என்ன தமிழி? இன்றைக்கு நாம் தமிழ் என்று வழங்கும் சொல் அன்றைக்கு நம் தமிழர்கள் கி.பி. 300 ஆம் ஆண்டு வரை 'தமிழி' என்றே மொழிந்துள்ளதாகக் கூறுகிறார்கள்.

தம்-மூச்சு, இழி-இழிய, இழிந்து, இழியும், இறங்கும், வழிய, வழிந்தோட என்னுமாறு வருகிறது. தமிழி என்றால் சொல்ல நினைப்பதை, மூச்சில் அடக்கி வைத்திருப்பதை அதைப் பேச்சாகக் கீழே இறக்குவது என்பதாம். இப்படி ஒவ்வொரு தமிழ்ச் சொல்லும் வேர்ச் சொல்லோடுதான் தமிழர்கள் அமைத்து தம்மொழியைப் பேசியுள்ளார்கள் என்பதை நாம் அறிந்து புரிந்து கொள்ள வேண்டியது அரிய செய்தியாகும். இதனைப் பாவாணர் போன்ற மொழியியல் அறிஞர்கள் அவரவர் தம் நூல்களில் விளக்கிச் சொல்லியுள்ளதைக் கவனித்தோமாகில் வியப்பில் மனம் விரிந்து புளங் காகிதப்படும்.

எங்கள் ஊரில் ஏதாவது பொருள் குளத்தில் விழுந்துவிட்டால் குளத்தில் இழிஞ்சித் தேடுங் கப்பா என்பார்கள். இழிஞ்சி என்ற சொல் கீழே இழி' இறங்கு என்ற பொருளில் சொல்லுவர். உடனே நான் இந்த இழிஞ்சி என்ற சொல் திருக்குறளில் வருகிறதா இல்லையா என்று பார்த்து வந்திருப்பின் ஓ... திருவள்ளு வர் கடலூரில் பிறந்தவர் என்று வீண் கதை கட்டி ஆராய மாட்டேன். அண்ணன், அக்காள், அப்பா, பாட்டி என்று நாகாலந்து மக்கள் பேசுகிறார் களாம் இன்றும். இதை வைத்துத் தமிழ் மொழியே நாகாலாந்தில் தான் பிறந்தது என்று நிலைநிறுத்த முயன்றால் எவ்வளவு பேதமையோ அவ்வஃவு பிதற்றலானது தான், கன்னியா குமரியில் பேசும் ஒரு சில சொற்களை வைத்து அவை திருக்குறளில் பயன்படுத்தப்பட்டன என்று காரணம் சொல்லி, திருவள்ளுவர் கன்னியா குமரி மாவட்டத்துக்காரர் என்று சொந்தம் கொண்டாட முனைவதும் ஆகும் கடலூருக்கு அருகில் உள்ள புதுச் சேரிக்குப் பக்கத்தில் நயினார் மண்டபம் என்ற ஒரு சிற்றூர் இருக்கிறது. உடனே திருவள்ளுவ நரயனார் இங்கு தான் பிறந்தார் என்று வாதிடுவதா? சென்னை மயிலையில் உள்ள திருவள்ளுவர் திருக் கோயிலில் பூசை செய்பவர்கள் பரம்பரை பரம்பரையாக வள்ளுவ குலத்தவராகவே உள்ளனர். வள்ளுவர் மயிலையில் பிறந்து மதுரையில் வதிந்தவர் என்பது ஏற்கனவே ஏற்கப்பட்ட வரலாறாக இருந்து வருவதை மறுத்தலாகாது.

22.5. 1999 அன்று பாங்காக்கில் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் உலகத் தமிழ் மாநாட்டில் பேசிய மலேசியத் தமிழறிஞர் வீரப்பன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழர்கள் தைரியமற்றவர்கள். துணிவு இல்லாதவர்கள். உண்மைகளைக் கூட வெளியில் எடுத்துக் கூறவும் பயப்படுபவர்கள் என்று அவருக்கு உகந்த காரணங்களைக் காட்டிப் பேசினார்கள்.

அடுத்த நாள் என் முறை வந்த போது அவர் பேசிய கருத்தை எனது தமிழ் ழகரப் பணிக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஆதரித்தேன். அதாவது தமிழன் என்று சொல்லிக் கொள்ள வேண்டியவன் இதில் உள்ள ழகரத்தை அந்த இனிய ஓசையையுடைய சொல்லெழுத்தை சரியாகப் பேசவராமல் அமிழ்த ஒலியை அலங்கோலப் படுத்தி தினம் தினம் உலகமொழிகளில் இல்லாத இனிய எழுத்தோசையை நாம் பேசும் தமிழ் என்ற மொழியில் அழகாகப் பேச வேண்டும் என்பதற்காகவே அமைக்கப்பட்ட அந்த அருஞ்சொல்லை அருவருப்பாக தமில், என்றும் டமில் என்றும் தமிள் என்றும் தமிழர்களே ஒரே சமயத்தில் மாற்றி மாற்றி மூன்று விதமாகப் பேசுவதைப் பேச்சு என்பதா? உளறல் என்பதா? என்று சிந்திக்க வேண்டுகிறேன். தான் செய்கின்ற தவற்றை ஒப்புக் கொள்பவன் தான் மனிதன். தவற்றைத் திருத்திக் கொள்ள அறிந்தவன் தான் அறிஞன் என்று நான் தைரியமாக, அச்சமின்றி உங்கள் முன் வைக்கின்றேன். இந்த

உண்மையை இதுவரை எந்தத் தமிழனும் எடுத்துச் சொல்லவும் இல்லை. சுட்டிக் காட்டவும் இல்லை. அதனால் தொடங்கப் பட்டதுவே எமது **''தமிழ் முகரப்பணி மன்றம்''** ஆகும்.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழில் உள்ள மு௧ரச் சொற்களைப் பாழ்படுத்தி ளகர, லகரமிட்டு உளறிப் பேசி தகர மொழியாக்கியதை எடுத்து கூறவும், திருத்தவும் எந்தவொரு தமிழனுக்கும் துணிச்சல் வரவில்லையே என்னும்போது, வீரப்பன் பேசியதில் எவ்வளவு உண்மைகள் புதைந்துள்ளன. தமிழர்கள் இது நாள் வரை குடும்பம் குடும்பமாக, கூட்டம் கூட்டமாக, வட்டம் மாவட்டமாக, நாடு தழுவிய அளவில் தமிழ் என்ற நமது மொழிப் பெயரையே, தமிழர்கள் என்பவர்களே தமிழில் வரும் முகரச் சொற்கள் எல்லாவற்றையுமே தவிடு பொடியாக்கிச் சிதைப்பது ஏன்? எப்படி இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்? எங்கே குறை! நாவிலா? பிறப்பிலா? உணர்விலா? என்பதைப் புரியாமல் தவிக்கிறேன். எங்கள் பகுதியில் பன்றிகள் மேய்க்கும் பாமரன் கூட தமிழின் உயிர் மூச்சான முகர ஒலியை மாற்றிப் பேசவே மாட்டான். மாற்றிப் பேச முடியுமா என்பதைக் கூட அறியாதவர்கள் நாங்கள்.

கெட்டவை தாம் சீக்கிரம் மூளையில் ஏறும் என்பார்கள். தமிழ் என்று சிலர் பேசுகிறார்கள். தமிள், தமில் என்று சிலர் பேசுகிறார்கள் என்றால் இவர்களில் திருந்த வேண்டியவர்கள் யாரோ அவர்கள் திருந்துவதில்லை. மாறாக சரியாகப் பேசுபவன் தான் தவறாகப் பேசுவதைக் கைக் கொள்கிறான். இந்த நச்சுத் தன்மை இன்று தமிழகம் தழுவிய அளவில் பரவிக் கொண்டிருக்கிறது.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த ஊர் மதுரை. இது உண்மையோ பொய்யோ! இன்றைக்கு அதே மதுரையில் பாண்டித் துரைத் தேவருக்குப் பின் தமிழ் வளர்க்க டாக்டர் பெருங்கவிக்கோ வா.மு.சே. அவர்கள் முனைந்து இந்த ஐந்தாவது உலக மாநாட்டினை நான்கு நாட்களுக்கு நடக்கக் கூட்டியுள்ளார்கள். தனி மனிதனாக 2, 3, 4, 5–5–2002 ஆகிய நாட்களில் இந்த ஐந்தாம் மாநாட்டைக் கூட்டுகிறார் என்றால், உலகளவில் தமிழை வளர்ப்பவர் இவர் ஒருவரே ஏனும்போது வியந்து போகிறோம்.

இவ்விதம் தமிழை வளர்க்கப் பாடுபட்டாலும், நாட்டு மக்கள் எப்படித் தமிழைப் பேசுகிறார்கள் என்பதைத் துணிச்சலுடன் சொல்லியாக வேண்டும் அல்லவா! தமிழன் கோழையல்ல என்பதை நிரூபிக்கவாவது சொல்லியாக வேண்டுமல்லவா!

கடந்த ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தின் சில பகுதி மக்கள் பேசும் தமிழ் நம் மனத்தைப் புண் படுத்துவதாக தமிழையே கேலி செய்வதாக உள்ளது. தமிழின் சிறப்பே முகரத்தில் தான். தமிழ்ச் சொற்கள் யாவும் வேர்ச் சொல்லோடு தான் இருக்கும். எந்த ஓசையில் ஒரு எழுத்தைச் சொல்லி எழுதுகிறோமோ அந்த ஓசை மாறாது எல்லா எழுத்தொலியும் கூட்டாகி ஒரு சொல்லொலி யாகும், சொற்றொடராகும்.

அ(A) - வ(VA) - ன்(N) என்பதை அவன் என்று மூன்று எழுத்து ஒலியும் வருமாறு தான் சேர்த்துப் பேச வேண்டும். அதுதான் தமிழ். ஆங்கிலத்தில் தனி எழுத்தில் வரும் ஓசை, ஒலி, சொல்லில் இருக்காது. முற்றிலும் வேறுபட்டு ஒலிக்கும். இதற்குப் பின்னணியாக பக்கத்துப் பக்கத்து எழுத்துகளைச் சார்ந்து ஒலிகளும் மாறும் H+e=He எச்+இ=ஹி C+o+m+e=Come. சி+ஓ+எம்+இ = கம்; C+o+m+b = Comb சி+ஓ+எம்+பி = கோம்பு---இவ்விதம் தாறுமாறாக வரும். தமிழில் எழுத்தை அதன் ஒலியை மாற்றினால், பொருள் வேறுபட்டுவிடும். அழித்தான் என்பதை சில தமிழர்கள் அளித்தான் என்று சற்றும் கூச்ச நாச்சமின்றி பேசுகிறார்கள். கேட்பவர்களும் வாயை மூடிக் கொண்டு கேட்பார்கள். பாமரன் தான் இப்படிப் பேசுகிறானா என்றால் இல்லையய்யா – புலவர்கள், தமிழறிஞர்கள் கூட கழிப்பறையை, களிப்பறை என்றுதான் பேசுகிறார்கள். உழவனை, உளவன் என்று தான் அழைக்கிறார்கள். சோழனை, சோளன் என்று தான் செப்புகிறார்கள். இப்படிப் பேசுவதை எப்படிப் பொறுப்பது? தமிழன் எருமையினும் பொறுமையானவன் என்றான் ஒரு புலவன். தமிழகம் இப்படிப்பட்ட பேச்சை பொறுமையாக சகித்துக் கொண்டுதான் இருக்கிறது. கேட்க நாதியில்லை திருத்த வக்கில்லை. திருந்த வேண்டும் என்ற உணர்வும் இல்லை.

அவர்களுடைய நா தான் தவறாகப் பேசுகிறது என்றால் காது கூடவா இது தவறு என்று கண்டு பிடிக்காது? வாயும் காதும் இரண்டும் சரியில்லாதவர்களை செவிட்டு ஊமையர்

கள் என்பார்கள். இப்படிப் பேசுபவர்களை செவிட்டு உளறலர்கள் எனலாமா?

தமிழுடன் ஆங்கிலத்தைக் கலந்து பேசுபவர்கள் தமிங்கிலர்களாம். தமிழைத் தமிள், தமில், டமில் என்று ஒரே சமயத்தில் மாற்றி மாற்றிச் சொல்லி உளறுபவர்களை என்னென்று அழைப்பது? இப்படிப் பேசுவதற்குப் பெருமைப் படும் தமிழர்கள் தான் இருக்கிறார்களே தவிர தம் தவற்றை உணர்ந்து வெட்கப்படும் தமிழர்கள் உண்டா? சரி! எடுத்துச் சொல்லுவதையாவது செவி மடுக்கிறார்களா? அதனால் தான் எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழர்கள் நாட்டளவிலும், உலகளவிலும் ழகரத்தை அழித்து மாற்றிப் பேசுவதை மட்டும் மன்னிக்கவே கூடாது.

தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களும் சரியில்லை, பெற்றோர்களும் சரியில்லை எனும் போது தமிழ்க் குழந்தைகள் எப்படித் தமிழை ஒழுங்காகப் பேசுவார்கள். வானொலியில் ளகரப் பேச்சு. திரைத் துறையில் தகரப் பேச்சு என்று இப்படியே யாவரும் போட்டி போட்டுத் தமிழைப் பாழ் படுத்துகிறார்கள்.

சொன்னால் நம்பமாட்டீர்கள். மராட்டியிலும், இந்தியிலும் கூட 'ழ' எழுத்தை ஏற்றுப் புகுத்தியுள்ளார்கள். 'ऴ' இதுதான் அவர்களின் 'ழ' எழுத்து. என்னடா-தமிழனே 'ழ' பேச மறுக்கும் போது அவர்கள் மொழியில் 'ழ' சேர்ப்பதா என்று தமிழர்கள் போராடினாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை 14.9.1901ல் தொடங்கிய ராமநாதபுரம் அரசர் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் ''றாம நாத புரம் பாண்டித் துறைத் தேவர்'' என்பது போல அச்சடித்த பிழை மலிந்த புத்தகங்களைத் தொடக் கூடக் கூசுவாராம். இப்படி அவர் செய்த காரியம் எப்படிப்பட்டது என்பதைப் பாருங்கள்.

மதுரையில் ஸ்காட் என்ற ஆங்கிலோ இந்திய வக்கீல் திருக்குறளில் எதுகை மோனை இல்லாதவற்றில் திருத்தி புதிய குறட் புத்தகம் ஒன்றை வெளியிட்டாராம் (எ.கா) ''அகர முதல'' என ஆரம்பிக்கும் குறளுக்கு ''உகர முதற்றே உலகு'' என்று எழுதி முடித்திருப் பாராம். இப்படிப்பட்ட நூலை மொத்தமாக வாங்கி கொளுத்திப் போட்டாராம் அரசர். எவ்வளவு தமிழ்ப்பற்று அவருக்குப் பாருங்கள்.

டமில், தமிள், தமில் என்று பேசும் நா-வைக் கொளுத்திப் போட முடியாதல்லவா!

அப்படிப்பட்ட பெருமகன் இன்றிருந்தால் இந்த ழகர, ளகர, லகர (தமில், தமிள், டமில்) அவலத்தை எடுத்துச் சொல்லி திருத்தக் கேட்கலாம். அவரும் துணிந்து செய்திருப்பார் என்று சொல்ல முடியாது. ஏனெனில் அப்போது அவரின் தமிழ்ப் பேச்சு எப்படி இருந்தது என்பதை இப்போது நாமறியோம்?

இப்போது கூடத் தமிழ் ழகரப் பணிமன்ற அறிக்கைகளை பெரிய செய்தித் தாள்களுக்கு அனுப்பி னால் அவர்கள் வெளியிடுவதில்லை. ஏனெனில் பெரிய செய்தித்தாள்கள் எல்லாவற்றிலும் 'ளகரர்'கள் நிரம்பியிருப்பார்களோ என்ற ஐயம் எழுகின்றது. அதனால் தான் தமிழர்கள் 'ழ்'காத்தைப் பிழையின்றிப் பேசக் கட்டணம் வாங்காது பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறோம். இப்படி வரும் பல மாணவர்கள், பெரியவர்கள் திருந்துகிறார்கள். பாராட்டப்படுகிறார்கள். இதையறிந்த பழ. நெடுமாறன் அவர்கள்கூட இம்மன்றத்தின் தொண்டை வானொலி, தொலைக்காட்சி, திரைப்படத்தார் பயன்படுத்திக் கொள்ள தனது பத்திரிகையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழர்களிடையே இப்படிப்பட்ட விழிப் புணர்வை ஏற்படுத்தவே ''ழகர முதல் மாநில மாநாட்டை'' 9.2.2002 ல் சென்னையில் நடத்தினோம். தமிழர்கள் சரியாக ழகரம் பேச வேண்டுமானால் கல்வித்துறை, வானொலி, தொலைக் காட்சி, திரைத்துறை ஆகியவை முதலில் திருத்தப்பட வேண்டும். அரசாங்கம் Tamil Nadu (டமில் நடு) என்று எழுதிவிட்டு, தமிழ் நாடு என்று படிக்கப் பழகியதை விடுத்து இனி Thamizh Naadu (தமிழ் நாடு) என்று எழுதினால் தமிழர்களும், மற்றவர்களும் கூட தமிழ்நாடு என்று சரியான தமிழ் ஒலிப்பில் தவறின்றிப் பேச வழிவகை செய்யக் கேட்டு அரசுக்குத் தீர்மானம் எடுத்து அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்மான வேண்டுகோளை, இம்மாநாடும் கனிவுடன் பரிசீலித்துத் தீர்மானம் கொண்டு வந்து தமிழனுக்கு ஏற்படும் தலைகுனிவைப் போக்க ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

★

தமிழ் மானம்

புலவர் ஆ. மாடசாமி

என்றுமுள தென்றமிழின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கச் சங்கம் வைத்துத் தமிழாட்சி நடத்திய வரலாறு நமக்கு உண்டு. தமிழினம் ஆண்ட வரலாறும் உண்டு. தமிழ்ப் பண்பு காக்கப்பட்ட வரலாறும் உண்டு. தமிழால் நாடாண்டு தமிழ் எழுத்தை, தமிழ் எண்ணை, தமிழ்த் திங்களை, தமிழ்க் கிழமையை தமிழ் ஆண்டை உருவாக்கி எல்லா இடங்களிலும் நிலைப்படுத்திய வரலாறும் உண்டு. கழக இலக்கண இலக்கியங்கியங்களை வகுத்தும் தொகுத்தும் வாரி வழங்கியவர்கள் உண்டு. தமிழரின் வாழ்வியல் கொள்கைகளையும் வளர் தமிழ்க் கொள்கைகைளையும், முற்போக்கு எண்ணங்களையும், அறிவியல் சிந்தனைவளையும், அறநெறிக் கோட்பாடுகளையும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயர் நிலைச் சிந்தனை வரிகளையும், பரந்த மனப்பான்மையில் வடித்து வழங்கிய வரலாற்று வரிகளையும் பொன்னெழுத்துகளால் எழுதிவைத்துப் போற்றும் மனப்பான்மையுடையோரைக் கண்ட வரலாறும் நமக்கு உண்டு. எண்ணத்தில், எழுச்சியில், உணர்ச்சியில், ஊக்கத்தில், ஆக்கத்தில், அறவாழ்வில், தொண்டு மனப்பான்மையில், மனித நேயத்தில் பல்லாயிரக்கணக்கானோர் வாழந்து வரலாறு படைத்ததைப் படித்துப் பலருக்கும் சொல்லி மகிழ அடிப்படை சான்றுகளுடன் சுவடிகள், சுவடிச் சாலைகள், செப்பேடுகள், கல் வெட்டுக்கள் ஆயிரக்கணக்கில் தமிழர் வரலாற்றில் உண்டு.

மாபெரும் வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களாகி நாம் இடையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால், அதிகார மாற்றத்தால், மத மாற்றத்தால், அடிமை மனப்பான்மையால், தாழ்வுணர்ச்சியால், ஆசையால், மயக்கத்தால், தயக்கத்தால் படிப்படியாக வரலாற்றில் புகழ் மங்கிய அடிமை இனமாக ஆக்கப்பட்ட நீண்ட நெடிய வரலாற்றை எண்ணும்போதும், படிக்கும்போதும் வேதனை அடையத்தான் முடிகிறது. வெம்பித் துடிக்கத்தான் முடிகிறது. உலக வரலாற்றில் மொழியில்லாக் குழுவினம் மொழி படைத்து, இலக்கண இலக் கியம் படைத்து, ஆட்சியியல் சமயவியல் படைத்துப் புகழ் ஏணியின் உச்சியில் இருப்பதை இசுரேல் வரலாறு காட்டுகிறது. இந்தியாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற ஒரு குழுவினம் ஈழநாட் டில் நிலைத்து இன்று எல்லாவகையிலும் ஆதிக்கம் செய்யும் இனமாக வளர்ந்து அருமைத் தமிழினத்தை ஆட்டிப் படைப்பதைப் பார்க்கின்றோம். உலகெங்கும் வாழும் தமிழ்க் குடி மக்கள் ஒலிவடிவை, வரி வடிவை, பண்பாட்டுக் கூறுகளைச் சிதைத்துச் சிதைத்து அடையாளம் இழந்து நிற்பதைப் பார்க்கின்றோம். ஐந்திணை வாழ்வும், அகம் புறம் எனப் பகுத்து வாழ்ந்து இயற்கை அறிவியல் வாழ்வும், சிதைவு பட்டு சாதியாய், சமயமாய் மாறுபட்டு வேறுபட்டுச் சண்டையிட்டு இரத்தம் சிந்தும் இழிநிலை தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது. இச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த அரச மரபு ஆட்சிகளும், நான்காம் தமிழ்ச் சங்கம் வைத்து செந்தமிழ் வளர்த்த பாண்டித்துரையாரும் என்ன நோக்கம் கொண்டு பாடுபட்டார்களோ, அந்த நோக்கம் இன்று தமிழ் மண்ணில் வேரூன்றியுள்ளதா. என்பதை எண்ணும்பொழுது ஏக்கம் ஏற்படுகின்றது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்னும் கொள்கை முழக்கம் முழங்கிக் கொண்டே இருந்தாலும், தமிழமைப்புகள் தங்களின் பங்களிப்பைச் செய்தாலும் 'கடலில் கரைத்த காயம் போலச்' செயல்பாடுகள் காட்சியளிக்கின்றன. எல்லையை இழந்த தமிழன், இயற்கையை இழந்த தமிழன், மொழியின் தனித் தன்மையை இழந்த தமிழன், பண்பாட்டுப் பெருமைகளை இழந்த தமிழன், வறுமைக் கோட்டிற்குள் வாழ்ந்து வருகிற தமிழன் தன்னைப் பற்றியும் தன் மொழி இன வரலாறு பற்றியும் அறியாமல், ஆமையாய் ஊமையாய் அல்லல் படுவதை வழக்கமாகவும் பழக்கமாகவும் கொண்டுள்ளான். பலர், பலகால கட்டங்களில் விழிப்புணர்வு ஊட்டிப் பேசியும் எழுதியும் மாநாடுகள் நடத்தியும், கருத்தரங்கம், பட்டிமன்றம், கவியரங்கம்,

வழக்காடு மன்றம், தமிழ் நடைப் பயணம் நடத்தியும் இந்த மண்ணின் மைந்தன் மானமும் அறிவும் இழந்து வாழ்ந்து வருவதை யாராலும் தடுக்க முடியவில்லையே! தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், பாவேந்தரும், பாவாண ரும், மறைமலையடிகளும், திரு.வி.க.வும், குன்றக்குடி அடிகளாரும் தங்கள் மொழியினப் பற்றை வெளிப்படையாக எடுத்து மொழிந்து, ஏற்றம் தமிழும் தமிழினமும் பெற்றிட வாழ் நாள் முழுவதும் பாடுபட்டாலும், இன்றைய நிலையில் தமிழகம் உள்ளதைக் கருத்தில் எடுத் துக் கணக்கில் எடுத்துப் பார்த்தால், தமிழுக்காக நடந்த மொழிப்போர் மீண்டும் ஒருமுறை புதிய வடிவில் புதிய செயல் திட்டத்தில் தேவை என்பதைத் தமிழறிஞர்கள் உருவாக்க முன் வரவேண்டும. 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்பதைச் செயலில் காட்ட முன் வரவேண்டும்.

தமிழின் தளர்ச்சியைத் தமிழறிஞர்கள் போக்க முடியும். தமிழின் உயர்வுக்குத் தன்மானத் தமி ழறிஞர்கள் பாடுபடமுடியும். தமிழின் வளர்ச் சிக்குத் தமிழ்க்குடிமக்கள் தொண்டாற்ற முடியும்.

தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை தமிழ்ப் பயிற்று மொழிக்கு என் னென்ன தேவையோ அவை கண்முன் இருந் தாலும், பிற மொழியாளர் வருகையால் ஏற் பட்ட தாக்கத்தில், மயங்கிக் கிடக்கும் மாயை யால், உறங்கிக் கிடக்கும் தமிழனின் தாழ்வு மனப்பான்மையைத் தகர்க்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் கிடைத் துள்ள புள்ளி விவரத்தின் மூலம் அறிய முடி கின்றது. ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறுவதற்கு முன்னர் இருந்த நிலை வேறு. இக்காலத்தில் இருந்த நிலைவேறு. இடைக் காலத்தில் இருந்த நிலை வேறு. இன்றுள்ள நிலை வேறு. மாறுதல் நல்ல நோக்கில், நல்ல பயனைத் தரும் வகையில் ஏற்பட்டிருந்தால், எல்லா வகையிலும் வளர்ச்சிக்கு வழி வகுத்திருக்கும். இன்றைய இந்தி, ஆங்கிலம், பிற மொழி வளர்ச்சி தமிழை, தமிழினத்தைத் தாழ்த்திடும் வகையில் உள்ளதை அறியும்போது ஆராய்ச்சி மேலோங்கி உண்மை அறியத் தூண்டு கிறது. ''தேசியக் கல்வியைக் கற்றுகொடுக்காத தேசத்தைத் தேசமென்று சொல்லுதல் தகாது. அது மனிதப் பிசாசுகள் கூடி வாழும் பரந்த சுடுகாடேயாகும்'' என்று பாரதியார் எழுதிச் சென்றுள்ளார். அண்ணல் காந்தி, தாகூர் போன்ற வர்கள் தாய்மொழி வழிக் கல்வி மூலம்தான் சுய சிந்தனையை வளர்த்தெடுக்க முடியும் என்று உறுதியிட்டு உரைத்துச் சென்றுள்ளனர். இன்று தமிழ் நாட்டில் ஒன்பது இலட்சத்து ஐம்பதினா யிரம் மாணவர்கள் பல்வேறு வகைப்பட்ட மத்திய மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆங்கில வழிக் கல்விக் கூடங்களில் கற்கின்றனர். பள்ளிக் கல்வி இயக்ககம் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு, ஜெர்மன், உருது மொழிகளில் தொடக்க நிலை முதல் உயர்நிலை வரையிலும் கற்றுக்கொள்ள வாயில் திறந்துள்ளது ''ராயன்'' ஒரு நபர்குழு அறிக்கையை ஏற்றுத் தமிழக அரசு ஆங்கிலக் கல்விக்குத் தனி இயக்குநர், இயக்குநர் அலுவலகம் திறந்து செயல்படுகிறது. தமிழ்வழியில் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் படிக்க ஈழத் தமிழர்களால் முடிகின்றது. இந்தியத் தமிழர்களால் முடியவில்லை. ஏன்! ஏன்! இந்த நிலைக்குக் காரணமானவர்கள் யார்? யார்? 959 மெட்ரிக்குலேசன் மேனிலைப் பள்ளிகளும் 2523 மெட்ரிக்குலேசன் உயர்நிலைப்பள்ளிகளும் 49 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளும், 250 கேந்திர வித்தியாலயா பள்ளிகளும், 350 சி.பி.எஸ்.சி பள்ளிகளும் தமிழகத்தில் குடிகொண்டு தமிழரை ஆட்டிப் படைப்பதைச் சட்டமாற்றத்தின் மூலம் சரித்திரம் படைக்க யார் முன் வருகிறார்கள்? இசையில் தமிழிசை என்று வரும்? வழிபாட்டில் தமிழ் வழிபாடு என்று வரும்? ''இல்ல விழாக் களில், இல்லப் பெயர்களில், வணிக நிறுவனப் பலகைகளில், தமிழ்மக்களின் பெயர்களில், திரைப்படப் பெயர்களில், நாளிதழ்களின், கிழமை, திங்கள் இதழ்களின் பெயர்களில் தமிழ்மட்டுமே இடம்பெற வேண்டும்'' என்னும் சட்டத்தை எந்த நாளில் யார் நிறைவேற்றிச் செயல்படுத்த முன்வருகிறார்களோ, அவர்களே தமிழ்ப்பணி செய்யும் தலை மாணாக்கர்கள். அவர்களை வழி மேல் விழிவைத்து வரவேற்போம்! வாழ்த்து வோம்! தமிழை வாழவைத்துத் தமிழராய் வாழ்வோம்! ★

தமிழகக் கோயில் திருவிழாக்கள்

எஸ். பாஸ்கர்

முன்னுரை

தமிழகக் கோயில்களின் பல சிறப்புகளில் அவற்றின் விழாக்கள் முதன்மையானதும், முக்கியமானதுமான இடத்தைப் பெறுகின்றன. விழாக்களே அனைத்து மகிழ்வுகளின் உற்றுக் கண்களாகும். சமூகத்துமக்கள் ஒன்று கூடி மகிழ்ச்சியாய் இருக்க வழிவகுப்பவை விழாக் காலங்களே. மக்களின் சமய மற்றும் சமூக உந்துதல்களை முழுமையான இவை வெளிப் படுத்துகின்றன. எந்த ஒரு நாட்டின் சிறப்பை அந்த நாட்டில் கொண்டாடப்படும் விழக்களில் காணலம். மக்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கி உறவையும், அன்பானதோழமையையும் வெளிப் படுத்திக் கொள்ள விழாக்கள் உதவுகின்றன.

குடும்பரீதியாக, சமூக, அரசியல்ரீதியாக, இலக்கியத் தொடர்பாக என விழாக்கள் பல வகையாக இருந்தாலும் முக்கியமாக கோயில் களோடு தொடர்புடையவையாகவே விழாக்கள் உள்ளன. இவை வெகுவிமரிசையாகக் கொண் டாடப்படுகின்றன. மதுரை நகரின் பலவீதிகளின் பெயர்கள் மாதம் தோறும் கொண்டாடப்படும் விழாக்களைக் குறிக்கும் வகையில் அமைந்துள் ளன. உதாரணமாக சித்திரைவீதி, ஆடி வீதி, ஆவணி வீதி, மாசி வீதி போன்றவை 1300 ஆண்டு களுக்கு முன் கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவசமயக் குறவர்களில் ஒருவரான திருஞான சம்பந்தர் (மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயி லில்) மாதந்தோறும் நடைபெறும் விழாக்களைப் பற்றி தனது தேவாரப்படல்களில் குறிப்பிட்டுள்ளார்.

சங்ககாலப் பத்துப்பாட்டுகளில் ஒன்றான மதுரைக்காஞ்சியில், மதுரையில் சைவ, வைணவ, புத்த, சமணக் கோயில்களில் கொண்டாடப் பட்ட விழாக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

வேனில் விழாக்கள் என்பவை நமது கலாச்சாரம், தத்துவம், சமயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இந்த விழாக்களில் முதல் ஆறு மாதத்தில் நடக்கும் சிலவற்றைப் பற்றி காண்போம்.

(1) சித்திரை (ஏப்ரல் – மே)

சித்திரை மாதத்தில் புத்தாண்டு தினம், சித்திரைப்பவுர்ணமி ஆகிய விழாக்கள் பல கோயில்களில் கொண்டாடப்படுகின்றன. புத் தாண்டு தின விழா புதுவாழ்வையும், வளத்தை யும் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்த விழா ஒவ்வொரு வீட்டிலும், கோயிலிலும் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் திறந்த வெளியில் சூரியக் கடவுளுக்கு பூஜை செய்யப்படும். பஞ்சாங்கம் படிப்பது, புத்தாண்டு நிகழ்ச்சிகளில் முக்கியமானதாகக் கிராமப்புறங்களில் கருதப்படுகிறது. தமிழ்நாட் டில் உள்ள வணிகர்கள் புத்தாண்டுக்கு முந்தைய நாளில் கணக்கை முடித்து புத்தாண்டு தினத் தன்று புதுக் கணக்கைத் தொடங்குவார்கள்.

அப்பரால் பாடப்பெற்ற புராதன சேத்திர மான திருக்கோடிக்காவலில் சித்திரைமாதம் அமாவாசை தினத்தில் சித்திராகுப்தனுக்கும் பவுணர்மி தினத்தில் எமதர்மனுக்கும் வழிபாடு செய்யப்படுகிறது. இந்தக் கோயிலின் வருடாந் திர பிரம்மோத்சவம் சித்ராபவுர்ணமி விழாவா கப் பத்து நாட்களுக்குக் கொண்டாடப்படுகிறது.

மதுரையில் சித்திரைக்திருவிழா புகழ் மிக்கது. சொக்கநாத பெருமானனுக்கும் தேவி மீனாட்சி அம்மனுக்கும் திருமண விழாவாக இது நடைபெறும் இந்த விழா 10 நாட்களுக்கு விமரிசையாகக் கொண்டாடப்படும். கடைசி நாளான்று அழகர் சோலை எனும் கள்ளழகர் கோயிலிலிருந்து மீனாட்சியின் சகோதரரான கள்ளழகர் மதுரையில் உள்ள வைகை ஆறுவரை வந்து திரும்புவார். லட்சக்கணக்கான மக்கள் கூடி கள்ளழகரைத் தரிசிப்பார்கள். தமிழ்நாட் டின் சிறப்புமிக்க பெரிய திருவிழாக்களில் இதுவும் ஒன்றாகும்.

நாகை மாவட்டம் நன்னிலம் அருகே உள்ள திருப்புகலூரில் ஸ்ரீ அக்னீஸ்வரஸ்வாமி ஆலயத்தில் சித்திரை சதயத்திருவிழா சித்திரை மாதத்தில் சிறப்பாக கொண்டாடப்படும். அப்பர் திருநாவுக்கரசர் முக்தி அடைந்த நாளை குறிப்பதாகும் இந்த விழா.

சைவ வைணவக் கோயில்களில் இந்திரன், மன்மதன் ஆகியோரை சிறப்பிக்கும் வகையில் சித்திரை கொண்டாடப்பட்டது. காலப்போக் கில் சிறு தெய்வங்களுக்கான அந்த விழாவின்

முக்கியத்துவம் குறைந்துவிட்டது. சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் தம்பிரான் சோழ ராகக் காட்டப்படும் சுந்தர மூர்த்திநாயனார் காலத்தில் இந்த விழா திருவாருரில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவை ஊஞ்சல் விழா அல்லது தாலோத்வம் என்றும் அழைப்பதுண்டு. உயிர்களின் போக்கு வரவை (பிறவி - மறுபிறவையைக் குறிப்பதாகும் இந்த விழா. சித்திரை மாதத்தில் வரும் சித்திரை நட்சத்திரம், வைணவ சமயத்தின் ஆழ்வார்களில் ஒருவரும், நம்மாழ்வாரின் பக்தரான மதுரகவி ஆழ்வாருக்கு ஜென்ம நட்சத்திரமாகும்.

2. வைகாசி விசாகம் (மே – ஜுன்)

வைகாசி மாதத்திலும் முக்கியமான விழா ஒன்று உண்டு. அது வைகாசி விசாகத்திருவிழா விசாக நட்சத்திரம் முருகப்பெருமானின் ஜென்ம நட்சத்திரமானதால் விசாகர் என்றும் முருகனை அழைப்பதுண்டு. வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம் நாளில் இந்த விழா கொண் டாடப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முருகன் கோயில்களிலும், சிறப்பாக திருச்செந் தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணி ஆகிய ஊர்களில் உள்ள முருகன் கோயில்களில் இந்த விழா விமரிசையாகக் கொண்டாடப்படும்.

விசாக விழா முருகப்பெருமானுக்கு முக்கியமானதாக் கருதப்பட்டாலும் பல இடங்களில் இதே அளவுக்கு முக்கியமானதாக சிவா, விஷ்ணு ஆலயங்களிலும் இந்த விழா கருதப்படுகிறது. இந்த நன்னாளில் திருச்சிராப் பள்ளி மாவட்டம் திருமழப்பாடி திருக்கோயி லில் போர் ஆயுதமான மழுவைக் கையிலேந்தி சிவபெருமான் நடனமாடியதாகக் கூறப்படுகிறது. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலிலும் வைகாசி விசாகத்திருவிழா ஆண்டு தோறும் 10 நாட்களுக்குப் கொண்டாடப்படுகிறது. இந்த விழாக்காலத்தில் 3வது நாளில் வரதராஜ பெரு மான் கருடவாகனத்தில் பக்தர்களுக்கு காட்சி தருவார்.

விசாகம் நம்மாழ்வாரின் பிறந்த நாளும் (நட்சத்திரமும்) ஆகும். இதனால் வைணவக் கோயில்களிலும் இந்த விழாக்கொண்டாடப் படும் மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றான நரசிம்ம அவதாரத்திற்கு விசாக விழா மிகவும் முக்கயமானதாகும். சிம்மாச்சலத்தில் (சிமாச்சலம் ஆந்திர மாநிலத்தில் உள்ளது) இந்த விழா நடைபெறும் இரணியவதத்தால் கொதிப் புற்ற நரசிம்மாவதாரத்தைக் குளிர்விக்க இந்த ஆலயத்தில் உள்ள நரசிம்மமூர்த்தியின் திருமேனி எப்போதும் சந்தனக்காப்பு செய்யப்பட்டிருக் கும். ஆனால் விசாக நாளில் மட்டும் சந்தனக் காப்பு நீக்கப்பட்டு நரசிம்ம மூர்த்தி பக்தர் களுக்கு காட்சி தருவார்.

3 ஆனி (ஜுன் ஜுலை)

ஆனி மாதத்தில் ஆனி உத்திரம் என்பது முக்கயமான நாளாகும். இந்நாளில் உத்திர நட் சத்திரம் உச்சத்தில் இருக்கும் இந்த நன்னாளில் நடராஜ பெருமானுக்கு திருமஞ்சனம் எனும் புனித நீராட்டு சிறப்பாக நடைபெறும்.

ஆண்டின் ஒவ்வொரு நாளிலும் எல்லாக் கோயில்களிலும் சிவலிங்கத்திற்கு பலகால அபி ஷேகம் நடைபெறும், ஆனால் நடராஜ பெரு மானுக்கு அனைத்துக் கோயிகளிலும் ஆண்டில் ஆறு நாட்கள் தான் விசேஷ அபிஷேகம் நடைபெறும். அந்த ஆறு நாட்கள் வருமாறு:-

1. சித்திரை திருவோணம்
2. ஆணி உத்தரம்
3. ஆவணி சதுர்த்தி
4. புரட்டாசி சதுர்த்தி
5. மார்கழி ஆருத்ரா (திருவாதிரை)
6. மாசி சதுர்த்தி

இந்த ஆறு நாட்களும் ஒருநாளின் ஆறு அங்கங்களாக கருதப்படுகின்றன. அவை:-

1. மார்கழித் திருவாதிரை - விடியற் காலை நேரம்
2. மாசி சதுர்த்தி - உஷாக்காலம் அதாவது காலைநேரம்
3. சித்திரை திருவோணம் - நண்பகல்
4. ஆனி உத்திரம் - பிரதோஷகாலம் அதாவது பிற்பகல்
5. ஆவணி சதுர்த்தி மாலை
6. புரட்டாசி சதுர்த்தி நள்ளிரவு

நடராஜப் பெருமானுக்கு செய்யப்படும் இந்த ஆறு அபிஷேகங்களில் ஆனி உத்திரத்தன் றும், மார்கழி திருவாதி தையிலும் செய்யப்படும் அபிஷேகங்கள் மிகவும் முக்கியமானவை. ஆனி

உத்திரம் திருமஞ்சன விழா சிதம்பரத்தில் தேர்த்திரு விழாவாக விமரிசையுடன் 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

4. ஆடி (ஜூலை - ஆகஸ்ட்)

ஆடி மாதத்தில் ஆடிப்பூரம் திருவிழா சைவ, வைணவ ஆலயங்களில் கொண்டாடப் படுகிறது. பூரம் நட்சத்திரம் பொதுவாக அம்பாள் அல்லது சக்திதேவியின் ஜென்ம நட்சத்திரமாகக் கருதப்படுகிறது, இதனால் பெரும்பாலும் அனைத்து சிவாலயங்களிலும் இந்த விழா நடைபெறும். ஸ்ரீ ஆண்டாளுக்கும் ஆடிப்பூரம் ஜென்ம நட்சத்திரம் என்பதால் வைணவர்களுக் கும் இந்நாள் புனிதநாளாக உள்ளது. திருவில்லி புத்தூரில் உள்ள ஸ்ரீ ஆண்டாள் கோயிலில் ஆடிப்பூரம் விழா 10 நாட்களுக்கு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மேல் மருவத்தூரில் ஆடிப்பூரம் விழா ஆதி பராக்தி சித்தர் பீடகோயிலின் சார்பில் வெகு விமரிசையாக 10 நாட்கள் கொண்டாடப்படு கிறது. நாடு முழுவதிலும் இருந்து செவ்வாடைத் தொண்டர்கள் இங்கு வந்து ஆடிப்பூரம் விழாவை கொண்டாடுகிறார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவி லில் உள்ள சிவாலயத்தில் சங்கரநாராயணர் ஆடித் தபசு விழா கொண்டாடப்படுகிறது. அம்பாள் விஷ்ணுவின் சகோதரியாவாள். இந்த ஆலயத்தில் கோமதி தேவியாக எழுந்தருளி யிருக்கும் அம்பாள், சிவனையும் விஷ்ணுவை யும் ஒன்றாகத்தரிசனம் செய்ய விரும்பினாள். இதற்காகத்தவம் மேற்கொண்டாள். அம்பாளின் இந்த ஆர்வத்தை மெச்சிய சிவனும் விஷ்ணுவும் இங்கே சங்கரநாராயணராக ஒன்றிக் காட்சியளித் தனர். இங்கே இருவரும் இணைந்து நின்ற தோற்றத்தை ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றிப்பாடியுள்ளனர். இதுமட்டுமின்றி கிரா தேவதைகள் எனப்படும் சிறு தெய்வங்களுக் கும், மாரியம்மனுக்கும் மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் ஆடிப்பூரம் விழா உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

5. ஆவணி (ஆகஸ்ட் செப்டம்பர்)

ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவும், ஆவணி மூலம் விழாவும் நடத்தப்படு வது குறிப்பிடத்தக்கது. ஆவணி மாதத்தின் வளர்பிறை காலத்தில் 4வது நாளான சதுர்த்தி திதியன்று விநாயகர் விழா நடத்தப்படுகிறது. தற்காலத்தில் பிள்ளையார் சதுர்த்தி விழாவை வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி முடிந்து எட்டு நாள் கழிந்து பிள்ளையாரை கடலில் கரைக்கும் வைபவம் கோலாகலமாக நடத்தப்பட்டு வருகிறது. எந்தக்காரியத்தையும் துவங்குவதற்குமுன் முதலில் விநாயகருக்கு விழா நடத்தப்படுகிறது.

ஆவணி மூலம் திருவிழா இந்த மாதத்தின் இன்னொரு முக்கிய திருவிழாவாகும். இந்த திருவிழா மதுரையில் மட்டுமின்றி தமிழ்நாட் டில் உளள அனைத்து சிவாலயங்களிலும் கொண்டாடப்படுகிறது.

6. புரட்டாசி (செப்டம்பர் - அக்டோபர்)

புரட்டாசி மாதத்தில் சரஸ்வதி பூஜை மிகுந்த உற்சாகத்தோடும், பக்தி சிரத்தையோ டும் கொண்டாடப்படுகிறது. அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களில் இதுவும் ஒன்று புரட்டாசி மாத அமாவாசையைத் தொடர்ந்து 9 நாட்கள் இந்த விழா கொண்டாடப் படுகிறது. 9வது நாளான மகாநவமியன்று நிறைவு பெறுகிறது. இதனால் நவராத்திரி என்றும் இந்த விழா கூறப்படுகிறது. 10வது நாளான மகாதசமி யும் இந்த விழாவோடு சேர்க்கப்பட்டு தசரா பண்டிகை என்றும் அழைக்கப்படுவதுண்டு.

மகா விஷ்ணுவுக்குரிய புனித மாதமாகவும் புரட்டாசி கருதப்படுகிறது. இந்த மாதத்தின் அனைத்து சனிக்கிழமைகளில் மக்கள் விரத மிருந்து வைணவ ஆலயங்களில் மகாவிஷ்ணு வுக்கு வழிபாடு செய்வார்கள். இந்த மாதத்தில் திருப்பதி ஸ்ரீவெங்கடேசபெருமாளுக்கு பிரமோத் சவ விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும்.

முடிவுரை

இக்கட்டுரையில் எந்த கோயிலில் எந்தவித மான பண்டிகை மற்றும் உற்சவம் விசேஷமாக கொண்டாடப்படுகிறது என்பது அது சமயம் பக்தர்கள் அந்த ஆலயங்களுக்குச் செல்வதற்கு ஏதுவாக முழுத்தகவலும் தரப்பட்டுள்ளது. ஆன் மீக அன்பர்கள் பயனடைய கேட்டுக்கொள்கிறோம்.

★

தமிழ்தேடும் தமிழகம்

புலவர் மு. வெள்ளைச்சாமி

''தென்குமரி வடபெருங்கல் குணகுட கடலாவெல்லை
குன்று மலை காடு நாடு ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிது கடிந்து கோல் திருந்திப் படுவது உண்டு பகலாற்றி
இனிது உருண்ட சுடர்நேமி முழுதாண்டோர் வழிகாவல''

புறநானூறு பாடல் 17)

என வாழந்தோர் புறநானூற்றுக் காலத் தமிழர்கள்.

''பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே''

(பாடல் 17)

என வாழ்ந்தோர் புறநானூற்றுக் காலத் தமிழர்கள்.

''பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே''

(பாடல் 2)

என இமயமலையிலும் பொதியமலை யிலும் தமிழர் வாழ்வுமுறை இருந்தது. இந்த எல்லையைத்தான்

''வடாஅது பணிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணா அது கரைபொடு தொடுகடல் கணக்கும்
குடா அது தொன்று முதிர் பெவைத்தின் குடக்கும்''

(பாடல் 6)

என்று தமிழக எல்லைக் குறிக்கப்பட்டது.

வடக்கே கோபி பாலைவனம் முதல் தெற்கே குமரி ஆறுவரை எல்லையாகக் கொண்டது தமிழர் நிலம் என்பதே ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லூலகம்'' எனும் பனம்பாரனாரின் தொல்காப்பியப் பாயிரப் பாடல் வரியின் பொருளாகும்.

''கடலா எல்லை
குன்று மலைகாடு நாடு ஒன்றுபட்டு வழடிமொழி''

(பாடல் 17)

என்ற பாடல் உண்மையைத் தான் திருவள்ளுவர் அறன் அதிகாரத்தில்

''மணிநீரும் மண்ணும் மலையும் அணி நிழல்
காடும் உடையது அறன்' என வரையறுத்தார்

குறள் - 75:2)

தமிழர்கள் கடலிலே கப்பல் செலுத்தினர். காற்றைத் தொழிற்படுத்திப் பிறநாடுகளுக்குச் சென்றனர். பிறநாட்டுச் செல்வத்தையும் கடல் மீன் வளத்தையும் தமிழகம் கொணர்ந்தனர்.

''நளியிரு முந்நீர் நாவாயோட்டி, வள் தொழில்
ஆண்டோர்''

(பாடல் 66)

என்ற பாடல் வரியும், ''களிரே முந்நீர் வழங்கு,
நாவாய் போலவும்,
பன்மீனாப்பட்டினங்கள் போலவும்
சுறவினத்தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட்டன்றே''

(பாடல் 13)

என்ற உவமையும் விளக்குகிறது. தமிழ்த் தாய்மார்கள் தங்கள் வயிற்றை, 'புலிதங்கிச் சென்ற குகை' என்று உவமை சொன்னார்கள்.

தமிழர் நிலத்தைப் போரிட்டுக் கைப்பற்ற முடியாத பாட்டும் ஆட்டமும் காட்டும் கூத் தாடிகளாகச் சென்றால் நாட்டையே கைப்பற்ற லாம் என்று புலவர் ஒருவர் அறிவித்தார். ''யான் அறிகுவன் அது கொள்ளுமாறே

விரையொலி கூந்தனும் விறலியார் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீயும்மே''

(பாடல் 109)

தமிழ்நாட்டின் எல்லை சுருங்கிவிட்டது. விடுதலை பெற்றவுடனே பர்மாவிலிருந்து தமிழர் துரத்தப்பட்டனர். இன்றைய தமிழ்நாட்டில் புற னானூற்றுப் புலவர் கூறியவாறே கூத்தாடிகள் கட்சிகளை அமைத்து ஆளுவோராயினர்.

''காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு - இன்று நீரிலா
நிலமாயிற்று, மணலாறுகாட்டும் தரையாயிற்று.
கூத்தாடிக் கட்சிகள் பிறமொழிக் காரர்களை முன்
நிறுத்தித் தமிழர்களைத் தாக்கும் தந்திரம்
தொடர்கிறது. அடியார் என இறை பணிக்குத்
தம்மைத் தயார் செய்வோராகத் தமிழர்களே,
வாழ்வுநெறியை வகுத்துக் கொண்டார்கள்.

மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு - இன்று நீரிலா
நிலமாயிற்று, மணலாறுகாட்டும் தரையாயிற்று.
கூத்தாடிக் கட்சிகள் பிறமொழிக் காரர்களை முன்
நிறுத்தித் தமிழர்களைத் தாக்கும் தந்திரம்
தொடர்கிறது. அடியார் என இறை பணிக்குத் தம்மைத்
தயார் செய்வோராகத் தமிழர்களே, வாழ்வுநெறியை
வகுத்துக் கொண்டார்கள்.

பிறமொழிக்காரர்களுக்கு மட்டுமின்றி, ரஷ்யா, அமெரிக்கா முதலிய பிற நாடுகளுக்கும் வேலைக்காரர்களாகச் செல்லும் மனப்பக்குவத்தைப் பெற்றுவிட்டார்கள். கடல்கடந்து, போர்புரிந்து, தமிழ்பரப்பி புகழ்பெற்ற தமிழினம் இன்றுசந்திதெருப்பெருக்கும் சாத்திரம் கற்கிறது, - ஓனிக்ஸ் என்ற அன்னிய நிறுவனத்தின் மூலம்!

சென்னை நகரம், ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட நகரம், பாதாளச் சாக்கடையும், பூங்காக்களும், கூவம் - அடையாறு - ஓட்டேரி - பக்கிங்காம் கால்வாய் என நீர் நிலைகளும், டிராம் போக்குவரத்தும் கொண்ட மிகப் பெரிய நகரம்.

சென்னை மாநகரம் தெலுங்கருக்கு உரியது என்று முழக்கமிட்டனர். தேசியக் கட்சியும், பொதுவுடைமைக் கட்சியும் மட்டுமே அன்று இருந்ததால் சென்னை நகரத்தைத் தமிழர்களுக்கு உரிமை ஆக்கினர். ஆயினும் டிராம் போக்குவரத்து ஒழிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இருந்த பிறமொழிக்காரர்கள் ஒன்றுபட்டனர். கேரளம் என்றும், கர்நாடகம் என்றும் மொழிக்காரர்கள் ஒன்றுபட்டனர். கேரளம் என்றும், கர்நாடகம் என்றும் மொழிவாரி மாநிலங்கள் பிரிந்தபோது, தமிழர் நிலங்கண்ட, பிறமொழிக்காரர்களுக்கு உரிமையாயின.

தமிழர் நில உரிமையைப் போராடிப் பெறக்கூடாது என்ற உள்நோக்கத்தோடு, தமிழ் வாழ்க என்ற முழக்கத்தோடு, தமிழ்நாட்டில் கட்சிகள் பிறந்தன. சினிமாக் காரர்களால் கட்சிகள் வளர்க்கப்பட்டன. மராட்டியத்தில் சிவசேனையால் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். சென்னை நகர நீர்வழிகள் சாக்கடைகளாக மாறின.

தமிழகம், தமிழுக்குத் தரும் உயர்வளிக்கும் தலைமையை எண்ணிப் பன்னாட்டுத் தமிழுறவால் தேடிக் கொண்டிருக்கிறது.

"தன்னை நன்றாய் தமிழ்செய்யும் தமிழ்நாட்டை
எப்போது காண்போம்?"

★

மேட்டூர் மா. கதிர்வேல் அவர்களின்
வாழ்த்து



பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் வெள்ளி விழா - உலக மாநாடு உன்னத குறிக்கோளோடு நடைபெறுவது கண்டு பெருத்த மகிழ்ச்சியடைகிறேன். வெற்றி பெற உளமார வாழ்த்துகிறேன்.

ஒரே துறை ஆர்வமுள்ள இத்துணைச் சான்றோர் பெருமக்கள் இருந்தும் தமிழ் நாட்டில் தமிழை முன்னிறுத்த என்ன தடங்கள் உள்ளது என்றுணர முடியவில்லை.

இம்மாநாடு அதற்கோர் வழிகாண உளமார மீண்டும் வாழ்த்துகிறேன்.

மாறிவரும் உலகில் நூலகங்கள் பெருக வேண்டும்!

அழகர்சோலை சு. சௌந்தரராசன்



மாறிவரும் உலகில், நூலகங்கள் பெருக வேண்டும். தகவல்களையும், செய்திகளையும், புத்தகங்கள் தருகின்றன. பத்தகங்கள் தரும் செய்திகள் நம் அறிவை விரிவுப்படுத்துகின்றன. புத்தகங்கள் கல்வியையும், அறிவையும் வளர்க்கும் மிகச் சிறந்த சாதனமாகும். ஒரு தனி மனிதனின் முன்னேற்றத்திற்கு நூல்கள்தான் காரணம் என்றால் அது மிகை அல்ல. உலகில் பேராற்றல் கொண்டவர் எல்லோரும் நூல்களைப் படித்த தன் மூலமே அறிவை வளர்த்து முன்னேறி இருக்கின்றனர்.

''மனக்கோட்டம் தீர்ப்பது நூல்'' என்று கூறுகிறது நன்னூல்'' ''இக்காலத்தில் நூல்களின் தொகுதியே உண்மையான பல்கலைக்கழகம் (The University of these days is a collection of books)'' என்று கூறினார் தாமஸ் கார்லைல்

''புத்தகம் என்பது சட்டைப் பைக்குள் வைக்கும் பூங்கா'' - என்றார் ஓர் அறிஞர்.

''படிப்பது ஒருவனை முழுமனிதனாக ஆக்குகிறது'' என்றார் அறிஞர் பேகன். ''பாடை ஏறினும் ஏடது கைவிடேல்'' என்பது தமிழ்ப் பழமொழி.

''புத்தகங்கள் ஞானப்பெட்டகத்தைத் திறக்கும் சாவிகள், இன்பத் பூங்காக்களில் புகும் நுழை வாயில்கள்; உங்களை உயிர்த்துவிக்கும் வழிகள் - நல்ல நண்பர்கள்! வாருங்கள் படிப் போம்!'' என்று அறிஞர் பௌல்சன் அழைத்தார்.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் சில மணி நேரங்களில் நாலைந்து நூல்களை விரை வாகப்படிக்கும் ஆற்றல் பெற்றவர். ஒரு நூலின் முதல் இரண்டு, மூன்று பக்கங்கள், நடுவில் ஒரு பக்கம், முடிவில் ஒரு பக்கம் என்று படித்து அந்நூலில் உள்ள அனைத்துக் கருத்துக்களையும் கூறிடும் ஆற்றல் பெற்றவர்.

நம் நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு, புத்தகங்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வமுடையவர். அண்மையில் வெளி யாகும் நூல்களைக் கூட படித்துவிடுவார்.

ஒரு சமயம் நேரு சென்னைக்கு வந்திருந்தார். அவருக்குப் பல பணிகள் காத்திருந்தன. மாலையில் கவர்னர் விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தார். பத்து நாட்களுக்கு முன் இலண்ட னில் பொளாதார நிபுணர் ஒருவர் எழுதிய நூல் ஒன்றைப் படிக்க விரும்பினார். டெல்லியில் அந் நூலைப் படிக்க நேரம் கிடைக்கவில்லை எனவே சென்னையில் அந்நூலை வாங்கி வரும்படி தன் செயலரிடம் கூறினார்.

அச்செயலரும், கவர்னரின் அதிகாரிகளும் அந்நூலை வாங்கி வர பல புத்தகக் கடைகளுக்குச்சென்றனர். எங்கும்கிடைக்கவில்லை. யோசித்தார்கள். பின்னர் கன்னிமாரா நூலகத்தில் இருக்கலாம் என எண்ணி அங்குச் சென்றனர். ஆனால் நேரமாகி விட்டதால் கன்னிமாரா நூலகம் மூடியிருந்தது. ஒருவாறாக, கன்னிமாரா நூலகரின் முகரியைக் கண்டுபிடித்து, அவரை அழைத்து வந்தனர்.

ஆனால், அந்நூல் நூலகத்தில் இல்லை! யாராவது படிக்க வாங்கிச் சென்றிருக்கிறார்களா எனபதிவேட்டைப் பார்த்தனர். ஆம்! அந்நூலை ஒருவர் வாங்கி சென்றுள்ளதை பார்த்தனர். அவர் யார்? அவர் பெயர் என்ன?

திரு. சி.என். அண்ணாத்துரை அந்நூலை வாங்கிச் சென்றுள்ளார் என்பதை கண்டறிந்தனர்.

இச்செய்தி மூலம் பண்டித நேரு அவர்களுக்கும், அறிஞர் அண்ணா அவர்களுக்கும் நூல்களை - அதுவும் அண்மையில் வெளியாகும் நூல்களையும் படிப்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டியிருந்தனர் என்பது தெரிகிறது அல்லவா?

கைகாட்டி

முகவை பூங்குன்றன் (ஞா.எபனேசர்)

தாயொருவள் கைகாட்டி அழைக்கும் போதில்
தாவிவரும் குழந்தையினை மார்பில் சாய்த்து
'வா யெனது கனியமுதே' என்ற ணைப்பாள்!
மாணவனை ஆசிரியர் கையைக் காட்டி,
'நீ யுரை'என் றுரைத்திட்டால், கவன மின்றி
நெடுங்கனவில் ஆழ்ந்திருக்கும் பையன் சற்றும்
வாயுரைக்க முடியாமல் திணறிப் போனால்
மறுபடியும் கைகாட்டி அமரச் செய்வார்!

கைகாட்டி மீனம்பாக் கத்தில் நிற்கும்
காதலிகள் ககனத்தில் விமானம் பாய,
மைகாட்டும் விழிகளிலே முத்தைக் காட்டி
வதனத்தில் அதை நீராய் உதிர்த்துக் காட்டி
கைகாட்ட முடியாமல் விமானத் துள்ளே
காதலர்கள் குமுறுவதை நினைத்துக் கண்ணீர்
மெய்க்காட்டு மேல்லாடை நனையும் வண்ணம்
விளையாடக் கைகாட்டி யாக நிற்பார்!

வீதியிலே கதவோர மாக நின்று
விரும்பியதன் காதலனை 'வருக'வென்று
காதளவாய் ஓடுகிற கடைக்கண் வீசிக்
கைகாட்டி அழைத்து விட்டுப் பின்னர் நாணும்
கோதையவள் ஓர் காட்சி! பள்ளி செல்லும்
குழந்தையினைக் கைகாட்டி அனுப்பி விட்டுப்
பாதிவழி தனில்திரும்பிப் பார்க்க மீண்டும்
பாவை, கை காட்டுவது வேறோர் காட்சி!

புத்தகங்களை மற்றவர் பெற்றுக் கற்பதற்காக அமைக்கப்பட்டதே நூலகம். முதன்முதலில் நூலகம் என்பது நூல்களை மறைத்து வைக்கும் இடமாக இருந்தது என்கிறார்கள். நூல்களை மறைத்து வைக்கும் இடம், பின்னர் நூல்களைச் சேர்த்து வைக்கும் இடமாக மாறியது. அது படி எடுக்கும் இடமாகத் திகழ்ந்தது. பின்பு, படிப்பவர் கேட்டால், நூலைக் கொடுத்துப் பெறும் இடம் என்னும் நிலை பெற்றது.

இன்று நூலகம், கல்விப்பணி - அறிவுப் பணி புரியும் நிலையமாக உயர்ந்துவிட்டது.

உலகிலேயே மிகச்சிறந்த, நூலகவியல் அறிஞர் என்று போற்றப்படுபவர், நம் தமிழ் நாட்டைச்சேர்ந்த டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் - ஆவர். அவர் நூலகத்தின் இலட்சியத்தை ஐந்து கட்டளைகளுக்குள் அடக்கினார்:-

1. நூல்கள் படிப்பதற்கே
2. ஆளுக்கு ஒரு நூல்
3. நூலுக்கு ஒரு ஆள்
4. காலம் கருதுக
5. நூலகம் ஓர் வளரும் நிறுவனம்.

இக்கட்டளைக்ளின்படி நூலகங்கள் இயங்கிவருகின்றன.

இன்று மாணவர்கள், தேர்வில் வெற்றி பெற்றால் போதும் என்ற மனநிலையோடு படிக்கின்றனர். அதனால் நூலறிவு குறைகிறது. சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழக்கின்றனர்.

எனவே மாணவர்கள் தங்கள் பாடத்திட்டத்திற்கு வேண்டிய நூல்களைப் படிப்பதோடு, பொது அறிவு, ஆன்றோர் பலரின் வரலாறு, அவர்தம் கூறும் அறிவுரைகள் கொண்ட நூல்களையும் படிக்க வேண்டும்.

உயர்ந்த நட்பு பழகப்பழக இன்பம் தரும். நட்பினைப் போலவே நூலின் நற்பொருள் கற்க, கற்க இன்பம் தரும்.

"நவில்தோறும் நூல் நயம் போலும் பயில் தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

-என்றார் திருவள்ளுவர்

எனவே அனைவரும் நூல்களைப் படிக்க வேண்டும்; நூலகங்களை வளர்க்க வேண்டும்! நாடெங்கும் நூலகங்கள் பல தோன்ற வேண்டும்!

★

கவியரசர் பாரதியாரின் மனித நேயம்

புலவர் த. இராமலிங்கம்



மனித நேயம் என்ற பொருள் நிறைந்த சொல்லை இன்று உலக நலனில் ஈடுபாடு கொண்ட உலகத் தலைவர்களும் அருளாளர்களும் மக்கள் மத்தியில் எடுத்துக் கூறிவருகின்றனர். உலகில் வாழ்கின்ற மனிதர்களிடத்தில் நாம் காட்டுகின்ற இன்ப அன்பே மனித நேயமாகும். மனித குலம் தழைத்து வளர்வதற்கு ஒற்றுமையுடன் வாழ்வதற்கு மனித நேயம் அடித்தளமாக உள்ளது. தமிழ்க்கவிதை வானில் முழு நிலவாய்த் திகழ்ந்த பைந்தமிக் கவிஞர் பாரதியார் மக்களிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் கொண்டிருந்த மனித நேயத்தைப்பற்றிக் காண்போம்.

'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா! காடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ'' என்று போற்றிப் புகழ் படுகின்ற பாரதியாரின் உள்ளம் அன்புள்ளம். தாயுள்ளம் இந்திய நாட்டு மக்கள் ஆங்கிலேலயர் ஆட்சியில் அடிமைப்பட்டு அல்லலுறுவதைக் கண்டு நெஞ்சம் குமுறினார். நாட்டு மக்களிடத்தில் சுதந்தர உணர்வை ஊட்ட உணர்ச்சி பொங்கும் பாடல்களைப் பாடினார்.

'பூமியில் எவர்க்கும் பாடல்களைப் பாடினார்' என்றும்
'சொந்த நாட்டில் பரர்க்கு அடிமை செய்யாதே'

என்றும் முழங்கினார்.

''பாரதநாடு பழம்பெரும் நாடு நீரதன் புதல்வர்
இந்நினைவு அகற்றாதீர்''

என்று பாடி மக்களிடத்தில் நாட்டு பற்றை உண்டாக்கினார்.

மக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி இருக்க இடமின்றி வறுமையில் வாடுவதைக் கண்டு உள்ளம் உருகினார்.

''சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும்
சோற்றுக்கோ வந்தது பஞ்சம்

என்று தன் மனத்துயரை வெளிப்படுத்தினார். வறுமையின் கொடுமையைக் கூறவந்த வள்ளுவர்.

'நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதென்றும் கண்பாடு அரிது'

என்கிறார். சமுதாயத்தில் வாழும் தனிஒரு மனிதனுக்கு உணவு கிடைக்க வில்லை என்றால் இந்த உலகத்தையே அழித்து விடுவோம் என்று வீறு கொண்டு பாடுகின்றார் பாரதியார்.

''தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
சகத்தினை அழித்திடுவோம்''

என்பது அவர் வாக்கு. பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பதை நன்கறிந்த பாரதியார்.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்.

என்கிறார். என்னே பாரதியாரின் மனிதநேயம்!

பாரதியார் தன்னுடைய காலத்தில் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் சிறைச் சாலையில் வாடுவதையும் வீரசிதம்பரரனார் சிறையில் செக்கிழுத்துத் துன்புறுவதையும் அறிந்து நெஞ்சம் நெகிழ்ந்து போகிறார்.

'மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுயுங்
காண்கிலையோர்

என்று நைந்து உருகிறார்.

சமுதாயத்தில் ஏழை எளியவர்கள் துன்பப் படுகின்ற பொழுது அவர்களைப் பார்க்கின்றவர்களின் நெஞ்சங்கள் உருக வேண்டும். இரக்கம் காட்டவேண்டும். துன்பத்தைப் போக்க உதவி செய்ய முன்வர வேண்டும் என்று பாரதியாரின் அன்புள்ளம் எண்ணியது.

மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி உண்டோ - புலனில்
வாழ்க்கை இனி உண்டோ

என்று பாடித் துடித்துப் போகிறார்.

பிற உயிர்கள் படுகின்ற துன்பத்தைத் தனுக்கு வந்த துன்பமாகக் கருதாவிட்டால் அறிவு பெற்று என்ன பயன் என்று கேட்கிறார் வள்ளுவர்.

'அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தண்ணோய் போல் போற்றாக் கடை!

அருளாளரான தாயுமானார்

'எவ்வுயிரும் தம்உயிர்போல எண்ணி இரங்க
உன் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே''

என்று இறைவனிடம் வேண்டுகின்றார்.

மனிதநேயம் கொண்ட பாரதியார் உலகத்து உயிர்களை உள்ளன்போடு நேசிக்கிறார்.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேண்டும்.

என்று பாடி மக்களிடத்தில் அன்பு உணர்வை ஊட்டுகிறார்.

அன்புள்ளம் வாய்ந்த பாரதியார் நம்மைச் சார்ந்து நம்முடன் வாழ்கின்ற விலங்குகளிடத்த திலும் நாம் அளவு காட்ட வேண்டும் என்று விழைகின்றார். தம்முடைய விழைவை பாப்பா வுக்குச் சொல்வதுபோலச் சமுதாயத்திலுள்ள மக்களுக்குச் சொல்லுகிறார்.

''பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்த
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா
வண்டி இழுக்கும் நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை, ஆடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா''

பறவைகளை எங்கள் சாதி என்றும் காடுகளையும் மலைகளையும் எங்கள் கூட்டம் என்று சாதி என்றும் மனித இனத்தோடு இணைத் தோடு இணைத்துப் பேசுகின்ற பாரதியாரின் உள்ளம் அன்பில் இமயமாய் உயிர்ந்து நிற்கின்றது.

'காக்கை குருவி எங்கள் சாதி
காடும் மலையும் எங்கள் கூட்டம்!

என்பது அவரது கவிதை வரிகள்.

பாரதியாரின் மனித நேயம் பொதிந்த பாடல்கள் மக்கள் உள்ளங்களில் பதியுமானால் விலங்குகளையும் பறவைகளையும் வெட்டை யாடிக் கொல்லமாட்டார்கள். எப்படியாவது பணம் சேர்க்க வேண்டுமென்ற பேராசைகொண்ட வன்கணாளர்கள் தந்தத்திற்காக யானைகளையும் தோலுக்காகப் புலிகளையும் கொன்று குவிக் கின்றனர். இறந்த உயிர்களை மீண்டும் எழுப்ப முடியுமா?

'வாழும் உயிரினை வாங்கிவிடல் இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்
வீழும் உடலை எழுப்புதோ எழுப்புதலோ
ஒருவேந்தன் நினைச்சினும் ஆகாதையார

என்பார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

சாதியும் சமயமும் மக்களிடத்தில் வேற் றுமை வளர்த்து ஒற்றுமையைக் குலைப்பதைக் கண்டு பாரதியார் வேதனைப் படுகிறார். சமுதாயத்தில் புளரயோடிக் கிடக்கும் சாதிவேறு பாட்டை அடியோடு அகழ்ந்து எறிய வேண்டு மென்று கூறுகிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

என்று சாதியின் பெயரால் சண்டை இடுகின்ற வர்களை இடித்துரைக்கின்றார்.

சமயம் மக்களுடைய மனத்தைப் பண் படுத்த வேண்டும். மனித நேயத்தை வளர்க்க வேண்டும். பரம் பொருள் ஒன்று என்ற உணர்வை உருவாக்க வேண்டும் என்கிறார் பாரதியார்.

''ஒன்று பரம் பொருள் நாம் அதன் மக்கள்
உலகம் இன்பக் கேணி''

என்பது அவர்வாக்கு.

அயோத்தியில் இராமர் கோயில்கட்ட சிலர் முயற்சி செய்ததால் அண்மையில் குஜராத்தில் எத்தனை விலைமதிக்க முடியாக உயிர்கள் பலியாயின. அதை நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது.

பகைவனித்திலும் கருணை காட்ட வேண்டுமென்று பாரதியாரின் மனித நேயம் விரிந்து செல்கிறது.

பகைவனுக்கு அருளாய் - நன்னெஞ்சே
பகைவனுக்கு அருளாய்

என்று வேண்டுகிறார்.

இன்று சமுதாயத்தில் மனித நேயம் குறைந்து வருவதால் கொலையும் கொள்ளை யும் மலிந்து வருகின்றன. வீட்டில் மனிதநேயம் மறைந்து வருவதால் முதியோர் இல்லம் பெருகி வருகிறது. உலக நாடுகளிடையே போர் வெறி தாண்டவமாடுகிறது.

தாயுமானாரும், வள்ளலாரும், அண்ணல் காந்தி அழகனும், அன்னை தெரசாவும் மனித நேயத்தை மக்களுக்குப் போதித்தனர். உலக மக்களிடத்தில் மனித நேயம் வளர்ந்தால் போரும், பூசலும், கொலையும், கொள்ளையும் ஒழியும். உலகில் அமைதி தவழும் எங்கும் மகிழ்ச்சி நிலவும்.

பாரதியார் மனித சமுதாயத்திற்கு ஓர் வேண்டும் கோள் விடுக்கிறார்.

''உங்களுக்குத் தொழில் இங்கே
அன்பு செய்தல் கண்டீர்''

என்பது தான் அந்த வேண்டுகோள்.

பாரதியாரின் மனித நேயத்தைப் பின்பற்றுவோம்
மகிழ்ச்சி நிறைந்த வாழ்வில் திளைப்போம்.

★

கவிதைப் பூங்கா

ஆயை. மு.காசாமைதீன்



கோடையும் குளிரம்
கொட்டும் மழையும்
வாடையும் வசந்தமும்
ஓடைநீர் போல
ஓடிய போதும்;-
கடந்து நின்றது
ஞாலம் மீதில்
திருக்குறள் ஒன்றுதான்!

சேரனும் சோழனும்
பாண்டிய மன்னனும்
தனித்தனி இருந்து
சிறப்புற் றோங்கிய
சங்ககாலம்
சரிந்த பின்னரும்;
களப்பிரர் என்னும்
கலப்பின அரசரின்
இருண்ட ஆட்சியில்
இருந்த போதும்;
பல்லவர் ஆட்சிப்
பரப்பில் தமிழகம்
எல்லா நலனும்
எய்திய போதும்;
ஆட்சி முறைகளால்
அழிக்கப் படாமல்
மாட்சிமை பெற்றது
திருக்குறள் ஒன்றுதான்!
சைவம் வைணவம்

சமணம் மற்றும்
பௌத்தம் போன்ற
பல்வேறு மதங்களும்
ஒன்றுடன் ஒன்று
மோதிய போதும்-
குன்றின் விளக்காய்
நின்றது குறள்தான்!

ஞாலம் துலக்கும்
ஞாயிறு போலக்
காலமும் எல்லையும்
கடந்த நின்று
மன்னுயிர்க் கெல்லாம்
மகத்துவம் அளித்து
பன்னெடுங் காலமாய்...
பயன்படு பொருளாய்

மாறா திருப்பதும்
மதிப்புப் பெற்றதும்
மறையா திருப்பதும்
மறையாய் இருப்பதும்
திருக்குறள் ஒன்றுதான்!
திருக்குறள் ஒன்றுதான்!!

இப்படி...
உலகில் உள்ள
மக்கள் யாவரும்
ஒருமனப் பட்டு
ஒத்துக் கொள்ளும்
ஒரு நூல் உண்டெனில்...
அதுதான் - ‘திருக்குறள்’
குறளின் பெருமையைப் போற்றிப்
போற்றி
பள்ளி மாணவன் பாடும் பாட்டை
இப்போது கேட்பீர்....
வாழும்வழி காட்டுகின்ற
வள்ளுவத்தைப் போற்று - நீ
வள்ளுவத்தைப் போற்று
பாழும்நிலை மாற்றுகின்ற
பைந்தமிழர்பாட்டு! - அது
பைந்தமிழர் பாட்டு!
நாளும் அதைப் பாடிநிதம்
வாழ்வில் ஒளிகூட்டு - உன்
வாழ்வில் ஒளி கூட்டு!
வீழமும் நிலை மாற்றி நீயும்
வெற்றிக்கொடி நாட்டு!
காலங்களுக் கேற்றபடி
கருத்துரைக்கும் ஊற்று! - நல்ல
கருத்துரைக்கும் ஊற்று!

ஞாலத்தையே வாழவைக்கும்
நம்மூச்சுக் காற்று! - அது
நம் மூச்சுக் காற்று!!
இப்படி...
பள்ளி மாணவன்
பாடப் பொருளாய்
படித்த பாட்டை
இப்போது கேட்டோம்!
‘பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்’...
என்னும் குறள் நெறி போற்றாக்
குருட்டு மதியினர்

சாதியின் பேரால்
சண்டைகள் இட்டு,
மோது அழிந்து
மோசம் போகின்றனர்!
அதனைக் கண்டு
வேதனை கொண்டு
பாடிச் சென்றான்
ஒரு...
பகுத்தறிவு வாதி!
அந்தப் பாட்டை
நீங்களும் கேளுங்கள்!
சாதி சாதி சாதியின்னு அலையறான்
- மனுசன்
சாதியென்னும் சகதிக்குள்ளே
சிக்குறான்!
வீதி தோறும் சங்கம் வச்சுப்
பேசுறான் - மனுசன்
வீராப்பாக அடுச்சுக்கிட்டுச்
சாகிறான்!
பிஞ்சு மனசு நெஞ்சில் நஞ்சு
கலக்குறான் - பின்னர்
சாதி பேரைச் சொல்லிச் சொல்லி
விலக்குறான்!
கொஞ்சி மிகழும் காதலரைப்
பிரிக்கிறான் - சாதி
கொடுமைத் தீயில் அவர்க ளையும்
எரிக்கிறான்!
சாதி சொல்லித் தொழிலைக் கூடப்
பிரிக்கிறான் - மனுசன்
தொழிலுக் குள்ளே இழிவைச்
சொல்லிச் சிரிக்கிறான்!
மோத விட்டு ரத்தம் குடிக்க
அலையறான்! - மனுசன்
மோசமான பாதையிலே திரியறான்!
பகுதிதறிவு வாதியின்
பாட்டுக்குப் பின்னர்
தாயொருத்தியின்
தாலாட்டுப் பாட்டை
இப்போது கேளுங்கள்!
வாழுகிற வள்ளுவத்தை
அப்போது காண்பீர்கள்!!

★

வா.மு.சே. பயணம் வரலாறு ஆகட்டும்!

கப்பல் கவிஞர் கி. கிருட்டிணமூர்த்தி



சிலம்பே! செந்தமிழே!
கற்பே! கண்ணகியே!
காப்பியமே கனல் நெருப்பே!
வணிகர் குல வான்மதியே!
வரலாற்றுப் பெட்டகமே!
கடற்கரையில்–கையுயர்த்தி நின்றவளே!

நீ உப்புக் காற்றால்
உதிர்ந்து தான் போகவில்லை!
கடல் அலைகள்
உன்னை கரைத்துக் குடிக்கவில்லை!

நெருப்பி நீ– நின்றாய்!
ஆணவமாய் அல்ல – அழியாத
இலக்கியத்தின் அடையாளமாய் நின்றாய்!

இருட்டில் –
தெரியாமல் எடுத்தால் –
அதை திருட்டு என்று தானே –
தெரிவிப்பார்!
இன்று வரை –
அறியாமல் – செய்தோம் – என்று
அறிக்கை இல்லை !

அலைகடல் – அத்துணையும்
எங்கே கண்ணகி – எங்கே கண்ணகி –
என்று எழுந்தே கேட்கின்றன!

ஆனால் இந்த
மனித சமுதாயத்தின் –
பெரும்பகுதி மௌனமாய் – நிற்கின்றன!

கடற்கரை மணலில்
இருந்து – எடுத்தவர்களே...
உலகின்
மனத்தின் இருந்து எடுப்பீரோ? கேட்கிறேன்!

கண்ணகி –
உங்கள் வளர்ப்பு அல்ல...
விரட்டுவதற்கு!
இலக்கியத்தின் –
இணையற்ற வார்ப்பு அது!

கண்ணகி –
தன் இடத்தை விட்டு –
நகராத வரை–
பாண்டிய மன்னனுக்கு –
பாதிப்பு இல்லை!

சமாதிகள் எல்லாம் –
சகுனங்கள் என்று – எவரும் –
இன்னும் சொல்ல வில்லை – போலும்...

இல்லை என்றால் –
கடற்கரை – தலைவர்களின்
கல்லறைகளைப் பெயர்த்திருப்பார்கள்!

கண்ணகி
குற்றம் என்ன செய்தாள்?
கூறுவீர்!
அரசு நிலம் கேட்டவளா?
அதிக தொகுதி கேட்டவளா? இல்லை
ஆண்டிப்பட்டியில் தான் –
வந்து நின்றவளா?
ஏன் எடுத்தீர்கள்? நாடு கேட்கிறது...

நிமிர்ந்தே
நீதி கேட்டவளை –
நிறுத்தியவர் பேறிஞர் அண்ணா!
அண்ணாவின் –
வார்த்தையை – கண்மணிகளை விட –
கண்ணகி தானே –
கடைசி வரை காத்தவள்!
நிலம் அளந்தவளை அண்ணா நில்லென்று
சொன்ன தால் –
இது வரை நின்றாள் – இன்றும் –
நின்றிருப்பாள்!

ஆனால் – அவளால் –
ஆபத்தாம் – அகற்றி விட்டார்கள்!
கண்ணகியின் –
சிலம்பைத் தொட்டவர்கள் –
செத்தே போனார்கள் –
இது – காப்பியம் காட்டும் –
கசப்பான உண்மை –

ஆருட – நம்பிக்கையாளர்களுக்கு –
அழுத்தமாகவே
அறிவிக்கிறேன்...
சிலம்பைத் தொட்டவர்கள் –
செத்தே போனார்கள்!

அகிலத்தின் – ஒவ்வொரு–
ஆணும் – கண்ணகி
சிலைக்காக –
கம்பீரக்குரல் கொடுக்க –
வேண்டியது – கட்டாயக் கடமை!

அன்று ஒரு ஆண் மீது –
அரசவை சுமத்திய –
திருட்டுப்பட்டத்தை – தன் – திறத்தால் –
திரும்பப் பெற வைத்தவள் தான் –
தெய்வக் கண்ணகி!

அவள் பெண் குலத்தின் –
பெருமை மட்டுமல்ல!
பண்பாட்டின் அடையாளம் –
கணவனுக்காக –
மட்டுமல்லாது –
ஆண் வர்க்கத்திற்கே –
கேடயமாக நின்றவள்.

நடந்த கொடுமைக்கு –
கடல் – காற்று – மணல்வாரி
சபிக்கு முன் –
கண்ணகி சிலை மீண்டும் – கடற்கரையில்..
காட்சி அளிக்கட்டும்!

இலக்கிய அடையாளங்களை –
இல்லாமல் –
செய்வதில்
எவர் முனைந்தாலும் –
தமிழ்க்கூட்டம் –
தடுத்தே தீரும் –

கண்ணகிச்சுடர் தொடரட்டும்..
வா.மு.சே. பயணம் வரலாறு ஆகட்டும்..
வளர்க இலக்கிய அமைப்புகள்..
வாழ்க தமிழ்ச்சங்கம் –
வீழட்டும் வீணர்கள் – வெற்றி காணட்டும்
என்றும் இலக்கியங்கள்!



இருபத்தோராம் நூற்றாண்டில் - தமிழ் - தமிழர் நெருக்கடிகள்

முனைவர் வா.மு.சே. ஆண்டவர்

தமிழும் தமிழரும் இன்று உலகெங்கும் பரந்து உள்ளனர். திராவிட மொழிக் குடும்ப மொழிகளுள் மூத்த மொழியான தமிழ் மொழியின் தாயகம் திராவிடம் அல்லது தென்னிந்தியாவாகும். தமிழ்நாடு என்ற தாயகத்திலிருந்து பரவிய தமிழும், தமிழரும் தங்கள் மொழி, இன, பண்பாட்டு அடையாளங்களை தொலைத்து விடாமல் இருக்க போராடி வருகின்றனர்.

தமிழ்நாட்டை தவிர்த்து இந்தியாவில் அண்டை மாநிலங்களிலும் பல்வேறு காரணங்களால் தமிழர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். பல்வேறு காரணங்களால் புலம் பெயர்ந்துள்ளனர். இந்தியாவில் பேசப்படும் மொழிகளில், இந்திய அரசியல் சாசனத்தில் இடம்பெற்றுள்ள பதினாறு மொழிகளில் அயல்நாடுகளில் ஆட்சிமொழி மதிப்பைப் பெற்ற மொழி தமிழ்.

இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழும் தமிழரும் எவ்வாறு இருக்கவேண்டுமென்று நாம் திட்டமிடுவோமானால், இருபதாம் நூற்றாண்டு வரை தமிழும் தமிழரும் எவ்வாறு இருந்தனர் என்பதை நாம் காரண காரியத்தோடு விளங்கிக் கொள்ள வேண்டும் அப்பொழுதான் இருபத்தோராம் நூற்றாண்டில் வளர்ச்சிப் பாதையில் நாம் அடியெடுத்து வைக்க முடியும்.

இன்று தமிழர்கள், வணிகத்தொடர்பாகவும், குடியேற்றத் தொடர்பாகவும், பணிதொடர்பாகவும், இனச்சிக்கலாலும் புலம்பெயர்ந்தும், உலகெங்கும் 76 நாடுகளில் எட்டுகோடித் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த அடிப்படையில் தமிழ் உலகு தழுவிய மொழியாக உருப்பெற்றன. இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழும், தமிழரும் வெற்றி நடைபோட வேண்டுமென்றால் இருபதாம் நூற்றாண்டுவரை நாம் தவற விட்ட அடிப்படைப் பணிகளைச் செயலாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை

தமிழர்கள் உலக நாடுகளில் சிறப்பாக வாழ்ந்தாலும், தொன்மை, தொப்பூழ்க்கொடி, தாயுறவு கொண்ட தமிழகத்தின் தமிழ் வேர்களை நாம் பலப்படுத்தவில்லையென்றால் நாம் வளர முடியாது.

இன்று தமிழகத்தில் உள்ள நிலைமை கவலை அடைக்கக்கூடியதாக உள்ளது. தமிழ்நாட்டில் ஐந்தாம் வகுப்பு வரை தாய்த்தமிழை நம்மில் கட்டாயமாக்க முடியவில்லை. தமிழ்நாட்டு உயர்நீதிமன்றமே தமிழ் பயிற்றுமொழி ஆணைக்கு தடை விதித்துள்ளது. அதை எதிர்த்து தமிழக அரசு மேல் முறையீடு உச்சநீதிமன்றத்தில் செய்துள்ளது. அவ்வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்ட கன்னடம், கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் அவரவர் மொழியை முதன்மைப் படுத்தியுள்ளனர். நாம் இருமொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டு தமிழ் இருக்க வேண்டிய இடத்திலெல்லாம் நாம் ஆங்கிலத்தை கொண்டு வந்துவிட்டோம். ஆரிய மாயை ஒழிக்கின்றோம் என்று சொல்லியே நாம் ஆங்கில மாயையில் கலந்து விட்டோம். விடுதலைப் பெற்று கொண்டாட்டங்களில் மட்டுமே காலத்தை கழிக்கிறோம். மொழி விடுதலை பற்றிச் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டில் தமிழில் படிப்பவருக்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். 20

நூற்றாண்டுகள் முழுமையுமே நாம் மொழிக்காகவே போராடி வந்து கொண்டிருக்கிறோம். உலக வரலாற்றில் மொழிக்காக எந்த இனமும் செய்யாத தியாகத்தை நாம் செய்துள்ளோம். இன்றும் போராடிக் கொண்டிருக்கிறோம். 'தமிழ் வாழ்க' என்று சொல்லி தம் இன்னுயிரை ஈந்த தமிழ் மறவர்கள் எண்ணமும் நிறைவேற தமிழ்நாட்டில் தமிழை முதன்மை பெறச் செய்ய வேண்டும்.

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தமிழ்நாட்டில் தமிழ் முதன்மை பெற வேண்டும் என்று 1993ஆம் ஆண்டு 47 நாட்கள் நாடெங்கும் தமிழ் செழிக்க நடைப்பயணம் மேற்கொண்டார். அடையாறு நகலக உரிமையாளர் நா. அருணாச்சலம் அவர்கள் நூறு தமிழறிஞர்களை திரட்டி தமிழுக்காக உயிர்நீக்கு போராட்டம் அறிவித்தார். இந்த வாய்ப்புகளை தமிழகத்தை ஆண்ட அரசுகள் பயன்படுத்தி தமிழை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். கன்னடர்கள் இதுபோன்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தங்கள் மொழியை முதன்மைப் படுத்தி வருகின்றனர் 'பல்குழுவும் பாழ்செய்யும்' நாம் பல குழுக்களாகப் பிரிந்திருந்தால் நம் எதிரிதான் வளர்வான்.

தமிழ் வழிபாட்டு மொழியாக தமிழ்நாட்டிலே இருப்பதற்கு தமிழர்களே போராட வேண்டிய இழிநிலை ஏற்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் தமிழ் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது. 1928-ஆம் ஆண்டு இராமநாதபுர மாவட்ட நீதி மன்றத்தில் தமிழில் வழங்கிய தீர்ப்பை, சென்னையில் உயர்நீதிமன்றம் 'குப்பைக்காகிதம்' எனக்கூறி தள்ளுபடி செய்தது. தீர்ப்பில் நீதிபதி மாநில அரசு அம்மாநில மொழிகளை நீதிமன்ற மொழியாக்க சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி உரியபடி சட்டமாக ஆக்கும்வரை தமிழில் தீர்ப்பு வழங்கமுடியாது என்ற தீர்ப்பு நீதிமன்றங்களில் தமிழ் இருக்கும் நிலைமையை தெளிவாக உணர்த்தும். மக்கள் மொழியில் வாதாடுவதற்கு உரிய அடிப்படைய உரிமையே இங்கு மறுக்கப்படுகிறது. மத்திய பிரதேசத்திலும் மேற்கு வங்கத்திலும் அவரவர் தாய்மொழியே நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படுகிறது.

<u>செவ்வியல் மொழி</u>

உயர்தனிச் செம்மொழியான தமிழ் இன்றுவரை நடுவணரசால் செவ்வியல் மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம் போன்ற தொன்மையான மொழிகளில், இன்றுவாழும் மொழியாக தமிழ் மொழியும், சீனமொழியும் உள்ளன. சமசுகிருதம் வழக்கொழிந்த மொழியாக இருந்தாலும் அம்மொழிக்கு கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி அதனை செவ்வியல் மொழியாக வளர்த்தெடுக்கிறது. எல்லா வளங்களும் ஒருங்கே பெற்றிருக்கும் தமிழ்மொழிக்கு, தமிழ்மக்களின் வரிப்பணத்தை உறிஞ்சிக் கொண்டு மாற்றாந்தாய் மனப்பான்மையிலேயே நடுவணரசு செயல்பட்டு வருகிறது. இந்நிலையால் இந்தியப் பல்கலைக்கழகங்களிலும், உலகப் பல்கலைக்கழகங்களிலும், தமிழ் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. 1964-இல் தனிநாயக அடிகளாரால் உருவாக்கப்பட்ட அயல் நாடுகளில் தமிழ் வளர்ச்சி. தமிழின் தொன்மையை இராபர்ட் கால்டுவெல் அவர்கள் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (The Comparative Grammer of Dravadiar)" என 1876-இல் வெளியிட்டு தமிழின் பெருமையை நிறுவனார். எம்.பி. பர்ரோ அவர்கள் திராவிட மொழிகளின் வேர்சொல் அகராதி (D.E.D.) டாக்டர். அகத்தியலிங்கம் அவர்கள் திராவிட மொழிகள் தொகுதிகள் பத்து வெளியிட்டார். டாக்டர் செ.வை.சண்முகம், அண்மையில் வெளிவந்த டாக்டர் பொன் கோதண்டராமன் தமிழ்க்கல்வி (Tamil Studies) போன்ற அரிய ஆய்வு முயற்சிகளால் தமிழின் மேன்மை நிறுவப்பட்டும் கூட நடுவணரசும், மாநில அரசும் தமிழை ஆட்சியில் உரிய முறையில் நடைமுறைப்படுத்தாமையின் விளைவால் இருபத்தோராம் நூற்றாண்டிற்கு தமிழ் வளர்ச்சிக்கு தடைக்கற்களாக உள்ளன. தமிழ் கேளிக்கை, திரைக்கூத்துகளுக்கு உரிய மொழியாக மாற்றப்பட்டு தமிழுக்கான

எதிர்நாள் எந்தமிழர் தமிழ்க்கு!

டாக்டர் தமிழ்நாகை

உதிர்நாள் என்றொன்று இல்லை உயிர்த்தமிழே!
உயர்நாள் ஒன்றுண்டு உலகினிலே – தமிழர்
பகைச்சாதி மதவெறியும் பாழாம்உட் பகைநீங்க
எதிர்நாள் எந்தமிழர் தமிழ்க்கு!

போலித் தலைகள்போம் பொய்மைபோம் பயிர்மேயும்
வேலித் தமிழர்போம் வெறுங்குப்பி – இனிநீக்கப்
பாவத் திரைமயக்கம் பசப்பரசி யல்லழிப்பின்
எதிர்நாள் எந்தமிழர் தமிழ்க்கு!

உலகப் பெருநிலத்து உதிக்கும் தமிழ்மண்
கலகம் நீங்கிவளம் துளிர்க்கும் – தலைவன்துயர்
விலக்கித் தமிழாட்சி விளைப்பான் வடகிழக்கின்
எதிர்நாள் எந்தமிழர் தமிழ்க்கு!

கணினித் தமிழன்பார் காட்டாற்று வெள்ளம்
இனிஎண் திசைபோதா இணையம் – நான்காம்
தமிழ்ச்சங்கம் நடக்குதுபார் நாட்டிலினி உலகின்
எதிர்நாள் எந்தமிழர் தமிழ்க்கு!

பொறியும் அறிவியலும் சட்டமருத் துவமும்
நிறையுந் தமிழாலே மறையும் – ஆங்கிலமும்
கரையத் தமிழ்க்கல்வி கட்டாய மாக்கிடவே
எதிர்நாள் எந்தமிழர் தமிழ்க்கு!

புலமை போதும்புற் றீசல்நூற் போதும்
இளமைத் தமிழாஎம்மா ணவர்கள் – பழமைத்
தலைமை கள்போதும் புதுக்குருதி பாயட்டும்
எதிர்நாள் இளந்தமிழர் தமிழ்க்கு!

தமிழால் வளங்கண்டோர் தரையிரங்கி வருக!
தாயைத் தாங்கிடலே தருமம் – துரைகள்
தமிழுக்குத் தொண்டாற்றக் களங்கள் தொடங்கின்
எதிர்நாள் எந்தமிழர் தமிழ்க்கு!

அறுபத்தி யாறினிலும் அயர்ச்சி யறியாய் நீ!
பருவத்தில் தொண்டில் பதினாறு – பன்னாட்டுத்
தமிழுறவுப் பார்புகழும் கவிக்கோ பெருங்கவியால்
எதிர்நாள் எந்தமிழர் தமிழுக்கு!

உரிமைகள் புறந்தள்ளப்படுகின்றன.

திருக்குறளின் பெருமையை உலகுக்குப் பரப்பிய ஆல்பர்ட் சுபைசர் முருகன் பற்றி பல அரிய ஆய்வுகளை நிகழ்த்திய கமில்சுவல்பில், மூன்றாவது உலகத்தமிழ் மாநாட்டை நடத்திய பிரெஞ்சு அறிஞர் ஃபிலியாசோ, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார், இலண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் மார், சோழர்களைப் பற்றி ஆய்வு செய்த டாக்டர் நெபுரு கரோஷிமா, தமிழ்-ஜப்பான் உறவுகளை உலகுக்கு உரைத்து வரும் சுசுமு ஒனோ, பன்மொழி அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், டாக்டர். சி. இலக்குவனார், சிந்தனைச்செம்மல் டாக்டர் ந. சஞ்சீவி, பேறிஞர் வ.சுப. மாணிக்கம், பேறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி போன்ற உலகத் தமிழறிஞர்கள் எல்லாம் தமிழின் செவ்வியல் சிறப்பை நிறுவியும் கூட, தாய்த்தமிழர்களிடையே உள்ள அறியாமையாலும், ஆட்சி அதிகாரங்களாலும் தமிழுக்கு உரிய சிறப்பு இன்றுவரை எட்டாக் கனியாகவே உள்ளது.

தமிழில் இணைய வளர்ச்சி உலகளாவிய நிலையில் நன்கு வளர்ந்து வருகிறது. இதுவரை நடைபெற்ற தமிழ் இணைய மாநாடுகளும் தமிழ் இளைஞர்களிடையே ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளன. உலகளாவிய நிலையில் பல இளந்தமிழர்கள் தங்கள் சொந்தப் பணிகளுக்கு இடையிலேயும் தங்கள் தமிழ்பபணியினை ஆற்றி வருகின்றனர்.

கணினி இருபத்தோராம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள இத்தனை தடைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் தீர்வு கண்டால் இருபத்தோராம் நூற்றாண்டில் தங்கு தடையின்றி நடைபோடும்.

★

வள்ளுவத்தில் பெண்ணியம்

திருமதி. வாசுகி கண்ணப்பன்

திருக்குறள் ஒரு பொதுவான நூல். வாழ்வியல் நூல். இது எல்லோராலும், எல்லா நாட்டினராலும், எல்லா மதத்தவராலும், எல்லா இனத்தவராலும், எல்லா மொழியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நூல்.

பெண்மக்கள் பெரிதும் பின்தங்கி இருந்த காலத்தில் பெண்ணியத்தைப் பெரிதும் போற்றி, பாராட்டி, மதித்தவர் திருவள்ளுவர். அறியாமை சூழ்ந்த, சூழ்நிலையில் வாழ்ந்த காலத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன் தென்னிந்திய வரலாற்றில் புரட்சிக்கனலாகத் தோன்றிய ஞானக் கொத்தாக விளங்குவது திருக்குறளாகும். இந்த ஞானக் கொத்தில் உள்ள கருத்துகள் பெண்கள் மனத்தில் வித்தாகி சிறிது சிறிதாக வளர்ந்து வருகின்றது.

பெண்ணே வாழ்க்கைத் துணை நலம் :-

இவ்வரிய தலைப்பு ஒன்றே போதும் வள்ளுவர் போற்றும் பெண்ணியத்திற்கு. இதுவரை, எவரும், எக்காலத்திலும் தந்திராத உன்னதமான தலைப்பு. மனைவியை வாழ்க்கைத்துணை என்று வள்ளுவர் தான் முதன் முதலாகக் காட்டுகின்றார் என்று உணர்ந்த குடும்பத்திற்கு, கூட்டாக முன்னேற வேண்டிய அமைப்பிற்கே துணை என்கின்றார். ஆக, ஒரு குடும்ப முன்னேற்றத்திற்கு மூல காரணம் பெண் என்கின்ற போது, பெற்றோரை, பெரியோரை, உற்றாரை உறவினரைப் பேணுதலிலும், கொண்ட கணவனைப் பேணுதலிலும், பெற்ற பிள்ளைகளைப் பேணுதலிலும், பெண்ணே அச்சாணியாக விளங்குகின்றாள் என்பதை உணரலாம். பேணும் தன்மையை இயற்கையாகப் பெற்றிருப்பதால்தான் பெண் என்றும், மங்கலப் பொறுப்புகளைப் பொறுப்பாக செய்வதால், மங்கை என்றும், மனையைத் திறமையாக ஆள்பவள் என்பதால் மனையாள் என்றும், இல்லத்தை இலகுவாக ஆள்வதால் இல்லாள் என்றும் அழைக்கப்படுகின்றாள், என்ற உண்மை விளக்கத்தின் மூலம் பெண்மையின் உண்மையை உணரலாம்.

பெண்களின் காக்கும் திறம் :

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

இக்குறளிலிருந்து பெண்மையின் காக்கும் திறமை தெள்ளெனத் தெரிகின்றது. பொதுவாக பெண் என்றால், பிறக்கும் போது தந்தையின் பாதுகாப்பிலும் திருமணத்திற்குப்பின், கணவனின் பாதுகாப்பிலும், கணவனுக்குப்பின் மகனின் பாதுகாப்பிலும் வாழவேண்டியவள் என்ற எண்ணம் தான் எல்லோரிடமும் நிலவியுள்ளது. அதைத்தகர்த்து, பெண்ணியத்திற்கு பிறருடைய பாதுகாப்பு தேவையில்லை. அவள் தன்னைத்தானே காத்துக் கொள்ள முடியும் என்பதுடன், கணவனையும் காப்பவள் என்றும், சமுதாயக் கடமைகளை ஆற்றுவதில் சிறந்தவள் என்றும், பெருமை தரக்கூடிய புகழ்ச் சொற்களையும் காக்கும் வகையில் வாழும் திறமையுடையவள் என்கின்றார். மேலும், இத்தகைய கடமைகளினால் சோர்வும் அடையாது வாழ்பவள் பெண் என்று பெண்ணியத்தின் மேன்மையை மெய்ப்பிக்கின்றார்.

"பேணி" என்பது நயமும் பொருளும், நிறைந்த சொல்லாகும். பேணுதலின் சிறந்தவளே பெண்தான். பிறந்த வீட்டின் புகழ், புகுந்த வீட்டின் புகழ், கணவன் புகழ், தன்புகழ், தான் பெற்ற மக்களின் புகழ் என்ற அனைத்துப் புகழுக்கும் பழி நேராமல் காத்து, அதன் பொருட்டு எத்தனை சோதனைகள் தாக்கினாலும், வார்த்தைகளை விடாது நாகாத்து பொறுமை காத்து மேன்மேலும் புகழ் வளரச் செய்பவள் பெண் என்கின்றார் தேவர்.

மனைவியின் மாண்பு :-

இத்தகைய உயர்ந்த மனைவி ஒருவனுக்குக் கிடைக்கும் பொழுது வேறு சொத்தே அவனுக்குத் தேவையில்லை. மேலும், அவனுக்கு வாழ்க்கையில் இல்லை என்ற சொல்லுக்கு இடமே இல்லை என்கின்றார் இதனை நாயனார்

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"**

என்று கணவனின் இன்பம், துன்பம், புகழ், இகழ் ஆகிய பெருமைகளும் மனைவியால் தான் கிடைக்கின்றன.

ஆகையால் பெண்ணானவள் திருவிளக்குப் போன்றவள், அவள் ஒளிபட வாழ்ந்தால், திகழ்ந்தால்தான் குடும்பமே ஒளி பெற்று பிரகாசமாக வாழ முடியும். ஒளிமயமான வாழ்க்கைக்கு அவள் பயன்படுத்தும் பலமான ஆயுதம் எது என்றால் அன்பு என்கின்ற அறம்தான்.

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு" (80)**

உயிர் என்றால் அன்பு இருக்க வேண்டும் என்ற ஒன்று போதும்.

**"முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி
அகத்தானாம்
இன்சொல் இனிதே அறம்"**

அன்பும் அறனும் இல் வாழ்க்கைக்கு வலிமை மிகுந்த பாலமாகும், பலமுமாகும்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"**

என்ற முப்பால்நூல் மூதுரைக் கிணங்க, பெண்ணியம் இத்தகைய அன்பும், அறனும் நிறைந்தவளாக இருப்பதால்தான், அதனுடைய பண்பும், பயனுமாக மக்களிடத்தும், கணவரிடத்தும் அன்பு செலுத்தி தானும் வாழ்ந்து, குடும்பத்தையும் வாழவைக்க முடிகின்றது. தாங்கொணா இன்னல்களையும் தாங்கி, துன்பங்களையும்இன்பமாக்கி இல்லறத்தை நல்லறமாக்குகின்றாள்.

அறம் செய்வதற்காக, சம்பாதித்த பொருளைப் பாதுகாத்து, வரவுக்கேற்ற வகையில் சிக்கனமாய் செலவு செய்து அதன் மூலம் சேமித்த பொருளை அறம் செய்ய மனைவியே பெரிதும் துணை புரிகின்றாள்.

<u>பெண்ணியம் காக்கும் கற்பு நெறி :</u>

**"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"** என்கின்றார் நான்முகனார்.

அன்பும், அறிவும், ஆற்றலும் கொண்ட பெண் இல்லறத்தின் தூணாக இருக்கின்றாள். அவள் கொண்டுள்ள உயர்ந்த பண்பானது கற்பு.

<u>பெண்மை காட்டும் விருந்தோம்பல் :</u>

**"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல் விருந்தோம்புவான் இல்"**

என இயம்புகின்றார் மாதானுபங்கி. இல்லாள் மனமகிழ்வுடன் வந்த விருந்தினரைப் போற்றி உபசரித்தால் அந்த இல்லத்தில் திருமகள் மகிழ்ச்சியுடன் குடியிருக்கின்றாள் என்று சொல்வதிலிருந்தே, விருந்தோம்பலைப் போற்றும் பெண்களே திருமகளாகத் திகழ்கின்றார்கள். அதனால், அந்த இல்லத்தில் திருமகள் நிச்சயமாகக் குடியிருப்பாள் என்றும் உறுதியிட்டுக்கூறுகின்றார்.

மேலும்,

**"இனைத் துணைத் தென்பதொன் றில்லை
விருந்தின்
துணைத் துணை வேள்விப்பயன்" (87)**

என்ற குறள் மூலம் இத்தகைய விருந்தோம்பல் என்ற சமுதாய வேள்வியின் பயன், இவ்வளவு என்று விரித்துரைக்க முடியாது. வந்த விருந்தினர் பண்பிற்கேற்ப, பயனின் அளவும் அமையும் என்று கூறுவதிலிருந்து குடும்பத்தின் பயன், நலன்களெல்லாம் பெண்கள் காட்டும் உண்மையான விருந்தோம்பலால் தான் என்பதை உணரலாம்.

<u>பெண்மையின் இனியவை கூறல்</u>

**"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்"**

அவள் கடைப்பிடிக்கும் இனிய சொற்களால், வாழ்க்கையில், குடும்பத்தில் தீமையும் அழிகின்றது, நன்மையும் பெருகுகின்றது. அது மட்டுமல்ல, அவள் கூறும் இன்சொல் இம்மைக்கு மட்டுமல்லாமல் மறுமைக்கும் இன்பம் பயக்கும் என்று

**"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்"**

என்ற குறள் மூலம் உறுதி செய்கின்றார்.

பெண்மையின் பெரும் சொத்து அடக்கம்

பெண்கள் சாதிக்காத வெற்றிகள் இல்லை. இருப்பினும், அப்பெருமைகளை எல்லாம் மற்றவர்களுக்கென்று கூறி,

**"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"**

என்ற வகையில் வாழ்பவர்கள். அதனால்தான், அவர்கள் தெய்வமாக மதிக்கப்படு கின்றார்கள்.

அடக்கத்தின் பிறப்பிடம் பெண்கள். இவ்வடக்கம் நன்மை தருவதுடன், அது பெண்களுக்கு மற்றொரு செல்வமாகவும் அமைகின்றது என்று

**"எல்லோர்க்கும் நன்றாம் பணிதல் அவர் உள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து" (125)**

என்ற குறள் மூலமும் பெண்மையின் அடக்கத்தின் பெருமையை அழகாகக் கூறுகின்றார்.

பெண்மை போற்றும் ஒழுக்கம்

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" (131)**

என்ற பொதுமறையின் படி பெண்கள் ஒழுக்கத்தைப் போற்றி வாழ்வதால்தான் அவர்கள் அரவணைப்பில், அவர்கள் வழி நடத்தலில் வளரும் குழந்தைகளை அப்பண்பு நலன்களைப் பெற முடிகின்றது.

ஒரு குடும்ப ஒழுக்கத்தின் பெருமை, அக்குடும்பப் பெண்களின் ஒழுக்க அறத்தால் அமைகின்றது, மேன்மை பெருகின்றது என்பதை நன்கு உணரலாம்.

பெண்மை ஓம்பும் ஒப்புரவு :

கைம்மாறு கருதா உழைப்பே பெண்களின் உழைப்பு கொண்ட கணவனைப் பேணி, கொண்ட வீட்டு மக்களைப் பேணி, பிறந்த வீட்டுப் பெருமையை உயர்த்தி 10 மாதம் சுமந்து பிள்ளையையும் பெற்று வளர்க்கிறாள். என்ன கைம்மாறு எதிர்பார்த்துச் செய்கின்றாள்.

**"புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற" (213)**

பிறருக்காக வாழ்வதைப் பெண்களிடம் தான் காணமுடிகிறது. சங்குபோல், மெழுகுவத்தி போல், தன் உடம்பைப் பிறர் நலனுக்காக அழித்துக் கொள்பவளே பெண்.

அவள் சோர்வில்லாதவளாகவும் திகழ்கின்றவள். அவளுடைய வாழ்வில் பல சோதனைகள் நிகழக்கூடும். அச்சோதனைகளையும், வேதனைகளையும் சாதனைகளாக மாற்றக் கூடியவள். அவளுடைய வாழ்வில் பிணி, வறுமை ஆகியவை தோன்றலாம். பகைவரின் சூழ்ச்சியால் பல இன்னல்கள் நேரலாம். ஆயினும் அவள் சோர்வின்றி மன உளைவின்றி மனத்திண்மையுடன் எதிர்கொண்டு வெற்றி பெறுகின்றாள். அவளே பெண்ணாக மதிக்கப்படுவாள், துதிக்கப்படுவாள் என்று பெருநாவலர் கூறுகின்றார்.

பெண்மையின் திண்மை :-

காமத்துப் பாலில் பெண்ணின் மனத்திண்மையையும் நெகிழ்ச்சியினையும் ஒருங்கே கூறுகின்றார். இவை இரண்டும் அவளின் அன்பின் சிறப்பில் ஏற்படும் நிலை என்று காட்டுகின்றார். அறத்துப்பாலில், பெண் கொண்ட அன்புகாரணமாக அவள் மனம் கற்பு என்னும் திண்மையைப் பெறுவதாகக் கூறி எல்லையில்லா துன்பம் நேர்ந்த போதும், அன்பின் காரணமாக, அடக்கமாக வாழ்ந்து, பொறுமையுடன் ஆற்றி இருக்கும் மனத்திண்மையைக் கட்டுகிறார்.

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (151)**

என்ற குறளுக்கேற்றபடி வாழ்பவள்தான் பெண். அன்பு காரணமாக, பொறுமையைக் கடைப்பிடிக்கும் ஆற்றல் பெண்மைக்குத்தான் உண்டு. தாய்மை உணர்வினைப் பிரதிபலிப்பவள் தான் பெண். இத்தனைக் குணநலன்களையும் கடைப்பிடிக்கும் ஆற்றலில்தான் பெண்மையின் தாய்மை உணர்வின் பிரதிபலிப்பைக் காண்கிறோம்.



கண்ணதாசன் கவிவளமும் - மாதர்தம் கற்பு நலமும்

அ. கணேசன், எம்.ஏ., எம்.பில்.,

வையமீன்ற தொன்மக்களாகிய தமிழ்மக்களின் வாழ்வு முத்தமிழின் சுவையில் மூழ்கித் திளைப்பது. பாரக வாழ்வின் மக்கட்கான பண்பு நலன்கள் யாவற்றையும் தமிழ் மூன்றாலும் தகவு பெறக் கூறினர் தமிழர்!

அந்த மூன்று தமிழோடு முக்கனிகளையும் ஒப்புமை கூட்டிப் பேசிச் சுவைத்தனர்.

நாடகத்தமிழ் - வாழைக்கனி போன்று சுவைக்கச்

சிரமமின்றி மகிழ்ச்சியூட்டுவது

இசைத்தமிழ் - தீஞ்சுவை மாங்கனியைப் போல்

சுவைத்தற்குச் சற்றே முயற்சியெடுத்து

இன்புறத்தக்கது.

இயற்றமிழோ -பலாக்கனியைச் சுவைத்தற்கு

மேற்கொள்ளும் பெருமுயற்சிபோல்

நுண்மாண்நுழைபுலம் கொண்டு

எண்ணியெண்ணி இன்புறத்தக்கது.

நாடகத்தமிழ் தனியே பேசப் பெறினும் அதனுள், இயலும் - இசையும் கலந்து - விரவி-மிடைந்து காண்பார்க்கு முத்தமிழ்ச் சுவை இன்பமும் கூட்டுவது.

அந்நாடகத்தின் குழந்தைதான் - அறிவியலின் ஒப்பற்ற கண்டுபிடிப்பான திரைப்படம். 1931-இல் தமிழ்த்திரைப்படம் தவழத் தொடங்கிய நாளிலிருந்து உரையும், பாட்டும், ஆட்டமும் நம்மவரால் வளர்க்கப்பெற்றுவருதல் காண்கிறோம்.

தமிழ்த்திரையில் தொடக்க காலத்தில் பாடல்கள் எழுதிய பாபநாசம் சிவன், டி.கே.சுந்தரம் வாத்தியார் போன்றோர் அக்கால நெருக்கடியாலோ, தனித்தமிழ் போற்றவேண்டுமென்ற எண்ணமிலாமையாலோ வடமொழிச் சொற்கள் மிகுதியும் பெய்து பெய்து பாக்கள் புனைந்தனர். அதுவே திறமையென்று பெருமை பேசிக் கொண்டவர்களும் இருந்திருத்தல் கூடும்.

தஞ்சை இராமையாதாசு, உடுமலை நாராயணகவி போன்றோரும் கேலிப்பாடல்களில் வடமொழி கலந்தே ஆக வேண்டியிருந்தது. 1938-இல் இந்தி எதிர்ப்பின் வேகத்தால் வடமொழியாதிக்கம் சற்றே தடுத்து, தூய தமிழ்ச் சொல் தொடுத்தும் திரைப்படப் பாடல்கள் இசைத்தனர்.

1950களிலே திரைக்கவித்தேன் பொழியப் போந்த கவிமுகில் கண்ணதாசனோ இயக்க உணர்வின் உந்துதலாலும், மிக்குயர்ந்த இலக்கியப் பயிற்சியின் தாக்கத்தாலும், நகரத்தார்க்கே உரிய பக்தியிலக்கியத் திளைப்பாலும் "தேனாறு பாயுது காதினிலே" என்று மகிழும் வகையிலே நல்லதமிழ்ப் பாடல்கள் நாளும் தீட்டலானார்.

நற்றமிழ்ச் சொற்களையே நடைபாதையாக்கி வலம்வந்து கொண்டிருந்த வடமொழிக்கு ஓரளவு வேகத்தடை போட்டது கண்ணதாசனின் பாடல்கள் எனலாம்.

"தெற்கோதும் தேவாரம்

திருவாய் நன்மொழியான தேனிருக்கச்
செக்காடும் இரைச்சலென
வேத பாராயணமேன்.....?''

என்று சாடிப் பாடினாரே பாரதிதாசன், அதைப் பொன்போல் போற்றிய கண்ணதாசன் மானிட வாழ்வையும், ஆண்-பெண் மனஇயல்புகளையும், மழலை மொழி இனிமையையும், இயற்கை தரும் எழிலின்பப் பேற்றினையும் ஆற்றல்சால் தமிழால் சாற்றினர் எனலாம்.

மேலே சுட்டப்பெற்ற ஆண்-பெண் மன இயல்புகளில் பெண்டிரின் கற்பு நிலையும் கலக்கமுறா மனத்திட்பமும் இசைப்பாக்களில் இனிமை ததும்பப் பதித்து வைத்துள்ளார் கவிஞர்.

''கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை'' - என்றும்

''சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை'' - என்றும்

பெய்யென மழை பெய்விக்கும் மெய்க் கற்புடை மாதரைப் பொற்புறப் போற்றுதல் நம் மரபு.

மாநிலத்தில் மாதம் மும்மாரி பொழிந்திட மாதரின் திண்ணிய கற்பு நிலையும் ஒரு காரணம் என்பதை,

''மாதர் கற்பின் மாண்பினுக்கோர் மழை
நீதி வழுவா நெறியின் வேந்தர்க்கோர் மழை''

என்ற வரிகளால் சுட்டினர்.

பெண்கள் தமது, உள்ளம், உடல், உயிர் யாவும் கொண்டவர்க்கே உரியன என்ற கொள்கையில் இம்மியும் அசையாதவர்கள்.

ஒருவனின் நெஞ்சம் பல்கிளையாய்ப் பிரிந்து சென்றாலும் கவலைகொள்ளாமல் 'ஒருத்தியின் நெஞ்சம் ஒருவனுக்கே' என்று தேற்றேகாரம் போட்டு உறுதிப்படுத்துகிறது.

''ஆயிரம் பெண்மை மலரட்டுமே
ஆயிரம் கண்கள் ரசிக்கட்டுமே
ஒருத்தியின் நெஞ்சம் ஒருவனுக்கென்றே
சொல்தோழி சொல் சொல் சொல்!''

என்பன அப்பாடல் வரிகள்!

கணவன் தனக்கு மட்டுமே சொந்தம். பிற பொருள்களைப் பங்கீடு செய்வதுபோல் இல்லற உறவைப் பங்கீடு செய்ய ஒப்பமாட்டாள் பெண்! ஏன்...

தன்னையன்றிப் பிறமாதரை ஆர்வம் ததும்பக் காண்பதையோ, அவர்களிடம் அன்புகனியப் பேசுவதையோ கூட விரும்ப மாட்டாள் அவள்!

வானத்து அரம்பையோ, மேனகையோ, ஊர்வசியோ, வையத்து அழகரசிகளோ அன்னம் போலும் நடையுடைய ஆரணங்குகளோ அணிவகுத்து வந்தாலும் தனது மணாளன் அவர்களை ஏரெடுத்தும் பாரான் என்கிறாள் - அந்நாயகி!

''ஆற்றில் வந்த வெள்ளத்திலே
மிதந்து வந்த மாப்பிள்ளை - ஒரு
அன்னத்தையும் பார்ப்பதில்லை
என்னைப் பார்த்த கண்ணிலே''

('வீரக்கனல்' படத்தில் - பூ முடிப்பதும் பொட்டு வைப்பதும யாருக்காக என்ற பாடல்) என்பன பாடலடிகள்

'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தில், தன் இள மனைவியிடம் தனக்கு நடக்கப்போகும் இதய அறுவைச் சிகிச்சையில் ஒருவேளை தான் இறந்துவிட்டால், 'மறுமணம் செய்து கொள்' - என்று வேண்டுகிறான் கணவன். அப்போது அந்தக் கற்பின் கனலி,

''தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை
தெருவினிலே விழலாமா?.... தெருவினிலே
விழுந்தாலும் வேறோர் கைதொடலாமா!
ஒருகொடியில் ஒருமுறைதான் மலரும்
மலரல்லவா...
ஒருமனத்தில் ஒருமுறைதான் வளரும்

மதுரையில் நடைபெறும் 5-வது உலகத்தமிழர்களின் ஒருங்கிணைப்பு மாநாட்டிற்கு வாழ்த்துப்பனுவல்கள்

கவிஞர். மங்களம் இளம்பரிதி

ஊழிப்பெரு வெளியில் ; தமிழ் உணர்வுப் பெருங்கடலில்
வாழ்வின் தத்துவத்தை வகுத்தவர் – வாழியே
ஆழிப்பெரு நீரில் ஆடும் தீபமாகி
வீழாதிருக்க மாநாடு வெல்க!

சாகாத பாட்டெனில் சங்கத்தமிழ் பாடுக!
ஆகாய சோதியாய் ஆளும் – வாகாய்
எழுதவே வண்ணத்தமிழ் மானவாழ்வு
விழுதென் தமிழென்றே விளி!

கனவாய்த் தமிழையே எண்ணாது எண்ணி
கனமாய் இலக்கணம் களினுறவே பின்னி
உரமாய் உயிருரவே உள்ளத்தால் வைத்த
திறமான குறளைத்தொழு ; தொடங்கு!

தமிழே நமை ; விரும்ப தமிழரும் விரும்ப
தமிழர் மாநாடு கண்டார் – சிமிழில்
ஒளிதரும் சீதள நிலவே! குணதிசை
அலையெழும் கதிராய் எழு!

வாழ நினைத்து வாழும் அறிஞர்
ஏழை மக்கள் ஏற்றம்பெற – விழைவாய்
எழுவாய் நிலவாய் ; எழுகதிர் உறவாய்
பொழிவாய் பொதுமைப் பொருள்!

உற்ற பெயரில் உயிராய் நிலவும்
கற்றவர் தமிழைக் காக்க – நிற்குமே
பொற்பாத நாயகர் பொதுநலன் அரசர்
அற்புதம் விளைப்பார் அங்கு!

தவஞ்செய்து தமிழன்னை ஈன்றத் தமிழ்ப்புலத்தை
தவம்செய்ய வைத்துப்புகழ் அவைசெய்து – தவத்தால்
தகைசெய்து தலைமையேற்று ; தன்னேரிலா திறத்தால்
நகைசெய்யும் நற்றமிழ் நாடு!

மணியே மரகத்தேர் மாமணியே தமிழே
அணியே நின்னாட்சி மதுரையில் – காண
அணி ; அணியாய் அரங்கம் நிறைந்தோர் கேட்க
கனிந்தேன் கனிவாய்க் கவி!

உறவல்லவா!''

பாடல் : சொன்னது நீதானா... சொல் சொல் சொல் என்னுயிரே!

இப்பாடலில் அப்பெண் தன் கணவனைத் தெய்வமாக்கி, அவன்றன் கழுத்தில் சூட்டப்பெற்ற மாலையாகத் தன்னைச் சொல்லி,

'மறுமணம்' என்பது தெய்வமலர்மாலை தெருப்புழுதியில் விழுவதோடும், மாலையின் மாண்பறியா மாற்றானின் கையில் படுவதோடும் ஒக்குமென்றும் கூறுகிறாள்.

மாற்றியமைக்க முடியாத தெய்வமாகக் கணவனையும், நினைத்தவுடன் புறக்கணிக்கப் படுகின்ற - கழற்றப்படுகின்ற - வீசப்படுகின்ற மாலையாக மனைவிகளையும் உருவகித்திருப்பதும் தொனிக்கிறது.

'கல்லாதவன் எனினும் கணவன்
பொல்லாதவன் எனினும் புருசன்' –


என்று நாட்டுபுறப் பழமொழிகள் மட்டுமல்ல நாடெங்கும் ஒலிக்கும் திரையிசைப் பாடல்களும் மகளிர் கற்பு மேம்பாட்டைப் புலப்படுத்துகின்றன.

கவியரசர் கண்ணதாசன் தமிழ்க் குலப்பெண்டிரின் எளிமையிலும், கற்பு நிலையே மானமே ஆடைகளாம்.

மரியாதை பொன்னகையாம் நாணமாம்
துணையிருந்தால் போதுமே எங்கள்
நாட்டுமக்கள் குலப்பெருமை தோன்றுமே!

எனப் பத்தரை மாற்றுத் தங்கமாய் முத்திரையிட்டார் எனலாம்.

★



உணர்வுத்தமிழ்

- மறக்குணத்து வே. பிரபாகரன், சென்னை-85.

உலகத்து மலைகளிலே உயர்ந்த மலை இமயமலை. இமயமலை தோன்றுவதற்கு முற்காலம் தெற்கினிலே இருந்த மலை பொதிய மலை பொதிய மலைக்கும் முதியமலை

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள

(சிலப் : காடுகாண் : 17-22)

இருந்த நிலையினைக் கூறும் இளங்கோவடிகள் பன்மலையடுக்கத்திலே பஃறுளி யாறு பாய்ந்து வளம்பெருக்கிய நிலையினையும் குமரிமலை, குமரியாறு இருந்த அடையாளங்களையும் எடுத்துரைக்கிறார். இவை கடல் கொண்ட தென்னாட்டின் கலங்கரை விளக்கங்கள்.

ஒரு நாட்டு வரலாறு வரைவதற்குப் பயன்படும் மூல வாய்கள் (Sources) ஐவகைப்படும் என்பார் மொழிஞாயிறு பாவாணர்.

1. மரபு வழக்கு (Tradition)
2. அயல் நாட்டார் குறிப்பு
3. தொல்பொருட் சான்று
4. நாட்டிலக்கியம்
5. நாட்டு மொழி என்பன.

அவற்றுள் ஆயிரமாயிரம் அடையாளகள் கடற்கோள்களால் அழிந்து போயின. எஞ்சியிருப்பவை இற்றைச் சான்றுகள், சங்க இலக்கியங்களே. நினைத்துப் பார்ப்பதால் நேற்றைய வரலாறு நிகழ்காலத்திற்கு உந்து சக்தியாக அமையும் எதிர்காலத்திற்கு நம்மை எழுப்பிச் செல்லும், எழுச்சி கொள்ளச் செய்யும். பண்பாட்டு வளர்ச்சிக்குப் பற்றுக்கோடுகள் இவை. வரலாற்றை மறந்தவர்களால் வரலாற்றை உருவாக்க முடியாது.

'வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுகத்து'

என ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார்பாயிரம் வழங்கினார்.

வாய்மொழியாக வழங்கப்படுகின்ற வரலாறும் பாக்களால் செய்யப்பட்ட செய்யுள் இலக்கியத் தொடர்புகளும் எழுத்துக் கோவையில் சொற்களாகிச் சுவைபயக்கும் பண்பும் சொல்லுக்குப் பொருள் வழங்கும் இயல்புகளையும் செந்தமிழ் நிலத்தில் வாழ்பவர் எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிப் பார்த்து எடுத்துரைப்பதிலே நாட்டம் கொள்ள வேண்டும். முந்து நூல்களை முறையாக எண்ணிப் பார்க்கும் புலம்-அறிவு அமைய வேண்டும், என்ற கருத்துகளாகவும் பனம்பாரனார் நமக்கு வழங்கியுள்ளார் எனவும் கொள்ள இடமுண்டு.

'எண்ணங்கள் மனத்திலிருந்தே உண்டாகின்றன. எண்ணங்களுக்கு மனதே முதன்மையானது. எண்ணங்கள் மனத்தினாலே உண்டாக்கப்படுகின்றன. எனவே ஒருவன் தீய எண்ணங்களோடு பேசினாலும் தீய செயல்களைச் செய்தாலும் அவற்றினால் (தீமைகள்) உண்டாகும் துக்கங்கள் இழுத்துச் செல்லும் எருதுகளைப் பின் தொடர்ந்து போகும் வண்டியைப் போல அவரவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தொடர்கின்றன.'

'எண்ணங்கள் மனத்திலிருந்தே உண்டாகின்றன. எண்ணங்களே முக்கியமானவை. அவை மனத்தினாலே உண்டாக்கப்படுகின்றன. ஒருவன் தூய எண்ணத்தோடு பேசினாலும் தூய செயல்களைச் செய்தாலும் அவற்றினால் உண்டாகும் நன்மைகள் எப்போதும் நீங்காத நிழல் போன்று அவரவரைப் பின்தொடர்கின்றன'

(தம்மபதம்)

இழுத்துச் செல்லும் எருதுகளையும் தொடரும் வண்டியையும் பிரித்துவிடலாம். ஆம் நம்மைத் தொடரும் தீமைகளை, துக்கங்களைப் பிரித்து - துயரங்களில் இருந்து நாம் விடுபட முடியும். இன்பங்கள் நம்மை எப்போதும் சூழ்ந்து கொண்டே இருக்கவேண்டும் என்பதனால் தான். நமைத்தொடரும் நிழலை எடுத்துக் காட்டினார்.

'தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்'

என்றார் திருவள்ளுவர். தீயினும் அஞ்சப்படும் தீயவைகளை விலக்கித் தூயவை பால் நம்முடைய மனம் ஈடுபட வேண்டும். இணைய வேண்டும்.

பட்டறிவால் பழம்போற் கனிந்து சுவை நிறைந்து, முளைக்கக்கூடிய வித்துக்களைப் பாதுகாப்பாய் அதனுள்ளே கொண்டு எதிர்காலத்திற்கும் எடுத்துரைக்கப் பயன்படும் மொழிகளைக் கொண்டதுதான் பழமொழி. மிகமிகப்

பழைமையானதும் கூட. எனப் பழமொழிகளைப் பற்றி எடுத்துரைக்கலாம்.

தாயைப் போல பிள்ளை ; நூலைப் போல சேலை

இப்பழமொழி தாய், சேய், இடைப்பட்ட உறவு முறைக் குமுகாய உறுப்புகள், உளவியல் கூறும் பதினான்குவகை இயல்பூக்க நிலைகள், பண்டைத் தமிழர் போற்றித் தொடர்ந்த பல்வகைத் தொழில்கள் குறிப்பாக நூற்புத்தொழில், மானங்காக்கும் ஆடை நெய்தல் - போன்ற குறிப்புகளைக் கொண்டது அப்பழமொழி. தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்நாட்டுப் பண்பாட்டுப் பல்துறை வளர்ச்சிகளை எடுத்துரைக்கும் வரலாற்று உணர்த்தல் மொழி. தமிழுக்குச் சொந்தமெனும் சந்தமொழியால் - பழமொழி, கிழமொழி எனவும் மொழியப்படுவது மரபு. கிழமொழி, கிழமைமொழி எனவும் பொருள் கொள்ள இடமுண்டு.

தாயும் பிள்ளையும்தான் ஒருநாட்டின், இனத்தின் வரலாற்றுத் தூண்கள். இவர்களின் இடையில் எழுவன இலக்கியங்கள், இலக்கணங்கள் போன்ற பிறவும் எனலாம். அறவாழி அந்தணனாம் புத்தரின் அறச்சுவடுகளைப் பின்பற்றி ஆட்சி நடத்திய அசோக மன்னர் நாடெங்கும் சாலைகளை அமைத்து, சாலை இருமருங்கும் நிழல்தரும் மரங்களை வளர்க்கத் தூண்டுதல் செய்தமை சொல்லும் செயலும் இணைபிரியாது இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் உணர்த்தல்தான்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் -
உண்மை அறிவே மிகும்
அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர் -
மக்கட்பண் பில்லா தவர்

- எனும் குறள்மொழிகள் ஒவ்வொரு சிந்தனை மாந்தனையும் செயல்பாட்டிற்கு அழைக்கும் மொழிகளாகும்.

ஈன்றுபுறந் தருத லென்தலைக் கடனே
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

(பாடல் : பொன்முடியார், புறம் : 312, திணை : வாகை, துறை : மூதின் முல்லை) பெற்ற பிள்ளைகள் சுயநலப்பற்றுதல்களை ஒதுக்கிப் பொதுநல நாட்டமுடையயோராய்த் திகழ வேண்டும் என்பதை உணர்த்தவே ஈன்று புறந்தருதல் என்தனைக்கடனே - எனத்தாய், மொழிகின்றாள். சான்றாண்மை மிக்கோனாய் மாற்றுவது தந்தைகடன். அவ்விளையோரை நன்னடைப் படுத்துவது ஆட்சியாளர் கடன். எனவே ஆட்சியாளர்கள் - அமைச்சர்கள், பின்னோடிகளை வழிப்படுத்தும் முன்னோடிகளாக விளங்க வேண்டும். ஆட்சியில் உள்ளோர் வாழ்க்கைமுறைகள் எடுத்துக் காட்டாக அமைய வேண்டும். கையூட்டை நினையாத மெய் ஊட்டும் மேன்மைச் செயல் கொண்டோராய் விளங்க வேண்டும் என்பதுதான் **நன்னடை நல்கல்** என்ற தொடரின் பொருளாக அமையும். பகலுண்ணான் பருத்திருப்பான் - எனில் அவன் இரவிலே உண்கின்றாள் என்றுதான் பொருள். நன்னடை என்பது இளையோர்க்கு வழங்குவது மட்டுமில்லை அரசாங்கத் தொழில் கொண்டோர்க்கும் அடிப்படை ஒழுக்கமாக அமைய வேண்டும். இத்தகைய வீரமும் ஒழுக்கமும் அன்பும் அறிவாற்றலும் உடைய இளைய சமுதாயம் எழவேண்டும். கற்க, நிற்க எனக்கூறியதும் இதற்காகவே. சிற்றிலக்கிய வகைகளிலே பிள்ளைத்தமிழ் - அதாவது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் பாடுவது தமிழ்மொழிக்கே உரிய சிறப்பாகும். குழவிப்பருவ முதல் எழுகின்ற ஒலிப்புக் கூறுகளே தமிழ் எழுத்துக்களாக, சொற்களாக உருவாகியுள்ளன என்பன உற்றுநோக்கின் விளங்கும்.

தமிழ் எழுத்துக்கள் - உயிர் எழுத்துக்கள் மெய் எழுத்துகளுடன் புணர்ந்து உயிர்மெய் எழுத்துக்களை உண்டாக்கும். ஆண்மை, பெண்மைக் கலப்பினால் கரு, உரு அடைந்து குழவியாவது போன்ற உயிரியல் அடிப்படையினைக் கொண்டதுதான் நம் தமிழ்மொழி. இவ்வகையிலும் மூத்தமொழி முதன்மொழியாகும். உலகில் மூவாயிரம் மொழிகள் இயங்குவதாகக் கூறுகின்றனர். அவைகளுள் ஒரே எழுத்து ஒருபொருளை உணர்த்துவது தமிழ்மொழியில் மட்டும்தான் - இவ்வாறு ஒரே எழுத்து ஒரு பொருளை உணர்த்தும் நிலையை ஓரெழுத் தொருமொழி என வழங்கிவருகின்றனர். 42 எழுத்துக்கள் இவ்வாறு பொருள் வழங்குகின்றன. அவை,

ஆ - அஃறிணை படர்க்கைப் பன்மை விகுதி, ஆச்சா மரம், ஆதலைச் செய்யென் ஏவல், இச்சை, இரக்கம், எதிர்மறை, எருமை பசு மரையிவற்றின் மெண், தமிழ்உயிர், ஓர்எழுத்து, ஓர்வினையெச்ச விகுதி, சொல்லிசை, வியப்பு, விலங்கின் பெண் பொது, வினா.

ஈ - இலையான், பறக்கும் இயல்புடைய ஈ, ஈயென்னேவல், ஓரெழுத்து, கொசுகு, முன்னிலையசைச் சொல் (2-ம்) நீன்றீபெரும, வண்டு.

ஊ - உணவு, ஊன், ஓரெழுத்து, வருத்த மாற்றாதனுங்கல்

ஏ - அடே, இசைநிறை, ஈற்றசை, எண்ணின்குறிப்பு, (2-ம்) நிலனே நீரே, எதிர்மறை (2ம்) பொய்யே, ஓரெழுத்து, தேற்றக்குறிப்பு (2ம்) நானேவந்தது, பாணம், பிரிவின் குறிப்பு (2ம்) இவற்றுளொன்றே நன்று, வினாக்குறிப்பு (2ம்) தரவே வந்தது. ஏ, ஏ இகழ்ச்சிக் குறிப்பு.

ஐ - அரசன், அழகு, ஆசான், இரண்டனுருபு, இருமல், எசமானன், ஓரிடைச் சொல், ஓரெழுத்து, கடவுள், குரு, கோழை, சாரியை (2ம்) ஏற்றினோடேற்றை, சுவாமி, நுண்மை, பிதா, யானையைப் பாகனதட்டும் ஓசை.

ஓ - அசைநிலை, (2ம்) வம்மினோ, அதிசயவிரக்கச் சொல் (2ம்) ஓபுதினம், இரக்கச்சொல் (2ம்) ஓகெட்டேன், இழிவு சிறப்பு (2ம்) ஓகொடியன், உயர்வுசிறப்பு (2ம்) ஓ பெரியன், எதிர்மறை (2ம்) யானோ செய்தது, ஒழியிசை (2ம்) கொள்ளோ கொண்டான், தெரிநிலை (2ம்) ஆணோ அதுவுமன்று, பிரிநிலை (2ம்) அவனோ கொண்டான், மடையடைக்குங்கதவு, வினா (2ம்) சாத்தனோ

ஔ - ஓரெழுத்து, ஔவென்னேவல், கடித்தல் .. என உயிரெழுத்துக்களில் ஓரெழுத்தொரு மொழி உணர்த்துதலைச் சொன்னோம்.

உயிரைத் தொடர்பவை - கா, கு, கூ, கை, கோ, கௌ, சா, சீ, சூ, சே, சோ, சௌ, ஞா, த, தா, தீ, து, தூ, தே, தை, நா, நீ, நௌ எனும் உயிர்மெய் எழுத்துகளில் அடங்கியுள்ள 35 ஓரெழுத்தொரு மொழி எழுத்துக்களாகும்.

தமிழ்மொழியில் உள்ள ஓரெழுத்தொரு மொழி பற்றிய செய்திகளை உலக சாதனை புத்தகத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும். உலகச் செம்மொழிகளில் ஒன்றான தமிழுக்கு ஓரெழுத்தொரு மொழி மேலும் சிறப்பினைச் செய்கிறது என்பது தமிழர்க்குப் பெருமைதரும் செய்தியாகும். அதே போல, அஃகேனம், ஆய்தம், முப்பாற்புள்ளி, தனிநிலை என ஒரே எழுத்திற்கு நான்கு பெயர்கள் நம் தமிழில் தான் உண்டு.

இவ்வாறு உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் உலவிய நிலத்தைச் செந்தமிழ் நிலம், (தொல் : 881) செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் (தொல் : 883) செந்தமிழ் இயற்கைச் சிவணியநிலம் என போற்றிப்புகழ்ந்தனர். செம்மைத்தமிழ், செம்மைத் தமிழ் என மகிழ்ந்து தண்மைத் தமிழ் உண்மை நெறிகளை எடுத்துரைத்தனர். தமிழ் இப்படிப்பட்ட பெருமையுடையது தமிழர் பெருமை இன்னின்ன சிறப்புகளையுடையது எனப் பழம்பெருமை களைப் பேசுவது இன்றையக் காலத்திற்கு ஏற்றதா? எனப் பிறமொழிகளை அணிகலன்களாகக் கொண்டு குறிப்பாக ஆங்கிலத்தைத் தமிழுடன் கலந்து பேசிப் பெருமை கொள்ளும் தமிங்கிலர் - பரம்பரையினர் நிமிர்ந்து பேசுவது நம்மைச் சில நோரங்களில் நிலை குலையச் செய்வதும் உண்டு. அதற்காக நாம் யாருக்கும் அடிவருடிகளாக மாறி விடுவது இல்லை.

சங்க இலக்கியத்திலே அப்படி என்ன இருக்கிறது? என முகம் சுழிப்போர்க்கு நம்முடைய குறுநகை பதில் இதோ.

'சங்க இலக்கியத்தில் சிக்கலற்ற சாதாரண பழைய கால வாழ்வைப் பார்க்கலாம். சிற்றூர் வாழ்க்கையை, பேரூர் வாழ்க்கையை, நாட்டு வாழ்க்கையை, நகர வாழ்க்கையை, குழுமக்கள் வாழ்க்கையை, கோனாட்சி வாழ்க்கையை, விழுப்புகழ் வேந்தராட்சி வாழ்க்கையைக் காணலாம். ஐந்திணை வாழ்க்கையைப் பார்க்கலாம். பண்பட்ட உழுதொழில், கைத்தொழில், வாணிப வாழ்க்கையைப் பார்க்கலாம், சாதாரண இயற்கையொடு இயைந்த வாழ்க்கையிலிருந்து பேரரசு வாழ்வு வரையில் பார்க்கலாம்' (ஜீவா : புதுமைப்பெண் : ப : 40)

தமிழரின் அகவாழ்வைப் பற்றிக் கூறுவது அகநானூறு, புறவாழ்வைப் பற்றிக் கூறுவது புறநானூறு. இவைகளைத் தொடரும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கும் ஐம்பெருங்காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களும் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களும் பக்தி நூல்களும் பற்பல துறைகளைப் பற்றி எடுத்துரைக்கும் நூல்களும் தமிழ்க்குமுகாய வாழ்வை - அதன் உரிமைகளை எடுத்துரைக்கின்றன. எதிர்காலத்திற்கு நெறிப்படுத்தும் தற்காலத் தூண்டல்கள் துலங்கல்கள் அவை எனில் பொருத்த மாகும்.

பெண்களுக்கு உரிமை கொடுப்பது நாகரிகம், பண்பாட்டின் மேன்மையை அளவிடும் கருவி எனச்சங்க இலக்கியம் கூறுகிறது. அகவை நூறு தாண்டிய பின்பும் நரைதிரை தோன்றவில்லையே எனப் பிசிராந்தையைப் புலவர்கள் கேட்டனர். அதற்கு மறுமொழியாக அருமையான தமிழ்க் கொள்கையை எடுத்துரைத்தார். உலகியல் நிறைந்த பட்டறிவு கொண்ட மாண்புடைய மனைவி, மக்கள், மன்னன், உதவியாளர்கள், உடன் உறைவோர்களை நான் கொண்டிருக்கிறேன் என்றார்.

மாண்ட என் மனையொடு மக்களும் நிரம்பினர் *(புறம் : 191) என்ற பாடல் வரியிலே மனைவி எனத் தனியாக கூறாமல் மனையொடு மக்கள் என்று குறிப்பிடுவது மனை சுற்றத்துடன் அவருக்குள்ள பிணைப்பினையே எடுத்துக்காட்டுகிறது. மனைக்குத்துணையாகும் தலைவன் - கண்வன் எப்படிப்பட்ட பண்பாடு உடையவனாக விளங்கினான் என்பதும் இங்கே சிந்தனைக்கு ஏற்ற கருத்தாகும்.*

போர்க்களத்தில் ஒரு வீரனைப் பற்றி மற்றொரு வீரன் கருத்துரை வழங்கிய பண்பாட்டினை எடுத்துரைப்பது இப்பாடல். மனைக்கு ஒளிசெய்யும்

விளக்குப் போலத் தன் மாட்சியால் புகழாகிய விளக்கத்தைச் செய்யும் அழகிய நுதலையுடைய பெண்ணுக்குக் கணவன், போரில் தன் படைக்கு எல்லையாய் நின்று காக்கும் வெற்றி பொருந்திய வேலேந்திய நெடிய புகழையுடையவனுமாகிய எம் தலைவன். அவன் வாழும் ஊரிலே நடுகற்கள் மிகுதி. புல்லிய கொட்டையையுடைய நெல்லிமரங்கள் நிற்கும் புன்செய் நிலங்களைக் காணலாம். குடிமக்களோடு குடிமகனாக வாழ்ந்து கொண்டிருப்பவன் அவன். ஆனால் போரில் தன்னுடைய மன்னன் துன்பமுறுங்காலத்திலே கொடியை உயர்த்தி நிறுத்தப்படும் நிறைக்கடங் காது முந்துற்றெழுந்து வரும் பகைவர் படைக்கு சிறையும் தானே, பகைவர்படை மேற் செல்லாத படியாகக் குறுக்கிட்டுத் தடுத்து நின்று காக்கும் துணையாய் நிற்பவனும் அவனேயாம். என்கிறார் ஐயூர் முடவனார்.

அடங்கிய கொள்கை ஆறிய கற்பின் தேறிய நல்லிசை
வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ (பதிற் : 60)

பெண்மை சான்று பெருமடம் நிலைஇக்
கற்பிறை கொண்ட கமழும் சுடர்நுதல்
புரையோள்கணவ (பதிற் : 70)

கணவன் பண்பாடு உடையவனாக இருப்பின் மனைவியும் பண்பாடு கொண்டவளாக இருப்பாள். கணவனும் மனைவியும் எப்படிப்பட்ட உயர்ந்த சிந்தனை உடைய பண்பாளர்கள் என்பதைப் பாவேந்தரின் குடும்பவிளக்கு எடுத்துரைக்கிறது.

இளைய மனைவி, இளைய கணவன், இருவரும் இரவிலே தனித்து இருக்கின்றனர். இருவரும் கண்ணொடு கண்ணிணை நோக்கிக் கருத்துருவாக உரையாடுகின்றனர். மனைவி பேசுகிறாள் கணவன் உற்றுக் கேட்கிறான்.

'அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்
இதுவரையில் பொது நலத்திற்கென்ன செய்தோம்
என எண்ணிப் பார்ப்பதுவும் வேண்டும்'

என்பதுதான் பாவேந்தரின் காதல் ஓவியம். இத்தகைய பண்பாடுகளைக் கொண்ட கருவூலம் தான் தமிழிலக்கியம். தமிழிலக்கிய மேன்மை. அத்தகைய தமிழ்தான் தண்டமிழ்.

ஆங்கில மேதை செகப்பிரியரைப் பற்றி பென்ஜான்சன் தம்முடைய 'செக்பிரியர் நினைவுக் காணிக்கை' (To the memory of Shakespeare) என்ற கட்டுரையிலே **அவன் ஒரு யுகத்திற்கு மட்டும் உரியவனில்லை ; அவன் எல்லா யுகங்களுக்கும் எக்காலத்திற்கும் உரியவன்** எனப் பெருமைப்படுகின்றார்.

செப்பிரியரின் படைப்புகளிலே வாழ்வு இருக்கிறது ; வாழ்வு வளம் பெறும் வழிகள் இருக்கின்றன. ஆம் நம் சங்க இலக்கியம், நமக்கு வாழ்வு - தாழ்வு வராமல் தடுப்பது. உயிர்மூச்சாய் இருப்பது

'இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'

என்றார் தமிழ் விடு தூதிலே.

பண்டைக்காலத்தையே பார்த்துப் பரவசம் அடையும் நேரத்திலே நம் பக்கத்திலே இருக்கும் பைந்தமிழ்ப் பாவலர்களையும் நாம் பார்க்க வேண்டியது நம் கடமையாகும். நீர்வளத்தின் கருவிகளாய் இருப்பவை அருவிகள். தமிழ்நாட்டுக்குக் குற்றால அருவி. அமெரிக்க நாட்டிற்கு நயாகரா அருவி சிறப்புடையது. அந்த அருவியைக் கண்ட கவிஞன் அந்த அமெரிக்க நாட்டிலே பிறந்த ஆம்ஸ்ட்ராங் - நிலவில் காலடி பதித்த பெருமையைப் பேசி உடனே அதலபாதாளத்திற்கு அம்மகிழ்வை உருட்டித் தள்ளுகிறார். அமெரிக்க நாட்டிலே நிலவும்நிறவெறியைச் சாடுகிறார். இதோ அந்தப் பொங்கருவிப் பாடல்.

வெண்நிலவில் கால் பதித்த
விஞ்ஞானத் திருநாட்டில் ...
உலகத்தின்
செல்வத் தலைநகரில்
சிரிக்கும் ஏ! நயாகராவே
நீ மலைமேலே இருந்து...
வெறியோடு விழும் அருவியா?
இல்லை... அந்த
வெள்ளையரின் நிறவெறியா?

(நா. காமராசன் : தாஜ்மகாலும் ரொட்டுத்துண்டும் : 88)

நுங்கும் நுரையுமாகப் பொங்கித் தவழ்ந்து (இறங்கும்) வீழும் நயாகரா அருவியைப் பார்த்து நிறவெறிக் கோபம் கொண்ட கவிஞன் கருத்தினைக் கண்டோம். நம்முடைய தமிழகத்திலே வறுமையாளரின் உளக்குமுறல் எத்தகையது எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கிறான் கவிஞன்.

நாங்கள் வெயிலைத் தங்குவது எப்படித் தெரியுமா?
வெயிலில் பொசுங்கி!

நாங்கள் மழைக்கு ஒதுங்குவது எப்படித் தெரியுமா
மழையில் நனைந்து!

நாங்கள் பசியை விரட்டுவது எப்படித் தெரியுமா?
பட்டினி கிடந்து

நாங்கள் நோயை ஒழிப்பது எப்படித் தெரியுமா?
செத்துத் தொலைந்து! நாங்கள் யார் தெரியுமா?

(தமிழவன் : வானம்பாடி இதழ் 10, 15 : 10)

தினமும் பிச்சை எடுத்து வாழும் ஒரு குடும்பத் தலைவன். மாலை வரையில் முயன்று ஒருபிடியரிசி மட்டுமே பெற்றுக்கொண்டு வந்த மகிழ்ச்சியிலே தன் மனைவியைப் பார்த்து இன்றைக் கேனும் உண்டிடட்டும் நம் சேய்கள் என்று கூறி நம்மிடம் விறகு இல்லை. காய்ந்த சருகுகளைக் கொண்டு வந்து போட்டுக் கொளுத்து எனத் தூண்டுதல் செய்கிறான். இப்பாடலின் ஈற்றடி கவியரசு கண்ணதாசனால் கொடுக்கப்பட்டு தென்றல் இதழிலே வந்தது பிற்காலத்தில் தென்றல் வெண்பா 1000 என்ற தொகுப்பு நூலிலும் இடம் பெற்றது.

அந்தி வரை இரந்தேன் அன்பே பிடியரிசி
தந்தார் உணவு சமைத்திடுவாய் - இன்றேனும்
உண்டிடட்டும் நம் சேய்கள் ஓடிப்போய் காய் சருகைக்
கொண்டு வந்து போட்டுக் கொளுத்து

என்பதுதான் அப்பாடல் - இன்றேனும் உண்டிடட்டும் நம் சேய்கள் என்ற வரி - இதற்குமுன் எத்தனை நாட்கள் பட்டினியோ எனக் கண்ணீரை வரவழைக்கிறது.

பிறநாட்டு நல்லறிஞர் கருத்துக்களை மொழி பெயர்த்து வழங்கும் பணியையும் கவிஞர்கள் செய்கின்றனர். சீனக்கவிஞர் அய்-குங் என்பவரால் பாடப்பட்ட சீனமொழிப்பாடலின் மொழிப்பெயர்ப்பு இது.

ஒரு நாள் காலை வேளையிலே குடையிடம் கேட்டேன்.

நீ விரும்புவது மழையில் நனைவதையா
வெயிலில் காய்வதையா ? குடை புன்னகை செய்து
விட்டுச் சொன்னது.

என்கவலை இதைப்பற்றி இல்லை பின்னர் மீண்டும் கேட்டேன் **பின் எதைப்பற்றி உன்கவலை** குடை சொன்னது.

என்கவலை யெல்லாம்
எப்படிப்பட்ட பேய்மழையானாலும்
என் மக்களை நனைய விடக்கூடாது
எப்படிப்பட்ட வெயிலானாலும்
என்மக்களைக் காயவிடக்கூடாது.

(சோசலிசக் கவிதைகள் : மக்கள் கலை இலக்கியக்கழகம் ப : 107) குடை பேசாது. அது அஃறிணைப் பொருள். குடை போன்ற பாதுகாப்புப் பணி மேற்கொள்கின்ற சமுதாய முன்னோடிகளின் கொள்கைகள் இவ்வாறுதான் அமைய வேண்டும். உயர்திணையாகிய மக்களுக்கு அஃறிணைப் பொருள் பாதுகாப்பு உறுதிமொழியைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதை உற்று நோக்க வேண்டும்.

புது மழை பொழிந்து அடி மறைந்து போனது என்பது ஒரு பழமொழி. பொடிக்கல் காப்புப்பாதைகள் (மெகாடம் முறை) ஏற்படுவதற்கு முன்பு ஒற்றையடிப் பாதைகள் பயன்பட்டன. அப்பாதையில் நடந்து நடந்து புழுதியாய் இருக்கும். கால் பாதச் சுவடுகள் பதிந்து இருக்கும், மழை பொழிந்ததும் நடந்த கால் அடையாளங்கள் மறைந்து போகும். இதனுடைய பொருள் - நேற்றைய நிகழ்வுகள், அடையாளங்கள் ஒரு புதிய செயலின் குறுக்கீட்டால் அடையாளங்கள் நினைவு மறந்து போகும். மறதியினால் வரலாறு மறந்து போகக் கூடாது என்ற நல்ல நோக்கத்தைக் கொண்டது இப்பழமொழி.

இன்றைய சிறுகதை, தொடர்கதை, புதினம் போன்ற இலக்கிய வளர்ச்சிகளுக்கு அடிப்படை பாட்டிக் கதைகள் தானே. மரபு மாறாமல் நினைக்கப்பட்டால் தான் எதிர்காலம், இறந்தகால எழுதிச்சிகளை வளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தொடர் முயற்சியில் ஈடுபடும். வளர்ச்சிப் பாதை வளமை காணும். பாட்டன் பெயரை பெயரனுக்கு வைப்பது மரபாக இருந்து வந்தது. இந்த மரபை அடியொற்றித்தான் பாட்டன் சொத்து பெயரனுக்கு எனும் எழுதாச் சட்டம் பலநூற்றாண்டுகளாகச் செயலாக்கம் பெற்று, இன்றைக்கும் தொடர்வதைக் காணலாம். தமிழ்க் குமுகாயமே பாட்டன் பரம்பரை - இயற்றமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் நடுவீலே இயங்கும் இசைத்தமிழின் வரிவடிவமான பா - செய்யுள் - பாட்டு - புலவர்களின் மன எழுச்சிகளின் விளைச்சல் - பாட்டு, பாணர் பாடுவது, பாடினி பாடுவது, பாட்டு. **அப்பாடல்களின் உறைவிடமாக உள்ளவன் பாட்டன்** எனும் காரணப் பெயரால் கொள்ளப்படும்.

நமக்கு மூத்தோர், நம்முடைய பெரியவர்களின் உழைப்பும் தொண்டும் நினைக்கப்பட்டால்தான் நாம் உணர்ந்து கொள்ளும் நிலைக்குத்தள்ளப்பட்டு உந்தப்படுவோம். முயற்சி முறையான பலன்களை வழங்கும்.

எங்கள் வீட்டுக்காரனும் கச்சேரிக்குப் போனான்

என்ற பழமொழிப்படி அமைந்து விடக்கூடாது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

- திருவள்ளுவரின் முதல் குறட்பா இது. எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு, எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உலகின் இயல்பு சுழற்சி. இந்த சுழற்சியைக் கூட முதன்முதலாகத் திருவள்ளுவர் ஆகிய தமிழன் தான் எடுத்துரைத்தான். **சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.** கை, எழுத எழுதத்தான் எழுத்து அழகாக அமையும்.

திரும்பத்திரும்ப சொற்களை ஒலிக்க ஒலிக்கத்தான் நாப்பயிற்சி ஏற்பட்டு பேச்சு மொழி தெளிவாக அமையும். செந்தமிழும் நாப்பழக்கம் எனக் கூறப்படுகிறதே. ஆங்கிலமும் நாப்பழக்கம் இத்தாலியும் நாப்பழக்கம் என்று ஏற் கூறப்படவில்லை. இதற்கு அடிப்படை உண்டு.

தமிழ் நெடுங்கணக்கில் ழ கரம் சிறப்பானதாக அமைகிறது. வாழைப்பழம் என்ற பெயரை வாளபளம், வாயபயம் எனப் பல இடங்களில் பல்வேறு ஒலிப்பு நிலைகளில் உணர்த்துகின்றனர். தமிழிலே ழ கரம் ஒன்றுமட்டுமே இல்லை. ழ கரம் ய கரம் ல, ள வேறுபாடு, ன, ண, ந, வேறுபாடு, ர, ற போன்ற பல்வகை வேறுபாடுகளை உணர்ந்து பேசினால் தான் தெளிவாக இருக்கும் என்பதனால் செந்தமிழும் நாப்பழக்கம் என்ற மொழி நடைமுறைக்கு வந்தது. மேற்கண்ட எழுத்து ஒலிப்புப் பயிற்சிக்குத் தமிழிலே பல்வகைப் பயிற்சிகள் உள்ளன.

ஓடுற நரியிலே ஒருநரி கிழநரி
கிழநரி முதுகிலே ஒருபிடி நரை முடி

இதனைத் திரும்பத்திரும்ப மொழியும் போது நாப்பயிற்சி உண்டாகும் நாக்கு நரம்புகள் வலிமையும் வளைந்து கொடுக்கும் தன்மையும் தக அமைப்பும் கொள்ளும். அதனால்தான **சொல்வன்மை** எனும் அதிகாரத்தை வழங்கினார் வள்ளுவர்.

தமிழ் எழுத்துகளில் குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை, மெய்யெழுத்திற்கு அரை மாத்திரை எனும் ஒலிப்பு அளவுகளையும் நீட்டி ஒலிக்க வேண்டுமாயின் அளபெடைகளும் (இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை, இசைநிறை அளபெடை) தமிழில் உள்ளன.

குறில், நெடில் மாத்திரை வேறுபாடுகளோடு மொழிவதும் தமிழுக்குப் புதிய அழகினை உண்டாக்கும். வட மாநிலங்களில் உள்ள இந்தி மொழி பேசுபவர்கள் தமிழை அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். தமிழ் பேசுபவர்களைப் பேசச் சொல்லிக் கேட்டு மகிழ்கின்றனர் வடநாடு செல்லும் நேரங்களில் தமிழில் பேசச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தனர். நானும் பேசிக் காட்டினேன்.

14.1.2000 முதல் மூன்று நாட்கள் மராட்டிய மாநிலம் சந்திராப்பூர் அடுத்த பல்லார் பூரில் **அம்பேத்கர் சாகித்ய சன்சாட்** - மாநாடு நடந்தது. காலை 10.00 மணிக்குத் தொங்கும் கூட்டம் ஒரு மணிநேர உணவு இடைவேளைக்குப் பிறகு இரவு 12.00 மணிவரை நடக்கும் சிறுவர் முதல் முதியவர் வரை கூச்சல் குழப்பம் இன்றி அமர்ந்து அமைதியாகக் கேட்டனர். மராட்டிய மாநிலம் என்பதால் மராட்டிய மொழியிலே மட்டும்தான் பேச்சு, கவிதை, கருத்தரங்கங்கள் நடைபெற்றன. மருத்துக்குக் கூட ஆங்கில மொழியைப் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாகத் தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் எடுத்துரைக்கப்பட வேண்டிய முக்கியமான செய்தி இது. கவியரங்கிலே நான் மட்டுமே தமிழில் கவிதை பாடினேன். கவியரங்கு முடிந்ததும் மொழி புரியாமல் போனாலும் ஆண், பெண் இருவரும் மிகவும் விரும்பி வணக்கம் செலுத்தி கைக்குலுக்கி மகிழ்ந்தனர்.

பெரும்பான்மைத் தமிழரின் மொழிக்கொலையைப் பார்த்து மனம் வெதும்பிப்போன உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன்

தமிழா நீ பேசுவது தமிழா!
தமிழா நீ பேசுவது தமிழா!

எனக்குமுறுகிறார். மேலும்

வண்டிக்காரன் கேட்டான் லெப்ட்டா, ரைட்டா?
வழக்கறிஞர் கேட்டார் என்ன தம்பி பைட்டா
வெள்ளைக்காரன்தான் உனக்கு அப்பனா?

எனக் கேட்டு நம்மைப் பார்த்துக் கண்ணீர்ப்பாடல் வழங்கியுள்ளார். தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து பேசுபவர்களைத் **தமிங்கிலன்** என்றே குறிப்பிடுகிறார் காசி. ஆனந்தன்

நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், பெரியாரைத் துணைக்கொள்ளும் பண்பாடும் நமக்கு வேண்டும். நம்முடைய குடும்பத்தினர்க்கும் பிள்ளைகளுக்கும் தமிழினப் புலவர்கள், வள்ளல்கள், முன்னோர்களைப் பற்றியும் எடுத்துரைக்காமல் விட்டு விட்டதனால் ஏற்பட்ட இடைவெளி இன்னல்தான், நமக்கு ஏற்பட்டுள்ள தொய்வு நிலைக்குக் காரணம்.

சங்கத்தமிழெடுத்து
தங்கத்திலே இணைத்து
எங்கும் தருவாரடி – எம் அண்ணா
இன்பத் தமிழரடி

எனக் கவியரசு கண்ணதாசன் அண்ணாவைப் போற்றுவார்.

வாழ்க்கையில் உண்டாகும் ஐயங்களுக்கெல்லாம் விடைகளைத் தந்துவிளக்கம் வழங்கும் திருக்குறளை வாழ்க்கை அகராதி எனக்குறிப்பிடுவார் என்னுடைய தமிழ்ப் பேராசிரியர் கு. சம்மந்தம். அண்ணாவைப் பற்றிக் குறிப்பிடும் போது 1968 கல்லூரி ஆண்டு மலரில்

தமிழக மாந்தர் நெஞ்சில்
தமிழுணர் வூட்டும் சான்றோன்

என அண்ணாவையும்

கடலினில் கப்பல் ஓட்டி – மாற்றார்
கலங்கிடச் செய்த செம்மல் –

எனக் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளையையும் குறிப்பிட்டார். அதனால்தான்

இனிமைத் தமிழ் மொழி எமது – இங்கு
இன்பம் தர வாய்த்த நல் அமுது

என்றார் பாவேந்தர் பாரதிதாசனும்

தாய்மொழியைப் போற்றாதான் தன்மானம்
போற்றாதான்
தாய்நாட்டைப் போற்றாதான் இம்மூவர் – ஆயுங்கால்
வையப் பெரும்பகையாம் வந்தெதிர் நிற்பாரேல்
நையப் புடைத்தலும் நன்று

எனக் கவிஞர், மேதை, நாரா. நாச்சியப்பன். நல்வழிப்பா (நாச்சியப்பன் கவிதைகள் 1980) தனில்பாடிக் கொதிக்கிறார்.

இவ்வாறான பல்முனை இன்னல்களையெல்லாம் உள்ளுணர்ந்த திருவள்ளுவர் **நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவன்தன் குலத்தின்கண் ஐயப்படும்.** *எனச்சுட்டிக் காட்டுவதை இங்கு எண்ணிப்பார்ப்பது நலம்.*

தூய்மையே மணிமார்பு ; தொன் மறையின்
பிழிசாறாய்த் துலங்குகின்ற வாய்மையே
மணிநாக்கு;
மங்கலம்செய் மனையாழ்வே கண்கள் ; வீர
நேயமும் பொது நலமே திருமேனி
நிறையின்ப முறுவல் பூத்துத்
தாயமுதாய் விளங்குகின்றாள் அறத்தேவி
திருக்குறளாய்த் தாள் பெற்றுய்வோம்.

என சுத்தானந்த பாரதி மகிழ்ந்து பாடுகின்றார். குறட்பாவை.

தமிழை உயிராய், உணர்வாய், உணவாய், வழியாய், வாழ்வாய்க் கொண்டு வாழ்ந்தவர் உண்டு.

பொன்னான தமிழ்க்கவிதை இருக்கும் போது
புதுவழிகள் எனக்கெதற்கு? பொன்று மட்டும்
என் ஆணை ; எளிய தமிழ்ச் சொற்களாலே
இன்னிசை சேர்பாக்கள் பல தொடுப்பேன் ; நாடு
முன்னேறும் அறம் உரைப்பேன் தமிழ்த்தாயே! நீ
முதுகுழவிக் குறுதுணையாய் வருக! வாழி! என

கவிஞர் ச. பாலசுந்தரனார் தம்மை வெளிப்படுத்துகிறார் (புரவலர் உள்ளம் காட்சி 3, பாடல் : 35)

பணத்தியல்பால் பண்புதிரிந் தற்றாகும் போலிக்
குணத்தியல்பால் சேர்நட்புக் கோள் – 47

பசியரிந்தே ஊட்டல் பயனதுபோல் கல்வி
இசையறிந்தே ஈதல் சிறப்பு – 72

சேற்றில் அரிதாகும் பீடுநடை நோய் வறுமைக்
காற்றில் அரிதுகலைப் பாடு – 87

எனக் கவிஞர் நா. பசும்பொற்கிழியார். உவமைக்குறள் 100 எனும் நூலில் உணர்த்துகிறார். உணர்ந்தூட்டும் உயர்சிந்தனையால் உள்ளொளிபெருகும்.

உள்ளத்துள்ளது கவிதை நெஞ்சில் உருவெடுப்பது கவிதை என்பர். உள்ளத்தில் நிற்பது கவிதை. நெஞ்சில் நின்றபின்பு புதியபுதிய கருத்துகளாக உருவெடுத்து எழுச்சியாய் மலர்ந்து உலாவரச் செய்வதுதான் கவிதை. கவிதை என்பது வெறும் பாடல் மட்டும் இல்லை. கவிதையின் எழுத்துக்களை மாற்றிப் போட்டுப் பொருள் கொண்டால் அதன் உண்மை விளங்கும். கவிதை – கதை – கவி – விதை – கதை – வரலாறு அதில் உண்டு. எதிர்கால உருவாக்கல் வித்து – விதையும் அதிலே உண்டு. அப்படிப்பட்டதுதான் கவிதை – நம் தமிழ்க்கவிதை

க < வி
தை

இரண்டு பெண்களின் உள்ளத்து உணர்வுகளை ஓவியம் தீட்டிக் காட்டுகிறது ஒரு பாடல். ஒருத்தி முதியவள், மற்றொருத்தி மணமாகாத பருவ மங்கை. இருவரும் சிறிய இல்லத்திலே சந்திக்கின்றனர். இளைஞனின் தாய் பேசுகிறாள்,

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி (புறம் : 86)

வினவுதி – என்ற முன்னிலை ஒருமைச் சொல் கொண்டுள்ள பொருள்கள் மிகுதி. அவ்வீர இளைஞனை எண்ணித்தான் அத்தாய் காத்திருக்கிறாள். அவன் முகத்தைப் பார்த்து – கணவன் வடிவையும் பிற உறவினர் சாயலையும் காணலாம் என விழைவேகத்துடன் விளங்குகிறாள். அந்த நேரத்திலே தமிழ்ப் பைங்கிளியின் குரல் மகனின் பாச உணர்வை நினைவூட்டுகிறது. மழலை நினைவுகளை மனதில் பளிச்சிடவைக்கிறது. அத்தாயின் அடிமன ஆழத்திலே சுழன்று கொண்டு தென்றல் நடமிடும் பாசம், கண்களைப் பளிக்கச் செய்கிறது. **ஈன்ற வயிறோ இதுவே** *என்ற சொற்களில் உள்ள ஓ காரமும் ஏ காரமும் எத்துணைப் பொருளாழம் கொண்டுள்ளது என்பது, பண்பான ஒரு வீரமகனை, அல்லது மகளைப் பிரிந்த அன்னைக்கு மட்டும் தான் விளங்கும். அத்தகு பாசம் கொண்டுழலலும் பண்பு உள்ளங்களுக்கும் புரியும். பத்தாண்டுகளுக்கும் மேலாக பெற்றோர் மனைவி மக்களைவிட்டு வன்னிக்காட்டுப் பகுதிகளிலே தமிழ் மூச்சினையே உயிராகக் கொண்டு உலகிற்குத் தமிழர்*

வீரத்தை உணர்த்திவரும் மாவீரன் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் தமிழகத்திலே வாழும் அவருடைய பெற்றோர் உளப்பாங்கினையும் நினைக்கத் தூண்டுகிறது இப்பாடல். தமிழீழம் மலரப் போகும் இந்த நேரத்தில் **சிற்றில் .... தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே** காவற் பெண்டின் பாடல். புலிகளின் வீரத்தை ஒப்பிட்டுப் பார்க்கத் தூண்டுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட பாடலாயினும் இதோ இற்றை ஈழ விடுதலைப் போராட்ட நிகழ்வுடன் இணைந்து சுவையூட்டுகிறதே!

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் ..... சிறுவன் களம்புக்க

உவகைக் கலுழ்ச்சி (புறம் : 278) யின் திறம் பேசப்படுகிறது. வயதானவர்கள் சிறுகுழந்தைகளை கிச்சுகிச்சு மூட்டிப் பார்ப்பதில் ஒருவகை புத்தின்பம் காண்பர். அதுபோலவே முதியவர்களைக் காணும் இளையோர் நெஞ்சிலும் புதுவகை எள்ளல் உருவாகும். **குன்றேறி நின்றார் வெகுளியைப்** போல் சில நொடிகளில் தோன்றி மறையும் துடிப்பு நிலை எனலாம்.

களம் சென்ற மகனை எதிர்நோக்கிக் காத்திருக்கும் முதியவள் நிலைகண்ட வீரர்கள் பொய் நகைப்பாய் **சிறுவன் படையழிந்து மாறினான்** எனப் புகன்றனர். வீரத்தாயின் குருதியிலே எரிமலைக் குழம்பு கலக்கிறது. அவளுக்குக் குருதி அழுத்தம் இல்லை. அந்த நேரம் குருதி வேகம் ஒன்றும் செய்யாது. ஏன்?.... கடினமான வேலைகளைச் செய்து செய்து தசை நார்கள் **கட்டுக் கொடி** போல உறுதியாக உள்ளன. அந்நரம்புகளின் வழியே குருதி எவ்வளவு வேகமாகப் பாய்ந்தாலும், பரவினாலும் இதயத்தாக்குதல் - நரம்பு வெடித்தல் எதுவுமே நடக்காது. அதனைத்தான் நரம்பெழுந்துலறிய நிலை மூலம் காட்டுகிறார் காக்கைப் பாடினியார். உழைப்பும் அதற்கேற்ற ஓய்வும் சரியாக அமையப் பெற்றவர்களுக்கு எத்தகைய நோயும் தாக்குதல்களும் ஏற்படாது என்பது இப்பாடல்மூலம் காணப்படுகிறது.

பாண்டிச் சேரியிலே 115 அகவைக்கும் மேலாக வாழ்ந்த அறிஞர் அறிந்தார்க்கினியனாரை நேரிற் சென்று கண்டவர்களுக்கு ஒரு உண்மை நன்றாக விளங்கும். அந்த அகவையிலும் அவர் கண்ணாடி இல்லாமல் படித்தார். கைத்தடி இல்லாமல் நடந்தார். அவருடைய நாற்பது அகவையில் எழுதிய கவிதைகள் - எழுதிய கடிதங்கள் - அவருக்கு வந்த முக்கியமான தலைவர்கள் காந்தி, நேருவின் கடிதங்கள் அனைத்தையும் நினைவிலிருந்தே கூறியதைக் கேட்டேன். வியந்து போனேன். அவர் மின் விசிறி, மின் விளக்கினைக் கூடப் பயன்படுத்துவதில்லை. இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழ்ந்தவர். மோதல் கருத்துக்களை முழுமையாக விலக்கியவர் அவர். மருத்துவர்கள் கைவிட்ட புற்றுநோயாளிப் பெண் ஒருத்தியைப் பச்சிலை மூலம் குணமாக்கியதால் மூன்றடுக்குக் கட்டிடத்தை அவருக்கு அப்பெண் உரிமையாக்கினார். அக்கட்டிடத்தில் காலடி கூட வைக்காதவர் அறிந்தார்க்கு இனியனார். பொன், பொருள், புணர்ச்சி அவாக்களில் சிக்கிக் கொள்ளாத நிலை கொண்டிருந்ததால் நினைவு மாறா மனஉறுதி வாய்த்தது. பண்டைத் தமிழர்க்கும் இந்நிலை வாய்த்திருந்தது.

வெகுண்டெழுந்தாள் வீரத்தாய், கைவாளைக் கணக்காய் எடுத்தாள். புறங்கொடுத்திருந்தால் அம்மகனுக்குப் பாலூட்டிய **முலையறுந்திடுவென் யானெனச்** சினம் பொங்க ஓடினாள். படுபிணம் நிறைந்த களத்திலே புறட்டிப் புறட்டிப் பார்த்தாள். குருதி தேங்கிய களத்திலே அவளும் குருதி படிந்தவளாகிச் **செங்களந்துழவு வோள்** என சித்திரம் ஆனாள். சிதைந்து வேறாகிய படுமகன் கிடக்கை காணூஉ ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே - இன்றைக்கும் தமிழ் வீரமறக்குடித் தாயின் பாடல் பல்வண்ண ஓவியமாக நமக்குக் காட்சியளிக்கிறது.

தாய்க்கு மகன்மீது நம்பிக்கை வரவேண்டும். மகனுக்கும் தாய்மீது நம்பிக்கை உண்டாக வேண்டும். அந்நாடு தான் நல்லநாடு அந்நாடுதான் யாதும் ஒரே யாவரும் கேளிர் என்ற பொதுமை உணர்வு பூக்கும் நாடாக அமையும்.

அறிவுடையார் எல்லாம் உடையார் (குறள் : 43)
அறிவற்றங்காக்குங் கருவி (குறள் : 421)
உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும் கூம்பலும் இல்ல தறிவு (குறள் : 425)

உலகத்து உயர்ந்தவரை நட்பாக்கிக் கொள்வது சிறந்த அறிவு. மகிழ்ந்து விரிதலும் பின்னே வருந்திக் குவிதலும் இல்லாதது அறிவு. அறிவுடையார் ஆவது அறிவர்.

அருவுரு வென்ப உணர்வு சார்ந்த
உயிரு முடம்பு மாகு மென்ப (மணி : 30 : 84 – 5)

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு (குறள் : 739)

குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும். தாழ்விலாச் செல்வர் (குறள் : 731) என்பது செவிச்செல்வமும் கவிச்செல்வமும் பொருட் செல்வமும் அருட்செல்வமும் சேர்ந்த உயர் நெறியாளரைக் குறிக்கும். வரலாறு என்பது எழுதப்படுவதுடன் நின்று விடுவதில்லை.

வரலாற்றை உணர வைப்பது தான் எதிர்கால சமுதாயத்தை எழுச்சியுள்ளதாக மாற்றும். முன்னேறும் என்பது இயங்கிக் கொண்டேயிருக்கும் நடைமுறை வளர்ச்சியாகும்.

அறிவார்ந்த செயல்களைப் பிறர்க்கு எடுத்துரைக்க வேண்டும். அறிவார்ந்த சிந்தனைகளை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

வினையே ஆடவர் உயிரே வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே (குறுந் : 135)

முயற்சியுடையது வினை. உடல்திறன் சார்ந்ததோ அறிவுத்திறன் சார்ந்ததோ அது மனையிலே ஒளிவீசும் மகளிர்க்கு உயிர் தருவதாக உணர்வு தருவதாக அமைய வேண்டும். ஆடவர் மட்டுமே பொருள் தேடிய காலம் மாற்றம் பெற்று விட்டது. ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் உணர்வுடைய உறவாக அறிவுத்துணையாக அமைய வேண்டும்.

உயிரினும் சிறந்தன்று நாணே ; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று (தொல் : கள:2:3)

அடங்க வேண்டியதற்கு அடக்கமாக இருக்கும் ஒழுக்கமே நாணம். கற்பு, ஆண் பெண் இருவர்க்கும் எப்போதும் அமைய வேண்டிய கட்டுப்பாடு. அதனுள் அனைத்துத்துறை அறிவும் அடங்கி இருக்க வேண்டும். இத்தகு நற்பண்புடையாரே உலகிற்கு ஏற்றவர். பண்புடையார்ப் பட்டுண்டு உலகம். அன்புடைமை ஆன்றகுடிப்பிறப்பு இரண்டும் பண்புடைமை என்று கூறுவர். மலர்க மனிதப்பண்பு.

★

தமிழர் நிலை? தமிழ்!

கவிஞர் சுரா

ஏர்வாடிக் கூடுபோல் ஏற்றம் பெற்றவனே!
யார்வாடிக் கிடந்தாலும் நலம்செய் வாயே! – இன்று
மார்வாடிக் கடையில் மலிந்தாய் ஏனோ!
சீர்வாடிக் கிடக்கின்றாய் சிங்கத் தமிழனே!

கார்பாடிச் சிறந்தவனே கவிமழை பொழிந்தவனே
போர்பாடிப் புரிந்தவனே புயலையும் கடந்தவனே!
ஏர்பாடி உழைப்பால் எழில்பல கண்டவனே! – ஓடாத
தேர்போல் நீயின்று உறங்குகிறாய் ஏனோ!

உலகையே ஆளப்பிறந்தாய் – சங்கப்
பலகையே அகன்றது சங்கத் தமிழா! – உனக்கு
கலகம் செய்வதுதான் கைவந்த கலையா? – தமிழுக்கு
கழகம் அமைத்திடு கலங்கரை ஆகிடு!

கடல்கடந்து கவிழ்க்கும் அலைகடந்து கலமேறி
மடல்தமிழை நடல்செய்து மல்குபுகழ் படைத்தாய் – கவிதை
மடல்மூலம் கோரிக்கை வைக்கின்றேன் தமிழா! – தமிழுக்கு
உடல்கொண்டு உழைத்தாய் உயிர்கொடுத்து வளர்ப்பாய்!

சாதிவெறி மதவெறிச் சண்டாளம் தேவையா?
நீதிநெறி நெறிநின்று நீடுபுகழ் பெற்றவனே
மேதினியில் உன்புகழ் மேலோங்க வேண்டாவா!
வீதிதோறும் சமைப்பாய் விளங்குதமிழ்ச் சங்கமே!

சிறகு முளைத்த சிந்தனைகள்

பா. சாந்தா

சிட்டுக்குருவியின் சிறகு பிடித்து
சுற்றிப்பார்க்கும் மனமே
நகரா கல்லின் தேரையாய்
முகம் காட்டுவது எப்போது

வெட்டப்படும் நகத்திற்காய்
விதவிதமாய் சாயமிடும் நீ
சாதனை இடமாம் மூளைக்கு
சாணையிடுவது எக்காலம்

நாய்க்கும் பூனைக்கும்
நல்ல காப்பகம் உண்டென்கிறாய்
நடுத்தெருவில் மனிதன்
நாதியற்றுக் கிடக்கிறான்

வானம் வசப்படத் துடிக்கும் நீ
பூமி குடைந்து புதுயுகம் காணப்
புறப்படுவது என்றோ

வண்ண மலரின் அழகில்
மனம் கொடுத்த நீ
வண்ணமில்லா மலரின்
வாசத்தை உணர்வது எப்போது

முரண்பாடுகளின் முற்றுகையே
உலகமென்றால்
ஒவ்வொன்றிலும் நல்லவற்றை
தேடித் திரிவதை விட்டுவிடு

நல்லவனாய் நீ இருந்தால்
நாடும் நலமாகும்.



ஆசியச்சுடர் - கவிதை மொழிபெயர்ப்பு

முனைவர் கா. சாகுல் ஹமீது,

மொழிபெயர்ப்பு எனும் கலை உலகெங்கும் பரவிக்கிடக்கின்ற மனித சமூகத்தினை ஒன்றிணைக்கும் பாலமாக உருக்கொண்டிருக்கின்றது. "பண்பாட்டுக் கலப்பிற்கு. அறிவுப் பெருக்கத்திற்கு, குறிப்பிட்ட இனத்தினை அறிந்து கொள்வதற்கு எனப்பல பெருமைக்குரிய எளிய கருவியாக அமைவது மொழிபெயர்ப்பு" என்பர்.

பிறமொழியினரின் பண்பாட்டு மரபுகளை உள்ளவாறு பேறுமொழியில் மொழிபெயர்த்துத் தருதல் சற்றுக் கடினமான பணியாகும். அதிலும் கவிதையை மொழி பெயர்ப்பது, "காற்றைப் பிடித்துக் கரகத்துக்குள் அடைக்கும் வேலை" எனக் கூறுவர். இதனை ஒரு சவாலாக ஏற்றுப் பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். நம் தமிழ்ச் சான்றோர்கள்.

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழி பெயர்ப்பு
அதர்ப்பட யாத்தலொடு அனமர பினவே"

எனத் தொல்காப்பியம் மொழிபெயர்ப்பைப் பற்றிப் பேசிய பொழுதும், ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே தமிழில் மொழிபெயர்ப்புப் பணி வீறு கொள்ளத் தொடங்கியது எனலாம்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

எனப்பாரதி முழங்குவதற்கு முன்பே கி.பி. 1714 இல் விவிலிய மொழிபெயர்ப்பும், கி.பி. 1793ஆம் ஆண்டில் ஜான்பனியனின் 'பில்கிரீம்ஸ் பிராக்ரஸ் (Pilgrims Progress)' கவிதை நூலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆக 18-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை கவிதை நூல்களும், பிறதுறை நூல்களும் தமிழுக்கு வந்தவண்ணமிருக்கின்றன.

அவற்றுள் ஒரு கவிதை நூல்தான் 'லைட் ஆஃப் ஆசியா (Light of Asia)' என்பதாகும். 'எட்வின் அர்னால்டு' எனும் ஆங்கிலக் கவிஞர் புத்தபிரானின் சரித்திரத்தின் பால் ஈர்க்கப்பட்டு, கவிதைக் காவியமாக ஆங்கிலத்தில் பாடிப் பரவசமடைந்துள்ளார். ஆங்கிலக் கவிதையின் கவித்துவத்தில் மெய்மறந்த கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, மூலத்தின் சில பகுதிகளை இனிய தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். கவிமணியின் எளிய சொல்லாட்சியும், அழகு நடையும் படிக்கத்தூண்டும் ஆர்வத்தை மக்களிடம் ஏற்படுத்தின.

கவிமணியை அடுத்து, 'லைட் ஆஃப் ஆசியா' முழுவதையும் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். போடிநாயக்கனூரைச் சார்ந்த மீ.உ. ஜான்முகமது என்பார். இவரின் இம்மொழி பெயர்ப்பு நூல்பற்றி தமிழுலகம் அறியவேண்டும் என்ற நோக்கிலேயே சில செய்திகளை இக்கட்டுரை பதிவு செய்ய முனைந்துள்ளது.

ஆசியச்சுடர் - அறிமுகம் :-

மொழிப் பெயர்ப்பாளராகிய மீ.உ.கான் முகமது இந்நூலை எண்பெரும் காதைகளை உடையதாக மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவை :

1. தலைக்காதை
2. வழிக்காதை
3. ஏதுநிகழ்ச்சிக்காதை
4. மாபெருந்துறவுக்காதை
5. தவக்காதை
6. போதிக்காதை
7. மீட்சிக்காதை
8. தர்மக்காதை

என்பவையாகும். இக்காதைகள் அனைத்தையும் ஒரே காலக்கட்டத்தில் இவர் மொழி பெயர்த்து விடவில்லை. மாறாக கி.பி. 1945 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தமது

மொழி பெயர்ப்பைத் தொடங்கிய இவர், கி.பி. 1954 ஆம் ஆண்டுவரை இப்பணியில் தம்மைக் கரைத்துக் கொண்டுள்ளார். அதாவது, லைட் ஆஃப் ஆசியா முழுவதையும் மொழி பெயர்த்திட, ஒன்பது ஆண்டுகள் எனும் நீண்ட கால இடைவெளி இவருக்குத் தேவைப்பட்டுள்ளது. ஆனாலும், ஒவ்வொரு காதை நிறைவு பெற்றதும், அதனை அச்சிட்டு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சந்தக்கவிதை :-

கி.பி. 1965 முதல் கி.பி. 1800 வரை எழுந்த மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளைத் தொகுத்துக் கூறிய டி.ஆர். ஸ்டைனர் என்பார், கவிதை மொழிபெயர்ப்பிற்கு உரியதாக எண்வகைக் கோட்பாடுகளை வரிசைப்படுத்துகிறார். அவற்றுள் மிக இன்றியமையாதனவாக இரண்டைக் கொள்ளலாம். அவை :

1. கவிதையை மொழிபெயர்ப்பவன் ஒரு கவிஞனாக இருக்க வேண்டும்

2. மூலநூலின் கவித்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பனவாகும்.

இவ்விரு கொள்கைகளுக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கியிருக்கிறார் கான்முகமது.

குறிப்பாக, புத்தர் பிரானை மாயாதேவி கருக்கொண்ட செய்தியை பாடலாகப் புனையும் கவிஞர்,

"ஆறு கதிருடைய ஆகாய வெள்ளியொன்று
ஆறு கொம்பு யானை அடையாள முள்ளதுவாம்
காமதேனு பாலும் கறுக்க வெளுத்ததுவாம்
வாமமட மங்கை மணிவயிற்றில் பாய்ந்ததுவாம்"

எனப்பாடுகிறார். தமிழின் இயங்குத் தன்மைக் கேற்ற சந்த நயமும், மூலநூலின் கவித்துவத்திற்கேற்ற மொழி நடையும் இங்கே கைகோத்திருப்பதைக் காணமுடிகிறது.

கருத்து மொழி பெயர்ப்பு :-

மொழிபெயர்ப்பு நெறிகள் பற்றிய கருத்துக்களை வெளியிடும் கருத்தாளர்களின் பெரும்பாலோர் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பதைக் காட்டிலும், கருத்தை உள்வாங்கிக் கொண்டு மொழி பெயர்த்தலே சிறப்பாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இக்கருத்தையே தமது மொழிபெயர்ப்பு நெறியாக உருவாக்கிக் கொண்டு மொழிபெயர்ப்பைத் தொடங்கியிருக்கிறார் கான்முகமது. இவரின் முகவுரைப் பாடலே இதற்குச் சான்றாக அமைகிறது.

"அயல்நாட்டுப் பாஷை அறிவுநூல் பொக்கிஷத்தை
நயன் நாட்டித் தாய்மொழியில் நான்தரவே
எண்ணியுள்ளேன்
சொல்லுக்குச் சொல்லாகச் சொல்லிமொழி
பேர்ப்பதில்லை
சொல்லும் கருத்தியல்பு சேராமல் பேர்த்திடுவேன்"

என்கிறார். இதன்மூலம் மற்றைய மொழி பெயர்ப்பாளர்களுக்கும் இவர் அறிவுரை வழங்கியிருக்கிறார் என்றே கொள்ளலாம்.

முடிவுரை :-

எட்வின் அர்னால்டு எனும் கிறித்தவர் ஆங்கிலத்தில் இயற்றிய புத்தர் பிரானின் வரலாற்றை கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை என்ற சைவரும், கான்முகமது என்ற இசுலாமியரும் தமிழில் பெயர்த்துத் தந்துள்ளமை எண்ணத் தகுந்ததாகும். புத்தரின் வாழ்வியல் நெறி மதம் கடந்து இவர்களை ஈர்த்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. மேலும், மூலநூல் ஆங்கில மொழியில் அமைந்தது என்றாலும் கூட, இந்தியப் பண்பாட்டு மரபில் ஊறித்திளைத்த ஒரு மாமனிதரின் கதை என்பதால், மொழிப் பெயர்ப்பில் பண்பாட்டுக் கூறுகள் பெயர்ப்பாளருக்குப் பெருந்தடையாய் அமையவில்லை என்பதையும் உணரமுடிகிறது.

★

ம.பொ.சி. யின் சிறப்புமிகு வரலாற்றுப் பார்வை

க. ஜெயபாலன், தமிழ் விரிவுரையாளர்

வரலாறு படைப்பதற்கு கடந்தகால வரலாறு மிகமிக அவசியம். 21-ம் நூற்றாண்டில் உள்ள இன்றைய தமிழினம் கடந்தகால வரலாறுகளை மிகச்சிறப்பாக அணுகி வருகிறது. மறைமலையடிகள், கா.சு.பிள்ளை, பாவாணர், அப்பாத்துரையார் போன்றோர் தமிழர் தங்கள் வரலாற்றைச் சரியாய் உணர வழிகாட்டியோரில் முக்கியமானவர்களாவர். இவர்களுக் கிணையானதொரு வரலாற்றுப் பார்வையை உடையவர் ம.பொ.சிவஞானம். அப்பார்வை குறித்து மிகச் சுருக்கமாக இங்கு காண்போம்.

20-ம் நூற்றாண்டின் தமிழக தவப்புதல்வர்களில் ஒருவர் ம.பொ.சி. இலக்கியம், கலை, மொழி, அரசியல் எனப் பல்வேறு தளங்களில் பெரும் பணியாற்றியவர். சிலம்புச் செல்வர் அதேநேரம் எல்லை காத்த வீரர். வள்ளுவர், வள்ளலார் வழி வந்த அன்பு நெறியினர் அதே வேளை காந்தி, காரல் மார்க்சை அறிந்தவர் : புரிந்தவர். செயல்களாலும் நூல்களாலும் என்றும் வாழும்வீரர் அவர்.

கால்டுவெல், போப் போன்ற ஐரோப்பிய பாதிரிமார்கள் காட்டிய புத்தொளியும், பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள், பாவாணர் போன்றோர் காட்டிய பாதையும், பெரியார் போன்றோரின் தன்மான இலக்கியமும தமிழர் வரலாற்றில் புதுவெளிச்சம் காட்டிற்று. இவைகளுக்கிடையில் ம.பொ.சி.யின் பார்வை சிறப்பானது. எளிமையான மொழி நடையில் அழுத்தமான வரலாற்று உண்மைகளைப் பதிவு செய்தது. சமகால வாழ்வில் தமிழர் வெற்றி பெற அவரின் பார்வை முக்கியமானது. சுகமாக அமர்ந்து கொண்டு நூல் எழுதியவர் அல்லர் அவர். அவரே எழுதுகிறார் :"விடுதலைப் போரில் நேரில் கலந்தவன் ; சிறைவாசம், அபராதம், நாடு கடத்தல், தடியடி ஆசிய கொடுமைகளையெல்லாம் அனுபவித்தவன். ஆதலால் நான் கலந்து கொள்ளாத - என் கண்களாலும் காணாத கால கட்டங்களைப் பற்றி உணர்ச்சியோடு விரித்துரைக்க என்னால் முடியுமென்றே நான் நம்புகிறேன்." (பக் : 8, காந்தியடிகள் காலத்துக்கு முற்பட்ட விடுதலைப்போர்) எனவே இவரின் வரலாற்றுப் பார்வையை, செய்திகளை அவ்வளவு எளிதாக விலக்கிவிட இயலாது.

தெற்கிலிருந்து வரலாறு எழுகிறது

இந்திய வரலாற்றை கங்கைக் கரையிலிருந்து அல்ல காவிரிக் கரையிலிருந்து துவக்க வேண்டும் என்பர் அறிஞர்கள். அறிவியல் அடிப்படையில் இலெமூரியக் கோட்பாடுகளும் இதற்கு அணி செய்யும். 1857-ல் நடைபெற்ற சிப்பாய் புரட்சிக்கு முந்திய கால கட்டத்தை, அப்போதைய தமிழகப் பங்களிப்பை மிகச் சரியாய்க் கட்டியுள்ளார் ம.பொ.சி. அவரின் இப்பார்வை எல்லை காக்கும் போரிலும் நின்றதை ஆய்வர்கள் அறிவர். தென்னகமே இந்திய தேசிய வலுவின் மையம் என்பார் அப்பாத்துரையார். இதை வெள்ளையர்கள், வடபுல ஆசிரியர்கள் உணர்ந்தார்களோ இல்லையோ ம.பொ.சி. சரியாக உணர்ந்தார். அவரின் பலநூல்கள் இதைப் பறை சாற்றும்.

கடந்த காலமும் கணிப்பொறியுகமும்

ஒருலகமயமாக்கலும், கணினிமயமாக்கலும் பரவும் இந்நாளில் கடந்தகால வரலாறும், மொழி, இனப்பற்றும் தேவையா எனச்சிலர் மேலெழுந்தவாரியாய் எண்ணலாம். சீனர், ஜப்பானியர், ஜெர்மானியர், பிரெஞ்சியர் போன்றோர் எக்காலத்தும தங்கள் இன், மொழி வேர்களில் புத்தம்புது அறிவியல் நீரூற்றைப் பாய்ச்சி வெற்றிக்கனிகள் பறிப்பதை நாம் புரிந்திட வேண்டும். இவ்வகையான புரிதலையும், புரிதல் பின்னர் செயல்வடிவம் பெற உள்ளத் தடைகளையும் தெளிவாக வழங்குபவர் ம. பொ. சி.

ம.பொ.சி. யின் நடுவுநிலை உள்ளம்

ஆந்திரர், மராத்தியர், கன்னடர் உள்ளிட்ட பிறமொழியினர் வருகை தமிழகத்தில் தந்த இடுக்கண்களை தெளிவாக உரைத்தவர் ம.பொ.சி. "விடுதலைப் போரில் தமிழகம்", "விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு" முதலிய நூல்கள் இதற்குச் சான்று பகரும். ஆயினும் அண்ணாமலை ரெட்டியார், கட்டபொம்மன் போன்றோரின் மொழி, விடுதலைப் பணிகளைப் பாராட்டியவர் ம.பொ.சி. இவர் இல்லையெனில் கட்டபொம்மன் வரலாறு ஒரு பழங்கதையாகவே போயிருக்கலாம். மொழிக்கும், இனத்திற்கு தொண்டு செய்த எவரையும் மறக்காத தூய உள்ளம் கொண்டவர் இவர். சங்கக் கவிஞர்கள், இளங்கோவடிகளுக்குப் பின்னர் சமகால அரசியல்பாடும் கவிஞர்கள் பாளையக்காரர்கள் காலத்தில்தான் தோன்றினர் என்கிறார் மா.பொ.சி. வ.உ.சி. யின் சுயசரிதை அவரது சுயசரிதை மட்டுமல்ல தமிழக விடுதலைப் போராட்ட வரலாறு என்கிறார் ம.பொ.சி.

வள்ளலாரும் ம.பொ.சி. யும்

"இந்த தேசிய எழுச்சிக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை வள்ளலாரே முன்னோடி" என்ற ம.பொ.சி. "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" நூலிற்கு சாகித்ய அகாடெமி பரிசு பெற்றார். நாட்டுப்பற்றினும் தாய்மொழிப்பற்று வலிமையானது என்றுரைத்த மா.பொ.சி எழுதுகிறார்.

"தமிழர் இனவுணர்ச்சியற்ற 'பரந்த' நோக்குடையவராதலால் இராமலிங்கம் பிறந்த தமிழகத்தில் - தமிழரால், அவருடைய புரட்சிகரமான சீர்த்திருத்தக் கொள்கைக்கிணங்க அவர் போற்றப்படவில்லை. சுருங்கச் சொன்னால், இராம்மோகனர், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகிய மூவருக்கும் அவர்கள் விரும்பாத நிலையில் சுயசாதி - சுய இனச் சக்திகள் கைக்கொடுத்தன. இராமலிங்கருக்கோ சுயசாதி சக்தியற்றது ; சுயஇனமோ உணர்ச்சியற்று" (பக்கம் : 41, வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு) என்று அறிவைத் தூசு தட்டிக் கிளப்புகிறார்.

முடிவுரை :

இக்கட்டுரை ஆங்காங்கே சிற்சில கருத்துகளைத் தொட்டுக் காட்டிச் சென்றிருக்கிறது. இவற்றின் சாரமாகப் பின்வரும் செய்திகள் தரலாம்.

1. தங்கள் வரலாற்று நாயகர்களை, இலக்கியங்களை, பங்களிப்பைச் சரியாகத் தமிழருக்கு எடுத்துரைத்தார் ம.பொ.சி.
2. மொழிப்பற்றுச் செழிப்பின்றி நாட்டுப்பற்றில்லை என்றுணர்த்தியவர்
3. தேசிய, திராவிட, தமிழ் இயக்கங்களின் மொழி நிலையைச் சரியாக உணர்த்தியவர்.

புதிய விடியல் தேடும் தமிழ் உலகம் அதற்குத் தக்க அறிவு விளக்குகளாக ம.பொ.சி நூல்களைக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை

★

துணை நூல்கள் :

1. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - ம.பொ.சி
2. காந்தியடிகள் காலத்துக்கு முற்பட்ட விடுதலைப் போர் - ம.பொ.சி
3. விடுதலைப்போரில் தமிழகம் - ம.பொ.சி.
4. விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு - ம.பொ.சி.
5. எனது போராட்டம் - ம.பொ.சி.
6. தமிழகத்தில் பிறமொழியினர் - ம.பொ.சி.
7. கப்பலோட்டிய தமிழன் - ம.பொ.சி.
8. தென்னாட்சிப் போர்க்களங்கள் - கா. அப்பாத்துரை
9. ம.பொ.சி. கண்ட தமிழகம் - வெள்ளையாம் பட்டு சுந்தரம்
10. விடுதலை வேள்வியில் தமிழகம் - ஸ்டாலின் குணசேகரன்.

WORLD SCHOLARS ON TAMIL LANGUAGE

Dr. Aru. Alagappan, M.A., M.Litt., Ph.D.,

The Tamil never get tired of singing the glory of their language. Is it only vanity? Are they simply beating their own drum?

Take any poet starting right from Tolkappian down to Bharatidasan or even Kannadasan. Each of them has had something to say in praise of Tamil. Of course, it is their language, and what else can you expect? That is what one would think.

But my study of some of the thinkers of outside world showed that all this praise and admiration for Tamil is the result of research and comparative study. The Tamil writers were proud of their language, with ample justification. I am giving here, just a few statements of the foreigners who were attracted to Tamil by its greatness and richness and spent a lot of time in analysing its greatness. These quotations will prove at the Tamil is indeed the most ancient, the greatest and the richest of all the languages of the world. For, they were made after a deep study and comparison with all the other great languages of the world.

HIGHTLY CULTIVATED LANGUAGE

Tamil is the most highly cultivated language and possesses the richest store of indigenous literature. MAX MULLER

OLDEST LANGUAGE

Being Dravidians, the inhabitants of North India naturally spoke a Dravidian language in which the earliest proportion of the words used are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages. REV H HERAS

NO LANGUAGE THAN TAMIL

No language combines greater force with equal brecity than Tamil and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind than Tamil REV PERCIVAL

TAMIL WORDS

Sanskrit, Hebrew, Greek - The three classical languages of the world contain Tamil words in their vocabulary. Rhys Davids

GREAT CULTURAL LANGUAGE

Tamil is one of the great cultural languages of the World. It is the classical language in the true sense of the term and it is at the same time a living language.

DR. KAMIL ZVELEBIL

PRODUCTS OF ELEBORATE CIVILISATION

As it is known to us, the Tamil language and civilion are the products of a very long period of a somewhat elaborate civilisation. Dr. Gilbert Slater

IF I FEEL SORRY FOR ANYTHING

If at all I feel sorry for anything in my life, it is for the opportunity I could not get to learn Tamil - the noble language.

MAHATMA GANDHI

CLASSICAL TONGUE

Tamil is perhaps the only example of an ancient classical tongue which has survived as a spoken language for more than 2500 years without its basic structure almost unchanged. ENCYCLOPEDIA BRITANNICA

TAMIL ALONE STAND APART

The Tamil cultural tradition is independent, not derived, not imitative ; it is pre Sanskrit, and from this point of view Tamil alone stands apart when compared with all other major languages and literatures of India. Dr. Kamil Zvelebil

TAMIL CALENDER

This unique calender (Time Calender) aims at a degree of astronomical accuracy beyond that of any other calender in use. DR. SLATER.

LANGUAGE OF THE WHOLE OF INDIA

Tamil or Dravida was not merely the language of South India, but before the Aryans came it was the language of the whole India was spoken from Kashmir to Cape Comorin.

Dr. B.R. AMBEDKAR

MORE POLISHED, EXACT, MORE COPIOUS

It is not perhaps extravagant to say that in its poetic form the Tamil is more polished and exact than Greek, and, in both dialects with its borrowed treasures, more copious than Latin. In its fullness and power, it more resembles English and German more than any other language.Dr. WINSLOW

UNBROKEN LITERARY TRADITIONS

Tamil can be claimed to be one of the longest unbroken literary traditions of any of the world;s living language.A.L. BASHAM, B.A., Ph.D., F.R.A.S.,

THE GREAT ANTIQUITY OF TAMIL

The great antiquity of Tamil, which is one worthly rival of Sanskrit is abundantly plain. Rev. G.U. POPE

INSTRUMENT OF EXACT THOUGHT

Tamil is the one best fitted to be the instrument of exact thought.

Dr. GILBERT SLATER

MOST COPIOUS

Tamil is the earliest cultivated of all the Dravidians idioms, the most copious and contains the largest portion and the richest of indubitably ancient forms. Dr. CALDWEL

SENSE OF LOGIC

The Tamil Language is extraordinary in its subtlety and sense of logic.

Dr. Gilbert Slater

TAMIL IN NORTH INDIA BEFORE ARYANS

It is also well-known fact accepted by all scholars that there are many Sanskrit words which are all Dravidian and this will confirm the conclusion that the Dravidian tongue was prevalent in North India before the Aryans came and occupied it. The same conclusion is forced upon us by and examination of all vernaculars of North India. No reasonable doubt can therefore be entertained as the Dravidian.... speech once being spoken in North India.Prof. M.D. Bandarkar M.A.,

FULLY INDIGENOUR

The earliest literature in Tamil is a model unto itself. It is absolutely unique in the sense that, in subject matter, thought content. language and form it is entirely and fully indigenous, that is, Tamil, or, if we want (though I dislike this term when talking about literature), Dravidian. Dr. Kamil Zvelebil

PURANANURU : CLASSICAL

The poet Mathurai Tamilkkuttanar, has succeeded, using three simple adjectives and three simple nouns, to convey the picture of a hare in terms of the animals; most typical features ; it is simple and perfect, in one world, classical.

Dr. Kamil Zvelebil

TOLKAPPIYAM

Finest Monument of Human Intelligence

The Tolkappiyam represents much more that just the most ancient Tamil grammer extend. It is not only one of the finest monuments of human intelligence and intellect preserved in the Indian tradition ; it is also the first literary expression of the indigenous, pre-Aryan Indian Civilization. It represents the essence and the summary of classical Tamil culture. Dr. Kamil Zvelebil

வீர மதுரகவி

அவர்களின் வாழ்த்து

தமிழர்கள் ஒரு தலைவன் கட்டுப்பாட்டில் இருந்த போது இந்தியாவின் தென்பகுதியையும் தென்கிழக்கு ஆசியாவையும் வென்றுதத்தம் கலாச்சாரத்தைப் பரப்பினர்.

இக்கலாச்சார அடையாங்களை இன்றும் அங்கு நாம் காணலாம். வட இந்திய அரசர்கள் இப்பகுதிகளுக்குச் சென்றதற்கு ஆதாரமேதுமில்லை. தமிழர்கள் பிளவுபட்ட பிறகு உலகெங்கும் அடிமைகளாக இருக்க வேண்டி உள்ளது.

இந்நிலை போக்க மீண்டும் தமிழினம் தலை எடுக்க ஒரு தலைவன் வழி நின்று பழைய நிலையை அடையப் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற 5-ஆம் மாநாடு வழி வகுத்திடும் என உலகத்தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

புதுவை மாநில மக்கள் மாநாட்டுத் தீர்மானங்களைப் பெரிதும் எதிர் பார்க்கிறார்கள்.

புதுச்சேரியின் குரல் இதழ் மாநாடு வெற்றிபெற வாழ்த்துகிறது.

MELODIOUS LANGUAGE

Tamil is one of the most melodious languages of the world. The Tamil literature shared antiquity with other ancient and classical literatures of the world but at the same time continued to florish as a vigorous medium of speech and writing. This is something that cannot be said of some of the ancient languages.

Datuk seri Dr. Mahathir Mohamad.

RELIGIOUS LITERATURE

The real glory of midieval Tamil literature, however, is undoubtedly the Saivite and Vaisnavite devotional teaching which are among the greatest religious literature of the world.
A.L. Basham

HIGHLY DEVELOPED CULTURE

The invading Aryans, moreover found in India, an already hightly developed culture, the main representative of which were the Dravidians who are still predominantly in Southern India.
Dr. Betty Heimann

MADRAS-BIRTHPLACE OF CIVILIZATION

"Madras, as a symbol of a wider zone, though not as a city, may therefore well be considered as the possible birth place of a long enduring and wide-spread civilization in the earliest history of mankind". U.R. Ehrenfenfels Ph.D.,

CLEVEREST OF HUMAN THOUGHT

"The philosophical system of Saiva Siddhanta, a system which may be ranked among the most perfect and cleverest of human thought". Dr. K. Zvelebil

FIRST EVER FESTIVAL

Pongal was the first ever festival celebrated by man to appreciate the importance and dignity of labour. Mr. Lee Kuan Yew.

★

ஊழலை உலுக்கிய உத்தமர்

கட்டுரையாக்கம் : திருக்குறள் தூதர் மு. அன்வர் பாட்சா



மனிதகுல படைப்பு, உயர் இலக்கிய நூல் :

தன்னைப் பற்றியோ, தன் வீட்டைப் பற்றியோ, தன் நாட்டைப் பற்றியோ, தன் தலைவனைப் பற்றியோ, தன் இனத்தைப் பற்றியோ, தன் சமயத்தைப் பற்றியோ பாடு பொருளாக, கருப்பொருளாக ஒரு இலக்கியம் படைக்கப் படுமானால் அது காலத்தால் மறைந்து விடும். அந்நிலை கடந்து வையம் முழுவதும், மனிதன் எங்கு பிறந்தாலும், அவன் மனிதப் பண்புடன் வாழ வேண்டும் என்ற உயரிய அவாவினார். சமுதாயத்தின் அங்கமாக தனிமனிதனைக் கருப்பொருளாக்கி, தனி மனித ஒழுக்கத்தை மையப்படுத்தி, செயத்தக்கவை இவை, செயத்தகாதவை இவை என நெறிப்படுத்தி, அறவாழக்கையில் சிறந்து பிறரால் வணங்கப்படும் நிலைக்கு ஒருவன் உயர வழி சொல்லும் ஓர் உன்னத நூலாக, மனிதநேய நூலாக, உலக மாந்தர் அனைவர்க்கும் பொதுவான ஓர் நூலாக, காலத்தால் அழியாத இலக்கியமாக ஓர் மனிதரால் எழுதப்பட்ட நூலே திருக்குறளாகும்.

வாழ்க்கைத்தத்துவமும், சமுதாயச் சிற்பியும் :

வள்ளுவர் தான் இயற்றிய பெருநூலில் செய் என்று கூறியதைவிட செய்யற்க என அறிவுறுத்தியவைகளே அதிகம். சான்றாக இராமாயண, மகாபாரத காலந்தொட்டே மனிதருக்குள் சினம், அழுக்காறு, துவேஷம், வெகுதல் கடுஞ்சொல், கொடுங்கோன்மை, பிறன்மனை விழைதல், சூது போன்ற பல மனிதப்பண்பற்ற, தரக்குறைவான செயற்பாடுகள் இன்றளவும் நடந்தேறிவருகின்றன. இவ்வகையில் மனித வாழ்க்கையை இரு பக்கங்களாகப் பிரிக்கலாம்.

1. ஒன்று அறவழிச் சிந்தனையின் வழியான வாழ்க்கை மற்றது பிறவழிச் சிந்தனையின் வாழ்க்கை

2. மாந்தர்தம் உள்ளத்தனைது உயர்வு (595)
எண்ணிய எண்ணியாங்கு எய்துப (666)

ஆதலின் எண்ணம்போல் வாழ்வையும் என்ற ஆன்றோர் மொழிக்கொப்ப, மனிதனின் உயர்விற்கும், வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் மையமாக மனமே கோலோச்சுகிறது.

எனவே, சமுதாயம் மலர்ந்திட சமுதாயத்தின் அங்கமான தனிமனித மனம் பண்பட்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி மனம் மாறுபட்டிருந்தால் அது பலவகையான கேடுகளை விளைவிக்கும். இவைகளைக் களைந்தெறிய வேண்டும் என்ற கருத்துகளை வள்ளுவப் பேரரசர் தம் குறள்மணிகளில் ஆணித்தரமாக, புரிந்து கற்போர் ஏற்கும் வகையில், உள்ளுறையாக ஆங்காங்கே, அழகாக எடுத்தியம்புகிறார்.

எம் பார்வையில் திருவள்ளுவர் :

“ஊழல்” என்னும் மரத்தை முழு பலத்துடன் உலுக்கிய ஒரு மாமனிதராக, உத்தமராக யாம் வள்ளுவப் பேரரசனைப் பார்க்கின்றோம். ஆம் அது பற்றிய இக்கட்டுரையில் சில ஆய்வுக்கருத்துகள் காண்போம்.

ஊழல் என்னும் சொல்லாட்சி திருக்குறளில் இல்லை. ஆனால், உள்ளங்களைக் காயப்படுத்தி, மனங்களை ரணங்களாக்கி

1. பெரும் பொருள் சேர்க்கும் பேராசை
2. பிறர் பொருளை கவர நினைத்தல்
3. விரைந்து பொருளீட்ட வேண்டும் என்ற உணர்வு சமுதாயத்தில் மனித மனத்தின் வேரோடி வளரத் தொடங்கியுள்ளது.

வள்ளுவர் பார்வையில் சமுதாய ஊழல்கள் :

வள்ளுவரின் திருக்குறளில் அவர் வாழ்ந்த காலத்திலும் சரி, தற்காலத்திலும் சரி, இனி எதிர்வரும் காலத்திலும் சரி மனித குலம் செம்மாந்த நிலையை அடைய வேண்டும் என்னும் நிலையே மேலே தங்கி நிற்கிறது.

செம்மாந்த நிலைக்கு மாறுபாடான நிலைகளைக்கண்ட அவர் பொது நலப்பார்வையில் வெகுண்டெழுந்து சாடுகிறார். வாழ்வை சீர்மைப்படுத்திக் கொள்ள கண்ணின்று கண்ணறக் கூறுகிறார். இடித்துரைக்கிறார். நேயம் என்பது, நட்பு என்பது நகுதல் பொருட்டன்று.

நல்ல விளைச்சல் நிலத்தில் கூடவே களையும் இருப்பதுபோல், மனித மனத்தில் உயர்ந்த சிந்தனைகளின் கூடவே களையாக ஊழல் சிந்தனைகளும் துளிர்விடத் தொட்ங்குகின்றன. அதனை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்பதே நம் வள்ளுவப் பேரரசானின் அன்புக்கட்டளை. நல்லதை நினை நன்மை விளையும் ; தீயதை வேண்டாம், நினைக்கவே வேண்டாம். எண்ணம்தான் வாழ்வாகிறது.

<u>திருவள்ளுவர் ஊழல் எதிர்ப்பாளர்</u>

இன்று சமுதாயத்தில் அனைத்து மட்டங்களிலும் அனைத்து துறைகளிலும், நீதி, கல்வி, மருத்துவம், விவசாயம், காவல், விளையாட்டு என அங்கிங்கெனாதபடி எங்கும் ஊழல் தலைவிரித்தாடுகிறது.

ஊழல் மூன்று நிலைகளில் உருவெடுக்கிறது.

1. விரைந்து அதாவது சீக்கிரம் பணக்காரன் ஆக வேண்டும்.

2. மிக அதிக அளவில் பணம் சேர்க்க வேண்டும்

3. அதற்காக எதையும் செய்து, நினைத்ததை சாதிக்க வேண்டும் - என்ற நிலைகள்.

இந்நிலையானது பிறர் துன்பத்தை ஒரு பொருட்டாகக் கொள்வதில்லை. யார் எக்கேடு கெட்டாலும், தானும், தன்னைச் சார்ந்தோரும் நலமடைய வேண்டும் என்ற உள்ளுணர்வு மேலோங்குகிறது. ஊழல் செய்யும் நிலை மையமாகிறது.

எடுத்துக்காட்டாக மகாபார குருசேத்திர யுத்தம் மூளக் காரணமான காட்சியைக் கூறலாம்.

மனத்தில் பொறாமை பேராசை, தன்னலம் என்ற புயல் மையமிட்டிருக்கும் போது, ஊழல் என்ற சூறாவளிக்காற்று சுழன்றடிக்கத்தானே செய்யும். ஆம்.

கௌரவர்கள் பாண்டவர்களுக்கு நியாயமான முறையில் சேர வேண்டிய சொத்துகளைத் தர மறுப்பதுடன், ஐந்து கிராமங்கள் கூட தரமறுப்பதுடன், சூதினாலும், தொடர்ந்து போரினாலும் பாண்டவர்களை முழுமையாக அழித்துவிடத் தீர்மானிக்கும் துரியோதனின் கருத்துக்கு, திருதராட்டிரன் சான்றோர் எதிர்த்தும் ஏற்காமல் பச்சைக்கொடி காட்டுகிறானே அது கடைந்தெடுத்த ஊழல் உணர்வல்லவா?

மனம் ஊழலின் வயப்படும்போது, அறிவு கூர் மழுங்குகிறது. பின் விளைவுகளை சிந்தனை செய்ய மறுக்கிறது. ஒரு தவற்றை மறைக்க ஆயிரம் பொய்கள், தொடர்ந்து அதை மறைக்க திருட்டு மனம் போடும் திட்டங்கள், சூது, ஏய்த்தல் இப்படி பல நிலைகளில் ஊழல் வளர்ந்து ஊழல் செய்தவனையே படுகுழியில் தள்ளி விடுகிறது.

தீய வழிகளில் ஊழல் செய்து பொருள் சேர்ப்பது, அதை பாதுகாக்க நினைப்பது, திருவள்ளுவர் பார்வையில் பச்சை மண்ணால் செய்யப்பட்ட பாத்திரத்தில் ஊற்றி வைக்கப்பட்ட நீரானது, அதில் தங்காது மண்கலப்பாத்திரமும் கரைந்து, நீரும் வீணாகி விடுவதைப் போல. தீயவழிச் செல்வம் சேர்ந்தவனிடம் தங்காது, அவனையும் சீரழித்து, துன்ப நிலைக்கு ஆளாக்கிவிட்டுவிடும் என்பதனை நெற்றிப் பொட்டில் அறைவதைப் போல ஓர் குறளில்

சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் பசுமகட்

கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று

ஊழல் செய்து தீய வழிகளால், பிறர்மனங்களை ரணமாக்கிப் பெற்ற செல்வம், சேர்த்த செல்வம் பொருள் சேர்த்தவனை அழச்செய்து, துன்பத்தில் சிக்கவைத்துவிட்டு நீங்கிவிடும். இதனை

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் (559)
என்ற குறளின் வழி

இடித்துரைக்கிறார்.

தனி மனித ஒழுக்கத்தைப் பெரிதும் போற்றுகிறார். காரணம் தனி மனிதன்தான் சமுதாயத்தின் அங்கமாகின்றான். தனி மனித ஒழுக்கக்கேடு, சமுதாயக்கேடாகி விடுகிறது.

சமுதாயம் விரும்பாத தனிமனிதனை நச்சப்படாதவன் என்று சாடுகிறார். இவர்கள் மனத்தளவில் கயவர்களாகவே இருப்பார்கள். இந்நிலையினர் பிறர் பொருளைத் தமதாக்கிக் கொள்ளும் உணர்வுடனே இருப்பர். அவர்களை நோக்கி எச்சரிக்கை செய்கிறார்.

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் (177)
கெடுவல் யான் என்பதறிக (116) என்றும்,

எதுவும் தேவைக்கு மேல் தனக்கு வேண்டும் என்ற பேராசை உணர்வும் ஒரு வகையில் ஊழல் வளர வேர்விடுகிறது.

இங்கு சிந்தனையாளர் டால்ஸ்டாய் கூற்று எம் நினைவிற்கு வருகிறது. ஒருவன் இன்று மாலை சூரியன் மறைவதற்குள் நீ ஓடியபின் மீண்டும் அதே இடத்திற்கு வந்தடைந்து விட வேண்டும். அவ்வாறு ஓடினால் நீ ஓடிய நிலப்பரப்பு அனைத்தும் உனக்கே சொந்தம் எனக்கூறினான்.

ஆனால், ஓடியவனோ கொழுந்து விட்டெரிந்த பேராசையினால் வரம்புமீறி ஓடி, தொடங்கிய இடத்திற்கு மீண்டும் உரிய நேரத்தில் வர இயலாது மூச்சிறைத்து ஓடி வந்து, கீழே விழுந்து உயிர் துறந்தான். அவனை ஆறடி நிலத்தில் அடக்கம் செய்தனர்.

இந்த நிலையாமைத் தத்துவத்தை உணர மனிதமனம் மறுக்கிறது. விளைவு பேராசையின் வயப்படுகிறது. தேவைக்கு மேலாகப் பெரும்பொருள் ஈட்ட எண்ணுகிறது. பிறர்க்கு பயனுற வாழவேண்டும் என்ற உணர்வு மறைகிறது.

<u>பல்துறை ஊழல்கள் :-</u>

1. தவக்கோலமிட்டு ஊழல்
2. பொருளாதாரத்தில் ஊழல்
3. ஆட்சியில் - ஊழல்
4. சூது மது இவைகளின் மயக்கத்தில் ஊழல்
5. பிறன்மனை விரும்பும் ஊழல்
6. பிறர்பொருள் கெல்லுதல் ஊழல்
7. நடுவுநிலைமை தவறி ஊழல்
8. முறை செய்துகாவாத காவலில் ஊழல்

இவ்வாறு பலவகைகளில் ஊழல் என்னும் மரத்தை வள்ளுவர் என்னும் மாமனிதர் உலுக்குவதை நாம் குறள்வழிக் காணலாம்.

புதிய சமுதாயம் மலர்ந்திட, புதுமைகளும், அறநெறியும், வாழ்வில் மணந்திட, வாழ்வியல் சட்டத்தை நெறிப்படுத்திய வழிகாட்டி, மாமனிதர் திருவள்ளுவர் தவறுகளைச்சாடி அதிலிருந்து மீண்டுவர, தாயன்புடன் இடித்துரைக்கும் பாங்கு அறை "ஊழலை உலுக்கிய உத்தமர்" எனப் பறைசாற்றுகிறது.

திருக்குறள் கடலில் நாம் மூழ்கிற அளவிற்கு முத்தெடுத்து வரலாம். இது உண்மை. இதனை நாம் உணர்ந்து, உலகிற்கு எடுத்துக்காட்டி, வள்ளுவர் விரும்பும் சமுதாயம் உருவாகிட முனைந்து நிற்போம்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப (666)" என்ற அவர் கூற்றுப்படியே செயல்படுவோம்.

தாமின் புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவோம். வளமடைவோம்! உயர்வடைவோம்!

வாழ்க வளமுடன்!

திருக்குறள் தூதர்
மு. அன்வர் பாட்சா, கோயமுத்தூர்.

வள்ளலார் சன்மார்க்கம்

கவிஞர் அருள்நம்பி

சன்மார்க்கம் என்பதற்குப் பல பெரியவர்கள் பலவாறாகப் பொருள் கூறி இருக்கலாம். தவறல்ல. அது அவர்களுடைய கல்வியின் ஆழம். ஆனால் அடியேனுடைய அனுபவப் பொருள் அதுவல்ல. சிறிது மாறுபட்டது.

சன்மார்க்கம் என்பது பக்தியின் சீர்திருத்தம். கடவுள் ஒருவர். அவர் அருட்பெருஞ்ஜோதியர். அந்த அருட்பெருஞ்ஜோதி அருளால் பெறும் அனுபவமே சன்மார்க்கம். இதுவே நன்மார்க்கம்.

அருளுடையார் எல்லோரும் சமரச சன்மார்க்கம் அடைந்தவரே! என்னும் பாடலால் அறியலாம். சன்மார்க்கம் சமயமல்ல. பலர் இதனைச் சன்மார்க்கச் சமயமென்றும் சன்மார்க்க மதமென்றும் பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

சன்மார்க்கம் சந்யாசமார்க்கமல்ல, சந்யாசத்திற்கு எதிரான மார்க்கமும் அல்ல. இல்லற ஞாயம் ஓங்கும் நல்லறமார்க்கம் அன்பு மார்க்கம்.

இருபாலாருக்கும் உகந்த மார்க்கம். தன்னை உணரும் தத்துவத் தவமார்க்கம் மனித நேயம் போற்றும் புனித நட்பு மார்க்கம். தமிழ்மார்க்கம், சன்மார்க்கம்.

வள்ளலாருக்கு முன் பல மதங்கள் கடவுள் நெறி காட்டும் பொது நெறியிலிருந்து விலகி மக்களுக்கு நல்வழிக் காட்டாமல் பூசல்களை விளைவித்த போது வள்ளலார் சமரச சன்மார்க்கம் அருளினார்.

வள்ளலாருக்கு முன்னும் சன்மார்க்கம் இருந்தது. திருமூலர், தாயுமானவர் போன்றவர்கள் தம் பாடல்களில் ஆங்காங்கே அதுபற்றிக் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் வள்ளலார் போல் நடைமுறைப்படுத்தும்படியாக தெளிவாகவும், எளிமையாகவும், இனிமையாகவும், விரிவாகவும், உறுதியாகவும் தெரிவிக்கவில்லை.

வள்ளலார்தான் சன்மார்க்கத்தின் முழுப்பயனையும் உணருமாறு, உணர்ந்து அனுபவிக்குமாறு திருவருட்பாவில் பாடினார்.

இதற்குப் பெரிதும் உறுதுணையாக நின்ற நூல் திருவாசகம். இதுவே வள்ளலாருக்குக் குருவாசகம்.

சன்மார்க்கம் புதிதல்ல. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதில் நான்காவதாக உள்ள ஞானமார்க்கமே சன்மார்க்கம் என்பாரும் உளர். மாணிக்கவாசகர் அனுபவமே இந்தச் சன்மார்க்கம்.

வள்ளலார் தம் வழிபடுநூலாகத் திருவாசகத்தைக் கொண்டார். இந்த நூல் வள்ளலார் உடலில் உயிரில் ஊனில் கலந்ததால் தாம் கண்ட அனுபவச் செந்தேனைச் சன்மார்க்கச் சிந்தனைகளாக எல்லோருக்கும் புரியும் வண்ணம் திருவருட்பாவில் பாடினார்.

மேலும் என் மார்க்கம் இறவாத சன்மார்க்கம் என்று கூறி நம்மை மரணப்பயப்பிடியிலிருந்து விடுவிக்க முயன்ற அருள்சித்தர். அதற்காகவே மரணமிலாப் பெருவாழ்வென்னும் மாளிகையைக் கட்டி, அந்த மாளிகைக்குள் செல்ல பல, படிகள் அமைந்த வழிகளையும் நமக்குக் காட்டியுள்ளார்.

<u>அவைகளில் சில :</u>

உயிரியக்கம் என்னும் ஜீவ காருண்யத்தை முதன்மைச் சேவையாக்குதல், அந்தச் சேவையில் அமைதிகாத்தல், பசி நீக்குதல், ஆருயிர்க்கு அன்பு செய்தல், தன்னைப்போல் பிறரைப் பாவித்தல், எளியோர்க்கு இரங்கல், எந்த இடத்திலும், வந்த நிலையிலும் எந்தத் தொழிலிலும் நடுநிலைமைத் தவறாதிருத்தல் ; சேவையில் பொது நோக்கம் கமழச் செய்தல் ; சீர்திருத்திய மரக்கறி உணவு உட்கொள்ளுதல் ; பெரியோர்களிடத்தில் அளவறிந்து பழகுதல், பச்சிலை மூலிகைகளால் தம்முடம்பைப் பத்திரப்படுத்தி ஆரோக்கிய வாழ்விற்கு அடிகோலுதல், தெய்வ நம்பிக்கை எய்தல், பல ஞான யோகப் பயிற்சிகளால் உடல் மனத்தைப் பக்குவப்படுத்திக் காத்தல், பல மாதர் இச்சைகளை அறவே மறத்தல், இப்படி பல அருள்குணங்கள் அமைந்த உயர்நிலைப் பண்புகளே அந்தப் படிகள்.

இவைகளே சன்மார்க்கப் பெருநெறிகள் ஆகும். இந்தப் பெருநெறிகளெனும் சன்மார்க்கத்தினைப் பெற நாமும் வள்ளலார் வழியில் கொல்லா நெறியைக் காப்போம் - ஆன்மநேயம் வளர்ப்போம் அருட்பாவில் ஒரு பாடல்

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம் முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் ; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்த தாலோ!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

★



தமிழைத்தேடி...

புலவர் உதயை மு. வீரையன்

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தமொழி' என்று இதன் தொன்மை பாராட்டப்பட்டது. உலகின் மூத்த மொழிகளாகிய கிரேக்கம், இலத்தீன், சீனம், வடமொழி இவற்றுடன் தமிழும் ஒப்பவைத்து மதிக்கப்பட்டது. இவற்றில் பல காலத்தால் சிதைந்து அழிந்து போனாலும் சீரிளமைத் திறனோடு செந்தமிழ் திகழ்கிறது. இவ்வாறு இது காலத்தை வென்று வாழ்வதற்கு என்ன காரணம்?

மாறுதல்களுக்கு ஏற்ப இது தன்னை மாற்றிக் கொண்டதுதான். சங்கக் காலத்துக்கு ஏற்ப சாகாத இலக்கியங்களைப் படைத்தது. பிற்காலத்தில் பக்தி இலக்கியங்களைப் படைத்தது. தற்காலம் கணினிக் காலம். அறிவியலுக்குள்ளும் தன்னை ஆட்படுத்திக் கொண்டது.

தமிழ் நாட்டாரை மட்டுமல்ல, அயல்நாட்டாரையும் இது கவர்ந்தது. சமயத்தைப் பரப்பிட வந்தவர்கள் தமிழைக் கற்றனர் ; ஆய்வு செய்தனர் ; அழியாத இலக்கியங்களைப் படைத்தனர் ; அதிலேயே தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டனர் ; அதன் வளர்ச்சிக்காகவே உழைத்தனர் ; அதனைத் தேடியே அலைந்தனர்.

'உயர்தனிச் செம்மொழி' என்று அகில உலகத்துக்கும் அறிவித்தார் கால்டுவெல். சிந்துவெளி நாகரிகத்தை திராவிட நாகரிகம் என்று நாட்டினார் ஹீராஸ். ஓலைச் சுவடியிலிருந்த தமிழை அச்சுப் பொறியில் ஏற்றினார் கோவாப் பகுதியில் பணியாற்றிய தெஃபாரியா என்னும் துறவி. தமிழில் உரைநடையை உருவாக்கினார் தத்துவ போதகர். திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அகிலத்துக்கு அறிமுகம் செய்தவர் ஜி.யூ.போப்.

பிற்காலத்தில் தமிழ் சமயமொழியாகவே யிருந்தது. சைவமும், சமணமும், பௌத்தமும் தமிழ்மூலம் வளர்ந்தது ; தமிழையும் வளர்த்தது.

தமிழ் மொழியில் வரலாற்றுப் பாதையில் கிறித்தவர்களின் பணியையும் குறைத்து மதிப்பிட முடியாது. சமயப்பணி புரிவதற்காகவே ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழகம் வந்த மறைத்தொண்டர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள பணி வியப்புக்குரியது. தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத இவர்கள் தமிழைப் பயின்று அம்மொழிக்கே வளம் சேர்த்தனர்.

சமயப் பணியாற்ற வந்த அவர்கள் மக்களிடம் மக்கள் மொழியில் பேசவேண்டிய கட்டாயம் அவர்களைத் தமிழ் பயிலத் தூண்டியது. தமிழ் பயிலத் தொடங்கியதும். அதன் இனிமையில் மனத்தைப் பறிகொடுத்து முழுநேரப் பணியாகக் கொண்டனர். அவர்களுள் தமிழ் இலக்கிய உலகம் மறக்கமுடியாத பெயரே வீரமாமுனிவர்.

"18ஆம் நூற்றாண்டில் மிகச்சிறந்த தமிழ்ப்புலவர்கள் இருவருள் வீரமாமுனிவர் ஒருவர்" என்று 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எழுதிய அறிஞர் கால்டுவெல் எழுதியுள்ளார். அறிஞர் போப் இவரைத் "தமிழறிஞருள் மிகச்சிறந்தவர்" என்று போற்றியுள்ளார்.

"திராவிட மொழியியல் வல்லுநர்களுக் கெல்லாம் மிகச்சிறந்த முன்னோடி

வீரமாமுனிவரே" என்று செக் நாட்டுத் தமிழறிஞர் 'கமில் சுவலபில்' பாராட்டியுள்ளார். எமிலியோ தேவி என்ற இத்தாலி அறிஞர், "கீழ்த்திசை அறிஞருள் மிகவும் புகழ் பெற்றவர் வீரமாமுனிவர்" என்று கூறியுள்ளார். இவ்வாறு அவர் வாழ்ந்த காலத்திலேயே அவரைப் பலரும் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

இத்தாலியில் இவர் பிறந்தது 1680 நவம்பர் 8. கான்ஸ்டாண்டியுஸ் ஜோசப் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். கொண்டல்போ பெஸ்கி - எலிசபெத் இவரது பெற்றோர். முனிவரின் இளமைக்காலம் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. துறவு இல்லத்தில் சேர்ந்த போது இவருக்கு வயது 18.

இந்தியாவில் சமயப்பணி புரிவதற்காக வந்த முனிவர் 1711இல் மதுரை மறைப்பணிக் களத்துக்கு வந்தார். மதுரைப் பகுதியில் 1606 முதல் 1645 வரை பணியாற்றிய இராபர்ட் தெ நொபிலி அடிகளார் ஐரோப்பிய வாழ்க்கை முறைகளைக் கைவிட்டு, தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் வாழ்ந்தார். காவியுடை அணிந்து, சைவ உணவு உண்டு வாழ்ந்தார்.

வீரமாமுனிவரும் இவரது வாழ்க்கை முறையையே பின்பற்றினார். பெஸ்கி என்ற தன் பெயரை 'தைரிய நாதர்' என்று மாற்றிக் கொண்டார். அதுவே 'வீரமாமுனிவர்' எனப் பின்னாளில் மாற்றம் பெற்றது. பெயராலும், பண்பாட்டாலும் தமிழராகவே வாழத் தொடங்கினார்.

அந்தக் காலத்தில் சமயப்பணி அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. குறுநில மன்னர்களின் எதிர்ப்பையும் வன்முறை களையும் சமாளிக்க வேண்டும். இந்தப் போராட்டங்களுக்கு இடையேதான் தமிழ்ப்பணியும் செய்து வந்தார். தென்பாண்டி மண்ணில் குருக்கள்பட்டி, காமநாயக்கன்பட்டி, கயத்தாறு பகுதியில் பொறுப்பேற்று பணிபுரிந்தபோது அவர் உயிருக்கே உலைவைக்கப்பட்டது. இவற்றிலிருந்து மீண்ட முனிவர் 1747 பிப்ரவரி 4 அன்று தம் 67 ஆம் அகவையில் மறைந்தார்.

தமிழ் அச்சுக் கலைக்கு அடிகோலியவர் கிறித்தவ குருமார்களே. 1586 ஆம் ஆண்டில் தென்பாண்டி நாட்டு புன்னைக்காயில் என்னும் ஊரில் 'அடியார் வரலாறு' என்னும் நூல் அச்சிடப்பட்டது. ஆண்டிறீக்குப் பாதிரியார் தமிழில் தொகுத்து, மொழிபெயர்த்து வெளியிட்ட இந்நூல் 669 பக்கங்கள் கொண்டது. தமிழ் மண்ணில் அச்சிட்ட முதல் தமிழ்நூல் இதுவே.

இந்தக் காலக்கட்டத்தில் வீரமாமுனிவர் தமிழ் எழுத்துச் சீரமைப்பை மேற்கொண்டார். முனிவர் 1728இல் எழுதிய **'கொடுந்தமிழ் இலக்கணம்'** என்னும் நூலின் முதல் அதிகாரத்தில் **'எழுத்துகளின் எண்ணிக்கையும் வடிவமும்'** என்னும் தலைப்பில் இதுபற்றிக் கூறுகிறார்.

எழுத்துச் சீரமைப்பு, இலக்கணம், அகரமுதலி, உரைநடை என இவர் தொடாத துறைகளே இல்லை. 'தேம்பாவணி' என்னும் பெருங்காப்பியமும், 'திருக்காவலூர் கலம்பகம்' முதலிய சிற்றிலக்கியங்களும் இவரால் பாடப்பட்டவை. கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், திறவுகோல் (Clavis) முதலிய இலக்கண நூல்கள் அவர் பெயரை எப்போதும் கூறிக்கொண்டேயிருக்கும்.

திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்து மாபெரும் சாதனை நிகழ்த்தினார். தமிழில் கடினச் சொற்களுக்கு பொருள்காண 'நிகண்டு'களையே நம்பிக் கொண்டிருந்த நிலையை மாற்றினார். இவர் தொகுத்த 'சதுரகராதி' முதல் தமிழ்

அகரமுதலி என்னும் பெருமை பெற்றது.

ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட அகராதி முறையை பின்பற்றி 1732 ஆம் ஆண்டு இந்தச் 'சதுரகராதி' யைத் தொகுத்தளித்தார். இது பெயர் அகராதி, பொருள் அகராதி, தொடை அகராதி, தொகை அகராதி என நான்கு பகுப்புகளைக் கொண்டது. இவ்வாறு நான்கு அகராதிகள் அமைந்திருப்பதாலேதான் இதற்குச் 'சதுரகராதி' என்று பெயர் சூட்டினார்.

இது தவிர 'தமிழ்-இலத்தீன் அகராதி', போர்த்துகீசியம் - தமிழ் - இலத்தீன் அகராதி என்னும் வேறு இரண்டு அகராதிகளையும் தொகுத்தளித்தார். அவற்றுள் தமிழ் - இலத்தீன் அகராதியில் ஒன்பதாயிரம் தமிழ்ச்சொற்களுக்கு இலத்தீன் மொழியில் பொருள் விளக்கம் செய்துள்ளார். போர்த்துகீசியம் - தமிழ் - இலத்தீன் அகராதியில் 4400 போர்த்துகீசியச் சொற்களுக்குத் தமிழிலும், இலத்தீனிலும் உரை எழுதியுள்ளார். இவ்வகராதிகளின் துணையால் அயல்நாட்டினர் தமிழைக் கற்பதற்கும், தமிழர் பிற மொழிகளைக் கற்பதற்கும் கதவு திறக்கப்பட்டது.

வீரமாமுனிவர் மேல்நாட்டு மொழிகளைக் கற்றறிந்த பேரறிஞர். அம்மொழிகளைப் போலவே தமிழிலும் உரைநடை நூல்கள் வரவேண்டுமென்று விரும்பினார். பரமார்த்த குருகதை, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதக மறுத்தல், ஞானமுணர்தல், வாமன் கதை என்னும் உரைநடை நூல்கள் இவரால் இவ்வாறு எழுதப்பட்டவையே.

"தமிழ் உரைநடைக்குத் தந்தை தத்துவபோதகரே என்பர். அது உண்மை எனினும் இவரால் அது வளம்பெற்று மிக்குயர்ந்தது" என்று தவத்திரு. தனிநாயகம் அடிகளார் கூறுவதை யாரும் மறுக்க இயலாது.

வீரமாமுனிவர் தமிழின்மேல் மட்டற்ற காதல் கொண்டமைக்குக் காரணம் என்ன? அவருக்கு வேறு மொழிகள் தெரியாததாலா? அவருக்குப் பல மொழிகளில் புலமையிருந்தது. தம் தாய்மொழியாகிய இத்தாலிய மொழியோடு இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், போர்த்துகேயம், இஸ்பானியம், பிரெஞ்சு, வடமொழி ஆகியவற்றைக் கற்று அறிந்திருந்தார்.

இவருக்குத் தமிழைக் கற்பித்தவர் யார்? இதுவரை ஆதாரம் கிடைக்கவில்லை. அவரது எழுத்துகளிலும், படைப்புகளிலும் எக்குறிப்பும் இதுவரை கிடைக்க வில்லை.

தொடக்கத்தில் முனிவர் தமது ஏசுசபைக் குருமார்களிடமிருந்தும், என்ரீக்கஸ் அடிகளார் இயற்றிய தமிழ் இலக்கண நூலிலிருந்தும் தமிழ் கற்றிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே அவர் தம் வாழ்நாள் முழுவதும் தமிழைத் தேடி அலைந்தார். தேடி ஆய்ந்தார்.

இன்று தமிழகத்திலேயே தமிழைக் காண இயலவில்லை. அரசுத்துறைகளில் ஆட்சி மொழியாகவும் இல்லை ; நீதிமன்ற மொழியாகவும் இல்லை ; கல்விக் கூடங்களில் பயிற்சி மொழியாகவும் இல்லை கோயில்களிலும் - இசையரங்குகளிலும் இல்லை. எங்குமே அயல்மொழியின் ஆட்சி !

"தணிப்பரிய துயரமிது
தமிழ்நாட்டின் தமிழ்த்தெருவில்
தமிழ்தான் இல்லை..."

என்றான் புரட்சிக்கவிஞன் பாரதிதாசன்.

உலகத்தமிழர்களே! தமிழர்களின் தலைவர்களே! தமிழைத்தேடி இனி எங்கே போவது?

★

தமிழ்க் கவிதைகள் புலப்படுத்தும் இன்றையத் தமிழர் நெருக்கடிகளும் அவற்றுக்கான எதிர்காலத் தீர்வுகளும்.

முனைவர் தி. கமலி

தமிழில் துன்பத்தைக் குறிக்கும் சொற்கள் பல. அவற்றுள் நாற்பத்திரண்டு சொற்களைச் சுரதா தன்னுடைய 'துன்பத் துறைமுகம்' என்னும் கவிதையில் தொகுத்துள்ளார் (தேன் மழை ப.227)

"அல்லல் வறுமை அரந்தை அழுங்கல்
அல்ல கண்டம் அலக்கன் செல்லல்
கவ்வம் எவ்வம் கையாறு கோட்பிலை
பணித்தல் பழங்கண் பழிவரல் பீடை
பைதல் புன்கண் பையுள் கேதம்
இன்னா வெய்துறல் இட்டளம் இடும்பை
கலக்கம் வெறுப்பு கவலை சிறுமை
துக்கம் துனிபடர் சூர்நோய் ஏதம்
உறுகண் மம்மர் உலமரல் விழுமம்
இன்னல் பீழை இடுக்கண் யாதனை
நடலை என்னும் இந்நாற்பத் திரண்டு
சொற்களும் நமக்குத் துன்பத் துறைமுகம்
அவலச் சுவையின் அறுவடை நெஞ்சை
அறுக்கும் கருவி அகிலம்
வெறுக்கும் துயரைக் குறிக்கும் சொற்களே"

ஓர் இனத்தின் எண்ணப் போக்கிற்கு ஏற்பவே அவ்வின மொழியின் சொற்கள் அமையும். துன்பத்தையும், துயரத்தையும் மிகுதியாக உணரும் தமிழரின் தமிழில் அவற்றைக் குறிக்கும் சொற்களும் மிகுதியாக இருத்தல் இயல்பே ஆகும். தமிழர் உள்ளத்தில் எழும் போராட்டங்கள் மூன்று களங்களை அடிப்படையாகக் கொண்டவை எனலாம்.

1. தன்னைத்தானே ஏற்க இயலாமை
2. சமுதாயப் போக்கை ஏற்க இயலாமை
3. தனக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவை ஏற்க இயலாமை எனலாம்.

சாதிகளுக்குள் மோதல் என்பது தமிழகத் தென்கோடி கிராமங்களில் அவ்வப்போது ஆர்ப்பரித்தலைக் காணலாம்.

'கோவில் விழா
கிடாவில் தொடங்கி
மனிதனில் முடிந்தது!'

என்று மோதலின் முடிவு கூறப்படுகிறது. சிலையை உடைத்தல், இடுகாட்டிற்குப் பிணம் செல்ல வழிதர மறுத்தல் என்று மனிதர்கள் தமக்குள் மோதுவதும், குடிக்க இருகுவளைகள் பயன்படுத்துவதும் நிகழும் அதே வேளையில், வெளி நாடுகளில் குடியேறிய இருதரப்பினர். அங்கக, அயல்தேசத்தில் தம்மைத் தமிழரென எண்ணி ஒற்றுமை பாராட்டி, நட்புடன் வாழ்வதும் சாத்தியமாக உள்ளது. அயலிடத்தில் சாத்தியமாகும் அன்பு நம் இடத்தில் சாத்தியமாதல் நெருக்கடி ஆகும்.

"சுயநலமே குவிகிறது
சொற்ப விலைக்கின்று
கயமை கிடைக்கிறது
அவரவர் பாட்டுக்கு
அகப்பட்டது சுருட்டல்
தவறில்லை என்னுமொரு
தருமம் தழைக்கிறது."
(தேனரசன், வெள்ளைரோஜா)

பொது நலத்தை விடச் சுயநலம் குவிகிறது. அவரவர் நிலைக்கேற்ப அகப்பட்டதைச் சுருட்ட எண்ணுகின்றனர். புதுப்புது வழிமுறைகளையும் கடைப்பிடிக்கின்றனர்.

"மோசடியால் மூடப்பட்ட 248-வது நிதி நிறுவனம்"

என்று நிதிநிறுவனங்கள், ஏழை, எளியோரது சேமிப்பை வாரியெடுத்துக் கொண்டு, அதிகாரமுடையவர்களுக்கு வாய்ப்பேச்சின்றிக் கடனாகத் தந்து, திரும்ப வராத காரணத்தால் நட்டம் என்று மூடப்படும் செய்தி தமிழகத் தமிழர் அறிந்த செய்தியாகும்.

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயர மால் உயரும்"
(படுதலம், போலீஸ்)

என்று குற்றங்களைக் கட்டுப்படுத்த

வேண்டிய காவல் துறையே 'மால்', 'இலஞ்சம்', 'கையூட்டு' என்று விலை போகுமானால் பாமரரின் பொறுப்பு என்ன?

"குதிரையின் விலைக்கின்று
கொள்ளு விற்கலாயிற்று
மதுரையின் விலைக்கிங்கு
மல்லிகைப்பூ விற்கிறதே"
(தேனரசன், வெள்ளைரோஜா)

என்று - உயரும் விலைவாசி அதிகரிக்கும் இரயில் கட்டணங்கள், பேருந்து கட்டணங்கள், தொலைபேசி, தபால் துறைக் கட்டணங்கள், நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கும் போதெல்லாம் தவறாமல் சமையல் எரிவாயு விலை உயர்கிறது. காகிதப் பணம் பறந்து போகிறது. உண்டு, உடுத்து, மானத்துடன் வாழ்வதே பெரும்பாடாகிறது.

- குளிர்பானங்கள்
- குடிவகைகள்
- புகைக்கும் லாகிரிகள்
- ஐஸ்கிரீம்கள்
- சாக்லெட்டுகள்
- அழகுச் சாதனங்கள்

என்றிவற்றில் காசு முடக்கப்படுவது உலகமய, தாராளமயப் பொருளாதாரம் தந்த பரிசாகும். எளிமையில் நம்பிக்கை இல்லை. ஆரவாரம், ஆர்ப்பாட்டம், போலிப் பகட்டு, தன்னை நவீன நாகரிகத்தினராகக் (Fashionable Person) காட்டிக் கொள்ளும் ஆவல். 'சிக்கனத்தைத் தூரே தள்ளி, செலவு செய்யும் மனப்போக்கிற்குக் கட்டியம் கூறி வரவேற்கிறது.'

- குடிக்கும் தண்ணீருக்குக் கட்டணம்
- கழிப்பிட வசதியைப் பயன்படுத்தக் கட்டணம்

என்று காசில்லாமல் எங்கும் செல்லவோ திரும்பவோ இயலாது என்ற நிலை துரத்தியடிக்கிறது. நகரப் பொருளாதார நெருக்கடிகள் ஒருவகை என்றால், கிராமப் பொருளாதார நெருக்கடிகள் வேறுவகை ஆகும். எல்லோருக்கும் வாய்ப்பு இன்மையால் வாடி ஏங்குவது. நகரப் பொருளாதார நெருக்கடி ஆகும். வசதி இருந்தும் அவை கைமாறும் கொடுமை கிராம வறுமையின் அடிப்படை ஆகும். பொருளாதாரத்தைத் தன்னிறைவு உடைய கிராமங்கள் இன்றில்லை. நிலத்தில் விளைந்ததை வைத்து விற்று வாழ்வது பழைய கிராமப் பொருளாதாரம் நிலத்திற்கு மின்சாரத்தில் ஓடும் மோட்டார் பம்பு வைத்து நீர் பாய்ச்சச் சொன்னது அரசாங்கம். மானியம் தந்தது. சிறுவிவசாயிக்கு இலவசம் மின்சாரம் என்றது. பம்ப் செட் போட்டபின் பொழுதெல்லாம் வயலில் பாடுபடும் விவசாயி, 'கரண்ட் இருக்கும் ஒருமணி நேரத்திற்குக் காத்திருந்து மணிநேரப்படி உழைக்கும் நிலை வந்தது. நீர் வரத்து இல்லை. நிலத்தடி நீர் வற்றியது. ஆழமாகப் போர் இறக்க வேண்டும். இஞ்சினில் கோளாறு. அதற்கு அயலூர் போய் வரிசையில் நின்று பில் கட்ட வேண்டும் என்று குறுக்கீடுகள் அவனது பிழைப்பைக் கெடுத்துப் போடுவதை மேலாண்மைப் பொன்னுச்சாமி அவர்களின் பல நாவல்கள் சுட்டிக் காட்டுகின்றன. இயந்திரமாதலும், நவீனமாதலும் உழைப்புத் தளத்தைச் சுருக்கி மனிதரை மணிநேரக் கணக்கிற்கேற்ப ஆடும் இயந்திரங்களாக்கி முடக்கிப் போடுகின்றன' என்பது அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டாகும். நிலத்தையே விற்றுப் பிழைக்கும்புதிய கிராமப் பொருளாதாரம் பற்றி, 'மாறி வரும் பூமி' கவிதை சொல்கிறது.

இனி அவை

"நன்செய் நிலமா புன்செய் நிலமா
என்ற கேள்வி அநாவசியம் ;
எங்கள் கிராமத்துக்குப் பஸ் வந்தது
இந்த நிலத்தை ஒட்டிய
பாதையில் ஓடியது
இனி உழவுமாடுகளை ஆடுமாடுகளாக
அனுப்பியாகி விட்டது.
நேற்று மேலுக்கு வார்த்துக் கொண்ட
சுடுநீர் கலப்பையை உடைத்து
அடுப்பெரித்தது
விளைச்சல் பூமியில் வீடு கட்டுவது
கருக்கலைப்புப் போலவா பெரும் பாவம்?
இந்த மண்ணைத் தெய்வமாய்ப் போற்றிய
என் பிரிய தாத்தாவின்
பெயரில் இதோ புதிய லே அவுட்"

நிலத்தில் விளையும் உணவைக் காட்டிலும், நிலமும், நிலத்தில் கட்டும் வீடும் செல்வமாகிப் போன புதிய பொருளாதார நிலையால் தோற்றம் மாறி வருகிறது.

கிரிக்கெட் விளையாடலாம் போல் தாழ்வாரம், கல்யாண மண்டபம் போல் கூடம், கிளி கொஞ்சும் சுவர் வேலைப்பாடுகள் மிக்க வாசல் ஒரு தெருவிலும், கொல்லை மற்றொரு தெருவிலும் அமைந்த வீடுகளை விட்டுவிட்டு நகர்ப்புறத்தில் புறாக்கூண்டு, பிளாட்டுகளில் தஞ்சம்புகும் (Migration) மக்களின் இடப்பெயர்வு அத்தோடு விட்டதா? தலைநகருக்குச் சென்று, அப்படியே அமெரிக்கா, இங்கிலாந்து என்று முன்னேறிய நாடுகளுக்குத் தஞ்சம் புகுந்து கோடி கோடியாய் பொருளீட்ட மனம் துடிக்கிறது.

- தனியாய் இருந்தவரைத் தாக்கிக் கொன்று கொள்ளை

என்று தேடிக் குவிக்கும் செல்வம் காப்பார் இன்மையால், கொள்ளை போவது அன்றாட நிகழ்வாகி விட்டது. அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, அத்தை, சித்தப்பா, பெரியப்பா, சின்ன தாத்தா என்ற உறவுமுறைகள் எதுவும் புரியாமல், 'ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை' என்று ஒற்றையாய் வளரும் குழந்தைகள் மனித வறுமையில் சிக்குகின்றன. விட்டுத்தருதல், நேசித்தல், பகிர்ந்து உண்ணல் போன்ற பண்புகள் மறைந்துவிடும் அபாயமுள்ளது.

'முதலிடத்தைக் கைப்பற்றுதல்', தக்கவைத்துக் கொள்ளுதல், நுழைவுத் தேர்வில் முதலிடம் பெறல், பொறியாளராகவோ, மருத்துவராகவோ வருதல் என்ற இலக்குகளை எட்டிப் பிடிக்க முடுக்கிவிடப்பட்ட பந்தயக் குதிரைகளாக இன்றைய சிறுவர், சிறுமியர் உலகம் தோற்றம் கொண்டுள்ள அவலம் பாவபடுத்தினரது நெருக்கடிகளாகும்.

விழுமியமில்லாப் போட்டிக்கல்வி, குவிக்கும் மதிப்பெண், மனித மாண்புகளைச் செழுமைப்படுத்தாமல், வழிகாட்டுச் சதவிகித சாதனைப் பட்டியலில் தக்க வைத்துக் கொள்ளவே போராடும் பள்ளிகள் மக்கு மாணவர்களைச் சேர்க்கைக்கே அனுமதிப்பதில்லை. தமிழ்மொழியே, 'மருத்துவத்துறையில் சேர மதிப்பெண் பெற உதவுமா? உதவாதா?' என்று தரம் பார்த்துதான் பயிலத் தேர்வு செய்யப்படுகிறது. "இவரென் தந்தையாதல் சரி : இவர் என் தாயாதற்குத் தகுதியுடையவர்" என்று தாய் - தந்தையைத் தான் இன்னும் போட்டித் தேர்வு வைத்து, நேர்முகப் பேட்டி செய்து, தேர்வு செய்து அமர்த்தவில்லை. ஏனைய எல்லாத்துறைகளிலும் மனிதரை வழிகட்டுதல்கள் தொடர்கின்றன. மனிதர் மனிதராக இல்லாமல், 'செயல் திறப்பெட்டகமாக', 'ஆற்றல் மிகு இயந்திரமாக' இருந்தால் போதுமென்று கொள்ளப்படும் நிலை உள்ளது.

"அம்மாவும் ஆபிஸ் போகிறாள்
அப்பாவின் ஸ்கூட்டரின் பின்னே!
வீட்டிலே பாட்டி உண்டு
கட்டிலில் படுத்திருப்பாள்!
ஊட்டிவிட ஆளில்லை
உடல் முழுக்கச் சோறாச்சு!
மாலையில் திரும்பி வருவாள்
ஆபீசின் அலுப்பை ஊட்ட
நாக்கின் ருசியெல்லாம்
ஞாயிற்றில் மட்டுமே உண்டு
நாளைக்கு நானும் போவேன்
நான் மட்டும் ஆபீஸ் போவேன்
வேலைக்குப் போகாத
வெறும் மனைவி எனக்குப் போதும்"
(சுப்ரமணிய ராஜு)

என்று பெற்றோர் இருந்தும் பிள்ளையின் தனிமை, உற்றார், உறவினர், பிள்ளைகள், பேரக் குழந்தைகள் என்று சொந்தங்கள் இருந்தும், முதியோரில்லத்தில் பெற்றோர் வாழும் தனிமை இன்றையத் தமிழர் வாழ்க்கை நியதியாகி விட்டது. 'கூட்டு வாழ்வு' முயற்கொம்பே.

எழுதப்படிக்கத் தெரியாதவர் கணிசமாய் இருக்கத் தகவல் நுட்பவியல் வளர்ச்சி, உலகக் குடும்பம், உலக கிராமம், கருத்தாக்கங்களும், கேபிள் தொலைக்காட்சியின் நூற்றுக் கணக்கான சானல்கள் 85 விழுக்காட்டினருக்குத் தகவல் தெரிவிக்கின்றன. இருந்தபோதும் திரைப்படங்களும், பாடல்களும், தொடர்களும், மூட நம்பிக்கைக்கு உரமூட்டும் கதைகளும், 'மாய உலகில்' மக்களை ஆழ்த்துகின்றனவே அல்லாமல், விழிப்புணர்விற்கு இட்டுச் சொல்லவில்லை.

'மின்னம்பலம்', 'ஆறாம் திணை', 'விண் நாயகன்' எனத் தொடங்கிய இணைய இதழ்கள் நிதி வசதி இன்றி தத்தளிக்கின்றன.

மூடப்பட்டதும் மெய்யே.

> "காலம் மாறும் போது
> உடைகளைப் போலக்
> கவலைகளும் புதிதாகுமென
> ஒருசொல் வந்தாயிற்று" (நா. விச்வநாதன், கவலைகள்)

பெண்கள், படித்து, பணிபுரிந்து, பொருளீட்டும் நிலை அதிகரித்துள்ளது. வரதட்சணைச் சாவு, முதிர்கன்னி சிக்கல், இரட்டை வேலைப்பளு, பணியிடத்தில் பாலியல் நெருக்கடிகளாதல் என்று சிதைவதை சி.ஆர்.இரவீந்திரன் தனது நாவல்களில் பதிவு செய்துள்ளார். வேலையில்லாத ஆண்கள் குழம்புவதும், திரை தெரியாமல் தவிப்பதும், காட்டப்படுகிறது. தொழிற்சாலைகளில் விபத்துக்களும், சாலை விபத்துகளும் இளைஞர்களுக்கு உயிர்க்கொல்லியாக அமைகின்றன.

காலப்போக்கில் சமுதாய மதிப்பீடுகள் மாறி வருகின்றன. பழைய சமுதாயத்தில் இலக்கியம் பெற்ற இடத்தை இயந்திர நாகரிகமும், பொருளாதாரப் போட்டியும் மிகுந்த சமுதாயத்தில் பெற இயலவில்லை. பழைய சமுதாயத்தில் இலக்கியம் மட்டுமே அறிவுறுத்தும் கருவியாகவும், பொழுது போக்கிற்கான கலையாகவும் இருந்தது. இன்று அறிவுறுத்தும் ஊடகங்கள் பெருகி விட்டன. பொழுது போக்கும் இலக்கியம் மட்டும் அன்று. தகவல் தொடர்பியலின் வளர்ச்சியின் காரணமாக மொழியின அளவு சுருங்கிப் பயன் பெருகும் சூழல் உருவாகி வருகிறது. எதிர்கால மொழி வெறும் தந்திமொழி போலச் சுருங்கிப் போகலாம். பெருகி வரும் ஹைக்கூ கவிதைகள், திரைத்தொடரில் வரும் காட்சி பங்களிப்பு வசனங்கள் சுருங்கிய மொழிப்பயன் கூறுவன. எதிர்காலத்தில் மொழி மேலும் சுருங்கி, செய்தியைச் சொல்வதன்றி மொழிக்கு வேறு பணியும், பயனும் இல்லை எனும் நிலையும் எதிர்காலத்தில் வரலாம். மொழியின் மாறியபோக்கு இலக்கியத்தையும் பாதிக்கும். இத்தகு சூழ்நிலையில் எதிர்கால இலக்கியம் எவ்வாறு அமையும் என்பது ஆய்விற்குரிய விளைவாகும். எதிர்கால இலக்கியம் என்பது இன்றைய இலக்கிய மண்ணில் வேர்விட்டு எதிர்வரும் சூழலில் கிளைவிடுவது எனப் பொதுவாகக் கூறலாம்.

எங்கள் தமிழ்

கவிஞர் தி. மோசஸ்ராசன், எம்.ஏ.,

*இதயத்தில் என்றும் நீங்காத் தமிழே
உதயமாகும் உள்ளத்தில் மின்னிடும் தமிழே
பாதகமும் இல்லா உன்னைப் பாடுவேன்
மாதவம் தரும்பயன் நல்கும் தமிழே!*

*மாதம் மும்மாரி பொழியும் மழைபோல
தாகம் தீர்த்திடும் தெவிட்டாத தமிழே
சோகம் கலைத்திடும் சுந்தரத் தமிழே
வேகம் உணர்த்தும் வெற்றித் தமிழே!*

*எண்ணிடும் வேளையில் இனித்திடும் தமிழே!
கண்ணின் மணியென காத்திடும் தமிழே!
மண்ணின் மானங்காக்கும் தமிழே!
என்னில் பொங்கும் எழிலான என்தமிழே!*

இவன் மட்டும் கண்ணீர் விட்டால்

கவிஞர் வாஞ்சிநாதன்

*எவன் சொன்னான்
ஏர்பிடித்த கைகளுக்கு
எழுதத் தெரியாது என்று?*

*இவன்
ஏர்கொண்டு எழுதாத – நிலமிருக்கா?
நீர்கொண்டு வாசிக்காத – வயலிருக்கா?*

*சேற்றால் தாளம் தட்டி
நாற்றால் ராகம் தீட்டி
வியர்வை ரத்தத்தால்
கவிபாடும்
இவனும் ஒரு – எழுத்தாளன் தான்!*

*.இவனின்
இசைக்கு மயங்கித்தானே
விண்கூட மழைபொழிகிறது!*

*இன்னுமா புரியவில்லை
இவன் பெருமை!*

*ஏ.... மானிட இனமே
இந்தக் கலைஞனைக் கண்டு
ஏளனம் செய்யாதே!*

இவன் மட்டும் கண்ணீர்விட்டால்....



உலக தரிசனம்...

கவிஞர் இரா. இரவி

உலகை ரசியுங்கள்
இறந்த பின்பும்
விழிக்கொடை....

பலரின் வியர்வையில்
சிலருக்குப் பன்னீர்
லாட்டரிச் சீட்டு!

சாதிச்சங்கங்களின்
கோரப்பிடியில்
மறைந்த தலைவர்கள்!

உழவனின்
உன்னதக் கவிதை
நெல்மணி...!

நல்ல தமிழின்
தூக்கு மேடை
தொலைக் காட்சி...!

விஞ்ஞானக் கண்டுபிடிப்பில்
மூடநம்பிக்கை முடைநாற்றம்
மர்மத்தொடர்கள்...!

காப்பாற்றுங்கள்
குழந்தைகளை
தொலைக்காட்சி அரக்கனிடமிருந்து!

பசியோடு வெட்டியான்
பிணங்கள் வந்தபோதும்
மின்சாரத் தகனம்...!

வெட்டுக்குத்து நடந்தது
தலைகள் பல உருண்டன
பரிவட்டத்துண்டுக்காய்!

நஞ்சை அமுதென்பார்
அமுதை நஞ்சென்பார்
ஆங்கிலப் பள்ளியினர்!

நஞ்சு விதைப்பவர்
பிஞ்சு நெஞ்சங்களில்
ஆங்கிலப் பள்ளியினர்!

விடுதலைக்கு ஏங்கி
கம்பி எண்ணுகிறார்
குறி சொன்ன சாமியார்!

விபத்தில் மரணம்
பத்துப்பொருத்தம் பார்த்த
மாப்பிள்ளை...!

மருத்துவம் படிக்கப் போட்டி
மருத்துவம் புரிய அல்ல
சாதிச் சங்கத் தலைவராக!

எந்த ஓவியன்
வர்ணம் தீட்டியது
வானவில்...!

மஞ்சள் ஆடை அணிந்தாள்
பச்சை ஆடை களைந்தாள்
நெல்மணி...!

வீரத்தில் சிங்கமாய்
வேகத்தில் சிறுத்தையாய்
எப்போது மனிதனாவாய்!

மனைவி சாதனை
கணவனை மயக்கி
மாமியார் முதியோர் இல்லத்தில்!

வயிற்றில்
புளி கரைத்தது
விநாயகர் ஊர்வலம்!

முருங்கை மரத்தில்
மீண்டும் வேதாளம்
ராமர் கோவில்!

குட்டி போடும்
காகிதமும்
வட்டி...!

மடியில் கனமில்லை
வழியில் பயம்
போக்குவரத்துக் காவலர்...!

அன்று தமிழ் வளர்த்தனர்
இன்று சாதி வளர்க்கின்றனர்
மதுரையில் சங்கம் அமைத்து!

அமெரிக்கா மாடு "அம்மா"
தமிழ்நாட்டுத் தமிழன் "மம்மி"
அய்ந்தைவிட ஆறு தாழ்வு...!

பயணிக்காமல்
உலக தரிசனம்
இணையம்...!

அன்பால் வாழுவோம் தினம் தினம்

அ. தமிழரசி

பேசத் தெரிந்த மிருகமா மனிதன்
மாசு படிந்த உள்ளம் எதற்கு?
கூசாமல் உயிர்களைக் கொல்வது எதற்கு?
நிலையில்லா வாழ்வினில் நிலைப்பது எதுவோ?

சிலைகளை வைப்பதில் சிக்கல்கள் ஏனோ?
உயர்வும் தாழ்வும் மதங்கள் தருவதா?
துயர்கள் இதனால் தொடர்ந்து வருவதா?
உண்ணும் உணவு அவரவர் விருப்பம்
உடுக்கும் உடையும் அவரவர் விருப்பம்
பின்பற்றும் மதத்தில் பின் ஏன் குழப்பம்?

அன்பொன்று இருந்தால் அகிலமே செழிக்கும்
எல்லா மதமும் இயம்புவது என்ன?
இன்னல் தீர்த்து மண்ணுயிர் வாழ
தன்னால் இயன்ற உதவிகள் செய்திட
அத்தனை மதமும் அறிவுரை தந்திடும்
அடுத்த உயிரைக் காக்கவும் வேண்டிடும்

பித்தம் பிடித்த எத்தர்கள் சிலபேர்
மதமெனும் பெயரால் மானுடம் அழிக்கிறார்
வதங்கள் செய்து வருத்தங்கள் சேர்க்கிறார்
மதமென்ன என்பதில் மனத்தெளிவு வந்திடில்
மெதுவாய் பூமியில் அமைதி பிறந்திடும்

மண்ணுலகில் மக்களினம் சிறந்து வாழ
மானுடமே மனதுக்கு வகுத்த சட்டம் (மதம்)
ஆன்மீகம் எனும்பேரில் அழிந்திடும் உயிரெனில்
அதனால் என்னபயன் அன்பொன்றே
போதுமென்போம்

பேருந்தில் ஓர்நாள் பயணம் செய்தேன்
எதிரே வந்த மகிழ்வுந்தோடு மோதியது
பேருந்தில் சென்றவரில் பெருங்காயம்
கிறித்தவர்க்கு
இரத்தப் போக்கு அதிகமொரு இசுலாமியருக்கு

மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றோம்
இரத்தப் போக்கு அதிகம் ஆனதால்
எவரேனும் ஏ.பி. பாசிடிவ் இரத்தமெனில்
கொடுத்து உதவுங்கள் உயிர்ப்பிச்சை என்று
எடுத்தியம்பி எல்லோரும் கேட்டார் அங்கே
மெதுவாய் என்மனம் கேள்விகள் கேட்டன
என் இரத்தம் ஏ.பி. ஆகையால் எழுந்தேன்

பெண் இரத்தம் ஆணுக்கு சேருமா? என்று
பெரும்படியாய் யோசித்து நின்றேன் அங்கு -
மீண்டும் ஒருமுறை அறிவிப்பு கேட்டது.
மாண்டு போவானோ என்று பயந்து
வேண்டும் மட்டும் இரத்தம் கொடுக்க
விருப்பம் என்று கூறிச் சென்றேன்.
பரிசோதனை செய்து பார்த்த பின்பு
என்னுடல் குருதி எடுத்துக் கொண்டார் -
(கிறித்தவர்)
தன்னுயிர் பிழைக்க செலுத்தி நின்றார்
மெல்ல அவனும் குணமாகி வந்தான்
நல்ல வகையில் குணமாகி நின்றான்
(சில நாள் சென்றபின்)

கிறித்துவ மதமே சிறந்தது என்று
கிளர்ச்சி செய்து நின்றான் அவனே!
உடலில் உயிரில் இந்து இரத்தம் (என் இரத்தம்)
கடலில் நதிபோல் கலந்த பின்பும்
நடைமுறை வாழ்வில் நல்தெளிவு இல்லை
இதனால் தானே அழிகிறார் இன்று
இந்தியன் தமிழன் என்றெல்லை விரிந்து
மனிதன் என்ற மாண்பு வந்திடில்
மதங்கள் நமக்குத் தேவையே இல்லையே.

மண்ணுயிர் அழிவுறும் நிலையும் வேண்டாம்.
பஞ்சாபி உடையைத் தமிழ்ப்பெண் அணிகிறாள்
இந்திய உணவினை இத்தாலியர் உண்கிறார்
கிருஷ்ணனும் அல்லாவும் கிறித்துவும் இன்று
உருப்பெற்று வந்தால் என்ன கூறுவர்
உலகில் எங்களால் உயிர்வதை என்றால்
விலகிச் செல்கிறோம் வேண்டாம் மதமென
சொல்லிச் செல்வர் தள்ளுவோம் மதவெறியை
பள்ளிப் பிள்ளைகள் மனத்திலும் நாம்தான்
பக்குவமாய் சேர்க்கைப் படிவத்தில் கேட்டு
மெல்ல அவர்க்கு மதத்தை காட்டுகிறோம்!
பத்து வயதுவரை பேதமின்றி இருந்தவர்
பகுத்துப் பார்த்து உணர்ந்து கொள்கிறார்
வேண்டாம் நமக்கொரு மதமெனும்
வெறித்தனம்
அன்பால் இணைந்து வாழுவோம் தினம்தினம்!

இனி என்ன செய்ய!

பாவலர் மு. இராமச்சந்திரன்

உலகத்து நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எனப்படும் அமெரிக்காவிற்கு தனிப்பெருமை உண்டு. அந்நாடு விடுதலை பெற்றதன் இருநூறாவது ஆண்டு விழாவினை கொண்டாடிய பொழுது, தன்னை "உலக மக்களின் நாடு" என பெருமையுடன் அறிவித்துக் கொண்டது. அந்த அறிவிப்புக்கும் பெருமைக்கும் சிறிதும் குறைவு காணமுடியாத வகையில் எல்லா நாட்டவர்களும் குடியேறி தங்களை அமெரிக்கர் என ஒன்றிணைந்து வாழ்கின்றனர். அது போன்றதோர் பெருமை இன்று தமிழர்களுக்கும் உண்டு. அமெரிக்கா எப்படி **உலக மக்களின் நாடாகத்** திகழ்கின்றதோ.. அதுபோன்று தமிழர்கள் இன்றைக்கு **'உலகநாடுகளின் மக்களாக'** திகழ்கின்றனர். தமிழர்கள், தமிழகத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் தங்களைப் பன்னாட்டுக் குடிகளாக உயர்த்திக் கொண்டுள்ளனர். இப்பெருமை ஏனைய இந்திய மொழினருக்கும் உலகில் உள்ள வேறு இனத்தவர்க்கும் கிடைக்காத தனிப்பெருமையாகும்.

இந்தியா விடுதலைக்கு முன்புவரை தமிழ் இந்தியாவை தாண்டியும் பேசப்படுகின்ற பெரிய மொழியாக இருந்தது. அது ஆசிய கண்டத்து மொழியாக பரவி இருந்தது. தென்னிந்தியாவின் தலைமை மொழியாக இருந்தது. அன்று வெளியான திரைப்படங்களின் விளம்பரங்களில் இனறுமுதல் தென்னாடெங்கும் என்றிருந்தது. இடையில் வந்த மொழிவழி மாநில பிரிவினைக்குப்பின் அது தமிழகமெங்கும் என சுருக்கியது அதுவே இப்பொழுது புதிய பொலிவுடன் 'உலகெங்கு என்று பெருக்கெடுத்துள்ளது. இப்படி தமிழும் தமிழர்களும் உலக அளவில் நிறைந்து செழித்திருக்கும் இப்பெருமையைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். "வெற்றியை உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல் அதன் சிறப்பு மங்கிவிடும் என்பது என்னுரை.

தமிழர்களுக்கு இப்பொழுது கிடைத் திருப்பது உலக அங்கீகாரம் சொல்லப்போனால், தமிழர்களுக்கு இப்பொழுது கிடைத்திருப்பது மிகப் பெரிய வாய்ப்பு. இந்த அரிய வாய்ப்பினை தமிழர்கள் நழுவவிடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு ஒரு கருவியாக தமிழை முன்வைத்து செய்லபட தொடங்குவோமானால் தமிழ் உலக அரங்கில் மிக உயரிய இடத்தில் இருக்கும் நிலை உருவாகிவிடும் என்பதில் ஐயமில்லை. ஒரு காலத்தில் தமிழர்கள் மும்பையிலோ தில்லியிலோ சந்தித்தால், நீங்கள் என்ன மதுரையா ? திருச்சிராப்பள்ளியா ? திருநெல்வேலியா ? அல்லது திருப்பதி , பாலக்காடா ? எனக் கேட்டதுண்டு. இன்று, இங்கிலாந்தின் தலைநகர் இலண்டனிலோ, பிரான்சு தலைநகர் பாரிசிலோ, மலேசியா தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் மட்டுமல்ல உலகத் தமிழர்களின் தலைநகரமாகிய சென்னை மாநகரிலே கூட பலதமிழர்கள் சந்திக்கும் இடங்களிலே. நீங்கள் இலங்கைத் தமிழரா ? சிங்களத் தமிழரா ? மொரீசிசுத் தமிழரா ? கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழுகின்ற தமிழரா ? எனக் கேட்டறிந்து கொள்ளும் காட்சியை காணமுடிகிறது. அந்த அளவிற்கு நம் சுற்றம் உலக நாடுகள் முழுவதிலும் பரவி வாழுகின்றது. நம் மொழியை சிறப்பித்து பல நாடுகள் தங்களது வானொலி, தொலைக்காட்சிகளில் தமிழுக்கும் இடமளித்து சிறப்புச் செய்கிறது.

உலக நாடுகளில் ஆங்கிலம் பரவலாக இருக்கிறது. ஆனால் அங்கே அம்மொழிக்கு மக்கள் இல்லை. அதாவது மக்கள் இல்லாத மொழியாக பலநாடுகளில் ஆங்கிலம் இருந்தாலும் அது அங்கே இருக்கின்ற மக்களின் மனநிலையை பொறுத்தே அதன் வாழ்வு. ஆனால் தமிழ் மொழிக்கு அதுபோன்ற கேள்வி எழுவதற்கான வாய்ப்புகள் குறைவு,

சொல்லப்போனால் நம்மொழிக்கு வாழும் மக்கள் உள்ளதால் பல நாடுகளில் சிறுபான்மை மொழி என்ற தகுதி கிடைக்கும்.

எனவே நம் மொழியை வாழவைக்கும் சக்தியாக அமையும் கணினியில் தமிழின் பயன்பாடு ஆங்கிலத்திற்கு அடுத்த நிலையிலே இருக்கிறது என்பதெல்லாம் நம்மை மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்துகின்றன. இந்த வாய்ப்புகளை தமிழகத் தமிழர்களும் ஏனைய நாடுகளில் வாழகின்ற தமிழர்களும் பயன்படுத்தி உலகைத் தமிழால் நிரப்ப வேண்டும் என்பது எமது ஆவல்.

இப்படித் தமிழர்கள் சந்திக்கவும் பேசவும் எழுதவும் சிந்திக்கவும் தூண்டும் வகையில் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் நடத்தும் வெள்ளி விழாத் தோன்றல் நாள் மாநாடு அமையும் என நம்புகிறோம். எண்ணி மகிழ்கின்றோம். இதே நோக்கங்களுக்காகத் தமிழக மாநில அரசும், இந்தியநடுவணரசும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என விழைகின்றோம். பல கட்டங்களைத் தாண்டி முன்னேறி வந்து கொண்டிருக்கும் தமிழை, தமிழர்கள் தங்களை ஒருமைப்படுத்திக் கொள்வதால் உலக நாடுக்ள அவையில் ஒலிக்கச் செய்யும் நாள் மிக அருகில் வந்துவிட்டது என்பதை அறிவிக்க எண்ணுகிறேன். அதற்கான உழைப்பை உலகத்தமிழர்கள் வழங்கி செயல்பட வேண்டுகிறேன்.

★

மணித்தமிழைக் காக்க வாரீர் !

புலவர் மு. நவநீதகிருட்டினன்

மொட்டவிழ்ந்து மலர் சிதறும்
மதுரத் தேனின்
முகிழ்க்கின்ற சுவையதனில்
மூழ்கி மூழ்கி
கட்டவிழ்ந்து சிறகடித்துப்
பறக்கும் தும்பீ !
கவித்தமிழும் களிமதுவும்
ஒன்றா சொல் நீ !
பட்டுதிரும் தேன்சுவைத்து
உயர்ந்தால் இன்பம் !
பசுந்தமிழைப் படித்துணரின்
பெருகும் இன்பம் !
கொட்டு முழக் குடன் தமிழைப்
போற்ற வாரீர் !
கொடிமுல்லை மணங்கூட்டி
மணக்க வாரீர் !!
கத்துகடல் தாலாட்டி
முகமன் கூற
கனவுலகை நினைவுலகாய்
மாற்ற வென்றே
முத்துஒளி தனைச் சிதறும்
கதிரே வாழி !
முத்தமிழும் உன்னொளியும்
ஒன்றா சொல் நீ !

நத்துமொளி உலகினுக்கே
இருட்டும் உண்டு !
நற்றமிழின் வாழ்வினிலே
ஒளிதான் என்றும் !
கொத்து மொழி நந்தமிழை
வளர்க்க வாரீர் !
சொந்தமென பந்தமென
சிறக்க வாரீர் !

கனஇருளை கடிதிறக்கச்
செய்து, வானக்
கொடிமுல்லை மலர்களென
விண்மீன் பூக்க !
வினைகூட்டி வான் மடுவில்
மிதக்கின்றாயே !
வெண்ணிலவே வண்டமிழும்
நீயும் ஒன்றா !
தினந்தேய்ந்து வளர்பவள் நீ !
குற்ற மேனி !
தீந்தமிழுக் கென்றென்றும்
அழிவே இல்லை !
மனம் நாடும் மணித்தமிழைக்
காக்க வாரீர் !
மலருலகில் முதன்மைபெற
திறனைத் தாரீர் !



"திருக்குறள் சான்றோர்"

'ஜெகவீரபாண்டியனார்'

ஆண்மையரசு ந. அம்மையப்பா

தலைவர்

கோவை மாவட்டப் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

1920-ம் ஆண்டு, மேலைச் சிதம்பரம் என்று புகழப்படும் திருப்பேரூரில் கவிதைப் போட்டி ஒன்று நடைபெற்றது. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளையும், "கம்பநாடன்" என்றும் பத்திரிகை ஆசிரியர் மெ.வெ. கோவிந்த ராஜ அய்யங்காரும் அப்போட்டிக்கு நடுவர்களாக இருந்தனர். அருணாசலக் கவிராயர் முதலிய பலரும் அப்போட்டியில் பங்கு கொண்டனர். மூன்று நிமிடங்க;ளல பாடி முடிக்கவேண்டும் என்பது விதி. "பஞ்சாங்கம் பார்ககப்படும்" என்று வெண்பாவுக்குரிய ஈற்றடி கொடுக்கப்பட்டது. பங்கு கொண்ட எல்லோருமே மூன்று நிமிடங்களில் வெண்பாவைப் பாடிமுடித்தனர். அவற்றுள் ஒரே ஒரு வெண்பாவை மட்டும் பரிசுக்குரியதாகத் தேர்வு செய்த்னர். அப்பரிசை வென்ற கவிஞர் யார் என ஊகிக்க முடிகிறதா ? அவரே குறள் நெறி பரப்பிய திருக்குறள் குமரேச வெண்பாப் பாடிய கவிராஜ பாண்டிதர் ஜெகவீரபாண்டியனார் ஆவர். அவர் மூன்று நிடைத்தில் யாத்த வெண்பா இதுவே,

''வான் மதியும் கான்மானும் வன்முயலும் பாதலத்தோர்
கோன்குலமும் தீயுமொன்றில் கூடுமோ? - ஏன் கூடா
நஞ்சாங் கமருய்ய நல்லமுதாக் கொண்டபரன்
பஞ்சாங்கம் பார்க்கப்படும்''

வானில் உலவும் சந்திரனும், கானில் திரியும் மானும், விரைந்தோடும் முயலும் பாதாளத்தில் வாழும் பாம்பும், சுட்டெரிக்கும் தீயும் ஓரிடத்தில் ஒருங்கே கூடமா? தேவர் உய்யும் பொருட்டு நஞ்சை அமுதமாக உண்டருளிய சிவபெருமானுடைய தலை, கால், கை, நெற்றி, கழுத்து ஆகிய ஐந்து அம்சங்களில் கடியுள்ளன என்பது அவ்வெண்பாவின் பொருள்.

குறள்நெறி பரப்பிய சான்றோர்களில் தலையாய நிலையில் திகழ்பவர் ஜெகவீர பாண்டியனார் ஆவார். அவர் "வானம் பொழியுது பூமி விளையும் மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி" என்று ஆங்கிலேயர்களுக்கு எதிராக வீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் மரபில் தோன்றியவர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மணியாச்சிக்கு வடகிழக்கே ஒரு கால் தொலைவில் உள்ள ஓட்டநத்தம் என்ற சிற்றூரே கவிராஜர் பிறந்த ஊராம். பெருமாள்சாமியும் ஆவுடையம்பாளும் இவரை ஈன்றெடுத்த சான்றோராவர்.

ஜெகவீரபாண்டியன் ஐந்தாம் வயதில் பள்ளியில் புகுந்தார். பனையோலையும் எழுத்தாணியும் கொண்டு எழுதிப் படித்தார். தம் பன்னிரண்டாம் வயதில் பள்ளியை விட்டு வெளியேறினார். மூன்றாண்டுகள் பல கடைகளில் வேலை செய்தார். கற்கவேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கிய வண்ணமாகவே இருந்தது. பதினைந்தாம் வயதில் அரிமளம் கோடகநல்லூர் சுந்தரசாமிகள் ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த சிவானந்தசாமி என்னும் முனிவரிடம் கல்வியைத்தொடர்ந்து கற்றார். பின்னர் இலக்கண முத்தையா என்ற புலவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்தார். ஆசிரியத் தொழிலில் அமர்ந்தார். இலக்கண இலக்கியங்களை பலருக்கும் கற்பித்தார்.

கேட்போர் விரும்பும் வண்ணம் சொற்பொழிவாற்றும் திறமும் பெற்றார்.

கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவு, மகாபாரதச் சொற்பொழிவுகள் பல்வே மேடைகளில் நிகழ்த்தினார். சமய இலக்கியங்கள் பலவற்றிலும் ஆழமான புலமை பெற்றுயர்ந்தார்.

1926-ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் குடியேறினார். "திருக்குறள் குமரேச வெண்பா" என்ற நூலின் முதற் பகுதியை வெளியிட்டார். "திருக்குறள் குமரேச வெண்பா" என்ற பத்திரிக்கை ஒன்றையும் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்.

வெள்ளையன் காலத்தில் விரிவான குறள்நெறி பரப்பிய வித்தகர்களில் கவிராஜ பண்டிதரும் ஒருவராவார். தமிழ்வேள் பிடி.ராஜன், என்.எம்.ஆர். சுப்புராமன், எல்.கிருஷ்ணசாமி பாரதி ஆகியோர் வேண்டுகோளுக்கிணங்க 1940 ம் ஆண்டு மதுரையில் குடியேறினார். அங்கிருக்கும் பொழுது, திருக்குறள் குமரேச வெண்பாவின் இரண்டாம் பகுதி, மூன்றாம் பகுதி, புலவர் உலகம், கம்பன் கலைநிலை, தரும தீபிகை, வீரபாண்டியம், பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம், அரும்பொருள் அமுதம், இந்தியத் தாய் நிலை, அணியறுபது, கவிகளின் காட்சி, உலக உள்ளங்கள் முதலான இருபத்தைந்து நூல்களை வெளியிட்டார்.

கவிச்சக்கரவர்த்தி, கவிராச பண்டிதர், கவிஞர் மாமணி போன்ற பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். இவர் ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் புலமை நிரம்பியவர். 1966ல் மதுரைப் பல்கலைக்கழகத்தில் அகாடெமி உறுப்பினராக ஓராண்டு காலம் பதவி வகித்துள்ளார். 1967ல் இம்மை நீத்து மறுமை எய்தினார்.

திருக்குறட்கருத்துக்களை எல்லோரும் எளிதாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அடிப்படையில், திருக்குறள் குமரேச வெண்பாவை இயற்றி, அதற்கு ஆழமான விரிவான உரை விளக்கமும் எழுதியுள்ளார்.

"தெய்வப்புலமைத் திருவள்ளுவப் பெருந்தகை அருளியுள்ள திருக்குறளின் கருத்துக்களுக்குப் பொருத்தமான கதைகளை இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களிலும், காந்தம், பாகவதம் முதலிய புராணங்களிலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய காவியங்களிலும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களிலும் இருந்து தேர்ந்து எடுத்து குமரேசனது முன்னிலையில் விண்ணப்பித்து அவற்றுக்கு விடை கூறும் முறையில் குறள்களை உதாரணமாக எடுத்துக்காட்டி இன்றைக்கு சில வருடங்கட்கு முன்னரே இந்நூலை முடித்து வைத்தும் வெளிப்படுத்தக் கூசி விலகியிருந்தேன். இங்ஙனம் இருப்ப அறிஞர் பலர் இந்நூல் சில பாக்களைக் கேட்டு மகிழ்ந்து அன்பால் என்னைத் தூண்டினர். அன்னார் வேண்டுகோளைச் சிரமேற்கொண்டு இப்பொழுது இதனை வெளியிடுகின்றேன். விழுமிய உரையுடன் கெழுமித் தெளிவாய் வெளிவருகின்றது" என்று ஜெகவீரபாண்டியனார் திருக்குறள் குமரேச வெண்பா முன்னுரையில் குறித்துள்ளார்கள். அந்நூலின் தெய்வ வணக்கமும் அவையடக்கமும் உட்பட 1332 வெண்பாக்கள் அமைந்துள்ளது.

செவிக்கும், சிந்தைக்கும் சிறந்த சொற்றெறிவும் இருவினையும் நீக்கும் பொருட்பொலிவும் பொருந்தி விளக்கும் தமிழ் வேதத்தின் அமிழ்தமயமான நீதி ஒழுக்கங்களையும் பொருள் நுணுக்கங் களையும் அறிந்து அனுபவித்து ஆனந்தம் அடைவதே மக்கட்பிறப்பின் மாண்பு ஆகும்.

அருமையான இவ்வற நூலை அருளிய திருவள்ளுவர் நமக்கெல்லாம் தாயைப் போன்றவர். தாய்மார் தன்னமுதூட்டி உடற்கு உறுதி செய்வர். ஆனால் திருவள்ளுவரோ குறள் அமுதூட்டி உயிர்க்கு உறுதி செய்கின்றார். இக்கருணைவள்ளல் காட்டியுள்ள குறள் நீதிக்கும் அவற்றிற்கு உரிமையான பல அரிய சரிதங்களும் இந்நூலில் புனிதமாய் இனிமை சுரந்து இசைந்துள்ளன என்பதை இதனை

கற்போர் புரிந்துகொள்வர்.

அந்நூலில் உள்ள எல்லாச் சான்றுகளும் மணிகளோ, வைரங்களோ, முத்துக்களோ எனினும் ஒரே ஒரு சான்றை மட்டும் எடுத்துக்காட்டி முடிக்க விழைகின்றேன்.

வாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரத்தில் ஒன்பதாம் குறளுக்குக் கவிஞர் காட்டும் சரிதம் மிகவும் சுவையானது.

**"நாடும் சுரர்குருவேன், நாவினார் நண்ணார்முன்
கோடிசெல்வம் வைத்தும் குமரேசா – தேடும்
புகழ்புரிந்த தில்லில்லோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"**

குமரேசனே கோடி செல்வம் வைத்திருந்தும் தேவகுரு பகைவர்முன் ஏன் நாணி நின்றார்? எனின் புகழ்புரிந்த மனைவி இல்லாதவர்க்கு இகழ்வார்முன் ஏறுபோல் பீடநடை இல்லை என்க.

தேவகுரு வியாழ பகவான், அரிய பல கலை ஞானங்களைப் பெற்றவர். பெரிய மேதை. இவருடைய மனைவி தாரை என்பவள். சந்திரன் இவரிடம் கல்வி பயின்று வந்தான். அவன் அழகைக் கண்டு தாரை காதல் கொண்டாள்.

ஒருநாள் இரவு தனிமையில் இனிய மொழிகள் பல பேசினாள். அவளின் உள்ளக் கருத்தை உணர்ந்தான். குருவின் மனைவியென்றும் கருதாமல் அவளோடு கடிக்களித்தான். பின் அவளையும் தன்னோடு கூட்டிப் போய்விட்டான். குரு அறிந்தார். வருந்தினார். இந்திரன் துணையோடு போராடி மனைவியை மீட்க முயன்று தோற்றார். இறுதியில் பிரமன், சந்திரனுக்கு அறிவுரைகள் கூறினான். அதனால் தாரையைக் குருவிடம் அனுப்பி விட்டான். சந்திரனோடு கூடியிருக்கையில் கருவுற்றாளாதலின் சில மாதங்களில் ஒரு குழந்தையைப் பெற்றாள். பிறந்த குழந்தை மிகுந்த அழகோடு இருந்ததால் தன் குழந்தையெனச் சந்திரன் சொந்தம் பாராட்டினார். குரு மறுத்தார். இவன் யாருக்குப் பிறந்தவன் எனத் தேவர்கள் ஆராயத் தொடங்கினார்கள். அவையில் நிறுத்தி இவனை நீ யாருக்குப் பெற்றாய்? என நேருக்கு நேர் கேட்டான். அவள் வெளியே சொல்லக்கூசி உள்ளம் நாணினாள். பின்னர் உண்மையை மறைக்காமல் கூறினாள். சோரம் புரிந்த சோமனுக்கே அவள் சொந்தமாயினாள். தனது மனைவியின் இழிபழியை நினைத்து வியாழன் மிகவும் வருந்தினான். அறிஞர்களைக் கண்டபோது தலைகவிழ்ந்து நாணினாள். புகழ் புரியாத மனைவியை உடையவர்க்கு இகழ்வார்முன் ஏறுபோல் பீடுநடை இல்லை என்பதை உலகம் காண இவன் தெளிவாக உணர்த்தி நிற்கிறான்.

இவ்வாறு ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு கதையையோ அல்லது இரண்டு மூன்று கதைகளையோ கூறிப் பொருளை விளக்கும் முறையை பாராட்டாமல் இருக்க முடியாது. ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்களுக்கும் பல கதைகளை பல்வேறு இலக்கயங்களிலிருந்து கூறி குறள்நெறியைப் பரப்புவதில் முன்னணியில் நிற்கின்றார். அவரைப் பற்றியும் அவருடைய நூல்களைப் பற்றியும் தெரிந்து கொள்வது தமிழ்மக்களின் தலையாய கடமையாகும். வாழ்க ஜெகவீர பாண்டியனார் புகழ். அவர் பரப்பிய குறள் நெறி நின்று நிலைபெறுக.

இக்கட்டுரையைப் படிக்கும் வாசக நண்பர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். பெரும்புலவர் ஜெகவீரபாண்டியனாரைத் தமிழ் மக்கள் அனைவரும் அறிய வேண்டும் என்பது என் பேரவா. பன்மொழிப் புலவராகிய கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியனாரின் மேதைத் தன்மையை உலகிற்கு விளங்கச் செய்ய வேண்டும் என்பதில் ஊக்கமுடையவனாக இருக்கின்றேன்.

வள்ளுவர் என்ற அறிவியல் புலவர் மக்கள் அனைவரும் ஈதல், இசைபட வாழ்தல் என்ற இரண்டு சிறப்புப் பண்புகளையும் பெறவேண்டுமென்று விரும்புகிறார். திறத்துடன் தீதின்றிப் பொருளைச் சம்பாதித்து,

ஒத்த வாழ்க்கைத் துணையுடன் பேதங்களைக் கடந்து மாறாப் பேரின்பமாகிய உண்மை என்னும் மெய்ப்பொருளை அறிந்து கொள்ள வேண்டுமென்பதே அவரது பேரவாவாகும்.

அவரது குறட்பாக்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் மட்டும் போதாது. அவற்றின்படி வாழ்ந்து பார்க்கவும் வேண்டும். குறளின் மீது நமக்குள்ள ஈடுபாடு, அறிவின் நிலைப் பொருளை நோக்கி உடன்பாடு கொண்டதால் உயர்ந்துகொண்டே செல்லவேண்டும். அப்போதுமட்டுமே நாம் குறள் அன்பர்கள் என்னும் நிலையிலிருந்து வாலறிவாளர்கள் என்னும் நிலைக்கு நம்மை மாற்றி வடிவமைத்துக் கொள்பவர்கள் ஆவோம்.

தமிழின் சிறப்பு

வள்ளுவர் செய் முப்பாலில் வாசகத் தேன் கலந்து
தெள்ளிய நற்றேவாத் தீஞ்சுவை பரவி வள்ளல்
உள்ளிய அருட்பாவோடு திருப்பு கட்டாலும் சேர்த்துத்
தெள்ளமுதுருச்சாக்கி தந்ததும் தமிழேயன் றோ!

மாய்த்திடேலெம் வண்டமிழின் வாய்

தென்னன்

நூல் கடைந்து சான்றோர் நுழைந்துபல் சான்றுகளின்
பால்கிடந்தே ஆய்ந்து படைத்திட்டார். மால்கடந்த
செந்தமிழின் தொன்மையினை சீர்த்தமிகு கோப்பழகை
நந்தமிழர் துய்க்க நனி.

பயின்றறிந்தோ மிப்படைப்பைப் பல்காலும் சொல்லூண்
அயின்றுவந்தோம் ஆரவாரப் பேச்சில்–உயிர்த்தெழுந்தோம்
கட்டுரைகள் பல்வேட்டில் காட்டிக் கதைத்து விட்டோம்
மட்டுண்டோ நஞ்செறகாம் மாண்பு

பட்டிமன்றம் வைத்துப் பகிர்ந்திட்டோம் பாமரர்க்கும்
அட்டியின்றி சொன்னோம் அருந்தமிழை – கட்டி வளர்க்க
மாநாடு கூட்டினோம் மாநிலத்தில் தீந்தமிழின்
தேனாறு பாயுமென்றோ மே

காண்பதென்ன இங்கே கடவுளே நாட்டிலெங்கும்
மாண்பழிந்து மாறா வளமொழிந்து – நாண்படவே
கோலத் தமிழ்த்தாயார் கோப்பழிந்து நிற்கின்றார்
சீலம் சிதைந்திடு தே

அருந்தமிழ் மக்களுக்கு ஆங்கிலக் கல்வி
பெருந்திருபோல் நின்றவரை பேதித் – தொருமகவை
பைந்தமிழின் மூலம் பயிற்றுவிக்க நாணுகிறோம்
மைந்தரோசெய் வாரிம் மறுப்பு

இயல்பு எனும்பெயரால் இன்பத் தமிழை
மயல்கொண்டு செம்மரபை மாற்றி – உயர்வது போல்
ஏடெழுதும் பித்தர் இனவுணர் வற்றவராய்
பாடைகட்டும் பைந்தமிழின் பாங்கு

பெற்றவளை தாயென்று பேணாம வோரினத்தார்
செற்றவளை சீர்குலத்துப் பார்க்கின்ற – சிற்றறிவோர்
இங்கன்றி வேறுண்டோ ஏறுமா றாகவே
பங்கப் படுத்துவதைப் பார்

வடமொழியின் பற்றை வழியனுப்பி விட்டோம்
இடங்கொடுத்தோம் ஆங்கிலத்திற்கிங்கே – நடைபழக
சொற்கள் இடையே சொருகுகின்றோம்
ஆங்கிலச்சொல்
கற்கண்டின் இன்பமெனக் கண்டு

சட்டமென்று மாந்திருக்குச் சால வரம்பிடுதல்
கட்டுப் படுத்துதற்கே, கண்டவாறு – கொட்டமிட்டு
சிந்தைவழி சென்றால் சிறைதண்டம் பற்றிவரும்
இந்தநெறி யாரறியா ரிங்கு

எம்மொழிக்குஞ் சட்டம் இலக்கணம்தான் நாம்பெற்ற
செம்மொழிக்கு மஃது சிறந்தமைந்த–விம்மிதமாம்.
மாற்றலாம் நெஞ்சமொத்து மாசுறவே மீறலாமோ
சாற்றுவீர் போலிகளைச் சார்ந்து

ஆங்கிலத்தில் ஆர்வம் அளவு கடந்ததென்றால்
சங்ககால நாள்வரையில் தாளாற்றி – வீங்கிடுவீர்
தாய்த்தமிழில் பொத்தவிட்டு தன்மானம் போக்காதீர்
மாய்த்திடேலெம் வண்டமிழின் வாய்.

தமிழர்களின் நிலையுயர்ந்தால் தமிழ்த்தாய்க்கு அணி கிடைக்கும்!



கவித்தென்றல் சிவல்புரி சிங்காரம்

தமிழ்மொழியே நாள்தோறும் பேச வேண்டும்!
தமிழ் மொழியை நாள்தோறும் வளர்க்க வேண்டும்!

தமிழர் நிலை எந்நாளும் உயர வேண்டும்!
தமிழ்மக்கள் சிறப்பாக வாழ வேண்டும்!

தமிழமுதை உண்டவர்கள் ஒன்று கூடி
தமிழ்த்தாய்க்கோர் கோவிலையும் எழுப்ப வேண்டும்!

தமிழ்மக்கள் கனவெல்லாம் நனவாய் மாற்றி
தனித்ததோர் முத்திரையைப் பதிக்க வேண்டும்!

தமிழ்மொழியை உலகெங்கும் பரப்ப வேண்டும்!
தமிழ்படிக்கும் சான்றோரை மதிக்க வேண்டும்!

தமிழுக்காய் விழாக்கள் பல எடுக்க வேண்டும்!
தமிழ்மீது தனிப்பாசம் செலுத்த வேண்டும்!

தமிழ்மக்கள் அனைவருமே ஒன்றுகூடி
தக்கவிதம் முடிவெடுத்தால், உலகமெங்கும்

தமிழர்களின் வாழ்வுயரும்! கொடிபறக்கும்!
தமிழ்த்தாய்க்கும் அணிகலன்கள் பலகிடைக்கும்!

மாறிவரும் உலகை நோக்கி – தமிழ் – தமிழர்.

கவிஞர் எஸ்.ஆர். இராஜா



உலகெல்லாம் தாயென்றால் ஒருத்தி யாவாள்!
ஒப்பற்ற கதிரவனும் ஒன்றே யாகும்
நிலவென்றால் என்றென்றும் குளிர்ச்சி உண்டு
நெஞ்சமென்றால் இரக்கம்தான் இருத்தல் வேண்டும்
நிலவுலகம், வானுலகம், மாறி னாலும்
நிச்சயமாய் தனித்தன்மை மாறா தென்றால்,
அலைகடலுக் கப்பாலும் முப்பால் போல,
அழகு நிலா போல்வாழும் தமிழே யாகும்!

தாயன்புக் கீடாகச் சொல்வ தென்றால்,
தரணியிலே தமிழொன்றே உவமை யாகும்!
வாயன்பு, காதலர்க்கோ இனிக்கும், செல்வம்,
வற்றிவிட்டால் கசந்து போகும்! கவலை போக்கும்,
சேயன்பும் சிலநேரம் தொல்லை யாகும்!
செந்தமிழ்தான் எந்நாளும் மாற்ற மின்றி
வாயினிக்க, நெஞ்சினிக்கச் செய்யும். அந்த
வளர்தமிழே என்றென்றும் இளமைக் கோலம்!

கடல்கடந்து உலகெல்லாம் தமிழர் சென்றார்
கைநிறையப் பொருளீட்டி வந்தார் ; அங்கே
அடைத் தேனாய் அருந்தமிழை விட்டு வந்தார்
அதன் சிறப்பை அறிந்தவரோ போற்று கின்றார்!
உடல் பொருளும் ஆவியாவும் தமிழுக் கென்றே
உயர் தமிழர் வாழ்கின்றார்! நாமும் என்றும்,
மடல் விரிந்த தாழையைப் போல் தமிழ் பரப்பி
மாறிவரும் உலகெங்கும் முழக்கம் செய்வோம்!

★

கணிப்பொறி - இணையம் - தொடர்பியல்கள் நிலையில் தமிழர்களின் இன்றைய முன்னேற்றமும் உலகப் பார்வையும்

முனைவர் ம. புனிதாம்பாள்
முனைவர் ஆ. கலைமதி

"தமிழ்ப்பணி செய்வோரெல்லாம்
தரணியில் மரணம் இல்லார்"

பழங்காலம் முதலே தமிழ் மொழி தெய்வத்தன்மை வாய்ந்தது என்றும், தனிச்சிறப்புகள் பலவற்றைக் கொண்டது என்றும் கருதப்பட்டு வந்துள்ளது.

தமிழின் தனிச் சிறப்புக்கள் பற்றிப் பேசுவோரின் கருத்துக்களின் சாராம்சத்தை நாம் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். தமிழ் மொழி தன்னிகர் இல்லாதது; பிற மொழிக்கலப்பின்றித் தனித்து இயங்க வல்லது; இலக்கண வரம்புடையது; இலக்கியச் செழுமை மிக்கது; பழமையானது; இனிமை மிக்கது; தமிழுக்கு நிகரான மொழிகள் உலகில் ஒன்றும் இல்லை என்று கூறலாம்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேன்! "தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர் !" இப்படியாகத் தமிழின் சிறப்பை, தமிழின் அழகை, தமிழின் உயர்வை பலரும் பாராட்டிப் புகழ்ந்து பாடிச் சென்றுள்ளனர். உலகின் மூத்த மொழி, முதல் மொழி என்றும் இளமையுடன் இருக்கும் இனிய நற்செம்மொழி என்று உலக அறிஞர் பெருமக்களும் ஆராய்ச்சியாளர்களும் போற்றிப் புகழ்ந்து குறிப்பிடுகின்றனர்.

ஆனால் இன்றைய தமிழன் தமிழ் பேசுகிறானா? தமிழ் படிக்கிறானா ? தமிழ் எழுதுகிறானா? தமிழ் வளர்க்கிறானா ? என்றால் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

இந்நிலை மாறி,

**"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"**

என்ற பாரதியின் கனவினை நினைவாக்கும் வண்ணம், இன்றைய வளர்ந்து வரும் தகவல் தொழில்நட்பம் விரைவாக செயல்படுகிறது.

உலக அளவில் பல லட்சம் கம்ப்யூட்டர்களை பல ஆயிரம் இணைப்புக் கம்ப்யூட்டர்களையும் இணைக்கும் இணைப்புதான் இன்டர்நெட் எனப்படுகின்றது. பரந்து விரிந்த இந்த மிகப் பெரிய இணைப்பின் மூலம் ஒரு கம்ப்யூட்டரில் இருந்து மற்றொரு கம்ப்யூட்டருக்குத் தகவல் வளங்களைத் தொடர்பு மற்றும் பரிமாற்றம் செய்ய ஏதுவாகின்றது. இந்த இணைப்புகள் மூலம் நாடு, இனம், மொழி போன்ற பல தடைகளைத் தாண்டிய வகையில் ஒருவருக்கு ஒருவர் தடையின்றித் தகவல்களை பரிமாறிக் கொள்ள இயல்வதால், பரந்து விரிந்த இந்த உலகைச் சிறிய அளவிற்குச் சுருங்கி இன்று ஒரு குவலயக் கிராமம் (Global Village) ஆககாட்சியளிக்கிறது. இணையம் ஒரு வள்ளல் மாதிரி ! யார் கேட்டாலும், எதைக் கேட்டாலும் தகவல்கள் என்ற அளவில் அள்ளித் தருகிறது.

இன்று இணையத்தில் உலகின் பல மொழிகள் இடம் பெற்றுள்ளன. ஆயினும் ஆங்கிலத்தை அடுத்து மிகுதியாக பயன்படும் மொழி தமிழ் என்று அறியும் பொழுது மிகவும் பெருமையாக இருக்கின்றது. ஆனால் தமிழ்நாட்டில் இருக்கும் தமிழர்களில் சிலருக்கே தமிழை முறையாய்ப் பேசவும் எழுதவும் தெரிவதில்லை. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அன்றாட வாழ்வில் பேச்சுத் தமிழுக்குப் புத்துயிர் கொடுக்கின்றனர். அவர்களால் தமிழ் எழுத்துகள், இலக்கணம் ஆகியவற்றைக் கற்று கொள்வது மிக கடினமாய் இருக்கிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்களும், தனது பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு, மற்றும் மொழி ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாக்க இயலாத

சூழ்நிலையில் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றிற்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் இன்றைக்கு பெரும் வரப்பிரசாதமாக இணையம் அமைந்துள்ளது. இணையம் மற்றும் தகவல் தொடர்பியல்கள், தமிழர்களின், தமிழ்மொழியின் - பாரம்பரியத்தை உலகளவில் எப்படி சிறப்படையச் செய்கிறது என்பதனை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

தமிழகத்தில், அரசும், அரசுச் சார்ந்த நிறுவனங்களும், அரசுச் சாரா அமைப்புகளும், தமிழ் மொழியிலுள்ள ஏராளமான இலக்கிய வளங்களை உலகின் பல்வேறு இடங்களிலுள்ள மக்களை (குறிப்பாக தமிழ் மக்களை) சென்றடைய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அவ்வாறு செயல்படும் நிறுவனங்களிலிருந்து கீழ்க்காணும் மூன்று நிறுவனங்களின் செயல்பாடுகளை மட்டும் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

- தமிழ் இணையப் பல்கலைக் கழகம், சென்னை

- அண்ணா பல்கலைக்கழகம் இந்திய மொழிகளுக்கான தொழில் நுட்பத் தீர்வு

- வளமையம் - தமிழ் - சென்னை

- கணினித்தமிழ்ச் சங்கம் - சேலம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தோற்றம்

தமிழ் மக்கள் ஒரு மொழியினர். பல நாட்டினர். எல்லா நாட்டிலும் சிறுபான்மையர். உலகில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி வாழும் தமிழர்கள் தங்களுடைய மரபுகளையும், விழுமியங்களையும், பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும். இத்தேவையை நிறைவேற்ற அவர்கள் தங்கள் மொழி, கலை, இலக்கியம் இவற்றோடு தொடர்பு நீங்காது வாழ வேண்டும்.

உலகு தழுவி வாழும் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தேவைகளை மனதிற்கொண்டு தமிழக முதல்வர் அவர்கள் 1999இல் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டின் நிறைவு விழாவில், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (த.இ.ப.) ஒன்று அமைக்கப்படும் என அறிவித்தார். அதை நிறைவேற்றும் வகையில் இத்தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. த.இ.ப. ஆட்சிக்குழு ஒன்றால் வழிநடத்தப்பட்டு, ஒரு முழு நேர இயக்குநர் பொறுப்பில் செயற்பட்டு வருகின்றது.


உலகு தழுவி வாழும்
தமிழ் மக்கள்
எந்தெந்த நாடுகளில் உள்ளனர்
என்பதைக் குறிக்கும் படம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்

- உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தினர்க்கும், தமிழில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ்மொழி, இலக்கியம் பண்பாடு பற்றிய கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்
- பார் தழுவி வாழும் தமிழர்கட்டு, அவர்கள் தேவைக்கேற்பப் பாடத்திட்டங்களை உருவாக்கி அளித்தல் : அவர்கள் தங்கள் பாரம்பரியத்தோடு தொடர்புடன் வாழத் துணைபுரிதல்
- உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவுச் சாதனங்களைத் தொகுத்து அவற்றைப் பரவலாகத் தமிழ்மக்கட்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.
- தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடத்திட்டங்களை வகுத்தல், கேள்வியறிவுக்காகவோ, அல்லது சான்றிதழ், பட்டயம், பட்டம் பெறுவதற்காகவோ கற்போருக்கு இப்பாடங்களைக் கற்க வாய்ப்பளித்தல் : வரையறுக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தோருக்கு, அவர்கள் கற்ற பாடங்களில் தகுதிக்கேற்ப, தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகம் வழி சான்றிதழ் / பட்டயம் / பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

தமிழ் இணையப் பல்கலைக்கழக பணித்திட்டங்கள்

த.இ.ப.வின் பணித்திட்டம் பல்வகைப்



பட்டவை. இணைய வழிக் கல்வித்திட்டங்கள்/ மின் நூலகம், கணித்தமிழ் வளர்ச்சி போன்ற பல பணிகள் இவற்றுள் அடங்கும் (படம் 1)

கல்வித் திட்டம்

கல்வித் திட்டத்தின் கீழ், தமிழ்க்கல்வி அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை இணையவழி வழங்கப்படுகிறது. இதில் பயணர் தமிழ், பிற சிறப்புப்பாடப் பயிற்சிகள் பலவும் இடம் பெறுகின்றன.

சான்றிதழ்க் கல்வி (தொடக்க நிலை)

சான்றிதழ்க் கல்வி ஒரு தொடக்க நிலைக் கல்வி. இத்திட்டத்தின் கீழ் தமிழகப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் தமிழ் மொழிப் பாடத்திறன்கள் அடிப்படை நிலை, இடைநிலை, மேல்நிலை என்ற மூன்று நிலைகளில் வழங்ககப்படுகின்றன.

அடிப்படை நிலைப் பாடங்கள்

அடிப்படை நிலையில் தமிழ் எழுத்துகள்

யாவும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. எழுத்துகளில் ஒலி, வரி வடிவங்களைப் பயின்று, எழுதிப் படிக்கும் வகையில் பயிற்சிகளுடன் பாடங்கள் தரப்பட்டுள்ளன.

இடைநிலைப் பாடங்கள்

இடைநிலையில் பயில்வோர், கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், உரையாடுதல், இலக்கணக் கூறுகள் போன்ற மொழித் திறன்களைப் பெறுகின்ற வகையில் 20 பாடங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேல்நிலைப் பாடங்கள்

மேல்நிலையில் பயில்வோர், அறிவியல் கட்டுரை, கலந்துரையாடல், வருணனை, கவிதைகள், செய்தி வெளியிடல், சிறுகதை, இலக்கியக் கட்டுரை, நாடகம், பயணக் கட்டுரை போன்ற இலக்கிய இலக்கண, மொழித் திறன்களைப் பெறும் வகையில் 18 பாடங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

உயர் கல்வி

த.இ.ப. வின் உயர் கல்வித் திட்டத்தின் கீழ், தமிழ்மொழி, பண்பாடு, இலக்கியம், வரலாறு, கலை ஆகியவை பற்றிய பாடங்கள் அறிமுக நிலை முதல் ஆய்வு நிலை வரை பல்வேறு நிலைகளில் வழங்கப்படுகின்றன.

பாட அமைப்பு

தாளுக்கு ஓர் அறிமுகமும், தொகுதிக்கு ஒரு பொதுவிளக்கமும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் ஒலி, வரி வடிவங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்து வடிவில் மட்டுமே நீண்ட உரைநடையைப் படிக்கும் பொழுது தோன்றும் அயர்வையும் சலிப்பையும் தவிர்க்கப் பாடங்கள் ஒலி, ஒளி போன்ற பல்லூடக வசதிகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன. பாடத்தில் படங்கள், அசைவுப் படங்கள் ஆகியவை ஆங்காங்கே தேவைக்கேற்பத் தரப்பட்டுள்ளன. செய்யுள் வரிகள் ஒலி வடிவிலும் கொடுக்கப்பட்டுள்ளன. படித்த செய்திகளை நினைவுப்படுத்திக் கொள்ள, பாடத்தின் இரண்டு இடங்களில் தன் மதிப்பீட்டிற்கான வினாக்கள் தரப்பட்டுள்ளன. வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் விடையைக் காண வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாட இறுதியில் தொகுப்புரை ஒன்று வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பாடத்திற்கும் அத்துறை வல்லுநர் ஒருவரின் சிறிய சிறப்பு உரை ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

முதுநிலை (தமிழியல்) கல்வி படிப்பினை துவங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வுக் கல்வி

தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு, கலை ஆகிய துறைகளில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (ஞா.னு) பெற விரும்புவோருக்குத் தேவையான பார்வை நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மிகுதியான அளவில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின்நூலகத்தில் இடம்பெறுகின்றன. ஆய்வை வழி நடத்த தமிழகப் பல்கலைக்கழகங்களில் உள்ள பேராசிரிய வல்லுநர்கள் பலரின் உதவிக்கு வழி செய்யப்படுகிறது. ஆய்வுப் பட்டங்களைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கும்

தேர்வு முறை

தேர்வுகள் கீழ்க்காணும் இரு வகைகளைக் கொண்டிருக்கும்

1. இணை வழித் தேர்வு
2. நேர்முகத் தேர்வு

இணைய வழித் தேர்வு பாட ஆசிரியர்களால் இணைய வழி நடத்தப்படும். மாணவர்கள் அவர்களுக்கு அருகில் உள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தொடர்பு மையங்களில் உள்ள கணிப்பொறிகள் மூலம் தங்கள் தேர்வுகளை எழுதுவார்கள். இதற்கான தேர்வு முறை உருவமைக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வு, இணையவழித் தேர்வு செய்ய இயலாத பாடப் பகுதிகளில், தொடர்பு மையங்களில் உள்ள தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தினால் நிமிக்கப்பபட்ட தேர்வாளர்களால் நடத்தப்படும்.


மின் நூலகம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகம் தமிழ் இணையப் பாடத் திட்டத்தில் சேர்ந்து பயில்வோர் மற்றும் உலகு தழுவி வாழும் தமிழர்கள் அனைவரது பயன்பாட்டிற்காகவும் உருவமைக்கப்பட்டுள்ளது. இம்மின் நூலகத்தில் நூல்கள், அகராதிகள், பிற பார்வைக் கூறுகள் என்னும் 3 பிரிவுகள் உள்ளன (படம் 2)

நூல்கள்

- இந்தப் பிரிவில் சங்க காலம் முதற் கொண்டு, இன்று வரை படைக்கப்பட்டுள்ள இலக்கிய, இலக்கண நூல்கள் அனைத்தும் கீழ்காணுமாறு இடம் பெறுகின்றன.

- சங்கம், சங்கம் மறுவிய கால இலக்கிய



நூல்கள் உரையுடன் கொடுக்கப் படுகின்றன.

- மொழி பெயர்ப்பு நூல்களும் இடம் பெறுகின்றன.

- தமிழ் இலக்கிய நூல்கள் ஆங்கில எழுத்து வரிவடிவிலும் கொடுக்கப்படுகின்றன.

இந்த மின் நூல்களின் சிறப்பு நூலகத்திலுள்ள நூல்களின் பாடு பொருள், தேடு பொருள் போன்றவற்றை எளிய முறையில் தேடிப் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருப்பதாகும். இவ்வசதி ஆய்வாளர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

அகராதிகள்

இந்தப் பிரிவின் கீழ், தமிழ் - தமிழ், தமிழ் - பிறமொழிகள், பிற மொழிகள் - தமிழ், நிகண்டுகள் போன்ற பல அகராதிகள் இடம் பெறுகின்றன. இப்போதைக்குக் கீழ்க்காணும் அகராதிகள் இணையத் தளத்தில் இடம் பெற்றுள்ளன.

1. சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரகராதி

2. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் தமிழ் அகராதி

3. பழனியப்பா சகோதரர்களின் பால்ஸ் என்னும் ஆங்கிலத் தமிழ் அகராதி

4. மு. சண்முகம் பிள்ளை அவர்களின் தமிழ் - தமிழ் அகராதி

பிற பார்வைக் கூறுகள்

இந்தப் பாடப் பிரிவில், கீழ்க் காண்பவை இடம் பெறுகின்றன

1. கலைச் சொற்கள்

2. தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளில் ஒளிக் காட்சிகள்

3. பிற தமிழ் இணையத் தளங்களுக்கு இணைப்பு

கலைச் சொல் பிரிவில், கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பல துறைகளின் கலைச் சொற்கள் இடம் பெறுகின்றன. இப்போதைக்கு 2 இலட்சம் கலைச் சொற்கள் வரை தளத்தில் இடப்பட்டுள்ளன.

அண்ணா பல்கலைக் கழகத்தின் கணிப்பொறி அறிவியல் தொழில் நுட்பப் பள்ளியில் அமைந்துள்ள தமிழ் மையமானது தகவல் தொழில் நுட்பத்தின் பயனை அவரவர் தாய் மொழியிலேயே அடைதல் வேண்டும் என்ற நோக்கில் கீழ்கண்ட பணிகளை மேற்கொண்டுள்ளது.

- உடன் நிகழ் அகராதி மற்றும் நிகண்டுகளை உருவாக்குதல்
- வட்டார மொழிச் சொல் திருத்தியை உருவாக்குதல்
- இந்திய மொழிக் கருவிகளின் எல்லா நிலைகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல்
- இந்திய மொழிகளுக்கான தொழில் நுட்பக் கருவிகள், தீர்வுகள்
- அறிவுத் தளங்கள் கொண்ட இணையத் தளத்தை உருவாக்குதல்
- வட்டார கலை, பண்பாடு பற்றிய இணையத் தளத்தை உருவாக்குதல்

ஆனால் இவை அனைத்துப் பண்புகளையும் ஒருங்கே கொண்டுள்ள மென்பொருட்களும் கருவிகளும் இதுவரை உபயோகத்தில் இல்லை. அதற்கான முயற்சிகள் பல்வேறு ஆராய்ச்சி மையங்களிலும், கல்வி நிலையங்களிலும், தனிப்பட்ட முறையிலும் உலகின் பல்வேறு பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான முயற்சி இந்த மையத்திலும் மிகவும் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. உதாரணமாக இம்மையத்தில் உருவாக்கப்பட்டு வரும் சொல்லாளரான (Word Processor) Rto Microsoft‹ Ms-Wordlப் போன்றது. இதில் பயன்படுத்துவோரின் இடைமுகம் முழுவதும் தமிழிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர இம்மையம் மேலும் பல சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது.

- குரல் இயந்திரம்
- தமிழ் அலுவல் தொகுதி
- தமிழ் இலக்கணத் தளம்
- குழந்தைகளுக்கான பட விளக்க அகராதி
- இணைத் தளத்திற்கான மொழி பெயர்ப்பு இயந்திரம்
- மெய்ப்பொருள் மூலத்தை தொல்காப்பியம் மற்றும் நியாய கொள்கைகளைக் கொண்டு உருவாக்குதல்

- பள்ளி குழந்தைகளுக்கான இந்திய மரபு சார்ந்த அறிவியல் தளத்தை உருவாக்குதல்
- தமிழில் தன்னியக்க மென்பொருள்கள் ஆவணமாக்கல்
- தன்னியக்கக் குறிப்பான்

உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள ஏராளமான இலக்கிய வளங்களை அனைவரும் சுவைத்து மகிழ்ந்திடவும், தமிழில் உள்ள உள்ளடக்கங்களை அனைவரும் அறிந்து உபயோகப்படுத்தவும் தேவைப்படும் மென்பொருள் கருவிகளை இந்த மையம் உருவாக்கி வருகிறது.

உருபனியல் பகுப்பி (Morphological analyzer) பெயர் மற்றம் வினைகளை உள்ளடக்கிய வாக்கியங்களை இலக்கண முறைப்படி பகுத்து தருகிறது. பெயர்ச் சொற்கள் பின்னொட்டு, வேற்றுமை உருபுகள், பெயர், பெயரடைகள் என்ற அமைப்பிலும் வினைச் சொற்கள் திணை, பால், எண், இடம், காலம், வினையடை என்ற அமைப்பிலும் பகுக்கப்படுகிறது.

தன்னியக்கக் குறிப்பான் (Automatic tagger) தமிழில் கொடுக்கின்ற பக்கத்தினை தன்னியக்க முறையில் வினைச் சொல், பெயர்ச்சொல், பெயரடை, வினையடை, பின்னொட்டு, துணை வினை என்ற அமைப்பில் பிரித்துக் கொடுக்கிறது.

சிறுவர்களின் பயன்பாட்டினை மனதிற்கொண்டு, அவர்களின் பார்த்தறியும் ஆற்றலை வளர்க்கும் பொருட்டு பட விளக்க அகராதி' (Picture dictionary) உருவாக்கப்பட்டு வருகிறது. எழுத்துக்களின் அடிப்படையில் சொற்கள் வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சொல்லிற்கும் கவிதை வடிவில் அதன் பயன்பாடு விளக்கப்பட்டுள்ளது இதன் தனிச்சிறப்பாகும்.,

தமிழ் இலக்கணத் தளம் (Tamil grammarsite) தமிழ் மொழியின் அடிப்படை இலக்கணத்தை எளிய முறையில் அனைவரும் அறிந்து கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இலக்கணம் கற்பிக்கும் முறை கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. இலக்கணப் பாடம்
2. விளையாட்டில் இலக்கணம்
3. பயிற்சி தேர்வுகள்

இதைத் தவிர தமிழ் எழுத்துக்களை எழுதும் முறை, வார்த்தை உச்சரிப்பு போன்றவைகளும் இதில் அடங்கும்.

மனித குரல் வளையம் தமிழ் உச்சரிப்பு போல் கணிப்பொறி டென்பொருள்களை தமிழ் உச்சரிக்க வைக்கும் முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது. "குரல் இயந்திரம்" (Tamil Voice Engine) எழுத்து வடிவில் உள்ள தமிழை குரல் வடிவில் மாற்றுவதை இதன் பணியாகும். தமிழ் அலுவல் தொகுதியில் (Office suite) தமிழ் இணைய மேலோடி (Tamil word Processor), என்ற மூன்று தொகுதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இணையத்தில் தமிழ் தொடர்பான தளங்களைப் பயன்படுத்த முனைவோர்க்கு வழிகாட்டியாகத் தேடு இயந்திரம் (Search Engine) உருவாக்கப்பட்டு வருகிறது. தேடும் தளங்களுக்கான மூல வார்த்தைகள் உள்ளீடாகக் கொடுக்கப்பட்டால், தமிழ்த் தளங்களின் தடங்கள வெளியீடாகப் பெறப்படும். தமிழ்ச் சொல் திருத்தி (Tami! Spell Checker) தமிழ்ச் சொற்கள் உள்ளீடாக ஏற்கும் பொழுது, தன் உள்ளீடு தவறாக இருக்கும் பட்சத்தில் அச்சொல்லை திருத்தி, சரியான சொல்லையும், ஆலோசனைகளையும் வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்டு வருகிறது மற்றும் உருபனியல் உருவாக்கியைக் கொண்டு, மற்ற மொழிகளை தமிழில் பெயர்க்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழில் உள்ள வளங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு அவற்றை இணையத் தளத்தில் உருவாக்குவதே மிகவும்

சிறந்த கலையாகும். இந்த மையத்திற்கான இணையத்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் இம்மையத்தைப் பற்றிய விவரங்களும், அதன் முக்கிய பணிகள் மற்றும் சிறப்புப் பணிகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. இதனை annauniv.edu/retamil மற்றும் www.retamil.org என்ற இணைய முகவரியில் காணலாம்.

கணித்தமிழ்ச் சங்கம்

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் தமிழ் இணைய மாநாட்டில் 'கணித்தமிழ்ச் சங்கம்' தொடங்கப்பட்டது.

தமிழ் மென்பெருள் தயாரிப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படும் இந்த சங்கம், தமிழக அரசின் தமிழ் மென்பொருள் மானியக்குழு, தரச் சான்றிதழ் குழு மற்றும் தகவல் தொழில் நுட்பக் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றி வருகின்றது.

சென்னையில் நடந்த இரண்டாவது தமிழ் இணைய மாநாட்டில் தரப்படுத்தப்பட்ட கீ-போர்டு மற்றும் பொதுவான என்கோடிங் சிஸ்டம் தமிழில் வருவதற்கு கணித்தமிழ்ச் சங்கம் பணியாற்றியுள்ளது.

2000 ஜூலையில் சிங்கப்பூரில் நடந்த மூன்றாவது தமிழ் இணைய மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட கணிப்பொறித் தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டு, இன்றைய நவீன இணையம் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தில் தமிழ்மொழியை பயன்படுத்துவதற்கான ஆக்கத்திற்கு கணித்தமிழ் சங்கம் காரணமாக இருந்தது. 2000 டிசம்பரில் மதுரை நகரில் கணிப்பொறி விழிப்புணர்வு மற்றம் கண்காட்சியை தமிழக அரசின் ஆதரவுடன் நடத்தி அதிக வரவேற்பை பெற்றது. மேலும் 2001 ஆகஸ்ட் 26 முதல் 28 வரை மலேசியா - கோலாலம்பூரில் நடைபெற்றுள்ள நான்காம் தமிழ் இணைய மாநாட்டில் கணித்தமிழ்ச் சங்கம் சார்பாக, பல ஆய்வுக் கட்டுரைகளும், அங்கு நடைபெறவுள்ள தொழில்நுட்ப கண்காட்சியில் தமிழ் மென்பொருள் தயாரிப்பாளர்களின் படைப்புகளும் இடம் பெற்றன.

தமிழ் இணையப் பல்கலைக்கழக்ததின் செயல்பாடுகள் பற்றிய ஆய்வாளர்களின் கருத்து

உலகளவில் இந்த இணையப் பல்கலைக்கழத்திற்கு மிகுந்த வரவேற்புள்ளது. எடுத்துக்காட்டாக இப்பல்கலைக்கழகத்தின் இணையத்தளம் தொடங்கிய நாள் அன்று மட்டும் 71 நாடுகளிலுள்ள சுமார் 4000 மக்கள் பார்த்து பயனடைந்தனர். அதைத் தொடர்ந்து பயனடைபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த இணையப் பல்கலைக்கழகம் உலகத்திலேயே முதன் முதலாக தாய் மொழி வளர்ச்சிக்காகவும், தாய் மொழி சிறப்படையவும் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஆகும். இதன் சிறப்பான செயல்பாட்டை அறிந்து ரஷ்ய நாடு தனது தாய்மொழியான ரஷ்ய மொழியில் இணையப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு தேவையான அடிப்படை நுட்பங்களை அறிந்துக் கொள்வதறக்காக ரஷ்யாவிலிருந்து நமது நாட்டிற்கு வந்து நேரடிப்பார்வை மேற்கொண்டுள்ளனர்.

இப்பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் இணைய வழிக் கல்வியில் பயில்வதற்காக மாணவர்கள் சேர்க்கை பதிவும் அதிவேகமாக நடைபெற்று வருகிறது.

ஆய்வாளர்கள், அறிஞர் மாணவர்கள் மற்றம் கல்வியாளர்களும், இப்பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள நூலகத்தின் மூலம் உறுப்பினராகிப் பெரிதும் பயனடைகிறார்கள்.

இணையப் பயனாளிகள், உடனுக்குடன் இணையத்தின் மூலம், பல்கலைக்கழகத்துடன் கருத்துப் பரிமாற்றமும் செய்து கொள்கின்றனர்.

இந்த இணையப் பல்கலைக்கழகத்தின் மிகச் சிறப்பு அம்சமாக : வீட்டிலிருந்தவாறே தமிழில் அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை கல்வி பெறலாம். நூலகமே நம்மை நாடி வருகிறது. வீட்டிலிருந்தே சங்க காலம் முதல் இன்று வரை எழுந்துள்ள அனைத்து நூல்களையும், அவற்றின் உரை நூல்களையும் பெற்றுப் படிக்கலாம்.

அகராதிகளிலிருந்து, கலைச் சொற்களையும் பெறலாம் பண்பாட்டு நிகழ்ச்சிகளைக் காட்சிகளாக காணலாம்.
மேற்குறிப்பிட்டுள்ளவை பற்றி மேலும் விவரம் அறிய அணுக வேண்டிய மின் அஞ்சல் முகவரி : tamilvu@vsnl.com (அ) ponnav@tamlvu.org (அ) www.tamilvu.org

கணினி - இணையம் - தகவல் தொடர்பியல்களின் வளர்ச்சியின் காரணமாக தமிழ் மொழியும் - தமிழர் பண்பாடும், கலாச்சாரமும், உலக மக்கள் அனைவராலும், போற்றப்படும் நிலை உருவாகியுள்ளது. வெவ்வேறு நாடுகளின் வாழும் தமிழர்கள் தங்களுடைய தாய் மொழியை அவரவர் வீட்டிலிருந்தே இணைய வழிக் கல்வியின் மூலம் அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை படித்து பயனடைய முடிகிறது.

மின் அஞ்சல் மூலமாக மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கருத்து பரிமாற்றங்கள் எளிதில் நடைப்பெறுகிறது. மின் நூலகம் இணையத் தளத்தில் இருப்பதால், தமிழ் மொழியில் எந்தப் பொருள் குறித்தும் எளிதில் தகவல் திரட்ட முடிகிறது.

மின் நூலகத்தில் சங்க காலம் முதற்கொண்டு இன்று வரை படைக்கப்பட்டுள்ள புதிய படைப்புகள் வரை அனைத்து நூல்களும், பாடு பொருள், தேடு பொருள் போன்றவற்றை எளிய முறையில் தேடிப் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் எல்லா நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் எளிதில் படித்துப் பயனடைய முடிகிறது.

இந்தியாவில், அனைத்து மாநிலங்களிலும் அவரவர்களுடைய தாய்மொழி போற்றி பாதுகாக்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் மட்டும், தாய்மொழியான தமிழுக்கு அவ்வளவாக முக்கியத்தும் கொடுக்காததால், பெரும்பாலும் ஆங்கில மொழியே நடைமுறையில் பின்பற்றப்படுகிறது. இந்நிலையில் தமிழகத்தில் தமிழின் வளர்ச்சியும், அதன் எதிர்காலமும் கேள்விக் குறியாக உள்ளது. எனவே, தமிழ்மொழியினை அதனுடைய பாரம்பரியத்திலிருந்து காப்பாற்ற தமிழ் வழி கல்விக் கொள்கையை உருவாக்கி அதனை நிலைநாட்ட ஒற்றுமையுடன் பாடுப்பட்டு பலன் அடைவோம்.

இணைய வழித் தமிழ் கற்போம்
தரம் சேர்ப்போம்

வாழ்க தமிழ் வளர்க தமிழ்

தமிழா ஒன்று சேர்
தமிழால் ஒன்று சேர்
தமிழ் - தமிழருக்காக ஒன்று சேர்

*****

தமிழ் கற்க உதவும் மற்ற இணையத் தளங்களின் பட்டியல்

பொன் மொழிகள் மையம் **(Ponn language Centre)** தமிழைக் கற்றுக் கொள்ளவும் கற்றுத் தரவும் உதவக் கூடிய இணைத்தளம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறது. திரு. வாசு. ரங்கநாதன் தமிழ் பயில்வதற்கான வழிகளை அளிக்கிறார்.

Tamil learning Resources - Pulavar Tagtamil, PC Tamil, Arbov Tamil என்றெல்லாம் தமிழைக் கற்றுக் கொடுக்கும் வசதிகள் இணையத்தில் கிடைக்கின்றன.

நியூசிலாந்தின் டாக்டர் இளங்கோ இரண்டு தளங்களை உருவாக்கி இருக்கிறார். Tamil Tutoila Website, Tami Language Home என்ற இரண்டு தளங்கள் தமிழ் கற்பதை எளிதாக்கம் நோக்குடன் இயற்றப்பட்டிருக்கின்றன.

டாக்டர் ராம் ரவீந்திரன் இணையம் வழியாகத் தமிழ் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்கிறார் Learning Tamil through Internet என்ற தளத்தில் இதற்கான வழிமுறைகளைக் காணலாம். அஞ்சல் வரிவடிவத்தில், தமிழை எப்படி எழுதுவது என்பதற்கும் டாக்டர் ராம் ரவீந்திரன் How to write in Tamil என்று பயிற்சி அளிக்கிறார்.

தமிழ் மொழி வார்த்தைகளைப் பயன்படுத்தி விளையாடும் வசதி இணையத்தில் உள்ளது

தமிழன் பெருமை

அருள்நிதி புலவர் பட்டணம் நா. பழநிச்சாமி

"தமிழ் தமிழ்" என்று நீர் சொல்லும் சொல்லும் - அதுவே
அமிழ் தாய் இன்னொலியில் செல்லும் செல்லும் (தமிழ்)

தொடுப்பு

இமிழ் கடல் உலகினில் இலக்கண வலிவுடன்
எழிலமை பொருள்நூல் இலங்கிடப் பொலிவது (தமிழ்)

முடிப்புகள்

1. உறுப்பிற் கியந்தவல்மெல் இடையினம் வந்தது - நல்
உள்ளம் உவக்கும் பாக்கள் உயர்ந்திட நின்றது
பொறுப்புமிகும் குறள் நூல் புகழினைக் கண்டது - எப்
பொழுதும் பயின்றிடவே இலக்கியம் தந்தது (தமிழ்,

2. பண்டறி சொல்வளம் பாங்குறப் பெற்றது - வாழ்
பல்வகைச் சமயமும் பயின்றிட உற்றது
கண்டறி மெய்ஞ்ஞானக் கவிகளும் கலைகளும் - நாம்
காணக் கிடைத்தமிழ்த் தேனைச் சுவைத்திடவே (தமிழ்)

பரிபூர்ணா என்ற பெயரில் இதைப் பார்க்கலாம். பிலடெல்பியவைச் சேர்ந்த பேராசிரியர் ஹெச். ஷிப்மன் என்பவர் இணையத்தின் மூலமாகத் தமிழைக் கற்றுக் கொடுக்கும் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

அமெரிக்காவின் மேரிலாண்டில் உள்ள ஸாஃப்ட்டெக் கிரியேஷன்காரர்கள் கல்வி என்ற பெயரில் ஓர் ஆணைத் தொகுப்பை உருவாக்கி இருக்கிறார்கள். தமிழைக் கற்றுக் கொள்ள உதவும் வகையில் இதைப் பயன்படுத்த முடியும்.

கொலம்பியா பல்கலைக் கழகத்தின் **South Asia Gopher, Inventory of Tamil Learning Materials** என்ற தொகுப்பை அளிக்கிறது. தமிழிலேயே இயக்கக் கட்டளைகள், அணைத் தொடர்கள் உருவாக்கப்பட்டு வரும் காலகட்டத்தில் தமிழை இணையம் மூலமாகக் கற்றுக் கொடுக்கும் முயற்சிகள் தமிழின் தாக்கத்தை இன்னும் வலுவுள்ளதாக ஆக்கும்.

இன்டர்நெட் பற்றி ஆன்லைனில் படித்துத் தெரிந்து கொள்ள : **Ftp : //ftp. eff. org. ftp : // frphost.nwnet.net. ftp : // nic.merit.edu.ftp://world.std.com, gopher://noonan2mouse1.musus.edu** ஆகிய தளங்களின் உதவியை நாடலாம்.

துணை நூற்பட்டியல்

தமிழ் இணையம்	:	தொழில் உலகம் பப்ளிகேஷ்ன்ஸ் வெளியீடு இன்டர்நெட் மாத இதழ், ஆகஸ் 2001
தமிழ் இணையம்	:	நவம்பர் மாத வெளியீடு 2001
லெனின்	:	இனி எல்லாம் இன்டர்நெட், ப.286, 1999
அறிக்கை வெளியீடுகள்	:	தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தரமணி, சென்னை

மனித நேய மாநகர்

மதுரை. அ. பாலு

புத்தாண்டு இரவு 12.00 மணிக்கு இரத்தான முகாம் நடத்தி மனித நேயத்துடன் புத்தாண்டை வரவேற்று துவக்கும் எம் மாநகர்.

சகோதரத்துவத்தை வளர்க்க துணை புரியும் பொங்கல் திருவிழா, சித்திரை திருவிழா போன்றவற்றை சிறப்புடன் கொண்டாடும் நகரம்.

சமூக சிந்தனையை தூண்டும் இலக்கிய நிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள், கருத்தரங் கங்கள் அதிகமாக நடைபெறும் மாநகரம்.

கல்வியாண்டு துவக்கிவிட்டால் கல்வி திருவிழா மூலம் ஏழை எளியோருக்கு இலவச நோட்டு புத்தகம் மற்றும் கல்வி பணம் வழங்கும் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் போன்று பல்வேறு எண்ணற்ற சமூக அமைப்புக்களின் மனித நேய தொண்டு நிறுவனங்கள் நிறைந்தது எம்நிகர் இல்லா மாநகர்.

சாதிப்பவர்களையும், சாதிக்க நினைப்பவர் களையும் உடனுக்குடன் உரியவர்களை கொண்டு பாராட்டி பறைசாற்றும் பாங்கு கொண்ட பார் போற்றும் பாரதியின் யுவகேந்திரா அமைப்பும்

சிறந்தவருக்கு, சான்றோர்களுக்கு விருது வழங்கி நற்சேவை பல செய்து வெள்ளி விழா கண்ட எம் அமுத சுரவி கலை மன்றம் போல் பல அமைப்புகளின் சீர்மிகு செயல்பாடுகள் நிறைந்தது எம்மாநகர்.

இறைவனால் மனவளர்ச்சி குன்றியவராக சிருஷ்டிக்கப்பட்டவரையும் தேர்ச்சி பெற செய்து அவருக்கு திருமண வாழ்க்கையும் வழங்கிய சிருஷ்டி அமைப்பு.

கண்பார்வையற்ற எம் சகோதரனுக்கு இல்லற ஒளி வழங்கி துணைபுரியும் எம்மதுரை உபகார் அமைப்பு.

கண் பார்வையற்றோரை கரம் பிடிக்கும் கண் ஒளி நிறைந்த காரிகைகளின் தியாக பூமி எம் மாநகர்.

சாலையோர திக்கற்ற சிறுவர்களை காக்க நண்பன் அமைப்பு.

மனவளர்ச்சி குறைந்தோருக்கான பெத்தச்சன் அமைப்பு.

அனைத்து கண் பார்வையற்றோர் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து செயல்படும் இந்திய கண் பார்வையற்றோர் சங்கம் போன்று எண்ணற்ற மனித நேய அமைப்புகளை கொண்டது எம் நகரம்.

சமூக சிந்தனைக் கோர் தேசிய வலிமை மாத இதழ், இலக்கிய சிந்தனைக் கோர் மதுரை தென்றல் என பற்பல சிற்றிதழ்கள் மூலம் மனித நேயம் வளர்க்கும் எம் மாநகர்.

சின்னத்திரையில் சீரழியும் எம் இளைய தலைமுறையை வாரத்தில் ஒரு நாளாவது "சிந்திக்க சிரிக்க" வைக்கும் எண்ணத்துடன் மதுரை வடக்கே நகைச்சுவை மன்றம்

மதுரை மத்தியிலே சிரிசிரி மன்றம்

மதுரை தெற்கே எக்ஸ்னோரா நகைச்சுவை மன்றம் அமைத்து வழி நடத்துவது எம்மாநகர்.

சின்னத்திரை மூலம் உலக மக்களையே சிந்திக்க வைத்து சமூக சிந்தனையே தூண்டும் பேராசிரியர் திருமிகு. சாலமன் பாப்பையா அவர்கள், நகைச்சுவை தென்றல் திருமிகு. கு.ஞானசம்பந்தன் அவர்கள், மற்றும் முனைவர் திருமிகு. மோகன் அவர்கள் என் பட்டியல் நீளும் பெருமைகால் பெரியோர்களை பெற்றது எம் மாநகரம்.

தூங்கா நகரில் இரவில் சந்திரன் இரவு சூரியனாகவே செயல்படும் எம்மாநகரில் இலவச கண்பரிசோதனை முகாம்கள் நடத்தி கண்ஒளி வழங்கும் அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை மீனாட்சி மருத்துவமனை இவைகளின் மனித நேய தொண்டுகளைக் கண்டு தொழில் ரீதியாக தொடங்கப்பட்ட மருத்துவ மனைகளும் தற்சமயம் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தும் மனித நேய மாநகர் எம்நகர்.

வாரத்தில் ஐந்து நாட்கள் நகரில் மருத்துவ முகாம்கள் நடந்து கொண்டே இருக்கும்.

எம்நகர் தாய்க்குலங்கள் குழாயடி சண்டை, ரேசன்கடை சண்டைகள் மறந்து ஒரிரு நாட்களாவது சகோதரத்துவத்துடன் இணைந்து செயல்பட வீதிகள் தோறும் முளைப்பாரி திருவிழாக்கள், ஆலயம் தோறும் ஆயிரத்தெட்டு திருவிளக்கு பூஜைகள் நடப்பது எம் நகரில் தான்.

அமைப்பு ரீதியாக வேறுபட்டு இருந்தாலும் எங்களது ஒரே குறிக்கோள் எம்மாநகர் மக்கள் மேம்பாட்டிற்கு உழைப்பதுவே என தன்னிகரில்லா சேவை செய்யும் அரிமா சங்கங்கள், ஜேசிஸ், ரோட்டரி மற்றும் பல மகளிர் அமைப்புகளின் சீரிய தொண்டினை பெற்றிடும் எம் மாநகர்.

இடுகாட்டில் மனித இதயத்தை சுடும் வெட்டியானாக இருந்தாலும் ஈரமான இதயத்திற்கு சொந்தகாரனாக எம் சகோதரர் திரு.ஹரி அவர்களின் மனித நேய தொண்டு நிறைந்தது எம்மாநகர்.

கீழவாசல் பகுதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் கைமாறு கருதா சேவை செய்யும் எம் அன்பு சகோதரர் திரு.செல்வம் அவர்களை பெற்றது எம்மாநகர்.

எம்மாநகர் மக்களை ஆளும் எளிமையின் ஏந்தல்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் தோழர் திருமிகு. ஞ. மோகன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தோழர் திருமிகு. நன்மாறன் அவர்கள் போன்றோரை வேறெங்கும் காண்பீரோ.

பெற்று வளர்த்து நம்மை ஆளாக்கியவர்கள் இறைவனடி சேர்ந்ததும் அவர்களின் இறுதி ஊர்வலத்தை அவர்தம் ஆத்மா சாந்தி அடைய தன் நன்றி கடனை அவர்களுக்கு செலுத்தும் வண்ணம் ஏதோ கோவில் சாமி வீதி உலா வருகிறதோ என் நினைக்கும் அளவிற்கு மேளதாளங்கள் முழங்க பூமணத்துடன் சுற்றமும் நட்பும் சூழ நடத்திடும் பாங்கிலும் மனித நேயத்தை பறைசாற்றும் எம்மாநகர் மக்கள் போல் வேறெங்கும் காண்பீரோ.

மாநகர் மதுரை மனித நேய நகர் என்பதற்கு இதைவிட சான்றுகள் வேண்டுமா?

★

சாதி உணர்வு நீங்க முதற்பணி!

தூத்துக்குடி. **தி.பொன்னுச்சாமி**

''சாதியும் - மதமும் ஒழிக்கப்பட வேண்டும்'' என்பது பெரியாரின் கொள்கைகளில் மிக முக்கிய மானவைகள்! சாதியின் பெயரால் இழிவுபடுத்தப் படுவதுவும், மதத்தின் பெயரால் பேதப்படுத்தப் படுவதுவும் கூடாது, எனவே சாதியும், மதமும் ஒழிக்கப்பட வேண்டுமென்று பெரியார் பிரச் சாரம் செய்தார். அதன் விளைவாக சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது.

சாதி முறையை - வர்ணாச்சிரம முறையை வெளிப்படையாக ஆதரித்தவர்கள் கூட பெரியாரின் 50, 60 ஆண்டுகாலப் பிரச்சாரப் பணியால், வெளிப்படையாக சாதிமுறை இருந்து வரவேண்டும் என்று துணிந்து கூற முடியாத அளவிற்கு சமுதாயத்தில் மாற்றம் காணப்பட்டது. சாதிமுறை இருந்துதான் வரவேண்டுமென்று சொல்லும் துணிவு இன்று யாருக்கும் இல்லை. இந்த மாற்றம் பெரியாரின் கொள்கைக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும்!

ஆண்டாண்டு காலமாக சாதி முறையும் - சாதி உணர்வும் போற்றி வளர்க்கப்பட்ட நாட்டில் சாதியை முற்றிலும் ஒழிப்பது என்பது உடனடியாக நடைபெற்றுவிட முடியாது. இன்றைய நிலையில் சாதியை வெளியே சொல்ல வெட்கப் படுவதும், ஒருவரை என்ன சாதி என்று கேட்பது அநாகரீகம் என்று எண்ணுவதும், சாதி முறை ஒழிக்கப்படவேண்டும் என்று எல்லோரும் வெளிப்படையாக ஒப்புக் கொள்வதும் பெரியா ரின் கொள்கைக்குக் கிடைத்த முதல் வெற்றி!

சாதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் பெரும்பாலோரிடை இருந்தாலும் அதற்குரிய வழிமுறை இன்னும் காணப்படவில்லை. பல தலைமுறையாக ஊட்டி வளர்க்கப்பட்ட சாதி உணர்வை மாற்றிட இந்தத் தலைமுறையில் ஏதா வது செய்து வழிவகை கண்டால்தான் அடுத்த சில தலைமுறையில் 100 ஆண்டுகள் கழித்து சாதி உணர்வு இல்லாத ஒரு சமுதாயத்தைக் காண முடியும்.

அதற்குரிய வழிமுறையை ஏற்பாட்டை அரசு இப்போதே தொடங்க வேண்டும். சாதி ஒழிப்பின் முதற் கட்டமாக அரசு கீழ்க்கண்ட நடவடிக் கையை மேற்கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் நூற்றுக் கணக்கான சாதிகள் இருக்கின்றன. அத்தனை சாதியும் கல்வி - வேலை வாய்ப்பு பெறுவதற்காக முன்னேறியவர் பிறப் பட்டோர் - மிகவும் பிற்பட்டோர் - தாழ்த்தப் பட்டோர் - மலைசாதி சீர்மரபினர் என்ற தலைப் பின் கீழ் வருகிறது. நூற்றுக்கணக்கான சாதிகள் இந்த 6,7 பிரிவுக்குள் வந்துவிட்டது. இனி பிறப் புச் சான்றிதழ் - பள்ளிச் சான்றிதழ்களில் சாதியின் பெயரைப் போடுவதற்குப் பதில் முன்னேறியவர் பிற்பட்டவர் - மிகவும் பிற்பட்டவர் - தாழ்த்தப் பட்டோர் என்ற முறையில் சான்றிதழ்களில் குறிப் பிட்டு வந்தால் அடுத்த சில தலை முறையினர் சாதிபப் பெயர் மறைந்து இந்த 6, 7 தலைப்பில் உள்ள பெயரை மட்டுமே குறிப்பிடும் நிலை ஏற்படும். எடுத்துக்காட்டாக 100, 150 ஆண்டு களுக்கு முன் தென்ஆபப்பிரிக்காவிற்குச் சென்ற தமிழர்கள் சாதி உணர்வு இல்லாமல் தமிழர் என்ற உணர்வோடு இருக்கிறார்கள். சாதியை ஒழிக்க முதற்கட்ட நடவடிக்கையாக சான்றிதழ்களில் சாதிப் பெயரைப் பயன்படுத்தாமல், 6-7 பிரிவில் வரும் பெயரை மட்டும் பயன்படுத்தினால் 100 ஆண்டு கழித்து ஒருவர் தன் சாதிப் பெயர் மறந்து தன்னை பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற முறையில்தான் தன்னை அடையாளம் காட்டு வார். இந்த முறையை சாதி ஒழிப்பின் முதற்கட் டப் பணியாக அரசு மேற்கொண்டால் படிப்படி யாக சாதி முறை ஒழிந்து சமத்துவ நிலை ஏற்பட்டு தமிழகம் மறுமலர்ச்சி தமிழகமாக மாறிடும்!

சாதிகளை இந்த 6, 7 பிரிவுகளாகப் பிரிந்திருப்பது கல்வி - வேலை வாய்பப்புக்காக ஏற்படுத்தப்பட்ட தற்காலிக முற்பாடுதானே என்று கேட்கக் கூடும். இந்த ஏற்பாடு எவ்வளவு காலம் இருக்குமே. அதுவரை நாம் அதை சாதிப் பெயர் ஒழிப்புக்காகப் பயன்படுத்துவோம். நூற்றுக்கணக்கான சாதிப்பெயரை வைத்துக் கொண்டு நூற்றுக்கணக்காக பிரிந்துடைப்பதை மாற்றி அதை 6, 7 பிரிவுக்குள் கொண்டு வருவதே முதற் முயற்சி! அடுத்த கட்டமாக அந்தப் பிரிவையும் மாற்றிட முயற்சி மேற்கொள்ளலாம். சாதி ஒழிப்புக்கு ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இந்த முயற்சியை மேற் கொள்ளலாம். அரசுதான் இதைச் செய்ய வேண்டும். செய்வார்களா?

★

கண்ணகி எங்கே

மலேசிய மகாகவி டாக்டர் இரா.பாண்டியன், பினாங்கு

வில்லெங்கே, மீனெங்கே புலியு மெங்கே
வென்றிமிகு களங்கண்ட வரலாறெங்கே
கல்லெங்கே கல்சுமந்த சரிதை யெங்கே
கற்பெங்கே கண்ணகியின் சிலைதா னெங்கே?
நில்லங்கே நினதுபெரும் வீர மெங்கே
நெறிவிலகா அடலெங்கே? ஆண்மை யெங்கே?
சொல்லிங்கே கலிங்கத்துப் பரணி யெங்கே
சூர்தடிந்த வேல்தொலைந்த தெங்கே, யெங்கே?

வேலைமட்டு மாதொலைத்தாய், உனக்கிருந்த
மேன்மையையும் தொலைத்தாயே பாவி! நல்ல
வேளையையும் தொலைத்திட்டாய் எமது மாண்பார்
வெண்கொற்றக் குடைமுரசு விளம்பு நற்செங்
கோலையு நீ மாற்றாரின் கைகொ டுத்தக்
கொன்றாயே தன்மானத் தமிழன் சீரை
நாளையுன்றன் வரலாற்றில் என்ன மிஞ்சும்
நாடாண்ட புகழ்துஞ்சிக் கறைதான் எஞ்சும்

கறைபடியா வரலாற்றின் உரிமை யாளன்
கரைகடந்த புகழ்கொண்டு வாழ்ந்த தீரன்
மறைபடியா கயவருக்கும் நியதி கெட்ட
வழும்பருக்கும் நீயேணிப் படியென் றானாய்
அரைப்படிக்குள் காற்படி தான் அடங்கு மாப்போல்
அறிவிலிக்கே அடங்கிற்குற் றேவல் செய்ய
சிறைபட்டாய் குறைபட்டாய் தாய் நிலத்தை
திட்டிவிடங்கள்ஆளத் தானமிட்டாய்

புறங்காட்டி போடுவது தமிழர் பண்பா?
புறம்பாடி உயர்ந்தவர்கள் தமிழர் நண்பா
அறங்காட்டி வாழ்ந்தவனும் தமிழைக் கொண்டே
அறம்பாடுந் திறத்தவனும் நீயே! நீயே!
திறங்காட்டித் திசைதோறும் கலங்க லோச்சிச்
செறிவெற்றிச் சிந்திசைத்த பதாகை, கோல
நிறங்காட்டி மின்னியபொற் காலம் பாரில்
நிலையற்று நிலையற்றுப் போன தேனோ.

பலசாதி பேதங்கள் மனத்திற் கொண்டு
பப்பத்து விதமடுப்பு வைத்துப் பொங்கும்
குலபேதங் கொண்டாரை எளிதில் வெற்றி
கொண்டிடலாம் என்றானே மற்றோர் மன்னன்
உளபேதம், உடைபேதம் உணர்வின் பேதம்
உற்றாராய் உற்றவரை அவம தித்து
நலபேதம் விளைந்திடநீ வழிவ குத்து
நாணமற்ற மங்கைமுகம் போலானாயே

உழைக்கமனங் கொள்ளாமல் பிறந்த மண்ணின்
உயர்வதனை நினையாமல் எங்கிருந்தோ
பிழைக்கவந்தார் காலடியில் கழைக்கூத் தாடி
பிடித்திட்ட கம்பாகக் கிடைத்திளைத்தே
அழைக்கவரும் நவ்வியென வால்கு ழைத்தே
அடிமைக்கும் அடிமையென ஆனாய்! அந்தோ
மழைக்குவரும் ஈசலா நீ? இல்லை; ஆண்ட
மறத்தமிழன் என்பதனை செயலிற் காட்டே

தில்லையாடி வள்ளியம்மை செய்த ஈகம்
திசைமாறிப் போனதுவே! நித்தம் நித்தம்
தொல்லைதரு வேடன்கை அம்பை யொத்த
துர்தேவதைக்கிட்ட படைய லாச்சே
இல்லையொரு தன்மானம், தூர நோக்கம்
எழுச்சிதரு சிந்தனைகள்! படியிலிட்ட
கல்லைதான் தெய்வமெனத் துதிப்போ னானாய்
காலமுன்றன் கொடும்பழிக்குத் தீர்ப ளிக்கும்

அணிமுடியும் தனியரசுங் கொண்டு மாண்பார்
ஆராய்ச்சி மணிகட்டி ஆண்ட மக்கள்
தனிமுடிவு காண்பவர்கள் கன்றுக்காகத்
தன்மகனைத் தேர்ஊர்ந்து கொன்ற மேலோர்
பணிமுடித்துப் பழியேற்ற கையை வெட்டிப்
பரம்பரைக்குப் புகழ்சேர்த்த இனிய நாட்டோர்
பிணிமுடிக்கும் உடலினராய்ச் சிறப்பி ழந்து
பீழைக்குப் பரிவட்டம் கட்டல் நன்றோ

இராவணனை அரக்கனென்றாய்! அரக்க ரெல்லாம்
இணையில்லா மேலோர்கள் எனப்பு கழ்ந்தாய்
திராவிடனைக் குரங்கென்றாய் காட்டித் தந்த
தீயவனை ஆழ்வாரென் றளக்க லானாய்
அராவிடத்தை அரியணையி லேற்றி வைத்தாய்
அருந்தமிழைச் சிறையிடவே வழிவகுத்தாய்
பராபரனும் மன்னிக்க மாட்டான் உன்னும்
பார்சோற்றில் விடமிட்ட பாவியுன்னை! ★

சங்ககாலத் தமிழ்மக்களின் தொழிலும் வணிகமும்

பரமக்குடி க.வீ.செ.பாண்டியன்

சங்க இலக்கியங்கள்

பாண்டிய மன்னர்கள் வழி வழிச்சங்கம் வைத்து தமிழை வளர்த்த காலம் சங்க காலம். இது ஏறத்தாழ கி.பி. 300 என்று கூறலாம். சங்க காலத் தமிழ், நாட்டுச் செய்திகளை கூறும் பத்துப் பாட்டும் எட்டுத்தொகை நூல்களும் சங்க இலக்கியங்கள் என்று கூறப்படுகின்றன. தமிழ் நாட்டு அரசியல், மக்கள் வாழ்க்கை, வேளாண்மை, கைத்தொழில், சமயம், நாகரீகம் முதலியவற்றை இந்நூல்கள் விரிவாக பேசு கின்றன. இந்நூல்களின் மூலம் அறியப்படும் சங்கத் தொழில்களையும், வாணிக முறைகளை யும் இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

''உழவும் வாணிகமும் உலகத்துத் தொழில்களில் தலையானவை என்றும், இவையே நாட்டின் செல்வத்தைப் பெருக்கும்.'' என்றும் மதுரைக் காஞ்சியில் மாங்கு மருதனார் கூறுகிறார்.

குறிஞ்சி நிலமக்கள் மலைநெய், தினை முதலியவற்றைப் பயிரிட்டு வளர்த்ததுடன் தேனெடுத்தல், வேட்டையாடுதல் முதலிய தொழில்களும் செய்தனர்.

முல்லைநில மக்களோ ''ஆகாத்தோம்பி ஆப்பயனை'' உலகோர்க்களிக்கும் தொழில் செய்தனர்.

மருதநில மக்களோ வயலில் வேளாண் தொழில் செய்தனர். நெய்தல் நிலமக்களோ, மீன் பிடித்தல், உப்பு விற்றல் போன்ற தொழில்களைச் செய்தனர்.

பாலை நிலமக்களோ பிழைக்கும் வழி யின்றி ஆநிரை கவர்தல், வழிப்பறி செய்தல் முதலிய தொழில்களைச் செய்து வாழ்ந்தனர்.

இந்த ஐவகை நிலமக்களும் மண் சுவர் எழுப்பி, வைக்கோல் முதலியவைகளால் கூரை அமைத்து வீடுகள் அமைக்கும் தொழிலும் செய்தனர். பறை, துடி, முழவு, பம்பை முதலிய கருவிகளையும் செய்தனர்.

பொதுத் தொழில்கள்

1. தேர், பாண்டில், உளி, உலக்கை, நுகம், அச்சு, பார் உருளை என்னும் பொருள்களின் பெயர்கள் மூலம் அக்காலத் தச்சுத் தொழிலை பெரும்பாணாற்றுப்படை சிறுபாணாற்றுப் படை நூல்கள் மூலம் அறியலாம்.
2. பாண்டி மாதேவியின் தந்தக் கட்டிலின் மீது கஞ்சியிட்டுச் சலவை செய்த துகில் விரிக்கப் பட்டிருந்தது என்றும் நெடுநல்வாடை மூலம் சலவைத் தொழில் அறியப்படுகிறது.
3. உப்பங்கழிகளுக்கு அருகில் உப்பெடுக்கும் தொழில் நடைபெற்றது. உப்பெடுக்கும் நிலப் பகுதி அளம் என்றும் அத்தொழில் செய் வோர் அளவர் என்றும் அழைக்கப் பட்டனர். இச்செய்திகளை மதுரைக் காஞ்சியில் காணலாம்.
4. நெட்டியைக் கொண்டு பலவகை மலர் மாலைகள், பொம்மைகள் முதலியன செய் யும் தொழில்களைச் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.
5. சங்கு அறுத்தல், அவற்றை வளையாக்குதல், அழகிய மணிகளைத் துளையிடல், பொன் நகைகள் செய்தல், பலவகை ஆடைகளை நெய்தல், பூமாலை கட்டல், சாந்தநுகள் தயாரித்தல் போன்ற பல தொழில்கள் மதுரையில் நடைபெற்றன என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது.
6. மேலும் பலவகைப் பயிர்களைப் பயிரிடுதல் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் உள்ளன. செறு, நெய் என்று வயல்கள் பெயர்பெற்றன. செந்நெல், தோப்பி நெல், மூங்கில் நெல் என பலவகை நெல் பயிரிடப் பெற்றன.

இனிச் சங்க கால வாணிகம் பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

உள்நாட்டு வாணிகம்:

பண்டமாற்று வாணிக முறையே அக்காலத்தில் இருந்தன. குறிஞ்சி நிலமக்கள் தேன், கிழங்கு மது முதலியவற்றை பிற நில மக்களுக்கு விற்றுத் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டனர். நெய்தல் நிலமக்கள் மீன் உப்பு முதலியவற்றைக் கொண்டு பிற பொருள்களை வாங்கிக் கொண்டனர், சேரநாட்டில் விளைந்த மிளகை கழுதைகளின் மீது ஏற்றி ஊர் ஊருராகச் சென்று விற்ற செய்தியைப் பெரும்பாணாற்றுப் படை (80-81) கூறுகிறது.

கப்பல்களில் வந்து துறைமுக நகரங்களில் இறக்குமதியான முத்து, பவளம், மாணிக்கம், சந்தனம் முதலிய பொருள்களை உள்நாட்டு வாணிகர்கள் விற்றனர்.

மன்னர்கள் வணிகர்கள் வண்டிகள் செல்ல நல்ல பாதைகளை அமர்த்தியிருந்தனர். வணிகப் பொருள்களைப் பாதுகாக்க ஆங்காங்கே காவலரை வைத்திருந்தனர்.

பாதைகளில் செல்லும் வணிகப் பொருள்களுக்கு உல்கு (வரி) வசூலிக்கப் பட்டது. இதற்கு சங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இச்செய்திகளைப் பெரும்பாணாற்றுப் படை மூலம் அறியலாம்.

பீடுமிக்க மாடமதுரையில் மகளிரும் வாணிகம் செய்தமையை மதுரைக் காஞ்சி கூறுகிறது.

கடல் வாணிகம்:

கடல் வாணிகத்திற்குத் தேவையான, வசதியான துறைமுகங்கள் தமிழ்நாட்டில் இருந்தமையை பிளினி, தாலமி போன்ற மேனாட்டு யாத்ரிகர்களின் குறிப்புகளால் அறியலாம்.

எயிற்பட்டினம், மாமல்லபுரம், கொற்கை, காவிரிப்பூப்பட்டினம் முதலியவை சங்க இலக்கியங்களில் கூறப்படும் துறை முகங்கள் ஆகும்.

எயிற்பட்டினத்திற்கு அகில் முதலிய மணப் பொருள்கள் வந்தமையை சிறுபாணாற்றுப் படையும், துறைமுகங்களில் மிக உயர்ந்த கலங்கரை விளக்கம் இருந்தமையை பெரும்பபாணாற்றுப் படையும் கூறுகின்றன.

காவிரிப் பூம்பட்டினத்தில் உள்ள பெரிய துறைமுகத்தில் அரிய காவலுடைய பண்டசாலை இருந்தது. அங்குள்ள பண்டங்களின் மீது புலி முத்திரை பொறிக்கப் பட்டது என பட்டினப் பாலை கூறுகிறது. பொருள்களை ஏற்றி வரும் மரக்கலம் வங்கம் எனப் பெயர் பெற்றது.

சங்கக் காலத்தில் தமிழகத்தோடு வாணிகம் செய்து ஐரோப்பியர் யவனர் எனப்பட்டனர். அவர்கள் பாவை விளக்குச் செய்வதில் பண்பட்டவர்கள்.

''யவனர் இயற்றிய வினைமாணபாவை
கையேந்து ஐயகல் நிறைய நெய் சொரிந்து'

என்று நெடுநல் வாடை கூறுகிறது.

வணிகர் பண்புகள்

பூம்புகார் வணிகர்கள் தம் பண்டங்களையும், பிற பண்டங்களையும் விற்கும்போதும், வாங்கும் போதும் நேர்மையாக நடந்து கொண்டனர்.

தாம் கொள்ளும் பண்டத்தைத் தாம் கொடுக்கும் பொருளுக்கு மிகையாகக் கொள்ளவில்லை. அதேபோல் தாம் கொடுக்கும் பண்டத்தைத் தாம் கொள்ளும் பண்டத்திற்குக் குறைவாகக் கொடுக்கவில்லை.

இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்றனர். அறவழியில நடந்தனர்.

வேள்விகள் செய்தும் தானங்கள் செய்தும், ஏழைகளுக்கு கொடைகள் பல வழங்கியும் மனநிறைவுடன் வாழ்ந்தனர்.

முடிவுரை

சங்க கால நெறிமுறைகளுடன் வணிகர்கள் வாழ வேண்டும். கடல் கடந்து வணிகம் செய்த சங்க கால வணிகர் போல் உலகத்தரம் வாய்ந்த பொருள்களை வணிகம் செய்து தமிழ் மக்கள் உயர்தல் வேண்டும். அதற்கேற்ப கல்விமுறைகள், நவீன தொழில் நுட்ப முறைகள், கனிணி போன்ற புதிய வழிகளில் பயிற்சி பெற்று வளமான தமிழகத்தை வணிகர்கள் உருவாக்கப் பாடுபடுவதே இன்றைய முக்கிய கடமை யாகும்.

★

உறவே!.. உறவே!.. எம்தமிழ் உறவே

- தூயவன் -

உறவே உறவே எம்தமிழ் உறவே
உணர்ச்சி பொங்க எழுவாய் உறவே
பறவையாய் நம்மவர் பறக்கும் நாளில்
பாங்காய்ப் பாரில் இணைவாய் உறவே!

இந்திய நாட்டில் சிந்திய உறவெலாம்
எந்நிலை உள்ளோம் அறிவாய் உறவே!
வந்தவர் நம்மிடம் வளமாய் உள்ளனர்!
வாஞ்சையாய் தமிழினம் வாழ வழிகாண் உறவே!

சென்றவர் தமிழை முழுமையாய் மறந்து
செழுமை இழந்தே அகதியாய் வாழ்கிறார்!
வென்று உலகிடை உயர்வது எங்ஙன்?
வெற்றிகள் குவித்து வீரநடை காண்உறவே!

சாதிகள் மதங்கள் தலைமையில் செல்வோர்
சாக்கடைச் செயலை அழிக்க நம்முள்
நாதிகள் இலையா நம்மின மக்கள்
நாளும் வீழ்வது முறையா உறவே!

செர்மனி நாட்டில் எம்முயிர்த் தமிழர்
சென்ற திசையெலாம் உழைப்பை நல்கி
தர்மம் காக்கும் தமிழர் உறவில்
தக்கன செய்யும் தகுதிகாண் உறவே

மழலைகள் சேர்ந்து விடுமுறை நாளில்
மாண்புறு தமிழை அரசுப் பள்ளியில்
உளம் பூரிப்பாய் செருமன் தமிழர்
உணர்வை ஊட்டும் செயலறிக உணர்வே!

பாதாளத் தொடர்அவ் வண்டிகள் செல்லும்
பாசத் தமிழன் வாழும் பிரான்சில்
வேதனை மறந்து சாதனை புரியும்
வேட்கைத் தமிழர் உணர்க உறவே!

கருப்பர் சிவப்பர் அனைவருக் குள்ளும்
கண்ணியக் கடமை கனிவாய் ஆற்றி
பொறுப்பாய் தொழில்கள் முனைந்து பெருக்கி
பொற்புடைத் பிரான்சுத் தமிழர் உறவே!

கனடாத் தமிழன் கவினார் மொழியை
கண்ணாய்ப் போற்றி பாடமொழியாய்க் கண்டான்
வின்னுயர் தமிழர் நெறிகள் அனைத்தும்
வீச்சாய் ஆற்றும் மறவர்கள் உறவே!

அழகொளிர் அமெரிக்க கவினார் நாட்டில்
அறம்சூழ் தமிழைக் காக்கும் திறத்தை
திலகமாம் நம்தமிழ் போற்றும் மக்கள்
திசைமாநாடுகள் காண்பதை அறிக உறவே!

மொரீசியசு நாட்டில் என்றோ சென்றான்
மொழியை இழந்தான் பெயரும் பக்தியும்
உரிய முறையில் உணர்ந்து கொள்கிறான்
திருபணத்தாளில் தமிழைப் பதித்துளான் உறவே!

சிங்கைத் தமிழன் சீர்மை நெறியில்
செம்மையாய் அரசு மொழியாய் ஆள்கிறான்
இங்குள தமிழன் தலைகவிழும் வண்ணம்
இனிதாய்த் தமிழிலும் ஆள்கிறான் உறவே

கனிப்பொறி தன்னில் தமிழர் நெறியை
கற்கும் முறையை தமிழர் வேக வளர்ச்சியில்
இனிதாய்க் கணினி முதல்மாநாடு கண்ட
இறவாப் பெருமை கண்ட சிங்கை உறவே!

தமிழகம் விஞ்சும் தனிப்பெரும் இதழ்கள்
தன்னலம் கருதாத் தண்டமிழ்த் தமிழர்கள்
பூமித்தாய் தவத்தால் வெற்றி முழக்கும்
புண்ணியத் தமிழர்கள் வாழும் மலேசியா!

இலங்கை அரசின் விடுகதை முடிச்சு
இன்னலின் உச்சம் கலையும் நிலையில்
தலமுள தமிழினம் ஏங்கிய வண்ணம்
தலைமுறை அமைதி வருதல்காண் உறவே!

உழவர் குடியில் பிறந்த பெருங்கவிக்கோ
உலகை அளந்த உன்னதத் திறத்தால்
உலகெலாம் தமிழர் உறவை இணைத்து
ஒப்பிலா மன்றம் கண்டோம் உறவே!

இத்தரை எங்கும் அங்கும் இங்கும்
நித்திரையில் வாழும் தமிழனை எழுப்பி
பற்பல வரவேற்பு விழாக்கள் கண்டு
பாரில் தமிழரை உயர்த்தினோம் உறவே!

முதல்மாநாடு திருச்சி மாநாகரில் தொடங்கி
முறையாய் எழுச்சியாய் உறவைக் கூட்டி
பதமாய்ப் பாங்காய் தமிழர் உறவை
பண்பாய் இணைந்து நடத்தினோம் உறவே

புண்ணியப் பதியாம் சென்னையம் பதியில்
பூத்த'தடா' சட்டம் முளைத்த நாட்களில்
எண்ணிய வண்ணம் இரண்டாம் மாநாடு
எழுச்சியாய் உலகைக் கூட்டினோம் உறவே!

அயலகம் தன்னில் ஐரோப்பிய மண்ணில்
அற்புத நகராம் பெர்லின் நகரில்
புயலாய் மூன்றாம் மாநாடு கூட்டி
புவியில நிலைத்த பெயர் கண்டோம் உறவே!

முதிர்ந்த தமிழன் கி.ஆ.பெ.வி. வேணுகோபால்
முறையாய் உலகத் தமிழர்கள் இணைந்து
விதிக்கு விதிசெய் வியத்தகு முறையில்
விண்ணுயிர் மாநாடு கண்டோம் உறவே!

தாய்லாந்து தன்னில் நான்காம் மாநாடு
தாயாய் நம்பிய சளக்கர் துரோகம் கடந்து
ஓயாத் தமிழன் நம் முயிர்ப் பெருங்கவிக்கோவின்
தேயம் அடிபட மாநாடு கண்டோம் உறவே!

சங்கம் கண்ட மதுரையம் பதியில்
சிங்கம் நிகரத்த செழுமை உணர்வுடன்
வங்கக்கடலெனத் தமிழர் உறவுகள்
வளமாய்க் கூடிடும் வாஞ்சை காண உறவே!

பன்மாநாடுகள் கண்டும் நம் இனம்
பற்பல அரங்குகள் தேர்ந்து மொழிந்தும்
சண்டித் தனத்தை எப்படி வெல்வது?
சங்கத் தமிழரின் சீர்மை காண்பது எப்படி?

வியத்தகு முயற்சிகள் விரைந்து ஆற்றியும்
நயத்தகு நல்வினை துணிந்து தாங்கியும்
கயமைத் தனங்கள் சவக்குழி சாய்ந்தும்
கண்மூடித் தமிழன் மயங்கிக் கிடப்பதேன்

வழிவழித் தியாகம் தொடர்ந்து வீழவோ?
வாய்மை வழிநெறி ஒய்வது முறையோ?
பழியைத் துடைக்க பண்புள இனமே
பாயும் ஒளியாய் பாரில் எழுகவே!

உறவு என்பது மொழிவழி உறவே!
உண்மை தேர்ந்து இணைந்திடு முறையே!
கரவாம் சாதிமதம் தாண்டிடு துறவுபோல்
கற்பக விருட்சமாய் தழைத்திடு உறவே! ★